ssued—18—3—1974]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 24th JANUARY 1974

Volume CXV—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1974

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

24th, 25th and 28th to 30th January 1974.

(Volume CXV—Nos. 1 to 5)

TABLE OF CONTENTS.

*Thursday, 24th January 1974.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix-xi |
| 1. Questions and Answers ... ... ... | 1-38 |
| 2. Announcement *re* Business of the House ... | 38-39 |
| 3. Calling attention to denial of promotional opportunities to Graduate Teachers consequent upon issue of G.O. Ms. No. 1898, Education, dated 14th November 1973 ... ... ... | 40-42 |
| 4. Resolution *re* condonation of absence of Thirumathi Rani Annadurai, M.L.C. from 4th December 1973 ... ... ... ... | 42 |
| 5. Discussion on the Governor's Address—*cont.* | 43-56 |

63114
YR11,32 N74
N74 · 11533



*Friday, 25th January 1974.*


| | Pages. |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 57–86 |
| 2. Calling attention to non-finalisation of pension and gratuity of teachers who retired from services between 1st June 1970 and 2nd October 1970 ... ... ... ... ... | 86–88 |
| 3. Discussion on the Governor's Address—*cont.* | 88–117 |
| 4. Papers laid on the table of the House ... | 118 |


*Monday, 28th January 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 119–138 |
| 2. Discussion on items not found in the Agenda ... | 138–139 |
| 3. Announcement *re* allotment of seat for Thirumathi Rani Annadurai ... ... ... ... | 139–142 |
| 4. Calling attention to non-availability of writing paper and consequent impossibility of holding examinations in schools and colleges ... ... | 140–141 |
| 5. Discussion on the Governor's Address—*cont.* | 142–191 |
| 6. Papers laid on the table of the House ... ... | 191–193 |


*Tuesday, 29th January 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 195–212 |
| 2. Calling attention to non-functioning of Panangudi Village Panchayat even after elections ... | 212–213 |
| 3. Discussion on the Governor's Address—*cont.* | 213–271 |
| 4. Papers laid on the table of the House ... | 271 |




*Wednesday, 30th January 1974.*


| | Pages |
|---|---|
| 1. Questions and Answers. ... ... ... | 273–287 |
| 2 Announcements— | |
| (1) Message from the Governor ... ... | 287 |
| (2) Message from the Assembly ... ... | 287–288 |
| 3. Call—attention notices— | |
| (1) Threat of several teachers of different cadres in Government B Wing Schools being thrown out of employment as a result of proceedings of the Director of School Education Rc. No. 221096/XI/71, dated 9th November 1973 ... | 288–292 |
| (2) Chain-fasting of teachers of Dharmapuri Panchayat Union and consequent effect on education. ... ... ... ... | 292–294 |
| 4. Government Resolutions— | |
| (1) Amendments to Tamil Nadu Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 ... | 294–309 |
| (2) Amendment to certain rules under the Madras City Municipal Corporation Act, 1919, the Madurai City Municipal Corporation Act, 1971 and the District Municipalities Act, 1920 ... | 309–315 |
| 5. Government Bills— | |
| (1) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 (L.A. Bill No. 3 of 1974) ... ... ... ... | 316–318 |
| (2) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974 (L.A. Bill No. 1 of 1974) ... ... | 318–321 |
| (3) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1974 (L.A. Bill No. 5 of 1974) ... ... ... | 321–33[illegible] |

*Wednesday, 30th January 1974—cont.*



| | Pages. |
|---|---|
| 5. Government Bills—*cont.* | |
| (4) The Madras City Municipal Corporation and District Municipalities (Amendment and Extension of Term of Office) (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 2 of 1974) ... | 334-335 |
| (5) The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 (L.A. Bill No. 4 of 1974) ... | 335-338 |
| 6. Papers laid on the table of the House ... | 339-340 |
| **Index** ... ... ... ... ... ... | 376 |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration. Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. The Hon. Thiru MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. The Hon. Thiru K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. The Hon. Thiru O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. The Hon. Thiru M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர் :

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நீதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள். சீரணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப் பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்,

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

### சட்டமன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. எம். இராமநாதன்.

திரு. எல். பலராமன்.

திரு. கே. எஸ். கணபதி.

திரு. எம். எம். பக்கர்.

### சட்டமன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| காட்டூர் கோபால் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 23 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 24 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 சங்கரலிங்கம் பிள்ளை, எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 26 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 27 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 28 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 29 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 30 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 32 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 33 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 34 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 35 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 36 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 37 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 38 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 39 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நாராயணசாமி, பி. (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 41 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |
| 42 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 43 பகவதி, டி. கே. .. .. | நியமனம். |
| 44 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 45 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 46 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 54 ரசல்ராஜ் .. .. .. | நியமனம். |
| 55 வசந்தபாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 56 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 61 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 62 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. .. | |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1974 சனவரி 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

* உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Grade II Tamil Pandits.*

* 45 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Madras District Second Grade Tamil Pandits' Association has sent any representation to the Government during March, 1971; and

(*b*) if so, the requests made therein and the action taken thereon ?

### இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாவட்ட இரண்டாம் நிலை தமிழ்ப்பண்டிதர்கள் சங்கம் 1971 மார்ச்சில் அரசுக்கு முறையீடு ஏதேனும் அனுப்பியதா ?

(இ) ஆமெனில், அதில் செய்துள்ள வேண்டுகோள்கள் யாவை ? அவை குறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற வேறுபாட்டை அகற்றி தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் ஒரே நிலையாகக் கருதி முதல்நிலை ஆசிரியர்களுக்கான ஊதியத்தை எல்லா தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளனர். 1—1—1974 முதல் முதல்நிலை தகுதி பெற்றும் காலியிடம் இல்லாததால் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாக பணிபுரியும் அனைவரும் முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக பதவி

உயர்வு பெறுவர் எனவும், முதல்நிலை தகுதி பெறாத இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் 1—1—1974-ல் 10 ஆண்டுகள் பணிமுடிவு பெற்றவர்களாக இருந்தால் அவர்களும் 1—1—1974 முதல் முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, சில இடைநிலை ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர்களுக்கான தகுதியைப் பின்னால் பெற்றிருந்தாலும், அவர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகவே நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு முதல் நிலை அளிப்பதற்கு, அவர்கள் இடை நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மொத்தமாகப் பத்து ஆண்டுகள் என்று பார்த்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் தமிழ் ஆசிரியர்களாக வருவதற்கு தகுதி பெற்று, அவ்வாறு பணியில் அமர்த்தப்பட்ட காலத்திலிருந்து பத்து ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, முதல் நிலை கொடுக்கப்படும். ஆசிரியராகப் பணியாற்றிய மொத்த காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்வது என்பது பொருந்தாது.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, அண்மையில் ஒரு உத்தரவில் மதுரை தமிழ் சங்கத்தில் படித்து புலவர் பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது சேர்ந்து விட்டவர்களைப்பற்றி ஒன்றுமில்லை. இனிமேல் வருகின்றவர்களுக்கு சில நிபந்தனைகள், தகுதிகள் போடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சேர்ந்திருக்கின்றவர்களுக்கு பாதகம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் 1—4—1976 என்று சொன்னோம். இனிமேல் யாரும் சேரக்கூடாது, சேர்ந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, என்ன காரணமென்று விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மற்ற தமிழ்ப் பள்ளிகளில் இருக்கக்கூடிய விதி முறைகள், நிபந்தனைகள் இந்த சங்கத்தாரால் கையாளப்படவில்லை. அவர்களுடைய முறைகளிலேயே எல்லாவற்றையும் நடத்தி, தேர்வு முறையையும் அவர்களாகவே வகுத்துக் கொண்டு நடத்தி வருகிறார்கள். மற்ற கல்லூரிகளில் தேர்வு பெற்றிருக்கின்ற





ஆசிரியர்களும் இவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று நான்கு, ஐந்து ஆண்டு காலமாகவே வற்புறுத்தி வந்தார்கள். தமிழ் ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். மதுரை பண்டிதப் பரிட்சை தேர்வு குறித்து பரவலான எதிர்ப்பு வந்ததன் காரணமாக, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு தமிழ் ஆசிரியர்களுடைய கழகமும், அது போன்று சென்னை—செங்கை மாவட்ட தமிழ் ஆசிரியர்கள் கழகமும், முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களுடைய கழகமும் இது போன்று ஒரு கோரிக்கையை வெளியிட்டிருக்கின்றன. அதிலே இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் பத்து ஆண்டுக்காலம் முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாக இருந்து விட்டால் முழுத் தகுதி பெற்ற முதல் நிலை ஆசிரியர்கள் நிலை கொடுத்து உடனடியாக எல்லோருக்கும் அந்த ஊதிய விகிதம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதை அரசு ஏற்றுச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதல் நிலை தகுதி பெற்று இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள்தான் இனிமேல் முதல் நிலை ஊதியம் பெறலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாம் நிலையில் இருந்தாலும் தகுதி பெற்றிருந்தால், 1—1—1974-லிருந்து முதல் நிலை சம்பளம் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இரண்டாம் நிலையிலிருந்தவர்களுக்கு முதல் நிலை கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை இருந்தாலுங்கூட, சில பள்ளிகளில் முதல் நிலை ஆசிரியர்களையே நியமித்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த மாதிரிச் செய்வதால் ஏற்கெனவே பல ஆண்டுகள் வேலை செய்தவர்கள் குறைந்த சம்பளம் வாங்கும் நிலைமை இருந்து வருகிறது. மேலும் தற்போது இரண்டாம் நிலையில் எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கிட்டத் தட்ட 1,700 பேர் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அதிலே 400 பேர் பத்து ஆண்டுகாலப் பணியின் காரணமாக முதல் நிலையில் இருக்கிறார்கள். இரண்டாம் நிலையில் இருக்கின்றவர்கள் விரைவில் முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாக வருவதற்குத் தகுதி பெற்று விடுவார்களேயானால், பத்து ஆண்டுக்காலம் கூட காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இப்

பொழுது ஓராண்டு, இரண்டு ஆண்டு முடிந்தவுடனேயே பள்ளி இறுதி வகுப்பில் வெற்றி பெற்று விட்டால், முதல் நிலை தகுதியுடையவர்களாகி விடுகிறார்கள். அந்த அடிப்படையில் உடன் சம்பளம் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, முதல் நிலை தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. முதல் நிலை ஆசிரியர்களை பெரிதும் புதியதாக நியமிப்பதால், இந்த மாதிரிப் பணியில் இருக்கின்றவர்கள் தகுதி பெற்றும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முதல் நிலையில் இடம் காலியாக இருந்தால், அந்த இடத்தில் இந்த ஆசிரியர்களை நியமிப்பதில் ஆட்சேபணை இல்லை. அவர்களைத்தான் போட வேண்டும். சில பேருக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், கிடைக்காமலிருக்கலாம். இனி மேல் வேலைக்கு நியமிக்கப்படுபவர்கள் முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாகத்தான் இருப்பார்கள். இந்த 1,700 பேரும் தீர்ந்ததற்குப் பிறகு, முதல் நிலை ஆசிரியர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்களே தவிர, இரண்டாம் நிலை ஆசிரியர்கள் எடுக்கப்பட மாட்டார்கள்.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, ஒரு விளக்கம் தேவை. இன்று முதல் நிலை தகுதி பெற்றுள்ள இரண்டாம் நிலை ஆசிரியர்கள் அத்தனை பேரும் பத்து ஆண்டுகள் பணிக் காலம் என்ற அடிப்படை இல்லாமல் 1—1—1974 அன்றே முதல் நிலை ஆசிரியர்களாக உயர்வு பெறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 1—1—1974 முதல், முதல் நிலை தகுதி பெற்றும் காலி இடம் இல்லாததால், இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரியும் அனைவரும் முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர் எனவும் முதல் நிலை தகுதி பெறாத இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் 1—1—1974-ல் 10 ஆண்டுகள் பணி முடிவு பெற்றவர்களாக இருந்தால், அவர்களும் 1—1—1974 முதல் முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவர் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. க. அறிவழகன்:** தலைவரவர்களே, 1—1—1974 முதலே பெறுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம்



*46 *Q.*—THIRUVALARGAL V. ISVARMURTI AND M SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether all the fully qualified Tamil Pandits working as Grade II Tamil Pandits have been given Grade I scales of pay;

(*b*) if not, the number of them left out; and

(*c*) the reasons therefor?

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி & எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிக்க வேண்டுகிறோம்—

(அ) இரண்டாம் நிலை தமிழ்ப்பண்டிதர்களாகப் பணியாற்றுகிற முழுத் தகுதி பெற்ற தமிழ்ப்பண்டிதர்கள் யாவருக்கும், முதல் நிலைச் சம்பள விதம் கொடுக்கப்பட்டதா?

(இ) இல்லையெனில், அவ்வாறு கொடுக்கப்படாமல் விடப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) முதல் நிலை தகுதி பெற்றும் காலியிடம் இல்லாததினுல் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாகவே பணிபுரியும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரும் 1—1—1974 முதல் முதல் நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர்.

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 47 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to pay Grade I scales of pay to all Second Grade Pandits in Secondary Schools possessing Grade I qualification; and

(*b*) if so, the details thereof?

**திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடைநிலைப் பள்ளிகளில், கிரேடு தகுதியுள்ள எல்லா இரண்டாம் நிலை ஆசிரியர்களுக்கும், 'கிரேடு-' விகிதங்களில் சம்பளம் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) முதல் நிலை தகுதி பெற்றும் காலியிடம் இல்லாததால் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாகவே பணிபுரியும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் 1—1—1974 முதல் முதல் நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர் என அரசு ஆணையிட்டுள்ளது.

* 48 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of fully qualified Grade II Pandits who have been sanctioned Grade I salaries as per G.O. Ms. No. 325, Education, dated 25th February 1971;

(b) whether those who have obtained the necessary qualification for Grade I posts after 25th February 1971 are eligible for such promotion; and

(c) if not, the reasons therefor ?

**திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித்துறையின் 25—2—1971 நாளிட்ட 325-ஆம் எண் ஆணைக்கிணங்க ஆம் நிலை தமிழாசிரியர்களின் சம்பளம் அளிக்கப்பட்ட, முழுக் கல்வித் தகுதி பெற்ற ஆம் நிலை தமிழாசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) 25—2—1971-க்குப் பின்னர் I-ஆம் நிலை தமிழாசிரியர் பதவித்தரத்திற்குத் தேவையான கல்வித் தகுதிகளைப் பெற்றவர்களும் இந்தப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) நடுநிலைப்பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளில் நடுவில் வகுப்புகளிலும் 2,090 இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் பதவிகள் முதல் நிலையாக மாற்றப்பட்டன.

(இ) 1—1—1974 முதல் முதல் நிலை தகுதி பெற்ற இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரும் முதல் நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர் என்றும் முதல் நிலை தகுதி பெறாதவர்கள் 1—1—1974-ல் பத்து வருட பணி புரிந்தவர்களாக இருந்தால் அவர்களும் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.



* 49Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether any of the Grade II Tamil Pandits who have passed the S.S.L.C. after February 1971, thereby qualifying for Grade I Tamil Pandits, have been denied the salary of the Grade I Tamil Pandits;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken and proposed to be taken by the Government to give them the salary of Grade I Tamil Pandits ?

**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் 1971 பிப்ரவரி திங்களுக்குப் பின் எஸ்.எஸ்.எல்.சி. வெற்றி பெற்ற முதல் நிலைத் தகுதி பெற்றவர்களில் எவருக்கேனும் முதல் நிலை ஊதியம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், காரணங்கள் என்ன?

(உ) அவர்களுக்கு முதல் நிலை ஊதியம் வழங்க அரசு (1) எடுத்துள்ள, (2) எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) முதல் நிலை தகுதி பெற்றும் காலியிடம் இல்லாததினால் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாகவே பணிபுரியும் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரும் 1—1—1974 முதல் முதல் நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவர்.

(பிற்பகல் 4-10)

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, 47-வது கேள்வியைப் பொறுத்த வரையில், முதல் நிலைத் தகுதி பெற்ற தமிழாசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறதா என்பதுதான். அப்படி செலக்ஷன் கிரேடு கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுவதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முதல்நிலைத் தகுதி பெற்றும் காலியிடம் இல்லாததால் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகப் பணி புரிகிறவர்கள் 1—1—1974 முதல், முதல் நிலை ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, சமீபத்தில் இடப்பட்டிருக்கக்கூடிய ஆணையில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சரவர்கள் நான்கு கேள்விகளுக்குச் சேர்த்து பதிலளித்தார்கள். எந்தக் கேள்வி என்று சொல்லுங்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, 47-வது கேள்விதான். இப்போது வெளியிடப்பட்டிருக்கும் ஆணையில் இரண்டாம் நிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 1—1—1974-ல் 10 ஆண்டுக் காலம் பணி புரிந்தவர்களாக இருந்தால், முதல் நிலை ஊதியம் கொடுக்கப்படுமென்று விளக்கமாக இருக்கிறது. 1—1—1974 முதல் முதல் நிலைத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் எந்த வகுப்பிற்குப் போதித்தாலும், அவர்களுக்கு இதுவரையில் அந்த ஊதியம் கொடுக்கப்படாமல் இருந்தால் உண்டு என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அது அந்த ஆணையில் இல்லை. அதற்காக ஒரு துணை ஆணை பிறப்பிக்கப்படுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆணையில் இல்லாவிட்டால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற கருத்தின் அடிப்படையில் இது நிறைவேற்றப்படுகிறது. ஆணையில் இல்லாவிட்டால், அது தனியாகக் கவனிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நிலைமைகள் பரிசீலிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் ஆனவுடன் அவர்களுக்கு முதல் நிலைத் தகுதி கொடுக்கும் ஏற்பாட்டினை தமிழக அரசு கொண்டுவந்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே சமயத்தில் முதல் நிலைக்குரிய தகுதி பெற்றவர்கள், பட்டதாரி ஆசிரியர்களுடைய ஊதியத்தை வாங்கத் தகுதி பெற்றவர்கள், இரண்டாம் நிலையில் இருக்கும்போது முதல் நிலைச் சம்பளத்தைப் பெறும்போது, இவர்களை விட்டு வைத்திருப்பது பரிசீலிக்கப்படுமென்றும், அவர்களைப் பின்னுக்குத் தள்ளியது ஆகாதா? அந்தச் சலுகை அளிப்பது முழு மன நிறைவை அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் சொல்லியது தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இல்லை என்று சொல்கிறார். இல்லையென்ற நிலைமை இருக்குமானால், அதுபற்றி கவனிக்கப்படும்.



## *Selection Grade Scales of Pay.*

*50 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have ordered that Selection Grade scales of salary be given to teachers with effect from 1st January 1971;

(b) whether the Secondary Grade and Higher Grade Teachers serving in the Batlagundu Panchayat Union in Madurai District who have been selected for Selection Grade posts, have not been sanctioned their scales of salary from 1st January 1971; and

(c) if so, the reasons therefor?

## தேர்வுத்தர சம்பள விதங்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுத்தர சம்பள விதங்களை 1—1—1971-லிருந்து ஆசிரியர்களுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) தேர்வுத்தர பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட மதுரை மாவட்டம், வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் இடைநிலைத்தர, துவக்கத்தர ஆசிரியர்களுக்கு 1—1—1971-லிருந்து அவர்களது சம்பள விதங்கள் ஒப்பளிக்கப்படவில்லையா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். அரசு நிலை எண் 1268, கல்வி, நாள் 23—7—1971-ல் இப்பொருள் குறித்த ஆணை வெளியிடப்பட்டு விட்டது.

(இ) ஆம்.

(உ) தேர்வுநிலை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்க வேண்டிய வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியக் குழுவும் நியமனக் குழுவும் மேற்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளில் இயங்காத காரணத்தால் 1—1—1971 முதல் 31—7—1972 வரையில் புதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்படவில்லை மேற்படி தேர்வுநிலை ஆசிரியர்களுக்கு 1—8—1972 முதல் புதிய விகிதத்தில்

ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. 1—1—1971 முதல் 31—7—1972 வரை உள்ள காலத்திற்குண்டான நிலுவைத் தொகை அளிப்பதுபற்றி தனியாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கையில் தேர்வு நிலையாக 10 சதவிகிதம் வழங்கப்படுவதென்ற நிலை உள்ளது. ஆனால் ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போதும், ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தும்போதும் இந்த விகிதமானது கணக்கிடப்பட்டு அதிகப்படியான ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை தரப்படுவதில்லை. அதை உடனடியாகக் கொடுக்க அரசு ஆணையிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்த விதியின்படிதான் நடைபெறவேண்டும். அப்படி நடைபெறவில்லை என்றால், அப்படி நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, தேர்வு நிலைச் சம்பள விகிதங்கள் 1—1—1972-லிருந்து அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வியைத் தவிர, பொதுவாக தேர்வுத் தர சம்பள விகிதங்கள் அளிக்கப்படும்போது, 20 அல்லது 25 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு 5 அல்லது 10 ரூபாய் குறைகிறது. சமீபத்தில் 3 மாதங்களுக்கு முன்பு செறியாளர் அவர்கள் அவ்வாறு கணக்கிடப்படும்போது குறைந்தால், அந்தத் தேர்வுத் தர சம்பளத்தைக் கொடுக்க வேண்டாமென்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அந்த ஆணையை மாற்றியமைக்க முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லப்படும்.

திரு. கே. எஸ். கணபதி (திரு எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு (' ' பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதல் நிலை தமிழ்ப் பண்டிதர்கள், இரண்டாம் நிலை ஆசிரியர்கள் ஆகியோருக்குத் தேர்வுத்தரப் பதவிக்குரிய சம்பள விதங்கள் வழங்கப்படவில்லையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தற்காலிக பதவி உயர்வு செய்யப்பட்டவர்களுக்கு அளிப்பது போன்று அவர்களுக்கு தேர்வு நிலைப் பதவியில் ஊதியம் வழங்கப்படுகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## Short-term B.T. Course.

* 52 Q.—Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Secondary Grade Teachers working in the Primary Schools and High Schools find it difficult to get seats for the Short-term B. T. Course, after passing the B.A. Degree Examination;

(b) if so, the number of such teachers; and

(c) the steps taken by the Government to enable them to get seats for the above course?

## குறுகிய கால பி.டி. பயிற்சி

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் பணிபுரியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ. முடித்து பி.டி. குறுகிய காலப் பயிற்சிக்கு இடம் கிடைக்காமல் உள்ளனரா?

(இ) ஆமெனில், எத்தனை பேர்?

(உ) அவர்களுக்கு இடம் கிடைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) குறுகிய கால பி.டி. பயிற்சிக்கு பி.ஏ. பட்டம் பெற்ற ஆசிரியர்களின் மொத்த பணிக்காலம், பி.டி. பயிற்சிக்காக நுழைவுத் தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், விதிமுறைகளின்படி பி.ஏ. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் குறுகிய கால பி.டி. பயிற்சிக்கு அவர்களுடைய தகுதிக்குத் தக்கவாறு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே, தகுதி பெற்றவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற முறையீடுகள் எதுவும் பெறப்படுவதில்லை.

(இ) & (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

[1974 சனவரி 24

திரு. கெ. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் தமிழாசிரியர் பட்டயம் பெறுவாரேயானால், அவர் பயிற்சிக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை என்று நம்முடைய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பி.ஏ. தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால், அவர் அந்தப் பயிற்சிக்குச் சென்று வந்தால்தான் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இது நீக்கப்பட்டு, அவர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப்போல, ஏற்கெனவே அவர்கள் பயிற்சி பெற்றுள்ளதால், விதிவிலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அவர்கள் பி.டி. பட்டம் பெறாமல் வருவதற்கு அரசு ஒப்புக்கொள்ளுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதிருக்கிற முறைப்படி, உறுப்பினர் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொள்வதற்கில்லை. இப்போதுகூட, தமிழாசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக ஆக்கும்போது இந்த 'ஷார்ட்டன்ட் பி.டி.' என்ற அளவுக்கு அவர்களும் பி.டி. பட்டம் பெற வேண்டுமென்ற முறை இருக்கிறது. எனவே அதை ஒப்புக்கொள்வதற்கில்லை.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்தில் இந்தக் குறுகிய கால பி.டி. படிப்பதற்கு எத்தனை இடங்கள் இருக்கின்றன, அவை எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்தக் கல்லூரிகளில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டையில் முதல் குழுவிற்கு 65 இடங்களும், இரண்டாவது குழுவிற்கு 65 இடங்களும், ஆக 130 இடங்கள் இருக்கின்றன. அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டையில் முதல் குழுவிற்கு 50 இடங்களும், இரண்டாவது குழுவிற்கு 50 இடங்களும், ஆக 100 இடங்கள் இருக்கின்றன. மொத்தம் 230 இடங்கள் இருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் மேலே படித்து பட்டம் பெற நினைப்பவர்களுக்கு, பிரைவேட்டாக பி.ஏ. எழுத அனுமதிக்கிறோம். அதேபோன்று கல்லூரிக்குச் சென்று பயிற்சி பெறாமல், பிரைவேட்டாக பி.டி. எழுத அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சாதாரணமாக பி.ஏ., எம்.ஏ. என்பது பொதுவான கல்வி. பி.டி. என்பது பயிற்சி. அந்தப் பயிற்சியை அங்கே பெறாமல், பி.டி. எழுதுவது என்பது பொருந்தி



1974 சனவரி 24]

வராது. ஏற்கெனவே செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்றிருப்பதால், அவர்களுக்கு 'ஷார்ட்டன்ட் பி.டி.' என்று வந்தது. இல்லாவிட்டால் அவர்கள் 9 மாத காலம் படிக்க வேண்டும். ஏற்கெனவே அவர்களுக்கு அனுபவம் இருக்கிற காரணத்தால், 3 மாதம் படித்தால் போதுமென்று வந்தது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தண்ணீரில் இறங்காமல் எப்படி நீந்தக் கற்றுக்கொள்வது?

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ. பட்டம் பெற்றிருந்து, 50 வயது பூர்த்தியாகி இருந்தால், அவர்களுக்கு பி.டி. ஊதியம் வழங்கப்படலாம் என்ற உத்தரவு, ஏற்கெனவே இருந்து வந்தது. அந்த உத்தரவை அரசு மறுபடியும் பிறப்பிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்த நிலைமைகளைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இடையிலே நிறுத்தப்பட்டுள்ளன என்றால், நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் இன்னும் நீடிக்கிறதென்றுதான் பொருள். அதை மறுபடியும் ஆராய வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இந்தக் குறுகிய கால பி.டி. பயிற்சி தற்போது சைதாப்பேட்டையிலும், புதுக்கோட்டையிலும்தான் இருக்கிறது. தென் மாவட்டங்களிலிருந்து வருகின்ற ஆசிரியர்களுக்கு இவ்வளவு தொலைவில் வந்து படிப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே மதுரையிலோ அல்லது திருநெல்வேலியிலோ ஒரு குறுகிய கால பி.டி. கோர்சை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த வகையைப் பொறுத்த வரையில், அதிகமான எண்ணிக்கையைப் பெற முடியாமல் இருக்கிறோம். இதில் வருகிறவர்கள், பெரும்பாலானவர்கள் வரலாறு, பூகோளம், பொருளாதாரம் படித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அறிவியலை எடுத்துப் படிக்கும் நிலையில்லை. ஆனால் என்ன டிமாண்ட் இருக்கிறதென்றால், சயன்ஸ் பி.டி. படித்தவர்களுக்குத்தான் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. இப்படிப் படித்து வருகிறவர்கள் ஹிஸ்டரி, எகனாமிக்ஸ் படித்து வருகிறார்கள். இதில் எண்ணிக்கையை அதிகமாக்கி, பி.டி. ஆசிரியர்கள் அதிகமாக வருவார்களானால், அவர்களுக்கு வேலை

[1974 சனவரி 24

கொடுக்கும் வாய்ப்பு இல்லை. எனவேதான் 230 இடங்கள் என்று restrict பண்ணியிருக்கிறோம். சேருபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்குமானால், அப்போது வேண்டுமானால் விரிவுபடுத்திக்கொள்ளலாம்.

*Contingent Staff Working in Government Aided High Schools.*

*53 *Q.*—Thiru K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal to confirm the services of the Contingent Staff, viz., Watchmen, Watermen, Sweepers and Scavengers working in Government Aided High Schools with fixed time scales of pay; and

(*b*) if so, the action taken thereon ?

*அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் குற்றேவல் ஊழியர்கள்*

**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும், காவலர், தண்ணீர் கொடுப்போர், துப்புரவு செய்வோர், தோட்டி வேலை செய்வோர் போன்ற குற்றேவல் ஊழியர்களை (Contingent staff) நிரந்தர ஊழிய அடிப்படையில் (Time scale of pay) கொண்டுவர உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. க. அறிவழகன்:** தலைவர் அவர்களே, இதுபோன்று அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் காவலர், தண்ணீர் கொடுப்பவர் போன்றவர்கள், கண்டின்ஜன்ட் ஸ்டாப், குற்றேவல் ஊழியோர் ஆகியோரை பொதுப்பணித் துறையிலும் மற்றத் துறைகளிலும் அவர்களுடைய பணியை உறுதிப்படுத்தி நிரந்தர ஊழியர்கள் அடிப்படையில் கொண்டு வந்திருக்கின்றோம். இன்றையதினம் அரசு உதவி பெறும் பள்ளிகளிலே இருக்கின்ற தாளாளர்கள். நிர்வாகிகள் இவர்களுக்குரிய நிரந்தர ஊழியர் சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய நிலையிலே இல்லை, கொடுக்கவும் மாட்டார்கள். ஆகவே அரசு இதை மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 சனவரி 24]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதிலுள்ள சங்கடமெல்லாம் நிதிப் பிரச்சினைதான். ஆகவே நடைமுறைப் படுத்துகின்ற சூழ்நிலை வேண்டுமானால், ஏராளமான நிதிவசதி தேவைப்படுகின்றது. ஆகவேதான் இதைப் பற்றி இப்போது பரிசீலிப்பதற்கு இல்லை என்று நான் குறிப்பிட்டேன். வேறு பல துறைகளிலும், மெல்ல மெல்லத்தான், ஆறப்போட்டுத்தான் முயற்சிகளை மேற்கொண்டு செய்ய வேண்டும். காலப் போக்கில்தான் இதுபற்றி யோசிக்க வேண்டும்.

*Collapse of a new building in Engineering College, Guindy, Madras.*

*54 *Q.*—Thiru L. BALARAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the new building constructed at the Guindy Engineering College, Madras, collapsed on 1st September 1972 resulting in an accident;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the number of casualties ?

**சென்னை கிண்டி என்ஜினிரிங் கல்லூரியில் இடிந்து விழுந்த புதிய கட்டிடம்**

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை கிண்டி என்ஜினிரிங் கல்லூரியில் புதியதாகக் கட்டிய கட்டிடம் இடிந்து 1972-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி விபத்து ஏற்பட்டதா?

(இ) ஆமெனில், இதன் காரணம் யாது?

(உ) எத்தனை நபர்கள் இறந்தனர் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) அந்தக் கட்டிடம் இடிந்ததற்கான காரணங்களை ஆராய அரசு ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(உ) ஏழு நபர்கள் இறந்தனர்.

*55 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the parabolic roofing put up at the Engineering College, Guindy, Madras, collapsed in September, 1972;

(b) if so, the reasons therefor;

(c) the contractors who put up the roofing: and

(d) the total cost of construction?

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) சென்னை, கிண்டி பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்ட, இடையில் தாணின்றியுள்ள வட்ட அமைப்புக்கூரை* (parabolic roofing) *1972 செப்டம்பரில் சரிந்து விட்டதா?*

*(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?*

*(உ) அதை அமைத்த ஒப்பந்தக்காரர் யார்?*

*(எ) அதை அமைக்க ஆன மொத்தச் செலவு எவ்வளவு*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.*

*(இ) இந்த கட்டிட அறை இடிந்துவிட்டதற்கான காரணங்களை ஆராயும் பொருட்டு அரசு நியமித்த குழுவின் அறிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.*

*(உ) திரு. டி. எழுமலை.*

*(எ) ரூபாய் 1.71 லட்சம்.*

*திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடத்தின் செண்டரிங்கைப் பிரிக்கின்றபோது "2" இஞ்சு இறங்குகின்றதே" என்று சொன்னபோது அதை நிர்வகித்துக்கொண்டிருந்த பொறியாளர், இன்ஜினியர் "2" இறங்கினாலும் பரவாயில்லை, செண்டரிங்கைத் தட்டு" என்று உத்தரவிட்டதனாலே பேரான் முழுவதும் இடிந்து விழுந்தது என்று நம்பத் தகுந்த வட்டாரங்களில் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதை பொல்லாம் பற்றி ஆராய்ந்து, அதிலே என்ன நிலைமை, என்ன காரணம், அது டிசைன் காரணமாகவா, அதற்கு இசைவு அளித்தவர்களா, நடைமுறைப்*





*படுத்தியவர்களாலா, மேற்பார்வை பார்த்தவர்களாலா, கண்ட்ராக்டர்களாலா, அல்லது பொறியாளர்களாலா என்பதையறிய, குற்றம் யாரிடத்திலே என்பதை ஆராய வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தோம். முன்னாள் தலைமைப் பொறியாளர் அவர்களும் ஆக மூவர்களைக் கொண்ட குழு நாயகம், தலைமைப் பொறியாளர் அவர்களும், திரு. எஸ். பி. நமசிவாயம் தலைமைப் பொறியாளர் அவர்களும் ஆக மூவர்களைக் கொண்ட குழு தான் ஆராய்ந்து அதனுடைய அறிக்கையைத் தந்திருக்கின்றது. இன்னும் சில பல விளக்கங்களைப் பெற வேண்டியிருக்கின்ற காரணத்தால் அதைப் பெற்ற பின்புதான் அதன்மீது தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.*

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, will the Hon. Minister be pleased to state whether the Committee appointed by Government has gone into the question whether the cement that was used for this building had been adulterated with other materials like ash, because that seems to be the main cause for the building having fallen down ?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவதைப் போன்று எல்லாவிதமான தன்மைகளையும் சேர்த்துத்தான் ஆராயும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்த டிசைன் போட்டவர்கள் தவறு, காண்ட்ராக்டர் தவறு, சிமிண்ட் கலப்பில் தவறு, இது உட்பட எது காரணம் என்று ஆராய்ந்து கண்டறிந்து அறிக்கையின் முழு முடிவும் வந்த பிறகுதான் உண்மை நிலைகளைக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.*

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I know whether it was "Arasu" cement that was used for this building, and if so, whether the Government will prevent such adulteration in future ?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் இப்போது நாம் எதுவும் முடிவு கட்ட முடியாது. அடல்ட்ரேஷன் என்பது, அது பாஸ்ட் ஆக இருந்தாலும் பியூட்சராக இருந்தாலும், தப்பு தான். இனிமேல் எங்கு இருந்தாலும் அப்படிச் செய்யக்கூடாது. ஆனால் இதற்கு என்ன காரணம் என்பதை அறிக்கையினுடைய முழு விவரங்கள் பார்த்து அறிந்த பிறகுதான் அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.*

MR. CHAIRMAN : They have not yet come to a conclusion. After they come to a conclusion, they will give a full report.

*திரு. எல். பலராமன் :* தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் விவரம் யாது? இந்த நிபுணர் குழுவை அரசாங்கம் நியமித்திருக்கின்றது என்று கூறினார்கள். அந்த அறிக்கையின் முழு விவரம் யாது? அந்த அறிக்கையில் கண்ட....

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அந்தக் குழுவினர் அறிக்கை சில திங்களுக்கு முன்னால் வந்துள்ளது. அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. சிலபல விளக்கங்களைப் பெறுகின்ற நிலைமையில் இருக்கின்றதனால், அவைகளைப் பெற்று தவறு செய்தவர்கள் இன்னார் இன்னார் என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நடவடிக்கைகள் எடுக்கலாம்.

*திரு. எஸ். ஜெயராம செட்டியார் :* தலைவர் அவர்களே, இந்த காண்ட்ராக்டருக்கு முழுப் பணமும் கொடுக்கப்பட்டுவிட்டதா? அப்படியானால் அவர்களிடமிருந்து அந்தத் தொகையை வசூலிக்க வேண்டியதாக இருந்தால், அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கைகள் எடுத்து தொகையை வசூலிக்கும் உத்தேசம் உண்டா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, காண்ட்ராக்டருக்கு பணம் எதுவும் தரப்படவில்லை. இந்த இறந்த ஏழு நபர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பதற்கு, இந்த காண்ட்ராக்டரே பொறுப்பு ஏற்று அவரே தந்திருக்கின்றார்.

### *Sea Erosion at Manapad Village in Tirunelveli District*

* 56 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the steps taken to arrest sea-erosion at Manapad Village in Tirunelveli District ?

### *திருநெல்வேலி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் கடல் அரிப்பு*

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருநெல்வேலி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் யாவை?





THE HON. THIRU P. U. SHANMUGAM : The Chief Engineer, Public Works Department (General) after an on-the-spot inspection, had reported during 1972 that the temporary protective works against sea erosion, carried out in the Manapad area, during the year 1960, had stopped further advancement of the sea, and since then monthly shore-line survey has been conducted to watch the behaviour of the sea for deciding the further steps to be taken to prevent the erosion, and based on the results of the survey, the Executive Engineer, Fishing Harbour Division, Tuticorin has been instructed to prepare an estimate to construct a 50 feet long groyne as an experimental measure to study the behaviour of the shore line changes. After watching the changes at least for a period of two years further action will be taken for finding a permanent solution to arrest further erosion.

*திரு. எம். சங்கரலிங்கம் :* தலைவர் அவர்களே, மணப்பாடு கிராமத்திலே கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவான தொகை எவ்வளவு? தற்போது புதிதாக சுவர் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதற்கு செயற் குறிப்பின்படி ஒதுக்கியுள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, என்னிடம் உள்ள தகவல்படி, 1970-ஆம் ஆண்டு ரூபாய் 2.62 லட்சத்திற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்பாக 1969-ல் ரூபாய் 72,528-க்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, வேலை நடந்திருக்கின்றது. ஆனால் இந்த ரூபாய் 2.62 லட்சம் செலவு செய்ய போடப்பட்ட திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

### *Desilting the Kanmois*

* 57 Q.—THIRU R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government will take steps to desilt the Kanmois in Kariappatti Firka, Aruppukkottai taluk, since about more than 800 acres under those Kanmois have been assigned and since more than 1000 acres could be brought under cultivation if they are desilted ; and

(b) if so, when steps will be taken in that regard?

[1974 சனவரி 24

## கண்மாய்களைச் செப்பனிடுதல்

**திரு. ஆர். சக்தியோகன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அருப்புக்கோட்டை தாலுக்கா, காரியாபட்டி பிர்க்கா, கண்மாய்களின் பாசனத்தில் ஏறத்தாழ 800-க்கும் மேம்பட்ட ஏக்கர்கள் அசைன்மென்டாகி இருப்பதாலும், அவைகளைச் செப்பனிட்டால் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் விவசாயம் செய்ய ஏதுவாக இருக்குமென்பதாலும் அவைகளைச் செப்பனிட்டு, விவசாயத்திற்கு உதவும்படியாகச் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

(இ) ஆமெனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) 800 ஏக்கர் அசைன்மெண்டு செய்யப்பட்ட நிலங்களின் இருப்பிடம் பற்றிய விபரங்கள் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து கிடைக்கப் பெற்ற பின் இந்த நிலங்களுக்கு பாசன வசதி செய்து கொடுப்பது பற்றி ஆய்வு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** தலைவர் அவர்களே, காரியாபட்டி பஞ்சாயத்து ஒன்றியத்தில் உத்தியோகம் பார்க்கக்கூடியவர்களும், பினுமியாக அசைன்மெண்ட் வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கின்றபோது, உத்தியோகம் பார்க்கின்றவர்கள் அசைன்மெண்ட் வாங்கி வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டிருந்தால், அதையெல்லாம் ரத்து செய்ய அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு இதைப்பற்றி கேள்வி போட்டால், பதில் சொல்வார்கள்.

## *Construction of an Over-bridge across the Madurai Rameswaram Railway Line*

* 58 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the construction of an over-bridge in lieu of the present level crossing across the Madurai-Rameswaram railway line on the Aruppukottai Road in Madurai City, has been postponed; and

(b) if so, the reasons therefor?



1974 சனவரி 24]

## மதுரை-இராமேசுவரம் ரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டுதல்

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகரில், மதுரை-இராமேசுவரம் ரயில் பாதையில் குறுக்கே செல்லும் அருப்புக்கோட்டை சாலை மீது தற்போதுள்ள இருப்புப் பாதை சாலைக்கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்று கட்டுதல் ஒத்திப்போடப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, தூத்துக்குடி-மதுரை நெடுஞ்சாலை: இப்போது தூத்துக்குடியில் இருக்கின்ற "ஸ்பிக்" நிறுவனம் சீர்திருத்தி மிக நல்ல முறையிலே செப்பனிடுவதற்கு திட்டம் இருப்பதாக அரசு அறிக்கை கூறுகின்றது அப்படி ஏதேனும் சீர்திருத்தும்போது, மேம்பாலத் திட்டத்தையும் அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே மேம்பாடுகளைக் குறித்துச் சொல்லப்பட்டது. அது கைவிடப் பட்டது என்றுதான் படித்தேன். ஏற்கெனவே 22 மேம்பாலங்கள் அமைக்க மாநில அரசின் அங்கிகாரம் அளிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலும் தரப்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் அமைச்சர் அவையிலே, போடப்பட்டிருக்கின்ற மேம்பாலங்களுடைய ஊர்கள், மேம்பாலங்களில் எதையெதை மாற்றியமைக்க வேண்டும், எதற்கு முக்கியதுவம் அளிக்க களில் எதையெதை மாற்றியமைக்க வேண்டும் எதற்கு முக்கியத்துவம் அளிக்க அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது.

## *Electrification of the Madras-Arkonam Railway Line.*

* 59 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the State Government have requested the Central Government for the electrification of the Madras-Arkonam railway line;

(b) if so, the action taken thereon by the Central Government; and

(c) the year in which the scheme will be commenced?

### சென்னை-அரக்கோணம் பாதையில் மின்சார ரயில் விடும் திட்டம்

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-அரக்கோணம் பாதையில் மின்சார ரயில் விடும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், இதன் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) எந்த ஆண்டில் இவ்வேலை துவங்கும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) & (உ) மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலாவது வருமா என்று உத்தேசமாகவாவது இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இது வரும் என்ற நம்பிக்கையோடுதான் சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் இதற்கான கால்கோள் விழா நடத்தியிருக்கின்றார்கள்.

### *Tamil Nadu Electricity Board Employees' Munnetra Sangam*

*60 Q.—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received any appeal from the 'Tamil Nadu Electricity Board Employees' Munnetra Sangam" as the Board has not recognised even though it has the majority of the employees as its members and as the period of recognition of the formerly recognised Trade Union had expired; and

(b) if so, the action taken thereon?



### தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

**திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. காட்டூர் கோபால் சார்பில்):** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஏற்கனவே அங்கீகாரம் செய்யப்பட்டிருந்த தொழிற்சங்கத்திற்குரிய காலம் காலாவதியாகியும் தற்போதுள்ள பெரும்பான்மையான தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள "தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்" தன்னை அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், வாரியம் அதனை நிறைவேற்றாததால் அரசுக்கு மேல் முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்.** தலைவர் அவர்களே, (அ) & (இ) அங்கீகாரம் கொடுப்பதற்கான ஆதாரங்களை இது பற்றிய இவால்யூவேஷன் கமிட்டியிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தில் இயங்கும் தொழிற்சங்கங்கள் அங்கீகாரம் பெற்ற காரணத்தைக் கொண்டோ, அல்லது ஏதோ ஒரு காரணத்தினாலோ அரசாங்க சமர்சியல் அசிஸ்டெண்ட் ஒருவரை மாற்றுவது, அதன் நிர்வாகக் காரியங்கள் ஆகியவற்றில் யூனியனைக் கலந்து ஆலோசித்துத்தான் செய்ய வேண்டும் என்று ஏதாவது அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, தொழிற் சங்கச் சட்டப்படி, சில மாறுதல்கள்பற்றி எப்படி கலந்தாலோசித்துச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஏற்கெனவே ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. அதன்படி காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

(பிற்பகல் 4-30)

Thiru G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, I raise a point of order on this question for the reason that under Article 329 of the Constitution, any question relating to an election and nomination—I mention this because they have specifically referred to nomination—cannot be considered by anybody except the Election Tribunal. In a case which arose from this Legislature

Shri Saka Venkata Rao's case, which is the earliest case—the Supreme Court held that the question could not be considered by anybody except by the Election Tribunal or by the Governor under Article Constitution. Article 329 of the Constitution reads like this :—

" Notwithstanding anything in this Constitution—

* * *

(*b*) no election to either House of Parliament or to the House or either House of the Legislature of a State shall be called in question except by an election petition presented to such authority and in such manner as may be provided for by or under any law made by the appropriate Legislature."

Sir, an election starts right from the nomination till the culmination of the election and every stage is taken to be one. When a person holds himself out as a candidate, he also starts the election, irrespective of the fact whether a notification for the purpose has come or not. We have got two Members of this House retiring from the Graduates' Constituency and two Members of this very same House retiring from the Teachers' Constituency. It could be said, later, that we were parties to bringing pressure on any particular person not to nominate any person. In that case, it will be dangerous not only to those persons but even to the Hon. Minister who answers it because he is in charge of Education. I am referring to these in the interests of everybody concerned, in view of the provisions in section 123 of the Representation of the People Act, 1951, which defines corrupt practices. I am just referring to this provision, so that we do not get into a muddle on this and lest our conduct should be called in question in a Court in an election petition. Section 123 refers to any direct or indirect interference with the election, and it reads thus :

" Undue influence, that is to say, any direct or indirect interference or attempt to interfers on the part of the candidate

* * *

with the free exercise of any electoral right."

Now, four persons are candidates and they are going to stand from this House . . .

Mr. CHAIRMAN : I have already gone through the Constitutional provisions. I hope the hon. Member Thiru Masilamani will withdraw the question.



*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, சபை முன் வந்த ஒரு கேள்வியை சபையின் அனுமதியைப் பெற்றுத்தான் திரும்பப் பெறவேண்டும்.

Thiru A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I know whether the question is being put or not?

*திரு. மு. மாசிலாமணி :* மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வினாவை நான் வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, am I to understand that this question is not permissible under the Constitutional provisions?

Mr. CHAIRMAN : Yes, it is permissible.

*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, ஒருவர் ஆட்சேபித்தாலும் வாபஸ் பெற்றுக்கொள்ள முடியாது என்பது. ஆதலால் நான் ஆட்சேபிக்கிறேன். வாபஸ் வாங்கிக்கொள்வதை ஆட்சேபிக்கிறேன். கல்வியமைச்சரவர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால், பதில் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* கேள்வி வாபஸ் வாங்கப்பட்டு விட்டது. அப்புறம் விடை எங்கே வருகிறது?

*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, அவை முன் வந்த ஒரு விஷயத்தை அவையினுடைய அனுமதி இல்லாமல் எந்த மெம்பரும் வாபஸ் வாங்கிக்கொள்ள முடியாது. மெம்பர் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன், நான் கேள்வி கேட்கவில்லை யென்று சொல்கிறார்கள். ஆனால் அதை அவை அனுமதிக்க வேண்டும். அவையில் யாரேனும் ஒரு அங்கத்தினர் மறுத்தால் கூட, அவர் வாபஸ் வாங்க முடியாது என்பது விதி. ஆகையினால் நான் ஆட்சேபிக்கிறேன்.

*திரு. சா. கணேசன் :* தலைவரவர்களே, நானும் அதை ஆட்சேபிக்கிறேன்.

Thiru G. VASANTHA PAI : Sir, the hon. Member has withdrawn the question. How can an answer be given?

Mr. CHAIRMAN : When once the hon. Member has withdrawn his question, where is the need for the answer?

*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, நான் அந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, you have upheld my point of order and this question cannot be answered after you have upheld the point of order.

**திரு. சா. கணேசன்:** தலைவரவர்களே, திரு. வசந்த பாய் அவர்களுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் முறையல்ல என்பதற்கு நான் காரணம் சொல்கிறேன். தேர்தல் என்றால், நாமினேஷன் போட்டதற்குப் பிறகுதான் தேர்தல் என்று வருமே தவிர, பின்னே நடக்கவிருக்கிற தேர்தல் பற்றி இப்படி இப்படி நடக்க வேண்டுமென்று சொல்வது எந்த கான்ஸ்டிட்யூஷன்படி அல்லது எலெக்ஷன் ரூல்ஸ்படி தேர்தலில் தலையிட்டதாக ஆகும்? எவ்வகையிலும் தலையிட்டதாக ஆகாது என்பதை சட்ட நிபுணரான அவரே மறந்து விட்டுச் சொல்வது பொருத்தமில்லையென்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நானும் பல எலெக்ஷன் கேஸ்களை நடத்திய அனுபவத்தை வைத்து இதைச் சொல்கிறேன். எலெக்ஷன் ரூல்ஸில் என்ன இருக்கிறதென்றால், நாமினேஷன் ஃபாரம் போடுவதற்கு எலெக்ஷன் கமிஷன் நாள் குறிப்பிட்டதிலிருந்து என்றுதான் வருமே தவிர, அதற்கு முன்னதாக எலெக்ஷன் சம்பந்தமாக சட்டசபையோ, பார்லிமெண்டோ அல்லது வேறு உறுப்போ எந்த விதமான தீர்மானமும் பண்ணக் கூடாது என்பதற்கு கான்ஸ்டிட்யூஷனலாகவோ வேறு விதிகளின்படியோ தடையில்லை என்று மிகப் பணிவோடு, ஆனால் அழுத்தமாக, அவைத் தலைவரவர்களே, தங்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த வினாவை எழுப்பியதைத் தொடர்ந்து பதில் கிடைக்கும்படியாகச் செய்து, உறுப்பினர்களின் உரிமையைக் காக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினா கேட்கப்படாவிட்டாலோ, அந்த வினாவுக்கு முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர் இல்லாமல் போனாலோ, இன்னொரு உறுப்பினர் வேண்டுகோளுக்கிணங்க தலைவர் அவ்வினாவுக்கு விடையளிக்கும்படி செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வினா போடுவதும் வினாவைத் திரும்பப் பெறுவதும் உறுப்பினருடைய விருப்பம். ஆக, வினாவை வற்புறுத்துவதும், வற்புறுத்தாமல் போவதும் அவையினுடைய விருப்பம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாத்திரம் நான் பதில் கூற விரும்புகிறேன். இங்கே அவர்கள் கேட்டிருப்பதும், நாம் பதில் சொல்வதும் எதைப் பொறுத்ததென்றால் சர்வீஸ் ரூல்ஸைப் பொறுத்தது. நம்மைப் பொறுத்தவைகளுக்கு என்ன பதில் என்பதைத்தான் கேட்கிறார்களே தவிர, தேர்தல் நடவடிக்கைகளிலே



தேர்தல் கமிஷன் முறைகளிலே நாம் ஈடுபடுகிற நிலைமைகள் இல்லை. இது சர்வீஸ் ரூல்ஸுக்கு அடங்கி வருமா, தம்முடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டதா, சரியா, தவறா, நடவடிக்கை எடுக்கக் கூடியதா, அல்லவா என்று கேட்கிறார்கள். இது எக்காரணத்தைக் கொண்டும் தேர்தல் கமிஷனுடைய ஆணைகளிலோ மற்றவைகளிலோ நாம் தலையிட்டதாக ஆகாது. மதிப்பிற்குரிய திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, அப்படியே இருந்தாலும் கூட, தேர்தல் தேதி நிர்ணயிக்கப்படாததன் காரணமாக, இது அதற்குள் அடங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, the wording of the Call Attention Notice is "active promotion and nomination by the Tamil Nadu Graduate Teachers' Association". So, nomination comes in. It has been definitely brought in, in the Call Attention Notice as well as in the question. It is not as though nomination has not been brought in and it is in a general form. The names of the Constituencies have been mentioned and the question of nomination comes in from the date a person holds himself out as a candidate. Despite the fact that the election is called in question, section 123 of the Representation of the People Act, 1951 will apply, and any attempt to induce them not to have the candidate will be a corrupt practice. Despite the elucidation of the hon. Member Thiru Saw. Ganesan, I hold the contrary view.

THIRU K. RAJARAM: Mr. Chairman, Sir, I am putting the question.

THIRU A. R. DAMODARAN: On a point of procedure, Sir, it is better you give the ruling that the question is perfectly admissible under the rules, because the point of order has been raised questioning the validity of the admission of the question and it is for the Hon. Chairman to rule that the question is in order and that the Hon. Minister can answer it.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Chairamn, Sir, on the point of order raised by the hon. Member, Thiru Vasantha Pai, I would like to mention that is only pertaining to the point whether the Tamil Nadu Graduate Teachers' Association which is recognised by the State Government is entitled to do certain things, whether the Association acts according to the procedure governed by rules, and whether they are entitled to do it or not. Therefore, it has nothing to do with the general question of nomination for such elections.

THIRU G. VASANTHA PAI : I am sorry, Sir. If we see Short Notice Question No. 1 read with the Call Attention Notice, it is completely clear. The Question asks whether the Government are aware of the fact that the Tamil Nadu Graduate Teachers' Association has set up candidates on its behalf. That is nomination and that is putting candidates in the field. Therefore, the question of nomination comes in, and Article 329 of the Constitution and section 123 of the Representation of the People Act, 1951 apply. I do not want to be a party in this House, to the commission of a corrupt practice, nor this House, nor the Hon. Minister.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the hon. Member should withdraw the words ' corrupt practice '. There is no corrupt practice. The question is whether it is legal or illegal.

THIRU G. VASANTHA PAI : Sir, I am referring to a term in the Representation of the People Act. Section 123 of the Act refers to corrupt practices and says that the term 'corrupt practice' includes any attempt to interfere with the right, the free exercise of any electoral right. Electoral right means the right to stand for election as well as to vote. Any attempt to interfere with that right would be a corrupt practice. Here, four candidates in this House may seek re-election and I do not want this House to consider it because any attempt would be considered as an attempt made on their behalf to bring pressure on a Graduates' Guild not to put up candidates, which will not be to the credit of this House.

(பிற்பகல் 4-40)

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, the hon .Member should not go into the matter to that extent nor argue the cause of certain people who want to contest the Election. Therefore, this is not a place...............

THIRU G. VASANTHA PAI : Sir, I protest against the personal aspersion cast upon me. I do not know who the candidates are. I mentioned that admitting the question and the notice was wrong. I am not holding any brief for any candidate nor am I going to Madurai, Chingleput and other places to canvass for anybody. The Hon. Minister must withdraw the personal aspersion cast upon me.

MR. CHAIRMAN : As Chairman, I admit it. The question is perfectly right. My verdict is final. There shall be no discussion on this.





THIRU G. VASANTHA PAI : I obey, Sir.

*திரு. செ. முத்துசாமி:* தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். இதுவரையில் அனுமதிக்கப்படவில்லை. நான் சொல்லுவதற்கு அடிப்படைக் காரணமாக இது இருப்பதால்தான் இதை எழுப்ப எண்ணுகிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* அடிப்படை இன்னும் முடியவில்லை. முடிந்த பிறகு சொல்லுங்கள். க்வெஸ்சன். அவரில் 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' கிடையாது.

*திரு. செ. முத்துசாமி:* தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில், அஸோஸியேஷனைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் என்பது, ஒரு Registered Organisation under the Societies Registration Act.

அது தனித்து இயங்குவதற்கு, தன்னுடைய சொந்தக் காரியங்களைச் செய்வதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா, இந்த அஸோஸியேஷனுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சினையைப்பற்றி தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, ஓட்டளிப்பிலிருந்து ஒருவேளை உரிமை மறுக்கப்பட்டால், 'என் உரிமை மறுக்கப்பட்டதே' என்று கேட்கலாம். ஆனால் இதைப்பற்றி எந்தவிதமான கருத்தினையும் அரசாங்கம் தெரிவிக்கும்போது அது குறித்து கேள்வி எழுப்புவது அல்லது அதை ஒரு பிரச்சினையாக ஆக்குவது—அதற்கு உரிமையில்லை. இதற்கு விடை அளிக்கப்பட்டால், அதனால் உரிமை மறுக்கப்படுகிறது என்று கருதப்படுமானால், அதற்கு உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, I am willing to abide by any decision you give. I am not willing to take the law from the Hon. the Health Minister.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I am not dictating anything to any hon. Member. I am only referring to these things.

THIRU G. VASANTHA PAI Sir, I object to the words " Urimai Illai ".

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்விக்கு விடையளிக்கப்படாத நிலையில், கேள்வியினை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் அவையின் அனுமதியோடு திரும்பப் பெறலாம். திரும்பப் பெறுமலும் இருக்கலாம்—சேர்மென் நினைத்தால். சேர்மென்தான் சொல்லுகிறேன், அதைக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். கேள்வியினைக் கேட்டபிறகு அமைச்சர் பதில் சொல்ல இருக்கிறார். பதில் சொல்ல வேண்டியதுதான். உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது, அதைப் பெற.

### *Participation in the Election by the Tamil Nadu Graduate Teachers' Association*

* S. N. Q. 1.—THIRU M. MASILAMANI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Tamil Nadu Graduate Teachers' Association has set up candidates on its behalf, and is doing election work, for the Graduate and Teachers Constituencies in the Election in Tamil Nadu Legislative Council to be held in April 1974;

(*b*) whether such conduct of the Association and its members contravenes Rules 14 and 16 of the Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973;

(*c*) whether any permission has been given to the Association or its members in this regard;

(*d*) whether similar permission will be granted to other Service Associations if they field candidates in General Election to the Legislature or elections to local bodies; and

(*e*) if no permission has been granted, the action already taken or proposed to be taken in this regard?

### தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தேர்தலில் ஈடுபடுதல்

**திரு. மு. மாசிலாமணி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தனக்கென்று வேட்பாளர்களை நியமித்துக் கொண்டு, 1974 எப்ரல் திங்களில் நடக்கவிருக்கும் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைத் தேர்தலில் பட்டதாரிகள்-ஆசிரியர்கள் தொகுதிகளுக்கு தேர்தல் பணி செய்து வருகிறது என்பதை அரசு அறியுமா?





(இ) அவ்வாறு அந்தச் சங்கமும், அதன் உறுப்பினர்களும் செயல்படுவது தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகளுக்கு முரணாகச் செயல்படுவதாகாதா?

(உ) இது குறித்து சங்கத்திற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் அனுமதி ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?

(எ) சட்டமன்றங்களுக்கான பொதுத் தேர்தல்களில் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் வேட்பாளர்களை நியமிப்பதற்கு இதை யொத்த அனுமதி ஏனைய பணியாளர் சங்கங்களுக்கும் வழங்கப்படுமா?

(ஐ) அவ்வாறு அனுமதி வழங்கப்படாவிட்டால், இது குறித்து ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) & (எ) இல்லை.

(ஐ) அவர்கள் வேட்புப் பத்திரம் தாக்கல் செய்தால், அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கும் பிரச்சினை எழும்.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, ரூல் 14 மற்றும் 16 என்ன சொல்லுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே,

"14. *Taking part in politics and elections.*—No Government servant shall be a member of or be otherwise associated with, any political party or any organisation which takes part in politics nor shall he take part in, subscribe in aid of or assist in any other manner, any political movement or activity.

16. Membership of service associations (1) No Government servant shall be a member, representative or officer of any association representing or purporting to represent, Government servants or any class of Government servants, unless such association satisfies the following conditions, namely :—

(*a*) Membership of the association shall be confined to a distinct class of Government servants and shall be open to all Government servants of that class.

(*b*) The association shall not, in any way, be connected with any political party or organisation, or engage in any political activity;

(*c*) The association shall not, in any way, be connected with, or affiliated to—

(i) any association which does not, or

(*ii*) any federation of associations which do not satisfy conditions (*a*) and (*b*);

(*d*) The association shall not—

(i) issue or maintain any periodical publication except in accordance with any general or special order of the Government;

(ii) except with the previous sanction of the Government, publish any respesentation on behalf of its members, whether in the press or otherwise;

(*iii*) in respect of any election to a legislative body whether in India or elsewhere, or to a local authority or body—

(A) pay or contribute towards, any expenses incurred in connection with his candidature by a candidate for such election.

(B) by any means support the candidature of any person for such election; or

(C) undertake or assist in the registration of electors, or the selection of a candidate for such election;

(iv) maintain or contribute towards the maintenance of any member of a legislative body, whether in India or elsewhere, or of any member of a local authority or body; or

(v) pay, or contribute towards the expenses of any trade union which has constituted a fund under section 16 of the Indian Trade Unions Act, 1926:

Provided that conditions (*a*) and (b) shall not be held to debar any Government servant from remaining or becoming a member of the Indian Officers' Association and that the Government may, for reasons to be recorded in writing, by general or special order, dispense with those conditions in the case of any association.

(*e*) The association shall not indulge in activities prejudicial to the sovereignty and integrity of India of morality or public order."





திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்கள் சட்டத்தில் இருக்கும் ஒழுங்குமுறைகளைப்பற்றிப் படித் தார்கள்.

நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை நியாயம் பற்றி முதலில் எனக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். போட்டி யிடப்போவது ஆசிரியர்கள் தொகுதி, பட்டதாரி ஆசிரியர்களுக்கான தொகுதி. இதற்கு முன்பு இருந்த பல சட்டங்களை காலப் போக்கிலே, காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைக் கொண்டு வந்து திருத்தியிருக்கிறோம். அப்படியிருக்க, ஆசிரியர் களுக்கான தொகுதியிலே ஒரு ஆசிரியர் நிற்பதற்குத் தடை இருக்கிறது என்றால், அது நியாயமான அரசியலாக இருக்குமா என்று அறிய விரும்புகி றேன். ஆசிரியர்களுடைய தொகுதியிலே ஒரு ஆசிரியர் நிற்பதற்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுப்பப்படுவது நியாயம்தானு என்று எண்ணிப் பார்க்கவேண்டும். மேனேஜ்மெண்ட் பள்ளி களிலுள்ள ஆசிரியர்கள் நிற்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். நின்று வெற்றி பெற்று அங்கே ஆசிரியராகவும் இங்கே இந்த மன்றத்திலே உறுப்பின ராகவும் இருந்து சம்பளங்களையும் பெறுகின்றார்கள். அந்த நிர்வாகத்திலே, கல்வித் துறையிலே அனுமதித்து விட்டு, உள்ளாட்சித் துறையில், அரசுத் துறையில் இப்படி மறுப்பது; இப்படி ஒரு நிலையை உருவாக்குவது எப்படி நியாயமாகும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பொதுவாக மானேஜ் மெண்டில் கூட சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்ற பின்னர், அவர்களை வேலையில் வைத்துக்கொள்வதென்பது நியாயமில்லை. அப்படி வைத்துக்கொள்ள நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோதுகூட, அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், விடுமுறை பெற்றுக்கொண்டு இங்கே இருப்பார்களே தவிர, சம்பளம் பெறுவது முடியாது. அரசாங்க ஊழியர் களுக்கென்று இருக்கின்ற விதியின்படி, அவர்கள் வேண்டுமானால் அனுமதி பெற்று தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்றால், இடைக்காலத்தில் விடுமுறை பெற்றுக்கொள்ளலாமே தவிர, சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அரசாங்க அலுவலராகவும் இருக்க முடியாது. ஏனென்றால் சட்டமன்றம் என்பது அரசாங்கத்தை நடத்துவதற்காக இருக்கின்ற ஒரு அவை. அரசாங்க ஊழி யராக இருந்து, அதே நேரத்தில் சட்டமன்றத்தில் இடம்பெற்று, அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதென்பது நியாயப்படி பொருத்தமாக இருக்காது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, நான் இதற்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். சட்டப்படி ஆசிரியர் தொகுதியிலே. . . .

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், ஒரு பிரச்சினைக்கு அமைச்சர் மட்டும் விளக்கம் அளிக்கலாமா, அல்லது எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் அளிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினர்கள் விளக்கங்கள், கிளாரிபிகேஷன் தரலாம். பர்சனல் எக்ஸ்பிளனேஷன் மற்றவைகள் தரலாம். இப்போது, அரசாங்கத்தின்கீழ் பணி செய்கின்றவர்களைப் பொறுத்து சிலபல விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பொறுத்துத்தான் கேள்வி. அரசாங்கத்தின் கீழ் பணிபுரியாதவர்கள் பற்றியல்ல. உதாரணமாக திரு. ராஜா ஐயர், எம்.எல்.சி., ஆக இருக்கிறார். அதே சமயத்தில் அவர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். அரசாங்கத்தின் எந்தவித அமைப்பின் கீழ் இருந்தாலும், ஒன்று அந்த வேலையை விடவேண்டும், அல்லது அதை வைத்துக்கொண்டு இதைவிட வேண்டும் என்று விதிமுறை கொள்ளப்படுகிறது. இப்போது கேட்டிருக்கின்ற கேள்விப்படி, அது மாதிரிப் புகார்கள் வரவில்லை என்று சொன்னேன். ஆனால் எப்போது பிரச்சினை வருகிறது என்றால், தேர்தலில் ஈடுபடும்போது, நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது எந்தத் தேர்தலுக்கான தேதியும் அறிவிக்கப்படவில்லை. நாமினேஷனும் போடப்படவில்லை. நாமினேஷன் போட்ட பிறகு, அரசாங்க உத்தியோகஸ்தர்களாக இருந்துகொண்டு, அனுமதி வாங்காமல் செய்வார்களேயானால், அப்போது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் வரும். இப்போது அந்தப் பிரச்சினை எழவில்லை.

Thiru A. R. Damodaran : Sir, the Hon. the Minister for Education has replied stating that teachers in aided institutions can continue to be Members of the Legislative Council and also occupy the posts which they held when they were elected. I hope, Sir, that that is the correct position. In his reply, the Hon. the Minister for Health said that person who came from aided institutions should not continue in those aided institutions after they became Members of the Legislative Council.

The Hon. Thiru K. Anbazhagan : Sir, in earlier periods, the managements of aided institutions were independent—payments were made by the managements and only a certain amount of grant was given to those managements. Nowadays, almost all the payment is made by the Government, through the management, for





the benefit of the teachers, and, therefore, all the teachers are paid by the Government, and those who are getting pay from the Government cannot also sit and govern the people.

Thiru A. R. Damodaran : Sir, may I know whether that position is correct, because constitutionally, it is my knowledge that teachers from aided institutions can stand for election. I would like a clarification from the Hon. the Minister for Education whether this is the legal position.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, இந்திய தேர்தல் விதிகளின்படி, அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான ஊதியமோ, சம்பளமோ பெறுகின்றவர், அரசாங்கத்தை நடத்துவதற்கு உரிமையுடைய அல்லது அரசாங்கத்தை நடத்துகின்ற விவகாரங்களுக்கு வாக்குக் கொடுக்கின்ற உரிமையுடைய எந்த ஸ்தானத்தையும் வகிக்கக்கூடாது என்பது, வாக்காளருடைய தகுதி, தகுதியின்மை என்ற துறையிலே விளக்கப்பட்டிருப்பதாலே, இங்கே அரசாங்கத்தில் நேரடியாகவோ, அல்லது நேரடியான மாதச் சம்பளமாகவோ, வேறு வகை ஊதியமாகவோ பெறுகிறவர்கள் எந்தப் பெயரால் உத்தியோகம் வகித்தாலும், அவர்கள் தேர்தலில் நிற்பது என்பது கூடாது என்பது குவாலிபிகேஷன் அண்டு டிஸ்குவாலிபிகேஷன் ஆப் எ காண்டிடேட் என்ற பகுதியிலே விளக்கப்பட்டிருப்பதாலே, அதன்மீது விளைந்த பிறகு அதற்கு என்ன விமோசனம் கொடுப்பது என்பது பற்றி யோசிக்காமல், இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாமல் இருப்பதற்குத் தக்க ஆலோசனைகள் கொடுத்து, இந்தச் சங்கங்கள் தங்களுக்குப் பிரதிநிதிகளை நியமிக்கலாமா, நியமிக்கக்கூடாதா என்பதை அரசே முன்கொண்டு ஆலோசனை சொன்னால், அதன் மூலமாகக் குழப்பங்கள் இல்லாமல் தீருமே. அப்படிச் செய்ய அரசு இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள முன்வருமா என்று தலைவரவர்களே, உங்கள் மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசாங்கத்தின் கீழ் பணிபுரிகிறவர்களுக்கு என்று சிலபல விதிமுறைகள், மரபுகள் வகுத்திருக்கிறோம். அதன்படி எடுத்துச் சொன்னேன். பிரைவேட் மானேஜ்மெண்டாக இருக்குமேயானால், அங்கும் பர்மிஷன் தந்தால் தான், இப்படிப்பட்ட நிலைமைகளில் ஈடுபடலாம். இப்போது, இலக்கணப்படி கேட்ட கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன். கேள்வியில் சொல்லப்பட்ட நிலைமைகள் இப்போது அரசாங்கத்தின் கீழ் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டதற்கு ஆதாரமாக இருப்பவைகளை. அரசாங்கத்தினிடத்தில் தந்தால் . . .

அதுபற்றி ஆராய்ந்து, அதற்குப் பிறகு என்ன நிலைமைகள் என்பதைச் சொல்லலாம். இப்போது எனக்குக் கேள்வியில் சொல்லப்பட்டிருக்கிற பிரச்சினை பற்றி எந்தத் தகவலும் இல்லை. 14வது 16வது விதிகளின்படி இப்படி இருக்கிறது என்று தெரிவித்தேன். என் முன்னால் எந்த கேஸும் இல்லாமல், எது பற்றியும் புகாரும் இல்லாமல், என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேட்டால், என்னால் பதில் சொல்வதற்கில்லை. ஆதாரம் இருந்தால், ஆதாரத்தை என்னிடத்தில் தந்தால், அதுபற்றி ஆராய்ந்து செய்ய முடியும். இலக்கணங்களையும், இருக்கின்ற விதிமுறைகளையும் தான் குறிப்பிட்டேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. the Minister for Education stated that under rules 14 and 16 an association, where Government servants were members of such association, should not take part in any election activity or any other activities which were prejudicial to the governance of the State. Therefore, Sir, I would like the Hon. the Minister for Education to tell us clearly whether rules 14 and 16 prohibit associations of which Government servants are members from taking any part in elections. This is the clear question, Sir.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, 1951-வது வருடத்திய ரெப்ரசென்டேஷன் ஆப் பீபிள்ஸ் ஆக்ட் பிரிவு 32-ன் படியும், இந்திய அரசில் அமைப்புச் சட்டம் 191-வது பிரிவின்படியும், மாநிலச் சட்டப் பேரவைக்கு அல்லது சட்டமன்ற மேலவைக்கு தேர்தலில் நிற்பவர், மத்திய அல்லது மாநில அரசின்கீழ் ஊதியம் பெறும் அலுவலராக இருக்கக்கூடாது என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களாகப் பணிபுரிகிறவர்கள், தேர்தலுக்கு வேட்புப் பத்திரங்கள் பதிவு செய்தால் தான், அவர்கள்மீது அரசு ஊழியர்கள் நடத்தை விதிகள்படி நடவடிக்கை எடுக்கப்படும், இந்த விதி ஆசிரியர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்போதுகூட, அரசாங்கத்தில் இருப்பவர்கள் சட்டமன்றத் தேர்தலுக்கோ; பாராளுமன்றத் தேர்தலுக்கோ நிற்கும்போது, வேலையை ராஜினாமா செய்துவிட்டுத் தான் நின்றுகொண்டிருக்கிறார்கள். விதிமுறையைச் சொன்னேன். என்னிடத்தில் கேஸ் இல்லாமல், அதுபற்றி ஆராயும்படி சொல்வது என்றால், சரியாக வராது.

*திரு. செ. முத்துசாமி:* தலைவரவர்களே, தேர்தலுக்கு நிற்கும்போது, நாமினேஷன் தாக்கல் செய்யும்போது, ராஜினாமா கடிதம் இல்லாமல் நாமினேஷன் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதை எலக்ஷன் அதிகாரி கடமைப்



பட்டுச் செய்யவேண்டியது. இங்கே இப்படி நாமினேஷன் செய்யலாமா என்று முன்கூட்டி கேட்டிருக்கிறார்கள். இதைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் அறிவிக்கலாமா, பட்டதாரி ஆசிரியர்களில் அரசு ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்கள் இப்படி அறிவிக்கலாமா, அவர்கள் அசோசியேஷன் என்ற பெயரால் அறிவிக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு அசோசியேஷன், இந்திய அரசியல் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிற ஆர்கனைசேஷன் recognised by the Government, it is different. If it is registered under the Act of the Central Government, ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிற அந்த அசோசியேஷன், அதன் பைலா திட்டங்களின்படி இப்படி ஒரு அறிவிப்பு வழங்கவும், நோட்டீஸ் போடவும் உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the N.G.G.O.'s Association can also set up nominees. A very important matter of principle is involved. Whether it is the Graduate Teachers' Association or the Electricity Board Employees' Association or the Non-Gazetted Government Officers' Association, we are not going into the question of the person who files his nomination. The only point is : Is an association consisting of members of the Government service entitled to take part in electioneering activity?

THIRU G. VASANTHA PAI : Sir, that does not arise, because these are for Graduates' Constituency and Teachers' Constituency and that is different from the N.G.G.Os.

MR. CHAIRMAN : Why does the hon. Member worry about this?

THIRU G. VASANTHA PAI : Sir, I can also say what I feel about it. Everybody is giving his opinion.

MR. CHAIRMAN : : Not only the hon Member, but everyone feels like that.

THIRU G. VASANTHA PAI : Sir, when you have allowed others to express their views..............

THIRU A. R. DAMODARAN : Sir, may I suggest that, in view of the Constitutional provisions involved, we take up this question tomorrow, after everyone has had the opportunity to go into the Constitutional provisions?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, முதலில் நான் படித்துக் காட்டியபடி, இருக்கக்கூடிய நிலைமை இது தான்.

"pay or contribute towards any expenses incurred in connection with his candidature by a candidate for such election, by any means support the candidature of any person for such election or, undertake or assist in the registration of electors or the selection of a candidate for such election."
இதை யெல்லாம் பார்க்கின்றபோது, விதி முறைகள் கட்டுப்படுத்துகின்றன. கூடாது என்றுதான் தெரிகிறது.

*திரு. செ. முத்துசாமி :* தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இன்னும் நேரடியாக பதில் கூறவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிவிப்பு.

#### அவை அலுவல் குறித்து.

MR. CHAIRMAN : I have to announce to the House that consequent on the revised programme of business of the Assembly the following programme of business of the Council has been decided :—

28th January 1974—Discussion on the Governor's Address.

29th January 1974—Reply by the Hon. Chief Minister to the debate on the Governor's Address.

30th January 1974—Consideration of the Government Bills and Motions.

The Council will meet daily from 4 p.m. to 7p.m. The Council will meet on 31st January 1974, if necessary.





*திரு. செ. முத்துசாமி :* தலைவரவர்களே, ஒரு உரிமைப் பிரச்சினை. இப்பொழுது உறுப்பினர் தாமோதரன் அவர்கள், இந்தப் பிரச்சினை எல்லோருடைய ஆர்வத்தையும் கிளப்பியிருக்கின்ற காரணத்தால், நாளையதினம் விவாதிக்க நேரம் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி தலைவர் அவர்கள் எந்த விதமான முடிவும் கூறவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** Is it a point of order? அது பாயிண்ட் ஆப் ஆர்டரா?

*திரு. செ. முத்துசாமி :* தலைவர் அவர்களே, முடிவு கூறவில்லையே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடிவு கூருமலிருப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்பது தெரியுமா?

*திரு. செ. முத்துசாமி :* தலைவர் அவர்களே, என்னுடைய பிரச்சினை ஆயிற்றே என்று கூறுகிறேன். விதி முறைகள் தெரிந்துதான் கூறுகிறேன். புத்தகங்களைப் படித்துப் பார்த்து விட்டு தான் கூறுகிறேன். இப்பொழுது எழுப்பிய பிரச்சினைக்குப் பதில் சொல்லவில்லை. தலைவர் அவர்கள் அப்படித் தான் பதில் அளிக்க விரும்பினுல், அதற்கு நான் எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இன்றையதினம் எழுந்துள்ள இந்தக் கேள்வியின் அடிப்படையில் பேசப்பட்டிருக்கின்ற பேச்சுக்களைக்கொண்டு, ஏதோ அரசாங்கம் ஏற்கெனவே பட்டதாரி ஆசிரியர்களுக்கு இருக்கின்ற உரிமைகளைப் புதியதாகப் பறித்துக்கொண்டு போய் விட்டது என்று பிரச்சாரம் செய்யப்படலாம். அதற்காக நாளையதினமும் இதை வைத்துக்கொண்டு வளர்த்த வேண்டுமென்று விரும்பவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற விதிமுறைகளுக்கேற்ப என்ன நிலைமை என்பதுதான் இங்கே எடுத்துச் சொல்லப்படுகிறதே தவிர, புதியதாக எந்த விதியும் செய்யப்படவில்லை. தேர்தலில் பள்ளி ஆசிரியராளுலும் அரசாங்க அலுவலராளுலும் கலந்துகொள்வதென்ருல், அந்த அலுவலில் இருக்கலாமா என்பது குறித்து வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிகளின்படி தான் அரசு இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அது விளக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுபற்றி மேலும் விளக்கம் அவசியமில்லை.

### 3. கவன ஈர்ப்பு

### கல்வித் துறையின் 14—11—1973-ஆம் நாளிட்ட 1898-ஆம் எண் அரசு ஆணையால் பல்வேறு வகைப் பட்டதாரிகளுக்குப் பதவி உயர்வும் வேலை வாய்ப்பும் மறுக்கப்படுவது குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்ட மன்ற விதி 42 (1)-ன் கீழ், திரு கே. எஸ். கணபதி, தமது கவன ஈர்ப்பு முன்னறிவிப்பைக் கொண்டுவருவார்

THIRU K. S. GANAPAHI: Mr. Chairman, Sir I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the issue of G.O. Ms. No. 1898, Education, dated 14th November 1973 and the resultant denial of promotional opportunities to very many categories of Graduates and the necessity for the promulgation of this order and its repercussions.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, பள்ளிகளில் பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொழியில் அப்பள்ளி ஆசிரியர்கள் தேர்வு பெற்றிருக்க வேண்டும் என்ற நடைமுறை விதி இப்பொழுது தொடக்கப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் உள்ளது. அரசாங்கப் பள்ளிகளில் தமிழ்ப் பிரிவிலுள்ள பள்ளி ஆசிரியர் பதவியில் நியமிக்கப்படுவோர் பட்டப்படிப்பின் தமிழைப் பயின்றிருக்க வேண்டுமென்ற விதியும் உள்ளது. மானியம் பெறும் தனியார் இடைநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இதுவரை இத்தகைய விதி இல்லாமல் இருந்தது. ஆனால் தமிழ் நாடு கல்வி விதிகளில் 15--வது விதியின் கீழ், இடை நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் தாங்கள் போதிக்க வேண்டிய பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிக்கத் தகுதி பெற்றவர்கள் தான் என்பதைக் கல்வித் துறை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்தது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசாங்க உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பின்பற்றப்படும் விதிகள், தனியார் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருத்தப்படுவது நல்லது. மேலும் தமிழே பயிற்று மொழியாக பள்ளி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அரசாங்கப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களும் தமிழில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று விதிப்பது உசிதமென்று கருதப்பட்டுள்ளது. அது போலவே தமிழ் அல்லாமல் வேறு மொழியை பயிற்று மொழியாக ஒரு பள்ளிக்கூடம் மேற்கொண்டிருந்தால், அந்தப் பயிற்று மொழியில் ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். 14—11—1973 தேதியிட்ட கல்வித்துறை அரசு ஆணை 1898-ல் வெளியிடப்பட்ட உத்தரவுகள்



ஏற்கெனவே தொடக்கப் பள்ளிகளிலும், அரசாங்க இடை நிலைப் பள்ளிகளிலும் பின்பற்றப்படும் விதிகளை அரசாங்கப் பள்ளிகள் அல்லாத தனியார் பள்ளிகளுக்கும் விரிவாக்கும் முறையில்தான் வெளியிடப்பட்டுள்ளன. எந்தப் பயிற்று மொழியில் போதனை நடக்கிறதோ, அந்த மொழியில் ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற விதி செய்யப்பட்டுள்ளது, கல்வித் தரத்தைப் பாதுகாப்பதற்கு இன்றியமையாத நடவடிக்கையேயாகும்.

*திரு. கே. எஸ். கணபதி:* தலைவரவர்களே, இந்த விதி ஏற்பட்டதன் காரணம் சிறப்பாக விளக்கப்பட்டது. ஆனால் இன்று பணியில் இருக்கும் ஆசிரியர்களுடைய நிலைமையில் பாதுகாப்பு எவ்வகையில் அமைந்திருக்கிறது என்பது விளக்கப்படவில்லை. இந்த உத்தரவில் மூன்றாவது பிரிவில்

The language qualification ordered in paragraph 1 above shall apply to the Headmasters and teachers to be appointed in futur in non-Government schools and teachers appointed already will be exempted from the operation of the orders issued in paragraph 1 above by the Director of School Education in appropriate cases.

என்று இருக்கிறது. டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் விரும்பினால் செய்யலாம் என்று இருக்கிறது. ஆனால் எதிர்காலத்தில் இது பல பாதகங்களை விளைவிக்கும். இன்று ஆசிரியராக இருக்கும் ஒருவர் நாளைக்கு தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுவாரேயானால், அது புது அப்பாயின்ட்மென்டாகக் கருதப்பட்டு மறுக்கப்படலாம். ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குப் போவதையும் இது தடை செய்கிறது. ஆகவே இதைப் பரிசீலனை செய்து, அப்படிப் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஒரு உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் அளிப்பாரேயானால், சிறப்பாக இருக்கும்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, அரசாங்க இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் இந்த விதி அமுலிலிருந்து வருகிறது. தனியார் பள்ளிகளும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். இனி நியமிக்கப்படுபவர்களுக்கு எந்த பாதகமும் ஏற்பட்டுவிடாது. ஏற்கெனவே உள்ளவர்களுக்கு ஏதேனும் பாதகம் இருந்தால், அது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. அதுபற்றிய கோரிக்கைகளோ விவரங்களோ என்னிடம் இப்பொழுது இல்லை. அது தனியாக ஆராயப்பட வேண்டியது. ஆராய்ந்து அறிவிக்கிறேன்.

**கல்வித் துறையின் 14—11—1973 ஆம் நாளிட்ட 1898 ஆம் எண் அரசு ஆணையால் பல்வேறு வகைப் பட்டதாரிகளுக்குப் பதவி உயர்வும் வேலை வாய்ப்பும் மறுக்கப்படுவது குறித்து**



**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, நான் கூறுவது ஒரு நியாயமான கோரிக்கை. இப்பொழுது பணியில் இருக்கின்றவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கக்கூடிய வகையில் அனுமதி வழங்க வேண்டும். அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிலைமையை ஆராய்ந்து பார்க்காமல், நான் வாக்குறுதி தர முடியவில்லை. நியாயம் இருக்குமானால், அதைப்பற்றி ஆராயப்படும். ஆகவே அதை ஆராய்ந்து, நியாயத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. மாசிலாமணி தனது கவன ஈர்ப்புப் பிரேரணையை திரும்பப் பெறுகிறார்.

**திரு. மு. மாசிலாமணி :** தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புப் பிரேரணையை வற்புறுத்தவில்லை.

## 4. தீர்மானம்.

**உறுப்பினர் திருமதி இராணி அண்ணாதுரை 1972 டிசம்பர் 4 முதல் வராததைப் பொருட்படுத்தாமல் விதிவிலக்கு அளிப்பது**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே,

"மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி இராணி அண்ணாதுரை அவர்கள் 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ம் நாள் முதல் இந்த அவைக்கு வராததைப் பொருட்படுத்தாமல் விதி விலக்கு அளிக்கிறது" என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப் பட்ட தீர்மானம்—

"மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி இராணி அண்ணாதுரை அவர்கள் 1972-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ம் நாள் முதல் இந்த அவைக்கு வராததைப் பொருட்படுத்தாமல் விதிவிலக்கு அளிக்கிறது"

**தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**





## 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. சா. கணேசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு இந்த அவையினுடைய நன்றியைப் புலப்படுத்துகின்ற தீர்மானத்தை ஆதரித்து, அதன் மீது என் கருத்துக்களைப் புலப்படுத்த முன் வருகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரை கொஞ்சம் நீளமாகத்தான் இருந்தது. வழக்கமாக உள்ளதைவிட கொஞ்சம் நீளம். ஆனாலும் தற்போதைய பிரச்சினைகளை எல்லாம் கிட்டத்தட்ட கோடிட்டுக் காட்டுகின்ற அளவில் அது அமைந்திருந்தது என்பதைக் கூறி, அதற்காக இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்ஙனமே தமிழக அரசு, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்தியிலும், விநியோகத்திலும் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு வருகிறது என்பதையும் குறித்துப் பாராட்ட விரும்புகிறேன்.

தொழில் துறைகளை ஊக்குவிப்பதிலும், அவைகளில் வளர்ச்சி காண்பதிலும் அது தன்னுடைய உண்மையான அக்கறையைச் செலுத்திக்கொண்டு வருகிறது என்பதைக் கண்டு பாராட்டுகிறேன். இப்படிச் சொல்வதனால் இந்தத் துறைகளிலே குறைகளே இல்லையென்று நான் சொல்லவில்லை. அவற்றிலே குறைகள் உண்டு என்பதை நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார். குறைகளை முற்றிலும் நிவர்த்தி பண்ணுவதென்பது எங்கும் இயலாத ஒன்று என்பதை நாம் அறிவோம். பல குறைகள் இருக்கின்றன. எதிர்க் கட்சிக் காரர்களாகிய நாங்கள் குறைகளைச் சுட்டிக் காட்டத்தான் இருக்கிறோம். பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்மிடத்திலே காணப்படும் குறைகள் பெரியதல்ல. பொறுக்கத் தகுந்தது; சகிக்கத் தகுந்தது என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆதலினாலே முழு விளைவையும் பார்க்கின்ற போது, இந்த அரசை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

அடுத்து, திருச்சி, பாளையங்கோட்டை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் மீது நீதி விசாரணை வைத்ததை, அன்றே நான் பாராட்டினேன். அதனுடைய முடிவுகள் வெளியாகி, அதன்மீது செம்மையான, திறமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முன் வந்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன். அதைப் போலவே, கார்ப்பரேஷன் ஊழலையும் கண்டுபிடித்து, அவற்றின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததையும் பாராட்டுகிறேன். இந்த முறையிலே, பிற துறைகளிலேயும் நிலவுகின்ற ஊழல்கள், தவறுகள், குற்றங்கள் இவைகளைக் களைவதற்கும் தீவிரமாக முயல வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

குறிப்பாக பத்திரப் பதிவுகள் செய்கின்ற இடங்களில், சாதாரண ஏழை மக்களெல்லாம், 50 ரூபாய்க்குக் குறைந்து கொடுத்தால், கிரயப் பத்திரம் போன்றவற்றைச் செய்ய முடியாது என்பது அன்றாட, நித்திய, வழக்கமாகி விட்டது. இதைப்போலத்தான் நகரவைகள்: கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில், இப்போது எல்லோரும் பாராட்டுகிறார்கள். கார்ப்பரேஷனுக்குள்ளே போகிறபோது, இது பழைய கார்ப்பரேஷன் பில்டிங்கா! தவறுக நுழைந்து விட்டோமா! என்று எண்ணுகிற அளவுக்கு கீழ் நிலை அல்லது அடித்தளச் சிப்பந்திகளிலிருந்து, கமிஷனர் வரையிலே 2 நிமிடங்களுக்குள் பார்த்து, இல்லை, உண்டு என்று தெரிந்து கொள்ள முடிகிறது. இது ஒரு பெரிய ஆச்சரியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமைகள் எங்கும் நிலவ அரசு முயலவேண்டும். ஆஸ்பத்திரிகளிலே கேட் திறப்பதிலிருந்து நடக்கிற அக்கிரமங்கள் பயங்கரம். சில சட்டங்களால் ஏற்படுகிற விளைவுகள் பல. வந்த உடனே, நீ செத்துப்போனால் யாருக்குத் தந்தி கொடுப்பது என்று கேட்டு, அந்த அட்ரெஸ்களையெல்லாம் வாங்கி முடிந்து, ரெஜிஸ்டர் செய்தவுடன்தான், பேஷன்ட்டை உள்ளே விடுகிறார்கள். ஒரு கொலை செய்யப்பட்டு அல்லது ஆக்ஸிடன்ட் ஆகி வந்தவுடன், அவனுடைய பூர்வோத்திரங்கள், நான்கெல்லைகள் ஆகியவற்றைப் பதிவு செய்து, அதற்குப் பிறகு டாக்டரிடம் போவதற்குள் உயிர் போய்விடுகிறது. வந்த உடன் எந்தப் பேஷன்ட்டாக இருந்தாலும் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கடுமையாகத் தாக்கப்பட்டோ அல்லது விபத்திலே விழுந்து காயப்பட்டோ வருகிற சில நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்து, மயக்கமடைந்து விழுந்து விடுவார்களேயானால், காப்பாற்ற முடியாத நிலைமைகள் ஏற்படும். மயக்கமடைந்த நிலையில் அவர்களுக்கு ஏற்படுகிற துர்ப்பாக்கியமான நிலைமைகளை அவர்களுடைய உறவினர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தெரிவிக்க முடியாத கஷ்டம் ஏற்படும். ஆகவே பதிவு செய்வதென்பது, உடனடி அவசியமென்று போலீஸ் சட்டத்திற்காகவும், மருத்துவ மனை பொறுப்பாகச் செயலாற்றுவதற்காகவும் இருக்கிறது. ஆனால் அதற்காகச் சிகிச்சையைத் தாமதப்படுத்தாமல், அதையும் விரைவாக வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, முயற்சிக்கும் என்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிரத்தியட்சமாக, சொந்தமாக அனுபவத்தில் சொல்கிறேன். நானே பல இடங்களில் அழைத்துக்கொண்டு போயிருக்கிறேன். பதிவு செய்த உடன்தான் உள்ளே அனுப்புவோம்; ஸ்டிரெச்சர் வரும் என்று சொல்லும் நிலையைப் பார்த்திருக்கிறேன். ஆகையால் எங்கள் பகுதியில் பெரும்பாலும் கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிகளுக்குப் போவதைவிட, பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு முதலில் போய், பிறகு அங்கிருந்து, பிரைவேட் டாக்டர் மூலமாகத்தான் கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிக்கு பேஷன்ட்டை அனுப்புகின்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் குறையாகச் சொல்கிறேனே தவிர குற்றச்சாட்டாகக் கூறவில்லை. இதையெல்லாம் திருத்துவது சுலபம்; எளிது. ஏதோ போலீஸ் சட்டம் என்று சொல்வது பெரிதல்ல. சித்திரகுப்த நாயனார் கதையல்ல இது. இதை நாம் சுலபமாகச் செய்ய முடியும். இவையெல்லாம் கஷ்டமானதல்ல. இதைச் செய்வதற்கு—உள்ளபடியே இஷ்டப்படுகிற அரசு மறுக்கும்போதுதான் கஷ்டமாக இருக்கிறது. முடியாது என்று புறக்கணித்தால், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நாங்களும் இரண்டு கோஷங்களைப் போட்டு விட்டுப் போய்விடுவோம். அது பிரயோசனமில்லை. இஷ்டப்படுகிறவர்கள் செய்ய மாட்டேன் என்று சொல்கிறபோதுதான் அல்லது செய்யாத நிலைமை ஏற்படுகிறபோதுதான் மனக் கஷ்டம் வருகிறதென்று சொல்லி ஆரம்பிக்கின்றேன்.





இனி அடுத்தபடியாக உள்ளூர் நிலைமைகளைப் பார்ப்பதற்கு முன்பு வெளியே உள்ள சில முக்கியமான—ஆனால் நம்மைப் பாதிப்பது: நம்மை மட்டுமல்ல, உலகத்தையே பாதிப்பதென்று நான் கருதுகிறேன்—நிலைமைகளைப் பார்க்க வேண்டும். 'டைம் கேப்சூல்ஸ்' என்று சொல்லுகிறார்கள். 'காலப் பேழை' என்று எப்படியோ மொழி பெயர்த்திருக்கிறார்கள். உலகத்திலேயே நம்முடைய ஆட்சி—நம்முடைய ஆட்சி என்றால், இங்கே சொல்லவில்லை; பொதுவாக இந்தியாவைச் சொல்கிறேன்—எந்த நாட்டை அதிகப்படியாகத் திட்டிக் கொண்டே வருகிறதோ, அந்த நாட்டில்தான் இந்த 'டைம் கேப்சூல்ஸ்' ஆரம்பித்தார்கள். அதை இங்கே பின்பற்றியிருக்கிறார்கள். வரலாறு என்றால் கிடைக்கின்ற சான்றுகள் மூலம், இன்னின்ன காலத்திலே இன்னின்னவை நடந்தன, நிகழ்ந்தன; அதனுடைய சிறப்பு என்ன; அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யாவர்; அவர்களுடைய பெருமை, சிறுமை, அல்லது வீரத் தன்மை, தோழமை என்பனவற்றைக் குறிக்க வேண்டும். ஆனால் வரலாறு எழுதுவதற்கென்றே இப்போது அதிகாரத்தில், ஆட்சியில் இருக்கிறவர்கள் தங்களுக்குப் பிரியமான முறைகளிலே சில சான்றுகளை உற்பத்தி செய்து—இயல்பான சான்றுகள் அல்ல; 'அலிபி' என்று சொல்கிறேன்—அதைக் கொண்டுபோய்ப் புதைத்துவிட்டால் என்ன அர்த்தம்? உண்மையாக நிகழ்ந்ததை, நிகழ்கின்றதை, நிகழப் போவதைப் புதைத்தாயிற்று. இன்னும் 1000 அல்லது 500 வருஷங்களுக்குப் பிறகு, யாருக்கும் இந்த நிலத்தைப் பற்றிய உணர்வு அற்றுப் போன பிறகு, இதுதான் உண்மை என்று கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். இதுமாதிரி வரலாறு உலகத்திலே எத்தனையோ ஆண்டுக் காலமாக இருக்கிறது. நாம், வெதிக் பீரீட்; பிரி வேதிக் பீரீட்; லேடர் சோழா; இம்பீரியல் சோழா

என்றெல்லாம் சொல்வோம். அப்படி பல காலங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம். ஹிஸ்டாரிக் ஏஜ், பிரி ஹிஸ்டாரிக் ஏஜ் என்றெல்லாம் சொல்வோம். இப்போது ஒன்றும் நடக்காது. என்றாவது அந்த 'டைம் கேப்சூல்'-ஐக் கிளப்புவார்கள். நான் நினைக்கிறேன், அதற்குள் ஆண்டவன் கிருபையால் அது மக்கி மண்ணாகிவிடும். அதை எடுத்துக் கிளப்புகிறபோது இருந்ததென்று வைத்துக்கொள்வோம். அதில் சொன்னவர்களைத் தவிர, இந்தியாவிலே யாருமில்லை என்ற நிலைமை வரும். இதுவா வரலாற்று நிலை? வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் அதை மறுக்கிறார்கள். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரிகள் உள்பட, அனைவரும் இந்த முறைத் தவறை, ஒழுங்கீனத்தை, வரம்பு தவறியதைப் பலமாகக் கண்டித்து அறிக்கைகளும் அபிப்பிராயங்களும் வெளியிட்டிருப்பதை நாம் காண்கிறோம். மத்திய அரசு, மாநில அரசு என்று பார்க்கிறவன் அல்ல நான் என்பது தெரியும். இது மத்திய அல்லது தென் பகுதி அல்லது வட பகுதி என்று பிரிக்கவில்லை. நாம் எல்லோரும் அகண்ட இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான். ஆக, இது அகண்ட இந்தியாவைப் பாதிக்கும் ஒன்று என்ற நிலையிலே, அகண்ட இந்தியாவின் பிரதிநிதியாக இருக்கும் இந்த அரசு, இதை மத்திய அரசுக்கு, தவறு என்ன என்பதைக் காண்பித்து, வெளிப்படுத்தி, நிரூபிக்க வேண்டும். அது இந்த அரசின் கடமை. அதை மறுத்தால், மூட மூட உள்ளே என்னமோ 'குல்மால்' இருக்கிறதென்பதுதான் பொருள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அப்படிப் புதைக்கப்பட்ட அந்த காலக் கருவூலம் தவறான தகவல்களை அடக்கியதாக இருக்கிறதென்ற முதல் தகவலை அறிவித்தது நம்முடைய அரசாங்க அதிகாரிதான் என்பதை நம்முடைய மாண்புமிகு சுதந்திராக் கட்சித் தலைவரவர்கள் அறிவார்களென்று எண்ணுகிறேன். அது மாத்திரமல்ல. ஒரு தேவையற்ற வீண் வம்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் இப்படி காலக் கருவூலத்தைப் புதைத்துத்தான், 5000 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு எப்படி இருந்ததென்பதைத் தெரிந்துகொள்வதற்கு அவசியமில்லை. 5000 ஆண்டுகளுக்கு முன்பு அது உபயோகப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது புத்தகங்கள், அச்சு இவைகளெல்லாம் வந்த பிறகு, அந்த அச்சு எழுத்தேகூட நீண்ட நாட்களுக்குக் காப்பாற்றக்கூடிய, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குக் காப்பாற்றக்கூடிய வசதி, வாய்ப்புகள் எல்லாம் வந்துள்ள நேரத்தில், ஒரு தேவையற்ற வீணான வம்பை அவர்கள் இன்றைக்கு உற்பத்தி செய்திருக்கிறார்கள். அந்த வகையில் மாநில அரசும், நம்முடைய தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ள உறுப்பினர்களும் அதைப்பற்றி நல்ல முறையில் வாதிட்டிருக்கிறார்கள்; விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப்



பிறகும், 'நாங்கள் அதை மறுபடியும் தோண்டி, திருத்தம் செய்ய முடியாது' என்று மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** தலைவரவர்களே, அதைப்பற்றி நான் குறைதான் சொல்கிறேன். இப்போதுகூட, யாரையும் புண்படுத்துகின்ற நிலையிலே ஒரு கருத்தைக்கூட தெரிவிக்க விரும்பவில்லை. அவர்கள் இன்னும் கடுமையாக இருப்பார்களேயானால், இந்த மாநில மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற இந்தச் சபைகளின் கருத்து என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு தனிப்பட்ட முறையில் நாங்கள் சத்தியாக்கிரஹம் அல்லது வேறு ஏதோ தனிப்படையாகச் செய்துகொள்ளலாம். இதைவிட பைத்தியக்காரத்தனமான முறை வரலாற்றுத் துறையில் கிடையாது. என்ன காரணமாகவோ அமெரிக்காவில் 'டைம் கேப்சூல்ஸ்' புதைத்தார்கள். உலகத்தில் வேறு எங்கும் புதைத்ததாக எனக்குத் தெரியாது. நானும் வரலாற்று மாணவன் என்று நம்பிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டு வருகிறவன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் வரலாற்றைப் புதைத்திருக்கிறார்கள். அந்த உண்மையைத் தெரிந்துகொண்டால், நாம் அதிகமாகப் பேசத் தேவையில்லை.

**திரு. சா. கணேசன்:** ஏற்கெனவே நான் அதையும் சொல்லிவிட்டேன். தானே அந்த வரலாற்றைப் புதைத்து வைத்திருக்கின்றார்கள் என்று சொன்னேன். ஆகவே இந்த விஷயத்திலும் மாநில அரசுக்கு உள்ள அக்கறையையும் உண்மையான ஈடுபாட்டையும் நான் நன்றாக அறிவேன். ஏற்கெனவே இந்த அரசு அதிலே தலையிட்டு தனது கருத்தைப் புலப்படுத்தியிருக்கின்றது என்றும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதில் இன்னொரு வேடிக்கையும் இருக்கின்றது. அது எனக்கு ரொம்ப வருத்தத்திற்குரியதாக இருக்கின்றது. அந்த டைம் காப்ஸ்யூலை எழுதுவதற்கு பயன்பட்ட கை தமிழ் நாட்டினுடைய கை என்றும் தெரிந்துகொண்டிருக்கின்றேன். அதைப் பலரும் பத்திரிகையிலே பார்த்திருக்கலாம். இதற்கு மேலே நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இத்தகைய ஒரு கொடுமையான நிலைமை இருக்கின்றது. அதற்கும் மேலே ஒரு கடுமையான வார்த்தையை நான் பிரயோகிக்க விரும்பவில்லை. இப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிலைமையிலே ஒரு தமிழ் நாட்டுப் பெரியார் தலையிட்டிருக்கின்றார். பெரியார் என்றால் தப்பாக நினைத்துக்கொள்ளாதீர்கள். ஆசிரியர் என்பதற்காக ஒரு பெரியவர் என்ற அர்த்தத்தில் சொல்லுகின்றேன். இதைப் புலப்படுத்திக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதற்கும் மேலாக இன்றையதினம் அரசுத் துறைகளிலே, பணிகள் செம்மையாக நடைபெறவில்லை. ஏதோ லாப நஷ்டக் கணக்குப் போடுவது போல, அதில் இருக்கின்ற நிறைவு, குறைவு இவற்றைக் காண்பதற்காக என்று சொல்லி சில கமிஷன்களைப் போட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நிலையில்லை, தினப்படி நாம் அதைக் காண்கின்றோம். பல துறைகள், இன்றைக்கு 90 பர்சென்டுத் துறைகளுக்கும் மேலே 30 முதல் 35 சதமானம் வரையிலே அதிகப்படியான பணியாளர்களைக் கொண்டிருக்கின்றன. அதிகமான அளவிலே, தேவைக்கும் அதிகமான பணியாளர்கள் இருப்பதனாலேதான் வேலை கணக்கம் அதிகமாகிறது. -30, 40, 45 பர்சென்ட் வரை அதிகப்படியாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றவர்கள் வேலை இல்லாமல் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் செய்வதனால் பணியில் பின்னர் காலதாமதமும், குழப்பமும் எல்லாக் காரியாலயங்களிலும் ஏற்படுகின்றன என்பதை நாம் காண முடிகிறது.

இன்னும் சொல்வதென்றால், நகரவைகளிலே இந்த நிலைமை மிக அதிகம். அங்கு ஏராளமான ஊழியர்கள் காணப்படுகின்றார்கள். அதனாலேதான் எந்த நகர சபையை எடுத்துக்கொண்டாலும் சரி, அந்த நகரசபைக்கு வருகின்ற வருமானத்திலே 75, 80, 85 சதமானத்திற்கு அந்த ஊழியர்களின் சம்பளமாகவே போய்க்கொண்டிருக்கின்றது. வரி கொடுக்கின்றவர்களுக்கு ஏதாவது வேலை நடைபெறுகிறதா என்றால், சொல்வதற்கே ரொம்ப மனக கஷ்டமாக இருக்கின்றது. வரி கொடுப்பவர்கள் நூறு ரூபாய் வரியாகக் கொடுத்துவிட்டு, அதிலே பத்து ரூபாய் அளவுக்குத்தான் சலுகைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. யாரோ உத்தியோகம் வகிப்பதற்கு, அவர்களுக்குக் கொடுப்பதற்கு என்று வீட்டைக் கட்டிக் கொண்டும் தொழிலைச் செய்து கொண்டுமிருக்கின்றனர்? அவர்கள் வருமானத்தை விட்டு வரியாகவும், தொழில் வரியாகவும் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பது என்ன நியாயம்? இதையெல்லாம் எண்ணிப் பார்த்து ஒரு சட்டத்தைச் செய்ய வேண்டும், ஒரு நியதியை, வரம்பைக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். குறைந்தபட்சம் நகர சபை வருமானத்திலே 50 சதமானத்திற்கும் மேலே சிப்பந்திகளுக்குச் சம்பளமாகப் போகக்கூடாது என்ற வரம்பைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், சுலபமாக, சீக்கிரமாக வரி கொடா இயக்கம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம்தான் வரும். வரி கொடுக்கின்றவர்கள் தங்கள் வீட்டுக்கு முன்னுடி பள்ளம் இல்லாமல் இருக்க, தாங்கள் செல்கின்ற இடங்களிலே விளக்கு எரிய, தாங்கள் போகின்ற பாதையில் பள்ளங்கள் இல்லாமல் செம்மையாக இருக்க, குப்பைக் கூளங்கள், அசுத்தங்கள் இல்லாமல் இருக்க,





சாக்கடைத் தண்ணீர் இவைகள் எல்லாம் தேங்காமல், சாக்கடை சுத்தமாக இருக்க, இந்தக் காரியங்களை நடைமுறைப்படுத்தத்தான் வரி கொடுக்கின்றார்கள். இன்றைக்கு இவற்றிற்காக 15 பர்சென்ட்தான் செலவாகிறது. ஆனால் இவற்றைப் பரிபாலிக்கின்றவர்களுக்கு 85 பர்சென்ட் என்று சொன்னால், இது காந்திஜி அவர்கள் "தோட்டத்தில் பாதிக் கிணறு?" என்று எழுதியதைப் போன்று இருக்கிறது. இப்போது தோட்டத்திலே கிணறு முக்காலே அரைக்காலாகப் போய்விட்டது, தோட்டம் அரைக்காலாகத்தான் இருக்கின்றது. இந்த நிலைமைக்கு வளர விடக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே காலத்திலே, இந்த ஊழியர்களிடையே எவ்வளவு குழப்பங்கள் வருகின்றன. மத்திய அரசாங்கத்தின் ஊழியர்கள், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலே உள்ள அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள், மத்திய அரசு எடுத்து நடத்துகின்ற பாங்குகள் ஆகியவற்றில் உள்ள ஊழியர்கள்—இப்படி இந்த மத்திய அரசு ஊழியர்களிலேயே மூன்று டிவிஷன்கள். இத்துடன் மாநில அரசினுடைய நேரடியான ஊழியர்கள், மாநில அரசினுடைய தொடர்புடைய "குவாசி கவர்ன்மெண்ட்" என்று சொல்வார்களே, அது மாதிரி அலுவலகங்கள், அல்லது மாநில அரசினுடைய உதவி பெறுகிற கல்லூரிகள் இப்படி எல்லா இடங்களிலும் இருக்கின்ற அட்டெண்டர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் எல்லோருக்கும் ஒரே வேலைதான்—அது மாநில அரசாக இருந்தாலும் சரி, மத்திய அரசாக இருந்தாலும் சரி, முனிசிபாலிடியாக இருந்தாலும் சரி, வேறு சிறிய தாசில்தார் ஆபிசாக இருந்தாலும் சரி.

காரைக்குடியிலே பார்க்கிறோம். எலக்ட்ரோ கெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் என்று ஒரு நிறுவனம் இருக்கின்றது. அங்கே இருக்கின்ற பியூனுக்கு ரூ. 350, எல்.ஐ.சி. யிலே ரூ. 450, பாங்கிகளிலே எல்லாம் ரூ. 175, ரூ. 250, கல்லூரிகளிலே ரூ. 120, ஹைஸ்கூலிலே ரூ. 70, இன்னும் அதற்கும் கீழே இன்னொரு இடத்தில் இருப்பவர்களுக்கு ரூ. 35, ரூ. 40, ரூ. 45 என்று இருக்கின்றது. ஒரே மாதிரிப் பணி. ஏன் வித்தியாசம்? இதற்கெல்லாம் வரம்பு கட்ட வேண்டும். ஏதோ சோசலிசம் என்று சொல்லி அதற்கு, இதற்கு என்று எல்லாம் வரம்பு கட்டுகிறோம், ஒருமைப்படுத்துகிறோம் என்பதால் எல்லாம் பிரயோசனமில்லை. ஒன்று மட்டும் பொருத்தமாக இருக்கலாம். கோடைக்கானலிலே இருக்கின்றவர்களுக்கு கம்பளிச் சட்டை வேண்டியிருக்கும். அவர்களுக்குத் தான் 10 ரூபாய் கூட கொடுக்கலாம், 50 ரூபாய் கூட கொடுக்கலாம். காரைக்குடியிலே இருப்பவர்கள் சட்டையைக் கழற்றி இருந்தால்தான் வாழ முடியும் என்ற நிலை இருக்கின்றது. அவ்வளவு

வெம்மையாக அங்கே இருக்கும். ஆக, என் மாதிரி இருக்க வேண்டும். அப்படி சிதோஷ்ண நிலைகள் இருப்பதற்குத் தகுந்த மாதிரி உத்தியோகங்களுக்குச் சம்பளம் நிர்ணயம் இருக்கலாமே தவிர, ஒரு குறிப்பிட்ட அரசின் கீழ் வேலை பார்ப்பதற்காக என்று சம்பளம் வித்தியாசப்படுத்தி நிர்ணயிப்பது அநாவசியமான சங்கடத்தை, துன்பத்தைத்தான் தந்து கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் காந்திய நிலைக்கு ஏற்ப, ஒவ்வொரு துறையிலும், அது அடி நிலையாக இருந்தாலும் சரி, தலை நிலையாக இருந்தாலும் சரி, மாற்றியமைக்க வேண்டும். அடி நிலையில் இருக்கும் யாருக்கும் இந்த அளவு, மேல்நிலையில் உள்ளவர்களுக்கு இந்த அளவுக்கு மேலே இல்லை என்று வைக்க வேண்டும். அதாவது சீலிங் வைப்பது போல, புளோரிங் வைப்பது போல, இரண்டு நிலையிலும் இருக்க வேண்டும். புளோரிங் இல்லாமலும் சீலிங் இல்லாமலும் இருந்தால், அந்த இன்ஜினியரிங் கட்டடத்திலே மண்டபம் இடிந்து விழுந்த மாதிரி நம்முடைய பொருளாதாரமும் விழுந்துவிடும் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும் என்று புலப்படுத்திக் கொள்கின்றேன்.

அதே காலத்திலே, நம்முடைய தொழில் துறை செம்மையாக, சிறப்பாக, அழகாக, நேர்மையாக நடைபெறுவதற்கு பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றது. அதிலே ஒன்று பெட்ரோல், பெட்ரோலியம் புராடக்ட்ஸ், அதாவது டீசல் எண்ணெயோ, அல்லது மண்ணெண்ணெயோ, இவைகளின் விலைகள் எல்லாம் கண்டவாறு ஏறியிருக்கின்றன. ஒன்று சொல்கின்றேன். இன்று ஆட்சியிலே இருக்கின்றவர்கள், அது மாநிலம் ஆயினும் சரி, மத்திய அரசாயினும் சரி, இதெல்லாம் ஏதோ சுகவாசிகள் பண்ணுகின்ற டம்பாச்சாரித்தனமான செலவுகள் என்று எண்ணுகின்றார்கள். டம்பாச்சாரித்தனமான செலவுகளுக்கு என்று வேண்டுமானால், ஒரு 5 பர்சென்ட் போகும். மற்றவைகளெல்லாம் இன்றியமையாத தேவைகளுக்குத் தான் போகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அது போக, இவ்வளவு பெட்ரோலையும் யார் செலவழிக்கின்றார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் தெரியும். அவ்வளவும் கிட்டத்தட்ட 50 பர்சென்ட் வரையில் மறுபடியும் கவர்ன்மெண்டுக்குத்தான் வந்து சேர்கின்றது. அது நேசனலைஸ்டு பாங்காக இருந்தாலும் வந்து சேர்கிறது, எல்.ஐ.சி. யாக இருந்தாலும் வந்து சேர்கிறது, சர்க்கார் அதிகாரிகளுக்காகச் சேர்கிறது, அமைச்சர்கள் முதல் அவர்கள் கீழ் உள்ள தாசில்தார் வரை செலவழிக்கின்ற பெட்ரோல் அளவு இவ்வளவு வருகிறது. அதே போல் நாம் நிர்வகிக்கின்ற பல போக்குவரத்துக்களை எடுத்துக் கணக்கிட்டால், அதுவும் மறுபடியும் அரசாங்கமாகிய நம்மிடம்தான் வந்து சாடுகிறது. இதையெல்லாம் பார்க்கின்றபோது, எவ்வளவு பெட்ரோல்





வகையறுக்கள் சாதனங்களுக்காக செலவாகின்றது என்று தெரியும். அந்தச் செலவையும் எவ்வளவுக்குக் குறைக்க முடிகிறதோ, அந்த அளவுக்கு நாட்டிலே சுபிட்சம் நிலவும். இதை ஜப்பான் நாடு மிக நன்றாக ஆராய்ந்து செயல்படுவதை ஒவ்வொரு நிலையிலும் நாம் காணலாம். எங்கேயாவது ஒன்று விலை ஏறினால், உடனே பெட்ரோலைக் குறைத்துவிடுவார்கள். இப்படி அற்புதம் செய்வார்கள். காரணம் என்ன? பாட்டிகாலத்திலேயிருந்து கேட்டிருக்கின்றோமே நாம் ஒரு பழமொழியை, "சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால் பணம்" என்று; அது மாதிரி உற்பத்தியாகின்ற பண்டத்தின் செலவைவிட உற்பத்தியாகின்ற பண்டத்தை துய்ப்பவர்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்ற வரையிலே ஏற்படுகிற போக்குவரத்துச் செலவு, தூக்குச் செலவு, நிர்வாகச் செலவு என்று நிறைய செலவுகள் வந்துவிடுகின்றன. அதனால் பண்டத்தின் விலையைப்போல் 2, 3 மடங்கு அளவுக்கு உயருகிறது. இந்தப் பழமொழி பல்லாண்டு காலமாகச் சொல்லப்பட்டு வருகின்ற பழமொழி. ஆனால் இன்றைய பொருளாதாரம் இதை ஏற்றுக்கொள்கின்ற நிலையில் இருக்கின்றது. இதையெல்லாம் உணர்ந்து நாம் இதற்குச் சரியாக காரியங்கள் செய்யவேண்டும். மத்திய அரசின் நிலையைப்பற்றி இங்கே சொல்வதற்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கின்றது. முறை தவறிப் போகிறது. இதைக் கண்டிக்கிறேன். இன்னொன்று சொல்கின்றேன். பெட்ரோலின் விலை அங்கு 8 காசு ஏற்றினால், இங்கே ரூ. 1.08 காசு என்று ஏற்றி விற்கின்றார்கள். சாதாரணமாக ஒரு மளிகைக் கடைக்காரர் முக்கால் ரூபாய்க்கு வாங்கி, இரண்டு ரூபாய்க்கு விற்றால், அயோக்கியன், கொள்ளைக்காரன், பதுக்கல்காரன் என்று சொல்லுகின்றோம். இவ்வளவையும் நிர்வகிக்கின்ற ஆட்சியில், விலையில் 8 பர்சென்ட் கூடுதல் ஆனதற்கு, 108 பர்சென்ட் விலை கூட்டினால், என்ன அர்த்தம்? 8 பர்சென்ட் விலையை 20 பர்சன்ட் ஏற்றினால் கொள்ளைக்காரன், 8 பர்சென்டுக்கு 100 பர்சென்ட் ஏற்றுகின்றவன் மிக யோக்கியமானவன்; இப்படியெல்லாம் சொல்வது உண்மை நிலைமைகளை புலப்படுத்திக்கொள்வதற்காகத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இதையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு தக்க வழி வகைகள் செய்ய வேண்டும். இன்றைக்குப் பெட்ரோலைக் கொடுக்கவில்லை, நம்மால் முடியவில்லை, அவர்கள் தரவே மாட்டேன் என்கின்றார்கள், நாம் என்ன பண்ணுவது? மற்றவர்கள் எப்படியாவது இருக்கட்டும். நம்முடைய மாநில அரசுக்கு நான் ரொம்ப உரிமையோடு பணிவோடு அழுத்தமாக விண்ணப்பித்துக்கொள்கின்றேன். மாற்றுப் பொருளைக் கண்டுபிடிப்பதற்கு என்று ஒரு ஆராய்ச்சிக்கூடத்தை வைத்து அதில் 2, 4, 6 பேர்கள், நல்ல அறிஞர்களாகப் பார்த்து, நல்ல தரமானவர்களாக, யோக்கியமானவர்களாகப் போட்டு, "உங்கள் இஷ்டம் போல், என்ன

வாருலும் பண்ணுங்கள், ஒரு மாதத்திற்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று செலவழியுங்கள், நஷ்டமில்லை, இதற்கு ஒரு மாற்றுப் பொருளைக் கண்டு பிடியுங்கள்" என்று சொல்ல வேண்டும். யோக்கியமானவராக மட்டும் பார்த்துப் போட வேண்டும். அவர்களிடத்திலே கணக்கே வேண்டாம், அவர்கள் கையிலேயே ஒப்புவித்து விடவேண்டும். அப்போதுதான் கண்டு பிடிப்பு செம்மையாக, திறமையாக வரும். இதிலே காலம், கணிப்பு, நேரம், வேலை ஒன்றும் பார்க்கவேண்டாம். தரமான பரம யோக்கியமான ஒருவரை நியமித்து எவ்வளவு சிக்கிரம் மாற்றுப் பொருளைக் கண்டுபிடிக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும். இப்போதும் நாம் சாணத்திலிருந்து காஸ் எடுத்துச் செய்யவில்லையா? எத்தனையோ வருடங்களாக 'கௌடங் காஸ்' உண்டாக்கி, நாம் விளக்கு எரித்துக்கொண்டிருக்கிறோம், அடுப்பு எரித்துக் கொண்டிருக்கின்றோம், பல வீடுகளிலேகூட விறகு இல்லாமலேயே 20, 30 பேர்களுக்கு இப்போதும்கூட 'கௌடங் காஸ்' உபயோகித்து சமைத்து சாப்பாடு போட்டுக்கொண்டிருக்கின்றோம். இது மாதிரி ஏதாவது கண்டுபிடிக்க முடியாதா? அதே மாதிரி செய்ய வாராதா? நல்ல காலமாக நம் மாநிலத்தில் மதுவிலக்கு மறுபடியும் அமுலுக்கு வரவிருக்கிறது. கரும்பி லிருந்து வருகிற சக்கையிலிருந்து மொலாசஸ் என்று சொல்கிறார்களே அதி லிருந்து சாராயங்கள் உற்பத்தி பண்ணுவதை மாற்றி அதை பெட்ரோலாக ஆக்க முடியுமா, முடியாதா? நிச்சயமாக முடியுமே. நானே, சாதாரண மாணவன் முடியுமென்று நம்புகிறேன். அதற்காக ஆக்கித் தருகிறேன் என்று சொல்லவில்லை. இது சாத்தியம். புத்தி பூர்வமாக நம்புகிறோம். இந்தத் துறையிலே நல்ல சயண்டிஸ்ட்ஸ், நிபுணர்களை வைத்து ஆராயுங்கள் என்று சொல்லியாயிற்று என்றால், தமிழக அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வாராதா? தமிழர்களை மற்றவர்களைவிட ஓசத்தி என்று நான் சொல்லவில்லை. ஆனால் தமிழன் மற்ற எவர்களுக்கும் தாழ்ந்தவன் இல்லை. அறிவிலும் சரி, ஆற்றலிலும் சரி, நேர்மையிலும் சரி, ஒழுக்கத்திலும் சரி, திறமையிலும் சரி, தீரத்திலும் சரி, எவனுக்கும் தாழ்ந்தவன் இல்லை. இதை நாம் செய்ய முடியாதா? சுலபமாகச் செய்யலாம். இதை ஏன் அரசு மேற்கொள்ளக் கூடாது? மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதைச் செய்வதற்கு அரசு மானியங்கள் கொடுக்க வேண்டும். கண்டுபிடித்தால் 5 லட்ச ரூபாய், 10 லட்ச ரூபாய் தருகிறோம் என்று சொல் லுங்கள். எவ்வளவு பேர்கள் குதித்துக்கொண்டு ஆர்வத்தோடு வருவார்கள். இதைச் செய்யவேண்டுமென்று, அக்கறையும், ஆர்வமும், திறமையும் உள்ள முதல்வர் அவர்களைப் பிரத்யேகமாக இப்போது நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



சேர்த்து, பொருட் கல்வியையும், மொழிக் கல்வியையும் சேர்த்துச் சொல்லித் தருகிறான். நாம் அப்படியில்லை. புரிகிறமாதிரிச் சொல்கிறேன். இங்கே மேத மேடிக்ஸ் எல்.டி. தானே மேதமேடிக்ஸைச் சொல்லிக் கொடுத்து வந்தான். சயன்ஸ் எல்.டி. தானே சயன்ஸைச் சொல்லிக் கொடுத்து வந்தான். தமிழ் பண்டிட் என்பதைத் தொலைக்க வேண்டும். கல்லூரி லெவலிலே தமிழுக்கு என்று சொல்லி ஆசிரியர்கள் தனியாக இருக்க வேண்டும். கீழ் நிலையிலே நான் சொன்னபடி செய்தால், மொழி வளரும். தமிழ் படித்தவர்களை வைத்துக் கொண்டு, பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பாடனி, ஜியாலஜி அவ்வளவையும் மொழி பெயர் என்று சொன்னால் வராது. அந்தத் துறையில் நிபுணர்களாக உள்ள வர்கள், தாய் மொழியாக தமிழைக் கொண்டவர்கள், அதை மொழி பெயர்க்கத் தொடங்குவார்கள். முதலிலே சங்கடம் வரலாம், தப்பு வரலாம். அதைப் பற்றிக் கவலையில்லை. அடுத்த ஜெனரேஷனில் அற்புதமாக வந்துவிடும். இதைச் செய்ய வேண்டும். அந்தந்தத் துறையில் உள்ளவர்கள்தான், தமிழைப் பயிற்றுவிக்க வேண்டும். எல்லா பாடமும் தமிழில் இருக்க வேண்டும். பிஸிக்ஸ் டீச்சர்தான் பிஸிக்ஸைத் தமிழில் சொல்ல வேண்டும். மேதமேடிக்ஸ் டீச்சர்தான் மேதமேடிக்ஸை தமிழில் சொல்ல வேண்டும். இப்படிச் செய்து விட்டால், எங்கே குறைவு வரும், தரக் குறைவு வரும், தடங்கல் வரும், சிக்கல் வரும்? மொழி பெயர்ப்பு இல்லாத நிலை எங்கே வரும்? இருக்கிறதை வைத்துக்கொண்டு நடத்துவார்கள். டெஸ்ட் டியூப்பை எடுத்துக்கொள், ஆசிட்டை ஊற்று என்று சொல்லித் தருவார்கள். புரிந்துகொள்வானே. சோதனைக் குழாய் எடுத்துக்கொள், புளியமா, நீரியமா, அமிலமா என்று ஆசிட் என்ற வார்த்தைக்கு மொழி பெயர்ப்புக்குத் திண்டாடுகிறான். ஆசிட் என்று சொல்ல முடியாதா? ஆசிட் என்பதற்கு, ஒருவன் புளியம் என்கிறான், ஒருவன் அமிலம் என்கிறான். ஆசிட் என்று சொன்னால் புரிந்துகொள்ள மாட்டானா? டெஸ்ட் டியூப்பில் ஆசிட்டை ஊற்று என்று சொன்னால் போதுமே. பெரிய மெகானிக்கைக் கேட்டால் பிரேக்கில் கால் வைத்து கிளச்சை விட வேண்டுமென்பார். உடைப்பானை அமுத்திக்கொண்டு விடப் பானை விடு என்று சொல்லிக்கொண்டிருப்பான். பாஷை பெரிதல்ல. கலை பெரிது. கலை ஒழுங்காக வந்தால், பாஷை தானாக வளரும். இதை எந்த விதமான குறைபாடும் மற்றவர்களுடைய கருத்தில் காணாமல் சொல்கிறேன். மொழி செம்மையாக வளரவேண்டுமானால், மொழியை வளரவிட வேண்டும். இதற்குக் காரியங்களை **நாம்** செய்ய வேண்டும். இதுபோக பல விஷயங்களில் அரசாங்கம் நமக்கு இடையூறாக இருக்கிறது. அரசு உள்பட பலருக்கு இது தெரியும். நான் ஊரெல்லாம் சுற்றுகிறவன். எங்கே குகை இருக்கிறது, எங்கே மலை இருக்கிறது, எங்கே எழுத்து இருக்கிறது என்று பார்க்கிறேன்.

இந்நேரம் ஆசிரியர்களைப்பற்றிப் பேசினார்கள். ஆசிரியர்களெல்லாம் நமக்குத் தெய்வங்கள் மாதிரி. மாதா, பிதா, குரு என்று சொல்கிற பரம்பரையில் வருகிற சந்ததி நாம். ஆனால் ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. ஆசிரியர்கள் ஆசிரியராக இருக்க வேண்டும். அவர்கள் நம் வணக்கத்திற்குரியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கண்ட இடத்திலே வந்து, நாமும் அவர்களும் சண்டை போடுகிற மாதிரியாக வந்து விடக்கூடாது. அப்படிப் புனித நிலையில் அவர்களை வைக்க வேண்டிய நிலையில் அவர்களுக்கு வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றும் கூட சொல்ல ஆசைப்படுகிறேன். இப்படி ஆசிரியர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுப்பது போலவே, அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கு வேண்டியவைகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வெவ்வேறு துறைகளில் பல ஆசிரியர்கள் மிகத் திறம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவ்வளவு திறமை படைத்தவர்கள் 100 பேர்கள் இருந்தாலும், 5 சதவிகிதத்தினர் திறமை இல்லாதவர்களாக இருந்தாலும், மட்டம் கெட்டுப் போய்விடும். ஒரு பானை நிறைய பசும்பால் இருக்கிறதென்றால், ஒரு சொட்டு மோர் அதில் விழுந்தால் அவ்வளவும் மோர்தான். எத்தனை ஆசிரியர்களை, 'ள' கர, 'ல'கர, 'ழ'கர சொல்ல முடியாமல், இவைகளுக்குப் பேதமில்லாமல் அபேதவாதிகளாக இருக்கிறவர்களை நான் ஏராளமாகப் பார்க்கிறேன். பல பள்ளிக்கூடங்களை, கல்லூரிகளை நிர்வகிக்கிற நிலையில் உள்ள ஆசிரியர்களைக் குறை சொல்லவில்லை. ஆசிரியர் பணிக்கு வருகிறவர்களில் இப்படிக் குறைபாடு உடையவர்களைச் சொல்கிறேன். இதைத் திருத்த வேண்டாமா? ஏனென்றால், குழந்தைகள் செம்மையாக உச்சரிக்கிறதென்றால், எழுத்தைப் பார்த்து உச்சரிக்கிறதில்லை, காது வழி கேட்டு வாய் வழி உச்சரிக்கின்றன. ஆகவேதான், ஆடியோ விஷுவல் எஜுகேஷன் என்று சொல்கிறார்கள். 'Audio is important'. இதை மனதில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். வெளிநாடுகளிலெல்லாம் இதற்கு ரிகார்டுகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்கள் வளர வேண்டும். அதேபோல எல்லாத் துறைகளிலும் தமிழர்களும், மக்களும் வளர வேண்டும். அதே நேரத்தில் அவர்களை வளர்ப்பது மட்டும் நமக்குப் பெரிதல்ல. மொழி செம்மையாக வளர வேண்டும். மற்ற மொழிகள் வளருகிற நிலையிலே நம்முடைய மொழியும் வளர வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் நம் நாட்டில் 'டமில் பண்டிட்' என்று வைத்துக்கொண்டிருந்தது அப்போது சரியாக இருக்கலாம். வெள்ளைக்காரன் அவன் நாட்டிலாவது அல்லது எந்த தேசத்திலாவது, 'இங்கிலீஷ் பண்டிட்' என்று வைத்திருக்கிறானா? 'பிரெஞ்சு பண்டிட்' என்று இருக்கிறானா? அங்கேயிருக்கிறவன் தன் தாய் மொழியில் பொருளையும்





'மேப்' கேட்டால் சர்வே டிபார்ட்மெண்டில் 'மேப்' கொடுக்கப்படமாட்டாது, செக்யூரிட்டி காரணமாக, என்று சொல்கிறார்கள். என்னய்யா இது? எனக்குப் புரிவதில்லை. நம் நாட்டில் காரைக்குடியில் என்னென்ன இருக்கிறது என்று எனக்குத் தெரிந்ததை விட இரஷியாக்காரனுக்கும், அமெரிக்காக்காரனுக்கும் தெரியும். அவன் ஆகாயக் கப்பலைக் கொண்டு போட்டோ மூலமாக அவ்வளவையும் எடுத்து வைத்திருக்கிறான். இங்கே வெறுமனே கோடு போட்ட மேப்பைக் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். இது வரையில் விற்ற 'மேப்' 2 ஆயிரம். மீதியிருக்கிற 'மேப்' 75. சா. கணேசன் கேட்டால் கொடுப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. செக்யூரிட்டி காரணம் என்கிறார்கள். இதையெல்லாம் யோசிக்க வேண்டும். கல்லூரிகளிலே, பள்ளிகளிலே, ஆராய்ச்சி பண்ணுகிறவர்களுக்கு இந்த மாதிரி ரோடு மேப், டிஸ்ட்ரிக்ட் மேப் வேண்டாமா என்ன மலை இருக்கிறது, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று தெரிய வேண்டாமா கேட்டால் இவ்வளவு நீளத்தில் ஜி.ஓ. காட்டுகிறார்கள். சர்க்கார் ஆணை வாங்கி தான் தர முடியுமென்கிறார்கள். எங்கோ ஒரு மூலையிலே திருச்சி மூலையிலே போர்க்கருவிகள் செய்கிற இடமாக இருக்கலாம். இதை மேப்பில் காட்டக் கூடாதாம். அங்கே போய்ப் பாருங்கள். எந்த ரோட்டில் வந்தாலும், கை காட்டி காட்டிக் கொண்டு நிற்கிறது. எனக்குப் புரியவில்லை. அவ்வளவு இரகசியமாக இருக்கிறதா? ஒரு ரோடு பாக்கியில்லாமல், கை காட்டி காட்டிக்கொண்டிருக்கிறது. இங்கே தான் இருக்கிறது போ, போ என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. சில பாங்குகளில் போட்டிருக்கிறது, இங்கே சேஃப் டெபாசிட் வசதி எல்லாம் உண்டு என்று போட்டிருக்கிறது. கொள்ளையடிக்கிறவனை வா, வா என்று கூப்பிடுகிற மாதிரி, அப்படி கை காட்டி கொண்டு காட்ட வைத்திருக்கிறோம். இந்த மாதிரி நிலைமையில் இது மாதிரி கல்விக் கூடங்களுக்கு, கல்வித் துறையில் வேலை பார்க்கிறவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டாமா? அவர்களுக்கு வேறே ஒத்தாசை பண்ண வேண்டாம். தொகை தர வேண்டாம். காசு தர வேண்டாம். டி.ஏ., டீ.ஏ. தர வேண்டாம். இதற்கு இடையூறாக இருக்கும்படியான நிலைமையில் நம்முடைய இலாகாக்கள் இயங்காமல் இருந்தால் போதும். குறைந்த பட்சம் சட்டசபை அங்கத்தினர்கள் கேட்டால், அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டால் சங்கடம் இருக்காது. இந்த மாதிரிக் காரியங்களில் செயல்பட வேண்டும். சட்டசபை அங்கத்தினர்கள் என்று Twist பண்ணிச் சொல்லவில்லை. குறைந்தபட்ச அளவிலாவது என்றுதான் சொல்கிறேன். 'நம்மைக் குறைந்த பட்சம்' என்று சொல்வது பெருமைதானே தவிர, நமக்குச் சிறுமை அல்ல. இந்தக் கருத்துக்களையெல்லாம் புலப்படுத்திக்கொள்கிறேன். பல விஷயங்களை அந்தந்த டிமாண்ட் வருகிறபோதெல்லாம் புலப்படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவற்றை

யெல்லாம் நம்முடைய அரசு மனதில் கொண்டு இந்த இரண்டு, மூன்று காரியங்களில், முக்கியமாக இந்த பெட்ரோல் விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு, உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, இதை மீண்டும் நல்ல செங்கோடு அடியிட்டு மறுபடியும் வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை (25—1—1974) பிற்பகல் 4.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

**வெள்ளிக்கிழமை, 1974 ஜனவரி 25.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Craft Teachers*

*61. *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Second Pay Commission has recommended revision of pay in the case of part-time and full-time craft teachers in aided institutions; and

(*b*) if not, whether there is any proposal to revise their salaries?

### கைப்பணி ஆசிரியர்கள்

**திரு. எம். ஆறுமுகசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் முழு நேர, பகுதி நேர கைப்பணி ஆசிரியர்களின் சம்பளத்தைத் திருத்தியமைக்குமாறு இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதா?

(இ) இல்லையெனில், அவர்களுடைய சம்பளங்களைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Secondary Grade Teachers*

* 62 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the service of the Secondary Grade Teachers who worked in the Panchayat Union Schools is taken into account for fixation of pay when they come over to Government (Board) High Schools; and

(*b*) if so, the details thereof?

## *இடைநிலைத் தர ஆசிரியர்கள்*

*திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரிந்த இடைநிலைத்தர ஆசிரியர்களின் பணிக்காலம், அவர்கள் அரசு வாரிய உயர்நிலைப்பள்ளிகளில் நியமிக்கப்பட்டபோது ஊதிய விகிதத்தை வரையறுப்பதற்காகக் கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* (அ) & (இ) ஆம். ஊராட்சி ஒன்றிய உயர் துவக்கப் பள்ளிகளில் பணிபுரிந்த இடைநிலை ஆசிரியர்கள் அப் பள்ளிகள் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்போது, அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணியில் சேர்ந்தால் அவர்களின் கடந்தகாலப் பணியைக் கணக்கில் கொண்டு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

*திரு. கே. எஸ். கணபதி:* தலைவரவர்களே, இதுபோன்று 1966 ஆம் ஆண்டு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தனியார் பள்ளிகளி லிருந்து, அரசாங்க கழக உயர் நிலைப் பள்ளிகளுக்குச் சென்றாலோ அல்லது அங்கேயிருந்து இங்கே வந்தாலோ, அவர்களுடைய ஊதியத்தைக் கணக்கிட, அவர்களுடைய பணிக்காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இதைப்பற்றி இப்போது மறுபரிசிலனை செய்ய அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.





*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, இப் போதுள்ள நடைமுறைப்படி அவர்கள் தனியார் உயர் துவக்கப் பள்ளிகளில் பணி புரிந்து, கழக, அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்படும்போது, அவர்கள் உயர் துவக்கப் பள்ளிகளில் பணி புரிந்த காலம், பணி ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஏற்கெனவே அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல இருந்தது என்றால், அதுபற்றி இப்போது முடிவு கட்ட வேண்டிய அவசியம் எப்படி ஏற்படுகிறது என்பது தெரியவில்லை.

*திரு. செ. முத்துசாமி:* தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்படி மாற்றப்படும் ஆசிரியர்களுடைய ஊதிய விகிதத்தை மாற்றியமைக் கும்போது 'வெயிட்டேஜ்' கொடுக்கப்படுவதற்காக, அவர்கள் ஊதிய காலம், அதாவது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றிய காலம், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். ஊதியத்திற்குத்தான் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று இருக்கிறதே தவிர, அவர்களுடைய சர்விஸ் செலெக்ஷன் கிரேடு கொடுக்கப்படுவதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்று இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததா, செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுவதற்கு இந்த ஊழிய காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, இது பற்றிய விவரங்கள் தற்போது இல்லை. தனியாகப் பரிசீலிக்கலாம்.

*திரு. எம். சங்கரலிங்கம்:* தலைவரவர்களே, ஊராட்சிப் பள்ளிகளில் பணி புரிந்தவர்கள் அந்தப் பள்ளிகளிலிருந்து அரசுப் பள்ளிகளுக்கோ கழகப் பள்ளிகளுக்கோ மாற்றப்படும்போது, அவர்களுடைய பணிக்காலம் சேர்த்துக் கொள்ளப்படுகிறதே, அதைப்போல தனியார் பள்ளிகளில் பணி புரிந்து சில ஆண்டுகள் கழித்து அரசுப் பள்ளிகளில் வேலைக்கு வந்த பிறகு ஊதியம் என்று நிர்ணயம் செய்யும்போது, தனியார் பள்ளியில் பணியாற்றிய காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் சீனியாரிட்டி கிடையாது; 'பே ஃபிக்ஸேஷனுக்கு' மட்டும் உண்டு, சீனியாரிடிக்கு இல்லை என்று இருந்தது. அம்முறை அமுல்படுத்தப்படவில்லையா, அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, அது அரசாங்கத்தினுடைய கட்டாயத்தினால் ஏற்படுகிற ஒன்று என்ற காரணத் தினால், அரசு முழுப் பொறுப்பையும் அவர்கள் விஷயத்தில் ஏற்றுக்கொள்ளு கிறது. ஆனால் தனியார் பள்ளியிலிருந்து அரசுப் பள்ளிக்கு சிலர் தங்க ளுடைய விருப்பம் காரணமாக வருகின்றார்கள். அவர்கள் நமது கட்டாயத்தினால் வரவில்லை என்பதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. நாம்

அவற்றை அரசு உயர் நிலைப் பள்ளிகளாக மாற்றும்போது, அவர்கள் இதில் வருகின்றார்கள் என்றால், அதற்கு அவர்கள் பொறுப்பு இல்லை, நாம்தான் பொறுப்பு. ஆனால் தனியார் பள்ளியிலிருந்து தாங்களாகவே அரசுப் பள்ளிகளுக்கு வருகின்றார்கள் என்றால், அவர்கள் விருப்பப்பட்டு வருகின்றார்கள். எனவே அதைத் தனியாகக் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதை அப்போது அரசு ஆராயலாம்.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, 1966-ம் ஆண்டுக்கு முன்பு கழக உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் யாரும் நீண்ட காலம் தங்கிப் பணியாற்றுவதில்லை, தனியார் பள்ளிகளில் இடம் கிடைத்தால் அங்கே போய்விடுகின்றார்கள் என்பதால் இதைத் தடுக்க வேண்டும் என்று அப்போது இப்படிப் பட்ட ஒரு உத்தரவினைப் போட்டார்கள். இப்போது ஆசிரியர்களிடையே வேலை கிடைத்தால் போதும் என்ற நிலை இருக்கின்றது. எனவே அந்த உத்தரவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, புதிய உத்தரவுகள் வந்த பிறகு அந்தப் பழைய உத்தரவுகள் நிலைத்து நிற்குமா என்றால் நிற்காது. அதுவும் இதுவும் நடைமுறையில் இருக்கிறது என்ற நிலை இருக்கிறதா என்று தெரியவில்லை. இரண்டும் நடைமுறையில் இருக்க நியாயம் இல்லை. ஆகவே இதை இப்போது மறுபடியும் பரிசீலனை செய்வது என்றால், அது இப்போது நடைமுறையில் இருக்கிறதா என்பதுதான் பார்க்க வேண்டிய ஒன்று.

MR. CHAIRMAN : The hon. Member has made only a request to the Minister and it is not a question.

THIRU K. S GANAPATHI : Sir, I could have framed it as a question. I may be excused.

### *Mechanics of Engineering Section*

* 63 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Mechanics of Engineering Section in High Schools are allowed to appear for the S.S.L.C. Examination in private for raising their general educational qualifications; and

(b) if not, whether the Government will pass early orders to give such right?



### பொறியியல் பிரிவு (என்ஜினியரிங்) மெக்கானிக் ஆசிரியர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப்பள்ளி பொறியியல் பிரிவு (என்ஜினியரிங்) மெக்கானிக் ஆசிரியர்கள் பொதுக்கல்வி - யோக்கியதாம்சத்தை உயர்த்திக் கொள்ள எஸ். எஸ். எல். சி. பரிட்சையை பிரைவேட்டாக எழுத உரிமை வழங்கப் பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், அவ்வுரிமையை வழங்கும் ஆணையை அரசு விரைவில் பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Provident Fund Account Slip.*

* 64 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether Provident Fund Account Slips have not been issued for the past four years to the High School teachers working under the direct control of the Chief Educational Officer, Coimbatore; and

(b) if so, the steps taken to issue the same immediately?

### வருங்கால வைப்பு நிதிக் கணக்கு குறிப்புச் சீட்டு

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை முதன்மைக் கல்வி அலுவலரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் செலுத்தி வரும் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு பற்றிய, ஆண்டுதோறும் வழங்க வேண்டிய கணக்குக் குறிப்புச் சீட்டு (Account slip) கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கப் படாமல் உள்ளதா?

(இ) ஆமெனில், வழங்க மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகள் யாவை?

[1974 சனவரி 25

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் முதன்மைக் கல்வி அலுவலரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் உள்ள அரசு (கழக) உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு மாவட்ட மன்றங்களைக் கலைத்த நாளிலிருந்து வைக்கப்பட்டிருந்த வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் உள்ளாட்சி நிதிக் கணக்கு தலைமை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தில் தணிக்கைக்குப் பின் இதுவரை 830 ஆசிரியர்களுக்கு கணக்கு சீட்டுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. பாக்கியுள்ள 1,800 ஆசிரியர்களுக்கு கணக்கு சீட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, நீண்டகாலமாக ஆசிரியர்களுடைய வேண்டுகோளாகக் கேட்கப்பட்டு வந்தும், இது இன்னும் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. இதை உடனடியாக வழங்குவதற்கான ஒரு உத்தரவை அரசு அனுப்பி, அந்த ஆசிரியர்களுடைய பிராவிடெண்டு பண்டு கணக்கில் எவ்வளவு தொகை இருக்கிறது என்பது ஆண்டுதோறும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்று சொல்லி இதை விரைவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்களுடைய கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு அவை உடனடியாக அனுப்பி வைக்கப்படும். ஆனாலும் சிலருடைய கணக்குகள் சில குறிப்பேடு கணக்குகளோடு ஒத்துவரவில்லை என்ற ஒரு நிலை கோவை முதன்மைக் கல்வி அலுவலரின் அறிக்கையில் இருக்கிறது. அவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஆகவே எல்லா ஆசிரியர்களுக்கும் கணக்குக் குறிப்புச் சீட்டுகள் வழங்கப்பட்டுவிடும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் கொடுக்கப்பட்டுவிட்டன. கோவை மாவட்டத்திலும் 830 ஆசிரியர்களுக்கு மேலே வழங்கப்பட்டுவிட்டன. மற்ற மற்ற ஆசிரியர்களுக்கும் இவை அனுப்பிவைக்கப்படுவதற்கான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, தனியார் பள்ளிக்கூடங்களில் மாதா மாதம் போட்டவுடன் தபால் நிலையத்தில் சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டு இப்படிப்பட்ட தாமதங்கள் ஏதும் இல்லாமல் முறையாக இருக்கின்றது. அது போன்ற முறையை மற்ற பள்ளி விஷயத்திலும் கடைப்பிடிக்க முடியாதா என அறிய விரும்புகிறேன்.



1974 சனவரி 25]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த முறை எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் குறிப்பு இல்லை. இது பற்றி தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

### *H.R.A. to Teachers working in Sathiyamangalam Municipality.*

* 65 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers working within the limits of the Sathiyamangalam Municipality, Coimbatore district have not been paid House Rent Allowance from the date on which it was upgraded as municipality till this date;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the action proposed to be taken by the Government to pay the allowance including the arrears?

### சத்தியமங்கலம் நகராட்சியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சி எல்லைக்குள் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, அது நகராட்சி ஆன நாளிலிருந்து இன்று வரை வழங்கப்படாமல் உள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

(உ) நிலுவைகள் உள்பட முதற்கொண்டு வழங்க அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சத்தியமங்கலம் பேரூராட்சி 17—1—1970 முதல் நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்த நகராட்சிக்குச் சேரவேண்டிய சொத்துக்கள், நிறுவனங்கள் பற்றி ஊராட்சி ஒன்றியத்துடனும், நகராட்சி மன்றத்துடனும் நீண்ட காலக் கடிதத் தொடர்புக்குப் பின் 17—6—1972-ல் இப்பொருள் குறித்து அரசாணை வழங்கப்பட்டது. அதன்படி 31—8—1972 ம் தேதி சத்தியமங்கலம் நகராட்சி எல்லைக்குள் பவானிசாகர் ஊராட்சி

ஒன்றியத்தின் கீழ் இயங்கி வந்த ஆரம்பப் பள்ளிகள் அந்த நகராட்சியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1—9—1972 முதல் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டு வருகிறது.

(உ) 17—1—1970 முதல் 31—8—1972 வரை ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்க சத்தியமங்கலம் நகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி கேட்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அந்த அனுமதி வழங்கப்பட்டவுடன் நிலுவைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்.

## Teacher Training

* 66 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to provide for teacher training for those who have passed Tamil Pulavar Examination in all the Teacher Training Colleges; and

(b) if so, the details thereof?

## ஆசிரியப் பயிற்சி

**திரு. எம். சங்கரலிங்கம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்ப்புலவர் தேர்வு பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற, அனைத்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசுக்கு இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, மொழி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பயிற்சிக் கல்லூரிகள், குறிப்பாக சென்னையிலும் கோவையிலும் புதுக்கோட்டையிலும் இருக்கின்றன. ஆனால் தென் மாவட்டங்களிலே இப்படி மொழியில் தேர்வு பெறும் ஆசிரியர்கள், பயிற்சி பெறுவதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால், அம்மாவட்டங்களிலே பயில விரும்புகின்றவர்கள் அங்கிருந்து இங்கே வரவேண்டியிருக்கின்றது. இதனால் அவர்களுக்கு



ஏற்படும் சிரமங்களைப் போக்கத்தக்க வகையில் மதுரை அல்லது திருநெல்வேலியில் மொழி ஆசிரியர்களுக்குப் பயில்விக்கும் பிரிவை அங்குள்ள ஒரு பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்போது மொழியில் தேர்வு பெற்றவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்கும் ஏற்பாடுகள் சென்னை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை மற்றும் சென்னையிலுள்ள வெல்லிங்டன் சீமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இருக்கின்றன. இந்த நான்கு பயிற்சிக் கல்லூரிகளுக்குமாக இதற்கென கிட்டதட்ட 430 இடங்களை ஆண்டுதோறும் ஒதுக்கும் சூழ்நிலை இருக்கின்றது. இப்போதே இப்படிப்பட்ட மொழித் தேர்வு பெற்று ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் வேலை வாய்ப்பு இல்லாது துன்பப்படும் சூழ்நிலை இருக்கும் காரணத்தினால்தான், மேற்கொண்டு அந்த எண்ணிக்கையைப் பெருக்காமல் இருக்கவேண்டிய நிலையிலிருக்கிறோம். வேண்டுமானால் இப்போது உள்ள இந்த எண்ணிக்கையை தென் மாவட்டங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கலாமா என்று ஆராயலாம்.

**திரு. வி. வெங்கா:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட மொழிப் புலவர்கள் பி.டி. போன்ற பட்டப்படிப்பினைப் படித்திராத காரணத்தினால், அவர்கள் வேறு எந்த வேலைக்கும் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? இக்காரணத்தினால் வேலையில்லாது இருப்பதால், அவர்களுக்கு உடனடியாகப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, எவ்வளவு வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் ஆசிரியர் பயிற்சிக்கு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்று பல்வேறு இடங்களில் மொழியில் தேர்வு பெறும் புலவர்களை உருவாக்கும் கல்லூரிகள் ஏராளமாகப் பெருகிவிட்ட நிலையில், இன்று தமிழ் தேர்வு பெற்ற புலவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகிக்கொண்டேயிருக்கின்றது. பலர் தமிழிலுள்ள ஈடுபாடு காரணமாகவும், இலக்கிய நயம் பெறுவதற்கான ஆர்வம் காரணமாகவும், நல்ல இலக்கிய-இலக்கணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர்கள் அதில் சேர்ந்து படிக்கின்றார்கள் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்படி ஏராளமானவர்கள் மொழியில் தேர்வு பெற்று வரும் நிலையில் இவர்களுடைய எண்ணிக்கைக்கும் இவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்கக்கூடிய எண்ணிக்கைக்கும் தொடர்பே இல்லாத நிலை

ஏற்பட்டிருக்கிறது. இப்படி இரண்டுக்கும் தொடர்பு இல்லாத காரணத்தினால், இப்போது பல்வேறு வகையிலும் அதை நாம் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் அதற்கான கட்டுப்பாடுகளைக் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இருக்கும் 400 இடங்களை தென் மாவட்ட ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கலாம் என்பது அரசின் உத்தேசமாக இருந்தால், அவற்றில் 100 இடங்களை மதுரையிலும் திருநெல்வேலியிலும் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அடுத்த கல்வி ஆண்டிலிருந்து கொடுக்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பரவலாக இருக்க வேண்டும் என மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்றார். தற்போது சென்னை, கோமாரபாளையம், புதுக்கோட்டை, மற்றும் சென்னையில் வெல்லிங்டன் சீமாட்டி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இருக்கும் இடங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற எண்ணத்தை வேண்டுமானால் மனத்தில் கொண்டு இதை எப்படிப் பிரிப்பது என்பதுபற்றி ஆராயலாம்.

## *Deputy Inspectors of Schools and the Non-Gazetted Headmasters of the Government 'A' Wing Schools.*

* 67 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to equate the post of Deputy Inspectors of Schools and the Non-Gazetted Headmasters of the Government 'A' Wing Schools by abolishing the present combined cadre of School Assistants and Deputy Inspectors; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**பள்ளித்துணை ஆய்வாளர்களும், அரசின் 'A' பிரிவு பள்ளிகளில் அரசிதழ்ப் பதிவிலாத் தலைமை ஆசிரியர்களும்.**

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தற்போதுள்ள பள்ளியாசிரியர்கள்-பள்ளித்துணை ஆய்வாளர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த பதவித் தரத்தை எடுத்துவிட்டு பள்ளித்துணை ஆய்வாளர்கள் பதவியையும், அரசின் 'A' பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த அரசிதழ்ப் பதிவிலாத் தலைமை ஆசிரியர்கள் பதவியையும் ஒரே தரமுள்ளதாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில் இச் செயற்குறிப்பு தற்போது எந்நிலையிலுள்ளது?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் குழுவின் அறிக்கைக்கு முன்பு முதல் கிரேடு பட்டதாரி ஆசிரியர்களும் பள்ளித் துணை ஆய்வாளர்களும் ஒரே கிரேடில் இருந்தார்கள். இரண்டாவது சம்பளக் குழுவில் முதல் கிரேடு பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூபாய் 400 சம்பள விகிதமும் தலைமை ஆசிரியர்களுக்கு ரூபாய் 450 சம்பள விகிதமும் என்று ஏற்படுத்தப்பட்ட பிறகு, பள்ளித் துணை ஆய்வாளர்களை முதல் கிரேடு பட்டதாரி ஆசிரியர்களோடு இணைத்து வைத்திருக்கின்றார்கள். மாறாக அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களின் தரத்தோடு துணை ஆய்வாளர்களை இணைத்தால், அவர்களுடைய தரத்திற்கு உயர்வளிக்கும் நிலை ஏற்படும் என்பதை அறிந்து இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனுக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட தனி நபர் குழுவிடமும் இதுபற்றி விண்ணப்பிக்கப்பட்டு அவர்கள் அதை ஆராய்ந்து அதை ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். முன்பு இந்த மூன்றையும் ஒரே கிரேடில் வைத்திருந்தார்கள். இப்போது தலைமை ஆசிரியர்களுக்கு ரூபாய் 450 என்று வைத்துவிட்ட காரணத்தினால், இவர்களை ஒரே கிரேடாகக் கொண்டுவர முடியவில்லை.

At present only the School Assistants and the Deputy Inspectors of Schools, Grades I and II constitute the combined cadre.

ஆகவேதான் இதை இரண்டாவது கேடராக, ப்ரமோஷன் கேடராக வைத்திருக்கின்றார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர்கள் இரண்டு வகையில், வெவ்வேறு விதமான பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். பள்ளியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுடைய பணிகளுக்கும் இவர்களுடைய பணிகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. இவர்கள் அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றார்கள், அட்மினிஸ்ட்ரேஷனிலும் இருக்கின்றார்கள். இன்ஸ்பெக்ஷன் அதாரிடியாகவும் இருக்கின்றார்கள். ஆகவே இவர்களுடைய பணிகளுக்கு ஏற்றவகையில் இவர்களுடைய சம்பள விகிதங்களும் மாற்றப்பட வேண்டும். இதை மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதை மாற்றியமைக்க வேண்டும் என்றுதான் 'ஒன்மேன்' குழுவிடம் கோரிக்கை வைத்துக் கேட்டார்கள். அவர்கள் அதை ஆராய்ந்து பார்த்து, பின்னர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது இந்த நிலையில்தான் இருக்கின்றது. அவசியமானால் பின்னர் மறுபடியும் பரிசீலிக்க வேண்டிவரும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, இப்பள்ளித் துணை ஆய்வாளர்களிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளையும் பொறுப்புக்களையும் தவிர, இப்போது 'கேர்' நிறுவனத்தார் வழங்கும் பொருள்களை வைத்திருந்து கொடுப்பது, மதிய உணவுத் திட்டத்திற்கான கணக்குகளை வைத்திருத்தல் போன்று பல பொறுப்புகளைக் கூடுதலாகக் கொடுத்திருப்பதால், இவர்களுக்கு இதற்கென மாதம் ரூபாய் 50 தனி அலவன்ஸாகக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது சம்பந்தமாக விண்ணப்பங்களைக் கொடுத்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம். தற்போது இதுபற்றிய செயற்குறிப்பு இல்லை. இப்போது ஸ்கூல் அஸிஸ்டென்ட்ஸ், டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் இரண்டும் கம்பைண்டு கேடராக இருக்கிறது. அதைப் பிரிக்க வேண்டிவரும். இவர்களுக்குத் தனி அலவன்ஸ்கள் வழங்கப்பட வேண்டுமென்றால், இவர்கள் அதிகப் பொறுப்புகளை, அதிக வேலைப்பளுவினை ஏற்றிருக்கின்றார்கள் என்ற நோக்கத்தில்தான் கொடுக்க வேண்டிவரும். இதைப்பற்றி தனியாகத்தான் ஆராயவேண்டிவரும்.

### *Scale of Pay of the Gazetted Headmasters ('B' Wing).*

*68 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the scale of pay of the Gazetted Headmasters ('B' Wing) has been fixed; and

(*b*) if not, the reasons therefor?

### அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் (B Wing) ஊதியம்

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. க. அறிவழகன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் (B Wing) ஊதியம் வரையறுக்கப்பட்டுவிட்டதா?

(இ) இல்லையெனில் காரணம் என்ன?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளின் அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளுக்கான விதிகள் இன்னும் வகுக்கப்படவில்லை. விதிகள் வகுக்கப்படாததால் அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு, அப்பதவிகளுக்கான குறைந்த ஊதியமே (Minimum pay) பெற்று வருகின்றனர். விதிகள் வகுக்கப்பட்ட பின்னரே அவர்களின் தற்காலிக நியமனம் முறைப்படுத்தப்பட்டு, விதிகளின்படி ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

* வினா 69.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I just want to mention, as the representative of the Graduates, that this question is unhappily worded, because there is a reflection upon the graduates as if Graduates are bulls to be castrated. The question reads : "Whether any vasectomy operation has been done to the Graduates............?" I do not understand this question at all. This question, in its present form, should not have been permitted to be put. They are not bulls to be castrated compulsorily.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, our literary standard is such that Graduates are considered to be much educated people who are bound to undergo such things, which are for a national cause.

THIRU G. VASANTHA JAI : Sir, the wording should be 'literates' and 'illiterates'. But the question is: "Whether among the persons who have undergone vasectomy operation, the number of Graduates rank high or the number of illiterates rank high". The aspersion on Graduates should not be there. I am repeating : "Are they bulls to be castrated?"

THE HON. THIRU K. ANBAZHAGAN : If the hon. Member feels like that, even the uneducated people and the illiterates cannot be considered like that. Whether they are Graduates or illiterates, everybody is a human being.

THIRU G. VASANTHA PAI : The Hon. Minister has not undertood me correctly, Sir. I am only objecting to the wording of the question which is put.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, பட்டதாரிகளுக்கு இதற்காக தனியாக ஊக்கம் அளிக்கப்படுகிறதா என்றுதான் கேட்கிறேன். அவர்களை இழிவுபடுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களைப்பற்றிக் குறையாகச் சொல்லுவதற்கு இதில் என்ன இருக்கிறது?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது தமிழில் சரியாகத்தான் இருக்கிறது. It is correct in Tamil.

THIRU G. VASANTHA PAI: Sir, the dichotomy should be between 'literate' and 'illiterate' or 'graduate' and 'non-graduate'.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர். தலைவரவர்களே, நாட்டிலே படித்தவர்கள், படிக்காதவர்கள் இரண்டு பேருக்கும் இதில் ஒன்றும் வித்தியாசம் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று திரு. வசந்தபாய் அவர்கள் சொல்லுவதானது நாட்டில் படித்தவர்களுடைய எண்ணிக்கை 30 சதவிகிதம் என்றால் மற்றவர்களுடைய எண்ணிக்கை 70 சதவிகிதம்—அவர்களை இழிவு படுத்திப் பேசுவதாக நான் சொல்கிறேன்.

MR. CHAIRMAN: It is correct in Tamil. The translation into English may perhaps be confusing.

THIRU G. VASANTHA PAI: Your office must be careful. Your office finds fault with many of my questions over and over again. But these questions are being allowed.

MR. CHAIRMAN: My office is not only careful but also alert.

THIRU G. VASANTHA PAI: They ought to be alert.

### *Intensive Family Planning Campaign.*

* *Q.*—69 THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health be pleastd to state—

(*a*) whether any vasectomy operation has been done to the Graduates during the Intensive Family Planning Campaign conducted recently;

(*b*) if so, the number of Graduates who have undergone the operation;

(*c*) whether among the persons who have undergone vasectomy operation, the number of Graduates rank high or the number of illiterates rank high; and

(d) the reasons for the disparity in number?



### தீவிர குடும்ப நலத்திட்டம்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் நடந்த குடும்ப நலத் தீவிர திட்டத்தில். பட்டதாரிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா?

(இ) ஆமெனில், எத்தனை பட்டதாரிகளுக்குச் செய்யப்பட்டது?

(உ) அறுவை சிகிச்சை செய்து கொண்டதில் படிக்காதவர்கள் அதிகமா, பட்டதாரிகள் அதிகமா?

(எ) அதிகம்-குறைவு இவைகளுக்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) 1972-73-ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் நடந்த தீவிர குடும்ப நலத்திட்டத்தில் 161 பட்டதாரிகள் இந்த அறுவை சிகிச்சை மேற்கொண்டார்கள்.

(உ) படிக்காதவர்கள் அதிகம்.

(எ) படிக்காதவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து கொள்வதன் மூலம் ஏற்படும் நன்மைகளை விளக்கி அறுவை சிகிச்சையை மேற்கொள்ளுமாறு தூண்டுவதற்காகக் கிராமப்புறங்களில் தீவிர குடும்ப நலத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் தீவிர குடும்ப நலத்திட்ட அமுல் செய்யப்பட்ட காலங்களில் படிக்காதவர்கள் அதிகமாக அறுவை சிகிச்சையைச் செய்துகொண்டார்கள்.

படித்தவர்கள் தீவிர குடும்ப நலத்திட்டம் நடத்தப்படாத காலங்களிலும் தாங்களாகவே முன் வந்து அறுவை சிகிச்சையைச் செய்து கொள்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள தகவல்படி, எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து 161 பேர்தான் என்று தெரிகிறது. இதற்காகக் கோடிக்கணக்கில் செலவு செய்தும், இதைச் செய்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை இவ்வளவு குறைவாக இருக்கிறதே. இதில் பட்டதாரிகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லையா என்ன? (சிரிப்பு) தலைவரவர்களே,, நான் சொல்லுகிறதை முழுமையாகக் கேட்காமல் அன்பர்கள் சிரிக்கின்றார்கள்.

[1974 சனவரி 25

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் அதைச் சொல்லாமல் வேறு எதையாவது சொல்லுங்கள்.

திரு. ஜி. வசந்தபாய்: படித்தவர்கள் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆமாம். அப்படிச் சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களும் படித்தவர்கள்தான். எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் படித்தவர்கள்தான். சாதாரணமாக 7-வது படித்தவர்களும் படித்தவர்கள்தான். பட்டதாரிகள் தான் நாட்டில் படித்தவர்கள் என்று சொன்னால், அதை நானும் ஒப்புக் கொள்ளமாட்டேன், நாட்டிலுள்ள 54 கோடி மக்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

திரு. ஜி. வசந்த பாய்: படிக்காதவர்கள், படித்தவர்கள் என்று சொல்லுங்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: படித்த பட்டதாரிகள் என்று சொன்னால், ரொம்பவும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விளக்கத்தைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: திரு. வசந்த பாய் அவர்கள் பட்ட தாரி என்ற சொல்லை ஒரு இழிவான பதம் என்று நினைக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பட்டதாரிகள் என்பதற்குப் பதிலாக படித்தவர்கள் என்று ஏன் கேட்கக்கூடாது என்று திரு. வசந்த பாய் அவர்கள் கேட்கின்றார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: படித்த பட்டதாரிகள் என்ற சொல்லை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி யிலேயே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். முதல் பகுதிக்கு நான் விடை தெரிவித்திருக்கிறேன். இரண்டாவதாக, இது குறைவாக இருக்கிறதே என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் கேட்டார்கள். எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் யார் யார், எவ்வளவு பேர் செய்துகொள்கிறார்கள், படிக்கத்



1974 சனவரி 25]

தெரிந்தவர்கள், ஆனால் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லாதவர்கள் எவ்வளவு பேர் செய்துகொள்கிறார்கள், 11வது வகுப்புக்குக் கீழ் படித்தவர்கள் எவ்வளவு பேர் செய்துகொள்கிறார்கள், 11வது வகுப்பு படித்து முடிந்தவர்கள், அதற்கு மேல் கொஞ்சம் படித்தவர்கள் எவ்வளவு பேர், பட்டதாரிகள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரம், இந்த நாடு முழுவதும் குடும்ப நலத்திட்டம் எப்படி ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதற்காக 4 அல்லது 5 வகையாகப் பிரித்து, எடுக்கப் படுகிறது. பொதுவாகவே நாட்டில் 100-க்கு ஒருவர்கூட பட்டதாரியாக இல்லை. ஆகவே அப்படி பட்டதாரிகளாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் இளைஞர்களாக இருப்பவர்கள். திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட வர்கள் எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கும். மேலும் இந்த முனைப்புத் திட்டம் கிராமப் பகுதியில் உள்ள விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற, வேளாண் மையில் ஈடுபட்டிருக்கிற மக்களை, அவர்களுக்குப் பல்வேறு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அவர்களை, ஊக்கப்படுத்துவதற்காக நடைபெறுகிறது. இதில் தரப்படுகின்ற 50, 60 ரூபாய்க்காக படித்து பட்டம் பெற்ற ஒருவர் இந்த முனைப்புத் திட்டத்தில் வந்து செய்துகொள்ள வேண்டும் என்று நினைக்கமாட் டார். ஆகவே, ஆண்டு முழுவதும் படித்தவர்கள், அலுவலில் இருப்பவர்கள், அதிகாரியாக இருப்பவர்கள் தங்களுக்கு வாய்ப்பான நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் செய்துகொள்ள முடியும். ஆகவே முனைப்புத் திட்டத்தில் இயல்பாகவே பட்டதாரிகள் எண்ணிக்கை குறைவு. இந்த முனைப்புத் திட்டத்தில் பட்டதாரிகள் மிகுதியாக வந்து செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அது இயல்பும் அல்ல. ஆகவே எண்ணிக்கை குறைவு என்பது பிரச்சினையல்ல. ஆனால் ஒரு கணக்கெடுப்புத் தேவை என்ற அடிப் படையில் மட்டும்தான் அந்த எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know the number of sterilisation operations that were done during the last year, the target that was fixed for this year, and the accomplishment of sterilisations till October last year?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த விவரங்கள் முழுவதையும் இப்போது தெரிவிக்க முடியாது. கடந்த ஆண்டு ஏறத்தாழ 2½ லட்சம் பேருக்குச் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு, இந்த வாசக்டமி அறுவை சிகிச்சை மட்டும்—கடந்த ஆண்டு என்றால் 1973-74 அல்ல, 1972-73-ல்—2,38,000 பேருக்கும், அதே போன்று டியூபக்டமி—அதாவது தாய் மார்களுக்குச் செய்யப்படுகிற சிகிச்சை—40,000 அல்லது 35,000 பேருக்கும், ஆக 2¾ லட்சம் பேருக்குச் செய்யப்பட்டது, என்று என்னுடைய நினைவிலிருக் கிறது. இந்த ஆண்டு ஏறத்தாழ அந்த அளவுக்குச் செய்வதுதான், தொடர்பாக

5 ஆண்டு காலம் தீவிரமாக நடத்துவதற்கு ஏற்றதாக இருக்கும் என்று தமிழக அரசு கருதியிருந்தது. ஆனால் மத்திய அரசாங்கம் ஏறத்தாழ 8 திங்களுக்கு முன்னாலேயே குடும்ப நலத் திட்டத்துக்காகத் தரப்படுகின்ற உதவித் தொகையை, இன்சென்டிவ் அமௌண்ட் 100 ரூபாய் வீதம் தருவதாகத் தெரிவித்த தொகையை, தர இயலாது என்று தெரிவித்தார்கள். எப்படியாவது ஓரளவு தர வேண்டும் என்று திரும்பத்திரும்ப 3 மாதம், 6 மாதம் கேட்டோம், இந்த முனைப்புத் திட்டம் நடத்துவதற்காக. கடைசி வரையில் அவர்கள் இசையவும் இல்லை, இசையும் நிலையில் இருப்பதாகவும் தெரியவில்லை. குடும்ப நலத் திட்டத்திற்கு வழக்கமாக ஆகின்ற செலவில்கூட மூன்றில் இரண்டு பங்கு தான் செலவழிக்க வேண்டும், ஏற்கெனவே எந்தெந்த இடங்கள் காலியாக இருக்கின்றனவோ, அந்தப் பதவிகளில் யாரையும் நியமிக்கக் கூடாது என்று தெரிவித்துவிட்டார்கள். அப்படி ஒரு 6 மாத காலம் இயல்பாக நடைபெறுகிற பணிகளைக்கூட நடைபெறுவதற்கு ஊக்கப்படுத்த முடியாமல் போயிற்று. அண்மையில் பெட்ரோல் செலவு உள்பட எல்லாச் செலவையும் குறைக்க வேண்டுமென்று பொதுவாக சுற்றறிக்கை இருக்கிறது. இவைகளுக்கிடையே தமிழக அரசு 50 லட்சம் ரூபாயை சிறப்பாக இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கி, அதில் உதவித் தொகையாக வழங்க ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய் ஒதுக்கி, இந்த 2, 3 மாதங்களில் ஓரளவுக்கு தொடர்பாக நடைபெற வேண்டிய காரியங்கள் இடையூறு பெற்றுவிடக் கூடாது என்ற முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். அது உள்ளபடியே பெருமளவு வெற்றி தராது.

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தம் முடைய பதிலில், குடும்ப நல முனைப்புத் திட்டத்தை கிராமப் பகுதியில்தான், வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்காகப் பயன்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்கிறவர்கள், இதில் வேலை செய்கிறவர்கள் எல்லாம் படித்தவர்கள், அரசாங்க அதிகாரிகள். அவர்கள் எல்லாம் 8, 10 குழந்தைகள் பெற்றவர்கள். அவர்கள் ஆபரேஷன் செய்து கொள்ளாமல், மற்றவர்களைச் செய்துகொள்ளச் சொல்லும்போது, அரசாங்கம் அவர்களையும் கட்டாயப்படுத்தி செய்து கொள்ளச் செய்ய இந்த முனைப்புத் திட்டத்தின் மூலம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பொதுவாகவே பிறருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தாங்கள் முதலில் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை அரசு எதிர்பார்க்கிறது. அவர்கள் எல்லாம் படித்தவர்கள், பட்டதாரிகள் என்ற காரணத்தால், அறிவுள்ளவர்கள் என்று நாங்கள் நம்பு





கிறோம். எனவே அப்படிப்பட்ட அதிகாரிகள் தாங்கள் செய்துகொள்ளாமல் பிரச்சாரம் செய்வார்களேயானால், அது தவறு. இன்னும் சொல்லப்போனால், நாங்கள் பேசுகின்ற இடத்தில் எல்லாம், மகப்பேறு உதவியாளர்களாக இருக்கின்ற தாய்மார்களைக் குறிப்பிட்டு, மற்றவர்களுக்கு மகப்பேறு உதவி பார்க்கச் சொன்னால், உங்களுக்கே உதவி பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; அதற்குப் பதிலாக உங்களுக்கு 2, 3 குழந்தைகள் இருக்குமானால், கட்டாயம் நீங்கள் செய்துகொள்ள வேண்டும், அதுவும் குடும்ப நலத் திட்டத் துறையில் பணியாற்றுகிறவர்கள் யாராக இருந்தாலும், அந்தக் கட்டுப்பாட்டை நீங்கள் மேற்கொண்டால் தான், மற்றவர்கள் இந்த இயக்கத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் சொல்கிறோம். இப்போது சொல்கிற கட்டத்தில் தான் அரசு இருக்கிறது. எதிர்காலத்தில் அரசு மேலும் சில கருத்துக்களை வலியுறுத்துகின்ற காலம் வருமானால் கட்டாயப்படுத்தலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, கடந்த சில ஆண்டுகளாக, அதுவும் குறிப்பாக 2 ஆண்டுகளாக, அறுவை சிகிச்சைக்கு வரக்கூடியவர்களை மருத்துவமனைகளிலே அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை மற்ற வசதிகள் எல்லாம் செய்ய மத்திய அரசு பண உதவி வந்த காரணத்தால் செய்ய முடிந்தது. இந்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து பணம் வரவில்லை என்று சொன்னால், அது போன்ற நிலைமை இந்த ஆண்டு இருக்குமா? அல்லது அறுவை சிகிச்சைக்குப்பின் உடனடியாக வெளியே அனுப்பிவிடக்கூடிய வழிமுறையை நாம் கையாளப்போகிறோமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே கிடைக்கின்ற உதவியை வைத்துக்கொண்டு 'தஞ்சை முறை' என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது மூன்றாவது ஆண்டு துவக்கப்பட்ட அந்த முறைப்படி, இப்போது 7 நாட்கள் தங்கச் செய்வதற்கும், உணவு வழங்குவதற்கும் ஏற்பாடு இருக்கிறது. அவர்களை வண்டி அனுப்பி அழைத்துக்கொண்டு வருகிற அளவுக்கு முன்னர் வசதி இருந்தது. இப்போது பஸ் செலவு கொடுத்து அழைத்து வரும் அளவுக்குத் தான் நிலைமை இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட மொத்த மக்களில், இந்துக்கள் தான் அதிகம் செய்துகொள்ள முன்வருகிறார்கள், முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் முன்வரவில்லை என்பது உண்மையா? அப்படியானால் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஊக்கமூட்டும் முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தமிழக அரசிற்குக் கிடைத்திருக்கின்ற புள்ளி விவரப்படி, ஏறத்தாழ 100-க்கு 93 பேர் இருக்கிற இந்துக்களில் 90 பேர் செய்துகொள்வார்களேயானுல், மிச்சமிருக்கிற 100-க்கு 8, 10 பேர் இருக்கின்ற பிற சமுதாய மக்களில் 5, 6 பேர் செய்து கொள்கிருர்கள். இதில் என்ன வேற்றுமை என்று கேட்டால், ஏறத்தாழ 90 சதவிகிதம் இந்துக்கள் ஆர்வம் காட்டுவதாக கணக்கெடுத்தால், மற்றவர்கள் 65 சதவிகிதம் ஆர்வம் காட்டுகிருர்கள். ஆகவே அந்த சதவிகிதத்தில்தான் வேறுபாடே தவிர, முஸ்லிம்கள் புறக்கணித்து விட்டார்கள் என்ருே, கிறிஸ்தவர்கள் புறக்கணித்து விட்டார்கள் என்ருே, தாழ்த்தப்பட்டவர்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்ருே, யாரையும் குறிப்பிட முடியாது. ஆனுல் இந்தக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறுகின்ற சமுதாயத்தில், குடும்பத்தில் பலரும் செய்துகொள்கிருர்கள். இந்தக் கருத்து செல்வாக்குப் பெருத குடும்பத்தில், வட்டாரத்தில் யாரும் செய்து கொள்வதில்லை. முதலியார் சாதியில் எடுத்துக்கொண்டால் கூட, இந்தக் கருத்து செல்வாக்குப் பெற்ற குடும்பம் இருந்தால், அந்தக் குடும்பத்தை ஒட்டிய அண்ணன், தம்பி, தங்கை இப்படி பல பேர் செய்து கொள்கிருர்கள். இந்தக் கருத்தே புகாத, ஒரு கிராமத்தில் இருக்கிற முதலியார் குடும்பத்தில் ஆளுக்கு ஐந்து பெற்றுக் கொள்கிருர்கள். ஆகவே சாதியைப் பொறுத்து, மதத்தைப் பொறுத்து இருக்கிற எல்லைகளைக் கடந்து அறிவு மூலமாகப் பரப்பப்படுகிற வேகத்தை ஒட்டி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, படித்தவர்களுக்கு, அரசாங்க அலுவலர்களுக்கு அதிகமாகப் பிரசாரம் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஆகவே அதிகமாகக் குழந்தைகளைப் பெற்ற அரசு அலுவலர்களுக்கு அரசாங்கச் சலுகைகளை நிறுத்தவோ, குறைக்கவோ அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, சிங்கப்பூர் போன்ற வளர்ச்சி பெற்ற சிறிய நாடுகளில் கூட அரசு அலுவலில் உள்ளவர்கள் பெற வேண்டிய சலுகை சம்பந்தமாக, வீட்டு வசதி பெறுவதாக இருந்தாலும், சொந்தமாக வீடு அரசாங்கத்திடமிருந்து பெறுவதாக இருந்தாலும், சில பதவி உயர்வு பெறுவதாக இருந்தாலும், இவைகளுக்கு எல்லாம் குழந்தைகள் அதிகமாகப் பெருமல் இருந்தால் தான் முன்னுரிமை வழங்குகிருர்கள். நம்முடைய நாட்டின் சமுதாய நிலை இதைத் தாங்குமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதாக இருந்தால், அகில இந்திய அரசு இவைகளை எல்லாம் ஆராய்ந்து நிறைவேற்ற வாய்ப்பு இருக்க வேண்டும். மத்திய அரசிற்குப் பல பிரச்சினைகளைப் பற்றி யோசிக்கவே நேரமில்லை.





THIRU G. VASANTHA PAI : Sir, among the persons who have undergone this operation, how many are Members of the Legislature?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்த விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களில் ஏதாவது ஒருவர், இருவர் இருக்கக்கூடும். ஏனென்ருல், இந்த இயக்கம் நடத்துகிறபோது தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் இயக்கத்துக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்று, பஞ்சாயத்துத் தலைவரை அழைத்துச் சென்று அவர்களும் செய்துகொண்டார்கள். அதைப் போல மூன்ருள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் செய்துகொண்டார். அப்படி இந்த இயக்கம் நடைபெறுகிறபோது, அவர்கள் கலந்துகொண்டிருந்தால், அந்தப் புள்ளி விவரம் கிடைக்குமே தவிர, தாங்களாகச் செய்துகொண்டிருந்தால், அந்தப் புள்ளி விவரம் கிடைக்காது.

THIRU G. VASANTHA PAI : I hope there are no Ministers at all who have undergone the operation.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு குழந்தைகள் அளவு கடந்து இல்லாமல் இருப்பதிலிருந்து அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, போன வருடக் கணக்குப்படி குடும்பக் கட்டுப்பாடு இவ்வளவு லட்சம் பேருக்குச் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனுல், கணக்குப்படி நாட்டில் பார்த்தால் குழந்தைகளை ஏராளமாகப் பெற்றுக்கொண்டிருக்கிருர்கள். எவ்வளவு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிருர்கள், இந்தத் திட்டத்திற்குப் பிறகு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தியா பூராவும் மூன்று விஞடிகளுக்கு 2 குழந்தைகள், ஒரு நிமிடத்திற்கு 40 குழந்தைகள், ஒரு மணிக்கு ஏறத்தாழ 2,400 குழந்தைகள், ஒரு நாளைக்கு 56,000 குழந்தைகள் பிறக்கின்றன. இப்படிப் பிறக்கின்ற வேகம் 56,000 என்பது 59,000 ஆக, 62,000 ஆக ஆகின்ற வேகத்தைத்தான் தடுத்துக் கொண்டிருக்கிருேமே தவிர, இன்னும் அதிக வேகமாக உற்பத்தி ஆகக்கூடிய வேகத்தை. அக்ஸிலரேஷன் முறையில் வளராமல் தடுக்கிருேமே தவிர. குழந்தைகள் பிறப்பதையே தடுத்துவிடவில்லை. குழந்தைகள் இருக்காது என்று கவலைப்பட வேண்டிய நிலைமை இந்த நாட்டில் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : (திரு. சி. வி. ராஜகோபாலைப் பார்த்து) உங்களுக்கு எத்தனை குழந்தைகள் ?

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. The hon. Member must first of all answer the question from the Chair.

THIRU C. V. RAJAGOPAL : I want to know this information from my hon. Friend Thiru Vasantha Pai.

MR. CHAIRMAN : I want to know the number of issues the hon. Member Thiru C. V. Rajagopal has got.

THIRU C. V. RAJAGOPAL : Four, Sir.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. Can the Chairman ask a question of a Member?

THIRU C. V. RAJAGOPAL : Sir, may I know whether Thiru Vasantha Pai has undergone this operation?

THIRU G. VASANTHA PAI : Sir, I have not been operated, upon and I have no children.

THIRU C. V. RAJAGOPAL : I wanted to know that information, because my hon. Friend was much interested in the legislators.

(4-30 பி.ப.)

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் யார், யார் வாஸக்டாமி ஆப்பரேஷன் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்று திரு. வசந்த பாய் கேட்டார்கள். இந்தத் திட்டம் செயல்படுவதற்கு முன்னாலேயே, திரு. ஏ. பி. செட்டி அவர்கள் இருக்கின்ற காலத்தில் கொண்டு வந்தபோது நான் செய்துகொண்டிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, அப்பொழுது உறுப்பினர் அவர்களுக்கு என்ன வயது என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : 45 அல்லது 46 இருக்கும்.



*70. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the village officers are compelled to bring persons for family planning operations during the intensive family planning campaign in Tamil Nadu ;

(b) whether any disciplinary action is being taken by the Government against the village officers who fail to bring their allotted quota of persons for operation;

(c) whether their monthly salaries were stopped for their failure to bring the allotted number of persons for operation;

(d) whether it is a fact that the village officers have to spend more money from their pocket than the amount fixed by the Government as incentive for undergoing the operation; and

(e) whether the amount so spent by them is repaid to them?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் தீவிர குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் நடந்துவருவதில் கிராம சிப்பந்திகள் அறுவை சிகிச்சைக்கு ஆட்கள் கொண்டுவருமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்களா ?

(இ) கிராம சிப்பந்திகள் ஒவ்வொருவரும் அவரவர்க்கு குறிப்பிட்ட அளவு, அறுவை சிகிச்சைக்கு ஆட்கள் கொண்டுவராவிடில் அவர்கள் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

(உ) அவரவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு ஆட்கள் கொண்டுவராததற்காக அவர்களின் மாதாந்திர ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டதா ?

(எ) அறுவை சிகிச்சைக்கு வரும் ஆட்களுக்கு சர்க்காரால் நிர்ணயித்த தொகையைவிட அதிகமாக அதிகாரிகள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழிக்கும் நிலைமை ஏற்படுகிறதா ?

(ஐ) அவர்கள் அறுவை சிகிச்சைக்காகச் செலவழித்த பணம் திரும்பக் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) கிராம சிப்பந்திகள் அறுவை சிகிச்சைக்கு ஆட்கள் கொண்டுவருமாறு கட்டாயப்படுத்தப்படவில்லை.

(இ) கிராம சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் குறியீடு நிர்ணயிக்கப்படவில்லை. ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(உ) இல்லை.

(எ) இல்லை.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Manpower and Employment Cell*

* 71 Q.—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Manpower and Employment Cell in the State; and

(*b*) if so, the details thereof ?

### ஆட்படை ஊற்றம்-வேலை வாய்ப்புப் பிரிவு.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் ஆட்படை ஊற்றம்-வேலை வாய்ப்புப் பிரிவொன்றை (Manpower and Employment Cell) ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் கவனிப்பில் உள்ளது.





### *Priority to the Children of the Handloom Weavers in the Tamil Nadu Government Service.*

* 72 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu have received any demand requesting to give priority to the children of the Handloom Weavers in the Tamil Nadu Government Service; and

(*b*) if so, the steps taken thereon by the Government ?

### கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்குத் தமிழக அரசுப் பணிகளில் முன்னுரிமை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்குத் தமிழக அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைத் தமிழக அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, கைத்தறியாளர்கள் ஏற்கெனவே அல்லல்படுகின்றார்கள். அண்மைக் காலமாக நூல் பற்றாக்குறையால் அவர்கள் மேலும் வறுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இது வேலை வாய்ப்பு பற்றிய கேள்வி.

### *Mineral Deposits found in Tiruvannamalai and Mamandur areas in North Arcot district*

* 73 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the mineral deposits found in Tiruvannamalai and Mamandur areas in North Arcot district;

(*b*) when the excavation works will begin; and

(*c*) the industries which are likely to be set up in this area ?

### வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை-மாமண்டூர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருள்கள்

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை-மாமண்டூர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருள்கள் யாவை?

(இ) அவைகள் எப்போது தோண்டியெடுக்கப்படும்?

(உ) இதனால், இப்பகுதியில் ஏற்படுத்தப்படக்கூடிய தொழிற்சாலைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) கானங்காடு ஒதுக்கக் காட்டுப் பகுதியைச் சேர்ந்த மாமண்டூர் கிராமத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தென்மேற்கில் உள்ள ஒரு சிறிய மலைப் பாறையில் துத்தநாகம், ஈயம் மற்றும் தாமிர தாதுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய கனிவள ஆராய்ச்சித்துறையும், தமிழ்நாடுக் கனிவள அபிவிருத்தித் திட்டத்தின் அலுவலகத்தாரும், மாமண்டூரில் உள்ள கனிப்பொருட்களை ஆராயும் பொருட்டு விரிவான நிலச் சோதனைகளைச் செய்துள்ளார்கள். மத்திய அரசு இங்குக் கிடைக்கும் கனிப்பொருட்களைத் தோண்டி எடுப்பதற்கான சுரங்க வேலையைத் தொடங்கவிருக்கிறார்கள். கோலாரில் உள்ள பாரத தங்கச் சுரங்கப் பொறுப் பேற்ற அலுவலகம் தங்களுடைய சுரங்க வேலையில் அனுபவங்களின் காரணமாக இத்திட்டத்தின் பொறுப்பை ஏற்பார்கள்.

(உ) ஆய்வுச் சுரங்கவேலையின் பயனாக இக்கனிப்பொருட்களை இலாபகரமான முறையில் வெட்டியெடுக்கும் சாத்தியக்கூறு இருக்குமானால், சுரங்கத்தில் கிடைக்கும் துத்தநாகம், ஈயம், தாமிரம் ஆகிய கனிப்பொருட்களை தாளாக்கி ஒருமுகப்படுத்தும் அளவில் தொழிற்சாலைகளை உருவாக்க ஏதுவாகும்.

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த ஆய்வின் காரணமாக எவ்வளவு கனிப்பொருள்கள் அந்தப் பகுதியில் கிடைக்கும், அதனால் என்னென்ன தொழில்கள் அபிவிருத்தியாகும் என்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் தெரிந்துகொண்டிருப்பதெல்லாம் ஒரு உத்தேசமானது தான். சுமார் 1 மில்லியன் அதாவது 10½ இலட்சம் டன் கிடைக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. ஆனால் அது முடிவானது என்று சொல்ல முடியாது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வட்டாரத்தில் ஏராளமான ஐர்ன் ஓர் இரும்பு கனிப்பொருள்—பிளேக் கோல்ட் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச் சமீபத்தில் ஒரு செய்தி வந்தது. அதைப்பற்றி விவரம் தெரிந்தால் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சேலத்தில் கிடைத்திருக்கின்ற இரும்புக் கனிப்பொருள் போல் திருவண்ணாமலைப் பகுதியில் சில மலைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சித் துறையாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். ஜப்பானியர் குழுவும் ஆராய்ந்து அறிக்கை தந்திருக்கிறார்கள். யு.என் டி.பி.-யினுடைய முடிவான அறிக்கை வந்த பின்னால் தான் என்ன தொழிலுக்குப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்யக் கூடும்.

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, இந்தக் கனிவகை மூலப் பொருளின் மூலம் அந்த மாவட்டத்தில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்பதற்கான செயற்குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே சொன்னேன். இது ஒரு உத்தேசமான ஆராய்ச்சி. அதை மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனத்தார் டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால்தான் எவ்வளவு கனிப்பொருள் கிடைக்கும் என்பதே தெரியும். அந்த விவரம் கிடைத்த பிறகுதான் அதை எந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதைப் பரிசீலிக்க முடியும்.

**திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே, இந்தக் கனிப்பொருளைத் தோண்டி எடுக்கும் வேலையை மாநில அரசே மேற்கொள்ளுமா அல்லது மத்திய அரசிடம்தான் அந்த அதிகாரமும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அதைப் பரிசீலிப்பது நம்முடைய ஜியலாஜிகல் டிபார்ட்மெண்ட். அதற்கு உதவி செய்வதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய ஸ்தாபனமான யு.என்.டி.பி. இருந்து வருகிறது. இதே போல் மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனம் ஒன்று கோலாரில் இருந்து வருகிறது. அவர்களுக்கு இப்பொழுது வேறு வேலை இல்லாததால் தாங்கள் செய்வதாகச் சொன்னார்கள். அப்படிப் பரிசீலிப்பதற்குத் தேவை

டான இயந்திரங்கள் அவர்களிடமிருக்கின்றன. ஆகையினுல் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் பரிசிலித்த பின்னுல் தொழில் ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## Sandal Wood Trees.

*74 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) the income derived through the sandalwood trees of the Forest Department in the State during 1972-73; and

(*b*) the details thereof, District-wise?

### சந்தன மரங்கள்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வன இலாகாவில் சந்தன மரத்தினுல் மாநிலத்திற்கு 1972-73-ஆம் ஆண்டில் வரவு எவ்வளவு?

(இ) மாவட்ட வாரியாக விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ரூபாய் 1 கோடியே 19 லட்சம்.

(இ) மாவட்ட வாரியாக விவரம் பின்வருமாறு:—

| | ரூபாய். |
|---|---|
| வட ஆற்காடு | 89,00,000 |
| சேலம் | 12,00,000 |
| கோயம்புத்தூர் | 11,00,000 |
| நீலகிரி | 3,00,000 |
| திருச்சி | 1,00,000 |
| தர்மபுரி | 1,59,000 |
| மொத்தம் | 1,19,00,000 |

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்று தெரிகிறது. அந்த அளவுக்கு நல்ல வளமுள்ள பகுதியாக இருப்பதால், இந்த மலைப் பகுதிகளில் மேலும் பல சந்தன மரங்களை



வளர்ப்பதற்கு வன இலாகாவினரிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தற்போது எத்தனை மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, எவ்வளவு மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்ற குறிப்பு இல்லை. புதிய சந்தன மரங்களை வளர்ப்பதற்கு, அரசுத் துறையின் மூலமாக மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலிலும் வட ஆர்க்காடு மாவட்டத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்தச் சந்தனக் கட்டைகளைக் கொண்டு மற்ற வாசனைத் திரவியங்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கத் தரப்பில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவ செயற்குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இந்தப் பொருள் அதிகமாக விலை போவதால், தனியார் விற்பனை செய்வதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதை உணர்ந்து ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஈரோட்டில் அரசுத் தரப்பில் ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து வட ஆர்க்காடு மாவட்டத்திதான் அதிகமான உற்பத்தி இருக்கின்றது என்று தெரிகிறது. அப்படியிருக்கையில் அந்தத் தொழிற்சாலையைக் கோவை மாவட்டத்தில் வைப்பதன் நோக்கமென்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதிகமில்லை. அதை விட தர்மபுரி மாவட்டத்தில்தான் அதிகம் இருக்கிறது.

*75 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether any sandalwood trees in Government forests in North Arcot have been felled illegally during 1971-72:

(*b*) if so, the number of persons arrested;

(*c*) the steps taken thereon; and

(*d*) the value of the trees?

[1974 சனவரி 25

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72-ஆம் ஆண்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தில், சர்க்காருக்குச் சொந்தமான காடுகளில் இருக்கும் சந்தன மரங்கள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டனவா ?

(இ) ஆமெனில், எத்தனை நபர்கள் பிடிபட்டனர் ?

(உ) இதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

(எ) இதன் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அந்த ஆண்டில் மட்டும் 58 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 135 நபர்கள் பிடிபட்டனர். பத்து குற்றங்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. 46 குற்றங்களில் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, மேலும் இம்மாதிரி குற்றங்கள் நடைபெறாமலிருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள், நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? இதற்காகத் தனி பாதுகாப்பு என்ற முறையில் காவல் துறையில் ஏதாவது பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சில சமயங்களில் கொடுப்பது உண்டு. வேலூர், சேலம், தர்மபுரி, மதுரை. திருச்சிராப்பள்ளி, கடலூர், நீலகிரி ஆகிய நகரங்களில் ஸ்பெஷல் மொபைல் பெட்ரோல் பார்ட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-40)

## 2. கவன ஈர்ப்பு.

1970 ஜூன் 1 முதல் 1970 அக்டோபர் 2 வரையுள்ள இடைக்காலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதியம், பணிக் கொடை முடிவு செய்யப் படாதது குறித்து.

THIRU K. S. GANAPATHI : Hon. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, . . . .



1974 சனவரி 25]

THIRU G. VASANTHA PAI : The Hon. Minister is not here.

THIRU G. SWAMINATHAN : Sir, what are we supposed to do in the intervening period ?

THIRU K. RAJARAM : The Hon. the Health Minister is here. He can make the statement because they have joint responsibility.

THIRU K. S. GANAPATHI : Hon. Chairman, Sir, I beg to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-finalisation of pension and gratuity of teachers who retired from service between 1st June 1970 and 2nd October 1970 and the resultant hardship caused to the retired teachers.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ் நாடு இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைத்த ஓய்வூதியச் சலுகைகள் மாநில அரசின் அலுவலர்களில், ஆசிரியர்கள் அல்லாத பிறரைப் பொறுத்த வரை 2—10—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுவோருக்கு மட்டுமே நடைமுறைக்கு வந்தன. எனினும் பள்ளி ஆசிரியர்களை மட்டும் சிறப்பு வகையினராகக் கருதி அவர்களுக்கு மட்டும் அச் சலுகைகளை 2—10—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுவோருக்கு பொருந்துமாறு அரசு நடைமுறைப்படுத்தியது. அரசுப் பள்ளிகள் அல்லாத (அதாவது தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளிகளிலிருந்து அவ்வாறு (அதாவது 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பின்) ஓய்வு பெற்றோருக்கு அரசு ஊழியர்களையொப்ப தாராள ஓய்வூதிய விதிகளின்படி (லிபரலைசுடு பென்ஷன் ரூல்ஸ்) ஓய்வூதியம் (பென்ஷன்), பணிக்கொடை (கிராசுடி) ஆகிய வையும் அரசு ஊழியர்களையொப்ப குடும்ப ஓய்வூதியமும் தர வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

இவ்வாணைகளின் மேல் மாநில தலைமைக் கணக்காய்வாளர் கோரிய சில ஐயப்பாடுகளுக்கான விளக்கம் 21—1—1974 அன்று அரசு ஆணை ஒன்றின் மூலம் அவருக்குக் தெரிவிக்கப்பட்டுவிட்டது. எனவே 1—6—1970 முதல் 1—10—1970 முடிய உள்ள காலத்தில் ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்கள் அனை வருக்கும் ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவற்றை வழங்கிட மாநிலத் தலைமைக் கணக்காய்வாளர் விரைவில் நடவடிக்கை எடுத்திடுவார்.

**1970 ஜுன் 1 முதல் 1970 அக்டோபர் 2 வரையுள்ள இடைக்காலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதியம் பணிக்கொடை முடிவு செய்யப்படாதது குறித்து**

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 சனவரி 25

மேற்சொன்ன அரசாணைகளின்படி 2—10—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறுவோருக்கு மட்டுமே தருவதற்குரிய ஓய்வூதியச் சலுகைகளை பள்ளி ஆசிரியர்கள் மட்டும் 1—6—1970 முதல் 1—10—1970 காலத்தில் ஓய்வு பெற்று இருப்பினும் பெறுவர்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு தலைவரவர்களே, 1972-ம் ஆண்டிலே அக்கவுண்டன்ட்-ஜெனரல் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு, ஜி.ஓ. 630 என்னுள்ள ஆணையில் விடையளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்பும் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியில்லாமல், 1974-ம் ஆண்டு உத்தரவிலாவது தெளிவு கிடைக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது ஐயப்பாடுகளுக்கான விளக்கம் 21—1—1974 அன்று அனுப்பப்பட்டுவிட்டது. இனி சங்கடம் இருக்காதென்று நினைக்கிறோம். 1—6—1970-லிருந்து ஓய்வூதியம் பெற வழி ஏற்படும்.

## 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் இன்று உணவுப் பஞ்சம், மின்சாரப் பஞ்சம் என்று விதம் விதமான பஞ்சங்கள் மக்களிடத்திலே காணப்படும் நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் என்னுடைய பொறுப்பு, ஆர்வம் காரணமாக, தமிழகத்தில் இருக்கும் குழப்பத்தையும், மற்ற மாநிலங்களில் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, மற்ற மாநிலங்களிலிருந்து வந்த நண்பர்களையும், உறவினர்களையும் விசாரித்தேன். மேற்கு வங்காளம், ஒரிசா, ஆந்திரா, கேரளா, மைசூர், மஹாராஷ்டிரா, டெல்லி, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்தவர்களை விசாரித்ததில், அவர்களுடைய எண்ணமெல்லாம், தமிழகம் மிகச் சிறந்த நிலையில் இருக்கிறதென்பதுதான். தமிழகத்தை ஒப்பிடும்போது, டெல்லியிலே இவ்வளவு சிக்கல் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களில் அவசிய உணவுப் பொருள்கள்கூட கிடைப்பதில்லை; நீங்கள் எவ்வளவு பணம் கொடுக்கத் தயாராக இருந்தாலும், உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை; அந்த வகையில் தமிழ்நாட்டில் கிடைக்காத பொருள்கள் இல்லை; இங்கே அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்த அடிப்படைக்குக் காரணம், விவசாயத்தில் நாம் கண்டுள்ள முன்னேற்றம்தான் என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு முக்கிய காரணம், பிலிப்பைன்ஸ்



நாட்டில், மணிலாவில் உள்ள இன்டர் நேஷனல் ரைஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்தான். அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாவோம். அவர்கள்தான் நமக்கு இந்த முன்னேற்றத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் முதன் முதலில், 1966-67-ஆம் ஆண்டில் ஐ.ஆர். 8 என்ற நெல் ரகத்தைத் தந்தார்கள். அதில் இரண்டு சிறப்பு இருக்கிறது. ஒன்று அதிக விளைச்சல் தருகிறது. மற்றொன்று, சாயாதது. அந்த இரண்டு காரணங்களால் நமக்கு அதிகப் பலனைத் தந்திருக்கின்றது. அதற்கு முன்னதாக நம்மிடம் இருந்த நெல்கள் குறைந்த அளவு விளைச்சலைத்தான் தந்தன; மேலும் சாய்ந்து விடும். அதனால் பத்து அல்லது 15 சதவிகிதம் நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இந்த இரண்டையும் தவிர்க்கும் வகையில் ஐ.ஆர். 8 கொடுக்கப்பட்டது. அந்த நெல்லிலே இவ்வளவு சிறப்புகள் இருந்தாலும், அதிலே சில குறைகளும் இருந்தன. குறை என்று கூறவில்லை. அந்த நெல்லுக்குத் தேவையான இரண்டு—அதிக உரம், பூச்சி மருந்து ஆகியவையாகும். இந்தப் பூச்சி மருந்து, குறிப்பாகச் சொல்லப்போனால் 1966-67-ம் ஆண்டுக்குப் பிறகுதான் தேவை அதிகப்பட்டது. அந்த அடிப்படையிலே பூச்சி மருந்தைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் கவனம் செலுத்தினார்களா என்றால் இல்லை. அதற்குக் காரணம் இலாகாவினர் தெளிவாக விளக்கம் தர இயலாமல் இருந்ததுதான். மேலும் இந்தப் பூச்சி மருந்துகளினால் 'பயலாஜிகல் இம்பேலன்ஸ்' ஏற்படும். உதாரணமாக 'என்ட்ரின்' அடித்தால் பாம்புகள் இறந்துவிடும். அதனால் எலிகள் எண்ணிக்கை அதிகமாகி, பயிர்களுக்குச் சேதம் ஏற்படும். 1966-67-க்குப் பிறகு நெற் பயிரில் இரண்டு பூச்சிகளும் அதிகரித்தன. ஒன்று 'லீப் ரோலர்'. அது அகன்ற இலையைச் சுருட்டிவிடும். மற்றொன்று 'இயர்-ஹெட் பக்'. கதிர் வந்து பால் வைக்கின்ற வேளையிலே, அந்தப் பாலை உறிஞ்சும் பூச்சிகள் இவை. இந்தப் பூச்சிகள் 1966-க்கு முன்பு அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பூச்சிகள் கதிர் வந்து பால் வைக்கின்ற வேளையிலே பாலை உறிஞ்சியும், அகன்ற இலைகளைச் சுருட்டியும், கேடுகள் விளைவிக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு மருந்துகள் இருக்கின்றன. அந்த மருந்துகளைப் பயன்படுத்த அதிகச் செலவு ஏற்படுகிறது. அது தவிர எரு. மாண்புமிகு உறுப்பினர்கள் 'கெமிகல் பெர்ட்டிலைசர்ஸ்' நமக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். உண்மைதான். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொன்னதுபோல, நமக்கு சாணி எரு மிகவும் முக்கியம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. அதிலே மிகச் சிறப்பான பயனை அடைய முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தமாஷாகக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே, நம்முடைய நாட்டிலே இரசாயன உரத்தை நம்பி நம்முடைய விவசாயம் இருக்கவில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம்பியிருப்பது இந்த மாட்டு எருவைத்தான். மற்றதல்ல. எனவே அதைச்

சிறப்பான வகையிலே எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று மக்களுக்குச் சொல்ல வேண்டும். அந்த சாணியைப் பயன்படுத்தும் அவசியம் ஏற்படுகிற காரணத்தால், உடனடியாகப் புதுச் சாணியை வயலில் இட்டால், அதில் கார்பன்—நைட்ரஜன் ரேஷியோ குறைந்துவிடுகிறது. வயலில் உள்ள நைட்ரஜனை அந்தச் சாணம் எடுத்துக்கொண்டு விடுகிறது. அதனால் வயலில் நைட்ரஜன் குறைந்துவிடுகிறது என்று சொல்லுகிறார்கள். எனவே அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று இலாகாவினர் தெளிவாகச் சொல்ல வேண்டும். சற்று முன்பு ஒரு உறுப்பினரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். இலாகாவினர் தெளிவாகச் சொல்வதில்லை. டெப்போவில் என்ன இருக்கிறதோ அதைப் பயன்படுத்துங்கள் என்று சொல்கிறார்கள். வீரிய விதையும் தேவைக்கேற்ப நமக்குக் கிடைக்காது. அந்த அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள், இவை இரண்டும் முறையாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, நெல் விதைகளைப் பொறுத்த வரையில், எந்த வீரிய விதை கிடைக்காமல் தட்டுப்பாடாக இருக்கிறதென்று தெரிவித்தால், எந்தப் பகுதிக்கு வேண்டுமென்று தெரிவித்தால், உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்கிறோம்.

(பிற்பகல் 4-50)

**திரு. கே. எஸ். கணபதி:** என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். 'ரத்னா' என்ற நெல் ரகம் இருக்கிறது. அது 105 நாளில் வருகிறது. 'கோ-36' என்ற ரகம் 135 நாளில் வருகிறது. இந்த இரண்டும் திருச்சியைப் பொறுத்தமட்டில் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு கோவையிலிருந்து கொண்டு வந்தேன். இப்போது 15 நாட்களுக்கு முன்பு சென்றிருந்தேன். திருச்சியிலே இந்த இரண்டும் கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிடைக்கும்படியாகச் செய்தால் நான் மிகுந்த கடப்பாடு உள்ளவனாக இருப்பேன் என்று கூறிக்கொள்கின்றேன். இந்த இண்டர்நேஷனல் ரைஸ் இன்ஸ்டிடியூட் ஐ.ஆர். 8 வெரைட்டியை மேற்கொண்டது முதல், நம்முடைய ஆராய்ச்சிப் பணி சிறந்து விளங்கி வந்திருக்கின்றது. அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 40 ரக நெல் வகைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானது 'பொன்னி'. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மிகச் சிறந்த ரகம். இந்த நெல் அதிகமான விளைச்சலைக் கொடுக்கின்றது. நல்ல விலையும் கிடைக்கின்றது. இந்த ரகம் விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பு பெற்றிருக்கின்றது. இந்த கோ 36-ஐ நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நமக்கு நைட்ரஜன் கிடைக்காத காரணத்தாலே, நமது ஆராய்ச்சிப் பண்ணைகள் நைட்ரஜன் குறைவாக எடுக்கும் பயிர்களைக் கண்டுபிடிக்க



வேண்டும். அந்த அடிப்படையிலே பவானி, கோ 36 என்ற இரண்டு வகை நெற்களும் குறைவாக நைட்ரஜன் எடுத்துக்கொண்டு, பொன்னியை விட அதிகமான விளைச்சலைத் தருகின்றது. இதை நானே முயன்று பயிரிட்டு வெற்றி பெற்றிருக்கின்றேன். அது உண்மை. எனவே இதுபோன்ற நெல் ரகங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கூறிக்கொள்கின்றேன்.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தப் புதிய ரகங்களைக் கண்டுபிடிக்கும்போது, தொடர்ந்து புதிய புதிய ரகங்களாகக் கண்டுபிடிக்கவேண்டும். ஏனென்றால், இதிலேயும் ஒரு ஆபத்து உண்டு. புதிய ரகங்கள் இரண்டு தரம், மூன்று தரம் ஆனபிறகு 'பேரண்ட் சீடிலிங்' என்று சொல்வார்கள், "ப்வார்ப் பாதர் அண்டு டால் மதர்" அவை இரண்டும் பிரிந்துவிடும் என்று சொல்வார்கள். எனவே இந்த இரண்டு பயிரையும் நாம் பயன்படுத்த முடியாது. ஆகவே ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து புதிய நெல்களைப் பயன்படுத்துவதுடன், நியூக்ளியஸ் வெரைட்டிகளை நமக்குக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயம் நம் நாட்டிலே வெற்றி பெற வேண்டுமானால், வாட்டர் மேனேஜ்மெண்ட், நீரைப் பயன்படுத்தும் முறை வழிப்படுத்தப்பட வேண்டும். நான் இதை எதற்காகச் சொல்கின்றேன் என்றால், சென்ற ஆண்டு காவேரிப் பகுதியிலும் மூன்றாவது சாகுபடி செய்யலாம் என்று அனுமதித்தார்கள். இந்த மூன்றாவது சாகுபடி செய்வதிலே எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. ஏனென்றால் நிலத்திற்கு ஓய்வு தேவை என்பது நிபுணர்களின் கருத்து. எனவே மூன்றாவது சாகுபடி செய்யப்பட்டால், அடுத்த ஆண்டு விளைச்சல் கட்டாயம் பாதிக்கப்படும். எனவே இரண்டாவது சாகுபடியோடு நிறுத்திக்கொண்டு, தொடர்ந்து மூன்றாவது உளுந்து, பயறு போன்றவைகள் பயிரிடப்பட வேண்டும். மூன்றாவது சாகுபடியில் நெல் பயிரிட்டால், நமக்குத் தேவையான உளுந்து, பயறு, எள், முதலியவை நமக்குக் கிடைக்காமல் போகக்கூடும். அந்த அடிப்படையிலே மூன்றாவது சாகுபடி செய்ய அனுமதி தரக்கூடாது, தண்ணீர் கொடுக்கக்கூடாது. இரண்டு போகத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இரண்டாவது சாகுபடியோடு நிறுத்திக்கொண்டிருந்தால், ஜூன் மாதம் 1-ம் தேதி நாம் மேட்டூர் அணையிலிருந்து நீர் வழங்கக்கூடும். அப்படி ஜூன் மாதம் போதுமான நீர் வழங்கு

வோமானால், மழைக்கு முன்னதாக முதல் பயிர் அறுக்கப்படும். அது தாமதிக்கப்படுவதனாலே எப்போதுமே தஞ்சை மாவட்டத்திலே முதல் பயிர் அறுப்பு பாதிக்கப்படுகிறது. நெல் சேதம் ஆகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதுபோல, 14 பர்செண்ட் மாயிஸ்டர் அளிக்கவேண்டியிருக்கிறது. அந்தக் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகள் நீக்கப்படுமேயானால், என்னுடைய திண்ணமான நம்பிக்கை, இந்தியாவில் இருக்கின்ற அத்தனை அரிசி உண்ணும் மக்களுக்கும் தமிழகம் அதிகமான நெல்லைக் கொடுக்க முடியும்.

அடுத்து, ஆளுநர் அவர்களுடைய உரையிலே அடாமிக் பவர் பிளாண்ட்ஸ் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். " The commissioning of the Kalpakkam atomic energy plant has been unduly delayed." என்று குறிப்பிட்டார்கள். நான் இதைப்பற்றி அதிலே சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தேன். அவர்கள் கூறும் காரணம், இந்த அடாமிக் பவர் புராஜெக்ட் தமிழகத்திலே உள்ளதும், ராஜஸ்தானத்தில் உள்ளதும் இரண்டும் ஒத்ததாகும். ராஜஸ்தானிலே உள்ள அடாமிக் பவர் பிளாண்டுக்குத் தேவையானது கேலண்டிரியா என்று சொல்லுகின்றார்கள். அந்த ரீ ஆக்டார் கோர், அந்த கேலண்டிரியா-வை கனடா நாட்டிலிருந்து இறக்குமதி செய்தார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்திய அரசு இனிமேல் இதை இறக்குமதி செய்ய வேண்டாம். நம் நாட்டிலேயே யாராவது தயாரிக்கின்றார்களா என்று பார்த்த போது, ராஜஸ்தானுக்கே இரண்டாவது கேலண்டிரியா, தேவைப்பட்டபோது, அந்த ரீ ஆக்டர் கோர் ஒன்றைத் தயாரிப்பதை, லார்சான் அண்டு டுப்ரோ என்ற பம்பாய் நிறுவனத்தார் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் ராஜஸ்தானுக்கு அதனுடைய இரண்டாவது பவர் பிளாண்டுக்கு 1973-ம் ஆண்டு நவம்பர் டிசம்பர் திங்களில்தான் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் நமக்குத் தேவையான முதல் ரீ ஆக்டார் கோர் செய்து நமக்குத் தருவதற்கு இன்னும் 15 மாத காலமாவது ஆகும் என்று கூறுகிறார்கள். எனவே அது தயாராகி வந்த பிறகு அதை நிறுவுவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகுமாம். எனவே 1978-ம் ஆண்டு மத்தியில்தான் இந்த கல்பாக்கம் பவர் பிளாண்டிலிருந்து நமக்கு மின்சாரம் கிடைக்கும். எனவே அதில் யார் தாமதம் செய்கிறார்கள் என்று பார்ப்பதைவிட, ஆளுநர் அவர்கள் உரையிலே கூறியிருக்கின்றார்கள், எக்ஸ்பான்சனை உடனடியாகக் கைவசம் செய்ய வேண்டும் என்று——அந்த அடிப்படையிலே எக்ஸ்பான்சனுக்கான திட்டங்களையும் நாம் மத்திய அரசை வற்புறுத்திப் பெறுவோமானால் சிறப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்கின்றேன்.



தமிழ்நாடு இண்டஸ்ட்ரிஸ் இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷனின் 24-வது ஆண்டு அறிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலே எனக்கு ஒரு செய்தி விளங்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில், அது ஒரு பயங்கரமான செய்தியாக இருந்தது. அதிலே அக்கவுண்டன்ட்-ஜெனரல் ஒரு குறிப்பு கொடுத்திருக்கின்றார்கள்.

" During the year the company waived a sum of Rs. 4,75,765 being interest due from a defaulting borrower, out of which a sum of Rs. 2,72,718 was adjusted from the interest earned, etc., etc." என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதிலே ஒரு குறிப்பிட்ட கடனாளியிடமிருந்து வரவேண்டிய சுமார் ரூபாய் நாலே முக்கால் லட்சம் வட்டி வஜா செய்யப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளும் முறை. அதைப்பற்றி அப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது நமக்குப் பொருத்தமானது அல்ல. ரூபாய் நாலே முக்கால் லட்சம் வட்டியானது ஒரு குறிப்பிட்ட நபருக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அவர்கள் வாங்கிய கடன் எவ்வளவாக இருக்கும்? அவர் அந்த அசலைத் திருப்பித் தருவாரா? இந்தக் கடனை, வட்டியை வஜா செய்யவேண்டிய அவசியம் என்ன என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டிய ஒன்று. எனக்கு ஏன் இந்த ஆர்வம் என்றால், இந்த நிர்வாகத்தில் . . . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ரூபாய் நாலேமுக்கால் லட்சம் கொடுக்கவேண்டிய நபர் யார் என்று உறுப்பினர் அறிவாரா?

**திரு. கே. எஸ். கணபதி:** அதைப்பற்றி விளக்கம் இல்லை. அதற்குத்தான் பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சரவர்கள் நமக்கு வேண்டிய விளக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** எந்த வருடத்தில்?

**திரு. கே. எஸ். கணபதி:** 31—3—1973-ல் முடிந்த ஆண்டுக்குக் கணக்கு. ஒன்பது மாதத்திற்கு அந்தக் கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த நிர்வாகத்திற்கு மூலதனம் ரூ. 2,99,56,000. தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் மூலதனம் ரூ. 2,99,56,000. இதிலே தமிழ் நாடு அரசினுடைய உரிமை 60 சதவிகிதம், அதாவது ரூ. 1,77,28,000. இந்த நிறுவனம் கடந்த 9 மாதங்களிலே அடைந்த லாபம் என்ன என்பதை அவர்களே கணக்கிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். அது அதைவிட பயங்கரமானது. லாபம் .19 சதவிகிதம். கையாளப்படும் முதலிலே கிடைத்த

லாபம் .19 சதவிகிதம். கால் சதவிகிதத்திற்கும் குறைவு. இந்த நிறுவனம் லாபம் செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் இவ்வளவு பெரிய தொகைகள் வஜா செய்யப்படுவதாலேதான், இதுபோன்ற குறைகள ஏற்படுகின்றனவா என்பதை நமக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

நான் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடலா மென்றிருந்தேன். திருச்சி நகரைப் பொறுத்த மட்டில், காவிரிக் கரையில் அது அமைந்திருந்தால் கூட, காவிரியில் வெள்ளம் புரண்டு போனாலும் சரி,

(பிற்பகல் 5-00)

வறண்டிருந்தாலும் சரி, திருச்சி நகரில் வாழும் மக்களுக்குக் குடிநீர் இல்லை. பஞ்சம் தொடர்ந்து இருந்து வருகிறது. இதைக் கட்டாயம் கவனித்து இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 5 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் வகையில், தமிழ்நாடு அரசு திட்டம் அமைத்துக் கொடுத்தது. அதிலே ஆசிரியர்களுக்கு 10,200 பதவிகள் ஒதுக்கப்பட்டன. நம்முடைய கல்விச் செயலாளர் அவர்கள் இதிலே மத்திய அரசுடனும் மாநில அரசுடனும் வாதிட்டு அனைவருக்கும் முழு ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாளுக்குள்ளாக அனைத்துப் பதவிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். நேற்று விசாரித்ததிலே, 2,500 பதவிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையென்று தெரிகிறது. கல்வி இயக்குநர் அலுவலகத்திலே என்ன வேலை செய்கிறார்கள் என்று புரியவில்லை. வேலை யில்லாத் திண்டாட்டம் ஒரு புறம். இந்தத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசு முயற்சி செய்தாலும், அதிலே தடை விதிப்பதற்கு ஒரு இயக்குநர் வேண்டுமா? இயக்குநர் அலுவலகம் இதைக் கண்காணிக்கக் கூடாதா? எனவே, இந்த 2,500 பேர்களும் இன்னும் 2 மாதங்களுக்குப் பணியில் இருக்கப் போகிறார்கள். பிப்ரவரி, மார்ச் இரண்டு மாதங்கள் தான் பணியில் இருக்கப் போகிறார்கள். அதற்குள்ளாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்படவில்லையென்றால், அவர்களுடைய நிலை என்ன?

(மாற்றுத் தலைவர் திரு. எல். பலராமன தலைமை)

கடவுள் கொடுத்தும் பூசாரி வழங்கவில்லையென்று சொல்வது போல், அரசு தாராளமாக வழங்கியும் இவர்கள் வழங்குவதில் என்ன தாமதம்? அது மாத்திரமல்ல. கல்வி இலாகாவைப் பொறுத்தவரை, பெரிய குழப்பமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இங்கே கேள்வி களிலே பெரும்பாலான கேள்விகள் கல்வி சம்பந்தமானதாக இருக்கும். கல்வி





அமைச்சருக்கு அதிக நேரம் செலவிடப்படுகிறது என்று முதலமைச்சரவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அப்படியிருந்தும், இன்னும் நூற்றுக்கணக்கான கேள்விகள் விடை அளிக்கப்படாமல் இயக்குநர் அலுவலகத்தில் தூங்கி வருகின்றன.

திரு. சி. வி. இராஜகோபால்: தலைவரவர்களே, கல்வி ஆசிரியர்களுடைய குழப்பமா? பணி செய்கிறவர்களுடைய குழப்பமா?

திரு. கே. எஸ். கணபதி: இலாகாவின் குழப்பம். அடுத்து, இந்த ஆளுநர் அவர்கள் உரையில்,

"For the uplift and advancement of the scheduled castes and Backward Classes the Government have proposed to spend Rs. 91.50 crores during the plan period."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். இதை ரூ. 200 கோடியாக உயர்த்தினாலும், அதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். ஆனால் அது எப்படிப் பயன்படுத்தப்படுகிறது? இதனால் பயனடைகிறார்களா? பயன் எவ்வளவு என்று கட்டாயம் பரிசீலனை செய்துதான் ஆக வேண்டும். குறிப்பாக மாணவர்களை எடுத்துக்கொள்வோமானால், அவர்களுக்கு இலவசமாக இருக்க இடம், உணவு, உடை, கல்வி ஆகிய நான்கும் வழங்கப்படுகின்றன. இதிலே அவர்கள் மூன்றைப் பெற்றுக்கொண்டும், கல்வியை அவர்கள் பெறுவ தில்லை. நான் இந்த அரசை வேண்டுவதெல்லாம் அவர்கள் இந்த நான்கையும் கட்டாயமாகப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் படித்துத்தான் ஆகவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அப்படியில்லையென்றால், இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டும் பயனற்றதாகப் போகும். அமைச்சரவர்கள் சில தினங்களுக்கு முன்னால் கூறியிருக்கிறார்கள்:—

"It was doubtful if the students from the backward classes had utilised properly the educational concessions extended to them by the Government."

என்று அமைச்சரவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் உண்மை எல்லோருக்கும் தெரியும். அவர்கள் மற்ற மூன்றையும் பெறுகிறார்களே தவிர நான்காவது இலவசமாக வழங்கப்பட்டும் அவர்கள் அந்தக் கல்வியைப் பெறுவ தில்லை. அதில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. எனவே இந்த நான்காவ தாக, இலவசமாகக் கொடுக்கப்படும் கல்வியை அவர்கள் பெறுவதற்கான முழு முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவர்கள் கல்வி பெற முழு முயற்சியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். என்ன மாதிரி முயற்சி செய்யலாம் என்று ஆசிரியர் என்ற முறையில் அவர்கள் சொல்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்த அரசு ஆங்காங்கே ஹாஸ்டல்களை ஏற்படுத்தி ஒரு ஆசிரியரை அதன் பொறுப்பாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் உண்மையை ஒப்புக்கொள்ளப்போனால், இந்த குறிப்பிட்ட ஆசிரியர்கள் தங்கள் பணியைச் சரியாகச் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இப்படி இந்த ஆசிரியர் முறையாகப் பணியைச் செய்கிறாரா? இப்படி ஒரு ஆசிரியர் போதுமா? மேலும் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமா? மாலை வேளையில் மாணவர்கள் படிக்க ஏற்பாடு செய்ய முடியுமா? ஒரு வகுப்பில் தேர்வு பெறாவிட்டால், சலுகைகள் தரப்பட முடியாது என்று சொல்லலாமா என்று அரசு பரிசீலனை செய்தால் கட்டாயம் பலன் கிடைக்கும்.

கல்வியமைச்சரவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, சிறந்த மாணவர்களுக்குக் கல்லூரிக் கல்வி வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மைதான். இதை எப்படிப் பிரிக்க முடியும்? 2,700 பள்ளிகளில் 2,000 பள்ளிகள் அரசாங்கத்தால் நடத்தப்படுபவை. ஏ-விங், பி-விங் ஸ்கூல்ஸ இந்தப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் 11-வது வகுப்பு படிப்பை முடித்தும் கூட சாதாரண டெஸ்ட் டியூப்பைப் பார்த்திருப்பார்களாவென்றால் கிடையாது. அதற்கு அந்த மாணவர்களைப் பொறுப்பாக்க முடியாது. அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் பெறக்கூடிய குறைந்த மதிப்பெண்களைக் கொண்டு அவர்கள் அறிவு குறைவானவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் அறிவு குறைவானவர்களாக விளங்குகிறார்களாவென்றால் இல்லை. 230 மார்க் பெற்ற மாணவன் கல்லூரிக்கு வந்த பிறகு முதல் வகுப்பில் தேர்ச்சி பெறக் கூடிய அளவிற்கு வாய்ப்பு கிடைக்கிறது. அந்த அளவிலே கிராமங்களிலிருந்து வரும் மாணவர்கள் குறைந்த மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். ஆகவே அவர்களை அறிவிலும், ஆற்றலிலும் குறைந்தவர்கள் என்று மதிப்பிட முடியாது. மேலும் ரிசர்வேஷன் இத்தனை சதவிதம் என்று ஒதுக்க வேண்டும், பிற்பட்டோருக்கு ஒதுக்க வேண்டும், தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்க வேண்டும் என்று சட்ட திட்டங்கள் இருக்கின்றன. இப்படி சட்ட திட்டங்கள் இருக்கும்போது, சிறந்த மாணவர்களுக்குத்தான் கல்லூரிக் கல்வி வழங்குவது என்றால், எப்படி முடியும்? அது மட்டுமல்ல. உயர் நிலைக் கல்வியானது, 10 ஆண்டா, 11 ஆண்டா என்று கேட்டுப் பரவலாகப் பேசப்படுகிறது. பத்திரிகையில் பார்க்கிறோம். சட்ட மன்ற உறுப்பினர்களிடமே கூட, 10 ஆண்டா, 11 ஆண்டா, கல்வித் திட்டத்தில் மாற்றம் இருக்கிறதா என்று கேட்டால், ஒரு தெளிவான பதிலை நாம் சொல்ல இயலவில்லை. இதை உறுப்பினர்களுக்காவது தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கு இருப்பதனால், ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு இரண்டாவது செமஸ்டரில், 2½ ஆண்டு பூர்த்தி செய்த மருத்துவப் பகுதி





மாணவர்களிலே முதல் வகுப்பில் தேறிய ஒரே பெண் திருச்சியைச் சேர்ந்தவள். அந்தப் பெண்ணுக்குத் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றில் கூட இடம் வழங்கப்படவில்லை. அந்தப் பெண் கடைசியாக பாண்டிச்சேரியிலுள்ள ஜிப்மர் கல்லூரியில் சேர்ந்து முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். இதனால் சிறந்த மாணவர்களுக்கு இங்கு இடம் வழங்கப்படவில்லையோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. சிறந்தவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, சிறந்த மாணவர் என்று அங்கத்தினர் அவர்களுக்கு ஒருவரைப்பற்றித் தெரியும். எனக்கு 100 சிறந்த மாணவர்களைப்பற்றித் தெரியும். குழுவினருக்கு ஆயிரம் சிறந்த மாணவர்களைப்பற்றித் தெரியும். நாமே சிறந்த மாணவர் என்று கருதக் கூடியவர்களிடம், பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக, சில கேள்விகள் கேட்கப்பட்டு, ஆர்வம் முதலியவற்றை மதிப்பிடுகிறார்கள். இப்படி நான்கு இடங்களில் மதிப்பிடுகிறபோது சில வரைமுறைகள் இருக்கின்றன. அதற்குட்பட்டு சிறந்த மாணவர்கள் என்பதற்காக மட்டும் 400 பேர்கள் தான் இடம் பெற முடியும். மிச்சமிருக்கிற 500 இடங்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் பிரிந்து போய்விடும். ஆகவே, இப்படிச் சிறந்தவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்படுகிற இந்த 400 மாணவர்களில் அவர் ஒருவராக நிச்சயமாக இருக்க முடியும் என்று கருத முடியாது. த்ரீ டி, டி பிளஸ் என்று வாங்கியவர்கள் கூட சில பண்டமெண்டல் கேள்விகள் கேட்கிற போது, பதில் சொல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள். கேள்வி கேட்கிறபோது, பதில் சொல்கிற வாய்ப்பைப் பொறுத்து போடப்படுகிற மதிப்பெண்கள் குறைந்து விடலாம். என்.சி.சி. தேர்ச்சி மார்க் மற்றவைகள் காரணமாக 1 மார்க் ½ மார்க் என்று குறையலாம். அட்மிஷனைப் பொறுத்து இதைக் கூர்ந்து கவனிக்கிற நான் ஒன்றைச் சொல்வேன். இந்த மாணவர் எடுக்கப்படவில்லையென்று சொல்லலாம். இதைப்போல 400 மாணவர்கள் தகுதி உடையவர்கள், தகுதி அடிப்படையில் வந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**திரு. கே. எஸ். கணபதி:** நான் குறிப்பிட்டது, இப்படி ஒரு மாணவி, தேர்வுகளிலே மிகச் சிறந்த மாணவியாக முதல் வகுப்பில் தேர்வுபெற்ற ஒரே மாணவியாக இருப்பதால் குறிப்பிட்டேனே தவிர, வேறு இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அவர்கள் ஆசிரியர்கள், அவர்களே தேர்வு நடத்திப் பார்த்தால் தெரியும். ஒருவர் முதல் வகுப்பில் தேரலாம். ஆனால் பர்டிகுலர் சப்ஜெக்டில் மார்க் வைத்து எடுத்துக்கொள்ளவேண்டிய

அவசியம் ஏற்பட்டு, ஸ்போர்ட்ஸ், என்.சி.சி., சோஷல்சர்விஸ் என்று இவைகளுக்கு மார்க் வைத்து, கிரடேஷன் வைத்து, அதற்குப் பின்னால் சில கேள்விகள் கேட்டு, ஜெனரல் நாலட்ஜ், ஆப்டிட்யூட் என்று வைத்து ஒவ்வொன்றுக்கும் 10 மார்க், 7 மார்க், 5 மார்க் என்று வைத்து பங்கிட்டுப் போடுகிறபோது தகுதி உடையவர்கள் என்று நம்மால் கருதப்படுகிற சிலருக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போய்விடுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, நான் இதில் குறையிருக்கிறது, தவறுகள் இருக்கின்றன, நீக்கப்பட வேண்டும் என்று கூறவில்லை. சிறந்த மாணவர்களுக்கு இடம் வழங்க முன்வர வேண்டும் என்று சொல்வதற்காகத் தான் குறிப்பிட்டேன்.

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அதிலும் ஒரு தவறு ஏற்படுகிறது. 6,000 மாணவர்களில் 1,200 பேர், அதாவது 5 பேருக்கு ஒருவர் சிறந்த மாணவர் என்று பொதுவாகக் கணக்கிடப்படுகிறது. இதிலே 400 பேருக்கு மட்டும்தான் சிறப்பு அடிப்படையில் இடம் கிடைக்கிறது. மிச்சம் இருப்பவர்கள் " Except the general pool, either the Backward Community pool, or Scheduled Castes Community pool, is not completely based upon merit or the marks. There are many candidates selected among the 450 students. We cannot expect that all the 450 students who are best are admitted to the course."

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, நான் அதற்காகத் தான் பாண்டிச்சேரியில் உள்ள ஜிப்மர் கல்லூரியில் தேர்வுமுறை உள்ளதுபோல், தமிழ் நாட்டுக் கல்லூரியிலும் நடத்த முடியுமா என்று அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்தால் நல்லது என்று சொல்கிறேன். ஏனென்றால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற முற்போக்கு நாடுகளில்கூட பரீட்சை வைத்து அதில் சிறப்பான மதிப்பெண்கள் பெறுகிறவர்களை அனுமதிக்கும் முறை இருந்து வருகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நானும் 13 ஆண்டு காலம் கல்லூரிப் பேராசிரியாக இருந்தேன். சிண்டிகேட்டிலும் இருந்தேன். சட்டமன்றத்திலும் ஏற்கெனவே உறுப்பினராக இருந்திருக்கிறேன். தேர்வு எழுதி அதில் திறமையாக எண்கள் பெறுகிற மாணவர்கள் மட்டும் புத்திசாலிகள் என்று உலகம் ஒத்துக்கொள்ளாது. ஏனென்றால் தேர்வு எழுதுவது என்பது ஒன்று. அதில் சிலர் திறமை காட்டுகிறார்கள். நேரடி கேள்வி பதில் என்பதில் சில பேர் திறமை காட்டுகிறார்கள். இரண்டிலும், அதாவது பதில் சொல்ல திறமை இல்லாவிட்டாலும், எழுதத் திறமை இல்லாவிட்டாலும்,



ஆப்டிடியூட் என்ற அளவில், குறிப்பிட்ட பகுதியில் அக்கறை காரணமாக சில பேர் திறமை காட்டுகிறார்கள். ஆகவேதான் இன்றைக்குப் பல்வேறு முறைகளை வைத்து ஒன்றுக்கொன்று ஓரளவுக்குத் தகுதி கொடுத்து, அவைகள் இடையே கூட்டல் கழித்தல் வைத்து வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகிறோம்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, மருத்துவப் படிப்பைப் பொறுத்த மட்டிலும், இரண்டாவது செமஸ்டரில் முதல் வகுப்பில் தேற வேண்டுமென்றால், அதற்கான ஆப்டிடியூட் இல்லாமல் நிச்சயம் தேற முடியாது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரியில் இல்லாத செம்ஸ்டர், பி.யூ.சி. வகுப்பில் இருக்கக்கூடிய செமஸ்டர். அது மருத்துவக் கல்லூரிப் படிப்புக்கு நேரடியான தொடர்பு உடையது அல்ல. செமஸ்டர் என்பது " It is training with the course, more touching with the systematic work in the subject " சிஸ்டமேடிக் ஒர்க் பி.யூ.சியில் செய்கிற காரணத்தால் மருத்துவக் கல்லூரியில் தேர்வுபெறுவதற்கு தேர்ச்சியுடையவர்கள் ஆக மாட்டார்கள்.

" It may be more theoretical knowledge with which they may be capable of getting the first mark."

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தேர்வு செய்யப்படும் முறை ஒழுங்காக நடைபெறுகிறது, தகுதியான மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது என்று உறுதிமொழி கொடுப்பதன் பேரில் நான் மேற்கொண்டு செல்கிறேன்.

தமிழ்நாட்டு அரசு கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவது நிலைத் தமிழாசிரியர், முதல் நிலைத் தமிழாசிரியர் என்று இரண்டு வேறுபாடுகளை வைத்திருக்கிறது. அது பாராட்டுக்குரியது. அந்த அடிப்படையிலே, கல்வித் தகுதியைக் கொண்டே, ஆசிரியர்கள் அனைவருக்கும் நிலை வழங்கப்பட வேண்டும், பதவி அளிக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்ரென்டிஸ் டீச்சர் என்று ஒரு திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்டது. அந்த அப்ரென்டிஸ் டீச்சர் ஸ்கீமில், முழுமையாக, முழு ஆசிரியராகப் பதவி பெறாத சில பேர் இருந்து வருகிறார்கள். அவர்களில் கவர்மென்ட் B-விங் ஸ்கூலில் பணியாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். 1—4—1970-க்கு முன் ஆசிரியராக B-விங் ஸ்கூலில் பணியாற்றுகிறவர்கள் 'ஏ' விங்கைச் சார்ந்தவர்கள் என்று உத்தரவு இருக்கிறது. அந்த அடிப்படை

யில் இவர்கள் ஏற்கெனவே அப்ரெண்டிஸ் டீச்சராகச் சேர்ந்திருந்தபோதிலும், 3—3—1973-க்கு முன் அவர்களுடைய பதவி வரைமுறை செய்யப்படாத காரணத்தால், அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அவர்களை அப்படிச் செய்யாமல், 3,157 பட்டதாரி ஆசிரியர்களையும் வரைமுறைப்படுத்தியது போலவே, இந்த அப்ரென்டிஸ் ஆசிரியர்களையும் வரைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது போலவே, அரசினுடைய இருமொழிக் கொள்கையால் வேலையில் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய, மொழி ஆசிரியர்கள், இந்தி-சமஸ்கிருத ஆசிரியர்கள் பலர் இருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பல சங்கடங்கள் உண்டு. அவைகளையும் தனியாகக் கவனித்து, அந்த மொழி ஆசிரியர்களின் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். அதை இந்த அரசு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இடைநிலை ஆசிரியர்கள் ஊர்வலமாகச் சென்று ஆங்காங்கு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியாளரிடம் ஒரு மகஜர் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அவர்கள் வேண்டுவதெல்லாம், 10 ஆண்டு பணிக்கால அடிப்படையிலே, பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வுநிலை வழங்கப்பட்டதுபோல் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது. இதனால் அரசுக்கு அதிகமான செலவு ஒன்றும் வந்துவிடாது. ஏனென்றால் பெரும்பான்மையோர் வாங்கும் ஊதியம் ரூ. 235, ரூ. 240, ரூ. 245 ஆக உள்ளது. அவர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டால், அவர்கள் 250 ரூபாயில் வைக்கப்படுவார்கள். எனவே பச்சாத்தாபம் வைத்து, அவர்களுடைய நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கும் 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்க வேண்டும். இந்த அவையிலே கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு, அதாவது 3—3—1973 அன்று, பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்குவது என்ற அடிப்படையில், அனைவருக்கும் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையை வைத்து இந்த ஆசிரியர்களுக்கும் பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஓய்வு பெற்றவர்களுடைய நிலையைப்பற்றிக் கூற விரும்புகிறேன். நான் இன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது, ஓய்வு பெற்றவர்களுடைய நிலை சரியாகக் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது என்ற காரணத்தால்தான். 1966-க்கு முன்னதாக தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் ஓய்வு பெற்றால், அவர்களுடைய பென்ஷன்,





ஓய்வு ஊதியம் மிகக் குறைவு. ஏன் இன்னும் சொல்லப்போனால், அண்மைக் காலம் வரை கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் ஓய்வு பெற்றால், அவருக்குத் தரப்படும் ஓய்வூதியம் 75 ரூபாய். ஒரு கல்லூரி முதல்வர் ஓய்வு பெற்றால், அவர் பெறக்கூடிய ஓய்வூதியம் 100 ரூபாய். அப்படியிருந்ததை, இந்த அரசு மாற்றி அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 37½ சதவிகிதம் கொடுப்பது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்ற அதே நேரத்திலே, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஒரு சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெறும் குறைந்தபட்ச ஓய்வூதியமானது 55 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதால், எல்லோரும் 55 ரூபாய் பெறுகிறார்கள். அதைப் பரிசீலித்து அவர்களுக்கும் இந்தப் புதிய விகிதத்தில், அடிப்படை ஊதியத்தில் துவக்க நிலையில் 37½ சதவிகிதம் வழங்குவது நியாயமானது. ஆயுட்காலம் முழுவதும் உழைத்து ஓய்வு பெற்றிருக்கும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

V2ıı,32'N74

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கொண்டு வந்த கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

N74-115

ஆளுநர் அவர்கள் உரையில் இந்த ஆட்சியில் நடைபெற்றிருக்கக் கூடிய சாதனைகள்; மின்சார இலாக்கா, விவசாய இலாக்கா போன்றவற்றில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிற திட்டங்கள் எல்லாவற்றையும் ஆதரிக்கிறேன். இந்தத் தமிழகத்தில் ஒரு அமைப்பாக இயங்கி வருகின்ற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி, அவைகளின் தேவைகள் இவற்றைப்பற்றியெல்லாம் ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்படாமலிருப்பது கண்டு வருந்துகிறேன். ஏறத்தாழ 374 ஊராட்சி ஒன்றியங்களும், 12,500 ஊராட்சி மன்றங்களும் ஒரு அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதை இந்த அரசு அறியும். இந்த ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் இன்னும் அதிகமாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். கிராம மட்டத்தில் ஊராட்சி மன்றங்கள் பல பொறுப்புக்களை ஏற்றிருக்கின்றன. ஆரம்பக் கல்வித் திட்டம், குடிநீர் வசதி, இணைப்புச் சாலைவசதி, சுகாதாரம் போன்ற பொறுப்புகளை ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் ஏற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அவற்றின் நிதி

வசதி எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், அரசாங்கத்திடமிருந்து மான்யத்தை எதிர்பார்த்தே, ஒவ்வொரு ஆண்டும் அவைகள் செயல்பட வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 5-20)

இந்த ஊராட்சி மன்றங்களின் நிதி வசதிகளைப் பெருக்குவது குறித்து நாம் யோசிக்க வேண்டும். அவைகள் சுயமாகச் செயல்பட வேண்டுமானால், அந்தந்த ஊராட்சி மன்றப் பகுதிகளில் உள்ள கிராமங்களிலிருந்து கிடைக்கக் கூடிய நிதி வசதிகளை அவைகள் பெருக்கிக்கொள்ள வேண்டும். இரண்டரை ரூபாய் சர்சார்ஜ் விதிப்பதைக் காட்டிலும், நிலத் தீர்வையையே ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுத்துவிடலாம். ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவுக்கு வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டுள்ளது இந்தத் தமிழக அரசாங்கம். அப்படிப் பார்க்கின்றபோது, நிலத் தீர்வையின் மூலம் இந்த அரசுக்குக் கிடைக்கக்கூடியது—நான் சுமாராகச் சொல்கிறேன்—எட்டு கோடியிலிருந்து பத்து கோடி ரூபாய் தான் என்று கருதுகிறேன். அந்த எட்டு அல்லது பத்து கோடி ரூபாயை இழப்பது ஒரு பெரிய நஷ்டம் இல்லை. ஊராட்சி மன்றங்களுக்கே அந்த நிலத் தீர்வையைக் கொடுத்துவிட்டால், அவைகள் நல்ல முறையில் செயல்படும். அந்த வரியைக் கொடுக்கின்ற மக்கள் அந்த ஊர் நிர்வாகத்திற்கும் கிராமத்தின் வளர்ச்சிக்கும் கொடுக்கிறோம் என்ற திருப்தியைப் பெறுவதோடு அந்த மன்றங்களும் சுயமாக வளர்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் இருக்கின்ற கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் எல்லாம் நல்ல வருமானம் கொடுக்கின்றவை. அவைகள் மூலமாக நிரந்தரமாக ஒவ்வொரு ஆண்டும் மீன், பாசி வருமானம் கிடைக்கின்றது. அந்த மீன், பாசி விவகாரம் எந்த அளவுக்கு சச்சரவு உண்டாக்கியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த மீன், பாசி பிடிப்பிற்கான உரிமைக்கும் அதிலே மரியாதை தேடுவதிலும் பெரும் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. மதுரை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இந்த மீன், பாசி பிடிப்பு உரிமை விஷயத்தைக் குறித்து தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தவிர்ப்பதோடு மட்டுமல்லாமல், ஊராட்சி மன்றங்களுக்கு நிரந்தரமான வருவாய் வருவதற்கு—பல இலட்ச ரூபாய் வருமானம் வருவதற்கு—உதவியாக இருக்கும் என்பதால் அந்த மீன் பிடிக்கும் உரிமையையும், ஏலம் விடும் பாத்தியதையையும் ஊராட்சி மன்றங்களுக்கே கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். மற்றொரு தவறான காரியம் என்னவென்றால், எந்த விதமான மீனவர்களும் இல்லாமல் கூட்டுறவு மீன் பிடி சங்கம் என்று அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். மீன் பிடிக்கின்றவர்கள், மீனவர்கள் என்பவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.



அவர்கள் சமுத்திரக் கரை ஓரம் வாழ்ந்துகொண்டிருக்கின்றவர்கள். மதுரை மாவட்ட கூட்டுறவுச் சங்கம்—பெடரேஷனுடைய தலைவராக இருப்பவர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர், முற்போக்கான இனத்தைச் சேர்ந்தவர், திரு. லட்சுமிபதி ராஜா. நீண்டகாலமாகவே அவர்தான் தலைவராக இருந்து வருகிறார். அதிலே அங்கத்தினர்கள் எத்தனை பேர், யார், யார் அங்கத்தினர் என்ற விவரம் தெரியவில்லை. அதற்கு இந்த இலாகாவும் உதவியாக இருக்கிறது. என்ன காரணத்தினால் அவ்வாறு உதவியாக இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அவருக்கு இலாகா உதவியாக இருந்துகொண்டிருக்கிறது, பல லட்ச ரூபாய் வருமானமுள்ளதாக உள்ள அதிலே ஒரு உண்மையான மீனவர்கூட இடம் பெறுமளவுக்கு ஒதுக்கீடு செய்யவில்லை. வளர்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மீன் கடைகள் வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், அதை நடத்துகிறார்கள். ஒரு போலியான சங்கத்தை வைத்துக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, அதை அரசு பரிசீலனை செய்து, இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் பகிரங்க ஏலம் விடலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது.

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** தலைவர் அவர்களே, அம்மாதிரி ஆணை பிறப்பித்ததற்கு, நான் எனது நன்றியையும் வணக்கத்தையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த வண்டியூர் ஊராட்சியைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் சென்ற ஆண்டு 31 ஆயிரம் ரூபாய்க்கு விடப்பட்டது, இன்றையதினம் 50 ஆயிரம் வரையில் ஏலம் போகும் என்று தெரிகிறது. அதற்கு கலெக்டர் அவர்கள் இந்த மாதம் 21-ஆம் தேதி ஏலம் விட நாள் குறிப்பிட்டிருந்தார்கள். அதைத் தடை செய்து அரசாங்கத்திலிருந்து ஒரு ஆணை வந்திருக்கிறது என்று தெரிகிறது. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்த ஊராட்சி மன்றப் பகுதிகளில் உள்ள கல், குவாரி மற்றும் நெடுஞ்சாலைகளுக்குத் தேவைப்படுகின்ற பொருள்கள் யாவும் வருமானம் கொடுக்கக் கூடியவை. அவற்றையும் மேற்கூறியவாறு பகிரங்க ஏலம் விடுவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம். ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் மச்சக் குத்தகை விடும் அதிகாரம் சம்பந்தமாக ஒரு ஆணை பிறப்பித்திருப்பதாகக் கூறினார்கள். அது எப்படி, என்ன முறை என்பதை சற்று விளக்கினால் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, பகிரங்கமாக அந்தக் குத்தகைகளை விடுவதற்கு, தண்டோரா மூலமும், விளம்பரம் மூலமும் ஏற்பாடு செய்யப்பட்டு யார் வேண்டுமானாலும் பங்கு எடுத்துக்கொண்டு ஏலம் கேட்கலாம் என்றும், அதிக ஏலத்தொகை கேட்கின்றவர்களுக்குக் கொடுக்குமளவுக்குச் செய்யப்பட்டுள்ளது. எல்லோரும் ஒற்றுமையாக இருந்து குறைவாகக் கேட்டால், அதற்கும் என்ன செய்யலாம் என்று பரிசீலனை செய்யலாம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவர் அவர்களே, அந்த முறை இப்பொழுது இருப்பதுதான். அது இப்படி இருக்க வேண்டுமானால், ஏலத்திற்கு விடுகின்ற அதிகாரம் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் வருமானம் நல்ல முறையில் வந்து நிச்சயமாக அவைகளுக்கு வந்து சேரும் என்று கூற முடியும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முறை உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் குறிப்பிட்டது. கூட்டுறவுச் சங்கத்தார் அல்லது மற்ற சங்கத்தார் கேட்டால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இருந்ததை மாற்றி, அவர்களும் ஏலம் கேட்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்தது மாற்றப்பட்டிருக்கிறது.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவர் அவர்களே, அடுத்தபடியாக 5,000 ஜனத்தொகைக்கு அதிகமாக இருந்தால், 20 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வந்தால், அந்த ஊராட்சி மன்றங்களை எல்லாம் பேரூராட்சி மன்றங்களாக உயர்த்தலாம் என்ற ஒரு விதி இருப்பதை வைத்துக்கொண்டு, பல ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சி மன்றங்களாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. பேரூராட்சி மன்றங்களாக மாற்றப்பட்டவுடனேயே, அவைகளுக்குள்ள சில வசதிகளுக்கிணங்க நிர்வாக அதிகாரி, எழுத்தர்கள், இன்னும் சுகாதார சிப்பந்திகள் போன்றவர்கள் எல்லாம், வைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதன் காரணமாக நிர்வாகச் செலவு அதிகமாகிறது. அவ்வாறு 20,000 அல்லது 25,000 ரூபாய் வருமானம் வருகின்ற ஊராட்சி மன்றங்கள் எல்லாம் அந்தத் தொகையை அரசாங்கச் சிப்பந்திகளுக்கும் மற்ற சுகாதார சிப்பந்திகளுக்கும் செலவு செய்து விடுகின்றபடியால், அந்த ஊராட்சி மன்றத்தினுடைய, அந்த கிராமத்தினுடைய வளர்ச்சிப் பணிகள் செய்யப்படாமல் நின்று விடுகின்றன. இன்னொரு நஷ்டம் என்ன என்றால், வீட்டு வரி விதிப்பதில் ஈட்டு மான்யமாக சம பங்கு தொகை அரசாங்கம் கொடுக்கிறது. பேரூராட்சி மன்றங்களாக உயர்த்தப்பட்டவுடனேயே அந்த





மான்யம் நிறுத்தப்படுகிறது. ஆகையினால் இரண்டு விதத்திலும் நஷ்டம் ஏற்படுகிறது. பல ஊராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரிகளைப் போட்டால், அவர்கள் வந்து பணியில் சேராமல் போகும் சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்களுக்குச் சம்பளமே கிடைக்காது என்ற அச்சம் இருக்கிறது. குறைந்த பட்சம் ஒரு லட்ச ரூபாயாவது வருமானம் வந்தால்தான், அதை பேரூராட்சி மன்றமாக உயர்த்த வேண்டும் என்ற முறையில் தீர்மானித்து அதற்குக் குறைந்த வருமானமுள்ள பேரூராட்சி மன்றங்களை எல்லாம் ஊராட்சி மன்றங்களாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள சில விவசாயப் பணிகளை அந்த ஊராட்சி ஒன்றியங்களே எடுத்துக்கொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழக அரசின் முற்போக்கான கொள்கையின் பலனாக, விவசாயிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதன் பலனாக, தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளதோடு, வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யுமளவுக்கு உற்பத்தி செய்து வருகிறது. அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறார்கள். தமிழ் நாட்டு விவசாயிகள் மற்ற மாநில விவசாயிகளுக்குப் பின்னணியில் இல்லாமல் பாதுகாத்து, அந்த அளவுக்கு வசதி செய்து கொடுத்து வருகிறது நமது அரசாங்கம். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று ஒரு குறிப்பிட்ட அளவு நிலங்களை வைத்துக்கொண்டு, இவ்வளவு டார்கெட் என்று வைத்துக்கொண்டு, இத்தனை ஆயிரம் ஏக்கரில் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, கருணை, காஞ்சி போன்ற நெல் வகைகள் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். அதன் பலனாக உற்பத்தியை அதிகப்படுத்தலாம் என்பது நோக்கம். அப்பொழுது அந்த விவசாயிகள் எந்த அளவுக்கு ரசாயன உரங்கள் நிலங்களுக்குப் போட வேண்டும் என்று பிரசாரமும் செய்கின்றார்கள். அதையெல்லாம் நம்பி விவசாயிகள் அந்த நெல் வகைகளை விவசாயம் செய்து விடுகிறார்கள். அதன் பிறகு ரசாயன உரம் கொடுக்க வேண்டிய நிலைமை வருகின்றபோது, ரசாயன உரங்கள் கிடைப்பதில்லை. ரசாயன உரங்களை கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுப்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறை விதிகளில் ஒரு விதி இருக்கிறது. அதன்படி விவசாயிகள் கடன் வாங்கினால்தான் ரசாயன உரங்கள் பெற முடியும் என்று சொல்லப்படுகிறது. ரூபாய் 10,000 ஒரு விவசாயி கடன் வாங்கினால், ரூபாய் 5,000-க்கு உரம், பூச்சி மருந்து முதலியவை வாங்கிக்கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. கடன் வாங்கினால்தான் விவசாயிக்கு அந்த உரிமை என்று இருக்கும்போது, கடன் வாங்க வசதி

இல்லாமல் இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் குத்தகைக்கு விவசாயம் செய்கின்றவர்கள் ரசாயன உரங்கள் கூட்டுறவுத்துறை மூலம் பெற முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. கூட்டுறவுத் துறையில் அவர்களுடைய அங்கத்தினர்களுக்கும் கடன் வாங்குகின்றவர்களுக்கும்தான் அந்த உரங்கள் பெறுவதற்கு முன்னுரிமை என்று சொல்வதால் பலர் கடன் வாங்குகிறார்கள். ஆகவே இந்தக் கடன் கொடுப்பதால் இன்னொரு தவறும் நடக்கிறது. 10 ஆயிரம்

(பிற்பகல் 5-30)

ரூபாய் கடன் வாங்குபவர்கள், அதில் 5,000 ரூபாய்க்கு உரத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். 5,000 ரூபாய்க்கான உரம் தேவையில்லாததால், கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். கடன் பேரில் வாங்கும் உரம்தான் கள்ள மார்க்கெட்டிற்கு வருகிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். விவசாயம் செய்வதற்கு கடன் வாங்குகிறாரா; கடன் வாங்காமல் இருக்கிறாரா என்பதைப் பார்க்காமல், இந்த விநியோக முறையை அமைக்க வேண்டும். கடன் வாங்காத விவசாயிகள் பாவம் செய்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இந்த முறையைப்பற்றி நமது அரசு பரிசீலனை செய்யவேண்டும். கடன் பெறாதவர்களுக்குத் தனியாகக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, 60 சதவிகிதம் கடன் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கடன் வாங்காதவர்களுக்கு 40 சதவிகிதம் கொடுக்க வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. அ. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை நான்கூட அனுபவித்தேன் என்ற முறையிலே சொல்கிறேன். ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே கடன் வாங்காத விவசாயிகளுக்கு, கார்டு முறையிலே விநியோகம் செய்வது என்று கார்டுகள் கொடுத்திருக்கிறோம். அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் பெயரை அடித்துக் கொடுத்திருக்கிறோம். எங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் சென்று, உரம் போடுங்கள் என்று விவசாயிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக கார்டையும் கொடுத்துவிடுகிறோம். அவர்கள் கூட்டுறவு இலாகாவினரிடம் சென்று உரம் கேட்டால், 'அந்தக் கார்டு கொடுத்தவர்களிடமே சென்று கேளுங்கள்' என்று அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சரவர்களுக்கு இதைப் பற்றி நேரடியாகத் தெரியும். நானும் சொல்லியிருக்கிறேன். அந்த முறை இப்போது நடைபெறுகிறது. உரம் இல்லை, பற்றாக்குறை என்று காரணம் சொல்லப்படுகிறது. இருந்தாலும், அவர்களுக்கும் உத்தரவாதமாக, கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு இப்போது விவசாய உற்பத்தி அதிகமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. இப்போது விலைவாசிகள் ஏறிவிட்டது.





ஏறிவிட்டது என்று எல்லா அங்கத்தினர்களும், அரசியல் கட்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். வளருகின்ற பொருளாதாரச் சமுதாய அமைப்பில், ஓரளவுக்கு விலைவாசிகள் ஏறத்தான் செய்யும். அந்த விலைவாசிகள் ஏறும் போது, எல்லாப் பொருள்களுடைய விலையும், மதிப்பீடுகளும் சமமான அளவில் இருக்க வேண்டும். விலைவாசிகள் கூடும்போது வாங்குபவர்களையோ அல்லது உற்பத்தி செய்பவர்களையோ பாதிக்காமல் இருக்க வேண்டும். ஆனால் நெல் உற்பத்தி செய்கின்றவர்களின் நிலைமைகளைப் பார்த்தால், அவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். நெல் உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கிறது. விவசாயி அதை மார்க்கெட்டுக்குக் கொண்டுபோனால், அவன் அதன் விலையை நிர்ணயம் செய்ய முடியாது. அது நெல் கொண்டுபோகும் விவசாயிகளுடைய உரிமையில்லை. அங்கு நான்கு வியாபாரிகள் கூடி, இது நல்ல நெல் தானா என்று பார்த்து, விலை நிர்ணயிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மதுரை மார்க்கெட்டை எடுத்துக்கொண்டால் 65 கிலோ கொண்ட மூட்டை 50 ரூபாய். விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் விலை குறைவாகவும், அவர்கள் வாங்கக்கூடிய எல்லாவிதமான பொருள்களும் அதிகமான விலையாகவும் இருக்கிறது. விவசாயத்தை ஒட்டிய சாமான்களே அதிகமான விலையாக இருக்கிறது. ஒரு மூட்டை பருத்தி விதை வாங்க வேண்டுமென்று சொன்னால், 100 ரூபாய். ஒரு மூட்டை புண்ணாக்கு 130 ரூபாய். இந்த மாதிரி ஒரு மூட்டை நெல்லுக்கு ஒரு மூட்டை பருத்தி விதை வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு மூட்டை நெல் கொடுத்தால், ஒரு மூட்டை புண்ணாக்கு வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு, அந்தந்தக் காலங்களில் இருக்கக்கூடிய மற்றப் பொருள்களின் விலை மதிப்புக்குத் தகுந்தபடி விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த ஆண்டு இரசாயன உரம் என்ன விலைக்கு வாங்கியிருக்கிறோம் என்று அமைச்சரவர்களுக்குத் தெரியும். 150 ரூபாய் விலை கொடுத்து, வெளி மார்க்கெட்டில் வாங்கி, வயலுக்குப் போட்டிருக்கிறார்கள். ஐ.ஆர். 8 போன்ற அதிகமான விவசாயம் செய்யக்கூடிய நெல்லுக்கு இந்த இரசாயன உரம் போடாவிட்டால், நல்ல விளைச்சலைப் பெற முடியாது. எனவே விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல மார்க்கெட் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையில் நகரங்களில்— சென்னை நகரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக 15,470 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்றும், மற்ற நகரங்களில் 5000 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போதிருக்கும் நகரச் சூழ்நிலையில், கிராம மக்கள் அதிகமாகக் குடியேறுகிறார்கள்.

கிராமச் சூழ்நிலைகள் மாறி, நகர அமைப்பில் மிகவும் நெருக்கடி ஏற்படுகிற தென்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது, மேலும் மேலும் வசதிகளையெல்லாம் நகரங்களைச் சுற்றியே நாம் பெருக்கிக்கொண்டு போனால், இன்னும் கிராமத்தில் உள்ளவர்களெல்லாம் நகரத்திற்கு வரத்தான் பிரியப்படு வார்கள். எனவே, இந்த ஆண்டு குடிசை மாற்று வாரியம் போன்ற ஏதாவது அமைப்பின் பெயரில், கிராம மக்களுக்கு, நல்ல வாழ்க்கைக்குரிய வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள்கூட பேசினார்கள். நிதிநிலை அறிக்கையில் 100 கோடிக்கு அதிகமாக கல்விக்கு ஒதுக்கியிருக்கிறோம்; அதைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது ஊராட்சி ஒன்றி யங்கள் ஆரம்பக் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. கல்வி முறையை மாற்ற வேண்டும்; கல்வித் திட்ட அமைப்பை மாற்ற வேண்டுமென்று நமது கல்வி அமைச்சரவர்கள் அடிக்கடி அவர்களுடைய உரையிலே சொல்லி வருகிறார்கள். நமது மேதகு ஆளுநர் அவர்கள்கூட, இந்த உரை நிகழ்த்தியதற் குப் பிறகு, கோவையில் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். ‘மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியே வரும்போது, சுயமாக, தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குரிய கல்வியைக் கொடுக்க வேண்டும்’ என்று சொன்னார்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, 25 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறோம். இதை ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய அமைச்சர்களும், மத்திய அமைச்சர் களும் சொல்லி வருகிறார்கள். இதை அமல் நடத்தியிருக்கிறோமா என்றால், அதற்கான ஒரு முன்னேற்றமோ, ஒரு அமைப்போ, திட்டமோ இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் வெளிநாடு சென்றிருந்தேன் என்று சொன்னார்கள். அங்குள்ள கல்வி அமைப்பைப் பற்றியும், மாணவர்களைப் பற்றியும் சொன்னார்கள். குறிப்பாக காலை 7 மணியி லிருந்து மதியம் 12 மணி அல்லது 1 மணி வரை குழந்தைகளுடைய, மாணவர் களுடைய அறிவு பிரகாசமாக, சுறுசுறுப்பாக இருக்கிறது; இந்தச் சந்தர்ப் பத்தில் கல்வியைப் போதித்தால், அவர்கள் தரமான கல்வியைப் பெற முடியும்; பகுதி நேரத்தில் அவர்களுக்கு விருப்பமான தொழில்களைக் கற்று, வாழ்க்கை வசதிக்குத் தகுந்த முறையைக் கையாளலாம் என்று சொன்னார்கள். அதை ஏன் அமல்படுத்தவில்லை என்று தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இங்கே பையன் 8 மணிக்குத்தான் எழுந் திருக்கிறான்.





**திரு. அ. அய்யணன் அம்பலம்:** அந்த நாடுகள் குளிர்ப் பிரதேசங்களாக இருக்கின்றன. இங்கே சம சீதோஷ்ண நிலை இருப்பதால், 5 மணிக்குக்கூட எழுந்திருக்கலாம். நான் 4 அல்லது 5 மணிக்கே எழுந்து விடுவேன். அந்த முறையை அமல்படுத்துவதில், இயற்கைச் சூழ்நிலைகள் ஒத்து வருகின்றன. அப்படி இருக்கும்போது, அதில் ஆசிரியர்கள்தான் ஒத்துழைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். கல்வியைப் போதிப்பதற்கும், அரசாங்கத்தினுடைய திட்டத்தை அமல் நடத்துவதற்கும் ஆசிரியர்கள் இருக்கிறார்களே தவிர, அவர் களாக கல்வியை வைத்துக்கொள்ளவில்லை. இதையும் நமது அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்று சொன்னார்கள். அதைப்பற்றி நானும் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் இருக்கிறவன் என்ற முறையிலே சொல்

(பிற்பகல் 5-40)

லாமல் இருக்க முடியாது. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் ஆசிரி யர்களையெல்லாம் கொடுமைப்படுத்துவதாக நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷ னுடைய அறிக்கையிலே இருப்பதாகவும், அதற்காக அவர் நன்றியும் கூறியிருக் கின்றார்கள். அதற்குப் பின்னர் ஏதோ பத்திரிகையில் ஒரு ஜில்லா அமைப் பிலே ஆசிரியர்களுடைய மாற்றங்களைச் செய்வதாக ஒரு அறிக்கை வந்த தாகச் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்களிடம் நேரில் கண்டு கேட்ட தாகவும் சொன்னார்கள். அப்படிக் கேட்கும்போது, “அந்த அளவில் இல்லை, ஜில்லா அமைப்பில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவிற்கு உத்தியோகங்கள், போடக்கூடிய தகுதியைக் கொடுத்துள்ள ஒரு நிர்வாக அமைப்புத்தானே யொழிய வேறல்ல” என்று அவரிடம் அமைச்சர் சொன்னதாகவும் கூறி அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்களை என்ன கொடுமைப்படுத்துகின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இப்போது நம்முடைய கல்வித் திட்டங்களையெல்லாம் பார்க்கும்போது, மிகுந்த மன வருத்தமாக இருக்கிறது. நான் மனம் நொந்துதான் சொல்கின்றேன். இந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய கல்விப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டால், “நாம் சரியான கல்வியைப் போதிக்க முடியவில்லையே” என்ற மனக்குறையினின்றும், அந்தப் பாவத்திலிருந்தும் இந்த ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் விடுபடும் என்ற எண்ணத்தை, நான் தேசிய உணர்வோடு வெளிப் படுத்த விரும்புகிறேன். ஏனென்றால், இந்த தேசத்திலே வளர வேண்டிய இளம் சக்திகள், தேசத்தின் செல்வங்கள் இவைகளுக்காகச் சொல்கின்றேன். ஆரம்பக் கல்வி கிராமத்திலேயிருந்துதான் வளருகின்றது. அந்தக் கல்வி பாழடிக்கப்பட்டுவிடக்கூடாதே என்பதுதான் என்னுடைய நோக்கம். ஆகவே

அரசாங்கம் நேரடியாக இன்னும் நல்ல சேவையைச் செய்வதாக இருந்தால், அதை நான் கூட வரவேற்கிறேன். உதாரணத்திற்காக இப்போது ஒன்று சொல்கின்றேன். இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களுக்கு கல்வி போதிப்பு வேலையைக் காட்டிலும் அவர்களுடைய சங்க அமைப்பு வேலைகளில்தான் கவனம் இருக்கின்றது. நேற்றுக்கூட ஒரு பெரிய விவாதம் நடந்தது. அதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் தேர்தலிலே தன்னுடைய அபேட்சகர்களை நிறுத்தி, அதை பத்திரிகைகள் மூலமும் விளம்பரப்படுத்தி, ரேடியோவிலேயும் சொல்லி, தேர்தல் வேலைகளைச் செய்வதைப்பற்றி அவையில் பிரச்சினை வந்தது. இப்படி பட்டதாரி ஆசிரியர்களும், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும் சில சலுகைகளுக்காக தேர்தலில் தான் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றார்களே ஒழிய, கல்வியைப் போதிக்க முடிவதில்லை. ஒரு 5-வது வகுப்பு பையனை, என்னுடைய மகனைப் பரிட்சித்தால்கூட தெரிகிறது—அவனுக்கு கல்வியில் தரம் இல்லை. எனக்கு ரொம்ப மன வருத்தமாக இருக்கிறது.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஆசிரியர்கள் போதிக்கும் கல்வியிலே அவர்களுக்கே நம்பிக்கையில்லாதிருக்கின்றார்கள். அதனாலேதான் அவர்களுடைய குழந்தைகளைக்கூட அவர்கள் வேலை செய்யக் கூடிய பள்ளியிலே படிக்க வைப்பதில்லை. அவர்களுடைய குழந்தைகளைத் தனியார் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில்தான் படிக்க வைக்கிறார்கள். இது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைக் காட்டிலும், தனியார் நிர்வாகத்தில் செயல்படக்கூடிய பள்ளிகளில் கட்டுப்பாடும், கல்வியின் தரமும் சிறப்பாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அந்த அளவில் அதிகமான ஆசிரியர்களின் குழந்தைகள் தனியார் பள்ளிகளிலே படிக்கிறார்கள். இதை நான் நிரூபிக்க முடியும். இது ஒரு எடுத்துக்காட்டுதான். அவர்கள் சொல்லிக் கொடுக்கின்ற பள்ளியிலேயே படிக்க வைப்பதில்லை. கல்வியைப் பொறுத்த வரையில் நமது ஊராட்சி ஒன்றியங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள், இதிலே அரசியல் பார்க்காமல், இது 1 லட்சம் 1½ லட்சம் ஆசிரியர்களுடைய பிரச்சினையல்ல, இந்த நாட்டில் எதிர்காலத்தில் வளரக்கூடிய இளம் சந்ததிகளுடைய பிரச்சினைகள் இங்கு தோன்றியிருக்கின்றன என்று எண்ண வேண்டும். ஒரு லட்சம் ஆசிரியர்கள் பாதிக்கப்பட வேண்டும் என்பதல்ல என் எண்ணம். ஆசிரியர்களுக்கு, எல்லாவித வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுப்பது, சலுகைகள் கொடுப்பதைப்பற்றி, எனக்கு எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இல்லை. கல்வியின் தரம் நமது இளைய செல்வங்களுக்கு நன்றாக இருக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.





பேரூராட்சி மன்றங்களில் எல்லாவிதமான அமைப்புகளும் வேண்டும் என்கின்றார்கள். கல்வித் துறை வாரியம் ஒன்றும் வேண்டும் என்கின்றார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகம் இருப்பதால், அங்கே ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் இருப்பதால், அங்குள்ள விவசாய இலாக்காவினர் அவர்கள் செய்யக் கூடிய வேலையைக் கண்காணிக்க முடியவில்லை என்பதற்காக, அவர்களும் இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை விட்டுவிட்டு, அவர்களுடைய இலாக்காகளுக்கே போய்விடுகிறோம் என்று சொல்கின்றார்கள். இந்த நிலைமையையெல்லாம் பார்க்கும்போது, ஊராட்சி ஒன்றியங்கள் வரவர செயல்படாத நிலைமை வரும்போல் தெரிகிறது. குறிப்பாக ஒவ்வொன்றுக்கும் ஒரு வாரியம் வைக்கின்றார்கள். இப்போது பேரூராட்சி மன்றங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக, குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி அமல்படுத்துகிறார்கள். ரூ. 10 லட்சம், 20 லட்சம் அளவில் பேரூராட்சி மன்றங்களுக்குச் செலவு செய்கின்றார்கள். நிர்வாகச் செலவுகள் செய்கின்றார்கள். இந்த நிர்வாகச் செலவுகள் இதனால் அதிகமாக ஆகின்றன. கடன் வாங்கிக் கொடுக்கும்போது, இந்தக் கடனை இந்தப் பேரூராட்சி மன்றங்கள் கட்ட முடியுமா, அதற்கு வருமானம் இருக்கிறதா என்பதை எல்லாம் பார்க்காமல், அவர்கள் திட்டத்திற்காக நேரடியாகப் பொறுப்பேற்று சர்வே பண்ணும் போது நிர்வாகச் செலவுகள் எல்லாம் அதிகம் ஆகின்றது. ஆகவே அரசாங்கம் இனிமேல் எந்தத் திட்டத்தை அமல்படுத்துவதாக இருந்தாலும், அரசாங்கம் மானியங்கள், பணம் கொடுப்பதாக இருந்தாலும், அதை ஊராட்சி ஒன்றியங்களுக்கே நேரடியாகக் கொடுத்தால், அதிகமான செலவையும், நிர்வாகப் பளுவையும் குறைக்க முடியும் என்ற என் கருத்தைச் சொல்லிக்கொள்கின்றேன். நீண்ட காலமாக ஊராட்சி ஒன்றியங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள், அவைகளின் நிர்வாகங்கள் எல்லாம் ஒரு தனியான இலாக்கா அந்தஸ்துடன் செயல்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஊராட்சி ஒன்றியங்களின் அமைச்சர் அவர்கள் கூட இந்த ஆண்டு பொங்கல் பரிசாக அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் பல நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக நடைமுறைப்படுத்தப் பட முடியவில்லை. என்றாலும் அதையெல்லாம் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னை இந்த அவையில் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

திரு. ஜார்ஜ் கோமகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையினை வரவேற்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்றுப் பேசுகின்ற ஒரு **அருமையான** வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மெத்த பெருமையடைகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் அவருடைய உரைத் துவக்கத்திலேயே, நம்முடைய திராவிடத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பற்றி ஆழ்ந்த வருத்தத்தோடு குறிப்பிட்டிருப்பது நம்மையெல்லாம் துக்கத்திலே ஆழ்த்துகின்றது. இந்த நாட்டினுடைய, சுய மரியாதையினுடைய விடிவெள்ளியாக, இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்டு அமுக்கப்பட்டு, நசுக்கப்பட்டுக் கிடக்கிற சமுதாயத்திற்குக் கலங்கரை விளக்காக, இந்த நாட்டிலே நீண்ட நெடுங் காலமாக வாழ முடியாது தவித்துக்கொண்டிருக்கின்ற சமுதாய மக்கள் எல்லாம் வாழவேண்டுமென்பதற்கு ஒளியாக இருந்த, தந்தை பெரியார் அவர்கள் மறைவெய்தியதைக் குறித்து ஆளுநர் அவர்கள் தனது உரையிலே துவக்கத்திலேயே குறிப்பிட்டிருப்பது மிகமிக சாலப் பொருத்தமாக இருக்கின்றது. காரணம், பெரியார் அவர்கள் தமிழ் நாட்டிற்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு விடுதலை வீர உணர்ச்சியை உண்டாக்கித் தந்தவர்கள். அதை நிச்சயமாக மறந்துவிட முடியாது. எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னாலே ஒரு புத்தகத்தை எழுதினார்கள். அந்தப் புத்தகத்தின் பெயர் "கவிதை அல்ல" என்பது. கையடக்கமுள்ள ஒரு புத்தகம். "கவிதை அல்ல" என்ற அந்தப் புத்தகத்தை கவிதை வடிவிலேயே தீட்டியிருந்தார்கள். அந்தப் புத்தகத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்

"பாராட்டி போற்றி வந்த பழமை உலகம்,
அதோ ஈரோட்டு பூகம்பத்தால் இடியுது பார்"

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

"அவர் வெண்தாடி அசைந்தால் போதும்,
கண் ஜாடை தெரிந்தால் போதும்,
கருப்புடை தறித்தோர் உண்டு,
அறுத்தே திரும்புமாட்கள்,
குடுமியை அறுத்தே திரும்புமாட்கள்"

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அன்றைக்கே நம்முடைய முதல்வர் அவர்கள் பெரியார் அவர்களுடைய சிறப்பியல்புகளை, இந்த நாட்டிலே அஞ்சாமல், துணிச்சலாக, "தான் எடுத்த காரியத்தை, தான் நினைத்த காரியத்தைச் செயல்படுத்திக் காட்டுகின்ற தீரம் மிகுந்த தலைவராக இருந்தார் பெரியார் அவர்கள்" என்பதை, எடுத்துச்





சொல்லியிருக்கின்றார்கள். இன்று நாம் அந்தப் பெரியாரையே இழந்து தவித்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழ் நாட்டிலேயே பெரியார் அவர்கள், எந்தத் தொண்டினை ஆற்றிக்கொண்டிருந்தாரோ, எத்தகைய லட்சியத்திற்காகப் பாடுபட்டாரோ, எந்தப் பகுத்தறிவு வாதத்திற்காக உழைத்தாரோ, அதனை அமல்படுத்துவதற்காகவும், சமுதாயத்தில் நிலவச் செய்வதற்காகவும் நாம் பாடுபடவேண்டும் என்ற கருத்தில்தான் அவர்கள் தங்களுடைய உரையிலே அப்படிக் குறிப்பிட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 5-50)

இந்த நாட்டில் நீண்ட நெடுங்காலமாக ஜாதிச் சனியன் தொலைந்தபாடில்லை. இட்டார் பெரியார், இடாதார் இழிகுலத்தோர் என்று சொன்னார்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான், என்று சொன்னார்கள். இன்னும் பல காரண காரியங்களையெல்லாம் நம்முடைய மூதாதையர்கள் இலக்கிய வாயிலாகவும் பல்வேறு வாயிலாகவும் எடுத்துச் சொல்லியும்கூட, இந்த நாட்டில் இன்றைக்கு தீண்டாமை இருக்கிறது. இன்றைக்கும் இந்த நாட்டில் ஜாதிப் பெயரைச் சொல்கிற முறை இருக்கிறது. இவைகளைக் களைவதற்குத் தான் இந்த நாட்டில் பெரியார் ராமசாமி அவர்கள் பாடுபட்டார்கள். இங்கேயிருக்கிற பல தலைவர்கள், நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் சுய மரியாதை இயக்கத்தின் வழி வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் நிச்சயமாகப் பெருமைப்படுவார்கள் என்று நான் கருதுகிறேன். நானும் அப்படிச் சொல்லிக் கொள்வதில் பெருமைகொள்கிறேன். நான் பெரியார் அவர்களோடு தொடர்பு கொள்கிற காலத்தில் எனக்கு 14 வயது. 14 வயதில் நான் பெரியார் ராமசாமியினுடைய ஈரோட்டுப் பாசறைக்குச் சென்றேன். அப்படிச் செல்கிற காலத்திலே எனக்கு அரசியல் என்னவென்று தெரியாது. அந்தக் காலத்திலே பெரியாரிடத்தில் பயிலுவதற்காக ஈரோட்டிற்குச் சென்றேன். இப்போது அமைச்சர்களாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்களும், மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களும், மாண்புமிகு டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களும்தான் என்னை அனுப்பி வைத்தார்கள். ஈரோட்டுப் பாசறைக்குச் சென்றபோது, நான் பெரியார் இலட்சிய இயக்கத்தில் ஈர்க்கப்பட்டேன். நான் மேலவை உறுப்பினராக வருவேன் என்று கனவில் கூடப் பார்த்ததில்லை. அமைச்சர் பெருமக்களெல்லாம் அமைச்சர்களாக வருவார்கள் என்று எண்ணிக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். ஒரு இலட்சிய தாகம், இந்த நாடு விடுதலை பெறாதா? இந்த நாட்டிலிருக்கிற ஏற்றத் தாழ்வுகள் நீங்காதா? மேடு பள்ளங்கள் மறையாதா? ஆண்டான் அடிமை என்ற நிலைமைகள் ஒழியாதா? என்ற இத்தகைய

உத்வேக உணர்ச்சிகளின் காரணமாகத்தான், இத்தகைய எழுச்சிகளின் காரணமாகத்தான், இத்தகைய வேகத்தின் காரணமாகத்தான் நம்முடைய அருமைத் தலைவர்களெல்லாம் இன்றைக்கு அந்த இயக்கத்தில் பணியாற்றினார்கள். அப்படிப்பட்ட பெரியார் இந்த நாட்டில் இத்தனை ஆண்டுக் காலம் பாடுபட்டும்கூட, ஜாதி தொலைந்ததாகத் தெரியவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் தான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தம் உரையில் அழகாகச் சொன்னார்கள். பெரியார் அவர்கள் நம்மை வென்று விட்டாரா என்று அவர்கள் கேள்வியைக் கிளப்பினார்கள். நிச்சயமாக இந்த நாட்டில் அவர்கள் சொன்ன கருத்துக்களை நாம் பேசுகிறோமே தவிர, அதை நடைமுறைப்படுத்துவதிலே பின்தங்கியவர்களாகி விடுகிறோம். அமர கவி பாரதியார் அழகாகச் சொன்னார்கள். கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் செல்லாரடி கிளியே, நாளை மறப்பாரடி என்று சொன்னார். கூட்டத்தில் பேசுவார்களே தவிர, தங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்களா வென்றால், நிச்சயமாகக் கடைப்பிடிப்பதில்லை. பெரியாருடைய இலட்சியம் இந்த நாட்டில் ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைத்துத் தீர வேண்டுமென்பது. அந்த இலட்சியத்தின் அடிப்படையில் தான் இன்றைக்கு கலைஞர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. கலைஞர் ஆட்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூல முழக்கமே ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்துத் தீர வேண்டுமென்பது தான். இதுதான் மூல முழக்கம். பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை, வர்ணாஸ்ரம தர்மமற்ற சமுதாயத்தை அமைத்தே தீர வேண்டுமென்று சொன்னார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு அருமையான அந்த மூல முழக்கத்தை இந்த நாட்டிற்குத் தந்திருக்கிறார்கள். ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீர வேண்டும், ஆதிக்கம் எந்தத் துறையில் இருந்தாலும், அது பொருளாதாரத்தில் இருந்தாலும், சமுதாயத்தில் இருந்தாலும், வேறு எந்தத் துறையில் இருந்தாலும், ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீர வேண்டுமென்ற அருமையான லட்சியத்தை மூல முழக்கமாக டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் இங்கிருக்கிற இந்த அருமையான நேரத்தில் நான் இந்த அவையின் மூலமாக அவருக்குப் பணிவோடு சொல்லிக் கொள்வேன். இன்றைக்கு இந்தத் தலைமுறை உங்களை நம்பிக்கொண்டிருக்கிறது. பெரியார் அவர்கள் இந்த நாட்டில் ஆற்றிய தொண்டை பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்தார்கள். நான் இன்று இங்கே ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பெரியார் ராமசாமி அவர்கள் தமிழ் நாட்டில் ஆற்றிய தொண்டுகளின் விளைவாக இந்த நாட்டிலே பல கருத்துக்களைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களைத் தமிழ்





நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமையே பெரியார் ராமசாமி அவர்களைத் தான் சாரும். இது பலருக்குத் தெரியாது. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஜாடக் தோடக் மண்டல் என்ற ஒரு ஸ்தாபனத்தின் சார்பில் நடைபெற வேண்டிய ஒரு மாநாட்டிற்கு அருமையான பிரசங்கத்தை எழுதி அனுப்பினார்கள். மாநாட்டுக் குழுவினர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அதைப் புத்தக வடிவமாக 'அன்னிஹிலேஷன் ஆஃப் கேஸ்ட்ஸ்" என்று போட்டார்கள். அந்தப் புத்தகத்தை தமிழில் குடியரசுப் பதிப்பகத்தார் "ஜாதி ஒழிக்க வழி" என்று தலையிட்டு, தந்தை பெரியார் அவர்கள்தான் தமிழ்நாட்டில் அதை விநியோகம் செய்தார்கள். அதன் மூலமாக தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெருமையை பெரியார் ராமசாமி அவர்கள் உணரச் செய்தார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், பெரியார் அவர்கள் எந்த இலட்சியத்தை இந்த நாட்டில் உருவாக்கினார்களோ, அந்த இலட்சியத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்தார்கள். அதற்குப் பின்னாலே டாக்டர் கலைஞர் அவர்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒதுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்தவன் என்ற காரணத்தினால், கொஞ்சம் வேதனையோடு சொல்லிக்கொள்வேன். இந்தச் சமுதாயம் டாக்டர் கலைஞரை நம்பிக் கொண்டிருக்கிறது. அவர் பூக்காமலே காய்க்கிற பலா மரத்திற்கு ஒப்பானவர். மனித சமுதாயத்தை 3 பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். சொல்லாமலே செய்கிறவர்களை பூக்காமலே காய்க்கிற பலா மரத்திற்கு ஒப்பிடுகிறார்கள். சொல்லிச் செய்கிறவர்களை மாமரத்திற்கு ஒப்பிடுகிறார்கள். சொல்லியும் செய்யாதவர்களை கடையர்களாக ஒப்பிடுகிறார்கள். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், முதல்வர் அவர்கள், பூக்காமலே காய்க்கிற பலா மரமாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்வேன். காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலத்தில் நம்முடைய தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால், காங்கிரஸ் ஆட்சி ஒரு முறையைக் கையாண்டது, அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், தொழிலாளர்கள் போராட்டம் தொடங்குகிற காலத்திலே ஒரு 10 ரூபாய் கேட்பார்கள். ஆனால் இவர்கள் பேசாமல் இருப்பார்கள். உடனே 10 ரூபாய் தந்துவிட மாட்டார்கள். அதற்குப் பின்னாலே அவன் மறியல் நடத்துவான், போராட்டம் என்பான். அதற்குப் பின்னாலே இரண்டு ரூபாய் கொடு என்று சொல்வார்கள். உடனே காங்கிரஸ் ஆட்சி ஏதோ பெரிய காரியம் செய்து விட்டது மாதிரி அங்கலாய்ப்பார்கள். ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்கள் 10 ரூபாய் கேட்பதற்கு முன்பாகவே 15 ரூபாய் கொடு என்று சொல்லிவிடுவார்கள். அதனால்தான் அவர்கள் பூக்காமலே காய்க்கிற பலா மரம். அவர்களை மற்றவர்கள் பாராட்டுகிறார்களாவென்று சொன்னால், நல்லறி

வாளர்கள் பாராட்டுகிறார்கள். நல்லிதயம் படைத்தவர்கள் பாராட்டுகிறார்கள். தாழ்த்தப்பட்டுக் கிடக்கிற, நசுக்கப்பட்டுக் கிடக்கிற சமுதாய மக்கள் பாராட்டுகிறார்கள். ஏதோ மேலே இருக்கிறவர்கள் பாராட்ட அஞ்சுகிறார்கள். மனம் கூசுகிறார்கள். ஏன் என்று புரியவில்லை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். தவத்திரு அடிகளார் அவர்கள் தம் உரையின்போது தெளிவாகச் சொன்னார்கள். இந்த நாட்டில் ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைத்துத் தீர வேண்டுமென்பதை அழுத்தமாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட அருமையான சந்நிதானங்களை ஈர்த்த பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கு உண்டு. டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைய தலைமுறையின் தள நாயகனாக இருக்கிறார்கள். அவர்கள் தான் இன்றைய தலைமுறையில் ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்துத் தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தான் எல்லோருக்கும் வழி காட்டியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். கண்ணொளி வழங்கும் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியவர் அவர்கள்தான். அதைப்போல கை ரிக்ஷாவை ஒழிப்பதிலே மற்ற மாநில மக்களுக்கு வழி காட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதைப் போலவே உணவுப் பற்றாக்குறை இருந்த நிலை மாறி, தன்னிறைவை உண்டாக்கி மற்ற மாநிலங்களுக்கு உணவு வழங்குவதில் முன்னோடியாக இருந்தவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள்தான். எல்லாவற்றிற்கும் வழி காட்டியாக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த முறையிலும், ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதிலே கருத்தாக இருக்கிறார்கள். அந்தக் கருத்தைப் பிரதிபலிக்கிற முறையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதற்காக மெத்த பெருமைப்படுகிறேன். ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழக அரசு இந்த நாட்டிலே வறியவர்களுக்காக, வாடிக் கிடக்கிற மக்களுக்காக பல காரியங்களைச் செய்ய முன் வருகிறது. ஆனால், மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டிக் கொண்டிருக்கிறது. நான் முன்பு அவையில் பேசுகிறபோது தாழ்த்தப்பட்ட, கிருஸ்துவ மக்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கு, நான் டில்லி சர்க்காருக்கு எழுதுகிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் எழுதியும்கூட, மத்திய அரசு இன்றைக்கு கேளாக் காதினராக மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் இருக்கிற மைனாரிட்டி சமுதாய மக்களுக்கு, அவர்கள் முஸ்லீமாக இருந்தாலும், கிருஸ்துவர்களாக இருந்தாலும், அவர்கள் எந்தச் சமுதாயமாக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிப்பதற்காக நம்முடைய தமிழக அரசு முன்னோடியாக இருக்கிறது என்பதை





விளக்கியாக வேண்டும். இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் மிக அழகாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். வறியவர்கள், வாழ்க்கையில் ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்வில் வளம் பெறவேண்டும் என்ற கொள்கை இலட்சியத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளோம். இந்த அருமையான தத்துவமே தமிழக அரசினுடைய, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் அருமையான தத்துவமாக இருக்கிறது என்பதை யாருக்காகவும் மறுக்கப் போவதில்லை, மறைக்கப் போவதில்லை. நாம் வறியவர்களுக்காக, வளம் குன்றியவர்களுக்காக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம். அதற்கு நம்முடைய கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் வழியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வழி காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அருமையான நிலையை உருவாக்குவதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் கலைஞர் அவர்களை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்வேன். நீங்கள்தான் இன்றைய தள நாயகனாக இருக்கிறீர்கள். வேறு வழி காட்ட எங்களுக்குத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உங்களைத் தவிர வேறு ஒரு தள நாயகன் இந்தியத் துணைக் கண்டத்தில் எங்களுக்குத் தெரியவில்லை. தேடித் தேடிப் பார்க்கிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மறைந்து விட்டார்கள். தந்தை பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள். இப்படிப்பட்ட சிறந்த தலைவர்கள் இந்த நாட்டில் ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்கப் பாடுபட்ட தலைவர்கள் மறைந்து விட்டார்கள். நமக்கு இன்றைக்கு கலங்கரை விளக்காக, கண்ணொளி வழங்கும் விளக்காக, வாழ்க்கைக்கு வழி காட்டுகிற விளக்காக, டாக்டர் கலைஞர் அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல்லாண்டு, காவிரி நீர் போல வாழ்ந்து, வளம் பல பெருகி, நலம் பல பெற்று, இந்தச் சமுதாய மக்கள் ஏற்றம் பெற அவர்கள் வாழ வேண்டுமென்று சொல்லி, ஆளுநர் உரையை வரவேற்று, இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் திங்கட்கிழமை 23—1—1974 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

70. Notification issued with G.O. Ms. No. 6226, Revenue, dated the 4th October 1973 in regard to an amendment to rule 3 of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964).]

71. Notification issued with G.O. Ms. No. 1410, Rural Development and Local Administration, dated the 18th July 1973 in regard to amendment to sub-rule (2) of rule 10 of the Tamil Nadu Public Buildings (Licensing) Rules, 1966. [Laid on the table of the House under section 25 (4) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 (Tamil Nadu Act 13 of 1965).]

72. Notification issued with G.O. Ps. No. 6598, Revenue, dated the 31st October 1973 exempting from the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the sales of pulses, grams, groundnut oil, gingelly oil and sunflower oil. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

73. Notification issued with G.O. Ms. No. 1730, Home, dated the 27th June 1973 in regard to amendments to rule 268 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

74. Notification issued with G.O. Ms. No. 1246, Rural Development and Local Administration, dated the 27th June 1973 in regard to amendments to the Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Village Panchayats) Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. *Reports, Notifications and Other Papers.*

12. Draft Fifth Five-Year Plan, Tamil Nadu Memorandum to the Union Planning Commission (English).

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

## திங்கட்கிழமை, 1974 சனவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.
2. உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Leave and Deputation Salary for Shortened B.T. Training.*

* 76 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether teachers deputed for shortened B.T. Training by Aided High Schools are given leave and deputation salary;

(*b*) whether teachers deputed by Aided Elementary Schools for such training are treated at the same level in respect of leave and deputation salary; and

(*c*) if not, the reasons therefor?

குறுகிய கால பி. டி. ஆசிரியப் பயிற்சிக்கு விடுப்பும் முகமை சம்பளமும்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குறுகிய கால பி. டி. ஆசிரியப் பயிற்சிக்காக மானியம் பெறும் உயர் நிலைப் பள்ளிகளினால் முகமையில் அனுப்பப்படும் ஆசிரியர்களுக்கு விடுப்பும், முகமையில் அனுப்பப்படுவதற்கான சம்பளமும் கொடுக்கப் படுகின்றனவா?

(இ) அத்தகைய பயிற்சிக்காக மானியம் பெறும் தொடக்கப்பள்ளிகளினால் முகமையில் அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்கு இதே மாதிரியான விடுப்பும், முகமையில் அனுப்பப்படுவதற்கான சம்பளமும் கொடுக்கப்படுகின்றனவா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சில தனியார் பள்ளிகளில் இந்த அரசு ஊதியம் வழங்கும்படி உத்தரவிட்டிருந்தும் பல ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அந்த ஆசிரியர்கள் அரசிடம் மனுச் செய்துகொண்டால், அந்த ஊதியத்தை வழங்க வாசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று இந்த ஊதியத்தை வழங்கும் படி அரசு உத்தரவிட்டு சில பள்ளிகளில் வழங்காமல் இருப்பார்களே யானால், அதை வற்புறுத்துவது அரசாங்கத்தின் கடமையாக இருக்கும். அந்த ஆசிரியர்கள் விண்ணப்பித்தால், அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த நடைமுறைகள் உயர் நிலைப் பள்ளிகளில் ஒரு நடைமுறையாகவும், தொடக்கப்பள்ளிகளில் வேறொரு நடைமுறையாகவும் இருக்கின்றன. இதே போன்று இன்னும் பல விஷயங்களில் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இவைகள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட வேறுபட்ட பிரச்சினைகளை ஒன்றாக எடுத்து, வெவ்வேறு விதமாக இருப்பதை நீக்க அரசு உடனடியாக முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரேயடியாக உத்தரவிட முடியாது. ஒவ்வொரு பிரச்சினையையும் தனித்தனியாகக் கவனிக்க வேண்டி வரும். ஏற்கெனவே இருக்கின்ற முறைகளில் தனியாகப் பரீட்சை எழுத பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. அவை மாற்றப்பட்டு வருகின்றன. இப்போதுகூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், அங்கே சேர்ந்து படித்தவர்கள்தான் பி.ஏ., எம்.ஏ., எழுதலாமே தவிர, வெளியிலிருந்து எழுதுகிறவர்களுக்கு அங்கே இடமில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் இருக்கின்ற பல்வேறு இடையூறுகள் கூட நாளடைவில் நீக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த முறையில் இது வரையில் உயர்நிலை துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்குப் மட்டும் பாதிச் சம்பளம் தருகிற முறை கையாளப்பட்டு வந்தது. துவக்கப் பள்ளிகளில் இருப்பவர்களுக்குத் தர வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. அது தான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த அரசின் இருமொழித் திட்டத்தின் காரணமாக பல இந்தி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களில் பலர் பி.ஏ. பட்டம் பெற்றவர்கள். அவர்களை பி.டி. படிப்புக்கு அனுப்ப, அவர்களுக்கும் அரை ஊதியம் கொடுத்து அனுப்ப முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் தனியாக விண்ணப்பித்தால், அதைப் பரிசீலிக்கலாம்.

## *State Scholarships*

* 77 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of applications received for the award of State Scholarships in Colleges from students of merit in low income group during the academic year 1971–72 , and

(*b*) the number and amount of such scholarships sanctioned ?



1974 சனவரி 28]

## அரசுப் படிப்புதவித் தொகை.

திரு. கே. எஸ். கணபதி (திரு எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971-72-ஆம் கல்வி ஆண்டில் குறைந்த வருவாய்த் தொகுதியைச் சேர்ந்த, படிப்பில் சிறந்த கல்லூரி மாணவர்களிடமிருந்து அரசுப் படிப்புதவித் தொகை கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது ?

(இ) அவ்வாறு படிப்புதவித் தொகை வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது ? வழங்கப்பட்ட படிப்புதவித் தொகைகள் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :(அ) பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை—680.

(இ) உதவித் தொகை அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 276.

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை, ரூ. 49,680.

## *Pay of Teachers.*

*78 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to upgrade the scales of pay of teachers who have put in 12 years of service, as in the case of teachers in Kerala State ; and

(*b*) if so, the date from which this will be implemented ?

## ஆசிரியர் ஊதியம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கேரள மாநிலத்தில் ஆசிரியர் தொழிலில் பணியாற்றியவர்களுக்கு 12 ஆண்டுகள் ஆனவுடன் அடுத்த தகுதிக்குரிய ஊதியம் வழங்கப்படுவது (upgraded) போல், தமிழ் நாடு அரசு வழங்கத் திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், எப்போது முதல் அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கேரள மாநிலத் திட்டம் பற்றி தகவல்கள் இல்லை. எனினும், பத்து ஆண்டு சேவைக் குப்பின் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்கள், முதல் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கு 1—4—1973 முதல் தேர்வுநிலை ஊதியம் வழங்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டு காலப் பணி அடிப்படையில் செலக்‌ஷன் கிரேட் வழங்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே போல் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டு காலப் பணி அடிப்படையில் செலக்‌ஷன் கிரேடு வழங்குவதுபற்றி அரசு முடிவு எடுக்க இருக்கிறதா ? ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் இது பற்றிப் பரிசீலித்து முடிவெடுப்பதாகக் கூறினார்கள். அது விரைவாக அமுல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 10 ஆண்டு காலப் பணி அடிப்படையிலே தேர்வு நிலை வழங்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்திருக்கிறது. அதைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. விரைவில் அது பற்றி முடிவெடுக்கப்படும்.

## *Selection Grade to Teachers working in Panchayat Unions*

* 79 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Selection Grade scale of pay is being allowed from 1st January 1971 itself in all places in accordance with the Government Order while Selection Grade is given to the teachers working in the Panchayat Unions ; and

(*b*) if not, the reasons therefor ?

## ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு வழங்கப்படும்போது அரசு ஆணைப்படி 1—1—1971 முதலே செலக்‌ஷன் ஊதியம் எல்லா இடங்களிலும் வழங்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதன் காரணமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் தேர்வு நிலை ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் 1—1—1971 முதற்கொண்டு வழங்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களிடமிருந்து தமது அலுவலகத்திற்கு கிடைத்துக்கொண்டிருக்கிற அறிக்கைகளிலிருந்து 1—1—1971 முதலே தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டிருப்பதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.





(இ) பிரச்சினை எழவில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களில் 1—1—1971 முதல் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தும் கூட, ஒரு ஆண்டு கழித்து, 2 ஆண்டு கழித்து உத்தரவிடும் போது, அப்படி உத்தரவிடும் தேதியிலிருந்துதான் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட புகார்கள் ஆசிரியர்களிடமிருந்து அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. தனிப்பட்ட புகார்கள் வந்தால் அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுத்து, சம்பளம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திட்டவட்டமாக 1—1—1971 நாளிலிருந்து தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அவர்கள் உத்தரவிட்ட தேதியிலிருந்து தந்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறபோது 1—1—1971-லிருந்தே தர வேண்டும் என்று மீண்டும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக கிணத்துக்கிடவு ஊராட்சி ஒன்றியத்தில் கூட 1—1—1971-லிருந்து கொடுப்பதற்குப் பதிலாக, 20—4—1972-லிருந்து தேர்வு நிலை ஊதியம் தரப்பட்டது. அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகு, அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு, தேர்வு நிலை ஊதியத்தை 1—1—1971லிருந்து தர வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அம்மாதிரி எங்கேனும் தரப்படாத சூழ்நிலை இருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், உரியவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த செலக்‌ஷன் கிரேடு என்பது 1—1—1971 முதல் கொடுக்கப்பட்டிருப்பதால், ஆசிரியர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லாமல் போய்விட்டது. இரண்டாவது சம்பளக் கமிஷன் குறிப்பிட்ட தேதியிலிருந்து, அதாவது 2—10—1970 முதல் அவர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு வழங்கப்பட்டால், அவர்களுக்கு உண்மையாகவே வெயிட்டேஜ் கிடைக்க வழி இருக்கிறது. ஆதலால் அரசாங்கம் இதைக் கனிவோடு பரிசீலித்து 2—10—1970 முதல் கிடைக்க வழிவகை செய்யுமா, அதை ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவற்றையெல்லாம் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டு, ஒரு நிலை வந்த பிறகு, மறுபடியும் ஆராயத் தொடங்குவது என்பது வேறு பல பிரச்சினைகளைக் கிளப்பும். ஆகவே இந்த அளவுக்கு ஏற்பட்டதில், அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியில் இந்த அளவுக்காவது விரைவில் எடுக்கப்

படவும், வேறு பல நிலைமைகளைக் கவனிக்கின்ற சூழ்நிலைகளும் இருப்பதால், மறுபடியும் 2—10—1970-க்குக் கொண்டுபோவதற்கு இப்போது இருக்கின்ற நிதிநிலை இடம் தராது. நிதித்துறை ஒத்துக்கொள்ளாது. வேறு பல பிரச்சினைகள் இதனால் வரக்கூடும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறுவார்களேயானால், 1—1—1971-க்குப் பிறகு சம்பளம் பெறக்கூடியவர்கள், செலக்ஷன் கிரேடில் ஒரு ஊதிய உயர்வு கூட இல்லாமல் இருக்கிறார்கள். அதே பழைய சம்பளத்தையே பெற்றுக் கொண்டு, செலக்ஷன் கிரேடு என்ற பெயர் மட்டும் இருக்கிறது. அவர்களுக்குக் குறைந்தது இரண்டு உயர்வாவது வழங்கப்படக்கூடிய முறையில் உத்தரவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு பயனும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவர்களுடைய சம்பள விகிதங்கள் மாறுகின்றன. இறுதியாக வாங்குகின்ற சம்பளம் அதிகமாகும். ஓய்வூதியம் அதிகமாகும். ஆகவே அப்படிப்பட்ட சலுகைகள் வருகின்றன. அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்து 1—1—1971 முதல் என்று திட்ட வட்டமாக முடிவு செய்யப்பட்டது. இப்போதே கோரிக்கைகள், புகார்கள் இந்த வகையிலே எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, அவைகள் பரிசீலிக்கப்பட்டு இதுதான் என்று இறுதி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சில ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டும், தொடர்ந்து 4, 5 ஆண்டுகளுக்கு அவர்களுடைய ஊதியத்தில் குறைவு ஏற்படுகிறது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் 10 ரூபாயும், இடைநிலை ஆசிரியர்களுக்கு மாதம் 5 ரூபாயும் ஊதியத்தில் குறைவு ஏற்படுகிறது. அதைத் தடுக்கவாவது சட்டத்தை மாற்றும்படி அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதைப்பற்றிய விளக்கக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. இங்கே இப்போது விளக்கம் தரும் அளவுக்கு நிலைமைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இவைகளைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் நியாயம் எதுவோ அதைத் தான் செய்ய முடியும். ஏற்கெனவே பட்டதாரிகளுக்குக் கொடுத்தது தவறு, இப்போது கொடுத்தது தவறு என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியவர்களாக இருக்கிறோம். சில பல தன்மைகள் வருகிறபோது, பொதுவாக முறைப்படுத்துகிறபோது, பலருக்கு லாபமும், சிலருக்கு சில பல வகைகளில் சரியில்லாத தன்மைகளும் ஏற்படக்கூடும். இனி ஒரே முறையில் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தை வைக்கின்ற போது, சிலபல குறைபாடுகளை ஏற்றுக்கொள்ளவேண்டி வரும். எப்படியிருந்தாலும் பரிசீலிக்கப்பட்டு ஒரு முடிவெடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் ஊதிய விகிதங்கள் மாறுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் ஊதிய உயர்வுகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இந்த விகிதங்களால் பலனடைவதற்கு முன்னால் ரிடையராகிற வயதில் இருப்பவர்களுக்கு செலக்ஷன் கிரேடு



கிடைத்திருக்கிறது. ஊதிய உயர்வையாவது மாற்றியமைத்து மினிமம் வெய்ட்டேஜ் இரண்டாவது கொடுக்க அரசு முன்வந்தால் தான் அவர்களுக்குப் பலன் கிடைக்கும். அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அதுபற்றிய விவரங்கள் எழுதினால் பரிசீலிக்கலாம். ஆனால் என்ன முடிவு வரும் என்று சொல்வதற்கில்லை.

*Teachers' Service Registers.*

* 80. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state the number of Teacher's Service Registers for teachers serving in (*a*) Aided High Schools and (*b*) Aided Elementary and Middle Schools printed and published by the Government Press during the past three years ?

ஆசிரியர்களின் பணிப் பதிவேடுகள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

கடந்த மூன்றாண்டுகளில் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள், உதவி பெறும் நடுத்தர, ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணிப் பதிவேடுகள் எத்தனை அரசு அச்சகத்தால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1970–71ல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கென அச்சிடப்பட்ட பணிப் பதிவேடுகள் 4,900.

1971–72ல் உதவி பெறும் நடுத்தர மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கென அச்சிடப்பட்ட பணிப் பதிவேடுகள் 25,331.

1972–73ல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கென அச்சிடப்பட்ட பணிப் பதிவேடுகள் 4,896.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்தப் பணிப் பதிவேடுகள், ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்களுக்குத் தேவையானபோது அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு எப்போதுமே சொல்லப்பட்டு வருகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் தனியாரிடம் அதை அச்சிட்டு வழங்கும் பணி ஒப்படைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் அச்சகத்தாலேதான் இதனை அச்சிட்டு அளிக்கின்ற பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போதுகூட அரசு அச்சகத் துறை இயக்குனர் அவர்கள் கொடுத்திருக்கிற கணக்கில், 1973–74ல் 6,588 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, 3,098 பிரதிகள் விற்கப்பட்டிருப்பதாகவும், ஸ்டாக்கிலே 3,490, 9—8—1973ல் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக எல்லோருக்கும் கிடைக்கும் வகையிலே வழங்க வேண்டுமென்றுநான் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் விரைவுபடுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இந்தப் பணிப் பதிவேடுகள் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலே சில தாளாளர்கள் ஏற்கனவே நூற்றுக் கணக்கில் பணிப்பதிவேடுகளை வாங்கி வைத்துக்கொண்டு, அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். இதைத் தடுக்கும் வகையிலே அதிக எண்ணிக்கையிலே பணிப் பதிவேடுகளை அச்சடித்து வெளியிட்டால்தான் இதைத் தடுக்க முடியும். அதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடுகளைப் போக்க எந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுப்பதற்கு அச்சகத் துறை இயக்குனர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'கேட்டுக்கொள்கிறேன்' என்பது கேள்வியா ?

*Correspondent of Z.K.M. High School, Bodinayakanur*

* 81. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Correspondent, Z. K. M. High School, Bodinayakanur, during April 1973, regarding the difficulty experienced by Correspondents due to G.O. Ms. No. 1664, Education, dated 19th October 1972 ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

நிர்வாகி, Z.K.M. உயர்நிலைப்பள்ளி, போடிநாயக்கனூர்

திரு ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கல்வித் துறையின் 19—10—1972 நாளிட்ட 1664ஆம் எண் அரசாணையின் விளைவாக பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்படும் தொல்லைகள் குறித்து போடிநாயக்கனூர் Z.K.M. உயர்நிலைப் பள்ளி நிர்வாகியிடமிருந்து 1973, ஏப்ரலில் அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?



(ஆ) ஆமெனில், அதையொட்டி, எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1973-74-ல் மாணவிகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் தனிவகையாக அனுமதி வழங்கப்பட்டது.

திரு ஜி. சுவாமிநாதன் : தனி வகையாக என்றால் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஸ்பெஷல்.

*Government Arts College, Poolankurichi, Ramanathapuram district.*

* 82. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the actual number of students in P.U.C. and Degree Classes in the Government Arts College, Poolankurichi, Ramanathapuram District ; and

(*b*) the expenditure incurred by the Government for maintaining the College ?

இராமநாதபுரம் மாவட்டம், பூலான்குறிச்சியிலுள்ள அரசினர் கலைக்கல்லூரி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பூலான்குறிச்சியிலுள்ள அரசினர் கலைக்கல்லூரியில் புகுமுக வகுப்பிலும் பட்ட வகுப்பிலும் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) இக்கல்லூரியின் பராமரிப்புக்காக அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

| | 1972–73 | 1973–74 | |
|---|---|---|---|
| | புகுமுக வகுப்பு. | புகுமுக வகுப்பு. | இளங்கலை (1973-74-ம் வருடம் ஆரம்பிக்கப் பட்டது.) |
| (1) | (2) | (3) | (4) |
| (அ) பூலான்குறிச்சி அரசினர் கலைக்கல்லூரியில் படிக்கும் | 45 | 17 | 9 |

| | | ரூ. | 1973–74 ரூ. (1973-ம் வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து) |
|---|---|---|---|
| (இ) செலவான தொகை : | | 1972–73. | |
| தொடரும் செலவு | .. .. | 48,308 | 41,806 |
| தொடராச் செலவு | .. .. | 64,824 | 1,979 |

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், குறிப்பிட்டிருக்கிறபடி பார்த்தால், கிட்டத்தட்ட 25 மாணவர்கள்தான் அந்தக் கலைக் கல்லூரியிலே படிக்கிருர்கள் என்று தெரிகிறது. ஆக இந்த 25 மாணவர்களுக்காகக் கிட்டத்தட்ட 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஆகவே, அந்த முறையிலே அந்தக் கலைக்கல்லூரி அங்கே தொடர்ந்து இயங்க வேண்டுமா என்பதையும், அப்படிப்பட்ட இடத்திலே ஒரு கலைக்கல்லூரி ஏன் தொடங்கப்பட்டது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திரு. சிவலிங்கம் செட்டியார் என்பவர் தமது அறுபதாவது ஆண்டு பிறந்த நாளையொட்டி ஐந்து லட்சம் ரூபாய் வழங்கி, அங்கே கல்லூரி தொடங்குவதற்கு இடமும் கட்டிடமும் தந்து, தொடங்க முன்வந்தார்கள். அந்த ஊருக்கு 20 மைல் சுற்றுப்புறத்திற்கு வேறு கல்லூரிகள் இல்லை. 24 மைல் சென்றுல்தான் கல்லூரி புதுக்கோட்டையில் இருக்கிறது. 15, 16 மைல் சென்றுல்தான் திருப்பத்தூரிலே கல்லூரி இருக்கிறது. ஆக அந்தக் கல்லூரி அந்தப் பகுதியிலே பயன்படும் என்ற வகையிலே தான், அந்த அடிப்படையிலேதான் தொடங்கப்பட்டிருக்கிறது. அவர்களே இடவசதி தந்திருக்கிருர்கள். அவர்களே, 5 லட்சம் ரூபாயும் தந்திருக்கிருர்கள். அந்த அடிப்படையிலேதான் அந்தக் கல்லூரி அமைக்கப்பட்டது. ஏன் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தது என்பதைப் பற்றி விளக்கங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு மாணவர்கள் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயரும் என்று நாம் கருதலாம். வேறு பல இடங்களிலே நெருக்கடி ஏற்படும்போது, இங்கே இவ்வளவு இடம் வைத்துக் கொண்டிருக்கும்போது, அதைப் பயன்படுத்தலாம் என்று விளம்பரம் செய்யலாம். அதுபற்றியும் கல்லூரி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்கள். இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பார்த்துவிட்டு, நிலைமை இப்படியே இருக்குமானுல், அதற்குப் பிறகு வேண்டுமானுல் வேறு இடத்திற்கு மாற்றலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம். அதனுல் இரண்டு மூன்று ஆண்டுகள் பார்க்கலாம் என்றுதான் அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

*Bridge over River Vaigai.*

* 83. *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct one more bridge over the river Vaigai opposite to Thathaneri;



(*b*) if so, the details thereof; and

(*c*) the stage at which the matter now stands?

வைகை ஆற்றின் மேல் பாலம்.

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விணுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தத்தனேரிக்கு எதிரே வைகை ஆற்றின் மேல் மேலும் ஒரு பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, மதுரை நகருக்கு முக்கியமான மயானம் தத்தனேரி என்ற இடத்தில் இருக்கிறது. சில சமயங்களில் வெள்ளம் வந்துவிட்டால், பிரேதம் கொண்டு செல்பவர்களுக்கு மயானத்திற்குப் போவதற்கு மிகவும் கஷ்டமாக இருப்பதால், ஏதேனும் ஒரு வகையில் அங்கே ஒரு சிறிய குழாய்ப் பாலமாவது கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது வைகையின் குறுக்கே தத்தனேரி அருகில் பாலம் போடுகின்ற திட்டம் அரசிடம் இல்லை என்று தெரிவித்தேன். வைகையில் புட்டுத்தோப்பு, பாரதிநகர் இவற்றுக்குக் குறுக்கே 16 லட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் அமைப்பதற்குக் கார்ப்பரேஷனிடம் ஒரு திட்டம் இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அதைத் துரிதமாக அமுல்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனியாக உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

*Package Plan to Educated Unemployed.*

* 84. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to have a package plan to provide employment to unemployed Graduate Engineers, Diploma Holders and Science Graduates in the State;

(*b*) if so, the nature of the Scheme; and

(*c*) when it is expected to come into operation?

## படித்து வேலையற்று இருப்போருக்கு முனைப்புத் திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், வேலையில்லாமலிருக்கும் பட்டதாரிப் பொறியாளர்கள், தகுதிப்பட்டயம் பெற்றோர், அறிவியல் பட்டதாரிகள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்ய முனைப்புத் திட்டம் ஒன்றைக் கொண்டு வர செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் தன்மை யாது ?

(உ) இது எப்போது செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) & (உ) : கடந்த சில ஆண்டுகளாக இவ்வரசு படித்த வேலையில்லாதவர்கட்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கென பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நடப்பு ஆண்டில் ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேலும் பல திட்டங்களையும் இவ்வரசு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்கள் பொதுவாகப் படித்த வேலையில்லாதவர்கட்கும், சிறப்பாக, வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகள், பட்டயதார்கள், அறிவியல் பட்டதாரிகள் முதலியோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்கின்றன. இது ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் திட்டங்களுக்குக் கூடுதலானதாகும்.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know whether there is any Special Scheme envisaged by the Central Government to be implemented by the State Government in this matter ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த " அன் எம்ப்ளாய்டு ஸ்கீம் " என்று அவர்கள் பணம் கொடுக்கின்றார்கள். அதிலே இன்ஜினியரிங் பட்டதாரிகள், டிப்ளமா ஹோல்டர்ஸ் இவர்களுக்கெல்லாம் வேறு யாராவது அப்ரன்டிசாக எடுத்துக்கொண்டால், நாம் ஒரு குறிப்பிட்ட சம்பளத்தைத் தருகின்றோம். இன்ஜினியரிங் பட்டதாரிகளுக்கு 250 ரூபாய், டிப்ளமா ஹோல்டர்களுக்கு ரூ. 150, டிராஃப்ட்ஸ்மென்களுக்கு ரூ. 90 கொடுக்கப்படுகிறது. நாமே வேலை வாய்ப்பு கொடுக்கின்ற வேறு பல திட்டங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஆசிரியர்களை வேலைக்குச் சேர்ப்பது என்றால் அதைக் கொடுக்கின்றோம். நமது அரசுத் துறையிலே வேறு ஏதாவது புதிதாக நாம் திட்டமிட்டாலும், அதற்காகவும் கொடுக்கின்றார்கள். ஆனால் இதிலே உள்ள குறை எல்லாம், ஒரு ஆண்டுக்குத் தான் அவர்கள் இந்தச் சம்பளத்தைத் தருகின்றார்கள். மறுபடியும், ஒரு ஆண்டு முடிந்தவுடன், நாமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். அங்கேதான் ஆட்சேபணை வருகிறது. நம்முடைய நிதிநிலை அதற்கு இடம் கொடுக்காத காரணத்தாலே, இந்தத் திட்டம் அவ்வளவு வேகமாக வெற்றிபெற முடியவில்லை. ஆனால் நம்முடைய தொழில் துறையைப் பொறுத்த அளவுக்கு, தொழில் தொடங்குவதற்கு இதுபோன்ற பட்டதாரிகள் முன்வருவார்களானால், அவர்களுக்கு



முன் செலவுக்கு 10 சதவீதம், 15 சதவீதம் " சீட் மணி ", " சீட் கேபிடல் " கொடுப்பதற்கு அந்தப் பணம் பயன்படுகிறது. அந்த ஒரு துறையிலே அவர்கள் கொடுக்கின்ற 15 சதவீதம் பயன்படுகிறது. மீதி 85 சதவீதத்தை நாம் கணக்கு போடும்போது, அது கோடிக்கணக்காக வருகின்றது. ஆகவே அதையும் நாம் அதிகமாகச் செய்ய முடியவில்லை.

## *Report of the Expert Committee on Handlooms.*

*85. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Expert Committee on Handlooms, appointed by the Government, has submitted its report ; 4·20 பி.ப.

(b) if so, whether the copy of the report will be placed on the Table of the House ; and

(c) the action proposed to be taken by the Government on the basis of important recommendations ?

## கைத்தறித் துறை வல்லுநர் குழு அறிக்கை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) அரசால் நியமிக்கப்பட்ட கைத்தறித் துறை வல்லுநர் குழு தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்த அறிக்கையின் நகல் அவைமுன் வைக்கப்படுமா ?

(உ) முக்கியமான பரிந்துரைகளையொட்டி, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 21—1—1974 அன்று அறிக்கையின் நகல் ஒன்று சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட்டது.

(உ) சில பரிந்துரைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு விட்டன. மற்றவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, இந்தக் குழு பரிந்துரைகளில், கைத்தறிக்காகத் தனி ரகங்களை ஒதுக்கிட வேண்டும் என்று ஒரு பரிந்துரை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளதா அல்லது நம்முடைய அரசாங்கத்தில் உள்ளதா ? மத்திய அரசிடம் உள்ளது என்றால், அதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1974 சனவரி 28

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ரிசர்வேஷன் என்ற முறையிலே சில ரகங்களைச் சொல்லியிருக்கிறோம். அந்தச் சில ரகங்களை நாம் அமல் நடத்த முடியாத அளவுக்கு இருக்கக்கூடாது. உதாரணத்திற்கு வேட்டி என்று சொல்வார்கள். வேட்டியிலே ஒரு நான்கு இஞ்ச் கரை என்று சொல்வார்கள். இதை யாரும் கண்டுபிடித்து அமல் நடத்துவது கஷ்டம். ஆதலால்தான் நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே வேட்டி, சேலை, துண்டு இதுபோன்ற ரகங்களையெல்லாம், வேறு விதமான ரைடர்ஸ், குவாலிபிகேஷன் போடாமல், ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். உதாரணத்திற்கு சேலையைப்பற்றிச் சொல்லும்போது கலர் சேலை என்று சொல்வார்கள். இவன் வெள்ளை சேலையை நெய்து, வெளியே போய் கலர் போட்டுவிடுவான். ஆகவே, இப்படிப்பட்ட நிலை இல்லாமல், மொத்தமாக நாம் ஒதுக்கல் கொள்கையை ரிசர்வேஷன் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று தெரிவித்து நமது முதலமைச்சர் அவர்கள், பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள். இதுவரை பதில் இல்லை.

## *Assignment of Land to Harijans.*

* 86. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Harijans of Magibalanpatti Village in Ramanathapuram District have applied for the assignment of Kanmoi Poramboke Land in S. No. 172 ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

## அரிசனங்களுக்கு நில ஒப்படைப்பு.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மகிபாலன்பட்டி கிராம அரிசனங்கள் எஸ். நிர். 172-ல் கண்மாய் புறம்போக்கு நில ஒப்படைப்பு கோரி விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மாவட்ட வருவாய் அலுவலர் 10—12—1973 அன்று, 4·48 ஏக்கர் நிலத்தை, "குளம் புறம்போக்கு" என்ற பிரிவிலிருந்து, "தீர்வையிடப்பட்ட தரிசு" என்ற பிரிவுக்கு மாற்ற உத்தரவிட்டிருக்கிறார். இந்நிலம், அரிசனங்களுக்கு ஒப்படை செய்ய மேல் நடவடிக்கையெடுக்கப்படும்.



.974 சனவரி 28]

4.20

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, சமீப ஆண்டுகளாக மழை குறைவாகப் பெய்கிறது என்பது அரசுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது, இருக்கிற குளங்களையெல்லாம் பட்டாவாகக் கொடுத்துக்கொண்டு போனால், விவசாயம் பாதிக்கப்படும் என்பது அரசுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, குளம் தேவையில்லையென்று கருதப்பட்ட பிறகுதான், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அதற்கான அறிக்கைகளை அளிக்கிறார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்த பிறகு "அசெஸ்டு வேஸ்ட் டிரை"—ஆக மாற்றுகிறார்கள். அவ்வாறே தவிர, குளம் பயன்படக்கூடிய இடங்களை பட்டாவாகக் கொடுப்பது கிடையாது.

## *Liquor muggling*

* 87 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU L. BALARAMAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state —

(*a*) the quantity and value of the liquor smuggled from other States to North Arcot District during 1971–72, 1972–73 and April—September 1973 ; and

(*b*) the details of the persons convicted in this connection ?

## மதுவகைக் கடத்தல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1971–72, 1972–73-ஆம் ஆண்டுகளிலும், 1973–ஆம் ஆண்டில் எப்ரல் முதல் செப்டம்பர் முடியவும், வெளி மாநிலங்களில் இருந்து கள்ளத்தனமாக கடத்தப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மதுவகைகளின் அளவும், மதிப்பும் யாது ?

(இ) இவ்வகையில், தண்டனை அடைந்தவர்களின் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, (அ) அண்டு (இ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அதற்கிடையில் கிடைத்திருக்கின்ற விவரங்கள் :—

## DETAILS OF THE KINDS OF LIQUOR ILLICITLY TRANSPORTED INTO NORTH ARCOT DISTRICT.

| Details. (1) | Quantity seized. (2) | Value of the liquor seized. (3) | Number of cases and their disposal (4) |
|---|---|---|---|
| **1971–72.** | | Rs. | |
| Indian-made Foreign liquor. | 1815 Quarter bottles. | 9,075 | 2 வழக்குகள் தண்டிக்கப்பட்டார்கள். |
| Arrack .. .. | 1680 litres .. | 15,800 | 4 வழக்குகள் தண்டிக்கப்பட்டார்கள். |
| **1972–73** | | | |
| Indian-made Foreign liquor. | 1564 Quarter bottles. | 7,820 | 4 cases— 2 cases convieted ; 2 cases under investigation· |
| Arrack .. .. | 120 litres .. | 1,200 | One case under investigation. |
| Toddy .. .. | 380 litres .. | 500 | One case under investigation. |
| **APRIL TO SEPTEMBER, 1973** | | | |
| Indian-made Foreign liqur. | 672 Quarter bottles. | 3,700 | One case—under investigation. |
| Arrack .. .. | 5,081½ litres | 50,810 | Ten cases–all are under inestigation. |

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I know from the Hon. Minister from which States the liquor is largely smuggled into North Arcot District and what are the companies that are manufacturing the Indian-made foreign liquors that have been seized ?



The Hon. THIRU S. J. SADIQ PASHA : Sir, regarding the details of the companies manufacturing the liquor, a separate question may be put by the hon. Member.

எந்த மாநிலத்திலிருந்து வந்தன என்பது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. அதனுல்தான் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று சொன்னேன். வட ஆற்காடு மாவட்டம் என்று சொன்னுல், பக்கத்தில் இருக்கும் மைசூர், அல்லது ஆந்திர மாநிலத்திலிருந்துதான் வர வேண்டும்.

### *Sandy Mound near Keerapothanpatti, Madurai District.*

* 88 Q.—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether, near the village of Keerapothanpatti near Andipatti in Usilampatti Taluk, Madurai District, a sandy mound is forming and advancing from West towards East laying waste fertile agricultural lands, filling up wells and making a sandy desert of what used to be a good arable land ; and

(*b*) if so, the action taken to arrest this danger ?

### மதுரை மாவட்டம், கீரப்போதன்பட்டி கிராமத்திற்கருகில் மணல் மேடு

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் ஆண்டிப்பட்டிக் கருகிலுள்ள கீரப்போதன்பட்டி கிராமத்திற்கருகில் மணல் மேடு ஒன்று ஏற்பட்டு, அது மேற்கிலிருந்து கிழக்காகப் பரவி, விளை நிலங்களைத் தரிசாக்கி, கிணறுகளைத் தூர்ந்து போகச் செய்து முன்பொரு காலத்தில் விளை நிலமாக இருந்த நிலப்பகுதியை பாலைவனமாக்கி வருகிறதா ?

(இ) ஆமெனில், இந்த ஆபத்தைத் தவிர்க்க அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) மணல் மேட்டதால் பாதிக்கப்பட்ட 485 ஏக்கரில், 221 ஏக்கர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, வருஷா வருஷம் ஏராள மான நிலங்கள் இம்மாதிரி பாதிக்கப்பட்டு வருகின்றன. பெருங் காற்று அடித்து, மணற் குவியலைக் கொண்டு வருகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் வேறு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அவ்வாறு மணல் வராமல் தடுப்பதற்கு மரங் களை வளர்க்க தக்க ஏற்பாடு செய்யப்படுமாவென்றும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வினா கீரப்போதன்பட்டியைப் பற்றியது. அதைப்பற்றி மட்டும் சொன்னேன். மற்றப் பகுதிகளில் ஏறத்தாழ 5,000 ஏக்கரில் இந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I know whether this sand is from the river and whether it is good for building purposes ?

The Hon. THIRU Si. Pa. ADITANAR : Sir, this is sand which is blown by the wind and sand dune is formed and it is not from the river.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, மதுரை மாவட் டத்தில், உத்தமபாளையம் தாலுகாவில், மணல் மேடிட்டதால் பெரு வாரியான நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றனவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது உசிலம்பட்டி தாலுகா, கீரப்போதன்பட்டி பற்றிய வினா. உத்தமபாளையம் தாலுகா பற்றிய விவரம் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*Recognition of A.M.I.E. Diploma as equivalent to B.E. Degree*

* 89 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Electricity Board has not recognised the qualification of A.M.I.E. Diploma as equivalent to that of B.E. Degree ; and

(*b*) if so, the reason therefor ?





பி.இ., பட்டத்திற்கு இணையாக ஏ.எம்.ஐ.இ. பட்டயத்திற்கு ஏற்பளிப்பு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பி.இ. பட்டத்திற்கு இணையாக ஏ.எம்.ஐ. இ., பட்டயத்திற்கு தமிழ்நாடு மின்வாரியம் ஏற்பளிக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை. ஏ.எம்.ஐ.இ. பட்டயமாக ஆக்கப் படுவதால் பி.இ.-க்குச் சமமாகக் கருதப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஏ.எம்.ஐ.இ. படித்த வர்கள் எத்தனை பேர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்று கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவரவர்களே, அது பற்றி விவரங்கள் என்னிடம் இல்லை. ஒரு டிகிரியை, டிப்ளமோவிற்கு சமமாகக்- கருத முடியாது என்ற விவரந்தான் இருக்கிறது. பட்டம் படித் தவர்கள் அதிகமாக இல்லாதிருந்தால், அவர்களை எடுத்துக் கொள்ளலா மென்றிருக்கிறது. எண்ணிக்கைப்பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, டிப்ளமோ படித்துவிட்டு ஏ.எம்.ஐ. இ. தனியாகப் படித்த பிறகு, அது பி.இ.-க்குச் சமமானது என்று மின்சார வாரியத்தைத் தவிர, எல்லா இடங்களிலும் சொல்கிறார்கள். அதைப் பட்டமாகக் கருதுவதற்கு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் என்ன தடை என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் பட்டயம் பெற்ற பிறகுதான் ஏ.எம்.ஐ.இ. படித்து வருகிறார்கள்.

மாண்புமிகு திரு ஒ. பி. இராமன் : தலைவரவர்களே, நான் ஏற் கனவே சொன்னேன். பி.இ. பட்டமாக இருக்கிறது. ஏ.எம்.ஐ.இ. பட்டயமாக இருக்கிறது. ஏ.எம்.ஐ.இ. பட்டமாக வரும்போது, பி.இ.-க்கு சமமாகக் கருதப்படும்.

*Gazetted Status to Supervisors, Grade I of Tamil Nadu Electricity Board.*

* 90 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state —

(*a*) whether it is a fact that Supervisors, Grade I, working in Tamil Nadu Electricity Board, who are considered to be equal to Junior Engineers, have not been given Gazetted status ; and

(*b*) if so, the reason therefor ?

[1974 சனவரி 28

### தமிழ்நாடு மின்சார வாரிய, நிலை, I மேற்பார்வையாளர்களுக்கு அரசிதழ் பதிவு நிலை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்; —

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்குச் சமமாகக் கருதப்படும் நிலை I மேற்பார்வையாளர்களுக்கு அரசிதழ் பதிவு நிலை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) அண்ட் (இ) இல்லை. முதல் நிலை மேற்பார்வையாளர்கள் இரண்டாம் நிலை அரசிதழ் பதவித்தரம் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அலுவல் பட்டியலில் இல்லாத பொருள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல் பட்டியலில் இல்லாதவற்றைக் கேட்க வேண்டுமென்று நினைக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் நாம் உருவாக்கியிருக்கிற விதிகளை ஒரு தரம் படித்துப் பார்த்துக்கொள்வது நல்லதென்று கருதுகிறேன்.

“ஒவ்வொரு நாளுக்கும் உரிய அலுவல் பட்டியல் ஒன்றைச் செயலாளர் தயாரித்து எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். இவ் விதிகளில் வகை செய்திருந்தாலன்றி, இயல்பான அல்லது சடங்கு முறை மரபுக்கேற்ற அலுவல்களைத் தவிர, அந்த நாள் அலுவல் பட்டியலில் இடம் பெறாத அலுவல் எதையும் அக் கூட்டத்தில் நடத்தக்கூடாது.”

இதை உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்குச் சொல்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, without a reference to the context, we are unable to understand what this was about.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : “Zero Hour”-ல் ஒரு கேள்வி கேட்பேன்; அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்” என்று ஒரு உறுப்பினர் கேட்கிறார். அது அஜெண்டாவில் இல்லை. அஜெண்டாவில் இல்லாததை அவர் கேட்கவும் கூடாது ; அமைச்சர் பதில் சொல்லவும் கூடாது.



1974 சனவரி 28]

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படி அவையில் சொல்லப்பட்டதா? அப்படிச் சொல்லப்பட்டிருந்தால், இப்படியொரு பதிலை அளிக்கலாம். தனியாகக் கேட்கப்பட்டதை, இப்படி அவையில் அறிவிக்கிறீர்கள். நான் கேட்கவும் இல்லை. கேட்காத ஒன்றை திரு. முத்துசாமி என்று சொல்லி, அவையில் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நேரடியாகப் பார்த்துக் கேட்டால் சொல்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கு மாத்திரமல்ல. எல்லோருக்கும் அது பொருந்துமென்பதால் சொல்கிறேன். கேட்டது உறுப்பினர் அவர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் கேட்கவில்லையா? தனியாகப் பார்த்துக் கேட்டார்கள். இருந்தாலும் எல்லோருக்கும் பொதுவாக இருக்குமென்று சொன்னேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, தங்களுடைய போதனை எல்லோருக்கும் நல்லதொரு படிப்பினையைக் கொடுப்பதாக இருக்கிறது. நாளையிலிருந்து மெம்பர்கள் எப்படி நடக்க வேண்டுமென்பதற்கு ஒரு அறிவுரையாக ஆற்றினீர்களென்று நான் எண்ணுகிறேன். ஆகவே, தலைவரவர்களின் வார்த்தையை நான் வரவேற்கிறேன்.

MR. CHAIRMAN : “Chapter VI of the Council Rules : Sittings of the Council and Arrangement of Business.

20. Sittings of the Council shall commence and conclude at such time as may be directed by the Chairman.

21. (1) A list of business for each day shall be prepared by the Secretary and circulated to all members.

(2) Except as provided in these rules, no business not included in the list of business for the day shall be transacted at any sitting except business of a formal or ceremonial nature ”.

## 3. அறிவிப்பு.

### திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கு அவையில் இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருமதி ராணி அண்ணாதுரை அவர்கள் தனக்கென்று தனி இடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த இடம் ஒதுக்கப்படுமென்று இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### எழுதும் தாள்கள் கிடைக்காததால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேர்வுகள் நடத்த இயலாமை குறித்து.

THIRU K. S. GANAPATHI : Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-availability of writing paper to schools and colleges and the consequent impossibility of holding examinations in the schools and the colleges.

430 பி.ப. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குத் தேவையான தேர்வு எழுதுவதற்கான விடைத் தாள்கள் உட்பட எல்லா எழுது பொருள்களும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் இதற்கான கட்டணத் தொகையிலிருந்து வாங்கப்பட வேண்டும். பள்ளிக்குத் தேவையான பொருட்கள் வாங்கும் பொறுப்பு பள்ளித் தலைமையாசிரியர்களைச் சார்ந்தது. தேர்வு எழுதுவதற்கான விடைத் தாள்கள் இல்லாத காரணத்தால், குறித்த காலத்தில் தேர்வுகள் நடைபெறவில்லை என்பதுபற்றிப் புகார் ஏதும் எப் பள்ளியிலிருந்தும் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்படவில்லை எனத் தெரிகிறது. அம்மாதிரி ஏதேனும் வரப்பெற்றால், உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளில் நடைபெறும் தேர்வுக்கான விடைத்தாள்கள் அந்தந்தக் கல்லூரி முதல்வர்களால் அனுப்பப்படும் தேவைப் பட்டியலுக்கேற்ப சென்னை மற்றும் திருச்சியிலுள்ள அரசு அச்சகங்களிலிருந்து அனுப்பப்படுகின்றன.

ஏதேனும் கல்லூரிகளில் விடைத்தாள்கள் இல்லை என்ற நிலையை கல்லூரிக் கல்வி இயக்குநர் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை நீக்க அவர் வழிவகை செய்வார். விடைத்தாள்கள் இல்லாத காரணத்தால் கல்லூரித் தேர்வுகள் ஏதும் பாதிக்கப்படவில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, எழுதும் காகிதத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பற்றாக்குறை காரணமாக, பள்ளிகளிலே எழுதும் தாள்கள் வாங்க முடியவில்லை. அவர்கள் தனியாக வாங்க வேண்டுமானால், குறித்த விலைக்கும் மேல் அதிகமான விலைக்குத் தான் கொடுக்கிறார்கள். பள்ளிகளுக்கு இந்த மாதிரி குறைந்த விலைக்கு தாள்கள் கிடைக்க இயலாது. எனவே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் கிடைக்க வேண்டிய காகிதத்தை அரசு தருவிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பற்றாக்குறை காரணமாக தேர்வுகள் போன்றவற்றிற்கு தாள்கள் கிடைக்காத நிலைமை ஏற்படுமானால், நம் மாநிலம் கட்டாயம் வற்புறுத்தலாம். மத்திய அரசாங்கம்கூட மற்ற வேலைகளையும் விட இதை முக்கியமாக எடுத்துக் கவனிக்க வேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்படும். அப்படிப்பட்ட தட்டுப்பாடு ஏற்படுவதாகத் தெரியவில்லை. தேர்வு எழுது



வதற்கு மற்றவைகளுக்கெல்லாம் விடைத்தாள்கள் கிடைப்பதில் இடையூறு, தடை ஏற்படாத அளவுக்கு பார்த்துக்கொள்வதற்காக பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகமும், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகமும் தகுந்த ஏற்பாடுகளை, நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் எழுதும் தாள்களைப் பொறுத்தவரையிலும், கிடைக்கவில்லை என்று சொன்னால், எல்லாப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் கொடுப்பதற்கான முயற்சியை கல்வித் துறையினராலே ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் நாமே ஏஜெண்டாக இருந்து வாங்கித் தரமுடியுமா என்பதற்கான வழிவகைகளைப் மேற்கொள்ளலாமா என்றுதெரியவில்லை. அதைப்பற்றிய குறைகளைப் போக்குவதற்கு வழிவகை இருக்கிறதா என்பதைப் பற்றி இந்தத் துறையைக் கொண்டு ஆராயலாம். ஆராய்ந்து அதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றனவோ அவைகளுக்கு மேற்கொண்டு முயற்சி எடுக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, தேர்வுகள் மார்ச் மாதத்திலே துவங்கப்படவிருக்கின்றன. பெரும்பான்மையான பள்ளிகளிலே எழுதும் தாள்கள் இல்லை. ஆகவே உடனே பரிசீலனை செய்ய வேண்டும். அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேர்வில் விடை எழுதுவதற்குத் தேவையான தாள்களைப் பொறுத்தவரையில், நாம் கட்டாயம் கொடுத்துத்தான் தீர வேண்டும். பற்றாக்குறை இருக்குமானால், குறை இல்லாத அளவுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த இரண்டு இயக்குநர்கள்—பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர்—அலுவலகங்களும் தக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றன. தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால், உடனே தெரிவிக்கலாம்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I want a clarification........

MR. CHAIRMAN : There is no question of clarification at all. Only two questions can be put by the hon. Member who called the attention of the Hon. Minister....

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I only wanted a clarification on the question raised—whether in view of this difficulty, the Government would consider oral examinations instead of terminal examinations.

MR. CHAIRMAN : There shall be no debate on such statements.

1974 சனவரி 28

## 3. அறிவிப்பு—தொடர்ச்சி.

### திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கு அவையில் இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருமதி ராணி அண்ணாதுரை அவர்கள் பற்றிய அறிவிப்பில் ஒரு சிறிய மாற்றம். அவர் எழுதியுள்ள கடிதம் :—

"சட்ட மன்ற மேலவையில் தி.மு.க. உறுப்பினர்களுக்கான இருக்கைகளில் ஒன்றை ஒதுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
ராணி அண்ணாதுரை."

ஆகவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினருக்கான இடம் அந்த அம்மையாருக்கு ஒதுக்கப்படும் என்று இந்த அவைக்கு அறிவித்துக்கொள்கின்றேன்.

## 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய நம் மாநில ஆளுநர் அவர்கள் இரு சபை அங்கத்தினர்கள் அடங்கிய கூட்டத்தில் நிகழ்த்திய உரையில், அரசு எடுத்துக்கொண்ட பல முயற்சிகளைப் பற்றி விளக்கியிருக்கின்றார்கள். முதலிலேயே, எடுத்தவுடன், தந்தை பெரியார் அவர்களுடைய மறைவு குறித்துத்தான் அவருடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார். தந்தை பெரியார் அவர்கள் அரை நூற்றாண்டுக்கு மேல் இந்த நாட்டிலே சீர்திருத்தத்தை ஏற்படுத்தவும், பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு பாடுபட்டவர் என்பதை இன்றைய அரசு அங்கீகரித்திருக்கின்ற நிலையிலே, ஆளுநர் அவர்கள் அதைக் குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டி, வரவேற்று நன்றியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே தமிழகத்தில் மின் சக்திக்காக என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, அதற்காக என்ன திட்டங்கள் உள்ளன, அதற்கு மாநில அரசு எடுத்துக் கொண்ட முயற்சி என்ன, மத்திய அரசு அதற்காகக் கொடுக்கின்ற ஒத்துழைப்பு என்ன இவைகளைச் சொல்லி, ஏற்படுகின்ற கால தாமதத்தையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். தமிழகத்திலே இந்த மின் சக்தி, உணவு உற்பத்திக்கு, விவசாயத்திற்கு ஒரு பெரிய ஆதரவாக, உதவியாக இருந்துகொண்டிருக்கின்றது. இன்று 6,50,000 பம்பு செட்டுகள் உணவு உற்பத்திக்காக, விவசாயத்திற்காக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனினும் எத்தனையோ செட்டுகள் மின் சக்தி பெற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றன. அவைகளை உடனடியாகச் செய்ய முடியாமல் இருப்பதற்கு பல காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே மின் சக்தியை எந்தெந்த வகையிலே உற்பத்தி செய்ய வேண்டுமோ அப்படி உற்பத்தி செய்யப்பட்டிருந்தாலும் கூட, தேவைகளையெல்லாம் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது.





அடுத்தபடியாக, இன்றைக்கு உர உற்பத்தி, விவசாயத்திற்கு வேண்டிய வசதிகள், தேவைகள் இவைகளெல்லாம் எதிர்பார்த்த அளவுக்கு பூர்த்தி செய்யப்படவில்லை. கடந்த காலங்களில் உரம் ஓரளவுக்கு விவசாயத்திற்காகக் கிடைத்துக்கொண்டிருந்தது. அதைக் கொண்டு தமிழகத்திலே உணவு உற்பத்தி, விவசாயம் மிகவும் தீவிரமாகச் செய்யப்பட்டு, பசுமைப் புரட்சியின் காரணமாக, அதிக அளவுக்குப் பெருக்கப்பட்டு, மற்ற மாநிலங்களுக்குக்கூட நாம் உதவுகின்ற நிலையிலே நாமெல்லாம் இருந்துகொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு ஏதேதோ காரண மாக, எண்ணெய்கூட வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெறவில்லை. அதனால் இந்த உர வகைகள் உற்பத்தி செய்வதிலே ரொம்பவும் பாதிப்பு இருக்கின்றது என்றெல்லாம் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதையெல்லாம் நாம் மறுத்துச் சொல்வதற்கில்லை. அதற்கு மாற்று வழிவகைகள் என்ன செய்ய வேண்டுமென்றுதான் கவனிக்க வேண்டுமே தவிர, அது கிடைக்கவில்லை, இது கிடைக்கவில்லை என்று நாம் சமாதானம் சொல்லிவிட்டுத் தப்பித்துக்கொண்டு விட முடியாது. குறிப்பாக விவசாய அமைச்சகப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர். அவர்கள் சமீபத்திலே பல கூட்டங்களிலே, பல மகாநாடுகளிலே பல ஆலோசனைகளைப்பற்றி விவாதித்திருக்கின்றார்கள். பல பரிசுகள் கூடக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதையெல்லாம் நாம் உடனடியாக ஒரு போர்க்கால, அவசரகால நிலையாகவே பாவித்து, செய்யவேண்டி இருக்கின்றதே தவிர, விவசாயத்திலே அது வரவில்லை, இது வரவில்லை என்று இன்னும் கொஞ்ச காலம் தள்ளிப்போடலாம், காலம் கடத்திப் பார்க்கலாம் என்று இருக்கக்கூடாது.

திரு கே. ராஜாராம் : தள்ளி வைக்கின்றது என்றால்,.....

திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : ஒத்தி வைப்பது. தள்ளி வைக்கின்ற நிலைமையிலே இன்று விவசாயம் இல்லை. விவ்சாயம் காலாகாலத்தில் செய்யவேண்டிய ஒரு தொழில். அது பருவத்தோடு செய்யவேண்டிய ஒரு தொழில். அதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். முற்காலத்தில் இயற்கை வளங்களைக் கொண்டு, எரு உரங்களைக் கொண்டு விவசாயம் செயல்பட்டு வந்தது. ஆனால் இப்போது இருக்கின்ற மக்கள் பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், தேவைக்கும் அந்தப் பழைய நிலைகள் எல்லாம் மாறி, அம்மோனியா, யூரியா, சல்பேட், பொட்டாசியம் போன்ற பி.ப.
தீவிரமான உரங்களை எல்லாம் தமிழகத்திலே உள்ள விவசாயிகள் ஓரள 4·40.
வுக்குப் போட்டுப் பழகிவிட்டார்கள். அதனால்தான் அவர்கள் கொஞ்சம் "லேஸி" யாக இருக்கிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். இந்த மாதிரி உர வகைகளை அறிமுகப்படுத்தி, அவைகள் குறையும்போது அவர்கள் திகைக்க வேண்டியிருக்கிறது, அவதிக்குள்ளாக வேண்டியிருக்கிறது. இம்மாதிரிக் குறையை நீக்க ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும். பசுமைப் புரட்சி உண்டாக்க, இந்த உரச்சக்திக்கு மாற்றுச் சக்தியை எந்தெந்த வகையில் செய்ய முடியுமோ அவைகளைச் செய்துதர வேண்டும். நம்முடைய மாநிலம் மற்ற மாநிலங்களைவிட ஓரளவுக்கு பற்றுக்குறை இல்லாத மாநிலம். மற்ற மாநிலங்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றபோது, அவைகளுக்கு நம்மால் இயன்ற அளவு உணவுப்பொருட்களை அளித்திருக்கிறோம். அப்படிப்பட்ட நம்முடைய மாநிலத்தில் 1973–74 ஆம் ஆண்டில் 74 இலட்சம் டன் உணவு தானிய விளைச்சல் தான் எதிர்பார்க்கப்

படுகிறது. இந்தக்குறைபாடு, பூச்சிக்கொல்லி மருந்து, உரப்பற்றுக்குறை காரணமாகத்தான் ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையைக் கருத்திற்கொண்டு எல்லோரும் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உணவு, உரம் வினியோகிப்பதில் பல குறைபாடுகள், குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்லப்படுகின்றன. உணவுப் பொருட்கள், உரம் போன்றவற்றை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகிப்பதில் பல தவறுகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். கொண்டுபோகிற வழியிலேயே அவைகள் எல்லாம் மாற்றப்பட்டு விடுகின்றன என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் நீக்க வேண்டும். கார்டுகள் மூலம் வினியோகிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த முறையிலும் பல தவறுகள் நடக்கின்றன என்று சொல்லுகிறார்கள். உணவு "கோடவுன்கள்" "ஹோல்சேல் டீலர்களிடம் இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவில், 4, 5 இடங்களில் நெல் மூட்டைகள், 5 ஆயிரம், 10 ஆயிரம் மூட்டைகள் களவு போய் விட்டன, மறைந்து விட்டன என்று சொல்லுகிறார்கள். அதற்காக ஏதோ நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், சிலர் கைது செய்யப்பட்டதாகவும், சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், சஸ்பென்ட் செய்யப்பட்டதாகவும் பத்திரிகையில் செய்தி வந்தது. இந்த நிலை ஒரு ஜில்லாவில் மட்டும் பல இடங்களில் எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி அரசு ஆராய வேண்டும். அரகண்டநல்லூரில், வெள்ளத்தில் பல ஆயிரக்கணக்கான மூட்டைகள் அடித்துச் செல்லப்பட்டன என்று சொல்லி அதில் பலர் ஊழல் செய்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எந்தவிதப் பாரபட்சமும் காட்டாமல், அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துறைமுகத்தை விரிவுபடுத்துவதைப்பற்றி யெல்லாம் கவர்னர் அவர்கள் உரையில் சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகம் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. அதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆனால், கடலூரில் போதுமான இடம், பல வசதிகள், ரயில் போக்குவரத்து உள்ளது. அதை நன்றாக விரிவுபடுத்தினால், உதவியாக இருக்கும். ஒரே இடத்தை விரிவுபடுத்தி, அங்கே மட்டும் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால், ஒரு இடம்தான் விரிவாகுமே யொழிய, மாநிலம் பூராவும் தொழில் விரிவடையாது, தொழில் வளர்ச்சி உயராது. ஆகவே எங்கெங்கே தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, அதை கடலூரில் செய்ய வேண்டும். கடலூரில், பல தொழில்கள் ஏற்படப்போவதாகவும், "ஈஸ்ட் ஏஷியாவில்" ஒரு பெரிய உரத் தொழிற்சாலை ஏற்படப்போவதாகவும் சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு, எப்படிச் செய்யப்படும் என்பதை நான் அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறேன். ஏற்கனவே உள்ள ஒரு உரத் தொழிற்சாலை பல ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடக்கின்றது. எந்தக் காரணத்தாலே அது நின்றது என்று தெரியவில்லை. அந்த உரத் தொழிற்சாலையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிரிமீயர் ஃபெர்டிலைசர் என்ற அந்தத் தொழிற்சாலை கடலூர் ஓ.டி.யில் இருந்தது இன்று மூடப்பட்டுக் கிடக்கின்றது. நான் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டபோது, அதைத் திறப்பதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த பெர்டிலைசர் தொழிற்சாலை மறுபடியும் வேலை செய்



வதற்கான பொருட்களை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் அவர்களிடத்திலே பேசும்போது, சீக்கிரத்திலே முடியும் என்று உறுதியாகச் சொன்னார்கள். நேற்று கூட மில் சொந்தக்காரரைக் கண்டு கேட்டேன். அரசாங்கம்தான் அதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அதற்கான ஆணைகளும் பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், அங்கே காரியாலயத்தில் இருக்கிறவர்கள் அனாவசியமாகக் காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அந்த மில்லுக்குச் சொந்தக்காரரான திரு. எம்.சி.டி. முத்தையா அவர்கள் சொன்னார்கள். பல கோடி ரூபாய் நஷ்டம் ஆகி, அங்கே வேலை செய்தவர்களுக்கும் வேலையில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று வருத்தத்தோடு சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று நான் சொன்னேன்.

அடுத்து, விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனம் சம்பந்தமாக எந்த அளவிற்கு தமிழகத்தில் இருக்கின்ற பெரிய ஆறுகளின் வாய்ப்புகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, எந்தெந்த அளவுக்கு இன்னும் இருக்கின்ற ஆறுகளைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கவர்னர் அவர்களுடைய உரையில் கூறியிருக்கிறார்கள். காலதாமதம் ஏற்படாமல் அவற்றைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஆற்றின் மூலம் நீர்ப்பாசனம் பெறும் நிலங்கள் குறைவாக இருக்கலாம். நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணம் இருக்கிறது. அவற்றில் போர் பைப் போட்டு, மின்சக்தியைப் பயன்படுத்தி பாசன வசதியைப் பெருக்க முடியும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ரிஸர்வ் நிலங்களாக இருப்பதை அம்மாதிரிச் செய்வதன் மூலம் பாசன வசதி கிடைக்கச் செய்ய முடியும். அந்த நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்கு எந்த அளவுக்குக் கொடுக்க முடியும் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் மின்சார அபிவிருத்திக்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள், விவசாயம், தொழில் அபிவிருத்தி, உணவு உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவற்றுக்கான காரியங்கள்பற்றிக் குறிப்பிட்டு, மத்தியிலே எச்சரிக்கையாக ஒரு விஷயத்தையும் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, உற்பத்தி பெருகியும் கூட, எதிர்காலம் மிகவும் சங்கடமானதாக, கவலைக்குரியதாக இருக்கிறது. இதை அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, நமக்கு இந்த உணர்வு ஏற்படுகிறது என்பதை எச்சரிக்கையாகக் கூறியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு நாம் பத்திரிகையில் குஜராத் மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறையின் காரணமாக நடைபெறுகின்ற கலவரங்கள் பற்றிப் பார்க்கிறோம். அங்கே அமைதியை நிலைநாட்டுவதற்கு ராணுவம் வரவழைக்கப்பட்டிருக்கிறது என்று நாம் படிக்கிறோம். உணவு உற்பத்தி குறைந்ததன் காரணமாக அங்குள்ள மக்கள் எவ்வளவு பெரிய அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனிக்கும்போது, இன்றைக்கு கவர்னர் அவர்கள் உரையில் தெரிவித்திருக்கும் எச்சரிக்கையைப் பார்க்கும் போது, நாம் எல்லாம் அந்த நிலைக்கு ஆளாகாமல், அதைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கையாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்பது என்னுடைய 4·50
அவா. தமிழ்நாடு இன்றைக்கு எவ்வளவோ அமைதியாக இருக்கும் பி.ப.

போது, எதிர் காலத்திலே இப்படி ஒரு பற்றுக்குறை இருந்தால் சிலர் அதைப் பயன்படுத்திக்கொண்டு, அதை ஒரு பெரும் அரசியல் சிளர்ச்சியாக மாற்றி, தமிழ் நாட்டிலே அமைதியின்மையைக் கொண்டு வந்துவிடத் தயங்கவே மாட்டார்கள். எனவே இது விஷயத்திலே நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். கவர்னர் அவர்கள் உரையில் கூட இது பறறி ஒரு எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை அரசாங்கம் நன்கு கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றபடி பின்தங்கிய மக்களுடைய நல்வாழ்விற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 91 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது பற்றி வரும் வரவு-செலவுத் திட்டத்தில் முழுமையான விவரங்களைக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். பின்தங்கிய மக்கள் நமது மாநிலத்தில் பெருவாரியாக இருக்கின்றார்கள். அவர்கள் அவ்வளவு பேருடைய முன்னேற்றத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை போதுமா என்றே அச்சப்படுகிறேன். அவர்கள் நல்ல முறையில் வளம் பெற வேண்டுமானால், ரூ. 91 கோடி இல்லை ஒரு ஆயிரம் கோடி ரூபாய்கூடத் தேவைப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே கீழ் மட்டத்திலுள்ள மக்களை உயர்த்துவதற்கு நமது அரசு மேலும் மேலும் பாடுபடும் என்று நம்புகிறேன்.

கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில், இவ்வளவு கோடிக் கணக்கில் பணத்தைச் செலவு செய்தும் இன்னும் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் நாட்டிலே இருக்கின்றன. இவற்றை ஒழிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று குறிப்பிட்டு, இவைபற்றிச் சிந்திக்க வேண்டும் என்று மிகத் தீர்க்க தரிசனத்தோடு சொல்லியிருக்கின்றார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, அவர் கூறியதானது அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கை என்பதைக் கருத்தில் கொண்டு நமது அரசு இப்படிப்பட்ட நிலைமைகள் மேலும் மேலும் வளராமல் இருக்க ஆவன செய்ய வேண்டும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாண்புமிகு தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கிற உரைக்கு என்னுடைய கெழுதகை உடன்பிறப்பு, தோழர் சங்கரலிங்கம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்களுக்கு ஆளுநர் அவர்கள் வீர வணக்கத்தினைச் செய்து தமது உரையினைத் தொடங்கியிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். மீண்டும் மதங்கள் அண்டா நெருப்பு அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கு தந்தை பெரியார் அவர்களை, புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்கள்,

"தொண்டு செய்து பழுத்த பழம், தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும், மனக்குகையில் சிறுத்தை எழும்"



என்று பாடி "அவரே பெரியார்" என உரைத்த வைர வரிகள் இவை. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த நமது பெரியார் அவர்களை "ஒரு சகாப்தம்", என்றும் "ஒரு கால கட்டம்" என்றும் "ஒரு திருப்பம்" என்றும் வர்ணித்தார்கள். நமது பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய தலைவர் நமது கலைஞர் அவர்கள், "பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்" என்று தமக்கே உரிய கவிதை நயத்தினால் பெரியாரைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மன்றத்தில் எழுதியதைப் படிக்கக் கூடாது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாண்புமிகு தலைவரவர்களே, சில மேற்கோள்களைக் கவிதை வரிகளில் சுட்டிக்காட்டுகின்றேனேயன்றி வேறல்ல. நம்மையெல்லாம் சிந்திக்கத் தூண்டிய ஒரு தலைவர் தந்தை பெரியார் அவர்கள். "சிந்திக்கத் தெரியாதவன் முட்டாள் , சிந்திக்கத் தெரிந்தும் சிந்திக்காமல் இருப்பவன் கோழை, சிந்திக்கத் தெரிந்ததை மாற்றிச் சொல்லுபவன் வஞ்சகன், சிந்தித்ததை வெளியிட மறுப்பவன் அயோக்கியன்" இது போன்ற பட்டியலில் சேராமல், செந்தமிழ் நாட்டினர் அனைவரும் சிந்திக்கும் திறன் படைத்தவர்களாக மாற வேண்டும் என அனைவருக்கும் உணர்த்திய பெருமை பெரியார் அவர்களையே சாரும். கடந்த 1969-ஆம் ஆண்டு முதல் இது நாள் வரை 767 ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களை அறங்காவலர்களாக நியமித்த பெருமையுடைய அரசாகும் நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்தப் பெருமையையெல்லாம் நமக்கு ஈட்டிக் கொடுத்தவர் நமது தந்தை பெரியார் அவர்கள் வழிவந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் நமது பெரு மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களும் என்றால் மிகையாகாது. இந்த அரசு, கோவில்களில் வழிபாட்டை நிகழ்த்தி வைக்கக்கூடிய அர்ச்சகர்கள் ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களாகவும் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தை உருவாக்கியது. அதனை நாட்டின் உயர் அற மாமன்றம் —சுப்ரீம்கோர்ட்,

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பிற்பட்ட, அரிசன வகுப்பினரை ஏற்கனவே நியமித்துக்கொண்டுதான் இருந்தார்கள். முந்தைய அரசின் காலத்திலும் அப்படி நியமிக்கப்படாமல் இருந்ததில்லை. ஏற்கனவே இருந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். கணபதி தலைமை.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்போது நியமித்தாலும் நியமிக்கலாம். நியமிக்காது போனாலும் போகலாம். இப்போது அப்படியில்லை. ஒவ்வொரு ஆலயத்திலும், ஐந்து பேர் அறங்காவலர்கள் என்றால், அவர்களில் நிச்சயமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் ஒருவர் இருக்க வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம்.

புலவர் ஓ. அறிவுடை நம்பி : ஆக, தலைவரவர்களே, நான் குறிப்பிட்டேன். 1969-ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரையில் 767 ஆதித் திராவிடர்களை அறங்காவலர்களாக தமிழக அரசு ஆக்கியுள்ளது. ஆதித்

திராவிடர்களை வழிபாட்டிற்குரிய அர்ச்சகர்களாக ஆக்க எண்ணியதை நாட்டின் உயர் அறமா மன்றம், ஆகம வேதங்களின்படி ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே அர்ச்சகர்களாக இருக்க முடியும், அரசியல் சட்டமும் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டியதை அடுத்து, அரசியல் சட்டத்தையே இதற்காகத் திருத்திட வேண்டும் என்று தமது இறுதிக் காலம் வரையில் எண்ணம் கொண்டிருந்தார் நமது தந்தை பெரியார் அவர்கள் என்பதை எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்காக அனைத்து எதிர்க் கட்சித் தலைவர்களும் கூடி அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றதொரு நல்ல எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதுவே தந்தை பெரியார் அவர்களுக்கு நாம் செய்யும் பெரியதொரு நன்றிக்கடன் என்று, தலைவரவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அது மட்டுமில்லை. மது விலக்கு இங்கே மட்டும் வேண்டும் என்று அங்கே எதிர் வரிசையில் வீற்றிருக்கும் நண்பர்கள் பலரும் வற்புறுத்திப் பேசினார்கள். மது விலக்கு இங்கு மட்டும் போதுமா ? சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருமைப்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள் இப்படிப் பேசலாமா என்றும் கேட்க ஆசைப்படுகிறேன். தமக்குச் சாதகமாக எடுத்துக்காட்ட அண்ணா அவர்களை நினைவு கூறுகின்றவர்கள் அண்ணாவை மறந்துவிடுகின்றார்களே என்று வருத்தப்படுகிறேன். ஆனால் இப்படிப் பேசுகின்றவர்களைப் பாண்டியில் பார்க்கிறோம். ஒருமையாக பாட்டிலில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இதற்கும் ஏதேனும் ஒரு விளக்கத்தினை இங்கே எதிர்க்கட்சியிலுள்ள தலைவர் அவர்கள் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

இன்று நமது அரசுக்கு எதிராக மாணவர்களைத் தூண்டிவிடுகிறதைப் பார்க்கின்றோம். இப்படி மாணவர்களைத் தூண்டிவிடுகின்றவர்களைப் பொறுத்த வரையில், நான் ஒன்றை எடுத்துச் சொல்லுவது நல்லது என்று கருதுகிறேன்.

பண்டித நேரு அவர்கள் ருஷ்ய நாட்டிற்கு ஒரு முறை சென்றிருந்த போது, அங்கே ஒரு இடத்தில் சுவரிலே அழகியதொரு ஓவியத்தைக் கண்டாராம். அந்த ஓவியத்தில், மாவீரன் லெனின் மாணவர் புடை சூழ வீற்றிருந்தான். அவ்வண்ண ஓவியத்தில் பொறிக்கப்பட்டிருந்த—மாவீரன் லெனின் மாணவர்களுக்கு அறிவுரை கூறுவதாகப் பொறிக்கப்பட்டிருந்த—வாசகங்களை உங்கள் நினைவிற்கு இந்த நேரத்திலே கொண்டு வருவது சாலச் சிறந்தது எனக் கருதுகிறேன். மாவீரன் லெனின் மாணவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்.

“மாணவர்களே ! உங்கள் முதலாவது கடமை, நன்றாகப் படிக்க வேண்டும். உங்கள் இரண்டாவது கடமை, நன்றாகப் படிக்க வேண்டும். உங்கள் மூன்றாவது கடமை, நன்றாகப் படிக்க வேண்டும்.”

என்று. அதனைப் பண்டித நேரு அவர்கள் ஒரு மாணவர்கள் கூட்டத்தில் நினைவு படுத்தி, “ருஷ்ய நாட்டு மாணவர்கள் லெனின் சொன்னபடி நடந்தார்கள். அதனால்தான் அந்த நாடு வெகு





விரைவில் முன்னேறியது. அவர்களைப் போல நீங்களும் நன்றாகப் படிக்க வேண்டும். மிக நன்றாகப் படிக்க வேண்டும்” என்று சொன்னாராம். இதை நான் இங்கே நினைவுகூறுவதற்குக் காரணம், “லெனினைப் பின்பற்றுகிறேன்” என்று சொல்லுகின்றவர்கள் லெனின் வார்த்தைகளைப் பின்பற்றுவதில்லை. அது போன்றே பண்டித நேருவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லுகின்றவர்களும் அவர்கள் சொன்னபடி நடப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை மாறி, இந்தத் தலைமுறையில் பெருந் தலைவர்களாக உள்ள அவ்வளவு பேரும் இதற்கான ஒரு தீர்வினைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்கே கவர்னர் அவர்களது உரையில் நமது அரசுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட பிறகு, அவர்கள் பிற மாநிலங்களைப் பார்க்கின்றார்கள். இங்கே பாராட்டு, அங்கே இருக்கும் நிலைமைகளைப் பார்த்தால் அங்கலாய்ப்பு ஏற்படுகிறது. நான் எடுத்துச் சொல்லுவேன், பீஹார் கவர்னர் திரு. பந்தாரே அவர்கள் கூறுகிறார்கள், “பீஹார் மாநிலத்தின் கபூர் அமைச்சரவையில் நான்கு அமைச்சர்கள் முறை தவறி நடந்துகொள்ளுகின்றார்கள். அவற்றை நிரூபிக்கப் போதுமான சான்றுகள் என்னிடம் இருக்கின்றன. அது போன்றே 18 அலுவலர்களையும் சில சட்ட மன்ற உறுப்பினர்களையும் பற்றிய ஆதாரங்கள் அவர்களை சிறைக்கு அனுப்பக்கூடிய அளவிற்கு என்னிடம் இருக்கின்றன, அமைச்சர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க நான் சில ஆட்களை நியமித்திருக்கிறேன்” என்று பீகார் ஆளுநர் திரு பந்தாரே அவர்கள் கூறுகின்றார்கள். இங்கே பாராட்டு ஆளுநர் அவர்களால், அங்கே பதைப்பு. இதைப் பார்த்து வேதனையின் மொத்த உருவங்களாகிறார்கள் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் !

தலைவரவர்களே, இங்கே இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குஜராத்தைப் பொறுத்த வரையில், முன்பு பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எஸ். இராமசாமி அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள், குஜராத் மாநிலத்தில் எப்படிப்பட்ட உணவுக் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்று. அந்தக் கிளர்ச்சியின் போது பங்கஜ் என்ற மாணவன், வயது 23 தான், குண்டடிக்கு ஆளாக்கப்பட்டான். குண்டடி பட்ட அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். மருத்துவ மனையில் அவனுக்குக் க்ளூகோஸ், ஊசி மூலம் செலுத்தப்பட்டது. ஆனால் அந்தக் க்ளூகோசிலே மண்ணெண்ணெய் கலப்படமாம். ஆகவே அவன் உயிர் பிரிந்தது. குண்டுக்குத் தப்பிய அவன் உயிர் மருந்தால் போக்கப்பட்டது. அதில் கலப்படம் என்ற காரணத்தினால். இப்படிப்பட்ட வருத்தமான செய்தி அங்கேயிருந்து கிடைக்கிறது. இங்கே பசுமைப் புரட்சி அங்கே வேறுவிதமான புரட்சிகள், விவசாயத்தைப் பெருக்க, நில வளத்துக்கும் மின்பெருக்கத்திற்கும் என்று, ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் மட்டும் ரூ. 1,200 கோடி என்ற அளவிலே இங்கே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நிகழ் ஆண்டிலே விவசாயத்திற்கு 548 கோடி ரூபாய் என்றும் மின் சக்திக்கு ரூ. 326 கோடி என்றும் பாசனத்திற்கு ரூ. 129 கோடி என்றும் குடிநீர் வசதிக்காக ரூ. 93 கோடி என்றும் ஒதுக்கியுள்ளார்கள்.

குடிநீர் வசதி செய்வது இருக்கிறதே, அது சாதி வேற்றுமையைக் களையக்கூடிய மிகப் பெரிய சாதனை என்று நான் இங்கு எடுத்துச் சொல்லிக் கொள்வேன். தாழ்த்தப்பட்டோர், தீண்டாதவர் வாட்டம் போக்கி, சில
5·00] பி. ப. சிக்கல்களை நீக்கி சமுதாயத்தில் ஏற்றம் காண வழிகோலி விட்டால், அந்தச் சமுதாயம் பொருளாதார வளர்ச்சியில் நாட்டம் கொள்ளக்கூடிய அமைப்பாக மாறிவிடும். இந்தக் கருத்தை ஒரு பெரியவர் "பொருளாதார வளர்ச்சி போதுமான அளவுக்கு நம்முடைய நாட்டிலே வெற்றி பெறுததற்குச் சமுதாய சிக்கல்கள் தான் காரணம்; எனவே தான் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டியும், ஏழை ஏழையாகவும், பணக்காரன் பணக்காரனாகவும் இருக்கின்ற நிலைமையை நாம் காண முடிகிறது" என்று சொன்னார். அந்த அறிஞர் முன்னாள் அமைச்சர் திரு வி. கே. ஆர். வி. ராவ் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்வேன். அவர் ஆங்கிலத்தில் குறிப்பிட்டுச் சொன்னார்

**"In spite of our repeated efforts of planning, we see in our country poor becoming poorer and the rich richer and on this aspect I say that our plans have not touched the importance of the growth of social factors in India by attending to the needs of the down-trodden in the society. We get ourselves closer to the country society and make way to achieve development".**

இவ்வாறு டாக்டர் ராவ் அவர்கள் கூறியுள்ளார்கள். இதை நான் இங்கே நினைவுகூறுகிறேன். ஏழைகள், பின்தள்ளப்பட்டோர் தேவையை உணர்ந்து குடிநீர் வசதி செய்யக்கூடிய திட்டம் இருக்கிறதே, அது மிகச் சிறந்த திட்டம். அதற்கு நமது அரசு வழி செய்திருக்கிறது. இதன் விளைவாக **4,914** சிற்றூர்களுக்கு, கிராமங்களுக்குக் குடிநீர் வசதி, **11,814** சிற்றூர்களுக்குப் போதுமான குடிநீர் வசதி, **2,210** சிற்றூர்களுக்கு மருந்து தெளிக்கப்பட்ட குடிநீர் வசதி என்று நமது மாநிலத் திட்டக்குழு மூலமாக நான் உணர்ந்தேன். பாராட்டுகிறேன். மகிழ்கிறேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மின்சக்தி இரண்டும் கண் போன்றிருக்கின்றன. இவற்றில் போதுமான அளவுக்கு அக்கறை காட்டினாலொழிய, நம்முடைய நாட்டினுடைய வளத்தைப் பெருக்க வழியில்லை. அந்த வகையில் மேலை மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழக அமைப்பு கண்டிருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும். அந்த விதத்தில் இன்றைய தினம் அதற்கான ஆய்வை நடத்துவதற்கு, தமிழகம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் கோவா போன்ற மாநிலங்களின் பிரதிநிதிகள் கூட்டம் கூட்டப்பட்டு, அதன் பரிந்துரைகள் இங்கே வழங்கப்பட்டிருப்பது அறிந்து, இது நமக்குக் கிடைத்திருக்கின்ற மகத்தான வெற்றி என்று நான மகிழ்ச்சியடைகிறேன். இந்த நோத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்வேன். ஒரு நாட்டை வளமாக்கும் திட்டங்களை, அமைப்புகளை உருவாக்கும் பணியில் நாட்டைத் தீவிரமாக முழுதும் உணர்ந்தவர்கள் பங்குபெற வேண்டும் என்பதை அறிஞர் ஆஸ்கர்லாங்கே தன்னுடைய கருத்தாக எடுத்துச் சொன்னார். அந்தக் கருத்து நமது டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று எண்ணிப்பார்த்து பூரிப்படைகிறேன். அவர் சொன்னார் :—



**"The particular application to a country like India must be undertaken by persons more competent than the writer of those lines".**

எழுதுவோர்களைவிட காரியத்தில் திறனுடையவர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் நமது பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் ஏழை எளியவர்களின், வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்பதில், வேளாண்மையைப் பெருக்க வேண்டுமென்பதில், தொழில்களைத் தொடங்க வேண்டுமென்பதில், நாட்டில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதில் அக்கறையுடன் வழிநடத்திச் செல்கிறார். அப்படிப்பட்ட கலைஞர் அரசை வரலாற்றுச் சிறப்புமிக்க அரசு என்று எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?

நான் இன்னொன்றையும் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறேன். மின் ஆற்றல் பற்றுக்குறையைத் தெளிவாக்கி, ஆளுநர் அவர்கள் நாம் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. மேட்டூர் திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை மிக வருத்தத்தோடு எடுத்துச் சொல்லி, காடம்பாறை போன்ற நீரேற்று மின் சேமிப்பு உற்பத்தி திட்டங்களை மேற்கொள்ளவிருப்பது நாம் தொழில் வளங்கள் ஓங்க எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு மிக அடிப்படையானது என்று ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். நமக்கு இங்கே, **1,185** மெகாவாட் மின்சக்தி பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது அல்லவா, அதை நான் சுட்டிக்காட்டுகிறபோது, தூத்துக்குடிக்குக் கிடைத்திருக்கின்ற அனுமதி மேட்டூருக்கும் கிடைத்திருக்குமானால், இந்தப் பற்றுக்குறையைச் சமாளிக்க வழி கிடைத்திருக்கும் என்று எண்ணி, அதனை இங்கே வருத்தத்தோடு சொல்லாமல் இருக்க முடியவில்லை. அனல் மின் உற்பத்தி நிலையங்களைப் பொறுத்த வரையிலும், டாக்டர் எம். ஆர். சீனிவாசன் மிக நல்ல கருத்துக்கள் அமைந்த ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதனைச் சுட்டிக் காட்டலாம் என்று கருதுகிறேன். கல்பாக்கம் திட்ட தலைமைப் பொறியாளரும், துணை இயக்குநருமாக இருக்கக் கூடிய டாக்டர் எம்.ஆர். சீனிவாசன் அவர்கள் 8 வகையான திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அதை நமது அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1. அனல் மின் நிலையங்களின் முழுத் திறனையும் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

2. கொதிகலன்களில், தண்ணீரால் ஏற்படக்கூடிய ரசாயனக் கூறுபாடுகளைக் கண்டாய்ந்து, நீண்ட காலப்பணிக்கு அவை பயன்படத்தக்கதாகச் செய்ய வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

3. கொதிகலன்களுக்கு நீரினால் ஏற்படும் அரிப்புத் தன்மையை அகற்ற அல்லது குறைக்க வழிகாண வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

4. அனல் மின் நிலையங்களின் தேவைக்கேற்ப பல சாதனங்களை விரிவுபடுத்த அல்லது இணைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

5. நீர்விசை மின்சக்தி நிலையங்களில் பருவ காலங்களுக்குப் பின் தேவைப்படும் தண்ணீரை நீர்ப்பாசன வசதிக்கு அளித்த பின்னர், தேக்கி வைத்து, செயற்பட வேண்டும். இதற்கான மதிப்பீடுகளை (தேவைப்படும் தண்ணீரின் அளவு விவசாயத்திற்கும், மின்விசை சக்தி உற்பத்திக்கும் என) கணக்கிடவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

6. பல சிறிய, நீர்விசை மின்சக்தி நிலையங்களை நேராகப் பயன்படுத்தும் வகையில் நிறுவவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

7. மின் சக்தியைப் பகிர்ந்து அளிப்பதிலும், சேகரிப்பதிலும் ஏற்படுகின்ற விரயத்தைத் தவிர்க்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

8. மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் கண்டறிந்துள்ள வகையில் சில தொழில் நுட்பக் கருத்துக்களை இணைத்து செயலாற்ற முற்படுதல் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நம்முடைய அரசு அத்துறையைச் சார்ந்த ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து நல்ல விதத்தில் கேட்டறிந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்வேன். மின் சக்தி நுகர்வில் உலக நாடுகளோடு இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இந்தியாவில் மிகக் குறைவாக இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், 6,550 கிலோவாட் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இங்கிலாந்து 3,481 கிலோவாட், மேற்கு ஜெர்மனி 3,061 கிலோவாட், பிரான்ஸ் 2,887 கிலோவாட், கிழக்கு ஜெர்மனி 2,868 கிலோவாட், ஜப்பான் 2,337 கிலோவாட்,ரஷ்யா 1,710 கிலோவாட், பரிதாபத்துக்குரிய இந்தியா 78 கிலோவாட் என்று



அவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் ஆண்டு மின் நுகர்வு 11·1 சதவீதம் வளர்ச்சி அடைந்திருக்கிறது, வீட்டு நுகர்வு 9·4 சதவீதமாகவும், வணிக நுகர்வு 13·8 சசவீதம், தொழில் நுகர்வு 12·5 சதவீதம், பொது ஒளி நுகர்வு 10·7 சதவீதம், மின் ஊர்தி நுகர்வு 11·1 சதவீதம், நீர்ப்பாசனம் நுகர்வு 13·0 சதவீதம் ஆகவும் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட பெருமைப்படுகிறேன். விவசாயத்துக்காக 24·6 சதவீதம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டை இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியா முழுவதிலும் 7 யூனிட் தான் விவசாயத்திற்கு. ஆனால் தமிழ்நாட்டில் 27·8 யூனிட்டு, இந்தியா முழுவதற்கும் தொழில் நுகர்வு 57·5 யூனிட் ஆகும். தமிழ்நாட்டில் 74·5 யூனிட். வணிகம் இந்தியா முழுவதற்கும் 4·3 யூனிட்; ஆனால் தமிழ்நாட்டில் 8·7 யூனிட். வீட்டுக்கு இந்தியா முழுவதற்கும் 6·5 யூனிட்தான். தமிழ்நாட்டில் 7·7 யூனிட். மற்ற வகையில் இந்தியா முழுவதற்கும் 0·7 யூனிட் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் 1·8 யூனிட் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக மொத்தம் தமிழ்நாடு 120·5 யூனிட் என்றும், இந்தியா 76 யூனிட் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையில் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்திருப்பதைப் பாராட்ட வேண்டும். பாராட்டிப் போற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

நான் இன்னும் சிலவற்றைச் சொல்லுகிற நேரத்தில், நான் தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து ஆசிரியர் பெருமக்களிடமிருந்து வாக்கு வாங்கிக் கொண்டு வந்தவன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த மாவட்டத்திற்குச் சிறப்புத் தரக்கூடிய இடம் வள்ளலார் வாழ்ந்திருந்த வடலூர் ஆகும். இன்றைய தினம் காசிக்கு அருகாமையில் புத்தர் இருந்த இடமாகிய சாரநாத்தை மிகச் சிறப்புக்குரிய இடமாக உருவாக்கியிருக்கிறார்கள். அது போல், வடலூர் நகரத்தில் 5 மைல் சுற்றளவுக்கேனும், அல்லது 3 மைல் அளவுக்கேனும், அங்கே யாரும் புலால் உண்ணக்கூடாது அல்லது புலால் விற்பனை செய்யக்கூடாது என்றும், மதுக் கடைகள் இருக்கக் கூடாது என்றும், வள்ளலார் கொள்கை வழிப்படி, அந்த இடம் வள்ளலார் நகரமாக உருவாக்கப்பட வேண்டுமென்றும் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்வேன். நம்முடைய தமிழகத்தில் மிகச் சிறந்த ஊர்களாகிய மதுரை, திருச்சி, நெல்லை, தஞ்சை, கடலூர் போன்ற ஊர்களிலிருந்து இரவு 10 மணிக்கு மேல் பேருந்துகள் வசதியில்லை. ஒரு 50 மைல் தொலைவுக்காவது, இரவு 10,12 மணி அளவிற்கு பேருந்துகள் விடவேண்டும் என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நான் வாக்கு வாங்கிக் கொண்டு வந்தது ஆசிரியர் பெருமக்களிடத்தில் என்ற காரணத்தால், ஆசிரியர்களை நினைவு கூறாமல் விடுவது தவறு என்ற காரணத்தால் ஒன்றே சொல்வேன், அது நன்றே சொல்வேன், பி. .டி ஆசிரியர்களுக்கும் முழுத் தகுதி படைத்த

**தமிழ் ஆசிரியப்** பெருமக்களுக்கும் எப்படி 10 ஆண்டு காலத்தில் **தேர்வு** நிலை கிடைக்கிறதோ, அதே போல் எல்லாத் தரப்பு ஆசிரியப் பெருமக்களுக்கும் 10 ஆண்டு காலத்தில் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பெருமதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றிதெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

5·10 பி. ப. திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வருகிற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது தமிழ் நாட்டிலே நடைபெறக்கூடிய, நடைமுறையிலே இருக்கக் கூடிய பலவிதமான காரியங்களைப் பற்றி ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலேயும், எனக்கு முன்னாலே பேசிய, மாண்புமிகு உறுப்பினர் புலவர் அறிவுடைநம்பி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ் நாட்டிலே முக்கிய பாசன வசதிகளைப் பற்றியும், மின் சக்தியைப்பற்றியும், உணவு சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும், இன்னும் மற்ற விவரங்களைப் பற்றியும் அடுத்த ஐந்தாண்டு காலத்திலே என்ன விதமான முன்னேற்றம் தமிழ்நாட்டிலே ஏற்படும் என்பதையும் விவரமாக ஆளுநர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே நாம் மத்திய அரசாங்கத்திலேயிருந்து எவ்வளவு பணம் கேட்டோம், எவ்வளவு நமக்கு வந்தது என்பது பற்றியும், அதை என்ன கிரைடீரியா, என்ன அடிப்படையிலே மத்திய அரசாங்கத்தார் கொடுத்திருக்கிறார்கள், அந்த கிரைடீரியா என்ற அடிப்படை நம்முடைய மாநில அரசுக்கு எப்படி பாதகமாக அமைந்திருக்கிறது என்பது பற்றியும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த பலவிதமான தொழில்கள் தமிழ் நாட்டிலே அடுத்த ஐந்தாண்டு காலத்திலே நிறுவப்பட வேண்டும். கிட்டத்தட்ட 9 விதமான தொழில்கள் தமிழ்நாட்டிலே நிறுவப்பட வேண்டும் என்பது பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஐந்தாண்டுத் திட்டம் என்றால், மத்திய அரசாங்கத்தாராலே கடந்த நான்கு திட்டங்கள் அமுலாக்கப்பட்டு, இப்போது ஐந்தாவது திட்டத்திலே நாம் நின்று கொண்டிருக்கிறோம். இந்த ஐந்தாண்டுத் திட்டங்களாலே என்ன பலன் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் புலவர் அறிவுடைநம்பி அவர்கள் சொன்னார்கள். அதிலே அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். திரு வி.கே.ஆர்.வி. ராவ் அவர்களே சொன்னார்கள், ஏழைகளாக இருப்பவர்கள் இன்னும் அதிகமாக ஏழைகளாக ஆகிவிட்டார்கள் என்று. திட்டக் கமிஷன் உறுப்பினராக இருந்த அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது மத்திய அரசாங்கத்தின் சார்பிலே மாநில அரசு வகுக்கக் கூடிய திட்டங்களாக இருந்தாலும் சரி, சில முக்கியமான காரணங்களுக்காகத்தான் இந்த ஐந்தாண்டுத் திட்டம் என்பதையே, நாம் - மத்திய அரசும், மாநில அரசுகளும்—போட்டுக்கொண்டிருக்கிறோம். அதிலே என்ன முக்கியம் என்று பார்த்தீர்களானால், அதிலே குறிப்பாக, ஏழ்மை நிலையை அகற்றுவது என்பது முக்கியமான கருத்து. இரண்டாவது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்பது. மூன்றாவது கருத்து, "அண்டர் எம்ப்ளாயிடு" என்ற அளவிலே தேவையான வேலை இல்லாது இருப்பவர்களுக்கு தேவையான அளவு வேலை கொடுக்கக் கூடியது என்பது. இதற்கு அப்பாலே, விலைவாசிகள் ஒரு அளவிலே நிற்க வேண்டும் என்ற கருத்து. இந்தக் காரணங்களுக்காகவும், இன்னும் முடிவாக, பணம் ஒரு சிலரிடத்திலே தங்கியில்லாமல், பணக்காரர்கள் பணக்காரர்களாக



இருந்து, ஏழைகள் ஏழ்மை நிலையில் இல்லாமல் சோஷல் ஜஸ்டிஸ் என்ற அடிப்படையிலே, பணக்காரர்களிடத்திலே இருக்கிற பணம் ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற காரணத்திற்காகவும்தான், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி நாம் திட்டங்களையெல்லாம் போட்டிருக்கிறோம். ஆனால் கடந்த நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவு என்ன என்று பார்த்தீர்களானால், இப்பொழுது ஐந்தாவது திட்ட காலத்திலே என்ன நடைபெறும் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். அதிலே ஒன்று "unemployment in India during the plan period" எப்படி ஆகியிருக்கிறது என்பது பற்றிச் சொன்னார்கள். When the first plan was launched there were 33 lakhs unemployed. முதல் ஐந்தாவது திட்டம் ஆரம்பிக்கிறபோது, இந்திய நாட்டிலே 33 லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். அந்த முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிறபோது எவ்வளவு பேர் வேலையில்லாது இருந்தார்கள் என்றால், 53 லட்சம் பேர். அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிறபோது, வேலையில்லாதவர்கள் 71 லட்சமாக உயர்ந்தார்கள். பிறகு மூன்றாவது திட்டம் முடிகிறபோது, 96 லட்சம் பேர் வேலையில்லாது இருந்தார்கள். நான்காவது திட்டம் முடிகிறபோது, வேலையில்லாது இருப்பவர்கள் 176 லட்சம் பேர் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுடைய தலைவராக பாராளுமன்றத்திலே இருக்கிற திரு பிலு மோடி அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இந்திய நாட்டிலே இருக்கக் கூடிய அவ்வளவு ஏழை மக்களும் வேலை இல்லாமல் இருக்க வேண்டுமானால், எவ்வளவு திட்டங்களைப் போடவேண்டும் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் திட்டத்திற்குத் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்ற காட்சியைப் பார்க்கிறோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டு முடிந்த பிற்பாடு, இப்பொழுது 176 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருப்பது 3½ கோடி பேருக்குப் போய் விடும் நிலைமை ஏற்படும். அதே போல இந்திய நாட்டினுடைய வறுமையைப் போக்க நாம் திட்டம் போடுகிறோம். அந்த வறுமையின் நிலைமை என்ன என்று பார்த்தால், "பிஸோர் பார்ட்டி லைன்" என்று சொல்வார்கள் அதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரிச் சொல்வார்கள், 36 ரூபாய்க்கு கீழ் என்று சொல்கிறார்கள், 15 ரூபாய்க்குக் கீழ் என்று சொல்கிறார்கள். 36 ரூபாய்க்குக் கீழ் என்ற அளவிலே பார்த்தாலும்கூட, 1948 ஆவது ஆண்டிலே நமது நாட்டிலே, 15 கோடி பேர் 36 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களாக இருந்தார்கள். 1970-லே நாம் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிய பிற்பாடு 22 கோடி பேருக்கு 36 ரூபாய்க்குக் கீழே வருமானம் வரக்கூடிய அளவிலே அதைப் பார்க்கிறோம். இன்னொரு கணக்கு, "கிரீன் ரெவல்யூஷன்" "அக்கிரிகல்ச்சர் லேபர்" என்று டாக்டர் ப்ரதான் என்பவர், ஒரு பெரிய எகனாமிஸ்ட், ஒரு புத்தகம் எழுதினார். அதிலே மாதத்திற்கு 15 ரூபாய்க்குக் கீழே சம்பாதிக்கக்கூடியவர்கள் இந்திய நாட்டிலே எவ்வளவுபேர் இருந்தனர் என்று பார்த்தால், 1960-61-லே 38 சதவிகிதம் பேர் 15 ரூபாய்க்குள்ளே, வருமானம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். 1967-68-லே 53 சதவிகிதம்பேர் வருமானம் அப்படி ஆகிவிட்டது. எனவே, 25 சத விகிதம் பேர் வறுமையில் அதிகம் ஆகிவிட்டார்கள் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டிலே, 1960-61-லே 46 சத விகிதம் பேர் 15 ரூபாய்க்கு உள்ளாக ஒரு மாதத்திற்கு சம்பாதித்துக் கொண்டிருந்தவர்கள், 1967-68-லே 51 சதவிகிதம் பேர்

என்ற கணக்கைப் பார்த்து, தமிழ் நாட்டிலேயும், அகில இந்தியாவிலேயும் வறுமையிலே உள்ளவர்கள் நிலைமை இன்னும் அதிகமாகப் போகிறது என்ற கணக்கைக் கொடுத்தார்கள்.

அடுத்து, விலைவாசிகளைப் பற்றி, விலைவாசிகளைக் குறைக்கத் திட்டங்கள் போட்டிருக்கிறோம் என்று வைத்திருக்கிறோம். 1950–51–ஐ "பேஸ் இய"ராக வைத்துக்கொண்டால், 1960–61–லே விலைவாசி உயர்வு, 12 சத விகிதம் 1965–66–லே 47 சத விகிதமாக உயர்ந்தது. 1969–70–லே 197 சதவிகிதமாக உயர்ந்தது. 1970–71–லே 205 சத விகிதமாக அது ஆயிற்று. 1972–லே 215 சத விகிதம் ஆயிற்று. அதற்குப் பிறகு 1973–74–ல் விலைவாசி 25 சத விகிதம் அதிகரித்துக்கொண்டு வருகிறது என்று பார்த்தீர்களானால், இந்த ஐந்தாண்டுத் திட்டங்களை மத்திய மாநில அரசுகள் போடுகிற காரணத்தாலே, ஒன்று, ஏழ்மை அதிகரிக்கிறது. இரண்டாவது, வேலையில்லாத் திண்டாட்டம் இந்திய நாட்டிலே அதிகமாக ஆகிவிட்டது. மூன்றாவது, விலைவாசி கட்டுப்பாடு இல்லாமல் உயர்ந்து கொண்டு போகின்றது. நான்காவது, இந்திய நாட்டிலே பணக்காரர்கள் அதிகப் பணக்காரர்களாகவும், ஏழைகள் அதிக ஏழைகளாகவும் ஆகிறார்கள். இதுதான் ஐந்தாண்டுத் திட்டங்களாலே நாம் பார்க்கிற பலன். இப்படி நிலைமை இருக்கிறபொழுது, இன்னொரு ஐந்தாண்டுத் திட்டம் வருகிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் வருகிறபொழுது, இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை மத்திய சர்க்கார் இப்படிப் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். மாநில சர்க்கார் அந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே நமது மாநில அளவிலே நமக்கும் ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே நமது மாநில அரசு எவ்வளவு ரூபாய் மத்திய அரசிடத்திலேயிருந்து எதிர்பார்த்தது என்று பார்க்கிறோம். 1,528 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து நாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று நாம் ஒரு திட்டம் போட்டுக் கொடுத்தோம். அந்த 1,528 கோடி ரூபாயிலே அவர்கள் கொடுக்கக்கூடியது என்று சொல்வது 1,480 கோடி ரூபாய்தான் என்று இருக்கிறது. இன்னும் அதிகமாக வேண்டும். நமது திட்டத்திலே இன்னும் அதிகமாகப் பணம் கேட்கிறோம் என்ற நிலைமையைப் பார்க்கிறபோது, இந்தத் திட்டமே போட வேண்டுமா என்ற கருத்தை நான் முதன் முதலிலே சொல்கிறேன். மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி, அந்த அடிப்படையிலேதான் நாம் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் பணம் கேட்கிறோம். பாசன வசதிக்காக, மின் சக்திக்காக, பணம் எடுக்கிறோம். இப்படி மத்திய அரசும், எல்லா மாநில அரசுகளும் சேர்ந்து போடக்கூடிய திட்டங்களாலே பயன் இல்லை என்று தெரிந்த பிறகு, நாமும் அதைச் செய்துகொண்டிருக்கவேண்டிய அவசியம் என்ன என்று நான் மாநில அரசாங்கத்தாரைக் கேட்கவேண்டிய அவசியத்திலே இருக்கிறேன். சரி, திட்டம் போடுகிறார்கள் என்றால், அந்தத் திட்டமே வேண்டாம் என்ற கருத்து நிலவி வருகிறது. டாக்டர் மின்ஹாஸ் என்பவர், திட்டக்குழு உறுப்பினராக இருந்தவர், இரண்டு ஆண்டு காலத்துக்கு திட்டத்தை ஒதுக்கி வைத்து, "பிளான் ஹாலிடே", திட்டத்திற்கு விடுமுறை விடவேண்டும் என்று சொன்னார்கள். அதைப்போலவே, திரு பூதலிங்கம் அவர்களுங்கூட இரண்டு ஆண்டுகள் திட்டங்கள் இல்லாமல் இருந்தால் நாட்டில் ஒரு ஸ்திரத் தன்மை ஏற்படும் என்று சொன்னார்கள். வருகிற பணத்தையெல்லாம் மாநில சர்க்காராக இருந்தாலும் மத்திய சர்க்காராக இருந்தாலும், பொதுத் துறையிலே கொண்டுபோய்ப்



போடுகிறோம். பொதுத் துறையிலே போடுகிற பணத்திற்கெல்லாம் எந்த விதமான ரிட்டர்ன் லாபமும் இல்லை. அதனால் விலைவாசிகள் ஏறுகின்றன. விலைவாசிகளை தடுத்து நிறுத்த வேண்டுமானால், பிளான் என்ற திட்டத்துக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசுக்குச் சொன்னார்கள். நமது உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே, விலைவாசி உயராத, பணவீக்கம் இல்லாத ஒரு திட்டத்தைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என். டி. சி. மீட்டிங்கிற்குப் போகிற போது பேச வேண்டும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நமது மாநில சர்க்கார் ஒரு முடிவை எடுத்துக்கொள்வது நல்லது என்ற கருத்தைக்கூட நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்வேன். அந்தத் திட்டத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு விடுமுறை அளித்தால் நல்லது என்ற ஒரு கருத்தைக் கூட சொல்லலாம். ஆனால் இப்படிச் சொல்கிறபோது, நாம் நம்முடைய பிளான் என்ற திட்டத்தை வேண்டாம் என்று இரண்டு ஆண்டுகள் தள்ளி வைப்போமானால் ,அவர்களிடமிருந்து வருகிற பணம், குறைந்து போய்விடுமே, என்ற கருத்தும் நிலவும். ஏனென்றால் அவர்களிடமிருந்து வருகிற பணம் பூராவும், இந்த மாநிலத்திற்கு வருகிற பணமாக இருந்தாலும், இந்திய நாட்டிலே ஒவ்வொரு திட்டத்திற்கும் திரட்டுகிற பணத்திலே 70 சதவிகிதம் "பிளான் ஃபண்ட்ஸ்" என்று கொடுக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது, எப்படி நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்வது என்ற கருத்துக்கூட நிலவலாம். ஆனால் நான் ஒரு விஷயத்தைச் சொல்வேன். மாநில அரசுக்கு அதிகாரங்கள் இல்லை என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகிறது. மத்திய அரசாங்கத்தினிடத்தில் அடிக்கடி சென்று கேட்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு நண்பர் திரு. தீக்ஷிதர் அவர்கள் கூட ஒரு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இங்கே பேசுகிறபோது, சொன்னார்கள். "காங்கிரஸ் ஆட்சியிலே இருக்கிற போது காவடி தூக்குகிறார்கள், காவடி தூக்குகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சாதாரணக் காவடி தூக்கினார்கள். நீங்கள் பால் காவடி தூக்குகிறீர்கள்" என்று கூடச் சொன்னார்கள். ஏனென்றால் காவடி தூக்குகிற நிலைமை எந்த ஆட்சியாக இருந்தாலும்—அது காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் அல்லது இன்னும் சில ஆண்டுகள் கழித்து எந்தக் கட்சி வந்தாலும்—இருக்கும் என்பது திரு. தீக்ஷிதர் அவர்களுக்குத் தெரியும். காரணம் என்னவென்று சொன்னால், அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் குறைந்த அளவுக்கு இருக்கின்றன. இப்போதிருக்கின்ற சட்ட வரைமுறையிலே, மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இன்னின்ன அதிகாரங்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். மாநில அரசுகளுக்குப் பொதுவான அதிகாரங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் மத்திய அரசாங்கத்திடம் அடிக்கடி போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முதலமைச்சரவர்கள் செல்கிறார்கள்; தொழிலமைச்சரவர்கள் செல்கிறார்கள். அவர்களிடம் போய் பணம் கேட்பதற்காக அடிக்கடி போகவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏன் இந்த துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையில் பணத்தைப் பிரித்துக் கொடுக்கும் அளவிலே, இரண்டு பேருக்கும் நிலையான நியாயமான ஒரு கமிஷன் இல்லை.

"பைனான்ஸ் கமிஷன்" பற்றி நம்முடைய ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய நிதிக் கமிஷனுக்கு "பிளான் ..பண்ட்ஸ்" என்று சொல்லக்கூடிய திட்டத்திற்கான ஒதுக்கீடுகளைப் பற்றிப் பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆர்ட்டிகிள் 282-ன்கீழ் மத்திய அரசாங்கம் எந்தத் தொகையை, எந்த மாநில அரசுக்கு ஒதுக்க வேண்டுமோ அதை அவர்கள் இஷ்டப்படி ஒதுக்குகிறார்கள். அதை நாம் பார்க்கிறோம். ஆகவே மத்திய அரசாங்கத்திடத்தில், மாநில அரசுகள் போகின்றன. அண்மையில்கூட திரு. வி. பி. நாயக் அவர்கள் இதைப் பற்றி ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் வந்தது. அவர்கள் காவடி தூக்குவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்தவரான திரு. வி. பி. நாயக் சொல்லியிருக்கிறார்.
பி.ப. 5·20 "பசித்த குழந்தைகள் தாய் முகத்தைப் பார்ப்பதைப்போல, நாங்கள் மத்திய அரசினுடைய—இந்திரா காந்தியினுடைய—முகத்தை, பசித்த முகத்தோடு பார்த்து, பணத்திற்காக எங்க வேண்டியிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்தபடியாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. ஏ. கே. கோபாலன் ஒரு புத்தகம் எழுதினார்கள். "ரெமினிசென்ஸஸ்" என்ற அந்தப் புத்தகத்தைப் பார்த்தேன். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் பார்த்தேன். அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "எங்களுடைய ஆட்சி பல ஆண்டுகள கேரளாவில் நடந்தது; இரண்டு முறை ஆட்சி செய்தோம். அதற்குப் பிறகு எங்களுக்கு என்ன தோன்றியதென்று சொன்னால், இந்த நாட்டினுடைய அதிகாரம் மாநில அரசினிடத்தில் இல்லை; மத்திய அரசிடம்தான் இருக்கிறது என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் இரண்டு தடவை ஆட்சி பண்ணியதால் நாங்கள் தெரிந்துகொண்டதென்று சொன்னார்கள். அதிலே திரு. ஏ. கே. கோபாலன், "Effective power in India definitely did not rest at the State level but at the Centre. The financial relationship between the Centre and States was that of a patron and client." என்று சொன்னார்கள். "பிச்சை போடுகிறவனுக்கும் அதை வாங்குகிறவனுக்கும் இடையில் என்ன உறவிருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் உறவிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. அசோக் மேத்தா அவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். இங்கே முதலமைச்சரவர்கள் இருக்கிற காரணத்தால், அதைச் சொல்ல எனக்குக் கூச்சமாக இருக்கிறது. சென்னையில் அவர் வந்தபோது மாநில அரசு, மத்திய அரசைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். ஒரு அலுவலகத்திலே இருக்கக்கூடிய ஆபீஸ் பையன் மாதிரி, மாநிலத்தில் இருக்கக்கூடிய முதலமைச்சர்கள், இந்தியப் பிரதமர் கூப்பிடும்போதெல்லாம் ஓடுகிற நிலையில் இருக்கிறார்கள் என்று அவர் கூறியிருக்கிறார். Thiru Ashok Mehta who was addressing a press conference was critical of Centre's attitude towards States and said, "In most of the States, Chief Ministers have been reducedto office boys". இந்த அளவில்தான், மாநில அரசு, மத்திய அரசிடத்தில் போய் பணம் கேட்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலைமைகள் நீடிப்பதற்குக் காரணம், இந்த மாதிரித் திட்டங்கள் போடுவதுதான்; அந்தத் திட்டங்களை நாம் ஒப்புக்கொள்வதுதான். இந்த நிலைமையில் அவர்களிடத்தில் போய்ப் பணம் கேட்க வேண்டிய நிலைமை இருக்குமானால்,



அதைத் தவிர்க்க முடியாது. திட்டங்களுக்கு ஏதாவது விடுமுறை அளிக்கச் செய்து நாங்கள் எங்களுடைய காரியங்களை நாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லி அது முடியுமா—முடியாதா என்பதைப் பார்க்க வேண்டும். திட்டத்திற்குக் கொடுக்கக்கூடிய பணத்தை, மாநில அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையே பைனான்ஸ் கமிஷன் பிரித்து கொடுக்க வேண்டும்; மத்திய அரசு கொடுப்பதை, ஆர்ட்டிகிள் 82–ன் கீழ் கையேந்தி வாங்கக்கூடிய நிலைமையில் இருக்கக் கூடாது; "நீங்கள் பணத்தைக் கொடுக்கக்கூடாது" என்று சொல்லக்கூடிய உறுதி, வலிமை நமக்கு இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லையென்று சொன்னால், எந்த மாநில அரசும், மத்திய அரசிடத்தில் போய் கை நீட்ட வேண்டியதொரு துர்ப்பாக்கியமான நிலைமையில்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, நாம் திட்டங்களைப் போடுகிறோம். திட்டங்களினால் வருகிற விளைவுகள் என்ன? கிட்டத்தட்ட 740 கோடி ரூபாய்க்கு மாநில அரசு திட்டம் போட்டிருக்கிறது. நாம் வங்கிகளிடமிருந்து—எல்லாம் மத்திய வங்கிகளாகிவிட்டன—பணம் வேண்டுமென்று கேட்கிறோம். எல். ஐ. சி. பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். இன்னும் 800 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். அதுவும் போதாதென்று 12 கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டிய பற்றாக்குறை நிலைமையில் இருக்கிறோம். பட்ஜெட் வருகிறது. அதற்காகச் சொல்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் 12 கோடி ரூபாய்க்கு வரி போட வேண்டும். மத்திய அரசு 5,000 கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் கட்டளையிடுகிறார். மாநில அரசுகள் 3,000 கோடி ரூபாயை வசூல் செய்ய வேண்டுமென்று திரு. சி. சுப்பிரமணியம் சொல்கிறார். அதனால் வரும் நிலைமை என்னவென்று சொன்னால் நம்முடைய பிளான்—திட்டங்களுக்கு அடுத்து வரக்கூடிய பட்ஜெட்டில் இன்னும் 12 கோடி ரூபாய் அளவிற்கு வரி போடவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த 12 கோடி ரூபாயை எங்கேயிருந்து வசூல் செய்வது? நம்முடைய ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலே தெளிவாக எழுதியுள்ளோம். நமக்கு மீதியுள்ள வரிகள் ஒன்றுமில்லை. இனிமேல் வரி வசூலிக்கக்கூடிய வசதிகளை எங்களிடம் இல்லை என்று முதலமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் புது வரிகளை விதிக்க மாட்டார்களென்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அது அவர்களால் முடியுமா என்ற கருத்தையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, வரி விதிப்புக் கொள்கையைப்பற்றிக் கூறவிரும்புகிறேன். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் மது விலக்கை ரத்துச் செய்துவிட்டோம். மது விலக்கு மூலமாக கிட்டத்தட்ட ஆண்டொன்றுக்கு 35 கோடி ரூபாய் வந்து கொண்டிருந்தது. கிட்டத்தட்ட 105 கோடி ரூபாய் ஐந்தாண்டுத் திட்ட அளவில் வந்தது. இப்போது கள்ளுக் கடைகளை எடுத்ததால் 18 கோடி ரூபாய் போயிற்று. அடுத்ததாக சாராயக்கடைகளை எடுக்கப் போகிறோம். அடுத்தது ஒயின் கடைகள். அது இருக்குமா? பெர்மிட் யார் யாருக்கு என்று புரியவில்லை. பழைய மாதிரி பெர்மிட்டா, வேண்டுமென்பவர்களுக்குக் கிடைக்குமா என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் முதலமைச்சரவர்கள் முதலில் அந்தக் கடைகள் இருக்குமென்று சொன்னார்கள். பிறகு பத்திரிகையில் பார்க்கிறபோது, "காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பெர்மிட் வைத்திருந்தது போல, இப்போது பெர்மிட் கொடுத்து வைக்கப் போகிறோம்" என்று

கூறியிருப்பது தெரிகிறது. இப்போது ஊருக்கு 10 கடைகள் இருக்கின்றன. அந்தக் காலத்தில், தஞ்சை, திருச்சியிலே ஒரு கடையில் பெர்மிட் வைத்திருந்தார்கள். ஆகவே, இந்த 10 அல்லது 20 கடைகளில் எப்படி பெர்மிட்டை வைத்துக்கொண்டிருப்பார்கள் என்பது தெரியவில்லை. ஏலம் போட்டால், எப்படிப் பணம் கொடுக்க முடியும் என்ற நிலைமைகளைப் பார்க்கவேண்டும். ஆகவே அதற்கும் சேர்த்து வரி போட வேண்டிய அவசியம் இருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். மாநில அரசைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஒருவேளை தவறு செய்து விட்டார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. 1973-74-ல் பைனான்ஸ் கமிஷன் வந்தபோது, நாம் கள்ளுக் கடைகளை மட்டும் எடுத்தோம். கள்ளுக் கடைகளை எடுத்ததால் நமக்கு 18 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறை வந்தது. அந்த அளவுக்கு வரி போட வேண்டிய அவசியம் வந்தது. அதற்கு நிதிக் கமிஷன் என்ன செய்தார்கள் என்றால், 18 கோடி ரூபாய்க்கு நிறைவு அளிக்கக்கூடிய அளவில் உங்களுடைய "ஸ்டேட் பைனான்ஸ்" இருக்கிறதென்று முடிவுக்கு வந்தார்கள். ஆனால், 1973-74-லேயே நம்முடைய மது விலக்குக் கொள்கை பற்றி ஒரு முடிவான அபிப்பிராயத்தை நாம் எடுத்திருக்க வேண்டுமென்று நான் சொல்வேன். மதுவிலக்கைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநில ஆட்சிக்கு ஒரு ஸ்திரமான கொள்கையில்லை என்பதைப் பார்க்கிறோம். முதலிலேயே மது விலக்கை ரத்து செய்கிறபோது, அண்டை மாநிலங்களில் இப்படி இருக்கிறபோது, நாம் எப்படி மது விலக்கை அமுல்படுத்த முடியுமென்று முதலமைச்சரவர்கள் சட்ட மன்றத்தில் பேசினார்கள். அப்படி அமுல்படுத்த முடியாத ஒன்றை, எல்லா மாநிலங்களுக்கும் அமுல்படுத்தினால்தான், எங்கள் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அமுல்படுத்த முடியுமென்பதற்கான காரண காரியங்களை அவர்கள் சொன்னார்கள். நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். அவர்கள் எல்லோருக்கும் "கன்வின்சிங்" என்று சொல்வார்களே, அந்த அளவுக்கு, அவர்கள் சொல்லும்போது, அவ்வளவும் சரி என்று ஒத்துக்கொள்ளுமளவுக்குப் பேசினார்கள். இவ்வளவு காரண காரியங்களைப் பேசிவிட்டு, அதற்குப் பிறகு மதுவிலக்கை ரத்துச் செய்யலாம் என்று சொன்னால், முதலில் சொன்ன காரண காரியங்கள் என்னவாயிற்று என்ற கேள்வி எழுகிறது.

எதற்கும் ஒரு கொள்கை என்று பிடித்தோமானால்—அந்தக் கொள்கை சரியா அல்லது தவறா என்ற வாதத்திற்குப் போக விரும்பவில்லை; மது விலக்கு சரியா, தவறா என்ற பிரச்சினைக்குப் போகவில்லை—அந்தக் கொள்கையிலே உறுதியாக இருப்பது நல்லதென்று சொல்கிறேன். மது விலக்கை மறுபடியும் கொண்டு வருகின்ற நிலைமை வந்தபோது, ஒரே சமயத்தில் கள்ளுக் கடைகளையும், சாராயக்கடைகளையும், நிதிக் கமிஷன் இருக்கிறபோதே மூடியிருந்தால், 35 கோடி ரூபாய்க்கு அவர்கள் வழி செய்திருக்க முடியும். இப்போது அவர்கள் மறுபடியும் கணக்கைப் பார்த்துச்செய்ய வேண்டும். நம்முடைய நாட்டிலே உள்ள துர்ப்பாக்கியமான நிலைமை—ஆஸ்திரேலியா நாட்டில் இருப்பதைப் போல் இல்லை—தொடர்ந்து நிதிக் கமிஷன் இல்லை. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிதிக் கமிஷன் வரும். அந்த சமயத்தில் அவர்களிடம் நம்முடைய குறைபாடுகளைச் சொல்ல வேண்டும். அதற்கு ஒரு முடிவு சொல்லிவிட்டு அவர்கள் போய் விடுவார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு எந்த மாநிலம் ஒழுங்காகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறதோ அந்த மாநிலத்திற்குக் குறைவாகக் கிடைக்கிறது; எந்த மாநிலம் ஒழுங்காக இல்லாமல்



இருக்கிறதோ அவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிறது. இந்த மாதிரி ஒரு நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், பணம் கொடுக்கிறபோது, எந்த மாநில அரசைப் பிடிக்கவில்லையோ அவர்களுக்குக் குறைவாகக் கொடுக்கிறது. நம்முடைய திட்டங்களுக்குக் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக்கு மாறான ஒரு ஆட்சி இருப்பதால் அந்த நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்

"Thiru Morarji Desai said at the Indian Parliamentary Association symposium at Delhi, that the devolution of plan resources should also be regulated by statute. It is true that in the earlier years and also present there was no regular system in the matter and sometimes favouritism was shown." என்று அவர்களே சொன்னார்கள்.

ஆகவே இதிலே எந்தக் கட்சி என்று பார்க்கிறார்கள். இந்த ஆட்சி இருந்தால் கொடுக்க வேண்டும் என்று கிரைடீரியா, 5-30
அந்த ஆட்சி இருந்தால் கொடுக்க வேண்டாம் என்று கிரைடீரியா. பி.ப.
இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொதுத் துறைகளைப் பொறுத்த வரையில், பல திட்டங்கள் போட வேண்டுமென்று சொன்னால் நாம் பொதுத் துறைக்காக அதிகமான பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். அடுத்தபடியாக, எலெக்டிரிசிடி போர்டிற்கு அதிகமான செலவு செய்யப்போகிறோம். அடுத்தபடி, போக்குவரத்துத் துறைக்கும் செலவு செய்கிறோம். இப்படி எல்லாத் துறைகளுக்கும் செலவு செய்கிறோம். செலவு செய்த பிற்பாடு, வரவு என்ன லாபம் என்ன, நஷ்டம் என்ன என்று என்னைப் போன்ற உறுப்பினர் யாராவது கேட்டால், இது லாப நஷ்டத்திற்காக நடத்துவது இல்லை, இது அரசாங்கம் பொது மக்களுக்காக நடத்துவது என்று சொல்லுகிறார்கள். அந்தக் காரணத்தாலேதான் நஷ்டம் வருகிற ரூட்டுகளிலெல்லாம் நாம் பஸ் விட்டோம் என்று சொல்லுகின்றார்கள். இந்த மின்சாரத் துறைக்கு ஏன் நஷ்டம் வந்தது என்று கேட்டால், கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் கொடுத்தோம், அதனால்தான் நஷ்டம் வந்துவிட்டது என்று சொல்கின்றார்கள். இப்படி நஷ்டக் கணக்கைக் காட்டுகின்றார்கள். இவ்வளவு காலமாக யாரோ பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எங்கேயிருந்தோ பணம் வந்தது, நஷ்டத்தைக் காட்டிக்கொண்டிருந்தோம். இப்போது செலவிடக்கூடிய பணம் பூராவற்றையும் பொதுத் துறையிலேயே செலவிட்டுவிட்டு, அது லாபகரமாக இயங்கவில்லை என்று சொன்னால், இன்னும் யாருக்கு டாக்ஸ் போட முடியும், யாருக்கு வரி விதிப்பு செய்ய முடியும் என்பதை அரசாங்கம் கூர்ந்து ஆய்ந்து கவனித்து, பொதுத்துறை நிறுவனங்களை லாபகரமான முறையில் நடக்கச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்மால் சேவிங்ஸ் மூலமாக ரூ. 100 கோடி நமக்கு வருமானம் வரும் என்று சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டத்திலே எழுதி வைத்திருக்கிறார்கள். நம் மாநில சர்க்காரிலே ஸ்மால் சேவிங்ஸ் திட்டம் நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கின்றது. நிறையப்

பேர்கள் பணம் போடுகின்றார்கள், முன்பெல்லாம் ரூ. 30 கோடி வந்தது. இன்று 100 கோடி ரூபாய் வரை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்மால் சேவிங்ஸ் பற்றி ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஸ்மால் சேவிங்ஸ்லே பணம் போடுகிறார்கள் என்று சொன்னால், எப்படிப் போடுகின்றார்கள் ? முதலமைச்சர் அவர்களே கூட அறிந்திருக்கக் கூடும். யாரும் 6½ பர்செண்டுக்காக முன்னை விட உற்சாகமாக வந்து பணம் போடவில்லை. ஒரு இடத்திலே பார்த்தால், 5 லட்சம், 6 லட்சம், 50 ஆயிரம் ரூபாய் என்று இருக்கிறது. ஸ்மால் சேவிங்ஸ் என்று சொன்னால், ரூ. 5, ரூ. 10, ரூ. 100, ரூ. 200 என்று சிறு சேமிப்பிலே இருக்க முடியும். வசூல் செய்த சிறு சேமிப்பைப் பூராவும் நீங்கள் பார்த்தீர்களேயானால், எங்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு ஆள் மட்டும் ரூ. 6 லட்சம் சிறுசேமிப்பில் கொடுத்திருக்கிறார். ரூ. 6 லட்சம் கொடுத்திருக்கின்றார்கள், ரூ. 50,000 கொடுத்திருக்கின்றார்கள், ரூ. 10,000 கொடுத்திருக்கின்றார்கள். எப்படிக் கொடுக்கின்றார்கள் ?" வங்கிகளிலிருந்து வாங்கி சிறு சேமிப்பின் பேரிலே அந்தப் பணம் போகிறது. பணம் எப்படி வருகிறது என்று எனக்குத் தெரிந்த நெருங்கியவர்களிடம் கேட்டேன். அவர்கள் "6½ பர்செண்ட்டுக்கு யாராவது பணம் கொடுப்பார்களா ? என்று சொன்னார்கள். இந்த மன்ற அங்கத்தினர் திரு ஜெயராம ரெட்டியார் அவர்களுக்கும் கூடத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நாங்கள் அப்படியா பணம் கொடுக்கிறோம், எவ்வளவு பிரிமியம் கொடுப்பீர்கள் என்று கேட்டோம். 7½ பர்செண்ட் நாங்கள் கையிலேயே கொடுத்து விடுகிறோம் என்று ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட்காரர்கள் சொன்னார்கள். நாங்கள் 7½ பர்செண்ட் கையிலே வாங்கிக் கொள்கிறோம். முதலிலே ரூ. 10 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று சொன்னால், ரெவின்யூ டிப்பார்ட் மெண்டார் வந்து ரூ. 750 ஐப் பணமாகக் கொடுக்கிறார்கள். அந்த ரூ. 750 பணத்தைக் கையிலே வாங்கிக்கொண்டு, அதற்கு மேலாக 6½ பர்செண்ட்டுக்கு சிறு சேமிப்பிலே போடுகிறார்கள். மொத்தம் அவர்களுக்கு 14 சதம் கிடைக்கிறது. அந்த ரூ. 750, 7½ சதம், பிளாக் மார்க்கெட் மணியை அரசாங்கத்திலேயே கொண்டுவந்து கொடுக்கிறார்கள். ஆகவே மொத்தம் எவ்வளவு கிடைக்கிறது என்று சொன்னால், ஒரு ஆளுக்கு 22 சதம் வீதம் அவர்களுக்குக் கிடைக்கிறது. ஏன் 6 லட்சம் ரூபாய் போடமாட்டார்கள் ? 100 கோடி ரூ. 150 கோடி சேர்ந்ததற்குக் காரணம் இதுதான். நான் இப்போது தெரிந்தே பேசுகிறேன். வேண்டுமானால் யார் யாருக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று அவர்கள் பெயர்களை வேண்டுமானாலும் தனியாகச் சொல்லத் தயாராக இருக்கிறேன். நம் நாட்டிலே சிறு சேமிப்பு நடக்கிறது. அதிலே ரூ. 100 கோடி நமக்கு வருகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த சிறு சேமிப்பினால் யார் லாபம் அடைகிறார்கள் என்று சொன்னால், யார் யார் கையிலே லட்சக்கணக்கான ரூபாய் இருக்கின்றதோ அவர்களுக்குத்தான். இந்த 7½ சதம் தாசில்தார்களும் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்களும் எப்படி வாங்குகிறார்கள் ? தனிப்பட்ட வியாபாரிகளிடத்திலே போய் " நீங்கள் ஆயிரம் ரூபாய் சிறுசேமிப்பில் போடவேண்டும் என்று " சொல்லுகிறார்கள். அவர்கள் ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியாது என்றால், நீங்கள் ரூபாய் 75 கொடுங்கள். அதற்கு ரசீது கிடையாது. அந்த ரூ. 75ஐக் கொண்டுவந்து பணக்காரர்களிடத்திலே கொடுத்து அவர்களுடைய பணத்தை வாங்கிக்கொண்டு வந்து சிறு சேமிப்பிலே போடுகிறார்கள். சிறுசேமிப்பு நடக்கிறது. இது சோசலிஸம் அல்ல. வசதியாக இருப்பவர்களுக்கு



இன்னும் வசதியிலே இருக்க சிறுசேமிப்பு நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஏழைகளினுடைய பணத்திலேதான் இந்த சிறு சேமிப்பு நடக்கிறது என்று கூறிக்கொள்கின்றேன்.

இன்னும் இரண்டு விஷயங்களைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். பாசனத்தைப் பற்றி நம் ஆளுநர் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்திலே நீர்ப்பாசனம் என்று சொன்னாலே அது காவிரி என்று சொல்ல வேண்டும். காவிரி வரண்டு போய்விடும் என்ற அளவிலே நாம் ஒரு தீர்மானத்தைக்கூடப் போட்டோம். எதிர்க் கட்சித்தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல இடங்களிலே, பல கூட்டங்கள் எல்லாம் நடத்தியதன் மூலமாக, நம் தமிழ்நாடு பூராவும் கூட்டங்கள் போட்டோம், சட்டப் பேரவையிலே நாம் தீர்மானத்தை நிறைவேற்றினோம். நமது முதலமைச்சர் அவர்களும் பல தடவை டெல்லிக்குச் சென்று பேசிவிட்டு வந்தார்கள். சிறுவாணித் திட்டம் பற்றிக் கூட நம்முடைய பேரவையிலே படித்தார்கள் என்று சொன்னார்கள்.

சிறுவாணித் திட்டம் முடிகிற அளவிலே தான், இந்தக் காவிரிப் பிரச்சினையும் முடிகிறது. அதனுடைய அக்ரிமெண்ட் முடிகிறது. அதனுடைய நிலைமை இப்போது என்னவென்பதைப் பற்றி ஆளுநர் அவர்கள் எந்தவிதமான வார்த்தையையும் சொல்லவில்லை. அவருடைய உரையில் எனது நண்பர் அங்கத்தினர் ஒருவரிடம் பேசுகிறபோது காவிரியைப் பற்றி ஒன்றுமே காணவில்லை என்று சொன்னேன். அவர் உடனே காவிரிப் பிரச்சினையே மறந்து போய்விட்டது என்று சொன்னார். சென்னையிலே இருப்பவர்கள் மறக்கலாம், ஆனால் தஞ்சையிலே இருப்பவர்கள் மறக்க முடியாது என்றேன். பின்னர் சொல்லும்போது, சென்னையில் இருப்பவர்களுக்கும் கூட வீராணம் திட்டம் இருப்பதால், அவர்களுக்குத் தண்ணீர் வரவேண்டுமென்பதற்காக இதை மறக்க முடியாது என்றேன். ஒருவேளை சென்னைக்கு அதிகத் தண்ணீர் வந்து தஞ்சைக்கே பாசனத் தண்ணீர் இல்லாத நிலை கூட வரலாம் என்று சில பேர்கள் அச்சத்தைக் கொடுப்பதுபோல் சொல்கின்றார்கள். அதுபற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. இந்தப் பொருளைப் பொறுத்த வரையில், எனக்கு விரிவாகத் தெரியாது. ஆகவே காவிரிபற்றி ஏதாவது ஒரு முடிவு ஆக வேண்டும். மத்திய சர்க்காரிலே பேசும்போது அவர்கள் முடியாது என்று சொல்லுகின்ற நிலைமையிலேயே இருந்தால், அது முடிந்த கதையாகப் போய்விட்டதா என்பதையாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டதாரிகள் தேர்தல் பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். அதுபற்றி ஒரு வார்த்தை தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தச் சமயத்தில் பட்டதாரிகள் தொகுதித் தேர்தல் வருவது எல்லோருக்கும் தெரியும். நான் பட்டதாரிகள்பற்றிப் பேசவில்லை. தொகுதித் தேர்தல் பற்றித்தான் பேச விரும்புகின்றேன். பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றி அல்ல. இந்தத் தேர்தலைப் பற்றிமட்டும்தான் சொல்ல விரும்புகின்றேன். இந்தப் பட்டதாரிகள் தொகுதிக்கு யார் யார் வோட்டர்களாக இருக்க வேண்டும் என்பதை இந்தப் பட்டதாரித் தேர்தலுக்கு நிற்கின்றவர்களே போய் அப்ளிக்கேஷனைக் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமை இருக்கிறது. தஞ்சையில் 30,000 பட்டதாரிகள் இருக்கின்றார்கள். இந்த 30,000 பட்டதாரிகளுக்கு என்று ஒரு நோட்டிபிகேஷன் போட்டிருக்கின்றார்கள். யார்

யார் விருப்பப் படுகிறார்களோ அவர்கள் கலெக்டர் ஆபீசுக்கு ஒரு மனு அனுப்பிவிடுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த மனுவின் விலை 10 பைசா. கலெக்டர் அலுவலகத்திலே போய் வாங்கிக் கொள்ளுங்கள் என்று போட்டிருக்கிறார்கள். அந்த மனுவை யாரும் தேடிச் சென்று வாங்குவதில்லை. தேர்தலுக்கு நிற்பவர்களே அந்த மனுவை தாங்களாக அச்சடித்துக்கொண்டு. அதைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள். முன்னால் எல்லாம் அந்த அலுவலகத்திலே இருப்பவர்களிடம் சர்டிபிகேட் கொடுத்தால், அதை வைத்து லிஸ்டில் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். இந்தத் தடவை 13 ஆயிரம் பேர்கள் மனுச் செய்தார்கள். அந்த 13 ஆயிரம் பேர்களில், மொத்தம் இருக்கிறது 2,500 பேர்தானா என்று சொல்லி அதிலே பாக்கியிருக்கின்ற 11 ஆயிரம் அப்ளிகேஷன்களை "ரிஜெக்ட்" செய்து விட்டிருக்கின்றார்கள்.

திரு. தீக்ஷிதர் அவர்களுடைய ஊரிலே 50 பேர்கள்தான் பட்டதாரிகள் இருக்கின்றார்கள். அவர்கள் தான்வோட்டுப்போடத் தகுதி பெற்றவர்கள் என்று சொல்லுகின்றார்கள். இந்த பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்சிலேயே, கிட்டத்தட்ட 2,000, 3,000 பட்டதாரிகள் இருக்கின்றார்கள். பாயிலர் பாக்டரியிலே குறைந்த பட்சம் ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். கல்லூரியிலே 100 லிருந்து 200 பேர்கள் இருப்பார்கள். இந்த நிலைமையிலே பட்டதாரிகள் தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், எலெக்ஷன் கமிஷன் அந்த மாதிரி உத்தரவு போட்டது, ஆகவே நாங்கள் செய்கிறோம் என்கிறார்கள். கலெக்டர் அலுவலகத்திலே ஒரு பி.ஏ. இதற்காக வைத்திருக்கிறார்கள். அவர்தான் இதற்கு முடிவாகச் சொல்லக்கூடியவர்கள். அவர்கள் ரூல்ஸ்படி செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். அந்த ரூல்ஸ்லே என்ன இருக்கிறது என்று புரியவில்லை. ஒரு வேடிக்கையான விஷயத்தைச் சொல்லுகின்றேன். தஞ்சையிலே இருக்கக்கூடிய ராஜா சரபோஜி கல்லூரியிலே, அந்த கல்லூரியின் தலைவர் இருக்கிறார். அவர் ஒரு மனுவை அனுப்பினால், ஒரு சர்டிபிகேட் அதனுடன் இணைக்கவேண்டும். ஒருவர் ஒரு மனு அனுப்பியவுடனே அதிலே 1971–74-க்கு ஒரு ரெஜிஸ்டர்ட் சர்டிபிகேட் வைத்தார். அதைத் தள்ளுபடி செய்தார்கள். காரணம் 1970-க்கு முன்னாலே நீங்கள் பாஸ் செய்ததற்கு எந்த விதமான அத்தாட்சியும் இல்லை. கொடுத்திருப்பது 1971–74 ஆண்டு அத்தாட்சி, ஆகவே சேர்க்கப்பட முடியாது என்று சொன்னார்கள்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். என்னுடைய உறவினர் ஒருவர் எம்.எஸ். பாஸ் செய்தவர். அவர்கள் 1971 லே டிகிரி எடுத்தார்கள். நீங்கள் கொடுத்திருக்கின்ற எம்.எஸ் சர்ட்டிபிகேட், 1971-வது வருடத்தியது. ஆகவே நீங்கள் பட்டதாரியாக இருக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். படித்து 3 வருடங்கள் படித்த பின் பெறுவது எம்.எஸ் பட்டம்.

இந்த சமயத்திலே இரண்டு இடத்திலே நம்முடைய பட்டதாரிகள் தொகுதித் தேர்தல் நடக்கிறது. கோவை, சேலம், நீலகிரி அங்கே இருக்கின்ற முறையிலே யாரும் ரிஜெக்ட் ஆகவில்லை. தஞ்சையைப் பொறுத்த வரையிலே நான் எல்லா அப்ளிகேஷன்களும் ரிஜெக்ட் ஆகியிருக்கின்றன. ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மாதிரியாகத் தேர்தல் இருப்பது சரியல்ல என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற



தேர்தல்கள் உண்மையான தேர்தலாக இருக்க வேண்டுமென்று சொன்னால், பட்டதாரிகள் எல்லோரையும் அரசாங்கமே வோட்டர்கள் லிஸ்டில் சேர்க்கவேண்டும். அதிலே ஒரு 2,500 பேர்களை வைத்து தேர்தலில் வென்றுவிட்டு வரவேண்டும் என்று சொன்னால், அது உண்மையான ஜனநாயகத் தேர்தலாக இருக்க முடியாதே தவிர, வேறொன்றும் இல்லை. 30,000 பேர்கள் வோட்டர்களாக இருக்கக்கூடிய இடத்திலே 2,500 பேர்களை வைத்துக் கொண்டு, அந்த 2,500 பேர்களால் மட்டும், அவர்களுக்காக மட்டும் தேர்தல் நடத்துவது என்று சொன்னால். அது எப்படி ஜனநாயகத் தேர்தலாக இருக்க முடியும் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

**திரு. மு. மாசிலாமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது மாண்புமிகு அங்கத்தினர் திரு சங்கரலிங்கம் அவர்கள் முன்மொழிந்ததையொட்டி நானும் சிலபல கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையின் துவக்கத்திலேயே ஒரு அடிப்படைக் கருத்தாக, ஆழமான கருத்தாக, ஒரு மாபெரும் விடுதலை வீரரை நாம் இழந்துவிட்டோம் என்று அதற்கு முக்கியத்துவம் தருகின்ற அளவிலே குறிப்பிட்டதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தமிழகத்திலே அடித்தளத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டு வாழ்கின்ற பிற்பட்டவர்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் ஏதுமின்றி அடித்தளத்திலேயே வாழ்கின்ற மக்கள் எல்லாம் இன்றையதினம் தலை நிமிர்ந்து நடந்து வருகின்றார்கள் என்றால் அது உண்மையிலேயே பெரியாருடைய சீரிய பணிகளால்தான் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைபட்டிருக்கின்றேன்.

இன்னொன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த மேலவையிலே என் போன்ற பிற்படுத்தப்பட்ட முடிதிருத்துவோர் சமூகத்தில் தோன்றிய நானும், சலவையாளர் சமுதாயத்தைச் சேர்ந்த நண்பர் திரு கோலப்பா அவர்களும், இன்னும் பிற்படுத்தப்பட்ட பொற்கொல்லர் சமுதாயத்தைச் சேர்ந்த தோழரான திரு ஜி.என். ராஜு அவர்களும் மேல் நிலைக்கு வந்து, மேலவை உறுப்பினர் பதவிவகிக்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றோம் என்று சொன்னால் அதற்கெல்லாம் காரணம் தந்தை பெரியாருடைய, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறுமலர்ச்சித் தொண்டுதான் என்று நான் மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையில் நமது மாண்புமிகு மேலவைத் தலைவரோடு, இந்த நாட்டின் $4\frac{1}{2}$ கோடி மக்களின் தலைநாயகனாக விளங்கும் டாக்டர் கலைஞர் 5·40 பி.ப. அவர்களும், மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும், இங்கே உட்கார்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களும், தந்தை பெரியார் அவர்களின் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே வளர்ந்தவர்கள் என்பதைப் பூரிப்போடு நான் நினைவுபடுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன். பெரியார் அவர்கள், தமிழகத்திலே எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையில், தாக்குதல்களுக்கிடையில், கொஞ்சமும் அஞ்சாமல் தன் கருத்துக்களைத் தெரி

இந்த மாபெருந் தலைவர் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதே பெரியார் அவர்கள், திருச்சிக்குப் பக்கத்தில் காட்டுப்புத்தூர் என்ற கிராமத்தில் நான் மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதற்காகப் பாராட்டுக் கூட்டம் நடந்தபோது, அந்தக் கூட்டத்தில் "நான் மகிழ்ச்சியோடு கலந்து கொள்கிறேன்" என்று சொல்லி அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். அப்போது தந்தை பெரியார் அவர்கள் என்னை வாழ்த்திவிட்டு பின்னாலே, "நான் இந்த நாட்டிலே ஜாதி ஒழியவேண்டும், சமுதாயக் கொடுமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லுகிறேன். அதையெல்லாம் இந்த நாட்டிலே யாரும் கேளாமல், கேட்டும் கேளாக்காதினராக இருந்துகொண்டு வருகிறார்கள். என்னுடைய கருத்துக்களையெல்லாம் தவறாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆனால் முடிதிருத்துவோர் பெருமக்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொண்டு, ஒவ்வொரு இடத்திலும் என்னுடைய படத்தை வைத்துக்கொண்டு தீவிரப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அந்த முடிதிருத்துவோர் பெருமக்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, சென்னையில் மட்டுமல்ல, கடல்கடந்து மலேசியா, சிங்கப்பூர், பினாங் போன்ற இடங்களில் கூட என்னுடைய கருத்துக்களை தொண்டுகளை அன்றாடம் வருகின்றவர்களுக்குத் தீவிரப்பிரசாரம் செய்து வருகின்றார்கள்" என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல, "இந்த நாட்டிலே ஜாதி ஒழிய வேண்டுமென்றால் மேட்டுக்குடி வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனாக இருந்தாலும், ஒரு சமுதாயத்தில் பொருளாதார ஏற்றம் பெற வேண்டுமென்றால், இந்த நாட்டிலே முடிதிருத்துவோர், சலவையாளர் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், போலீஸ்காரராகவும், சப்-இன்ஸ்பெக்டராகவும் வர வேண்டும். அப்போது தான் இந்த நாட்டிலே ஜாதி ஒழிக்கப்படும். நான் சொல்லுகின்ற எல்லாக் காரியங்களையும் துணிந்து செயலாற்றுகின்ற ஒரு அரசு இருக்கின்றதென்றால், அது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒன்றுதான். அவர்களை நான் ஏளனம் பண்ணினேன். மனம் புண்படும்படி, திட்டித்திட்டிப் பேசியிருக்கிறேன். இருந்தாலும் என்னைத் தந்தை, தந்தை என்று சொல்லிக் கொண்டு என்னுடைய செயல் முறைத் திட்டங்களை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள், இந்த ஆட்சி நீடூழி வாழ வேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் அவர் தலைமையில் இயங்குகின்ற கழக அரசையும் பாராட்டிவிட்டு, அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

அப்படிப்பட்ட பெரியார் அவர்கள் இன்றைக்கு மறைந்தும் மறையாமல் நம்மிடையே இருக்கிறார்கள். இங்கேயிருக்கின்ற அவைத் தலைவர் அவர்களையும், டாக்டர் கலைஞர் அவர்களையும், நாவலர் அவர்களையும் மற்றும் அமைச்சர் பெருமக்களையும் என் கூடச் சேர்ந்த உறுப்பினர்களையும் பார்க்கின்றபோது, ஒவ்வொருவரையும் தந்தை பெரியார் அவர்களாகவே நான் காணுகிறேன். காரணம், அவர் விட்டுச்சென்ற கொள்கைகளை, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் அவரைத் தொடர்ந்து மற்றவர்களும், நகரங்களிலும் பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், கடமை உணர்வோடு பிரச்சாரம் செய்து வருகிறோம். அந்தக் கடமை உணர்வோடு, "நன்றி மறப்பது நன்றன்று........" என்ற முறையில் உறுதிமொழி கொண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 12ஆம் தேதி ராஜாஜி மண்டபத்தில் கூட்டப்பெற்ற கூட்டத்தில், "இன்றைய



தினம், தந்தை பெரியார் அவர்களை இழந்து சோகக் கண்ணீரோடு நாம் இருக்கிறோம். அத்தகைய ஓரு நல்லவருக்கு, தியாகச் செம்மலுக்கு நாம் அவருடைய சிலையை வைத்து மரியாதை செலுத்தவேண்டும். இன்றைய தினம் பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளையைத் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் நண்பர் திரு வீரமணி அவர்களும் திருமதி மணியம்மையார் அவர்களும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பெரியார் அவர்களைப் பின்பற்றி நாம் எல்லாம் ஒன்றிணைந்து, கட்சி மனமாச்சரியங்கள் இல்லாமல் ஒரே நிலையில் இருந்து, சென்னை மத்தியிலே அவருடைய சிலையை வைக்க வேண்டும். அந்தச் சிலை உட்கார்ந்து கொண்டு பலருக்குப் போதிக்கின்ற அளவில் இருக்கவேண்டும். அதற்கு மாற்றுக்கட்சியினரும் ஒத்துழைக்கவேண்டும்" என்று டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அறிவிப்பைக் கேட்ட கூட்டத்தினர் கலைந்து செல்லுகின்ற நேரத்தில் கழக அரசையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டிக்கொண்டே சென்றார்கள். அதுமட்டுமல்ல. இன்றைய தினம் தமிழகத்திலே சமுதாயப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, ஏதென்ஸ் நகரத்தில் சமூகப் பிரச்சாரம் செய்த சாக்ரட்டீஸ் போல், மார்ட்டின் லூதரைப் போல், இங்கர்சால் போல், தமிழகத்தில் சமுதாயப் போராட்டங்கள் பல நடத்தியவர் பெரியார் அவர்கள் ஆகும். அவரால் உருவாக்கப்பட்டவர்கள், அவரால் பேணி வளர்க்கப்பட்டவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பிலே, பாசத்திலே பிணைக்கப்பட்டவர்கள், அவருக்கு, தமிழக அரசின் சார்பிலே செய்திருக்கின்ற மரியாதையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய பூதவுடலுக்குச் செலுத்தப்பட்ட மரியாதையைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாம் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அடுத்தாற்போல், கவர்னர் அவர்களுடைய உரையில் மாநிலத்திலே உள்ள பின்தங்கிய பகுதிகளில், நடுத்தரத் தொழில்களைத் தொடங்கும் நபர்களுக்கு மாநிலத் தொழில் ஊக்கக் கழகம் உதவி செய்துவருகிறது, இக்கழகம் ராணிப்பேட்டையில் தொழில் தொகுதி ஒன்றையும் உருவாக்கி வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக 6,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவிருக்கிறது. இன்னும் எத்தனையோ பேர், பின்தங்கிய மக்கள் வேலைவாய்ப்பில்லாமல், 96 சதவிகிதம் உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பரவலாக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் வாழ்க்கையில் அவர்களைக் கைதூக்கி விட, அவர்களை முன்னேறச் செய்வதற்காக, 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 91·50 கோடி ரூபாய் செலவிட அரசு கருதியுள்ளதைக் கண்டு நான் பூரிப்படைகிறேன். அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு வரைக்கும், 1,000 முடி திருத்துவோரும், 1,000 சலவையாளரும், முறையே 75 ரூபாய், 110 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகளை இலவசமாகப் பெற்று வந்தார்கள். அதை, நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு கோலப்பன் அவர்களும், பிற்பட்டோர் நலக்குழுவில் பேசும்போது, ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்துவருவதை அதிகமாக்கி அதை 3,000 பேர்களுக்காவது கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டோம். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் 2,030 பேர்களுக்கு இந்த அரசு இன்றையதினம் கொடுத்து வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சான்றிதழ் என்ற முறையில் உங்கள் கவனத்திற்குக் கொடு வருகிறேன் அது மட்டுமல்ல; மேலவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டம், கேரள அரசின் ஒரு பகுதியாக முன்பு இருந்தது. அந்த நேரத்தில் தமிழ் நாட்டிலிருந்து அங்கு குடியேறியவர்களான் முடிதிருத்துவோர் சமுதாயம், மருத்துவர் சமுதாயம் பல கொடுமைகளுக்குள்ளாக்கப் பட்டது. மருத்துவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னால் அவரை விலங்கிவிட்டு, கசையால் அடித்து, கஷ்டப்படுத்துகிற சூழ்நிலை அன்று ஏற்பட்டிருந்தது கேரளத்துடன் இணைந்திருந்த கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்தது. நாகர் கோவில் மாவட்டம் அவர்களோடு இணைந்திருந்த காலத்திலே மருத்துவ சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கேரள சமுதாயத்தின ரோடு இணைந்திருந்தார்கள். அவர்கள் கேரளமுதலி என்று அழைக்கப் பட்டனர். இவர்கள் அந்தக் காலத்திலே பல்விதமான கொடுமை களுக்குள்ளாக்கப்பட்டனர். இவர்கள் தங்களுக்கு ஏதாவது ஒரு நற் சான்றிதழ், காண்டக்ட் ஸர்ட்டிபிகேட் வேண்டுமென்றால், அதைப் பெற அவர்கள் எவ்வளவோ தொல்லைக்குள்ளாகினர். நான் அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்த நேரத்திலே, என்னுடைய கவனத் திற்குக் கொண்டு வந்தார்கள். இதை நமது அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, சுமார் 20,000 பேருள்ள இந்தக் கேரளமுதலி என்று சொல்லப்படும் வகுப்பினரை நாஞ்சில் முதலி என்று மாற்றி அரசின் கெஜட்டிலும் வெளியிட்டிருக்கின்றார்கள் என்றால், இது நமது அரசின் பெரும் சாதனை இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்; எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்கின்றேன், ஒருவர் இருவர் இல்லை, 20 ஆயிரம் பேர்கள் ஆரல்வாய் மொழியில், தக்கலையில், மேக்காமண்டபத் தில், கோட்டாறு பகுதியில், வேர்க்கிளம்பியில் என்று இப்படிப்பட்ட பகுதிகளிலே வாழ்ந்துவருகின்றார்கள். 20 ஆயிரம் பேர் கொண்ட இந்தச் சமுதாயத்தினரை அரசு பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்தி ருப்பது குறித்து அவர்கள் சார்பிலே இந்த அரசுக்கு மனமார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுமட்டுமல்ல. இன்றைக்கு சென்னை மாநகரில் 11,740 சலூன்கள் இருக்கின்றன. கடந்த காலத் திலே இந்த சலூன்கள் விஷயமாக முடிதிருத்துவோர் சங்கத்தின் சார்பிலே ஒரு வேண்டுகோள் விடப்பட்டது. நமது பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்களிடமே அது கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோளில் லைசென்ஸ் என்ற பெயரில் ஒரு ரூபாயும் லைசென்ஸ் ஃபாரம் என்ற பெயரில் ஒரு ரூபாயும் தபால் செலவு என்று 35 காசும் இப்படி நான்கு ரூபாய் சில்லரை வாங்கப்படுகிறது. ஆனால் இன்றைய நிலையில் பல முடிதிருத்தும் நிலையங்கள் வேலையின்றி மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. நாகரீகத்தின் பெயரால் இன்று பலரும் முடியை வளர்த்துக்கொண்டு, ஹிப்பிக்களைப்போல், மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறைகூட அல்லது ஆறுமாதங்களுக்கு ஒரு முறைகூட, முடியைத் திருத்திக் கொள்ளாமல் இருப்பதன் காரணமாக, முடிதிருத் தகங்கள் பெருமளவிற்குப்பாதிக்கப் பட்டிருக்கின்றன. இப்படி இளைஞர்கள் இருப்பதைத் தடுக்க பம்பாயிலும் அமெரிக்காவிலும் இன்னும் பல நாடுகளிலே போலீஸை வைத்துக்கொண்டு, அவர்களுடைய முடியைக் கத்தரித்து விடுவதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அந்த முறையில் இந்த அரசும் செய்யுமா என்பது வேறு விஷயம். அதைச் செய்தால் கூட, "பார்த்தீர்களா பார்த்தீர்களா, இதற்குக்கூட சுதந்திர



மில்லையா" என்று எதிர்க் கட்சியினர் ஆரம்பித்துவிடுவார்கள். எனவே இதை மாற்ற வேண்டுமென்றால், இதைப்பற்றி எங்கள் தலைவரி டம் தனிப்பட்ட முறையில் சொல்லி ஆவன செய்துகொள்ளுவதாக இருக் கிறோம். எனவே, இந்த நிலைமையில் திருச்சியிலே வையம்பட்டி என்ற ஊரிலே—பள்ளப்பட்டிக்கருகிலுள்ள வையம்பட்டியில் முடிதிருத்தும் லைசென்ஸாக ஆண்டொன்றுக்கு ரூ. 10 வாங்கப்படுகின்றது. கட்ட வில்லை என்பதற்காக அங்குள்ள ஒன்றியத் தலைவர் அவர்கள் கமிஷனர் மூலமாக ஜப்தி நடவடிக்கைகளைக்கூட மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே சென்றபோது, அங்கே உள்ளவர்கள் இது சம்பந்தமாக மனு ஒன்றினைக் கொடுத்திருக்கின்றார்கள் என்றும் கேள்விப்பட்டேன். ஆனால் பல பகுதிகளிலே இதற்கென லைசென்ஸ் வாங்குவதில்லை. ஆலங்குடியில், கறம்பக்குடியில் இப்படி லைசென்ஸ் கிடையாது. மதுரை மாநகராட்சியில் கூட இதை ரத்து செய்துவிட்டார்கள் என்று அறிகிறேன். நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம் முடி திருத்தும் நிலையங்களுக்கு அத்தாட்சிக்காக என்று ஒரு அரை ரூபாய் லைசென்ஸ் கட்டணம் என்று வைத்துக்கொண்டு, மற்ற எல்லாவற்றையும் ரத்து செய்ய வேண்டும் என்பதுதான். இதை நமது அரசும், நமது மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்து வருகின்றது. தமிழகம் முழுவதும் நான் சுற்றுப்பயணம் செய்து வரும் நேரத்திலே இந்த அரசு முடிதிருத்தும் சமுதாயத்தி னருக்குப் பல நன்மைகளைச் செய்து வருகின்றது என்று கேள்விப்படும் நேரத்திலே இந்த அரசுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்படிச் சமுதாயத்திலே மிகவும் பின் தங்கியுள்ள முடிதிருத்தும் சமுதாயத்தினருக்குச் செய்து வரும் நன்மைகளுக்காக இந்த சமுதாயம் ஒருமுகமாக இந்த அரசைப் பாராட்டிப் போற்றி வருகின்றது. அது மட்டுமில்லை, நேற்று ஒரு தந்தி கிடைத்தது. அந்தமான் தீவிலே ஒரு பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதன் காரணமாக அங்கு அந்தப் பகுதியிலே ஒரு எட்டு பேர் மிகவும் பாதிக்கப் பட்டு மருத்துவ மனையில் இருக்கின்றார்கள். தமிழக அரசு இன்றைக்கு தமிழகத்திலே உள்ளவர்களுக்கு மட்டுமில்லாமல் கடல் கடந்து வாழும் தமிழ் இனத்தவருக்கும் பல நன்மைகளைச் செய்து வருகின்றது. என்று அறிந்து அவர்கள் சார்பிலே ஒரு தந்தியைக் கொடுத்திருக் கின்றார்கள், "எங்கள் துயரம்பற்றி கலைஞர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்ய வேண்டும் எங்களுக்கு" என்று அந்தமானுக்கும் தமிழகத்திற்கும் என்ன சம்பந்தம்? வேறு ஒன்றுமில்லை, தமிழர்கள் என்ற உணர்வு தவிர. தமிழினத்தைச் சார்ந்த முடி திருத்துவோர் எங்கிருந்தாலும், அவர்களுக்கு ஏதாவது குறை என்றால், இன்றைக்கு 4½ கோடி தமிழர்களை நடத்திச் செல்லும் மக்களின் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாக அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இன்று கடல்கடந்து வாழும் தமிழர்கள் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந் திருக்கின்றது. அதனால்தான் அந்தமானிலுள்ள சமுதாயத்தினர் எங்களுக்கு இதைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆகவே, இப்படிப்பட்ட அரசுக்கு எங்கள் வாழ்த்துக்களை, வணக்கங் களை, நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு, ஆளுநர் அவர்

களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல நமது அரசு மக்களின் நல்வாழ்விற்காகவே செயல்படுகின்றது என்ற மகிழ்ச்சியிலே நானும் பங்கு கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாமன்றத்தின் தலைவரவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, கவர்னர் உரையை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* <u>திரு. எம். ஆறுமுகசாமி;</u> மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே மேதகு ஆளுநர் அவர்கள் இந்தக் கூட்டத்தின் தொடக்கத்தில் ஆற்றிய உரையிலே பெரியார் அவர்கள் மறைவு குறித்துத் துயரம் தெரிவித்திருக்கின்றார்கள். மறைந்த அவருடைய சேவையைப் பல கோணங்களிலும் பார்த்து, அவற்றுக்கு நன்றி செலுத்தும் முறையிலே அவர்கள் தம் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். மிகப் பெரிய துயரம் தரும் இந்த நிகழ்ச்சிபற்றிய தீர்மானம் இந்தப் பேரவையில் வந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இயலாத நிலைமை ஏற்பட்டதால், நான் இப்போது இந்த உரையிலே அதுபற்றிச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

பெரியார் அவர்கள் தேச விடுதலைக்காகப் பாடுபட்டார்கள். சமுதாயத்தின் அடித்தட்டிலே உள்ள மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்கள். இன்னும் பல சமூகக் கொடுமைகளை எதிர்த்து ஜாதி மதம் போன்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதிலேயே அவர் தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார்கள். ஆனால் எல்லாவற்றைக் காட்டிலும் அவர் பதித்துவிட்டுச் சென்ற ஒன்று, ஒரு முத்திரை, கால வெள்ளத்தால் அழித்திட முடியாத ஒன்று, அதற்கு இணையாக வேறு யாருடைய சேவையையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத ஒன்று—அதுதான் உலகம் முழுவதிலும் மக்களிடம் ஆழப்பதிந்திருக்கும் கடவுள் தன்மையை எதிர்த்துப் போராடிய அவரது செயலாகும். அவருக்கு இணையாக யாரையேனும் சொல்ல வேண்டுமானால், இந்த நூற்றுண்டிலே அல்ல, கடந்த நூற்றுண்டிலே 1871 வாக்கில் மடிந்துபோன அமெரிக்கப் பேரறிஞர் ராபெர்ட் இங்கர்ஸால், அதற்குச் சிறிது காலத்திற்கு
மு. முன்னால் மறைந்த வால்டேர் தவிர வேறு யாரையும் இணையாகச்
ப. சொல்ல முடியாது. இரண்டு பேருக்குமிடையில் நிறைய ஒப்புவமைகள்
சொல்லலாம். இங்கர்சாலின் கருத்துக்களைப் படிக்கின்றவர்கள், அது பெரியாருடைய கருத்துக்களின் ஆங்கில மொழி பெயர்ப்போ என்று நினைக்கலாம். ஆங்கிலத்தில் இங்கர்சாலின் கருத்துக்களைப் படித்தவர்கள் பெரியாருடைய சொற்பொழிவுகளைப் படிக்கிறபோது, இது இங்கர்சால் கருத்துக்களின் மொழி பெயர்ப்போ என்று கூடக் கருதலாம். அந்த அளவுக்கு வேறுபாடு இல்லாது இருக்கிறது. இரண்டு பேரும் ஏறத்தாழ பிரசங்கிகள்—சொற்பொழிவாளர்கள்தான். இங்கர்சால் அதிகமாக எழுதியது கிடையாது. பேச்சுக்கள் தான், உரைகள் தான் நிகழ்த்தினார். இருவரும் தங்கள் பேச்சைக் கேட்கும் மக்களிடத்தில் வரி வசூலித்தார்கள்; நிதி திரட்டினார்கள். தங்கள் சமுதாயத்தில் இருக்கக்கூடிய மடமைகளை எதிர்க்கின்ற பிரச்சாரத்திற்கு அந்தச் சமுதாய மக்களிடத்திலிருந்து நிதி வசூலித்தார்கள். இருவரும் சொந்த வாழ்க்கையில் அதிகம் செலவு செய்யாதவர்கள். கிட்டத்தட்ட கருமியாகவே இங்கர்சால் வாழ்ந்தார். கடைசியாக அவர் தன்னுடைய சொத்துக்களை அறிவுப் புரட்சி ஏற்படுத்துவதற்காகச் செலவிட்டார். பெரியாரும் அதையே செய்தார். இந்த ஒப்புவமை வேறு எந்தத் தலைவருக்குமில்லை. பெரிய அரசியல் தலைவர்



கள் எல்லாம் இருந்தார்கள். நாட்டின் விடுதலைக்காகப் பலர் போராடியிருக்கிறார்கள். சமுதாயக் கொடுமையை எதிர்த்து பலர் போராடியிருக்கிறார்கள். ஆனால், "மெண்டல் ஸ்லேவரி", அறிவை அடிமைப்படுத்துதல், அதிலிருந்து விடுதலைக்காக இவர்கள் பாடுபட்டார்கள். மற்றவர்கள் சமயத்தைச் சீர்திருத்துவதில் முனைநின்றார்கள். ராசாராம் மோகன் ராய் என்றோ, ராமானுசர் என்றோ ராமலிங்க அடிகள் என்றோ பெரியார் அவர்களை நான் சொல்லமாட்டேன். இவர்கள் சமயமே தவறு என்று சொன்னார்கள். சமயம் என்பதைப்பற்றி இங்கர்சால் சொன்ன வாக்கியங்கள்* எனக்கு இப்போது நினைவிற்கு வருகின்றன. "Religion has not civilised man but man has civilised religion" மனிதன் தான் சமயத்தைச் சீர்திருத்தினான், நாகரீகம் உள்ளதாக ஆக்கினான். சமயம் மனிதனை நாகரீகம் உள்ளவனாக ஆக்கவில்லை.

"The science of medicine has had but one enemy, that is, religion." விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட மருத்துவ இயல் ஒருபெரிய எதிரியைச் சந்திக்கிறது. அதுதான் சமயம். சமயம்தான் விஞ்ஞானத்துக்கு எதிரி.

"Man was afraid to save his body for fear he might lose his soul. Education is the most adical thing in the world. To teach the alṗhabet is to inaugurate a revolution. To build a school h use is to construct a fort."

இதைத்தான் பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார்கள். உலகத்தில் அவர்கள் நாத்திகராக இருந்து நாத்திகராகவே மடிந்தார். பலர் நாத்திகர்களாக இருந்து, ஆத்திகர்களாக ஆனார்கள். ஆத்திகர்களாக இருந்து நாத்திகர்களாக ஆனார்கள். ஆனால் பெரியார் அவர்கள் நாத்திகராக ஆரம்பத்திலிருந்து பொதுவாழ்வைத் தொடங்கி நாத்திகராகவே இருந்து, மடிந்தார். அவர் சோவியத் யூனியனை வாழ்த்துகிறபோது கூட எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, "உலகத்திலே மிக அதிகமான நாத்திகர்கள் வாழ்கிற நாடு என்பதால் பாராட்டுகிறேன்" என்றார். சோவியத் யூனியனோடு பல கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தவர் பெரியார். ஆனால் உலகிலேயே மிக அதிகமான நாத்திகர்கள் வாழும் நாடு என்பதால் பாராட்டுகிறேன் என்றார். அவர் "இகனோகிளாஸ்ட்" டோ அல்லது "இமேஜ் "பிரேகரோ" இல்லை. "ஹியூமனிஸ்டு" நாத்திகன் என்பவன் "ஹியூமனிஸ்டு" "ஹியூமனிஸ்டு" தான் நாத்திகன் ஆகலாம். மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு உழைப்பவன் நாத்திகன் என்பதை அவர் வாழ்க்கையில் பெருமளவுக்குச் சாதித்தார் என்றுதான் நான் கருதுகிறேன். அவர் அதில் வெற்றி கண்டாரா இல்லையா என்பதற்குப் பதில் வருங்கால வரலாறு கூறும். சாவில் தான் அவருக்கு ஓய்வு இருக்கிறது. 95 வருட காலம் வாழ்ந்தார். நிச்சயமாக ஓய்வு பெற வேண்டும். அந்த ஓய்வு அவர் உயிரோடு இருந்தால், பெற்றுக்கொள்ள முடியாது. அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். எனவே, நல்ல நிரந்தரமான ஓய்வு, நீண்ட நெடுங்கால ஓய்வு, ஓயாது பணியாற்றிய அவருக்குக் கிடைத்திருக்கிறது என்ற அளவில் நாம் மன அமைதி பெறுகிறோம். அதுதான் நமக்கு ஆறுதல் அளிக்கிறது. அந்த ஆறுதலோடு, ஆளுநர் குறிப்பிட்டிருக்கும் இந்தத் துயரம் பொருந்திய நிகழ்ச்சியில் என்னுடைய அனுதாபத்தையும் இணைத்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், நம்முடைய சபையில் நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டிருப்பதை நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தச் சபை முழுவதும் ஏறத்தாழ எதிர்க் கட்சிகள் அடங்கிய சபையாக இருக்கிறது. எனக்கு இங்கே ஆளுங்கட்சிக்காரனைப் போன்ற ஒரு எண்ணம் உண்டாகி யிருக்கிறது. காரணம் என்னவென்றால், இங்கே பேசப்படுகின்ற பல கருத்துக்கள்—அவை தேவையானது—ரொம்ப நல்ல கருத்துக்கள், ரொம்பத் தரத்தோடு பேசப்படுகின்றன. தரக்குறைவாகப் பேசப்படவில்லை. சபையின் டெகோரம், அந்தஸ்து எப்படியிருக்க வேண்டும் என்று புரிந்து ஒவ்வொரு உறுப்பினரும் பேசுகிறார்கள். நான் அங்கே போகவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக, இது ராஜ்ய சபை போன்ற உணர்வு ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் பெரும்பாலும் இங்கே தெரிவிக்கப் படுகிற கருத்துக்கள், உரைகள், எல்லாம் மத்திய அரசிற்குத் தெரிவிக்கும் கருத்துக்களாக இருக்கின்றன. எனவே, நான் இங்கே மத்திய அரசின் கட்சியில் சேர்ந்துவிட்டவனாக இருக்கின்ற காரணத்தால், தொடக்கத்தில் இல்லாவிட்டாலும்; இப்போது ஆளுங் கட்சியைச் சேர்ந்தவன் போலவும், மற்றவர்கள் எல்லாரும்—இந்த டிரஷரி பெஞ்ச் அல்ல—எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், இங்கே திரு. சுவாமிநாதன் அவர்கள் எனக்கு எதிரியாக பக்கத்தில் இருக்கிறார்கள். இந்தப் பக்கத்தில் திரு. தாமோதரன் அவர்கள் எதிரியாக இருக்கிறார்கள், இப்படி பல்வேறு நண்பர்கள் இந்தப் பக்கத்தில் இருந்தே மத்திய அரசினை எதிர்த்துப் பேசும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டபடியால், மாறுதல் ஏற்பட்டுவிட்டபடியால், நான் பல நேரங்களில் மத்திய அரசைப் பாதுகாத்துப்.........

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எதிரில் இருப்பவர்கள் பகைவர்கள் என்று கருதக்கூடாது.

திரு. எம். ஆறுமுகசாமி : இதைப் பகைவர்கள் பேச்சு என்ற பொருளில் ஒருக்காலும் எடுத்துக்கொள்ள மாட்டேன். இன்றைக்கு தேசத்தில் இருக்கிற குழப்பத்தில் யார் பகைவர்கள், யார் நண்பர்கள் என்று சொல்ல முடியாது. எது எங்கே போகப் போகிறது என்பது பற்றியும் யாரும் சொல்ல முடியாது. நான் அதைத்தான் சொல்ல வருகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் கூடத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உரையில் உள்ள மற்றவைகளை யெல்லாம் விட்டுவிடுகின்றேன். இந்த உரையில் 9 கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகள் தொழிற்சங்க கோரிக்கைகள் போல் இருக்கின்றன. அவற்றை அடிக்கடி பார்த்து எனக்குப் பழக்கம். மத்திய அரசாங்கம் இவற்றைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. மற்றவைகள் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது பங்கு என்ன, எதை எதைப் போட்டிருக்கிறோம். என்பது பற்றியதாகும். ஆனால், கடைசியாக மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"மத்தியக் கிழக்கில் அண்மையில் மூண்ட போர், அதனையடுத்து நிகழ்ந்த விளைவுகள் இவற்றால் உருவான எண்ணெய் நெருக்கடி நாட்டு நிலவரத்தை முன்னெப்போதையும் விட மிகக் கடுமையாக்கி யுள்ளது. நாட்டின் நிலைத்த மேம்பாடு, சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி இவற்றுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் மொத்த



அமைப்பும், இந்த நிலைமைகளால் நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையொட்டிப் பரிசீலனை செய்யப்பட வேண்டியுள்ளது முதலமைச்சர்கள் அளவில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டிய அளவிற்குச் சூழ்நிலை மிகக் கடுமையாகவுள்ளது எனத் தமிழ்நாடு அரசு கருதுகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். முற்றிலும் சரி யானது. தேசத்தை முன்வைத்து இந்தக் கருத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. தேசம் இல்லை என்று சொன்னால்,. நாம் இல்லை. ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கில் எண்ணெய் இல்லையென்றால், எண்ணெய் விலையை ஏற்றினால், இந்த ஊரில் கார்கள் ஓடவில்லை. மிகப் பெரிய நாடு, நேற்று வரையில் மிகச் செல்வம் கொழிக்கின்ற நாடு என்று சொன்னவர்கள் எல்லாம் ஒரு மாதமாக தடுமாறி, திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இன்றைய தினம் பிரிட்டனில் 3 நாள் வாரம் வர வேண்டும் என்று கிளர்ச்சி வந்திருக்கிறது; வாரத்திற்கு மூன்று நாட்கள் தான் வேலை. ஜப்பான் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தேசமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் இன்றைய தினம் சண்டை போட்டு தொல்லை கொடுக்க வேண்டியதில்லை. சண்டை போடாமலேயே ஒரு நாட்டுக்கு ஒரு நாடு தொல்லை கொடுக்க முடியும். மத்திய கிழக்கில் எண்ணெய் விலையை ஏற்றினார்கள் என்றவுடனே, பிரேசில் போன்ற லாட்டின் அமெரிக்க நாடுகளிலும், ஆப்பிரிக்காவிலும் இருக்கின்ற சின்னஞ்சிறு நாடுகளும் காப்பிக்கொட்டை விலையை ஏற்றி விட்டார்கள். அடுத்தபடியாக யார் எந்த விலையை ஏற்றுவார்கள் என்று சொல்ல முடியாது. இப்படி ஒருவரோடு ஒருவர் சண்டை போட இன்றைக்கு பண்டங்கள் விற்பதையே ஆயுதங்களாக உபயோகிக்கின்ற நிலைமை இருக் கிறது. எனவே, தனியாக ஒரு நாடு இன்றைய தினம் தன்னுடைய திட்டங்களை வகுக்க இயலாது. எப்படியோ ஒரு வகையில் ஒரு நாடு இன்னொரு நாட்டோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று ஒவ்வொரு மாநிலமும் இன்றைய தினம் மற்ற மாநிலங்களோடு பிணைக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் ஒட்டு மொத்தமாக ஏற்படுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம்மைப் பாதிக்கிறது. இன்றைய தினம் என்ன பார்க்கின்றோம் ? ஒரு பெரிய சோர்வு, அயர்வு ஏற்பட்டு, அதன் காரணமாக இலேசான விரக்தி நாட்டு மக்களிடையே வருகிறது. அரசியல் கட்சிகளுக்கு விரக்தி வரலாம். அரசியல்வாதிகளுக்கு தோல்வி யினாலோ அல்லது மனச்சலிப்பினாலோ சோர்வு வரலாம். ஆனால் தேசம் முழுமையும் உள்ள மக்களுக்குச் சோர்வு ஏற்பட்டால், அது ஆபத்தானது. மக்களுக்குச் சோர்வு ஏற்படுவது தகாதது. இது எங்கே கொண்டுபோய் விடுமென்றால், நாமெல்லாம் இன்று

போற்றிப் பாதுகாக்க விரும்புகின்ற ஜனநாயக அமைப்பிற்கு ஆபத்தைக் கொண்டு சேர்க்கும். இந்த அவை இருந்தால், நானும் நண்பர் திரு. சுவாமிநாதனும் கருத்து மாறுபாட்டைச் சொல்லலாம். இந்த அவையே போய்விட்டால், ஜனநாயகமே போய்விட்டால், என்ன ஆவது ? நான் போவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. கட்சிகள் இங்கே ஆட்கள் மாறுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. கட்சிகள், அதிகாரங்கள் மாறுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எண்ணிக்கை மாறுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இடங்கள் மாறுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் இந்த அவை மாறக்கூடாது, போய்விடக் கூடாது என்பதைப் பற்றிக் கவலைப்படுகின்றேன். எனவே ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், தேசத்திலே பொறுப்புணர்ச்சி அதிகமாக வேண்டும்.

அடுத்து கவர்னர் அவர்கள் ரொம்ப அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு வேளை மரபு வழி பற்றிக்கூட இருக்கலாம். சம்பிரதாயமாக ஆண்டுதோறும் சொல்வதாகக்கூட இருக்கலாம். "உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி,
பி.ப. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம்
6·10. ஆகியவை கமழும் சூழ்நிலையில் இந்த விவாதங்கள் நடைபெற வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இந்த விவாதங்கள் எல்லாம் சுமுகமாக நடைபெறுவதற்கு இவைகளையெல்லாம் அச்சுப் போட்டு வருஷந்தோறும் கொடுக்கும் சம்பிரதாய வார்த்தைகளாக இவற்றை நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். தலைவர் அவர்களே, இந்த உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம் ஆகியவை கமழும் சூழ்நிலையில்தான் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திட்டம் ஒழிக, சோஷலிசம் ஒழிக, இவை எல்லாம் கூடாது, பொதுத் துறை ஒழிக என்று கூறுவது அவர்களுடைய கட்சியின் இயல்பான கொள்கை. எனவே அவற்றைச் சொல்வதற்கு பல நியாயங்களை எடுத்துச் சொன்னார்கள். எப்பொழுதுமே பொறுப்பில் இல்லாதவர்கள் பேசுவது இலகுவானது. அதிகாரத்தில் இருப்பவர்கள் பேசுவது கஷ்டம். இது ஒன்று. இரண்டாவது, ஒரு மாற்றத்தை விரும்புபவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கொடுக்கின்ற ஆதாரங்கள், ஆர்குமெண்ட் இருக்கிறதே, அது கொடுப்பதற்குக் கஷ்டமானது. ஆனால் அதை வேண்டாம் என்று சொல்பவர்கள் இலகுவாகக் கொடுக்கலாம். எப்பொழுதுமே அஃபன்சி-





விலே போவது கஷ்டம். குற்றப்பத்திரிகை போட்டுக் கொடுப்பது சிரமமான காரியம். ஆனால் டிஃபன்சிலே சொல்வது ரொம்ப இலகுவான காரியம். ஒரு மாற்றத்தைச் செய்கிறபோது, மாற்றத்தை விரும்பும் சக்திகள் நிச்சயமாக அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. திட்டம் தோற்றுப் போய்விட்டது என்கிறார்கள். எங்கே திட்டம் தோற்றுப் போயிற்று ? எந்த உற்பத்தி குறைந்திருக்கிறது ? திட்டம் எங்கே தோல்வியடைந்தது ? திட்டம் தோல்வியடைந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஒவ்வொரு திட்டத்திலும் பலன் கிடைத்திருக்கிறது. ஆனால் அந்தப் பலன் முழுமையாகக் கிடைக்கவில்லை. யார் காரணம் ? நண்பர் எந்த வர்க்கத்திற்காக நியாயம் சொல்கிறாரோ அந்த வர்க்கந்தான் காரணம். அதுதான் முதலாவது காரணம். இன்று ஆளுங்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. ஒரு நல்ல சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டு வந்தால், நான் அதை ஆதரிப்பேன். ஆதரிப்பது என்று சொன்னால், மேடையிலே பேசுவதல்ல. நடைமுறையில் அதை இம்ப்ளிமெண்ட் செய்வதற்கு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேசும்போது "நண்பர் எந்த வர்க்கத்திற்காக வாதாடுகிறாரோ அந்த வர்க்கம் காரணம்" என்று பேசுகிறீர்கள். இன்னொரு பத்தாண்டு கழித்து புத்தகத்தை எடுத்துப் படிக்கும்போது எந்த நண்பர் என்று புரியாமல் போய்விடும். ஆகவே குறிப்பிட்டுச் சொல்வது நல்லது.

திரு. எம். ஆறுமுகசாமி : நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் தனியார் துறைக்கு ஆதரவாளர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர்கள் நண்பர் என்று சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திலே இல்லை. ஆனால் ஒரு வர்க்கத்திற்காகப் பேசுகிறார் என்று சொல்கிறார். திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று என் மனதிலே படுகிறபோது, பொதுவாக நாட்டின் நிலைமையைக் கவனத்திலே கொண்டு, சாதாரண மக்கள், ஏழை மக்கள் ஆகியோருடைய நிலைமையை மனதிலே கொண்டு, சொல்கிறேன். அவர்களுடைய பொருளாதாரம் வளரவேண்டும் என்பதுதான் எல்லா அரசியல் கட்சிகளின் கருத்து. ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாமே தவிர, ஒரு வர்க்கத்திற்காக இன்னொருவர் பேசினார் என்று அவர்கள் சொல்வது சரியல்ல என்ற கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் தனியார் துறையை வரவேற்பவர்கள். தனியார் துறை இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். தனியார் துறை என்றால், யார் என்று எல்லோருக்கும் தெரியும். அவர்கள் நீண்டகாலமாக கோர்வையாக இங்கே பேசி வருகின்ற கருத்துக்களின் அடிப்படையிலே இப்போது குறிப்பிட்டேன். அடுத்து, இப்போது நான் சொல்கிறேன். இது தெனாலிராமன் பூனை வளர்த்த கதை மாதிரி. தயவுசெய்து நான் ஒரு கதையை இங்கே சொல்ல நேரிட்டதற்காக நீங்கள் அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டும்.

தெனாலிராமன் ஒரு பூனை வளர்த்தான். அவனிடம் பூனை ஒன்றை வளர்க்கச் சொல்லி கொடுக்கப்பட்டது. அந்தப் பூனைக்கு தினந்தோறும் பால் கொடுப்பதற்காக அவனுக்கு மானியம் கொடுக்கப்பட்டது. ஆனால் தெனாலிராமன் அந்தப் பாலை தானே சாப்பிட்டுவிடுவான். பூனை இளைத்துப் போய்விட்டது. மன்னன் அந்தப் பூனையை எடுத்துவரச் சொன்னான். பூனையை தெனாலிராமன் வீட்டிலிருந்து எடுத்து வந்தார்கள். அது வருவதற்குள்ளே செத்துப் போய்விடுமோ என்ற நிலைமை. அவ்வளவு மோசமாக இருந்தது. "என் இந்தப் பூனை இப்படி ஆயிற்று? பால் கொடுக்கச் சொல்லி இவ்வளவு எல்லாம் கொடுத்தோமே?" என்றார் அரசர். "மகாராஜா, நீங்கள் கொடுத்த பூனை, பாலைக் குடிக்கவில்லை" என்றான் தெனாலிராமன். "இது என்ன புதுமையாக இருக்கிறது, பாலைக் குடிக்காமல் பூனை எப்படி இருக்க முடியும்" என்று கேட்டான் மன்னன். "நீங்கள் வேண்டுமென்றால் பாருங்கள்" என்றான். "சரி, பாலைக் கொண்டுவந்து வை" என்றான் மன்னன். இவன் பாலைக் கொண்டு வந்து வைத்தான். பூனை கிட்டே வந்து ஓடிவிட்டது. "பார்த்தீர்களா, பாலைக் குடிக்கவில்லை" என்றான். "என்ன சமாசாரம்?" என்று அரசர் கேட்டார். "நீங்கள் சொன்ன காலத்திலேயிருந்து நான் பாலை வைத்துக் கொண்டிருக்கிறேன், அந்தப் பூனை குடிக்க மாட்டேனென்கிறது" என்றான். முதல் நாள் அந்தப் பூனைக்கு நல்ல கொதிக்க கொதிக்க பாலைக் காய்ச்சி கோப்பையிலே வைத்துவிட்டான். அந்தப் பூனை முதல் நாள் வந்து வாயை வைத்தது. சுட்டது. மறுநாளிலேயிருந்து பால் வைத்தால் சுடும் என்று ஓடிவிட்டது. நமது பொதுத் துறையைப்பற்றி விமரிசனம் செய்கிறார்களே, அவர்கள் பொதுத் துறையை முதலிலே ஒழிப்பதற்கு முயற்சிப்பது, அதிலே ஊழல், இதிலே தவறு என்று எடுத்துப் பேசுவது, அதோடு ஒத்துழைப்பதில்லை. உதாரணமாக, இப்பொழுது உணவு தானியத்தில் அரசு வாணிபம் செய்வதற்கு முயற்சித்தது. என்ன நேரிட்டது? ஒருவர் கோதுமையை அரசுக்கு அளக்காதே என்கிறார். இன்னொருவர் கோதுமையைப் பாதுகாப்பாக வைத்துக்கொள் என்கிறார். அரசு வர்த்தகம் செய்வதைத் தடுப்பதற்கு, தொடங்கும்போதே, அது தப்பு என்கிறார்கள். அதற்குப் பிறகு அதை ஒழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். அதன் பிறகு, நம்மிடத்திலே நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் பழைய நிர்வாக இயந்திரம், புதுமையான நிலைமைக்குப் பொருந்தாத இயந்திரம் அல்லது வளர்ச்சி பெற்றிடாத இயந்திரம். இதை வைத்துக்கொண்டு செயல்படும்போது இந்த பலகீனம் தென்பட்டவுடனே, தங்களிடத்திலே உள்ள பிரசாரபலம் காரணமாக, பெரிதாகக் கூப்பாடு போடுகிறார்கள். அப்படிச் செய்து அதை உடைக்கிறார்கள். எப்படி எதிர்பார்க்கிற பலன் கிடைக்கும்? நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், எப்பொழுதாவது நண்பருடைய கட்சி திட்டத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டதா? பொதுத் துறைக்கு ஆதரவாகச் செயல்பட்டதா?

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நமது நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் துறையும் இருக்க வேண்டும், அதே சமயத்திலே பொதுத் துறையும் இருக்க வேண்டும், ஜாயிண்ட் செக்டார் என்று பொதுத்துறை, தனியார் துறை என்ற இரண்டும் சேர்ந்து இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய பொருளாதார அடிப்படை. அந்த ஜன





நாயகத்திலே இருக்கிறோம். அதைத்தான் திரு சி. வி. ராஜகோபால் அவர்கள்கூடக் கேட்டார்கள், உங்களுடைய பொருளாதாரத்திலே மிக்சட் எக்கானமி, என்று சொல்லக்கூடிய கலப்புப் பொருளாதாரம் இந்திய நாட்டின் சீர்குலைவுக்குக் காரணமாக இருந்தது என்று. பொதுத் துறைக்காக மட்டும் அல்ல இந்திய நாட்டுப் பொருளாதாரம். தனியார் துறைக்காகவும் இருக்கிறது. தனியார் துறைக்காகவும் செலவு செய்கிறோம். தனியார் துறையும் வளர வேண்டும் என்றுதான் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்திலே போடுகிறோம். அப்படிப் பார்க்கிறபோது, தனியார் துறையே கூடாது என்பதாகவோ, தனியார் துறைதான் பொதுத் துறையை அழிக்கிறது என்றோ பேசுவது அவர்கள் இப்பொழுது இருக்கிற கட்சியினுடைய கொள்கை அல்ல. அது வேண்டுமானால், அவர்கள் முன்னாலே இருந்த கட்சியினுடைய கொள்கையாக இருக்கலாமே ஒழிய, இப்பொழுது அவர்கள் இருக்கிற கட்சி தனியார் துறை இருக்க வேண்டும் என்று தனியார் துறைக்கு பணம் ஒதுக்கீடு செய்கிறது என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: நண்பர் அவர்கள் எங்கேயோ ஒரு வாதத்தைக் கிளப்புகிறார்கள். ஜனநாயக சோஷலிசம் என்பது தனியார் துறையும் பொதுத் துறையும் இருக்கிறது அல்ல. இதை யாரும் ஜனநாயக சோஷலிசம் என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். பொதுத் துறை என்பதே சர்வரோக நிவாரணி அல்ல. பொதுத் துறைக்கு எல்லாம் வந்துவிட்டாலே சோஷலிசம் வந்துவிட்டதாகப் பொருள் அல்ல. பொதுத் துறை என்பது சோஷலிசத்திற்கு முன்னால் எடுக்கக்கூடிய ஒரு பூர்வாங்க நடவடிக்கை. இன்றையதினம் நாட்டிலே என்ன நடக்கிறது? கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர முடியவில்லை. யார் பதுக்கி வைத்திருக்கிறார்கள்? ஏழை, எளிய, வறிய மக்களா கறுப்புப் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள்? கறுப்புப் பணம் யாரிடத்திலே இருக்கிறது? சாதாரண மக்களா பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? பொதுத் துறை இருக்கட்டும். முதலீடு யாராவது செய்கிறார்களா? இந்த தேசத்திலே முதலீடு செய்வதற்கு முதல் இருந்தபோதுகூட, வேறு எங்கேயாவது லாபம் கிடைக்காதா, எந்தத் தொழிலிலே, எந்தச் சாமானுக்கு என்று போகும் தொழிலதிபர்களை நாம் பார்க்கவில்லையா? வேறு நாடுகளுக்குப் போவதைப் பார்க்கவில்லையா? இந்த தேசத்திலே அத்தியாவசியமான பொருளுக்கு முதலீடு செய்ய யாராவது தயாராக இருக்கிறார்களா? இல்லையே. ஆகவே அதைக் கொஞ்ச நாளைக்கு அனுமதித்து, அவர்களும் கொஞ்ச நாளைக்கு இருக்கட்டும் என்று இந்தக் கொள்கையை நான் ஏற்றுக்கொள்கிறேனா என்பது வேறு விஷயம்—மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு இந்த ஜாயிண்ட் செக்டார் துறையை தற்காலிகமாக அனுமதித்திருக்கிறார்கள். நான் அதற்காகச் சொல்லவில்லை. இந்தப் பொதுத் துறை, இந்தத் திட்டம் ஒரு முற்போக்கான திட்டம் என்று சொன்னால், அதற்கு ஆதரவாக இருந்து, ஆதரித்து செயல்படுத்தி அதிலே ஏற்பட்ட தவறுக்குப் பிறகு பேச வேண்டும். வேறு நாடுகளிலே நான் கேள்விப்பட்டது அப்படித்தான். ஒரே இடத்திலே கன்சர்வேடிவ் எம்.பி.யையும், லேபர் எம்.பி.யையும் வைத்துக் கொண்டு பேசினேன். இரண்டு பேரும் சொன்னார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன்: ஜனநாயக முறைக்கே மாறுபாடான ஒரு கொள்கையை திரு ஆறுமுகசாமி அவர்கள் சொல்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பிரஷ்னேவ் இங்கே பேசும்போது எதிர்க் கட்சி எதற்காக இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். நம்முடைய ஜனநாயக பாரம்பரியத்திலே ஆளுங் கட்சியும் இருக்க வேண்டும், எதிர்க் கட்சியும் இருக்க வேண்டும். எதிர்க் கட்சி ஆளுங் கட்சியினுடைய தப்பை எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் நாம் வளர்க்கக் கூடிய ஜனநாயகம். ஆனால் ஆளுங்கட்சி எதும் செய்துவிட்டால், எதிர்க் கட்சி அதற்கு முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும். எதிர்த்துப் பேசுவது கூடாது என்பது அந்த நாட்டிலே அவர்கள் வைத்திருக்கக்கூடிய சர்வாதிகாரம். அது போலத்தான் நாம் இயங்க வேண்டும் என்றோ, அதன் காரணமாகத்தான் திட்டம் தோல்வி அடைந்தது என்றோ, தோல்வி அடைந்த திட்டங்களுக்கு எதிர்க் கட்சிகளை காரணமாகக் காட்டிக் கொண்டு, தாங்கள் அதிலேயிருந்து தப்புவதற்கு அதை உபகரணமாக ஆக்குவது சரியல்ல என்பதையும் நான் உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, அங்கேதான் நானும் அவர்களும் வேறுபாடு கொள்கிறோம். எதிர்க் கட்சி என்றால் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தையும் எதிர்த்துப் பேசுவதுதான் என்று நண்பர் அவர்கள் புரிந்துகொண்டிருந்தால் நான் அதற்காக வருந்துகிறேன்.

Mr. CHAIRMAN ; There is no democracy without a rival party. There is no democracy without opposition. All right, the hon. Member may proceed.

திரு. எம். ஆறுமுகசாமி: எதிர்க் கட்சி என்பதே கூடாது என்று நான் சொல்லவில்லை. எதிர்க் கட்சி இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. நானே இங்கே எதிர்க் கட்சியாகத்தான் இருக்கிறேன். அப்படியென்றால், நான் இங்கே கலைத்துவிட வேண்டும் என்றல்லவா சொல்ல வேண்டும்? எதிர்க் கட்சி இருக்கும். ஆனால் எதிர்க் கட்சி என்பது எல்லாத் திட்டங்களையும் எதிர்த்து உடைப்பது என்பதற்காக அல்ல. திட்டங்களிலே ஏற்படுகிற கோளாறுகளை, தவறை எடுத்துச் சொல்லும் போது, பொதுவாக இது சரியல்ல என்று சொல்வது சரியல்ல. ஒரு திட்டம் கொண்டு வந்தால், அந்தத் திட்டம் இப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். பிறகு திட்டம் வந்த பிறகு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அதுதான் எதிர்க் கட்சி. அதற்குப் பிறகு, ஒத்துழைத்த பிறகு, இந்தத் திட்டம் தோற்றது என்றால், நீங்கள் நாங்கள் சொன்னபோது கேட்கவில்லை என்று சொல்ல வேண்டும். இதுதான் கட்சிக்குள்ளே நடக்கிற ஜனநாயகமும், கட்சிக்கு வெளியிலே இருக்கக்கூடிய ஜனநாயகமும். அதற்குப் பதிலாக நீங்கள் சொல்வது அத்தனையையும் நாங்கள் எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எதைக் கொண்டு வந்தாலும் எதிர்ப்போம் என்று சொல்வது எதிர்க் கட்சி மரபு இல்லை. அது ஜனநாயகத்தின் கடைசி கட்டத்திற்குக் கொண்டுபோய்விடும். அதுதான் சர்வாதிகாரப் பாதையை வகுக்கும். நாம் அதற்குத்தான் அச்சப்படுகிறோம். இன்றைய தினம், சோர்வும், அமைதியின்மையும் தேசத்திலே அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்



கொண்டே வருகிறது. இந்த மாநிலத்திற்கு ஒரு மாதிரி, மற்ற மாநிலத்திற்கு ஒரு மாதிரி என்பதல்ல. எல்லா இடங்களிலேயும் அதுதான் நிலைமை. தமிழ் நாட்டிலே எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு படித்தவர்களுக்கு வேலை கிடையாது. "இல்லிடரேட்" "லிட்டரேட் அன்னெம்ப்ளாயிடு" அதிகரிப்பது தேசத்திற்கு பெரிய ஆபத்து. என்ன காரணமென்று சொன்னால், இவர்கள் வெளியில் போய் சும்மா இருக்கப் போவதில்லை. படித்தவர்களுக்கு மற்ற நாடுகளில் வேலை இருப்பதால், அவர்கள் தங்கள் பிழைப்பைப் பார்க்கிறார்கள். வேலை முடிந்த பிறகு, அவர்கள் வேறுவித விளையாட்டுகளில், வேடிக்கைகளில் இறங்குகிறார்கள். இங்கே வேலை இல்லையென்றால், பாலிடிக்சே புரபெஷன் ஆகிவிடுகிறது. "பாஸ்ட்டைம்" ஆகிவிடுகிறது. ஒரு வேலையும் இல்லையென்றால், அரசியல் பண்ணலாமென்ற நிலைமை இருக்கிறது. அரசியல் என்பது "புரபெஷன்" மாதிரி, வேலையில்லாதவர்களுக்கு வேலை தருகின்ற நிலைமை மாதிரி ஆகிவிட்டால், அதிலும் குறிப்பாக விஞ்ஞானம் பயின்ற, லேபரட்டரியில் அல்லது ஆய்வுக் கூடங்களில் ஆய்வு நடத்திப் பயின்ற இளைஞர்கள் அந்த நிலைமைக்கு வந்துவிட்டால், அவர்களைத் தூண்டுவதற்கு இரண்டொருவர் போதும். அப்படித் தூண்டினால் தேசத்திலே ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படும்.

நண்பர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் கம்யூனிசத்தை வரவேற்கிறேன். கம்யூனிசம் இந்த தேசத்திற்கு வருமானால், அதை இரு கை கூப்பி வரவேற்பேன். ஆனால் இந்த நாட்டில் கோடானுகோடி மக்களுக்கு மூன்று வேளைச் சாப்பாட்டிற்கு இன்னும் நாம் வழி ஏற்படுத்தவில்லை. எனவே இப்போது கம்யூனிசத்தைப்பற்றிப் பேசுவது வேலையற்றது என்பதுதான் என்னுடைய கருத்து. மேலும், சோஷலிசத்திற்கே நம்முடைய நண்பர் போன்றவர்களுடைய மனம் பக்குவமடையாத காரணத்தால், கம்யூனிசத்தையும் சோஷலிசத்தையும் காட்டி பயமுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே அது ஒரு புறம் இருக்கட்டும். அது ஒரு சித்தாந்தம். அது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தல்ல. யார் வேண்டுமானாலும் அதைச் சொல்லலாம். மார்க்ஸ் அதை யாருக்கும் பிதிரார்ஜிதமாக எழுதிவிட்டுப் போகவில்லை, "இவர்கள் தான் கம்யூனிஸ சித்தாந்தத்திற்கு உரியவர்களென்று". நண்பரவர்கள் என்னை கம்யூனிஸ்ட் என்று மறைமுகமாகச் சொன்னார்கள். அதிலிருந்த ஒரு கண்ணியமான நையாண்டியை நான் புரிந்துகொண்டேன். இருப்பினுங் கூட நான் கம்யூனிசத்தின் பால் ஈடுபாடு கொண்டவன் தான்; சோஷலிசத்தின்பால் ஈடுபாடு கொண்டவன்தான் என்பதை மறைக்கவில்லை. இன்றைய தினம் நாம் கோடானுகோடி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வேலையில்லாத எண்ணற்ற இளைஞர்கள் தப்பான பாதைக்குப் போகிறார்கள்; அதை நாம் தடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். தேசத்தில், சமுதாயத்தில் இருக்கிற ஒழுக்கக்கேடுகளை, சீர்கேடுகளைப் போக்க வேண்டும். பாலில் தண்ணீர் கலக்கிறான். இதைத் தடுக்க மத்திய அரசா வர வேண்டும்? எண்ணெயில் கலப்படம் செய்கிறார்கள்.; உணவிலே கலப்படம் செய்கிறார்கள். முந்தா நாள் பிரட் வாங்கிச் சாப்பிட்டேன். அந்த பிரட்டிலே கல் இருக்கிறது. பிரட்டிலே கல் இருக்கிறது; இனிமேல் சர்பத்திலே கல் இருக்கப் போகிறது. எதிலே, எதைக் கலக்க வேண்டுமென்பதுகூடத் தெரியாத அளவுக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு தார்மீக ஒழுக்க நெறிகள் போய்விட்டன.

திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு தலைவர்களே, சர்க்கார் தயாரிக்கும் மாடர்ன் பிரட்டில் கல் இருந்ததா அல்லது பிரைவேட் கம்பெனிகள் தயாரிக்கும் பிரெட்டில் கல் இருந்ததாவென்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, எந்தக் கருத்தில் அவர் கேட்டாலும், அவருக்குச் சாதகமாக என்னுடைய பதில் இருக்காது. அது தனியார் கம்பெனி ஒன்றின் ரொட்டிதான்.

தலைவரவர்களே, நாம் இங்கே ரொம்பவும் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். கட்சி அரசியல் பேசிக்கொள்வது வேறு. இன்றுள்ள தேசத்தின் நிலைமையை கவர்னர் அவர்கள் அக்கரையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதால் சொல்கிறேன். இன்றைய தினம் எந்தப் பகுதி மக்களிடத்திலும் அமைதி கிடையாது. எல்லா மட்டங்களிலும் அல்லல் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு பேர் படித்தவர்கள் இருந்தால், அந்த வீடு என்னவாகும் ? அவர்கள் அந்த வீட்டிற்குச் சுமையாக இருக்கிறார்கள். "அன்எம்ப்ளாய்மெண்ட்" இருக்கிறதே, இது மக்களது "பர்சேசிங் பவர்"-ஐக் குறைப்பதற்கான "மெயின் லீவர்". வேலையற்றோர் பெரும் பட்டாளமாக இருப்பதால்தான், அது நம்முடைய உள்நாட்டில் வாங்கும் சக்தியைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. இது பெரும் சுமையாக இருப்பதோடல்லாமல், அமைதிக்கும், ஜனநாயகத்திற்கும் பெரும் பங்கத்தை ஏற்படுத்தும் நிலையில் இருக்கிறது. மத்திய அரசு இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டுமென்று கேளுங்கள். நான் கேட்கவேண்டாமென்று சொல்லவில்லை. மத்திய அரசிடத்தில் பணம் கேட்பது பற்றி திரு தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள் ; திரு. சுவாமிநாதன் அவர்களும் சொன்னார்கள். எங்கே மத்திய அரசு இருந்தாலும்—டெல்லியில் இருப்பதை நகர்த்தி, ஐதராபாத்தில் தலைநகரை வைத்துக் கொண்டாலும்—அங்கே போகத்தான் வேண்டும். கன்னியாகுமரியில் இருப்பவன் சென்னைக்கு வந்துதான் ஆக வேண்டும். இதைச் சுத்தமாக இல்லாமல் செய்து விட முடியாது. இது எல்லா நாடுகளிலும் இருப்பதுதான். மத்திய அரசிடம் கேட்பதையோ, கோரிக்கைகளைப் பெறுவதையோ, நியாயங்களைக் கூறி வாதாடுவதையோ நான் குறையாகச் சொல்லவில்லை. அதே நேரத்தில், நம்முடைய கரத்திலேயுள்ள அதிகாரத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். வெறும்புள்ளி விவரங்களைச் சொல்வதால் பலனில்லை. நாங்கள் இவ்வளவு திட்டங்கள் போட்டிருக்கிறோம் என்று சொல்வதால் பிரயோஜனமில்லை. ஏன் இந்த அமைதியின்மை ? மற்ற மாநிலங்களில் வேறு உருவத்தில் வெடித்திருக்கலாம். ஆனால் இந்த மாநிலத்தில்கூட வெடிக்கும்படியான அபாயம் இருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பார்ப்பதற்கு, மேலே—"சர்பேசில்" ஒன்றும் இல்லாமலிருப்பது போல் தோற்றம் அளித்தாலும்கூட, மக்களுடைய அன்றாடக் கஷ்டங்களினால், அவர்களிடையே ஒரு அதிருப்தி இருக்கிறது. இங்கே என்ன சர்க்கார் ஆள்கிறது ; டெல்லியில் என்ன சர்க்கார் ஆளுகிறது" என்று பிரித்துப் பார்க்கத் தெரியாது. அவர்களுக்கு. வாழ்க்கை மோசமாக இருக்கிறதென்றுதான் அவர்களுக்குச் சொல்லத் தெரியும். இந்தக் கருத்தை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய தினம் உணவு தன்னிறைவுபற்றிப் பேசுகிறோம். மேட்டுப் பாங்கான பகுதிகளுக்குத் தண்ணீர் வர முடியாத நிலைமை தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கிறது. நான்கில் ஒரு பங்கு நெல்லை உற்பத்தி செய்கிற இடத்திலே, [illegible] அறுவடை பாதிக்குமென்று கருதுகிறேன்.





எனக்கு நேற்று முன் தினம் நண்பர்கள் அளித்த தகவல்படி சொல்கிறேன். இந்த வருஷம் உரம் சரியாகக் கிடைக்கவில்லை. உரம் ஏற்கனவே கிடைத்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைத்திருந்தாலும், போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால் புதிய புதிய பயிர்களை நாம் சாகுபடி செய்கிறோம். உரம் அதிகமாகச் சாப்பிடக்கூடிய பயிர்களைச் சாகுபடி செய்கிறோம். இதனால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், உணவு நிலைமை பெருமளவுக்குப் பாதிக்கப்படாவிட்டாலும் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அணைக்கட்டுகளில் தண்ணீர் கிடையாது. மின்சாரம் பாதிக்கப்படலாம். இன்னும் 15 பர்செண்ட் அலல்து 10 பர்செண்ட் வெட்டு மறுபடியும் ஏற்படலாம் என்ற நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகள் தொடருகிறபோது, மக்களிடத்திலே அதிருப்தி இருக்குமானால், அது ஜனநாயகத்திற்கு ஊறு விளைவிக்கும். நான் சொல்வது நபர்களைப் பொறுத்ததல்ல. இந்த அதிருப்தியைச் சமாளிப்பதற்கு நாம் தீவிரமான பல காரியங்களைச் செய்ய வேண்டும்.

நான் கேட்கிறேன், நீங்கள் இந்தக் கல்விச் சீர்திருத்தத்தை எப்போதுதான் செய்யப் போகிறீர்கள் ? இப்போதைய கல்வியைப் படிப்பதால் பலனில்லை. படித்தவர்கள் எந்த வேலைக்கும் லாயக்கில்லை. படிக்க வைக்காமல் இருந்திருந்தால், அவன் மாடாவது மேய்ப்பான் போலிருக்கிறது. எனக்கே சொந்த அனுபவம் இருக்கிறது. இந்தப் பையன்களை வீட்டிலே வைத்திருப்பதே தொல்லை. படித்துவிட்டால், வேறு வேலைக்கு, தான் லாயக்கில்லை என்று முடிவு கட்டுகிறான். விவசாயத்திற்கு லாயக்கில்லை என்று விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் எண்ணுகின்ற நிலைமை இன்று இருக்கிறது. எனவே இந்தப் படிப்பு எதற்கும் லாயக்கில்லாமல் இருக்கிறது. 11 வருஷம் படித்த பிறகும் பிரயோஜனமில்லை. நம்முடைய மாநிலத்தினுடைய பெரும் பணத்தினை, சுமார் 100 கோடி ரூபாயை கல்விக்காகச் செலவு செய்கிறோம். இவ்வளவு செலவழித்த பிறகும், வருஷத்திற்கு ஒரு லட்சம் பேர்களை "பிட் பார் நத்திங்" என்று சொன்னால், என்ன பிரயோஜனம் ? அதிலே எதாவது ஒரு மாற்றத்தைச் செய்ய வேண்டாமா ? இதை எத்தனை நாளைக்குப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் ; எத்தனை நாளைக்கு மத்திய அரசு ; மத்திய அரசு என்று மற்றவற்றிற்குச் சாட்டுவது போல் இதற்கும் சாட்டப் போகிறீர்கள் என்று கேட்கிறேன். எனவே இந்தச் சீர்திருத்தத்தைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் போன்று நாமே செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. ஊரில் இருக்கக்கூடிய கலப்படம் பற்றிச் சொன்னேன். மாணவர்களுடைய ஒழுக்க நெறிகளைப் பற்றி புலவர் அறிவுடை நம்பி அவர்கள் சொன்னார்கள். நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சொன்னேன். அப்போது நம்முடைய நண்பர்களெல்லாம் அதை நகைச்சுவையாக ரசித்தார்கள். இன்றைய தினம் அது வளர்ந்திருக்கிறது. எதற்கு கிளர்ச்சி நடக்கிறதென்று தெரியாத அளவுக்கு, கிளர்ச்சிகள் வலுவடைந்து வந்திருக்கின்றன. இதற்கு ஒரு "மாரல் கோடை" கூட அரசியல் கட்சிகள் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னேன். அதையும் செய்யவில்லை. இன்றைய தினம் பத்திரிகையில் என்ன செய்திகள் வருகின்றன ? பத்திரிகையில் செய்திகளை 10 நாட்கள் படித்தால், அவன் இகலோகத்திலிருந்து பரலோகத்திற்குப் போய்விடுவான். செய்திகள் எல்லாம் அவ்வளவு கற்பனையாக எழுதப்படுகின்றன. அரசியல் கட்சிகள் எதை வேண்டுமானாலும் சொல்வதென்று ஆரம்பித்துவிட்டோம். இதற்கு

யாரும் விதிவிலக்கு இல்லை. இந்த நிலைமையை எப்படி மாற்றுவது என்பதைப் பார்க்க வேண்டும். இதை எப்படி பொதுமக்கள் சகித்துக் கொண்டிருப்பார்கள் என்று கேட்கிறேன். ஒரே குழப்பமாக இருக்கிறது. இந்தக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்காக நீங்கள் எதையும் செய்யாது எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் காட்டுகிறீர்கள். இல்லையென்றால் 1967-க்கு முந்தி இருந்த நிலைமை என்னவென்று கேட்கிறீர்கள். அதைக் கேட்டு, எங்களுடைய தலைவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் போன்றவர்களும் 1947-க்கு முந்தி இருந்த நிலைமை என்னவென்று கேட்பார்கள். அவர்கள் 1947-ஐக் காட்ட, நீங்கள் 1967 ஐக் காட்ட, ஊரில் இருக்கிறவன் வயிற்றைக் காட்ட, இந்த நிலைமை எங்கே போய் முடியுமென்று தெரியவில்லை. இப்படிப் பேசிக் கொண்டிருப்பதாலே என்ன பலன்? ஏதாவது வேகமாக மாற்றத்தைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், ஒழுக்க நெறிகள் எங்குபோய் முடியுமென்று சொல்ல முடியாது.

5, 6 நாட்களுக்கு முன்னால் தஞ்சாவூரில் ஒரு தகவல் அளித்தார்கள். உர விநியோகம் இவ்வளவு குறைவாக இருக்கின்றபோது, ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர், தேவைக்கு மேலாக 100 மூட்டை யூரியா உரத்தை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போயிருக்கிறார். அதிகாரிகள் அதைத் தடை செய்திருக்கிறார்கள். எதேச்சையாக அவ்வழியே வந்தவர்கள் அதிகாரிகள், அவருடைய பெயர், இடம் எல்லாவற்றையும் நான் சொல்ல முடியும். நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. இது நடந்திருக்கிறது. அநேகமாக அமைச்சரவர்கள் காதுக்கும் எட்டியிருக்கும். எப்படி ஒழுக்கத்தை நீங்கள் பாதுகாக்க முடியும்? நம்மிடத்திலேயே இப்படி இருந்தால்; பொறுப்பை யார் நிறைவேற்ற வேண்டுமோ அவர்களிடத்திலேயே இப்படி இருந்தால் என்ன செய்வது? பரமக்குடியிலிருந்து ஒரு நண்பர் வந்தார். இப்போது ஒரு மனு எழுதிக் கொடுத்தார். அங்கே ஒரு கூட்டுறவு ஸ்டோர் இருக்கிறது. ஆனால் உண்மையில் ஸ்டோர் இல்லை. ஸ்டோர் என்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கரைக்காக 10,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டுமாம். அந்தச் சட்டம்கூட எனக்குத் தெரியாது. அந்த முன் பணத்தைக் கூட கட்டாது, சர்க்கரையை வாங்கி, ஊழல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆள் அதை நடத்திக் கொண்டிருக்கிறார். அங்கே ஊழியர்கள் யாருக்கும் சம்பளம் கொடுக்கவில்லை. ஏகப்பட்ட குறைகள் இருக்கின்றன. இந்த விஷயத்தைப்பற்றி இப்போதுதான் சொன்னார்கள். ஹாலுக்கு வருவதற்கு, சற்று முன்பாகத் தான் சொன்னார்கள். அது பற்றிய விவரம் முழுவதும் தெரியாது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த ஸ்டோர் யாருடைய பொறுப்பிலிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன். அந்த ஸ்டோரில் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் முழுக்க முழுக்க வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் பிடிப்பில் இருப்பவர்கள் தான். அவர்கள் தான் அங்கே டைரக்டர்களாக இருக்கிறார்கள். அது அரசினுடைய கவனத்திற்கு வந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை, தலைவரவர்களே, தங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, வலது சாரி கம்யூனிஸ்ட் என்று சொன்னார்கள். அந்த ஒரு தகவல் கிடைத்ததற்காக 6 பி
நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். யார் செய்தாலும் தப்புதானே. இதில் யாரும் விதி விலக்கல்ல என்பதற்கு இது ஒரு உதாரணம் போல் இருக்கின்றது. பொதுவாக தவறுகள், ஒழுக்கக்கேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இவைகளைக் களைய ஒரு மார்க்கம் கண்டுபிடிக்க வேண்டும். இந்த அறிக்கையைப் படித்தால், மனதுக்கு திருப்தியை அளிக்கும்படியானதாக இல்லை. ஒரிரு திட்டங்களைச் சேர்ப்பதும், தேசத்திலே உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்வதும், அதற்குப் பிறகு இந்தத் தமிழ்நாட்டிலே நாம் போட்டிருக்கக்கூடிய திட்டங்கள் அது, இது என்று கூறுவதுமாகத்தான் இருக்கிறது. இவைகளையெல்லாம் தனித் தனியாக புத்தக வாயிலாகவும் படித்திருக்கின்றோம். இது ஒட்டுமொத்தமாக கவர்னர் அவர்களுடைய பேருரை என்ற பெயரில் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தவிர, உற்சாகத்தை அளிக்கக்கூடியதாக, மக்களுக்குத் தெம்பை அளிக்கக்கூடியதாக, மக்களுக்குச் சோர்வை நீக்கி ஆறுதலைக் கொடுக்கக்கூடியதாக இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

திரு. டி. கே. பொன்னுவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, பேராசிரியர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் அதை வழி மொழிந்து பேசியதைத் தொடர்ந்து நானும் வழிமொழிந்து பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப் போல, ஆளுநர் அவர்களுடைய உரையிலே, தமிழ் நாட்டிற்குத் தேவையான பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்ற பெருமிதத்தில் நான் ஆளுநர் அவர்களுடைய உரையை முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஆளுநரின் உரையைப் பாராட்டுகிறேன். அதற்குப் பொறுப்பேற்றிருக்கும் தமிழக சர்க்காருக்கு விவசாயிகளின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் தம்முடைய உரையிலே உர விநியோகத்தைப் பற்றிப் பேசினார்கள். நான் அதைப்பற்றிக் கடைசியாகப் பேசலாம் என்று எண்ணியிருப்பினும் கூட, இப்போது அதைப்பற்றி இரண்டு வார்த்தைகளைத் தெரிவித்துவிட்டு, நான் திட்டமிட்டபடி பேசக் கருதியிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு உர விநியோகத்தில் அடிமட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் அத்தனை பேரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் பிரச்சினை தீரும் அல்லது தேவைக்கு ஏற்ற அளவில், மத்திய சர்க்காரிலேயிருந்து நமக்குத் தேவையான உரம் கிடைத்தால், பிரச்சினை தீரும். நான் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன், விவசாயி என்ற முறையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம் நாட்டில் விவசாயிகள் கூட்டுறவு சங்கம் மூலமாக வழங்கப்படும் உரத்தை அவர்கள் ரூ. 10, ரூ. 15 என்று லாபம் வைத்துத் தரக்கூடிய நிலைமையில் வியாபாரிகளுக்குக் கொடுப்பதும், அதனையே பிறகு அதிக விலையிலே வாங்குவதுமான நிலைமைகள் இருப்பதனால், அந்த வேதனை எழுகின்றது. ஆளுநர் அவர்கள் குறிப்பிட்ட

வண்ணம் நம்முடைய தேவை 3 லட்சம் டன் என்றால், மத்திய சர்க்கார் 2·3 லட்சம் டன் கூடத் தராமல் இருக்கக்கூடிய கொடுமையான நிலைமை இருப்பதையும் நான் என்னுடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களுக்குக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே என்னை மிகவும் ஈர்த்தது இந்த ஆண்டு திட்டப்பட்டிருக்கக்கூடிய பாசன வசதிகளைப் பொறுத்ததாகும். பாசன வசதிகளில் 14 திட்டங்களுக்காக சுமார் 16 கோடி ரூபாயும், 13 புதிய நடுத்தரத் திட்டங்களுக்காக 15 கோடி ரூபாயும், 10 ஆயிரம் வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கும், 12,500 குழாய்க் கிணறுகளுக்குத் துளைகளுக்கும் 10 ஆயிரம் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் ஆன திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் செலவழிப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். தொடர்ந்து ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரும் பகுதியில் ஏரிகளும் குளங்களும், ஜமீன் பகுதிகளிலே உள்ள 27 ஆயிரம் பாசன ஏரிகளும், குளங்களும் புதுப்பிக்கப்பட இருப்பது விவசாயியாகிய என்னைத் தென்பிலே ஆழ்த்துகின்றது. இன்றையதினம் தமிழகத்திற்குத் தேவையான நீரிலே ஏறத்தாழ நிலத்தின் மேற்பரப்பில் உள்ள நீர் தீர்ந்த நிலைமையில் இருக்கின்றது. இன்று கிணறுகளிலே இருக்கின்ற தண்ணீர் தொட்டும் தொடாமலும் இருக்கின்றது. அந்தக் கிணறுகளை இன்னும் ஆழப்படுத்தினால் இரட்டிப்பாக ஆகுமென்று முன்னால் பிரதமர் செயலாளராக இருந்த திரு. ராயப்பா அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோதே ஒரு 26 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டம் தந்தார்கள். அதனை பொறியியல் வல்லுநர்கள் கேலியாகப் பேசியதும், அது ஆகாத திட்டம், குப்பைக் கூளத்திற்குப் போகவேண்டிய திட்டம் என்று சொன்னதும் எனக்கு கவனத்திலே இருக்கின்றது. அந்த அளவிலேயே இன்றையதினம் ஆழ் கிணறுகளிலே உள்ள நீர் இருக்கின்றது.

அடுத்தாற்போல் கிடைக்கக்கூடியது கடல் நீர். இந்தத் திட்டம் கடல் நீரை நல்ல நீர் ஆக்குவதும், செயற்கை மழை மூலம் நீர் பெறுவதும் ஆகும். கடல் நீரை நல்ல நீராக மாற்றுவதற்கு அதிகமான அளவில் மின் சக்தி தேவைப்படுகின்றது. அதற்குப் பெரும் பணமும் தேவைப்படுகின்றது. இது ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது. செயற்கை மழைக்கு அதேபோல அதிகமான அளவில், பெருமளவில் பணம் தேவைப்படுகின்றது. நம் நாட்டைப் பொறுத்த வரையில், இந்த முறைகள் நமக்குப் பயனளிக்குமா என்றால் முடியாது என்ற அளவில் நாம் ஏங்கித் தவிக்கின்ற நிலைமையில் தான் இருக்கின்றோம். டெல்லியைப் பார்க்கிறோம். டெல்லியைப் பார்த்தால், டெல்லியிலே இருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அவர்கள் கூறுகிறார்கள் "கங்கையும் காவிரியையும் இணைப்போம், அதன்மூலம் தேசிய ஒருமைப்பாட்டைக் கூட்டுவது மட்டுமல்லாமல், அதன் மூலமாக ஆற்று நீரையெல்லாம் பகிர்ந்து தருவோம்" என்று சொல்கின்றார்கள். டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் 1969-ஆம் ஆண்டிலேயே 'a National river grid with a grand feader canal என்றும், பெரும் கால்வாய்கள் மூலம் நீரைப் பகிர்ந்துக்கொள்ளக் கூடியதாக தேசிய ஆறுகளின் பிணைப்பு என்றும், கங்கை காவிரி இணைப்பு என்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். "அந்தத் திட்டம் இன்றையதினம் எங்கே? அதனுடைய புளுபிரிண்ட் எங்கே? அதற்காக நீரியல் விஞ்ஞானிகளின் ஆலோசனைகள் எங்கே? அதற்காக ஒதுக்கப்படவேண்டிய பணம் எங்கே?" என்று



கேட்கும் பட்சத்தில், இன்றைய தினம் டாக்டர் கே. எல். ராவைக் காணோம். இதைக் கேட்டால், அந்தக் காங்கிரஸ் கட்சியினுடைய வாய் மூடிக்கிடக்கின்றது. கங்கையையும் காவிரியையும் பார்க்கிறோம். ஆனால் அந்தப் பெரும் பீடர் கனாலைக் காணோம். அப்படிப்பட்ட நிலைமையில், ஆளுநர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை மேல் மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் குழுவைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். அது எவ்வளவு மதியூகமான ஒரு திட்டம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி நாம் கங்கையையும், காவிரியையும் இணைக்கும் திட்டத்தைப் பற்றிக் கேட்கும் நேரத்தில், இதைப்பற்றி டெல்லியைக் கேட்கின்ற நேரத்தில், நீங்கள் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிற்றே, நீங்கள் எப்போது பார்த்தாலும் டெல்லியைத் தான் கேட்பீர்கள் என்று என்னுடைய அருமை நண்பர் திரு. பலராமன் அவர்கள் பிரச்சினையைக் கிளப்புவார்கள். திரு பலராமன் அவர்கள் டெல்லியைப் பற்றிப் பேசினாலும், வட ஆற்காட்டில் ஆம்பூர் சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொன்னாலும், உடனே கொதித்தெழுவார்கள். அவர்களோ கோணியைக் காணோம், அதனுடைய கதை தெரியாதா என்று கேட்பார்? சரியான புள்ளிவிவரங்கள் தாரும் ஐயா என்று கேட்டால், என்ன சொல்வார் என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைய தினம் இருக்கின்றது. இந்த முறையில்தான் கங்கை காவிரி இணைப்புத் திட்டம் இருந்து கொண்டிருக்கின்றது. அந்த காவிரி கங்கையினுடைய கதையைப்பற்றிக் கேட்டால் மிகவும் விசித்திரமாகவும், வேடிக்கையாகவும் இருக்கும். பாட்னாவுக்குப் பக்கத்தில் கங்கையில் ஒரு பெரும் அணை கட்டி, அந்த அணையை 2,000 அடிக்கு பூமி மட்டத்திற்குமேல் உயர்த்த வேண்டும். உயர்த்திய பிறகு ஒரு ஆயிரம் அடிக்கு அகலம் வைத்து, பிறகு 30 அடி முதல் 35 அடி வரையில் ஆழம் வைத்து, சுமார் 3 ஆயிரம் மைல் நீளம் கொண்டு வந்தபின் அது மேட்டூருக்கு வரும். 7 மாநிலங்கள் இதனாலே பிணைக்கப்படும். இரண்டு இடங்களிலே இப்படி 2 ஆயிரம் அடி உயர்த்தும் திட்டம் வருகிறது. இந்த முறையில் எப்படித் தண்ணீர் வரும்? எந்த அளவுக்குத் தண்ணீர் ஆதாயம் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தால், அது இன்னும் வேதனையாகவும், விசித்திரமாகவும் இருக்கும். 6·40 பி. ப.
இதற்குச் செலவு எவ்வளவு என்று பார்த்தால், 1969-ஆம் ஆண்டு கணக்குப்படி, 26 ஆயிரம் கோடி ரூபாய் அதற்குத் தேவைப்படுகின்றது. அப்படிப் போட்டதற்குப் பிறகு, கல்கத்தா நகரம் என்னவாகும்? அதற்கு வங்காள மக்கள் அனுமதிப்பார்களா? கிழக்கு உத்திரப் பிரதேச மக்கள் அதை அனுமதிப்பார்களா? கல்கத்தா நகரம் சமுத்திரத்திலே இருந்து 89 மைல் தூரத்தில் இருக்கிறது. கப்பல் 89 மைல் உள்ளே வர வேண்டியிருக்கிறது. பாட்னாவில் கங்கை-காவிரியை இணைத்துவிட்டால், செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலே ஓடுகின்ற பாலாறு போன்ற வறண்ட ஆறு, வெறும் மணல் ஆறாக மாறிவிடும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்களே, அதற்கு இடம் இல்லாமல் போய்விடும். 1990 ஆம் ஆண்டில் அதிகமாக நமக்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு 102 பில்லியன் கன மீட்டர் என்றும், தற்போது 62 பில்லியன் கன மீட்டர் அளவுதான் கிடைப்பதற்குத் திட்டம் உள்ளது என்றும், அதிலும் 54 பில்லியன் கன மீட்டர் தான் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறதென்றும் மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் கூறினார்கள். நமக்கு எப்படித் தண்ணீர் கிடைக்கும், எங்கேயிருந்து கிடைக்கும்? பாட்னாவில் இருந்து அந்தத் தண்ணீர் மேட்டூருக்கு வருவதற்கு 3 ஆண்டு

கள் தேவையல்லவா? அந்தத் தண்ணீர் அங்கேயிருந்து ஒரு ஜூலை மாதத்தில் அனுப்பினால், 3 ஆண்டுகள் அந்தத் தண்ணீரைச் சேர்த்து வைத்து அனுப்பினால் அல்லவா, அந்தத் தண்ணீர் தமிழ் நாட்டை எட்டிப்பிடிக்கும் என்று கேட்டதற்குப் பிறகு, இல்லை, இல்லை, உங்களுக்குத் தேவைப்படும் 102 பில்லியன் கன மீட்டர் தேவையில் 13 சதவிகிதம் தான் கிடைக்கும் என்று கூறினார்கள், இத்தகைய நிலையில், இந்த முன்னேற்றக் கழகச் சர்க்கார், மேலமலை மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒரு பதிய திட்டத்தைத் தருகிறது. திராவிட நாட்டின் பகுதிகளாகிய, ஆந்திர, கேரள, கர்நாடக, தமிழக பகுதிகளாகிய நான்கு மாநிலங்களை உள்ளடக்கி, அதனுடன் இணைந்த மஹாராஷ்டிரத்தையும் கோவாவையும் இணைத்து, 6 மாநிலங்களுக்கும் சேர்த்து, ஒரு அருமையான திட்டத்தை இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார் நாட்டு மக்களுக்கு முன்னால் வைத்திருக்கின்றது. அதிலே நாம் பெருமையடைகிறோம், பெருமிதம் கொள்கிறோம். அந்தத் திட்டத்தை சென்ற ஆண்டே நம்முடைய கலைஞர் அவர்கள் வைத்தார்கள். ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டது. நம்முடைய நெருக்கடிகள் மிகவும் கடுமையாகிக்கொண்டிருக்கின்றன. ஆபத்துக்களுக்கு நாம் அஞ்சிக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினம் உள்ள தண்ணீரில், இன்னும் 13, 14 ஆண்டுகளுக்குப் பிறகு பற்றாக்குறை ஏற்பட்டு; தமிழ் நாடு பூராவும் நீர் இல்லாமல் வறண்டு விடும் என்று நீர் நில வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள். நாம் பீதியில் கப்பிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் திட்டம் ஒன்றைத் தீட்டி மத்திய சர்க்காருக்குத் தருகிறோம். என்ன ஐயா ஆயிற்று என்று கேட்டால், டெல்லியைக் கேட்பதா என்று என்னுடைய நண்பர் திரு பலராமன் கோபித்துக்கொள்கிறார். டெல்லியைக் கேட்காமல், மாஸ்கோவையா கேட்பது? பிகிங்கையா கேட்பது? லண்டனையா கேட்பது, வாஷிங்டனையா கேட்பது? எதைக் கேட்பது? நான் அஞ்சுகிறேன். வேறு ஒரு அர்த்தத்துடன் என்னுடைய நண்பர் திரு பலராமன் அவ்வாறு கேட்கிறார் என்று நான் அஞ்சுகிறேன்.

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர்</u>: திரு. பலராமன் அவர்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கவில்லை. நாங்கள் டெல்லியைக் கேட்டபோது கேலி செய்தீர்களே, இன்று நீங்கள் தட்டிக்கேட்கிறீர்களே என்று தான் சொன்னாரே தவிர, மறுப்பாகச் சொல்லவில்லை.

<u>திரு. டி. கே. பொன்னுவேலு</u>: அதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஒரு அச்சத்தோடு தான் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன். ஒரு வேளை, தோழர் திரு பலராமன் திட்டமிட்டே இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்புகிறாரா, திட்டமிட்டே அவருடைய கட்சியின் சார்பில் இப்படி புதிதாக ஒரு நோட்டம் பார்க்கிறாரா என்று நான் அஞ்சுகிறேன். மெய்யாகவே அஞ்சுகிறேன். சந்தேகிக்கிறேன். ஒரு வேளை நம்முடைய கட்சி இப்படி வீழ்ந்து விட்டதே, அது எழுந்து நிற்பதற்கு மார்க்கம் என்ன, பிரதமரோடு கைகுலுக்குவதா, முன்னேற்றக் கழகம் 10 வருடங்களுக்கு முன் கைவிட்ட அந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்ளுவதன் மூலமாக, நாம் இந்த நாட்டு மக்களின் தலைவர்கள் ஆக முடியுமா என்ற உணர்ச்சியின் அடையாளமாக, ஒரு கட்சியின் சார்பில் திரு பலராமன் அப்படிப் பேசினாரா என்று நான் அஞ்சுகிறேன். மெய்யாகவே சந்தேகப்படுகிறேன்.



<u>திரு. கே. ராஜாராம்</u> நாட்டுப் பிரிவினையை ஆதரித்து திரு. பலராமன் பேசியதாகச் சொல்லுகிறார்கள். திரு. பலராமன் நாட்டுப் பிரிவினையை ஆதரித்து என்றுமே பேசியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு டி.கே. பொன்னுவேலு</u>: அப்படி ஒரு சந்தேகம். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது, அதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட நேரத்தில், டெல்லியில் பாராளுமன்றத்திலும், ராஜ்ய சபையிலும் இங்கே ஒவ்வொரு தெரு முனையிலும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றவர்களும் தெளிவாகச் சொன்னார்கள்.......

<u>திரு கே. ராஜாராம்</u>: திரு பொன்னுவேலு பேசும்போது ஏதோ "அறிஞ்சர்" என்று சொல்லுகிறாரே, அது "அறிஞரா" அல்லது "அறிஞ்சரா" என்று தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு டி. கே. பொன்னுவேலு</u>: நாங்கள் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட நேரத்தில் கூறினார்கள். திரு சுப்பிரமணியம் அவர்களும், திரு. காமராஜ் அவர்களும் இதே பிரச்சினையை 10 வருஷங்கள் கழித்து மீண்டும் கைக்கொள்வார்கள், திரும்பக்கேட்பார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டது இன்றைய தினம் என்னுடைய காதிலே ரீங்காரம் செய்கிறது. அன்றைய தினம் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் நீங்கள் கேட்பதை நாங்கள் ஒரு காலத்தில் கேட்போம். ஏக இந்தியா பேசுகின்ற நாங்கள் கேட்போம். எங்களுக்கு தலைவாழைஇலை போடுங்கள். அறுசுவை பதார்த்தங்கள் வையுங்கள், முக்கிய பொருட்களை வையுங்கள், இனிப்புப் பதார்த்தங்களைப் பரப்புங்கள், விரால் மீனின் தலையும், வாலும் வேண்டாம், நடுத்துண்டத்தைத் தாருங்கள் என்று பேசியது என் கவனத்தில் இருக்கிறது. இன்றைய தினம் தோழர் திரு. பலராமன் அவர்கள் டெல்லியைக் கேட்கின்ற நேரத்தில், ஏன் அப்படிக் கேட்கின்றார் என்று மெய்யாக நான் அஞ்சுகிறேன்......................

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: நீங்கள் திரு. பலராமன் என்ன பேசுவார் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

<u>திரு டி. கே. பொன்னுவேலு</u>: ஒரு காலகட்டத்தில் இது நாட்டுப் பிரிவினைக்கு அச்சாரம் என்று நினைக்கிறேன், அஞ்சுகிறேன்?

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அப்படித்தான் பேசுவார். நீங்கள் ஏதாவது பேசுங்கள். அவர் பேசியதைப் பற்றி ஏன் நீங்கள் பேசுகிறீர்கள்? நீங்கள் சொல்லவேண்டிய சங்கதிகளை மட்டும் சொல்லுங்கள்.

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u>: காங்கிரஸ் கட்சி அகில இந்தியக் கட்சி, அதிலே ஒரு நபர் இன்று இருக்கலாம், நாளைக்குப் போகலாம். ஆனால் கட்சியின் கொள்கை மாறாது. இதை நண்பர் திரு பொன்னுவேலு தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு டி. கே. பொன்னுவேலு : இதே கட்சியைச் சேர்ந்த கர்நாடக மாநிலத்தின் முன்னாள் அமைச்சர் திரு. ஹெக்டே அவர்கள் இதே உணர்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு தீக்ஷிதர் அவர்களுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் மிகப் பணிவன் போடு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே, அங்கே திரு. ஹெக்டே அவர்கள் பேசியதையும் இன்றைய தினம் திரு. பலராமன் பேசியதையும் சேர்த்துக் கோர்த்துப் பார்க்கும்போது, என்னுடைய உணர்ச்சிகளை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் அவர்கள் நிச்சயம் புரிந்து கொள்ள முடியும்.

திரு. கே. ராஜாராம் : வெளிமாநிலத்திலே இருக்கிறவர்களைப் பற்றி நாம் இந்த அவையிலே பேச வேண்டாம். திரு. ஹெக்டே பற்றிப் பேசி, அதற்கு நாங்கள் பதில் சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல. அவர் ஒரு அமைச்சராக இருந்தவர், அவர்பற்றியெல்லாம் பேசவேண்டாம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : பிரிவினை மனப்பான்மையோடு அந்த அர்த்தத்தில் அவர் பேசியதாக திரு. பொன்னுவேலு அவர்கள் சொல்லுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. திரு. பலராமன் அவர்கள் அப்படிப் பேசவே இல்லை.

திரு. டி. கே. பொன்னுவேலு : பேசுவாரா என்ற அச்சத்தைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் சொல்லுகின்ற மேல மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக நல்ல முறையில் இன்றைய தினம் நம்முடைய நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நல்ல வாய்ப்பு இருக்கிறது.
6-50 பி.ப. இதைப்பற்றி 1958-லேயே கேரளத்தின் பிரதம எஞ்சினீயராகப் பணி புரிந்த திருமதி டி. பி. குட்டி அம்மா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள். சுமார் 43 மில்லியன் கன அடித் தண்ணீர் என்ற அளவிற்கு குட்டியடி ஆற்றுத் தண்ணீர் சமுத்திரத்தில் வீணடிக்கப்படு கிறது, இதை நாம் முறையாகப் பயன்படுத்தினால், இப்படி வீணாகப் போகும் இந்த ஆற்று நீர் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு இந்தப் பக்கத் திலே திருப்பிவிடப்படுமானால், அது மின் சக்திக்கும் தமிழ் நாட்டிலே பாசன வசதிக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். இதற்குக் கேரளப் பகுதியிலே அணைகள் கட்டப்பட வேண்டும். ஒரு கிலோ மீட்டர் நீள முள்ளதொரு அணையைக் கட்டுவதன் மூலம் அந்த நீரை நாம் முழுமை யாகப் பயன்படுத்தி, மின் சக்தியை உற்பத்தி செய்துகொள்ளுவதற்கும், பாசன வசதியை அபிவிருத்தி செய்துகொள்ளுவதற்கும் ஏதுவாக இருக் கும். இதற்காக நாமும் நமது அண்டை மாநிலமான கேரளமும் முன்கூட்டியே திட்டமிட்டு, கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு, நமக்கு அவர்கள் தண்ணீரையும் நாம் அவர்களுக்கு உணவுத் தானியத்தையும் தருவது என்ற ஒரு ஒப்பந்தத்தினைச் செய்துகொண்டால், இதனால் இரண்டு மாநிலங்களுமே பெருமளவிற்குப் பயனடையும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குட்டியடி ஆற்றுத் தண்ணீரை நம் பகுதியிலுள்ள சிலால்கடி ஆற்றுடன் இணைக்கலாம். அதைப்போலவே கேரளத்திலுள்ள காக்கையாற்றை நமது பகுதியிலுள்ள கோட்டைமலையாற்றுடன் இணைக்கலாம். இதைச் செய்வதன்மூலம் நமது இரு மாநிலங்களுமே நல்ல பலன்களை அடையலாம். இப்படி நாட்டின் நன்மைக்காக எந்தெந்த நீர்த் திட்டங்களை நிறைவேற்றலாம், எதைச் செய்தால் நாடு முன்னேற்றம் காணும் என்றெல்லாம் நமது சர்க்கார்



சிந்தித்துக்கொண்டிருக்கும் நேரத்திலே, அரசியலிலே எதிர்க்கட்சித் தலைவர் கள் எல்லாம் எப்படியாவது இந்த ஆட்சியைக் கீழிறக்க வேண்டும் என்று திட்டமிட்டு எவ்வளவோ குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றார்கள். இவ்வளவு குழப்பங்கள் நாட்டிலே இருக்கும்போது, அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படா மல் முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள், கலைஞர் அவர்கள் அரசியல்வாதி என்ற முறையிலில்லாமல் மிகச் சிறந்த இராஜ தந்திரி என்ற வகையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக யோசிப்பதும் திட்டமிடுவதுமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் நமது அரசு வற்புறுத்தியிருக்கின்றது. டெல்லி சர்க்காரை, நமது நண்பர்கள் குறிப் பிட்டதுபோல, அனைவரும் ஒன்று சேர்ந்து கேட்போம். நம்முடைய நீர்ப் பிரச்சினைகள் இப்படிக் கடுமையாக உள்ள நிலைமையில் இன்றையதினம் இதற்குப் பரிகாரம் காணவில்லையென்றால், இன்னும் பதினைந்து ஆண்டு களில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், எந்த மூலையிலும் நமக்குத் தண்ணீர் கிடைக்காது, குடிப்பதற்கு நீர் கிடைக்காது. விவசாயத்திற்கு நீர் கிடைக்காது, மின் சக்தியை உற்பத்தி செய்ய நமக்கு நீர் கிடைக்காது. தொழில் துறைக்கு வேண்டிய நீர் நமக்குக் கிடைக்காது. ஆகவே இந்த நீர் நமக்குக் கிடைக்கத்தக்க விதத்தில் மிக அத்தியாவசியமாக இருக்கும் மேல மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகத்திற்கு டெல்லி அரசு உறுதுணை யாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவோம். இது சம்பந்தமாக மற்ற ஐந்து மாநிலங்களோடு தொடர்பு கொண்டு அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவோம் என்று பாசன வசதிகளைப்பற்றிய வரையில் இதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயம் என்று சொல்லும்போது, இன்றைய தினம் தமிழகத்தில் பத்து லட்சம் விவசாயிகள் இருக்கின்றார்கள். இந்தியத் துணைக் கண்டத் திலே உள்ள மக்களிலே 70 சதவீதத்தினர் விவசாயத்தையே பெரிதும் நம்பியிருப்பவர்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு விவகாரங் கள், பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. நமது நாட்டிலுள்ள விவ சாயிகள் தங்கள் விளை பொருள்களை திட்டமிட்டு விற்கக்கூடிய திறன் பெற்றவர்களாக இல்லை. அவர்கள் அறுத்தெடுக்கும் விளை பொருள்களை பேரம் பேசக்கூடிய நிலைமையில் அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கின்றார் கள். வகையற்றவர்களாக இருக்கின்றார்கள். விஞ்ஞானம் எவ் வளவோ வளர்ந்து விட்டது என்று பெருமையாகப் பேசுகிறோம். ஆனால் அந்த விஞ்ஞானத்தின் பலன்களை விவசாயத்தில் காண முடியாத நிலைமை யில் விவசாயம் தேங்கிக் கிடக்கின்றது. அதைப் போல மனித சக்தியை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைப்பதுதான் விவசாயத் திற்கு லாபம் என்று விவசாயிகள் உணருகின்றார்கள். ஆனால் செயல் திறனற்றவர்களாக இருக்கின்றார்கள். செயல்திறனற்று திகைத்து நிற் கின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய உரங்கள் கிடைக்கின்றனவா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உரங்களின் விலை விஷம் போல ஏறிக்கொண்டே வருகின்றது. இதைப் பற்றி தமிழகத்தி லுள்ள விவசாயச் சங்கம் ஏதாவது சொல்லுகின்றதா என்றால், இல்லை. அவர்கள் தமிழ் நாட்டில் திட்டங்களைப் பற்றிப்பேசும் சங்கமாக இருக்கிறதே தவிர, உண்மையாக விவசாயிகளுடைய பிரச்சினைகள் பற்றி பேசும் சங்க மாக இல்லை என்பதை வேதனையோடு குறிப்பிட வேண்டியிருக்கின்றது. 1962–63-ஆம் ஆண்டிலே யூனிட்டுக்கு பத்து பைசா என்று விதித்திருந்த கட்டணத்தைச் சென்ற ஆண்டு அல்லது இரண்டாண்டுகளுக்கு முன்னர் 12 பைசாவாக உயர்த்தியபோது, இதே விவசாய சங்கங்கள் எவ்வளவு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்? எவ்வளவு கண்டனங்களைத் தெரிவித்தார்கள்?

சிறு விஷயத்தினை எவ்வளவு பெரியதாக ஆக்க முடியுமோ அவ்வளவு பெரியதாக ஆக்கி அரசியல் லாபம் தேட முயற்சித்தவர்கள், 1962-ல் 31 ரூபாய் என்று இருந்த யூரியாவுக்கு இன்றைக்கு சர்க்கார் விலையே ரூ. 62 என்று உயர்த்தப்பட்டிருக்கின்றதே, அதற்கு அந்த விவசாய சங்கங்கள் ஏன் கண்டனக் குரல் எழுப்பவில்லை? ஆறு மாதத்திற்கு முன்னால்தான் ட்ரிபிள் காம்ப்ளெக்ஸ்....

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, விவசாயிகள் சங்கம் இதற்காகவும் தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றது, உரவிலைகள் பற்றி.

திரு. டி. கே. பொன்னுவேலு: தலைவரவர்களே, திரு. தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, உரவிலை உயர்விற்காக விவசாயிகள் சங்கம் தன் கண்டனத்தைத் தெரிவித்திருந்தால், அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அது என் கண்களுக்குப் புலப்படாத அளவிற்கு, அவர்கள் போடப்பட்டதாகச் சொல்லப்படும் தீர்மானத்தைத் தேடுகிறேன், தேடுகிறேன், காணாமல் திகைக்கிறேன். ட்ரிபிள் காம்ப்ளெக்ஸ் என்ற மிக்ஸர் ரூ. 58 என்று விற்றது 50 கிலோ மூட்டை. அதற்கு மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். ஆனால் இப்போது என்ன காரணத்தினால் அதே மூட்டைக்கு ரூ. 86 என்று விலை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள்? அப்படி திடீரென்று உற்பத்திச் செலவு பெருகி விட்டது என்றால், அதற்கு என்ன காரணம்? 50 கிலோ மூட்டை 56-3/4 ரூபாய் என்று விற்றது மிக்சர். ஆறு மாதத்திற்குள்ளாக மத்திய சர்க்கார் 86 ரூபாயாக ஆக்கியிருக்கின்றது. என்ன காரணம்? அதை அனுப்பிய அமெரிக்க சர்க்கார் விலையை ஏற்றிவிட்டதா என்றால், கிடையாது. அனுப்பிய ஜப்பான் விலையை ஏற்றிவிட்டதா என்றால், இல்லை. ஆனால் டெல்லி சர்க்கார் ஏற்றியிருக்கின்றார்கள். என்ன காரணம்? ஏற்றிய அந்த விலையைப் பற்றி இங்கேஉள்ள விவசாயிகள் சங்கம் மௌனம் சாதித்தார்கள் என்றால், அதற்கு என்ன காரணம்?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இப்படி விலை ஏறியிருக்கின்றது என்பதைப்பற்றி வருத்தம் தெரிவிக்கும் வகையில் கவர்னர் அவர்கள் கூடத் தெரிவிக்கவில்லை என்று தலைவரவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. டி. கே. பொன்னுவேலு: கவர்னர் அவர்கள் தெரிவிக்காதது ஒன்று. யூனிட்டுக்கு இரண்டு பைசா என்று, ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்றினால், பிணங்கள் விழுமளவிற்கு நாட்டை ஒரு பெரும் நெருக்கடிக் குள்ளாக்கிய அந்த விவசாயிகள் சங்கம் இன்றையதினம் உரவிலைகள் இப்படி ஏறிவிட்டதுபற்றி மௌனம் சாதிப்பானேன்? இதற்குப் பின்னால் உள்ள மர்மம் என்ன? யார் இவர்கள் கரங்களைப் பிடித்துக் கொண்டார்கள், யார் இவர்களுடைய வாயைப் பொத்திக் கொண்டார்கள், குரல் கொடுக்க வேண்டாம் என்று? எதற்காக இவர்கள் டெல்லி சர்க்காரைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கண்டனம் தெரிவிக்காமல் இருக்கின்றார்கள்? டெல்லி சர்க்கார் இந்த உரவிலையில் மட்டும்தானா இப்படி நடக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்களுக்கு வேண்டுமானால், இந்தப் பிரச்சினை மிகச் சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டிருப்பவன், நானே விவசாயம் செய்கிறேன். ஆகவே விவசாயிகளுடைய கஷ்டங்கள்



எனக்கு நன்கு தெரியும். ஆகவே சொல்லுகிறேன், டிராக்டர் விலை 16 ஆயிரம் ரூபாயாக இருந்தது. பொழுது விடிந்து பார்த்தால், அதன் விலை ரூ. 26 ஆயிரம் என்கின்றார்கள் இந்திரா காந்தி அவர்கள். விவசாயிகள் சங்கம் இதுபற்றிக் கவலைப்படவில்லை. கண்ணை மூடிக் கொண்டிருக்கின்றது. பம்ப்செட்டின் விலை ரூ. 2 ஆயிரம் என்று இருந்தது. பொழுது விடிந்து பார்க்கிறேன். அதன் விலை ரூ. 3,200 என்று சொல்லுகின்றார்கள். விவசாயிகள் சங்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ராத்திரி 12 மணிக்கு விலையை உயர்த்தியிருப்பார்கள். தூங்கியெழுந்து பார்த்தால் விலை உயர்ந்திருக்கிறது. மேலே பேசி முடியுங்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு: ஆகவே தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகளை டெல்லி சர்க்கார் உதாசீனப்படுத்துகிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில், விவசாயிகளை மிகக் கேவலமாக, புழுக்களை விடக் கேவலமாக நசுக்கிப் பிழிகின்றார்கள். ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசுகிறோம், பசப்புகிறோம் நாட்டிலே. நாட்டில் 70 சதவிகிதத்திற்கு மேலே விவசாயிகள்தான். ஆனால் அப்படிப்பட்டவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை மத்திய சர்க்கார் உதாசீனப்படுத்தி அவர்களை நசுக்கிப் பிழிகின்றார்கள் என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு: ஆகவே இப்படிப்பட்ட முறையில் டெல்லி சர்க்கார் நடக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு கவர்னர் அவர்கள் கூறியிருக்கும் உரையில் எழுத்துக்கு எழுத்து தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்ததாக இருக்கின்றது என்ற நினைப்பில் பெருமைப்படுகிறேன், பெருமிதம் கொள்ளுகிறேன், நமது நண்பர் இப்படிப்பட்டதொரு உரைக்கு நன்றி தெரிவித்திட வேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தையொட்டி நானும் நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது. 7-00 பி.ப.

### 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. STATUTORY RULES AND ORDERS.

75. Notification issued with G.O. Ms. No. 2039, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Kanyakumari as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

76. Notification issued with G.O. Ms. No. 2038, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Namakkal as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

77. Notification issued with G.O. Ms. No. 2056, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Valparai as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

78. Notification issued with G.O. Ms. No. 2037, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Mannargudi as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

79. Notification issued with G.O. Ms. No. 2040, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Pudukottai as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

80. Notification issued with G.O. Ms. No. 2045, Rural Development and Local Administration, dated the 20th September 1973, relating to declaration of Kuzhithurai as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972)].

81. Notification issued with G.O. Ms. No. 562, Rural Development and Local Administration, dated the 28th March 1973 in regard to an amendment to the preamble of the notification published as S.R.O. No. A/544 of 1965 at pages 567–582 of Part V of the Tamil Nadu Government Gazette, dated the 2nd June 1965. [*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act,* 1958 (*Tamil Nadu Act* XXXV of 1958)].



## B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

13. Notification issued with G.O. Ms. No. 4882, Revenue, dated the 13th August 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the settlement deed to be executed by the President and Correspondent of Thirthapathi High School, Ambasamudram, in favour of the Correspondent, Ambai Arts College, Ambasamudram, Tirunelveli district.

14. Notifications issued with G.O. Ms. No. 5060, Revenue, dated the 18th August 1973 in regard to an amendment to the Revenue Department Notifications II-1 Nos. 434 and 436 of 1973, dated the 27th December 1972, published at pages 59 and 60 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 7th February 1973.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

## செவ்வாய்க்கிழமை, 1974 சனவரி 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Temples under the control of the Central Archaeological Department.*

*91. Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the State Government have requested the Central Government to transfer those temples in Tamil Nadu which are under the control of the Central Archaeological Department to the control of the Tamil Nadu Government; and

(b) if so, the reply received from the Central Government ?

### மைய அரசின் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின்கீழ் இருக்கும் ஆலயங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் மைய அரசின் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின்கீழ் இருக்கும் ஆலயங்களைத் தமிழக அரசின் ஆட்சியின்கீழ் ஒப்படைக்கும்படி தமிழக அரசு மைய அரசைக் கேட்டுக் கொண்டதா ?

(இ) ஆமெனில், மைய அரசிடமிருந்து என்ன பதில் வந்தது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மைய அரசின் பாதுகாப்பில் உள்ள கோவில்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகையால், தன் பாதுகாப்பில் இருந்து அவற்றை விடுவிக்க இயலாது என மைய அரசு தெரிவித்துள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மைய அரசின் பாதுகாப்பின்கீழ் தமிழகத்தில் எத்தனை ஆலயங்கள் இருக்கின்றன ?

[1974 சனவரி 29

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, புராதனச் சின்னங்கள் என்ற அடிப்படையிலே 118 புராதனச் சின்னங்கள் மத்திய அரசின்கீழ் இருக்கின்றன. அதில் பல கோவில்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றில் தஞ்சைப் பெருவுடையார் கோவில், கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோவில், வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவில் மிக முக்கியமானவைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கோவில்கள் எல்லாவற்றையும் தமிழக அரசிடம் ஒப்படைக்காவிட்டாலும், ஏதாவது ஒரு சில முக்கியம் வாய்ந்த கோவில்களை ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்தை நமது அரசு மத்திய அரசிற்கு வற்புறுத்தியிருக்கிறதா? மத்திய அரசாங்கத்தின் கையில் தஞ்சைக் கோவில் போன்ற கோவில்கள் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கோவில் பழுது பார்க்கப்பட வேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை என்பதை அரசு கவனிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தஞ்சைப் பெருவுடையார் கோவில், கங்கைகொண்ட சோழீஸ்வரர் ஆலயம், வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஆக இந்த மூன்று ஆலயங்களை யாவது தமிழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் வைக்க வேண்டுமென்று பல தடவைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நான் மத்தியக் கல்வி அமைச்சருடன் பேசியிருக்கிறேன். பிரதமர் அவர்களோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தஞ்சைப் பெருவுடையார் கோவில் திருப்பணி செய்வதற்கு என்று ஒரு குழு அமைத்து அதற்காக நிதி திரட்டி, திருப்பணி செய்ய அவர்கள் காத்திருந்தும் கூட, அதற்கு மைய அரசு இணங்கவில்லை. பணத்தை தங்களிடத்தில் கொடுத்துவிடவேண்டுமென்றும், இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் திருப்பணியைச் செய்யும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினிடத்தில் கோவில் விடப்பட்டால், நாம் அதற்கேற்றபடி, அதனைக் காப்பதில் முழு கவனம் செலுத்த முடியும் என்றும், அப்போது வேண்டுமானால் மத்திய அரசின் தொல்பொருள் வல்லுநர்கள் மேற்பார்வையில் பணிகளை நடத்துகிறோம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தடவை எழுதிப் பார்த்தார்கள். அதற்கு மைய அரசு, தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருப்பதால், இதைக் கொடுப்பதற்கில்லை என்றும், அப்படிக் கொடுத்தால் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக ஏற்பட்டுவிடும், மற்ற மாநிலங்களிலும் இதைப் போன்று தங்கள் தங்கள் மாநிலங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்பார்கள், ஆகவே கொடுக்க இயலவில்லை என்று முதல்வர் அவர்களுக்கு இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது.



1974 சனவரி 29]

*Lecturers working in the Pulavar Tamil Colleges.*

*92. Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to give Selection Grade salary to the Lecturers working in the Pulavar Tamil Colleges?

புலவர் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் விரிவுரையாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

புலவர் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றும் விரிவுரையாளர்கட்குத் தேர்வு நிலை ஊதியம் தர திட்டமுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, திட்டம் எதுமில்லை. ஆராய்வது என்றால், தேர்வுநிலை ஊதியம் தருவது என்பது எல்லாக் கல்லூரிகளைப் பொருத்தும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, தமிழ்க் கல்லூரி என்று அழைக்கப்பட்டிருந்தபோதிலும், அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு கல்லூரியில் கொடுக்கப்படுகிற ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு ஏதோ தனி ஊதிய விகிதம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கல்லூரி ஆசிரியர்களைப் போல் ஊதியத்தை மாற்றியமைக்க அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ்க் கல்லூரியில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு எம். ஏ. பட்டம் பெற்ற முதல்வருக்கு ரூபாய் 450—25—750 என்றும், எம். ஏ. பட்டம் பெற்ற பேராசிரியர்களுக்கு ரூபாய் 400—15—475—20—575—25—650 என்றும், கீழ்த்திசை பட்டம் பெற்றவர்கள்—ஓரியன்டல் டைடில் பெற்றவர்களுக்கு ரூபாய் 300—15—420—20—500 என்றும் இப்போது வழங்கப்படுகிறது. அதைத்தான் மாற்றியமைக்க வேண்டுமென்று விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேடு வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரிப் பேராசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்றார்கள். அது பரிசீலிக்கப்படுமா? மற்றவர்களுக்கு வழங்கப்பட்டது போல் பேராசிரியர்களுக்கும் குறிப்பிட்ட பணிக் காலத்துக்குப் பின்னால் செலக்ஷன் கிரேடு வழங்கும் முறையில் அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி ஆராயும்போது, தகுதி, வேலை, பொறுப்பு ஆகியவைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, மற்ற துவக்கப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்டுக்கணக்கு வைத்துப் பார்ப்பது போல், கல்லூரிகளில் பார்ப்பது பொருத்தமுடையதாகாது என்ற கருத்து இருந்து வருகிறது. அத்தகைய நிலைமையைப் பொறுத்த வரையில், இப்போது எந்தத் திட்டங்களும் நிலைமைகளும் இல்லை. அப்படி ஆராயப் படுகிறபோது, எல்லாக் கல்லூரிகளையும் சேர்த்து ஆராயும்போது, தகுதி, பொறுப்பு ஆகியவைகளையெல்லாம் சேர்த்துத் தான் தேர்வு நிலை என்ற முறையில் ஆராயவேண்டி வரும். உயர்நிலைப் பள்ளிகளில் இப்போது வழங்கப்படுகிற அதே முறையில் கொண்டு போனால், அதன் காரணமாக திறமையிலோ, தகுதியிலோ முன்னேற்றத்தைக் கல்லூரியில், பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் எதிர்பார்க்க முடியாது. அந்தக் கருத்தும் இருக்கிறது. ஆராயும்போது அதையும் மேற்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

*Vasectomy Programme.*

*93. Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether serious allegations of malpractices by several Doctors in the implementation of the subsidised Vasectomy Programme in Government Hospitals were investigated into by the Police ?

(*b*) the number of Doctors involved ;

(*c*) the offences detected ; and

(*d*) the action taken thereon ?

வாசக்டமி அறுவைச் சிகிச்சைத் திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவ மனைகளில் வாசக்டமி அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை (உதவித் தொகையுடன் கூடியது) செயல்படுத்துவதில், பல்வேறு மருத்துவர்கள் முறையற்ற செயல்களில் ஈடுபட்டிருப்பது பற்றிய கடுமையான குற்றச் சாட்டுகள் குறித்து காவல் துறை புலனாய்வு செய்ததா ?

(இ) இக்குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் எத்தனை பேர்?

(உ) கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் யாவை ?

(எ) இதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ), (இ), (உ), and (எ) மேலவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 272-ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, சில சமயத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் இத்தகைய முனைப்பு இயக்கம் நடக்கின்றபோது, ஏராளமாகத் தவறுகள் நடைபெறுவதற்கு மருத்துவர்கள் காரணமாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், கடுமையான நடவடிக்கைக்கு எத்தனை டாக்டர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்? அப்படியில்லாவிட்டால், கொடுக்கப்பட்ட புகார்கள்மீது இனியாவது தீவிர நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது 1969-வது ஆண்டுக்கு முன்னால் நடைபெற்ற குடும்ப நலத்திட்டப் பணிகளில் 370, 375 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 20, 21 இடங்களில் ஏற்பட்ட தவறுகள். கணக்கு வைப்பு முறையில் ஏற்பட்ட தவறு, நடைமுறையில் ஏற்பட்ட தவறு, அவர்கள் பணம் தவறான முறையில் சம்பாதிப்பதற்காகச் செய்த முறைகேடான காரியங்கள், இந்த அடிப்படையில் 1971-வது ஆண்டு கணக்குத் தணிக்கை குழுவால் கண்டுபிடிக்கப்பட்டு, அரசுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப் பின்னர், முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, விஜிலன்ஸ் கமிஷன் மூலமாக குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் மீது, குற்றச்சாட்டின் அளவுக்கும், தரத்துக்கும் ஏற்ப இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 3, 4 இடங்களில் புலனாய்வு முடிந்தும், விசாரணை முடியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கடந்த கால முனைப்பு இயக்கத்தின்போது நடந்த இந்த மாதிரித் தவறுகள் தொடர்ந்து பல இடங்களில் நடக்காமலிருக்க அரசு ஏதாவது ஆலோசனை செய்ததா? அதற்குத் தகுந்த உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முனைப்பு இயக்கக் காலத்தில் இப்படி பெரிய தவறுகள் கண்காணிப்பு இல்லாத காரணத்தால் நடைபெற்றுவிடக்கூடிய வாய்ப்பு மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் கூட ஏதாவது 1, 2 அறுவை சிகிச்சை பெறுகிறவர்கள் தகுதி அல்லாதவர்களாக இருக்கக்கூடும். அல்லது அறுவை சிகிச்சை செய்துகொள்ளக்கூடியவர்களில் ஒருவர் இருவர் ஏற்கெனவே செய்துகொண்டவர்களாக இருக்கக்கூடும். அப்படி ஏதாவது ஒன்றிரண்டு இடங்களில் தான் சற்று அதிகமான தவறுகள் நடைபெற்றிருப்பதாகத் தெரியவந்து அவற்றைப் பற்றியும் விசாரித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. விசாரிப்பது, கண்காணிப்பது, நடவடிக்கை எடுப்பது ஆகிய நிகழ்ச்சிகள் மூலமாகத்தான், தவறு செய்கிறவர்கள், அந்தத் தவறு செய்கின்ற தைரியத்தைப் பெறாமல் தடுக்க வேண்டும்.

*Incidence of Filariasis.*

*94. Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the incidence of Filariasis in Guruvarayanpettai and other villages of Arkonam Taluk, North Arcot District has been brought to the notice of the Government ; and

(*b*) if so, the steps taken thereon by the Government ?

[1974 சனவரி 29

## யானைக்கால் நோய் பரவுதல்.

திரு. ஜி. சுவாமிநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டாரத்தில் குருவ ராயன்பேட்டை முதலிய கிராமங்களில் யானைக்கால் நோய் பரவுவது அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அண்ட் (இ) :—குருவராயன் பேட்டை செம்பேடு ஊராட்சியிலுள்ளது. செம்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கோயம்புத்தூரிலுள்ள வட்டார முறைக் காய்ச்சல் அறிஞரால் மேலே சொல்லப்பட்டுள்ள ஊராட்சியில் யானைக்கால் நோய் குறித்த ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அப்பகுதி யானைக்கால் நோய் இருக்கும் பகுதி என்று அறியப்பட்டது. எனவே, ஊராட்சியில் செயல்படுத்த, யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டித் தருமாறு கோயம் புத்தூரிலுள்ள வட்டார முறைக்காய்ச்சல் துறையினரை கேட்டுக்கொள்ளு மாறு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குச் சொல்லியுள்ளார். ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து இது தொடர்பான செயற்குறிப்புகள் இயக்குநரால் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை கிடைக்கப் பெற்றவுடன் அவற்றிற்காக ஒப்பளிப்பை, இசைவைத் தருவதற்கு அவற்றைத் தன் கருத்துரையுடன் அரசுக்கு இயக்குநர் அனுப்பி வைப்பார். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தமிழகத்தின் மற்ற எந்தப் பகுதியில் இந்த நோய் கடுமையாகப் பரவியிருக்கிறது என்று அரசு அறியுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் இந்த நோய் தீவிரமாகப் பரவியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே எந்த அடிப்படையில் இந்த நோய் பரவாமல் தடுக்கின்ற முறைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதில் இரண்டு, மூன்று விதமாக நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது. எந்த வட்டாரத்தில் யானைக் கால் நோய் அதிகம் பரவியிருப்பதாக அரசுக்குத் தெரியவருகிறதோ, அந்த வட்டாரத்தில் எந்த அளவு பரவியிருக்கிறது என்பதைப்பற்றிப் புள்ளி விவரம் எடுக்கவேண்டியிருக்கிறது. அந்தப் புள்ளி விவரம் எடுப்பதற்குக்கூட, அங்கே சென்று சிலர் அங்கேயுள்ள மக்களுடைய ரத்தத்தைப் பரிசோதித்துத் தான் அது பரவுகின்ற கட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ரத்தத்தில் உள்ள கிரிமிகள் அளவு, அது மேலும் அதைப் பரப்பக்கூடிய ஆற்றல், இவை ஒருவாறு



1974 சனவரி 29]

கணக்கிடப்படுகின்றன. ஒரு பகுதியைப் பற்றிச் சொல்லுகிறபோது "Results of the survey show that the panchayat is highly endemic for filariasis having a micro filariasis of 13·07 per cent and disease rate of 4·16 per cent and filaria endemicity rate of 17·23 per cent" என்ற புள்ளி விவரங்கள், கணக்கெடுப்புக்கள் இருக்கின்றன. இந்தக் கணக்கெடுப்பு அடிப்படையில் காணப்படுகின்ற இடத்தில் மூன்றில் ஒரு பங்கு செலவுத் தொகையை அரசு உதவியாகத் தருகிறது. மிச்சம் இருக்கிற செலவுத் தொகையை அந்த ஊராட்சி மன்றமோ, நகர மன்றமோ ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் பல இடங்களில் இந்தத் திட்டம், அதாவது சிதம்பரம், விழுப்புரம், திருவரங்கம், திருச்சி இப்படிப்பட்ட பகுதிகளில் நடைபெறுகிறது. இதன் விளைவுகள், பலன்கள் உடனடியாகக் கண்ணுக்குத் தெரியாது. ஒரு வகையிலே அதன் வளர்ச்சி வேகத்தைத் தடுப்பதில்தான், இது வெற்றி பெறும். அப்படி ரத்தத்தில் இந்தக் கிருமிகள் சேர்ந்திருப்பதாகக் காணப்படுமானால், பைலேரியாசிஸ் நோய் ஒருவருடைய உடம்பில் இருந்து, அது கால், கை வீக்கமாக மாறுகிற கால கட்டம் 2, 3 ஆண்டுகளாகும். இடைக்காலத்தில் மருந்துகளை வழங்குவதன் மூலம், அந்த நோய்த் தடுப்பு முயற்சி ஓரளவுக்கு வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது.

4-10 பி.ப.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் வியாதி வடஆற்காடு மாவட்டத்திலே வேறு எந்தப் பகுதியிலே இருக்கின்றது? இது முன்னைக் காட்டிலும் இப்போது கட்டுப்பட்டிருக்கிறதா அல்லது மேலும் பரவியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்திலே வேறு எங்கே இருக்கிறது என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொள்ளத் தேவையில்லை. பலவிடங்களிலே இருக்கும். அது இருக்கிற அளவு, அதிகமாக இருப்பது அரசாங்கத்தின் குறிப்புக்கு வருவதையொட்டி, செயல்படுத்தக்கூடிய ஆற்றலையும் ஒட்டி, எந்த அளவுக்கு நமக்குக் கிடைக்கிறதோ அந்த அளவுக்குச் செயல்படுகிறோம்.

THIRU G. VASANTHA PAI : Sir, are the Government aware that large scale operations are being conducted for filariasis, and are there facilities in these infected areas for such operations ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Even though operations are conducted, it does not mean that they are successful. Nor is the operation going to be a preventive measure. But, only in chronic cases, where it is not possible to help them by any medicine, surgery is resorted to to make them fit for their day-to-day life.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்பு முனைப்புத் திட்டத்தின்கீழ் என்று உலக சுகாதார அமைப்பின் உதவியோடு சில ஆண்டுகளுக்கு முனபு வீடு வீடாக வந்து, இந்த ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருந்தார்களே, அது தொடர்ந்து நடைபெறுகிறதா? அதிலே பலன்......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்பொழுது யானைக்காலைப்பற்றிப் பிரச்சினை நடக்கிறது. நீங்கள் மலேரியாவைப்பற்றிப் பேசுகிறீர்களே.

## *Thalavoy Naiganeri Tank*

*95. Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total extent of land declared submergible in Mottupalayam village, Vellore taluk, North Arcot district in connection with the completion of Thalavoy Naiganeri Tank;

(*b*) whether compensation has not yet been awarded to the owners of those lands; and

(*c*) if so, the reason therefor?

## தளவாய் நாய்க்கனேரி என்னும் ஏரி.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுக்கா, மோட்டுப்பாளையம் கிராமத்தில் தளவாய் நாய்க்கனேரி என்னும் ஏரி கட்டி முடிக்கப்பட்டது சம்பந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் நீர் மூழ்கும் பகுதியாக அறிவிக்கப்பட்டது?

(இ) மேற்கண்ட நிலத்திற்கு, நில உடமையாளர் எவருக்கேனும் இன்னமும் நஷ்டஈடு வழங்கப்படாமல் உள்ளதா?

(உ) ஆமெனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) 6·54 ஏக்கர்கள்.

(இ) நில உரிமையாளர் யாருக்கும் இன்னும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

(உ) நில ஆர்ஜிதம் வருவாய்த் துறையினரால் முடிவெடுக்கப்படாமல் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.





திரு எல். பலராமன்: தலைவர் அவர்களே, இது 1969-ஆம் ஆண்டு முடிவடைந்திருந்தாலும், இதுவரையில் நீடித்திருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நஷ்ட ஈடு இதுவரையில் கொடுக்கப்படவில்லை, என்ன காரணத்திற்கு என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. இதுபற்றி அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதில் அதிகாரிகள் ஏதேனும் அனுவசியமாகக் கால தாமதம் செய்திருப்பார்களானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்த ஏரி கட்டி முடிக்கப்பட்ட பிறகும், அதற்கு எவ்வளவு ஆயக்கட்டுகள் என்று ஒதுக்கப்படாமலும், அதற்கு எவ்வளவு சேனல்கள் என்று பிரிக்கப்படாமலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதுகுறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 232 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிக்கு மாற்றப்பட்டன. 103 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சையாக மாற்றப்பட்டன. மேற்கொண்டு அங்கத்தினர் ஏதேனும் தகவல் தருவாரானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

## *Changing the name of Maniyachi Junction*

*96. Q.—THIRUVALARGAL L. BALARAMAN AND R. SAMBASIVAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the action taken by the Government of Tamil Nadu to change the name of Maniyachi Junction; and

(*b*) whether the Central Goverment have permitted to erect a statue of Vanchinathan there?

## மணியாச்சி சந்திப்பின் பெயரை மாற்றுதல்

திரு. எல். பலராமன், and திரு இரா. சாம்பசிவம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மணியாச்சி சந்திப்பின் பெயரை மாற்ற தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(இ) அங்கு வாஞ்சிநாதனுடைய சிலையை வைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மணியாச்சி சந்திப்பின் பெயரை வீரவாஞ்சி சந்திப்பு என்று மாற்றும் செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) அங்கு வாஞ்சிநாதனுடைய சிலையை வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு தமிழக அரசு ஏதேனும் கடிதம் எழுதியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் 8—10—1973 அன்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்கு மத்திய ரயில்வே அமைச்சர் மாண்புமிகு திரு மிஸ்ரா அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஹோம் மினிஸ்டரிடமிருந்து அவர்களுக்கு கிளியரன்ஸ் வந்துவிட்டதாகவும், சீக்கிரத்தில் உத்தரவை எதிர்பார்க்கலாம் என்றும் தகவல் வந்திருக்கிறது.

## *Cashew Industry.*

* 97 Q.—THIRU V. VENGA (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) whether any application has been received by the Government seeking permission to start Cashew Industry in Tirupattur Taluk, Ramanathapuram District: and

(*b*) if so, the action taken thereon by the Government ?

## முந்திரித் தொழிற்சாலை.

திரு. வி. வெங்கா (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலூகாவில் முந்திரித் தொழிற்சாலை தொடங்க அரசுக்கு விண்ணப்பம் ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் துறைத் தொழிலதிபர் ஒருவர் சிறிய அளவிலான முந்திரித் தொழிற்சாலை ஒன்றை மாநிலத் தொழில்வணிக இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய மனுச்செய்தார். அவருக்கு தற்காலிக பதிவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. வெங்கா: தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ் நாட்டில் எத்தனை தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன ? அந்தத் தொழிற்சாலைகள் இங்கே உற்பத்தியாகக் கூடிய முந்திரியிலிருந்து தொழில் செய்கிறார்களா அல்லது வேறு நாடுகளிலேயிருந்து முந்திரியை இறக்குமதி செய்து தொழில் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1973-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, 25 தொழிற்சாலைகள். இந்தத் தொழிற்சாலைகள் முந்திரி கிடைக்காத காரணத்தால், அல்லல்படுகின்றன. இது பெரும்பாலும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்



திலே கேஷ்யூ நட் கார்ப்பரேஷன் ஒரு கொள்கையைக் கொண்டு வந்த காரணத்தாலே, பெரும்பாலும் அந்தக் கொள்கை கேரள மாநிலத்தில் உள்ள இதுபோன்ற தொழிற்சாலைகளுக்குப் பயன்படுவதாகவும், தமிழ் நாட்டுத் தொழிற்சாலைகளுக்குப் பாதகமாகவும் அமைந்திருக்கிறது. இந்தக் கொள்கை தவறு என்று நமது முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதினார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை என்று சொன்னார்கள். அது எந்தவிதமான கொள்கை கேரளத்திற்கு ஆதரவாகவும், தமிழகத்திற்கு பாதகமாகவும் இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு, யார் யாருக்கு எந்த எந்தத் தொழிற்சாலைகளுக்கு இம்போர்ட்டட் கேஷ்யூ நட் கொடுக்கலாம் என்று ஒரு கொள்கை வகுத்தார்கள். அந்தக் கொள்கையின்படி கேரளத்திலேயிருந்து நமது தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே குமரி மாவட்டத்திலே இந்தத் தொழில் ஆரம்பித்தவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்கவில்லை. அதற்கு சில டெக்னிகல் லெக்குறை இருப்பதைக் கண்டுபிடித்தோம். அது சம்பந்தப்பட்ட அதிகாரி டெல்லியிலிருந்து வந்து எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார். நானே அவரிடத்திலே சொன்னேன். "நம்மிடத்திலே இருப்பது 20, 25 தொழிற்சாலைகள். உங்களுடைய கொள்கையிலே உள்ள கட்டு திட்டங்களாலே இவற்றுக்கு பாதகம் விளைவிக்கக் கூடாது. உண்மையிலேயே தொழிற்சாலைகள் நடந்திருக்கின்றன என்பதை தொழிலாளர் இலாகா, ஃபேக்டரி ஆக்டின் கீழே தெரியவரும். அந்த அடிப்படையிலே அதை ஒத்துக்கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை போகாமல், கேஷ்யூநட் கொடுக்க வேண்டும்" என்று வற்புறுத்தினேன். ஆனால் அவர்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு வி. வெங்கா: தலைவர் அவர்களே, ஆப்பிரிக்க நாடுகளிலேயிருந்து இந்தத் தொழிற்சாலைகளுக்கு முந்திரி வருகிறது என்று அறிகின்றேன். ஆனால் இந்த ஆப்பிரிக்க நாடுகள் அவர்கள் நாட்டிலேயே தொழிற்சாலைகளை ஆரம்பித்து வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால், நம்முடைய நாட்டுக்கு முந்திரி ராமெட்டீரியல்ஸ் ஆக அனுப்ப முற்படவில்லை. எனவே நம்முடைய தமிழ் நாட்டிலேயே முந்திரியை அதிகமாகப் பயிர் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: பொதுவாகக் கிடைக்கவில்லை என்பது ஒரு பிரச்சினை. ஆனால் கிடைக்கின்ற, வெளிநாட்டிலிருந்து இந்திய நாட்டுக்கு வருகின்ற, இந்த மூலப்பொருள்களிலே நம்முடைய பங்கை அவர்கள் குறைக்காமல் கொடுக்க வேண்டும் என்பதுதான் நமது அரசாங்கத்தின் கோரிக்கை.

[1974 சனவரி 29

## Cement Manufacturing Units.

* 98 Q.—THIRU K. RAJARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether Cement Manufacturing Units in the State have represented that sufficient permits have not been issued for stocks held by them; and

(b) the stock held by them as on 31st October 1973 ?

## சிமெண்ட் உற்பத்திப் பிரிவுகள்.

திரு கே. ராஜாராம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இம்மாநிலத்திலுள்ள சிமெண்ட் உற்பத்திப் பிரிவுகள், தாங்கள் வைத்துள்ள இருப்புகளுக்குப் போதிய அனுமதிகள் வழங்கப்படவில்லை யென்று முறையிட்டுள்ளனவா ?

(இ) 31—10—1973-ஆம் நாள் நிலவரப்படி, அப்பிரிவுகள் வைத்துள்ள இருப்பு யாது ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) 39,000 மெட்ரிக் டன்கள்.

திரு அ. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படும் இந்த சிமெண்டுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொழில் துறை இயக்குநருக்கு அனுப்பி, அவர் ரீஜனல் கண்ட்ரோலருக்கு அனுப்பி அதற்குப் பிறகு பர்மிட் கொடுக்கப்படுவதால் காலதாமதம் ஆகிறது. இதைத் தடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரே சிமெண்ட் ஆலைகளுக்கு பர்மிட் கொடுக்க அனுமதிக்கப் படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அப்படித்தான் நாம் உத்தரவு போட்டிருக்கின்றோம். இங்கே இயக்குநர் அளவிலே வரக்கூடாது என்று, ஆங்காங்கே கலெக்டர்களே, பி. டி. ஒக்களே அப்படிக்கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற குறை, நம்முடைய தமிழ் நாட்டில் 28 லட்சம் டன் உற்பத்தி செய்கின்றோம். தேவை 12 லட்சம் தான். அதிலும் குறைத்து நமக்குக் கொடுக்கப்படுகிறது. உற்பத்தி செய்கின்ற உரிமை நம்மிடத்திலே. அதை வழங்குகின்ற உரிமை டெல்லியிடத்திலேதான். இதை வழங்குவதிலேகூட, தமிழ்நாட்டிலே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லியதுபோல, தமிழ்நாட்டுக்கு இத்தனை லட்சம் டன் என்று சொல்லியதற்குப் பின்னாலே, தமிழ் நாட்டிலே உள்ள ஒரு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து, தமிழ்நாட்டிலே உள்ள பஞ்சாயத்து யூனியனுக்கோ, வேறு ஒருவருக்கோ, கலெக்டருக்கோ,



1974 சனவரி 29]

வேறு ஒரு இலாகாவுக்கோ சிமெண்ட் எடுத்துப்போவதற்கும், மத்திய சர்க்காரின் அதிகாரியான ரீஜனல் சிமெண்ட் கண்ட்ரோலர் உத்தரவு போட்டால்தான் ஒரு மூடை நகட்டவே முடியும். அதுதான் இந்தத் தொல்லைக்குக் காரணம்.

திரு வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ் நாட்டிலே உற்பத்தி செய்யும் சிமெண்ட் நமது தேவைக்குக் கொடுக்கப்படாமல், உத்தரப் பிரதேசத் தேர்தலுக்காக ஏதேனும் கொடுக்கப் படவேண்டும் என்று தமிழ் நாட்டு அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதா ? அப்படி என்றால் விவரம் தர முடியுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவர் அவர்களே, இது அதைவிட ஒரு ஆபத்தான விஷயம். நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்கிற சிமெண்ட்டிலே பாதியை வட மாநிலங்களுக்குக் கொடுக்கின்றோம். நாம் தயார் என்று சொல்லிவிட்டோம். அதைவிட இப்பொழுது ஆபத்து. டெல்லியிலே இருந்து ஒரு உத்தரவு நம்முடைய நாட்டில் அரசுக்குச் சொந்தமான சிமெண்ட் தொழிற்சாலைகள்கூட அனுப்பும் சிமெண்ட்டிலே எல்லா மாநிலத்திற்கும் 30 சத விகிதம் குறைத்து அனுப்ப வேண்டும். ஆனால் உத்தரப் பிரதேசத்திற்கு மட்டும் குறைத்து அனுப்பக் கூடாது. அது மட்டுமல்ல, இன்னொரு 10,000 டன் ஸ்பெஷலாக உடனடியாக அனுப்ப வேண்டும் என்று டெல்லி தாக்கிது.

## Chairman, Panangudi Panchayat.

*99. Q—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to Question No. 193 on 11th March 1972—

(a) the action taken against the Chairman, Panangudi Panchayat for his irregularities; and

(b) the result of the action ?

## பணங்குடி ஊராட்சி மன்றத் தலைவர்.

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதி அன்று சட்ட மன்ற மேலவையில் உடுக்குறியிட்ட வினா எண். 193-க்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பணங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் இழைத்த தவறுகள் மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

(இ) அதனுடைய முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பனங்குடி ஊராட்சி மன்றத்தலைவர் இழைத்த தவறுகளுக்கு விளக்கம் கேட்டு பதவி நீக்கம் செய்ய ஊராட்சி மன்றத்தின் கருத்தைப் பெறுவதற்காக திருப்பத்தூர் தாசில்தாருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் 1973-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதி அன்று பிரேரணை அனுப்பினர். ஊராட்சியின் கருத்தைப் பெற தாசில்தாரால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கை செல்லாது என பனங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் சிவகங்கை மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு நடவடிக்கையில் உள்ளது.

(இ) இவ்வழக்கு முடிவடைந்த உடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் இறுதி நடவடிக்கை எடுப்பார்.

[பிற்பகல் 4-20]

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் மீது கல்லல் ஊராட்சி ஒன்றிய பஞ்சாயத்து அதிகாரி அவர்கள் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஏன் அந்த நடவடிக்கை எடுக்கப் படவில்லையென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அடுத்து ஒரு அறிக்கை வைக்க இருக்கிறேன். அதில் விவரங்கள் இருக்கும்.

## *Railway Cess Fund.*

* 100 *Q*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a large amount of money belonging to the Former District Board Railway Cess Fund is lying idle with the Government; and

(*b*) if so, the details thereof?

## ரெயில்வே செஸ் நிதி.

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னுள் மாவட்ட வாரிய ரயில்வே செஸ் நிதிக்குச் சொந்தமான பெருந்தொகை பயன்படுத்தப்படாமல் அரசிடம் அப்படியே உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.





திரு. ஜி. சுவாமிநாதன்: எந்தெந்த மாவட்டங்களில் இந்த ரெயில் செஸ் நிதி வசூலிக்கப்பட்டது; எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு ரூபாய் பயன்படுத்தப்படாமல் இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த ரெயில்வே செஸ் நிதி விதிப்பதற்கான அதிகாரம் முன் காலத்தில் மாவட்ட மன்றங்களுக்கு இருந்து வந்தது. அதன்படி விதித்து வந்தார்கள். கோவை, தென்னுற்காடு, ராமநாதபுரம், சேலம், திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அந்த செஸ் நிதி பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அவ்வப்போது தேவையானவற்றுக்கு அதைப் பயன் படுத்தி வருகிறேம்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 31,70,254 ரூபாயை வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை எண், 1246-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு இணங்க, இம்மாவட்டத்திலுள்ள நிதி மாவட்ட வளர்ச்சி மன்றங்களால் ஏற்கெனவே தீர்மானித்தபடி மருத்துவக் கல்லூரி அமைத்தல் போன்ற இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் இரயில்வே செஸ் நிதியில் ரூ. ரூ. 1,27,32,515·33 காசு இருக்கிறது. அத் தொகை அனைத்தையும் சாலை போடும் வேலைக்காக பயன்படுத்திக்கொள்ள தஞ்சை மாவட்ட ஆட்சியாளருக்கு 1973-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் தேதி நாளிட்ட அரசினர் ஆணை 2497-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் 1,16,100 ரூபாயை, 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதியில் உள்ளபடி ஏற்கெனவே செலவழிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 7,72,712 உள்ளது. இதில் ரூ. 7,19,627.13 அரசு ஈட்டுப் பத்திரத்தில் உள்ளது. இந்நிதியைப் பயன்படுத்திக்கொள்வதற்கான மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு ஊரக வளர்ச்சி நெறியாளர், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பணிகள்) ஆகியோர் பரிசீலனையில் உள்ளது. கணிசமான பகுதி அரசினர் பத்திரங்களாக இருக்கிறது. அதற்கு வட்டி சேர்ந்துகொண்டு இருப்பதால், அத்தொகை வீணுகக் கிடக்கிறதென்று சொல்வதற்கில்லை. ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 1,60,546, 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதியில் உள்ள கணக்குப்படி ரெயில்வே செஸ் நிதி உள்ளது. இதில் ஒரு பகுதியை இராமேஸ்வரம் குடிநீர் திட்டத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் செயற்குறிப்பு பொதுப் பணித் துறையில் இருக்கின்றன. தென்னுற்காடு மாவட்டத்தில், ரயில்வே செஸ் நிதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு இன்னும் முடிவுருமல் இருக்கும் சில சாலை அமைக்கும் பணிகளை முடிப்பதற்காக இரயில்வே செஸ் நிதியிலிருந்து ரூ. 5·03 லட்சங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 32,72,950 ரூபாயில், 9,26,000 ரூபாயைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள தொகையைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் துணைச் செயற்குறிப்புகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறுர். மேற்கூறிய எஞ்சியுள்ள தொகைக்கு ஊராட்சி

ஒன்றியப் பணிகளுக்குப் பயன்படும் வகையில் நான்கு சாலை போடும் இயந்திரங்களை வாங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்றினை மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ளார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்திற்கு 1968-லே 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது என்னென்ன பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதியை என்னென்ன வகைகளுக்காகச் செலவு செய்ய வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

1. நல்ல குடி நீர் வழங்குதல்.
2. தெரு விளக்கு போடுதல்.
3. தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டுதல்.
4. சேய் நல மகப்பேறு நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.
5. மருந்தகங்களுக்கான கட்டிடங்கள்.
6. இணைப்புச் சாலைகள் போடுதல்.

இப்படிப்பட்ட வேலைகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 1¼கோடி ரூபாய் கடந்த 15, 20 ஆண்டுகளாகச் செலவிடப்படாமல் இருந்தது. இப்போது முழுத் தொகையையும் சாலை அபிவிருத்திக்காக தஞ்சை மாவட்டத்தில் செலவு செய்ய வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்ததாகச் சொன்னார்கள். சாலைக்குச் செலவு செய்யவேண்டியது அவசியம்தான். ஆனால் அதிலே ஒரு பகுதியை தஞ்சை மிராசுதார் மருத்துவ மனைக்குச் செலவு செய்ய வேண்டுமென்ற பெரும் விருப்பம் அங்குள்ள உறுப்பினர்கள் பலருக்கு உண்டு. ஆகவே மாவட்ட வளர்ச்சி மன்றக்குழுவைக் கலந்து ஆலோசிக்காமல், அரசே ஒரு ஆணையைப் பிறப்பித்தது எவ்வளவு சரியானதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே தஞ்சை மிராசுதார் மருத்துவ மனைக்கு அரசாங்கத்தின் சார்பில் பல கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் உணருவார்கள். அங்கே சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் செலவு செய்தாலும், இன்னும் அந்த வேலையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்ற காரணத்தாலும், வேளாண்மைத் துறையில் இருக்கும் விவசாயிகளுக்கு அவசியம் இதைச் செய்துகொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும், இந்தப் பணம் சாலை போடும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது அன்னியிலும், தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் பல கோடிக் கணக்கான ரூபாயை பல்வேறு துறைகளிலிருந்து இன்றைய தினம் சாலை அபிவிருத்திக்குப் பயன்படுத்தி வருகிறோம்.



திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலே, மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவின் தீர்மானப்படி, இந்த செஸ் நிதியை, சேலத்தில் ஏற்பட இருக்கின்ற மருத்துவக் கல்லூரிக்காக ஒதுக்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது என்பது எனது நினைவு. அப்படி இருக்கும்போது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் மருத்துவக் கல்லூரி கட்டுவதற்காக பயன்படுத்தப்படவில்லை. அந்தத் தொகையைப் பயன்படுத்தி, மருத்துவக் கல்லூரியைக் கட்டுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள அந்தத் தொகையை, சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு, ஏற்கெனவே அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இதய நோய் சம்பந்தமான பகுதி ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றை சேலம் மாவட்ட ஆட்சியாளர் அனுப்பியுள்ளார். சேலம் ஊர் வளர்ச்சி மன்றங்களும் இது சம்பந்தமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இது சம்பந்தமாக சேலம் மாவட்ட ஆட்சியரை அணுகியபோது, தருமபுரி மாவட்ட வளர்ச்சி மன்றத்தினை இரு மாவட்டங்களுக்கும் பயன்படக்கூடிய திட்டங்களை ஒப்புக்கொள்ளுமாறு வலியுறுத்தலாம் எனக் கூறியுள்ளார். இதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது மதுரை மாவட்டத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. மதுரை மாவட்டத்திற்கு ரயில்வே செஸ் நிதி ஒதுக்கப்படவில்லையா? ஏதாவது கணக்கில் தவறுகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த செஸ் நிதி எப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால், தமிழ்நாடு 1884-ஆம் ஆண்டு உள்ளாட்சி வாரியங்கள் சட்டத்தின் 57 (11) பிரிவின்படி, டிராம்வேக்கள் அல்லது இருப்புப் பாதைகள் மட்டுமே அமைப்பதற்குப் பயன்படுமாறு அனுபோக நிலங்கள் அனைத்தின் ஆண்டு வாடகை மதிப்பில் ரூபாயில் முந்திய நாணய முறையைச் சேர்ந்த மூன்று பைசாக்களுக்கு மேற்படாமல் வரி விதித்து வந்தன. சில மாவட்டங்களில் குறிப்பாக, கோவை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்ட வாரியங்கள் இருப்புப் பாதைகளை தாங்களே அமைத்துக் கொண்டிருந்தன. மற்றவை, அதன்மீது வரி வசூல் செய்து வந்தன. மதுரை இதில் சேர்க்கப்படவில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, இனியாவது மதுரையைச் சேர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ரயில்வே கம்பெனிக்காரர்கள்தான் போய் விட்டார்களே.

இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### பனங்குடி ஊராட்சி தேர்தல் நடந்தும் செயல்படாதது குறித்து.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் (கல்லல் ஒன்றியம்) பனங்குடி ஊராட்சிக்குத் தேர்தல் நடந்துள்ள போதிலும் அந்த ஊராட்சி செயல்படாதது குறித்தும், இதனால் அந்த கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்தும்"

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பனங்குடி ஊராட்சியின் தலைவர் திரு. ரா. கி. சிங்கம் அம்பலம் என்பவர் மீது மேற்படி ஊராட்சி உறுப்பினர் திரு. யா. சாமிநாதன் முதலான ஆறு உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனு 3—4—1971-ல் மாவட்ட ஆட்சியாளருக்குக் கிடைக்கப் பெற்றது. மேலும் திரு. யா. சாமிநாதன் உட்பட இருவர் மீண்டும் 11—10—1971-ல் வேறொரு புகார் மனு அனுப்பியுள்ளார்கள். பனங்குடி ஊராட்சி மன்றத்தின் கூட்டத்தை நடத்துவதிலும், ஊராட்சி மன்ற நடவடிக்கைகளில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றுள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அதன் பேரில் பனங்குடி ஊராட்சித் தலைவர் மீது பதவியைத் துஷ்பிரயோகம் செய்ததாகச் சில குற்றச்சாட்டுகளுடன் கீழ்க்காணும் குற்றமும் சாட்டப்பட்டது.

பனங்குடி ஊராட்சி மன்றக் கூட்டங்களை ஊராட்சி நிர்வாக நடைமுறை நூல் பாகம் 1 பகுதி 8 (1)-ன்படி மாதந்தோறும் ஊராட்சிக் கூட்டம் கூட்ட வேண்டுமென உள்ளது. தலைவர் 28—9—1971-ம் நாள் முதல் ஜனவரி 1972, மார்ச் 1972 மற்றும் அக்டோபர் 1972 ஆகிய மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் ஊராட்சி மன்றத்தின் கூட்டங்களைக் கூட்டத் தவறியுள்ளார்.





குற்றச்சாட்டுகளின் பேரில் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 149 (எ) பிரிவின்படி தலைவரை என் பதவி நீக்கம் செய்யக்கூடாது என்பதற்கான விளக்கம் கேட்கப்பட்டது. தலைவரை பதவி நீக்கம் செய்ய மேற்கூறிய சட்டத்தின் விதிகளின்படி ஊராட்சி மன்றத்தின் கருத்தைப் பெற திருப்பத்தூர் தாசில்தாருக்கு, மாவட்ட ஆட்சியர் 10—5—1973 அன்று பிரேரணை ஒன்று அனுப்பினார். ஊராட்சியின் கருத்தைப் பெற தாசில்தாரால் 17—7—1973-ல் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கை செல்லாது என்று ஊராட்சித் தலைவர் சிவகங்கை மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு நடவடிக்கையில் உள்ளது. இவ்வழக்கு முடிவடைந்தவுடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தக்க மேல் நடவடிக்கை எடுப்பார் என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றத்தில் அந்தத் தலைவர் கையாடல்கள் செய்திருக்கின்றார் என்றுதான் பஞ்சாயத்து அதிகாரி அவர்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தார். அவர் மீது என் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

[பிற்பகல் 4–30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவர் மீது 7 குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு குற்றச்சாட்டுக்களுக்கும் அவரிடமிருந்து பதில் பெறப்பட்டு அதிகாரி சொன்னபடி இப்போது நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இடையிலே அவரை நீக்கம் செய்ததே செல்லாது என்று இருப்பதனாலே, அது பற்றி முடிவு ஏற்பட்ட பிறகு தனியாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். சமீப காலத்தில், உருது பேசக்கூடிய மக்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதாக நமது அருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கையின் மூலம் உருது பேசக்கூடிய சுமார் 10 லட்சம் இஸ்லாமியர்கள் உருப்படியான நலனைப் பெறுகிறார்கள். அவர்கள் சார்பில் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதல்வர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கின்றேன். இந்த அறிவிப்பு வந்து எல்லோரையும் மகிழ்வித்திருக்கிறது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கெஜட் பப்ளிகேஷன்-ஐத் தாமதிக்காமல் வெளியிடுவதற்கு அரசு முயல வேண்டும் என்று நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசிய நண்பர்கள் பொருள்களின் விலைவாசிகள் ஏறிவருவதைப் பற்றிப் பேசினார்கள். விலைவாசி எல்லாப் பொருள்களுக்கும் உயர்ந்திருக்கிறது. குறிப்பாக உணவுப் பண்டங்களின் விலைகள் அளவுக்கு மீறி உயர்ந்துவிட்டன. அதனால் ஏழை மக்கள் சமாளிக்க முடியாத அளவுக்கு நிலவரம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி அரசைக் குறை கூறிப் பேசினார்கள். விலைவாசி உயர்ந்திருப்பது உண்மைதான். அதிலும் குறிப்பாக எனது நண்பர் திரு. தீக்ஷீதர் அவர்கள், இட்டிலியினுடைய பருமன் குறைந்து விட்டது காற்றிலே

பறந்துவிடக்கூடிய அளவுக்கு அது குறைந்து விட்டது, அட்டைபோல் இருக்கின்றது என்ற பொருள்படப் பேசினார்கள். உண்மைதான். இட்லியினுடைய பருமன் குறைந்திருக்கலாம். ஆனால், திரு. தீக்ஷிதர் அவர்கள் மற்ற மாநிலங்களைப் பார்வையிட்டார்களா, பார்த்தார்களா? அப்படி அவர்கள் பார்த்திருந்தால், இங்கே இந்த இட்லியினுடைய நிலையை இப்படிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். ஏனைய மாநிலங்களில், தீக்ஷிதர் கட்சியினர் கூட்டு சேர்ந்திருக்கும் கட்சியினுடைய ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்ற அங்கெல்லாம் பார்த்தால், வானத்திற்கும் பூமிக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் காண முடிகிறது. இங்கு அட்டைபோல் இட்டிலி இருக்கின்றது என்றால், பேப்பரைப் போல் அங்கு இட்டிலி ஆகியிருக்கிறது என்பதை உணர வேண்டும். நான் குறிப்பாக. . . .

திரு. கே. ராஜாராம் : பேப்பர் போல கூட இட்டிலி இருக்குமா ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இருக்கிறது. எத்தனையோ மாநிலங்களில் இருக்கின்றது. நான் குறிப்பாக மகாராஷ்டிர மாநிலத்திற்கு சென்ற வாரம் சென்றிருந்தேன். அங்குள்ள நிலவரம் பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றது. அரிசியின் விலை இங்கு இரண்டு ரூபாயாக இருக்கிறது என்றால், அங்கு ஒரு படி அரிசி ஒன்பது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சாதாரணமாக நம் கல்யாணங்களுக்கு, மற்ற விசேஷங்களுக்கு விருந்து நடத்துகிறோம். ஆனால், அங்கு விருந்து நடத்த வேண்டுமானால், 50 பேர்களுக்கு மேல் விருந்து கொடுக்கக்கூடாது. அதுவும் நடத்த வேண்டுமென்றால், உத்தரவு பெற்றுக் கொண்டுதான் நடத்த வேண்டும். ஒரு வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். அங்கு உத்தரவு வாங்காமல் கொஞ்சம் பேர்கள், ஒரு 30 பேர்களுக்கு அரிசி கொண்டுவந்து விருந்து நடத்த இருந்தார்கள். இந்தக் கல்யாண வீட்டில் இருந்த அந்த அரிசியை வந்த அதிகாரிகள் பிடுங்கிக் கொண்டுபோய் விட்டார்கள். அவர்கள் தவிக்கின்றார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கும்போது, நம் மாநிலம், ஆந்திர மாநிலம் தவிர்த்து ஏனைய மாநிலங்களில் எல்லாம்—பஞ்சாப் மாநிலம் எப்படி இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.—இந்த நிலைமைதான், உணவுப் பண்டங்களைப் பொறுத்த வரையில். அதைப் பார்க்கும்போது தமிழகத்தில் வாழ்கின்ற நாம்தான் புண்ணியம் செய்தவர்கள் என்று சொல்ல வேண்டும். (It is an oasis) பாலைவனத்திடையிலே இருக்கும் சோலைவனமாக இந்த நாட்டில் நமது தமிழகம் அமைந்திருப்பதைப் பார்த்து பெருமை அடையக் கூடிய நிலையை விட்டு, தமிழக அரசைத் தாக்கிப் பேசுவது அர்த்தமில்லாத குற்றச்சாட்டு என்பதை நான் சொல்லிக்கொள்வேன். திரு. தீக்ஷிதர், மற்றவர்கள் யாவரும் நன்கு உணருவார்கள். விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணம் பணவீக்கம் (இன்பிளேஷன்). அதற்கு முழுக்க முழுக்க மத்திய அரசு பொறுப்பு என்பதை அறிவார்கள். ஆகவே, திரும்பத் திரும்ப நம்முடைய அரசைக் குறைகூறுவதிலே அர்த்தமில்லை என்பதை நான் சொல்லிக்கொள்வேன். இங்கே எவ்வளவோ நன்மை பயக்கும் காரியங்களைச் செய்கிறார்கள். மக்கள் முன்



னேறக்கூடிய வகையில் செய்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் "This is the best Administered State)" என்று நாம் துணிந்து சொல்லலாம், பெருமிதத்துடன் சொல்லலாம். அந்த அளவுக்கு நல்ல நிர்வாகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நான் மட்டும் சொல்லவில்லை. இதே திரு. தீக்ஷிதர் அவர்களும், நமது நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் என்னிடத்திலே பேசிக்கொண்டிருந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய திறமையை வானளாவப் புகழ்வார்கள். இங்கே பேசுகிறபோது தாக்கிப் பேசினார்கள். என்னிடத்திலே பேசும்போது அப்படிப் பேசுகிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இட்லி பற்றியும் மற்ற சரக்குப் பற்றியும் விலை அதிகமாகப் போயிருக்கிறது என்று சொன்னார்கள். எல்லோரும் சேர்ந்து விலையைக் குறைப்பதற்காகப் பாடுபடவேண்டும். இன்னும் கொஞ்சம் பெரிதாக்க என்ன செய்வது என்று பார்க்கவேண்டும். இப்படிப் பேசினால், வியாபாரிகள் இன்னும் கொஞ்சம் சிறிதாக ஆக்கத் தூண்டியது போல் ஆகிவிடும். இது அரசாங்கத்தைத் தாக்குவது என்று நினைத்துக் கொண்டு, அதை மாற்றி ஓட்டல்காரர்களையும் வியாபாரிகளையும் உற்சாகப்படுத்துவது என்பது அவ்வளவு சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வியாபாரிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நான் இதைக் குறிப்பிடவில்லை. இட்லி பறந்துவிடக் கூடிய அளவுக்குக் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். பறந்துவிடக்கூடிய அளவுக்கு இருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி ஒரு உதாரணத்திற்குத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரிசி விலை "இன்பிளேஷன்" காரணமாக ஏறியது என்று பேசியிருந்தால், பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சில சொற்களுக்கு "எக்சாஜரேஷன்" இருக்கிறது இல்லையா ? நீங்கள் சொல்கின்ற போது இட்டிலி அட்டை போல இருக்கின்றது என்று சொல்லியது போலத்தான். நீங்கள் இங்கே இட்டிலி அட்டையைப்போல் இருக்கிறது என்று சொன்னீர்கள். இன்னும் அது இங்கு காகிதத்தைப் போல் ஆகிவிட்டால் என்ன பண்ணுவது என்பதுதான் அவருக்குள்ள கவலை எல்லாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த நாட்டில் சமீப காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தல் சமயத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே "கரிபி அட்டாவோ" என்று ஒரு கோஷத்தைக் கிளப்பினார்கள். "கரிபி அட்டாவோ" என்றால், அதற்குப் பொருள் "ஏழ்மையை அகற்றுங்கள்" என்பது. "ஏழ்மையை அகற்றுங்கள்" என்பது "கரிபி அட்டாவோ" என்பதற்குப் பொருள். இந்த வார்த்தைகள் மக்களை எஃகு போல் ஈர்த்தது. ஏழை மக்கள் ஏழ்மை அகலப் போகிறது, ஆகவே இந்த அரசை ஆட்சியில் ஏற்றினால்,

நல்வாழ்வு கிடைக்கப்போகிறது என்ற மந்திர சக்தி கொண்ட வார்த்தைகளை நம்முடைய பிரதமர் அவர்கள் உபயோகித்தார்கள். அந்த மாயையிலே மயங்கி மக்கள் அத்தனை பேரும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். அந்த ஆதரவின் பலனாக நம்முடைய தலைவர்கள் கூட அடிக்கடி சொல்வார்கள் "She got a Steam-roller majority." என்பது போன்று அவ்வளவு பெரும்பான்மையான மெஜாரிடி கிடைத்தது. இன்றைக்கு அந்த வார்த்தைகள், வார்த்தை அளவிலேதான் இருக்கின்றனவே தவிர்த்து, செயல் அளவிலே உருப்படியான ஒரு நிலைமை உருவாக்கப்படவில்லை என்பதைப் பார்த்து மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள்.

(4–40 பி.ப.)

அந்த வார்த்தையின் காரணமாக இந்திரா வேவ் என்ற அலை வீசியது. அந்த அலை எல்லாவற்றையும் அடித்துச் சென்று விட்டது. அத்தகைய வேவ் பொய்யான வேவ். அந்த வேவை நம்பியவர்கள் எல்லாம் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதை சமீப கால நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டன. 3 வருஷ காலத்தில் எந்தவித உருப்படியான அபிவிருத்தியையும் காணாத மக்கள் மனம் வெதும்பி, முன்பு யார யார் இந்திரா காங்கிரசை ஆதரித்தார்களோ, அவர்கள் எல்லாம் ஆங்காங்கே எதிர்த்து வாக்களிக்க முற்பட்டிருக்கும் காட்சியை சமீபத்தில் கடந்த "பை எலக்ஷன்" முடிவுகளில் காண்கிறோம். இரண்டு வாரங்களுக்கு முன்பு, மஹாராஷ்டிராவில் நான்கு இடங்களில் "பை எலக்ஷன்" நடந்தது; இரண்டு பாராளுமன்றத்திற்கும் இரண்டு சட்டசபைக்கும். அந்த நான்கு இடங்களில், மூன்று இடங்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருக்கிறது. ஒரு இடத்தில் பரிதாபமாக மிகவும் மோசமாக வாக்குகள் குறைவாகப் பெற்று அந்த ஸ்தானத்தை இழந்திருக்கிறது. அந்த "க்ரிபி ஹட்டாவ்" என்ற மாயை மறைந்து விட்டது. அந்த "கரிபி ஹட்டாவ்" தமிழகத்தில்தான் செயல்படுகிறது. தொழுநோய் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்காதபடி, அவர்களுக்கு ஏதாவது ஒரு வகை செய்து, அவர்கள் பிச்சை எடுக்காத நிலையில் நல்வாழ்வளித்து ஒரு உருப்படியான நன்மை செய்து, "கரிபி ஹட்டாவ்" அமுல் நடத்தப்படுகிறது. அது மட்டுமல்ல, பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் வரவிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பிச்சை எடுப்பதைத் தடுக்க சட்டம் வரவிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, உண்மையில் "கரிபி ஹட்டாவ்" தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறதே தவிர, மற்ற மாநிலங்களில் நடைமுறையில் இல்லை. இந்த "கரிபி ஹட்டாவை" நல்ல முறையில் செயலாற்றுகின்ற தமிழக அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடி, பிச்சை எடுப்போரைத் தடுக்கும் சட்டம் வருவதாக நான் பத்திரிகையில் படித்தேன். அப்படி வரக்கூடிய கட்டத்தில், வெறும் பிச்சை எடுப்பதைத் தடுத்து விடுவது மட்டுமல்லாமல், பிச்சை எடுப்பவர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுத்து, அவர்கள் பிழைப்புக்கு மாற்று வழிவகைகள் செய்துவிட்டு தடை உத்தரவு போட முயல வேண்டும். அப்படியில்லாமல், வெறும் தடையுத்தரவு மட்டும் போட்டுவிட்டால், பிச்சை எடுக்கிறவர்கள் அத்தனை பேரும் திருட்டுத் தொழிலுக்குப் போய்





விடுவார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு காரியங்கள் செய்யும் என்பதை நான் உணர்கிறேன். அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உருது பேசுகின்ற மக்களுக்கு ஏதோ தெரிந்தோ. தெரியாமலோ சில அநீதிகள் சென்ற காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதை நல்லதாக மாற்றுவார்கள் என்ற எண்ணத்துடன் நான் சொல்லுகிறேன். இதற்கு முன்பு உருது மொழி பேசுகின்ற மக்களுக்கு வசதியாக 3 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. தமிழகம் பூராவும் 3 இடங்களில் "டீச்சர்ஸ் டிரெயினிங் ஸ்கூல்கள்" இருந்தன. சென்னையில் ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று, திருச்சியில் பெண்களுக்கு ஒன்று இருந்தது. 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஸ்கூல்களை மூடிவிட்டார்கள். இது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து செய்யப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. உருது பேசுகின்ற மக்களுக்கு இருந்த இந்தச் சலுகை எடுக்கப்பட்டதை மாற்றியமைத்து, அடுத்து வருகின்ற ஆண்டிலிருந்தாவது அந்த 3 பள்ளிக்கூடங்களையும் துவக்குவதற்கு உத்தரவு விசேஷமாகப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹைகோர்ட்டில் முன்பு ஜட்ஜுகள் 9 பேர் இருந்தார்கள். 9 பேராக இருக்கும்போது ஒரு முஸ்லீம் ஜட்ஜாக இருந்தார். இப்போது 9 பேர் இருந்த இடத்தில் 18 பேர் ஜட்ஜ்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 18 ஜட்ஜுகள் இருப்பதால், இன்னொரு முஸ்லீம் ஜட்ஜைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் சமீபத்தில் இரண்டு இடங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், வகுப்புக் கலவரங்கள் முஸ்லீம்கள் சம்பந்தப்பட்டவரை நடைபெற்றுள்ளன. இதைக் கையாண்ட முறை திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிராம்பட்டினத்தில் ஒரு வகுப்புக் கலவரமும் தென்காசியில் ஒரு வகுப்புக் கலவரமும் நடைபெற்றிருக்கின்றன. அங்கு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அவர்கள் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமாக முடித்தார்கள். ஆனால், முடித்த விதம் திருப்தியளிக்கக்கூடிய நிலையில் இல்லை. அதிராம்பட்டினத்தில் நடந்த கலவரத்தில் முஸ்லீம் அல்லாதவர்கள் அதிகமாக நஷ்டப்பட்டார்கள். தென்காசியில் நடந்த கலவரத்தில் முஸ்லீம்கள் அதிகமாக நஷ்டப்பட்டார்கள். அங்கே பேச்சு வார்த்தை நடத்திய கலெக்டர் அவர்கள், முஸ்லீம்களிடத்தில் நஷ்ட ஈடு வசூலித்து மற்றவர்களுக்குக் கொடுத்தார்கள் அதிராம்பட்டினத்தில். ஆனால், தென்காசியில் அப்படியில்லாமல் நஷ்ட ஈடு ஒன்றும் முஸ்லீம்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதிராம்பட்டினத்தில் எந்த அடிப்படையில் நஷ்ட ஈட்டைத் தீர்மானித்தார்களோ,

அதே அடிப்படையில் தென்காசியில் அமுல்படுத்தியிருந்தால், அது நியாயமாக இருக்கும். இங்கே கையாண்ட முறை சரியல்ல. இங்கே பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சமயநல்லூரில் ஒரு பெண் தப்பான முறையில் கையாளப்பட்டு மரணத்திற்குக் ஆளாக்கப்பட்டிருக்கிறாள். இதிலே சம்பந்தப்பட்டவர்கள் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள். அநாகரிகமான இத்தகைய ஒரு சம்பவத்தைப்பற்றிக் கேள்விப்படும்போது மனம் அப்படியே பதறக்கூடிய நிலையிலிருக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள் மேலும் மேலும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தக் கொடுமையைச் செய்த பாவிகளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

அடுத்து, நம்முடைய ஹாஸ்டலில் இப்போது அடிக்கடி திருட்டுப் போகிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு எம்.பி.-யினுடைய பணம், 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாயை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். என்னைப் பொறுத்தவரையில், அங்கே ஒரு ரூம் பெர்மனெண்ட் ஆக இருக்கிறது, நான் வெளியே செல்லும்போது பூட்டிவிட்டுச் சென்று விடுவேன். சமீபத்தில் 6 மாதத்திற்கு முன்பு அந்த ரூமைப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்க்கும்போது, உள்ளே இருந்த சாமான்கள் எல்லாம் காணாமல் போயிருந்தன ; டிரான்ஸிஸ்டரைக் காணோம், துணிமணிகளைக் காணோம். அந்த அறையின் பூட்டுக்கு "டூப்ளிகேட்" சாவி போட்டுத் திறந்து அந்த சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு மறுபடியும் பூட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். சில சாமான்கள் அப்படியே இருந்தன, துணிமணிகளில் பாதியை வைத்துவிட்டு, பாதியை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இது மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இது மாதிரித் திருட்டுப் போயிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டும். திருட்டுகளைத் தடுப்பதற்கான கண்காணிப்பை கொஞ்சம் முறைப்படுத்த வேண்டும் என்று சொல்லுவதற்காகச் சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில், ஒரே வருஷத்தில் 3 திருட்டுக்கள் கொடுத்திருக்கிறேன். அன்றைக்கு ராஜாஜி அவர்கள் இறந்த அன்று நான் ரயிலில் பிரயாணம் செய்தேன். அன்றைக்கு டிக்கட் கிடைக்கவில்லை, செகண்ட் கிளாஸ் டிக்கட் வாங்கிக்கொண்டு கீழே படுத்திருந்தேன். என்னுடைய பெட்டியை சீட்டுக்குக் கீழே வைத்திருந்தேன். விழுப்புரத்தில் எழுந்து பார்த்தபோது, பெட்டியைக் காணோம். போட்டிருந்த துணியோடு வந்திறங்கினேன். போலீஸில் கம்ப்ளெய்ண்ட் செய்தேன். ஒரு மாதத்திற்குப் பிறகு "நாட் டிரேசபிள்" என்று பதில் வந்தது. சென்ற ஜனவரி மாதத்தில் சொந்தக்காரர் வீட்டில் ஒரு திருமணம் இருந்தது. அங்கே ஒரு குழந்தை போட்டிருந்த சங்கிலியை கழுத்திலிருந்து அறுத்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். போலீஸில் கம்ப்ளெய்ண்ட் கொடுத்ததற்கு "நாட் டிரேசபிள்" என்று பதில் வந்தது. ஹாஸ்டலில் போன திருட்டுக்கும் அதே பதில் தான் கிடைத்தது. இந்த மாதிரி "நாட் டிரேசபிள்" என்றால், போலீஸ் நிர்வாகம் இந்தத் திருட்டுக்களைக் கண்காணிக்கும் முறை திருப்திகரமாக இல்லை என்பதைத்தான்





4-50 பி.ப.

காட்டுகிறது. இதை "ரீ-கான்ஸ்டிட்யூட்" செய்து இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும். பத்திரிகைகளில் பார்த்தால், "இதைக் கண்டுபிடித்து விட்டோம், அதைக் கண்டுபிடித்து விட்டோம்" என்றெல்லாம் மிகப் பிரமாதமாக விளம்பரப்படுத்துகின்றார்கள். அடிக்கடி வருகின்றது. ஆனால் 20 இடங்களிலே திருட்டுப்போனால் அவற்றில் ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டு அதையே மிகப் பெரிய அளவிற்கு விளம்பரப்படுத்திக்கொள்ளுகின்றார்களோ என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த முறை மாற்றப்பட்டாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, ஒன்றைப்பற்றி மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். சமீபத்தில் பம்பாய் சென்றிருந்தபோது, அங்குள்ள நிலவரத்தைப் பார்த்தால், மிகவும் பரிதாபப்பட வேண்டியிருந்தது. குறிப்பாக அங்கே வாழும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், கேரளத்தைச் சேர்ந்தவர்கள், ஆந்திரம் மற்றும் கன்னடப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மிகக் கேவலமாக நடத்தப்படுகின்றார்கள், கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள். முன்பெல்லாம் பம்பாயில் வேட்டி கட்டியவர்களைப் பார்க்கலாம். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை மாறிவிட்டது. ஆயிரத்தில் ஒருவர்கூட வேட்டி கட்டியவரை பம்பாயில் பார்க்க முடியாது. யாராவது அப்படி வேட்டி கட்டிக்கொண்டிருந்தால், அவர்களைப் பிடித்து அவர்களுடைய சட்டை, வேட்டி, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, நிர்வாணமாக ஆக்கி ஒரு லாரியில் நிற்க வைத்து ஊர்வலமாகக் கொண்டு போகின்றார்கள். அப்படிப்பட்ட கொடுமையைக் கண்டு தமிழர்கள் மிகவும் பயப்படுகின்றார்கள். இதற்காக, இதுவரையில் வேட்டியைத் தவிர, வேறு ஒன்றும் அணிந்து பழக்கப்படாதவர்கள் எல்லாம் ட்ரௌஸரையோ பைஜாமாவையோ போட்டுக்கொள்ளும் நிலைமையைப் பார்க்கிறோம். அங்கே இப்படி தமிழர்களை நிர்வாணமாக நிற்க வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போது, ஏராளமான போலீஸார் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் நிற்கின்றார்களே தவிர, எந்த விதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லை. நூற்றுக்கணக்கில் போலீஸார் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் நிற்கின்றார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு மனம் பதறுகின்றது. மத்திய சர்க்கார் என்ன செய்கின்றது என்று தெரியவில்லை. இந்திரா காங்கிரஸ் ஆட்சிதான் அங்கே நடைபெறுகிறது. ஆனாலும் இதைப் பற்றி அவர்கள் ஒன்றும் கேட்பதில்லை. நமது அரசு இதற்கு தக்க கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் மத்திய சர்க்காருக்கு எழுதி அங்கே உள்ள நமது தமிழ் மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்கும்படி செய்ய வேண்டும். நேற்றுக்கூட பத்திரிகையில் இது போன்ற ஒரு செய்தி, சூறையடித்திருக்கின்றார்கள், கொள்ளை அடித்திருக்கின்றார்கள் என்று. இதையெல்லாம் எவ்வளவு காலம் சகித்துக்கொண்டே இருப்பது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இதற்குத் தீவிர நடவடிக்கைகளை நம் அரசின் மூலம் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, சிவ சேனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

[1974 சனவரி 29

*திரு ஆர். சக்திமோகன் : மாண்புக்குரிய தலைவரவர்களே, நமது ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு ஆற்றிய பேருரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்கள் கொண்டு வந்துள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் பேருரையினை எந்த ஆண்டிலும் இல்லாத விதமாக இந்த ஆண்டு பெரியார் அவர்களுடைய மறைவையும், அவரது மறைவினால் ஏற்பட்ட வேதனையை முன்வைத்துத் தம் பேருரையைத் தொடங்கியிருக்கின்றார்கள். பெரியார் அவர்களைப் பற்றி இதற்கு முன்பு நடந்த இரங்கல் கூட்டத்திலும், பிறகு நடந்த கூட்டத்திலும் பலரும் விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே பெரியார் அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாததொரு நஷ்டமாக இருந்தாலும், அவர் எவ்வளவு நேர்மையானவர், எவ்வளவு நாணயமானவர், சமுதாயத்திற்கு அவர் செய்துள்ள சேவை எவ்வளவு பெரிது என்பதை உலகிற்கு உணர்த்தும் வகையில், இந்த அரசு அவருக்கு எந்த மட்டில் பெருமையையும் மரியாதையையும் செலுத்த வேண்டுமோ அந்த அளவிற்குப் பெருமையையும் மரியாதையையும் செய்திருக்கின்றது என்பதற்கு அடையாளமாகத்தான் சட்டப் பேரவையையும் மேலவையையும் அவருடைய சேவைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் ஒத்தி வைத்ததோடு, கவர்னர் பெருமான் தம் பேருரையில் தமது வேதனையைத் தெரிவித்திருக்கிறார். அவர் பெரு வாழ்வு வாழ்ந்தவர், முழு வாழ்வு வாழ்ந்தவர். ஏறத்தாழ ஒரு நூறு ஆண்டு காலம் வாழ்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக ஜாதி வேறுபாட்டை ஒழிக்க பாடுபட்டவர். குறிப்பாக தம்முடைய வாழ்வை இந்திய தேசியத்திற்காக ஆரம்பித்து, கடைசியில் சமுதாயத்திலுள்ள மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க தமது வாழ்வினை அர்ப்பணித்துக்கொண்டு அதற்காகவே கடைசி வரையில் போராடி உயிர் நீத்தவர் அவர். அவ்வளவு பெருமை மிக்க பெரியாருக்கு நினைவுச் சின்னமாக ஏதேதோ நிறுவ வேண்டும் என்று பல உறுப்பினர்கள் இங்கேயும் வெளியிலும் குறிப்பிட்டார்கள். அவரது நினைவாக ஒரு சிலையை நிறுவுவதோ அல்லது அவரது பெயரில் ஒரு வட்டாரத்தின் பெயரை மாற்றியமைப்பதோ போதாது. அவர் இந்த நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக பல நூறாயிரம் கோடி பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அக் கருத்துக்களிலே எது ஒன்றும் கால வெள்ளத்தால் மறைக்க முடியாதவை. அவர் சொல்லிய கருத்துக்களில் தெய்வ நிந்தனையை மட்டும் ஒதுக்கி விட்டு, மக்கள் நலன்களுக்காக அவர் சொன்ன கருத்துக்கள்....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுதான் முக்கியம்? அதை விட்டுவிட்டு வேறு எதை எழுதுவது?

திரு ஆர். சக்திமோகன் : அவர் சொன்ன பகுத்தறிவுக் கருத்துக்களைப் போதிக்கும் வகையில் பெரியார் பகுத்தறிவுப் பல்கலைக் கழகம் ஒன்றை அவர் தம் பொதுவாழ்வினை ஆரம்பிப்பதற்கு முதலடி வைத்த திருச்சி நகரிலோ அல்லது அவர் பிறந்த கொங்கு நாட்டின் ஒரு பகுதியிலோ அமைக்க



1974 சனவரி 29] [திரு. ஆர். சக்திமோகன்]

வேண்டும் என்ற என் ஆசையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பெரியார் இராமசாமி பகுத்தறிவுப் பல்கலைக் கழகம் என ஒன்றை நிறுவுவதுதான் அவருக்கு நாம் எழுப்பும் உண்மையான நினைவுச் சின்னமாக அமையும் என்று, தலைவரவர்களே, தங்கள் மூலம் இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே மூன்று சர்வகலாசாலைகள் தான் இருக்கின்றன. இவ்வளவு பெரிய நமது தமிழகத்திலே இன்னும் இரண்டு சர்வகலாசாலைகள், ஒன்று திருச்சியிலும் மற்றொன்று கோவையிலும் அமைப்பதில் தவறில்லை. அப்படி அமைக்கும்போது, அவரது நினைவாக காலவெள்ளத் தால் மறைக்க முடியாத அவரது கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க விதத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அவரது பெயரால் நிறுவினால், அது அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக் காணிக்கையாக அமையும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் தம் உரையில் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி, சொல்ல முடியாதவற்றைக் கூடியவரையில் சொல்லாமற் சொல்லி, தமிழ் நாட்டிற்காக கடந்த காலங்களில் இன்னின்ன செய்திருக்கிறோம், இன்னின்னவை செய்யப்பட இருக்கிறது, அவற்றைச் செய்வதற்கு என்னென்ன தேவை என்பதை சூசகமாகவும் அதே சமயத்திலே சற்று வேதனையோடும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை விமரிசனம் செய்வதற்காக நான் இங்கே நிற்கவில்லை. அதற்கு நேரமும் காணாது. ஆனால் அவர்களுடைய உரையின் மொத்தச் சுருக்கம் என்னவென்று பார்த்தால், நமது மாநில அரசு மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை, நிறைவேற்ற முடியாதிருப்பதற்கு முக்கிய காரணம் அதிகாரப் பற்றாக்குறை, அதாவது மாநில அரசுக்கு அதிகாரம் போதவில்லை என்பதுதான். இது தான் அவருடைய பேருரையில் நாம் சுருக்கமாகக் காணமுடிந்த உண்மை. இது உண்மையிலே உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையும்கூட. மாநிலங்களுக்கு அதிகாரம் போதவில்லையா என்றால், மத்திய அரசினைக் கேட்டால், போதிய அளவிற்கு அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக் கப்பட்டிருக்கின்றன, அதைக் கொண்டே அவர்கள் வேண்டிய அளவிற்கு மக்களுக்கு வேண்டிய சேவைகளைச் செய்யலாம் என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். மறுபுறம் மாநிலங்களைக் கேட்டால், அவர்கள், "எங்களுக்கு போதிய அதிகாரம் இல்லை ஆகவேதான் மாநிலங்களின் முன்னேற்றத் திற்கு வேண்டியதைச் செய்ய முடியவில்லை" என்று சொல்லுகின்றார் கள். ஆனால் இந்த இருதரப்பின் கூற்றுக்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது, தற்போது அமைச்சர் திரு மாதவன் அவர்கள் கூறியதுபோல, நாம் உற்பத்தி செய்யும் சிமெண்டில் ஒரு மூட்டையைக்கூட அவர்களுடைய அனுமதியின்றிப் பெற முடியாது என்று சொன்னால், இதற்கு நிச்சயம் முடிவு கட்டத்தான் வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. இதைச் சொல்லும்போது, ஒருவிதத்தில் இதைத் திசை திருப்பிவிடுவதுபோல மாநில சுய ஆட்சிக் கோஷம் என்று இதைச் சொல்லி இதை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டுவிடுகின்றார்கள். சிலர். மாநில சுய ஆட்சி என்பது இப்போது ஏற்பட்டுவிட்டதொரு புதிய கோஷம் இல்லை. இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொந்த உற்பத்தியில்லை. திராவிட முன்னேற்றக் கழகம்

தோன்றுவதற்கு 15 வருடங்களுக்கு முன்பே "மாநில சுய ஆட்சி" என்
தொரு பெரிய புத்தகத்தை முன்பிருந்த பத்திரிகை ஆசிரியர்களும் அ
வாளர்களும் எழுதினார்கள். அதை அடுத்து, இன்றைக்கு நம்மோடு இருந்
வரும் பெரும் தேசியத் தலைவர்களில் ஒருவரான திரு ம. பொ. சி. அவர்க
தமிழக சோஷலிஸக் குடியரசு வேண்டும் என்று முன்பு கேட்டார்கள்
இந்த நிலைமையில் இன்றைக்கு அதிகாரங்கள் மாநிலங்களுக்கு
போதவில்லை என்ற அடிப்படையில் மாநில சுய ஆட்சி வேண்டும் என்
கோருவது எப்படித் தவறாகும் என்று எனக்கு விளங்கவில்லை. நான்
சுத்தமான தேசிய வாதிகளில் ஒருவன். சோஷலிஸத்திலும் ஜன
நாயகத்திலும் நம்பிக்கை உள்ளவன். என்றாலும்கூட ஒரு மாநில
திற்கு, அந்த அந்த மாநிலத்தைச் சார்ந்த மக்களுக்கு நன்மை செய்ய
முடியாத அளவிற்கு அதிகாரப் பற்றாக்குறையிருக்கிறது என்றால், அதை
அனுமதிப்பதற்கில்லை, அனுமதிக்கவும் கூடாது. இன்று அதிகாரங்கள்
போதவில்லை என்று சொல்லுவதற்கு உள்ள அடிப்படைக் காரணம் என்ன
என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆரம்பத்திலே, இந்திய
விடுதலையைப் பெற்ற அந்த நாளிலே நமக்கு என ஒரு கொள்கையை
நாம் வகுத்துக் கொள்ளாதது முதல் காரணம். அன்று இந்திய
விடுதலையையொட்டி நாடு பிரிந்த நேரத்திலே பண்டித நேருவைப்போன்ற
அகில இந்திய அந்தஸ்தைப் பெற்ற வேறு ஒரு தலைவர் இல்லாத
நிலையில், இது போன்ற பிரச்சினைகளைப் பற்றி அன்றைக்கே நாம்
பேசாமல் விட்டுவிடப்பட்டுவிட்டதும் ஒரு குறை. அவருக்குள்ள செல்வாக்கிலே
அவர் தன் சொந்த முறையில் அரசியல் சட்டத்தினைத் தயாரித்துவிட்டார்கள்
என்றாலும், அது மிகையாகாது. நமக்கு என ஒரு "இஸத்தை" ஏற்
படுத்திக்கொள்ளாமல், அமெரிக்காவைத் திருப்திப்படுத்த ஜனநாயகம்,
சோவியத் நாட்டைத் திருப்திப்படுத்த சோஷலிஸமும், சீன நாட்டைத்
திருப்திப்படுத்த கம்யூனிஸமும், பிரிட்டிஷ் நாட்டைத் திருப்திப்படுத்த காமன்
வெல்த்தில் இருப்பது என்றும் இப்படி ஒவ்வொருவருக்காக ஒரு "இஸம்"
என்று வைத்துக்கொண்டு, இன்று நம்மை நாமே அவல நிலைக்கு
ஆளாக்கிக்கொண்டு விட்டோமே தவிர, நமக்காக ஒரு "இஸத்தை"
வைத்துக்கொள்ளவில்லை. ஆகவேதான் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு
புதுவித ஜனநாயகம், காமன்வெல்த் என்ற கூட்டின்கீழ் குடியரசாக இருக்
கும் நாம் இணைந்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதைப்பற்றிச் சொல்லும்
போதுதான் மறைந்த மகா அறிஞர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்
குறிப்பிட்டார்கள். **Royal Republic** என்று சொன்னார்கள் பார்லிமெண்டில்.
நாம் குடியரசு ஆனால் நமக்கு முடியரசு தலைமை. இப்படிப்பட்டதொரு புதிய
நிலைமை. நமது நாட்டிற்கு என்று ஒரு முறை இங்கே இயற்றப்பட்டிருக்க
வேண்டும். அமெரிக்க முறை ஜனநாயகம் என்றால், அங்கே ஐம்பது
மாநிலங்கள் இருக்கின்றன. ஐம்பது மாநிலங்கள் என்று இருக்கும்போது,
வெளிநாட்டுறவு, ஏற்றுமதி இறக்குமதி, இராணுவம், தபால் தந்தி இவற்
றைத் தவிர வேறு எல்லா உரிமைகளையும் அந்தந்த மாநிலங்களுக்கே

(பி. ப. 5-00)

கொடுத்திருக்கின்றார்கள். கவர்னர் செலக்ஷனில் அல்ல, எலக்ஷனில்
வருகிறார்; மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதைப் போல சோவியத்
யூனியனில் 87 குடியரசுகள் இருக்கின்றன. மத்தியக் கூட்டரசிலிருந்து





ஒப்புதல் பெறாமலே, அத்துடன் ஒத்துப்போக முடியாத கட்டத்தில் பிரிந்து போகிற உரிமைகூட கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த யூனியன்களில் பார்த்தாலும், அந்தந்த மாநிலங்களுக்கு, நன்மை செய்ய அரசாங்கம் அமைக்க அனுமதி இருக்கிறது. அப்படிக் கொடுத்துவிட்டால், மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்ய பூரண அதிகாரம் கொடுக்க வேண்டும் என்ற நிலையிருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக நம்முடைய நாட்டில் எல்லா நாட்டு "இசமும்" இருக்கிறதே தவிர, "இந்திய-இசம்" என்ற ஒன்று இல்லாத காரணத்தால் தான், மாநில அரசாங்கங்கள் சாதாரணமாக டில்லிக்கு தாலுக்கா ஆபீஸ் மாதிரி இருக்கின்றன என்பதை வேதனையோடு நான் கூறிக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே இதற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து மாநில சுயாட்சி என்ற பெயரைக் கொடுக்காது போனாலும், அதிக அதிகாரம் தேவை என்ற நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு மேலவையின் சார்பில் எதிர்க் கட்சித் தலைவர் முன்னோடியாக நிற்க வேண்டும் என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்களுடைய உரையின் பேரில் நீண்ட நேரம் பேச வேண்டுமென்று நான் குறித்து வைத்திருந்தாலும், நேரம் காணாது என்று தலைவரவர்களே ஏற்கனவே தடுத்துவிட்டதால், குறிப்பாக சில தேவைகளை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசிகள் சகிக்க முடியாத அளவுக்கு ஏறிக்கொண்டிருக்கின்றது. சாதாரணமாக யாரும் நாணயமாக தங்களுக்கு வருகிற வருமானத்தை வைத்து மட்டும் மானத்தோடு வாழ்க்கையை நடத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில்லை. ஏதாவது தவறு செய்தாலொழிய, மூன்று வேளை சாப்பிட முடியாது என்ற நிலையிருக்கிறது. அந்த அளவுக்கு விலைவாசி ஏறியிருப்பதைப் பார்த்து, நமது தமிழ்நாடு அரசாங்கம் அதன் அதிகாரத்திற்கு உட்பட்ட பொருட்களின் விலைவாசியை யாவது கட்டுப்பாடு செய்ய வேண்டும். இல்லாது போனால், எங்கெங்கே அத்தியாவசியப் பண்டங்கள் இருக்கின்றனவோ, அவைகளை அதிக விலைக்குக் கொள்முதல் செய்து, தாற்காலிக முறையில், குறிப்பிட்ட காலத்திற்குக் குறைந்த விலைக்கு விற்பனை செய்து மக்களுடைய தேவைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் லாப நஷ்டம் பார்க்காமல், மக்களுடைய தேவை என்ற முறையில், மக்களுக்குச் சேவை செய்கிறோம் என்ற வகையில், எங்கே எந்தப் பண்டம் இருந்தாலும், அதிக விலை கொடுத்தாவது கொள்முதல் செய்து, குறைந்த விலைக்கு மக்களுக்கு விற்க வேண்டும். அப்படிச் செய்தால், அதனால் பெரிய நஷ்டமோ, மோசமோ வந்துவிடாது என்று நான் இந்த ஆட்சிக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நியாய விலைக் கடைகளைத் திறப்பது என்பது மோசமானது மட்டுமல்ல, பார்ப்பவர்களுக்குக் கேலிக்கு இடமாகவும் இருக்கிறது. நியாய விலைக் கடை என்று ஒன்றைத் திறந்துவிட்டால், அடுத்து வைத்திருக்கும் கடை அநியாய விலைக் கடை என்று நாமே ஒப்புக்கொள்கின்ற மாதிரி இருக்கிறது. ஒன்று அநியாய விலைக் கடைகளாக இருப்பதை நியாய விலைக் கடைகளாக மாற்ற வேண்டும், அல்லது நியாய விலைக் கடைகளைத்

திறந்துவிட்டால், இருக்கின்ற அநியாய விலைக் கடைகளைத் திறக்க முடியாமல் தடுத்தாக வேண்டும். அதை விடுத்து, அரசாங்கத் தரப்பில் நியாய விலைக் கடை என்று வைத்து, அதற்குப் பக்கத்தில் அநியாய விலைக் கடை என்று இருக்குமானால், நாமே அநியாய விலைக் கடைகளை அனுமதிப்பதற்கு ஒப்பாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சரியான விலைக் கடை என்று போடலாமா ?

திரு ஆர். சக்தி மோகன் : தலைவரவர்களே, சாதாரணமாக நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ அரிசி ரூ. 1·70 என்றும் அநியாய விலைக் கடையில் ரூ. 2·10 என்றும் சொல்கிறார்கள். நியாய விலைக் கடை அநியாய விலைக் கடைகளுக்குப் பக்கத்தில் இருக்கிறதே, ஆகவே அநியாய விலைக் கடைகளை அரசாங்கம் அனுமதிக்கிறதா என்று மக்கள் கேட்கிறார்கள். ஒரு கடையிலே பொரி கடலை 10 காசுக்குக் கேட்டால், அவன் 15 கடலை எண்ணிக்கொடுக்கிறான். என்ன 15 கடலை கொடுக்கிறாய் என்றால், கலைஞர் ஆட்சி நடக்கிறதல்லவா, அப்படித்தான் இருக்கும் என்கிறான். பொரி கடலைக்கும், கலைஞர் ஆட்சிக்கும் என்ன சம்பந்தம் ? இதற்கெல்லாம் பப்ளிசிடி போதாது. ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டியதெல்லாம் விலை ஏறியிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கத் தரப்பிலோ, முன்னேற்றக் கழகத்தரப்பிலோ தெரிவிக்க போதிய பப்ளிசிடி இல்லை. ஒவ்வொரு கடையிலும், விலை ஏற்றத்துக்குக் காரணம் நாமல்ல, அங்கேயிருக்கிற மத்திய அரசு என்று தெரிவிக்கக் கூடிய விளம்பரம் இல்லை. கடையில் இருப்பவன், தேசியப்பற்றுள்ளவர்களாக இருந்தாலும், வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எண்ணெய் விலை என்ன, ஏன் ஏறியிருக்கிறது என்றால், எதாவது சொல்கிறான். நமது ஆட்சியைப் பற்றிச் சொல்கிறான். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று நமக்குத் தெரிகிறது. நாம் போய் அவனிடம் பேசி, வாதாடும் நிலையில்லை. ஆகவே இதற்கு ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும். அரசாங்கத் தரப்பிலிருந்து விலையேற்றத்துக்கு நாம் காரணமல்ல, உற்பத்தி செய்வது நாம், விலை வைப்பது அவர்கள் என்று சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அதிகமான விலைக்குக் கொள்முதல் செய்தாவது, குறைந்த விலைக்கு விற்க வேண்டும். அப்படிச் செய்தால் நஷ்டம் வந்துவிடாது, மக்களுக்குச் சேவை செய்தது ஆகும் என்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதலைப் போராட்ட வீரர்களைப்பற்றிச் சில வேண்டுகோள்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு' குறிப்பாக ஐ.என்.ஏ. வீரர்களுக்கு இந்த அரசாங்கம் செய்திருக்கின்ற மரியாதைக்கு, சலுகைகளுக்கு விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, மான்யம் பெறுகிறவர்களுக்கு வருமான வரம்பு 100 ரூபாய் என்றிருக்கிறது. அதை எடுத்துவிட்டு, யார் யாருக்கு ஏற்கெனவே மான்யம் வழங்கப்படுகிறதோ, அவர்களுக்கு மீண்டும் தொல்லை கொடுக்காமல், மறு விசா



ரணை வைத்து, அவர்களுக்கு வருமானம் எவ்வளவு வருகிறது என்று கேட்டு, மீண்டும் மீண்டும் தொல்லைகளுக்கு ஆளாக்காமல், I.N.A. வீரர்களை விடுதலைப் போராட்ட வீரர்கள், தியாகிகள் என்று ஒரு முறை அறிவிக்கப்பட்டு விட்டால், அந்த மட்டோடுவிட்டு, நிம்மதியாக அவர்கள் பென்ஷன் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தடுத்து நிஜமான தியாகிகள் தானா, வருமானம் 100 ரூபாயாக இருந்தது தற்போது ஏறியிருக்கிறதா என்று கேட்கின்ற முறையால், கீழ்த்தர கிராம அதிகாரியிடம் இவர்கள் படாத பாடுபட வேண்டியிருக்கிறது. வருமான வரம்பு மற்ற மாநிலங்களில் 250, 350 என்று வைத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கள் தருகிற பென்ஷனுக்கு 5,000 ரூபாய் வருட வருமானம் என்று வைத்திருக்கிறார்கள். 100 ரூபாய் வருமானம் என்பது அன்றைக்கிருந்த விலைவாசியில் வைத்தது. இப்போது விலைவாசி அதிகமாக ஏறியிருக்கிறது. ஆகவே வருமானம் ஏறியிருக்கிறதா என்று பார்க்கும்படி அரசிடமிருந்து உத்தரவு போய், கிராம அதிகாரிகள் அந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தொல்லை கொடுப்பதறகு இடம் வைக்காமல், வருமான உச்ச வரம்பு என்பதைக் கருணை கூர்ந்து நீக்கி விடவேண்டும் என்று டாக்டர் கலைஞர் அவர்களை கரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, I.N.A. வீரர்கள் தியாகிகள் இறந்துபோய்விட்டால், அவர்களுடைய மனைவிமார்களுக்கு மான்யத் தொகையைக் கொடுக்கலாம் என்று ஜி.ஓ. இருந்தது. அதன்படி அந்தத் தொகையைக் கொடுத்து வந்தார்கள். தற்போது 6 மாதங்களுக்கு முன்பிறந்து மனைவிமார்களுக்கு அந்தப் பென்ஷன் கொடுப்பதற்குப் பல தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளையும் நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடி, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். எஸ். தென்னரசு கோரி, கடந்த கூட்டத்தில் நானும் வலியிறுத்திய முதுகுலத்தூர் மறவர் மறுவாழ்வுத்திட்டத்தை விரையில் செயல் படுத்தவேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லி இரண்டு வருடம் ஆகிவிட்டது. அது எந்த விதத்தில் நடை முறையில் இருக்கிறது என்று தெரியவில்லை. முதுகுலத்தூர் மறவர் மறுவாழ்வு (ரெக்ளமேஷன்) திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்டு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் கடந்த கூட்டத்திலேயே கூறிய ஆலோசனை, மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியும், ஹைக்கோர்டின் ஒரு பெஞ்சும் நிறுவ வேண்டும் என்பது. அது மதுரை மக்களுடைய ஆசை மட்டுமல்ல, அமைச்சர்களுடைய ஆசையாகவும் இருக்கும் என்று கருதுகிறேன். மதுரை தென்பாண்டி மண்டலத்தில் ஒரு பெரிய நகரம், தமிழ் நாட்டுக்குத் தலைநகரமாக இருக்கக்கூடிய தகுதி பெற்றது. அங்கே சட்டக் கல்லூரியை வைத்தால், சென்னை நகரத்திலே இருக்கின்ற விவகாரம் குறையும். இங்கே இருக்கின்ற சர்ச்சைகளை நாங்கள் அங்கே கொஞ்சம் மாற்றிக் கொள்ளலாம்.

அடுத்தாற்போல, மதுரையில் ஒரு ஹைக்கோர்ட் பெஞ்சை வைத்தால் அங்கேயிருக்கின்ற சாதாரண ஏழை மக்களின் போக்குவரத்துச் செலவைத் தவிர்க்க முடியும். அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எல்லா உறுப்பினர்களின் ஆசை ஒன்றை என் மூலமாகத் தெரிவிக்கிறார்கள். சம்பளம் என்று உறுப்பினர்களுக்குக் கொடுப்பது 250 ரூபாய். படி என்று 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 150 ரூபாய் உயர்த்தி, 250 ரூபாய் ஆக்கினால், உறுப்பினர்களுக்கு வசதி செய்ததாகும். சாதாரண அரசாங்க சிப்பந்திக்கு, இன்ஷூரன்ஸ் கம்பெனியில் இருக்கக்கூடிய கடைநிலை ஊழியருக்கு 450, 550 ரூபாய் சம்பளம் என்றிருக்கிறது. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுத்தால் தான், அவர்கள் தொல்லை இல்லாமல் பொதுத் தொண்டு செய்ய முடியும். ஏற்கெனவே தினப்படி 25 ரூபாய் என்றிருந்ததை 35 ரூபாய் என்று ஆக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதைப் போலவே இந்தப் படியையும் 150 ரூபாய் அதிகரித்து, 250 ரூபாய் என்று ஆக்கி, மொத்தம் 500 ரூபாய் கிடைக்கச் செய்ய வேண்டும். இதர மாநிலங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு 20,000 கிலோ மீட்டர் வரை ரயிலில் போக அனுமதித்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள், வேறு மாநிலங்களில் உறுப்பினர்களுக்கு எவ்வளவு சலுகை கொடுக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அதே போன்று நமது உறுப்பினர்களுக்கும் போதிய அளவுக்குக் கொடுத்தால், அவர்கள் இன்னும் அதிகமாக பொதுச் சேவைகளைச் தொல்லையில்லாமல் செய்ய முடியும்.

(பிற்பகல் 5–10.)

சென்ற கூட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு கணபதி அவர்கள் கேட்டுக்கொண்டபடி, ஹாஸ்டல்களிலே வாடகை இல்லாமலே அறைகளை உறுப்பினர்களுக்குக் கொடுக்கலாம். அதிலே ஒன்றும் தவறில்லை. அதிலே கெஸ்டுகள் ஏகப்பட்ட பேர் வருகிறார்கள். நீங்கள் மட்டும் இருப்பதற்கு உத்தரவாதம் கொர்டுத்தால், நாங்கள் இலவசமாகத் தருவதுபற்றி யோசிக்கலாம் என்று முதல்வர்கள் கூறினார்கள். அதுமாதிரி நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு உறுப்பினர்கள் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டு யார் கையெழுத்துப் போட்டுக்கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமாவது அந்த அறைகளை இலவசமாகக் கொடுத்துவிடலாம். அவர்கள் அதை பத்திரமாகப் பார்த்துக்கொள்வார்கள். ஆஸ்டலில் திருட்டுப் போய்விட்டதென்று மாண்புமிகு உறுப்பினர் ஜானிபாய் அவர்கள் கூறினார்கள். அப்படி திருட்டுக்கொடுத்தவர்களிலே நானும் ஒருவன். ராத்திரி இரண்டு, இரண்டரை மணி அளவில் என்னுடைய சட்டையையும் கம்பி போட்டு எடுத்திருக்கிறான். அந்தச் சட்டையிலே பணம் ஒன்றும் நான் வைக்கவில்லை. இரண்டு புதிய பேனாக்கள் மட்டும் இருந்தன. கீழே சென்று பார்த்ததில் சில காகிதங்கள் மட்டுமே கிடந்தன. போலீஸ் ஸ்டேஷனில் சென்று சொல்லிவிட்டு வந்தேன். முந்தாநாள் இரவு ஏதோ பிடித்துவைத்திருப்பதாகச் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று பார்த்தால்தான் தெரியும், பேனாவையும் சட்டையையும். என்னைத்தவிர வேறுயாரும் தங்கமாட்டார்கள் என்ற உத்திரவாதம் கொடுக்கக்கூடிய உறுப்பினர்களுக்காவது ஹாஸ்டல் அறைகளை தங்குவதற்கு இலவசமாகக் கொடுத்தால் பிறரும் அதற்குக் கட்டுப் படுகிறேனென்று உடன்பட்டு வருவார்கள். ஆகவே, இந்த வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.





இன்னும் ஒன்று. நமது பெருமதிப்பிற்குரிய பாஸ்கர சேதுபதி அவர்களின் சிலையை விவேகானந்தா பாறையில் வைக்க வேண்டுமென்று கடந்த கூட்டத்திலேயே கூறியிருக்கிறேன். அவர்கள்தான் விவேகானந்தருக்கு முதன்முதலாக உதவி செய்தவர்கள். பல மன்னர்கள் இந்தியாவிலே விவேகானந்தருக்கு உதவி செய்திருக்கிறார்கள். பாஸ்கர சேதுபதிக்குமட்டும் அங்கே சிலை வைத்தால், மற்ற மன்னர்களும் கேட்பார்கள் என்று சொல்லப்படுகிறது. விவேகானந்தர் நரேந்திரராக இருந்து, விவேகானந்தராக மாறிய பிறகு, மற்ற மன்னர்கள் உதவியிருக்கலாம் ஆனால் நரேந்திரரை விவேகானந்தராக மாற்றியதே பாஸ்கர சேதுபதி அவர்கள்தான். பாஸ்கர சேதுபதி அவர்கள் இல்லாமல் போயிருந்தால் நான் இல்லை என்று விவேகானந்தர் அவர்களே தம்முடைய புத்தகத்திலே கூறியிருக்கிறார்கள். பாஸ்கர சேதுபதி அவர்கள் தமக்கு எத்தனையோ பெரிய பெரிய உதவியெல்லாம் செய்ததாகவும் விவேகானந்தர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, விவேகானந்தர் பாறை திறப்பு விழாவிற்கு, முதலமைச்சர் அவர்கள் சென்றிருந்தபோது, காலப்போக்கில் அந்தச் சிலை வைக்க ஏற்பாடு செய்வோம் என்று கூறியதாக எனக்கு நினைவு. அதை அமுல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கோரி, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

திரு ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து முன் மொழிந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் அறிந்த வரையில், மேதகு ஆளுநர் உரையிலே இந்த ஆண்டு உரை முற்றிலும் ஆக்க வழிப்பட்ட முறையிலே அமைந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு காண்கின்றேன். தமிழர் சமுதாயத்தின் வாழ்க்கையிலே ஒவ்வொரு கோணத்தையும் இந்த அரசு அணுகுகின்றது. ஒவ்வொரு அம்சத்தையும் இந்த அரசு அணுகுகின்றது. ஒவ்வொரு தேவையையும் உரிய காலத்தோடு நிறைவேற்றி வைக்க இந்த அரசு ஆசைப்படுகிறது என்பது அவர்களது உரை முழுவதையும் படித்துப்பார்த்து முடித்தபிறகு, நமக்கு நன்கு புலனாகின்றது. அவருடைய உரையிலே கடந்த காலத்தில் அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களைப் பற்றிய விமர்சனமாகவும், இனி நிறைவேற்ற இருக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தும் வகையிலாகவும் அவரது உரை அமைந்திருக்கின்றது. அந்த உரையிலே முக்கியமாக ஒன்பது திட்டங்களை மத்திய அரசின் திட்டங்களாக ஏற்க வேண்டும் என்று அவர் கோரியிருக்கின்ற குறிப்பு இந்த அவையில் கட்சி வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று என்பதில் ஐயப்பாடு இல்லை. அப்படியே ஒவ்வொரு அம்சத்திலும் ஆளுநர் அவர்கள் மத்திய அரசுக்கு விடுத்துள்ள வேண்டுகோள்களும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே பிரச்சினைகளை அணுகுமுறையில் உள்ள வேறுபாடுகளை எடுத்துக்கூறுவதும் கூட, ஆக்க வழியில்தான் அமைந்திருக்கின்றன. அவர்களது உரையிலே எனக்கு மிகவும் கவர்ச்சிகரமாகவும், இந்த நாட்டில் உள்ள கடைசி குடிமகன்கூட மகிழ்ச்சி அடையக்கூடியதாகவும் இருக்கின்றது, உணவுத் துறையில் இந்த ராஜ்யம் உபரியாக இருக்கிறது, தேவைப்படுகிற மாநிலங்களுக்கு வழங்கக்கூடிய

நிலையிலும் கூட வளர்ந்திருக்கிறது என்று சொல்லியிருப்பது. இது ஒரு சாதாரண மாறுதல் அல்ல. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலை ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார் அவர்கள் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்புக்கு வந்தபோது, இந்த ராஜ்யத்தின் உணவு நிலை எப்படி இருந்தது என்பதை கொஞ்சம் நாம் நினைவில் கொண்டு பார்க்க வேண்டும். அவர்கள் பொறுப்புக்கு வந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று எப்படி இருக்கிறது என்பதையும் ஒப்பிட்டு நோக்கிப் பார்க்க வேண்டும். ஏழு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள இந்த மகத்தான மாறுதலுக்கு என்ன காரணங்கள் என்பதையும் நாம் ஆழ்ந்து ஆராய வேண்டும். முதல் காரணம், பதுக்கல்களை ஒழிக்க, பதுக்கல்காரர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்கவே இல்லை. இரண்டாவது காரணம், கள்ளத்தனமாகக் கடத்துகின்ற பொருளைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு கொஞ்சமும் தயக்கம் இல்லாமல், தாட்சண்யம் இல்லாமல், நடவடிக்கை எடுத்தது. மூன்றாவது காரணம், உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள கடைசி சாதனத்தையும், நீர் துறை, தரிசு நிலம், உழைப்பு, உழைப்பாளிகளுக்கு இருக்கின்ற ஊதியம் சம்பந்தமான போராட்டம் ஆகிய வற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி வளர்த்து உற்பத்தியைப் பெருக்கியது இன்று உபரித்தன்மை அடைந்திருப்பதற்குக் காரணம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதுவும் இதே நேரத்தில் பிற மாநிலங்களில் நிலை என்ன? மத்திய அரசோடு, உறவு கொண்ட, கட்சித் தொடர்பு உள்ள மாநிலங்கள் மத்திய அரசிலும் நிதியமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் இவர்களை அனுப்பி ஓரளவிற்குச் செல்வாக்கு பெற்றுள்ள மாநிலங்கள் இந்த உணவுப் பிரச்சினையிலே எப்படித் தடுமாறுகின்றன, என்ன நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஒப்பு நோக்குகிற பொழுது, மத்திய அரசோடு கட்சி வேறுபாடு உள்ள இந்த மாநிலம், துர்திர்ஷ்டவசமாக மத்தியில் ஆள்வோருடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு வாய்ப்பற்ற இந்த மாநிலம், தன் காலிலே தான் நின்று, தன் திறமையையே தான் நம்பி, தன் மக்கள் உழைப்பையே ஊக்குவித்து, இந்தப் பற்றுக்குறையைத் தீர்த்து உபரி ஆக்கியிருக்கிறது என்றால், இதற்கு நான்கு கோடி மக்களும் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து விழா எடுத்துக் காட்டினாலுங்கூட, ஒரு நன்றிக்கு அறிகுறியாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். எந்தத் துறையில் மாநிலத்திற்கு முழுப்பொறுப்பு இருக்கிறதோ, எந்தத் துறையில் மாநிலத்தில் மத்தியம் தலையிடாத நிலை இருக்கிறதோ, அதிலே மாநில அரசு வெற்றி காண முடியும் என்பதற்கு இந்த உணவுப் பிரச்சினையில் இந்த மாநிலம் அடைந்துள்ள வெற்றியே மிக முக்கிய உதாரணமாகும். மாநில சுயாட்சிக்கு இதுவே ஒரு சரியான எடுத்துக்காட்டு என்றுகூட நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் அது மட்டும் போதாது. மத்தியிலே ஆளும் கட்சியினர் மாநிலத்திலே இருப்பதாலே கட்சிக் கட்டுப்பாடு தடங்கலாகவும் வருகிறது. இந்த உணவுப் பிரச்சினையிலே, அரிசி வாணிகத்தையோ அல்லது கோதுமை வாணிகத்தையோ அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று மத்தியில் உள்ள ஆளுங்கட்சி சொல்லி அரசைக் கட்டுப்படுத்த, கட்சிக் கட்டுப்பாடு காரணமாக செயல்படுத்திய மாநிலங்களிலே என்ன விளைவு ஏற்பட்டது, எவ்வளவு அராஜகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் நினைவில்





கொண்டு பார்க்க வேண்டும். அதே நேரத்தில் இங்கே உள்ள கட்சி மத்தியில் உள்ள ஆளுங்கட்சிக்கோ, மத்திய ஆட்சிக்கோ, கட்சிக் கட்டுப்பாடு காரணமாக கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லாது இருந்ததனால், அவர்கள் அரிசி வாணிகத்தை அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று சொன்னபோது, முதல்வர் அவர்கள் மிகவும் நாகரீகமாகவும், நாசுக்காகவும் அதை மறுத்துவிட்டதன் விளைவாக, இன்று உணவுத் துறையிலே அராஜகமும், குழப்பமும் ஏற்படாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், வேறு கட்சியினுடைய ஆட்சி நடைபெறுவதில் உள்ள லாபம் உணவுப் பிரச்சினையிலே நமக்கு நன்றாகத் தெரியும் என்பதை நாம் உணர்கிறோம். இதற்கு மற்றொரு காரணம், மேட்டுக்குடி மக்கள், மிராசுதார்கள், ஆதிக்கம் புகுந்திருக்கிற ஒரு கட்சிக்கு இது சாத்தியம் இல்லாது இருந்தது. அது இல்லாத ஒரு கட்சிக்கு இது சாத்தியமாகி இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். திறமையிலே வேறு எந்த மாநிலமும் இந்த மாநிலத்திற்குக் குறைந்தது என்று நான் சொல்ல மாட்டேன்; அல்லது மக்களுடைய உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே காட்டும் அக்கறையில் இந்த மாநிலத்திற்கு வேறு மாநிலம் குறைந்தது என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு கட்சி சாமான்யர்களால் நடத்தப்படுகிறபோது, ஒரு கட்சி சாமான்ய அடித்தள மக்களாக இருந்து வளர்ந்த தலைவர்களைக் கொண்டு ஆட்சிக்கு வருகிறது என்பதைப் பார்க்கும்போதும் மகத்தான மாறுதலுக்கு இந்தியாவுக்கே ஒரு முன்னோடியாக இந்த மாநிலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திருப்பது, வேறு எந்தப் பிரச்சினையையும் விட, இந்த உணவுப் பிரச்சினையைச் சமாளித்து இருக்கிற முறையிலே மிக நன்றாகத் தெரிகிறது. இந்த ஆட்சி மாறினால், இந்த நிலைமையும் மாறும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். மற்றொன்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, மதுவிலக்கிற்கு மத்திய அரசு ஆக்க வழியில் பொருளாதாரத் திட்டத்தில் உதவி புரியவில்லை என்ற குறைபாட்டை எடுத்துக் காட்டியிருப்பது. இந்த அரசு மதுவிலக்கை இடையிலே கைவிட்டதை தயவு தாட்சண்யமின்றி கண்டித்தவர்களிலே நானும் ஒருவன். அப்படி இருந்தாலும், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, என்பதைப்போல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, இடையில் கொஞ்சம் தடுமாறினாலுங்கூட, பிறகு திண்டுக்கல்லில் ஏற்பட்ட ஒரு அதிருப்தியின் விளைவாக, மக்களுடைய கருத்துக்கு, தேர்தலுக்கு இது தீர்ப்பாக இல்லை என்றாலுங்கூட, இதுவும் ஒரு காரணம் என்பதை ஒப்புக்கொண்டு உணர்ந்து, இதிலே அந்தஸ்துப் பிரச்சினையைப் பார்க்காமல், திரும்பவும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டி,—இதுதான் முதன்முறையாகப் பேசுவது,—அதற்காக நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதே நேரத்தில் ஏன் இதற்கு மத்திய அரசு உதவி புரியமறுக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. இந்த நாடு முன்னேறுவதற்கு அயல்நாடுகள் அள்ளிக் கொடுக்கின்றன உணவுப் பிரச்சினையிலே, இந்த நாடு முன்னேறுவதற்கு அயல்நாடுகள் அள்ளிக்கொடுக்கின்றன நிதித் துறையிலே, இந்த நாடு முன்னேறுவதற்கு அயல்நாடுகள் உதவி புரிகின்றன, அறிவியல் துறைகளிலே, இந்த நாடு முன்னேறுவதற்கு அயல் நாடுகள் அள்ளிக் கொடுக்கின்றன பண்டங்களை, படைகளை. ஆனால் மாநிலங்களிலே மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர மத்தியம் பொருள் தர மறுப்பதை என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. அடிப்படைக் கொள்கை என்ற

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 சனவரி 29

தத்துவத்தில், இது சேர்க்கப்பட்டதன் காரணம், இந்தியா முழுதுக்கும் இது பொது தர்மம், சோஷல் ரிஃபார்ம் என்று நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். சமுதாய சீர்திருத்தத்திற்கு ஒரு மாநிலத்தைவிட மத்தியில் பொறுப்பை வைத்துக் கொள்வது நல்லது. எப்படி செக்யூலர் ஸ்டேட் மத்திய ஆட்சியின் பொறுப்பில் வரவேண்டி இருக்கிறதோ, எப்படி குடும்பக் கட்டுப்பாடு மத்திய ஆட்சியின் பொறுப்பில் வரவேண்டியிருக்கிறதோ, அப்படியே மதுவிலக்கும்கூட மத்திய ஆட்சியின் பொறுப்பில் வர வேண்டியிருக்கிறது. அதில் சில பத்திரிகைகள் எழுதின. மாநில சுயாட்சி கேட்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் இதை மத்திக்கு விட விரும்புகிறது என்று. மாநில சுயாட்சி கேட்பதிலே தமிழரசுக் கழகத்திற்குப் பொறுப்பு உண்டு. ஆதலாலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 5–20.]

அவர்கள் மாநில சுயாட்சியைப் புரிந்துகொண்ட லட்சணம் அப்படி. மாநில சுயாட்சி என்னும்போது, "மாநிலம்" என்ற தலைப்பைக் கொண்டாலும் கூட, அனைத்து மாநிலங்களுக்கும் ஏக காலத்தில் சுயாட்சி வழங்க வேண்டுமென்று தான் கேட்கிறோமே தவிர, தமிழகத்திற்கு மட்டும் பிரித்துக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. ஆகவே இந்த மதுவிலக்கை அமுல்படுத்துவதிலே மைய ஆட்சி பொறுப்பு ஏற்க வேண்டும். அதுவும் காந்தியடிகளோடு தோளோடு தோள் நின்றவர்கள்; காந்தியடிகளுடைய மடியிலே தவழ்ந்து விளையாடியவர்கள்; காந்தியடிகளுடைய பள்ளியிலே பயின்று பாடம் படித்தவர்கள் மத்தியில் இன்று இருக்கிறார்கள். அவர்களுக்கு இதில் அக்கறை இல்லை. தமிழக அரசு இதில் அக்கறை கொள்கிறதென்கிறபோது, தேசியப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கொஞ்சம் வேதனைகூட அடைகிறேன் என்று சொல்லிக்கொள்ளத் தயங்கப்போவதில்லை. இன்னொன்றையும் சொல்லப் போகிறேன். ஸ்தாபன காங்கிரசில் பெரும் செல்வாக்குள்ள தலைவர், பெரும் தலைவர் காமராஜருக்கு மதுவிலக்கில் உள்ள அக்கறையை நாம் சந்தேகிக்க முடியாது. நான் எப்படியோ, அப்படியேதான் அவரும். அகில இந்தியக் கட்சியாகிய, அது, மற்ற மாநிலங்களில் இதுபற்றி அக்கறை காட்டவில்லை. தமிழ் நாட்டில் மறியல் போராட்டமே நடத்தக்கூடிய அளவுக்கு முன் வந்ததைப் பார்க்கிறபோது, நான் வியப்பு அடைகிறேன். இவ்வளவு அக்கறை காட்டுகிற ஸ்தாபன காங்கிரஸ், பாண்டிச்சேரி தேர்தலிலே மதுவிலக்கை ஒரு கொள்கையாக வைத்துப் போட்டியிடுமானால், வெற்றி தோல்வி எதுவானாலும், சத்தியத்தின் பாதையில் நின்றதற்காக இந்த தேசமே அதைப் பாராட்டத்தான் செய்யும். ஒரு ஒற்றைசாண் நிலம்; மூன்று எம்.எல்.ஏ. தொகுதிகூட இல்லாத பாண்டிச்சேரியில் இவ்வளவு ஜீவாதாரமான காந்தீயக் கொள்கையை ஒதுக்கி வைத்து, அந்தத் தேர்தலில் மதிப்பிற்குரிய தலைவர் காமராஜர் அவர்கள் இறங்குவதைப் பார்க்க வியப்பாகத்தான் இருக்கிறது. பருவம் எப்படியெல்லாம் நாட்டிலே மாறுகிறது என்பதைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். மற்றொன்றையும் நான் இங்கு சொல்லியாக வேண்டும். மதுவிலக்கிலே, மத்திய அரசின் நிதி உதவி தேவையென்று இந்த மாநில அரசு கேட்பது வரவேற்கத்தக்க ஒன்று. உறுதியாக அதிலே ஊன்றி நின்றுப் போராட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.



1974 சனவரி 29] [திரு. ம. பொ. சிவஞானம்]

அடுத்து, இலங்கை இந்தியர் பிரச்சினைபற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 57,000 பேர் ஆண்டொன்றுக்கு வரப் போகிறார்கள். என்ன துரதிருஷ்டமோ? இந்தியா சுதந்திரம் பெற்றதால், தமிழர்களுக்கு நன்மைகள் குறைவு; கேடுகள் மிகுதி என்று ஆகி விட்டது. உழைப்புக்கு அழைப்புக் கொடுத்த நாடுகளிலெல்லாம் ஓடி உழைத்தான் தமிழன். கால்டுவெல், பியர்சென் போன்றவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். உலகத்துக்கெல்லாம் ஓடி உழைத்தவன் தமிழன் தான்; காடாகக் கிடந்தவற்றையெல்லாம் நாடாக மாற்றியவன் தமிழன் தான்; அட்டையோடும், அரவணையோடும், புலியோடும், கரடியோடும் போராடி, உயிர் கொடுத்து இலங்கையை வளப்படுத்தியவன் தமிழன்; பர்மாவை வளப்படுத்தியவன் தமிழன்; அங்கேயெல்லாம் இப்போது வெளியேற்றுகிறார்கள். வங்க தேசப் பிரச்சினையில், மேற்கு வங்கம் காட்டிய அக்கறை டெல்லிக்கு நியாயமாகப்பட்டது. ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இந்தியத் தமிழன் காட்டுகிற அக்கறை மாகாண வெறியாகப்படுகிறது. ஏன் என்று புரியவில்லை. இப்போது இலங்கைப் பிரதமர் வந்திருக்கிறார், டெல்லியிலே பேசுகிறார். எப்படி பேச்சு முடியுமோ, எனக்குத் தெரியாது. அவர்கள் இந்தியர் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது, இங்கிருந்து யாரையும் அழைப்பதில்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரியும். முன்பு ஒரு முறை சாஸ்திரியோடு பேசுகிறபோது, அப்போது அமைச்சராக இருந்த திரு இராமையா அவர்களை அழைத்து, அருகில் வைத்துக்கொண்டு, அவரைக் கேட்டு, கலந்து பேசினார்கள். 2 முறை இலங்கைப் பிரதமர் வந்தும்கூட, அதுமாதிரி இதுவரை நடக்கவில்லை. ஏனென்று எனக்கு விளங்கவில்லை. இந்த வழியாக பிரதமர் இலங்கைக்குப் போகிறார், இந்தியர் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக. அப்போது அவரை இங்கே வரவேற்ற முதலமைச்சர் அவர்களிடம் என்ன என்றுகூட கேட்கவில்லை. இதை ஸ்தாபன காங்கிரசின் தலைவராக இருந்த திரு அசோக் மேத்தா அவர்களே கண்டித்திருக்கிறார்கள். "இலங்கை சென்ற பிரதமர் திருமதி இந்திரா அவர்கள் தமிழ் நாடு முதலமைச்சரோடு இதுபற்றிக் கலந்து பேசியிருக்க வேண்டும், பேசாதது தவறு" என்று அவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக, அங்கிருந்து வருகிற அகதிகளுக்காகச் செலவழிப்பதில், முழுப் பொறுப்பையும் மத்திய அரசு ஏற்க வேண்டும். அவர்கள் ஒப்பந்தத்திற்கு முழுப் பொறுப்பு ஏற்கிறார்கள்; ஆலோசனைக்குக் கூட நம்மை அழைப்பதில்லை. கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு, நிவாரண வேலைக்கு உதவி அளவோடு நின்று விட்டு, முழுப் பொறுப்பையும் நம் தலையில் சுமத்துகிறார்கள். இதுதான் தேசிய ஒருமைப்பாடு என்றால், ஆண்டவன் இந்தத் தேசிய ஒருமைப்பாட்டிலிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்றுக என்று பிரார்த்திக்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. உலகத் தமிழ் மாநாட்டுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசை அழைக்கவில்லை. அதற்காக முதல்வரவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். என்னைத் தனிப்பட்ட முறையில் அழைத்தார்கள். வருகிறேன் என்று சொல்லியும், கடைசியில் விட்டுவிட்டார்கள், நான் அரசியல் வாதியாக இருக்கிற காரணத்தால். அந்த மாநாட்டை நடத்தியவர்கள் அரசியல் வாடையே இல்லாமல் நடத்த வேண்டுமென்று இலங்கை அரசு விரும்பு

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 சனவரி 29

றது என்பதற்காகத்தான் ஒரு தவறு செய்து, இந்த அரசை அழைக்கவில்லை. என்னைப் போன்ற அரசியல்வாதிகளை அழைக்கவில்லை. என் போன்றவர்களை ஒதுக்கிவைத்து, இலங்கை அரசு திருப்திப்பட நடத்தியும் கூட—அந்த மாநாடு 7 நாட்கள் நடந்தது. ஒரு குழப்பமும் இல்லை. மாநாட்டு நடவடிக்கைகளில் அரசியல் கலக்கவே இல்லை. சென்றவர்கள் எல்லோரும் புலவர்கள்தான். வேறு யாருமில்லை.—எல்லாம் முடிந்து; 7-ஆம் நாள் வந்தவர்களுக்கு வரவேற்பு சொல்லி, வழி அனுப்புவதற்கு நடத்திய கூட்டத்தில், "ஜாலியன்வாலாபாக்" நடந்தது. என் அப்படி அந்தப் பெயரால் அழைக்கிறேன் என்றால், கட்டிடத்தில் நடந்த கூட்டத்தில் முன் எச்சரிக்கையின்றி போலீசார் புகுந்திருக்கிறார்கள். முன் எச்சரிக்கை இல்லாமல், முள் வேலியில் மின்சாரத்தைப் பாய்ச்சியிருக்கிறார்கள். இது இலங்கைப் பிரச்சினையாக இருந்தால், இங்கே அதை எடுத்திருக்கவே மாட்டேன். எனக்கு அதில் கட்டுப்பாடு உண்டு. நான் தமிழன் மட்டுமல்ல; இந்தியனும்கூட. இலங்கை—இந்திய உறவு, இந்திய நாட்டின் நன்மைக்குத் தேவை என்று நம்புகிறவன். இன்னொரு வகையில் சொன்னால், அயல்நாடு எதுவும் இலங்கை வழியாகத் தமிழ் நாட்டிற்குள் புகாமல் இருப்பதற்கு இந்திய—இலங்கை உறவு தமிழ் நாட்டிற்குக்கூட தனித்தேவையென்று ஒப்புக்கொள்வேன். அது கெடுவதற்கு உதவி புரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். அங்கு நடந்த அந்த விஷயம் சர்வ தேசப் பிரச்சினை. முதல்வரவர்கள், மத்திய அரசு அதைப்பற்றி விசாரித்து தகவல் தர வேண்டுமென்று அறிக்கை விட்டார்கள். அதைப் பாராட்டுகிறேன். இன்னொன்றையும் முதலமைச்சரவர்களுக்கு சொல்கிறேன். அது சர்வ தேசப் பிரச்சினை. தமிழ் அவமதிக்கப்பட்டிருக்கிறது. அது யாழ்ப்பாணத்து மக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல. உலகம் பூராவுமிருந்து வந்த தமிழ் புலவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை அது. அதற்கு விசாரணை போட்டிருக்கிறார்கள். அவர்கள் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருதி விசாரணை போட்டிருக்கிறார்களே ஒழிய, சர்வ தேசப் பிரச்சினையாகக் கருதி விசாரணை போடவில்லை. முதல்வரவர்கள் அறிக்கை விட்டதோடு அன்றி, இன்னொருமுறை பிரதமரவர்களுக்கு எழுதி, அதுபற்றித் தகவல் பூராவும் தெரிய வேண்டுமென்று கேட்க வேண்டும்.

அண்மையில் தமிழகம் வந்த இலங்கைப் பிரதமரை நம்முடைய முதல்வரவர்கள் போய் விமான நிலையத்தில் வரவேற்றிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பத்திரிகையில் நான் பார்த்தேன். டெல்லிக்கு வழி அனுப்பினார் என்றும் பார்த்தேன். அது உயர்ந்த பண்பாடுதான் என்று எனக்குப் புரிகிறது. ஆனால், அதைப் பாராட்ட என்னால் முடியவில்லை. அதே நேரத்தில் அதைக் குறை சொல்லவும் துணிவில்லை. அதை இத்தோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, மற்றொன்றை நாம் இங்கே பார்க்கிறோம். இங்கே கல்வி அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் புலவர் பட்டம்பற்றிய பிரச்சினை வந்தது. புலவர் பட்டயத்தைப் பட்டமக்குவது பற்றிய பிரச்சினை வந்தது. அப்படி ஆக்குவதில், உத்தியோகத்துறைக்கு உள்ள சங்கடங்களைக் கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்களாக வருவதற்குள்ள சங்கடங்களை அவர்கள்



1974 சனவரி 29] [திரு. ம. பொ. சிவஞானம்]

சொன்னார்கள். நான் திரும்பவும் கல்வி அமைச்சரவர்களையும், முதலமைச்சரவர்களையும் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் நட்பு முறையிலேயும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இதை உத்தியோகப் பிரச்சினையோடு தொடர்பு படுத்திவிடாதீர்கள். இதை ஊதியப் பிரச்சினையோடு தொடர்பு படுத்திவிடாதீர்கள்; இதை உத்தியோக உயர்வுப் பிரச்சினையோடு தொடர்புபடுத்திவிடாதீர்கள். இது தமிழ் நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை. தமிழாசிரியர்களின் உத்தியோகப் பிரச்சினையல்ல. தமிழ் மொழியின் உரிமைப் பிரச்சினை. தமிழ் நாட்டிலே, தமிழிலே படித்தவன் ஒரு பட்டதாரிக்குச் சமமாக இருக்க முடியாது இப்போது. முன்பு இருந்த உத்தரவுகளைச் சொல்கிறார்கள். அதை மாற்றுவதற்காகத்தானே உங்களை அழைத்தோம். என்னைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தை இங்கே அழைத்தது, தமிழ் மொழிக்கு எந்தக் கோணத்தில், எந்தக் குறை இருந்தாலும்கூட, அதைத் தூக்கி எறியத் துணை புரியும் கட்சி என்ற காரணத்தால்தான். ஆகவே புலவர் பட்டயத்தை, பட்டதாரிக்குரிய தகுதியாக மாற்றுவதற்கு, யார் தடையாக இருந்தாலும், எது தடையாக இருந்தாலும், அதைத் தகர்த்து விரைவில் மாற்ற வேண்டும். உங்களுடைய தமிழ்ப்பற்றுக்கு, இந்த ஆட்சியின் தமிழ்த் தொண்டுக்கு இந்தச் சின்ன பிரச்சினை ஒரு உரைகல் என்பதுதான் என்னுடைய எண்ணம். அதை இத்துடன் விட்டாலே போதும். நீங்கள் செய்யக் கூடியவர்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மற்றொன்றைச் சொல்ல விரும்புகிறேன். எல்லைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், அது என்றோ முடிந்துவிட்டதென்று எண்ணியவன் நான். இந்தியாவிலேயே அதை அதிகப்படுத்தக்கூடாதென்ற நல்லெண்ணம் உடையவன். ஆனால் இப்போது என்ன நடக்கிறது? பெல்காம் பிரச்சினை விவாதத்திற்கு வந்திருக்கிறது. எஸ்.ஆர்.சி. ரிப்போர்ட்படி தீர்ந்துவிட்ட ஒன்று. திரும்பவும் கன்னடத்திற்கும், மகாராட்டிரத்திற்கும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அது மட்டுமல்ல. நேற்று பத்திரிகையில் பார்த்தேன். கன்னடத்தின் முதலமைச்சர் திரு. அர்ஸ் கேரள முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். காசர்கோடு பற்றிப் பேச வேண்டுமென்று எழுதியிருக்கிறார். ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் அறிக்கையை இப்போது எடுத்துப் பார்த்தேன். அந்தக் காசர்கோடு பிரச்சினையை முடித்து, அவர்கள் கொடுத்துவிட்டார்கள். இது வரையில் அது பிரச்சினையல்ல. இப்போது காசர்கோடு பிரச்சினையை எடுத்து, அதுபற்றிப் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வேன். வம்புக்கு அவர் போகிறார், இவர் போகிறார் ஆகவே, நீங்களும் போங்கள் என்று சொல்லவில்லை. இந்தப் பிரச்சினை வேறு எங்கும் தீர்க்கப்பட்டதைவிட இங்கு தவறாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலே யெல்லாம் தாலூகா அடிப்படையிலே தீர்க்கப்பட்டது அல்லது பிர்க்கா அடிப்படையிலே தீர்க்கப்பட்டது. இந்த ராஜ்யத்தின் எல்லைப் பிரச்சினை தாலூக்கா அடிப்படையில் தீர்க்கப்பட்டிருக்குமானால், பொன்னேரி தாலூக்காவில் சத்தியவேடு பிர்க்கா நம்மிடமிருந்து போயிருக்காது. பிர்க்கா அடிப்படையில் தீர்க்கப்பட்டிருந்தால், தென் திருவிதாங்கூரிலிருந்து நெய்யாற்றங்கரையின் தென்பகுதி நமக்கு வந்திருக்க வேண்டும். சித்தூர் தலைநகரமே நமக்கு வந்திருக்க வேண்டும்.

திருப்பதி அருகாமையில் நாம் போயிருக்க வேண்டும். புத்தூர் இன்றைக்கு நமக்கு வந்திருக்க வேண்டும். இப்படி பிர்க்கா அடிப்படையில் போகாததால், பல பிர்க்காக்களை நாம் இழந்தோம். தாலுக்கா அடிப்படையில் போகாததால், சத்தியவேடு பிர்க்காவை இழந்தோம். இந்தியாவிலேயே, இந்த மாநிலம் ஒன்றில்தான் கிராம அடிப்படையில் எல்லைப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் வேறு விதமாக இருப்பதால், தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினையைப்பற்றி என் திருப்பிக் கேட்கக் கூடாது என்று முதல்வரவர்களுடைய கவனத்திற்கு வைக்கிறேன். இன்னொன்றையும் சொல்கின்றேன். அதைக் கேட்காமல், விடுவதிலும்கூட தர்மம் இருக்கலாம். ஆனால் ஒன்றை நினைப்பில் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் அதனால் வழங்கிவிட மாட்டார்கள். நம்முடைய எல்லையோரப் பகுதிகள் பலவற்றைக்கேட்டு விரைவில் கிளர்ச்சிகள் தொடங்கப்பட இருக்கின்றன. அது நீலகிரியாக இருக்கலாம்; கோயம்புத்தூராக இருக்கலாம். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி நாம் அரைகுறையாக விட்டுள்ளதையும் நாம் எடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் நான் முதல்வர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

(5-30 பிற்பகல்)

ஆளுநர் அவர்கள் உரையிலே, விலைவாசிப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். நிதிக் கமிஷன் பங்கீட்டுமுறைபற்றிச் சொன்னார்கள். இதைத் திரும்பவும் நான் சொல்லுகின்றேன். இது மாநில சுயாட்சிப் பிரச்சினை. இன்று மாநில சுயாட்சிப் பிரச்சினையைப்பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. பின் வேறு ஒரு நாளைக்கு வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி வைத்துக்கொள்கின்றேன். மாநில சுயாட்சி என்றால், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என் பயப்படுகிறார்கள் என்றுதான் எனக்குப் புலப்படவில்லை. யாராக இருந்தாலும் சொல்கின்றேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கூடத் தெரியும் நன்றாக. 25 ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் இருந்த காலத்திலே இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கை துவக்கிய பிறகு, நான் 8 ஆண்டுக் காலம் காங்கிரசிலேயே இருந்தேன். அந்த 8 ஆண்டுக் காலத்திலே நான் மேலவை உறுப்பினராகவும் இருந்தேன். மாநகராட்சி ஆளுநனாகப் பதவி கொடுக்கப்பட்டு பாராட்டப் பெற்றேன். பிரச்சாரத்துறையில் முன்னணியில் நின்றேன். அப்போது இது தேசத் துரோகமானது, தேசத்திற்கு அபாயகரமானது என்றோ, பிரிவினைப் போக்கானது என்றோ நான் என் காதில் கேட்டதில்லை. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் கேட்க வந்துவிட்டது என்பதற்காக இந்த வாதத்தை எழுப்புவது சரியானது அல்ல. எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. அவர்கள் பிரிவினை கேட்ட காலத்திலே தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னது, தலைவர் ராஜாஜி அவர்கள் சொன்னது எல்லாம் தெரியும். கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று சொன்னால், அதுசரி, நியாயமானது என்று சொல்ல முடியும், அது எனக்குப் புரிகிறது. நாட்டைப் பிரிவினை செய்து கொடுப்பது என்ன நியாயம் என்று கேட்கின்றார்கள். இப்போது பிரிவினையை விட்டுவிட்டு சுயாட்சிக்கு வந்தால், இது பிரிவினைதான் என்று சொல்லுகிறார்கள். அது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பிரதமர் இங்கே வந்தபோது சொன்னார்கள். மாநிலங்களுக்குக் கூடுதலான





அதிகாரம் கொடுத்தால், மத்திய அரசு பலஹீனப்படும், அதனால் தேசத்திற்கு அபாயம் என்கின்றார். இன்று அமெரிக்க நாட்டிற்குச் சென்று பார்த்தால், அங்கே பரிபூரணமான சுயாட்சி இருக்கிறது, அதனால் அமெரிக்கா பலஹீனப்படவில்லை. உலகத்தையே பாதுகாக்கும் தர்ம கர்த்தா நாடாக இருக்கின்றது. சோவியத் நாட்டிலே மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமை அரசியல் சட்டத்திலே வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் அந்த நாடு பலஹீனப்பட்டுவிடவில்லை. நமக்குப் பக்கத்திலேயே வரும் அளவுக்கு வந்திருக்கின்றது. ஒரு கோடி மக்களுடைய மலேசியா நாட்டிலே 11 ராஜ்யங்கள் உண்டு. ரெசிடுயரி பவர் அங்கு உண்டு. நிதி அதிகாரங்கள்கூட மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதனாலே ஒரு கோடி மக்களைக் கொண்ட மலேசியா நாடு பலஹீனப்படவில்லை. அங்கெல்லாம் ராஜ்யத்திற்குக் கொடி உண்டு. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் கீதம் உண்டு. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் கான்ஸ்டிடியூஷன் தனித்தனி, பெடரல் கான்ஸ்ட்டிடியூஷன் தனியே இருக்கிறது. இங்கு எல்லாவற்றுக்கும் மொத்தமாக ஒன்றே ஒன்றுதான் நமக்கு இருக்கின்றது. இதிலே மாநில சுயாட்சியைக் கண்டு மத்திய ஆட்சி பயப்பட வேண்டிய நியாயமில்லை. எனக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய நல்லெண்ணம் தெரியும். அவருக்கு நன்றாக விளங்கும் என்பதும் தெரியும். அவர்தான் இங்கே அகப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவரைத்தான் நான் கேட்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் மூலமாக நான் காங்கிரஸ் கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். மாநில சுயாட்சி வேண்டாம் என்றால், ஏற்படும் விளைவுகள் என்ன? அதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இப்போது மத்தியிலே இங்கே இருப்பது போன்று ஒரு கல்வித் துறை, இங்கே இருப்பது போன்று ஒரு கூட்டுறவுத் துறை, இங்கே இருப்பது போன்று ஒரு சுகாதாரத் துறை இப்படியெல்லாம் "டூப்ளிகேட்" செய்கின்றோம். ஒவ்வொன்றிலும் இரட்டைச் செலவு செய்யப்பட்டு வருகின்றது. உண்மையிலேயே பொறுப்பு ஏற்று நடத்துவது இங்கே இருக்கின்ற டாக்டர் நாவலர் அவர்கள் தான், கல்வித்துறை அமைச்சராக இருந்து பார்க்கின்றவர்கள். நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தான், இங்கு நல்வாழ்வுத் துறைக்குப் பொறுப்பாக இருந்து பார்க்கின்றவர்கள். மாநிலங்கள் நிதி உதவி பெறுவது தவிர பிரமாதம் ஒன்றுமில்லை. அயல் நாட்டுத் துறையிலே வெளியிலிருந்து வாங்கவேண்டிய பொருள்களை, பண்டங்களை வாங்கவும், அயல் நாட்டுத் துறையிலே மருத்துவத் துறை ஒன்றை வைத்திருப்பதற்குப் பதில் ஒரு மருத்துவ அதிகாரியை வைத்துக் கொள்ளலாம்; அயல் நாட்டுத் துறையின் மூலம் உதவி வாங்கிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். அதனால் ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான மந்திராலயம் தேவையில்லை. இந்த மந்திராலயம் வழியாக கோடிக்கணக்கான ரூபாய்களைப் பாழடித்துக் கொண்டிருக்கின்றார்கள். முழுப்பொறுப்பு ஏற்று, இங்கு கல்விக்காக டாக்டர் நாவலர் அவர்கள் இருக்கின்றார்கள். ஆரம்பக் கல்வியிலிருந்து தொழிற்கல்வி வரை அவர்தான் பொறுப்பேற்றிருக்கின்றார். இங்கு ஒரு மந்திரிதான் இருக்கின்றார். ஆனால் வேலையில்லாத அந்த மத்திய கல்வி மந்திரிக்கு ஸ்டேட் மினிஸ்டர், டெபுடி மினிஸ்டர் இத்தனை பேர்கள் கூட இருக்கின்றார்கள். ஒரு மந்திரியோடு போகவில்லை. ஆக இந்த

ஏழை நாட்டிற்கு ஏன் இவ்வளவு பாரத்தை டெல்லி சுமத்தி 100 கோடி, 100 கோடி என்ற அளவில் பாழடிக்கின்றதை, மாநில சுயாட்சியை எதிர்ப்பவர்கள் ஆதரிப்பார்களா என்பதற்கு என்ன பதிலை அளிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன். இப்படி டூப்ளிகேட் வேலைகளுக்காக ஆகின்ற செலவுகளை நிர்வாக முறையிலே அணுக வேண்டும். அது தமிழனுக்காக அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்காக வேண்டாம், நிர்வாகப் பிரச்சினை என்பதைக் கருத்தில் கொண்டு அணுக வேண்டும். இந்த ஏழை நாட்டிற்கு இந்த இரட்டை இலாக்காக்களை வைத்துக் கொண்டு இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்களை பாழடிக்கின்ற ஒரு ஆட்சி முறை தேவைதானா? மத்தியிலே இருக்கின்ற கல்வி இலாக்காவை மூடி விட்டால், உள்ளாட்சித் துறை இலாக்காவை மூடிவிட்டால், சுகாதாரத் துறை இலாக்காவை மூடிவிட்டால், மிச்சப்படுகின்ற பணத்தை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்தால், இதைவிட நன்றாக ஆட்சி நடத்த முடியாதா? இதை விட மக்களுக்கு நல்ல வாழ்வை நாம் அளிக்க முடியாதா என்றுதான் கேட்கின்றேன்.

இன்னொன்று. பிரதமர் அவர்கள் இங்கு வந்தார்கள். இது அபாயகரமான ஒரு கோஷம் "சுயாட்சி, அந்த வார்த்தையே அந்த அட்டானமஸ் என்ற வார்த்தையே ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது'' என்று சொன்னார்கள். நான் ஆங்கிலப் புலவன் அல்ல என்பது, தலைவர் அவர்களே, தங்களுக்கும் தெரியும், இந்த அவைக்கும் தெரியும். அது என் அதிர்ஷ்டமோ, துரதிருஷ்டமோ, அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இதற்கு என்று ஒரு புலமை தேவைப்படவும் இல்லை. இதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, "அட்டானமஸ்'' என்ற வார்த்தை அபாயகரமானதல்ல என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு பிரதமர் பதவி தேவைப்படவும் இல்லை. "அட்டானமஸ்'' என்ற வார்த்தை அபாயகரமானது அல்ல என்பதைப் புரிந்து கொள்ள ஒரு பரம்பரைத் தலைவர் தேவைப்படவில்லை. இங்கே இந்த அட்டானமஸ் என்ற வார்த்தை எல்லோருக்கும் பொதுவாகப் பயன்படுகிற ஒரு வார்த்தைதான். ஒரு பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொன்னாலும், அட்டானமஸ் பாடி என்றுதான் சொல்கின்றோம். ஸ்தல ஸ்தாபன ஆட்சி, லோகல் போர்டுக்கு அட்டானமஸ்'' என்ற வார்த்தை அந்த நாளில் உபயோகப்படுத்தப்பட்டது. நிர்வாகச் சுதந்திரம் உள்ள ஒன்றை நாம் "அட்டானமஸ்'' என்று சொல்கின்றோம். காங்கிரஸ் சரித்திரத்திலேயே அட்டானமஸ்'' என்று ஒன்றுண்டு. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். பிரதமர் மிக்க அன்புணர்ச்சியோடு கேட்டிருக்கின்றார்கள். தி.மு.க. என்ன கேட்கிறது என்றே எனக்குத் தெரியவில்லையே என்று அடிக்கடி கூறி வருகின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டியது இதுதான். நான் கேட்பதெல்லாம் வேறு ஒன்றுமில்லை. இது ஒரு வேண்டுகோள் தான். எனக்கு ஆணையிட அருகதையில்லை. நான் கட்சியால் மாறுபட்டிருந்தாலும், தோழமைக் கட்சியினன் ஆக இருக்கின்றேன் என்ற முறையிலேயே கேட்டுக் கொள்கின்றேன்.

அரசியல் நிர்ணய மன்றத்திலே 21–1–1947ஆம் தேதி அன்று பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட ஒரு தீர்மானம் இருக்கின்றது. அந்தத் தீர்மானம் இதுதான். இந்தத் தீர்மானத்திற்கு லட்சியத் தீர்மானம் என்று பெயர் இருக்கிறது.





"தற்போது பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய ஆட்சிப் பகுதிகளும் (அதாவது மாநிலங்கள்) இந்திய சமஸ்தானங்களாக அமைந்துள்ள ஆட்சிப் பகுதிகளும், பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியிலுள்ள இந்தியாவின் பிற பகுதிகளும் சுதந்திர ஆதிக்கமுள்ள இந்தியாவில் அமைய விரும்பும் மாநிலங்களும் பிற ஆட்சிப் பகுதிகளும் ஒன்றியமாக இந்தியா இருக்கும்.

இப்போதுள்ள அவற்றின் எல்லைகளுடனோ அல்லது அரசமைப்புச் சட்ட மன்றத்தாலும், பின்னர் அரசமைப்புச் சட்ட விதிகளின்படியும் தீர்மானிக்கப்படக்கூடிய பிற எல்லைகளுடனோ மேற்சொன்ன ஆட்சிப் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) சுய ஆட்சி உரிமை 'அட்டானமஸ்' (autonmous) என்ற வார்த்தை ஆங்கிலத் தீர்மானத்திலே போடப்பட்டிருக்கின்றது. சுய ஆட்சி உரிமைத் தகுதியைப் பெற்று தன்னகத்தே வைத்திருக்கும் எஞ்சிய அதிகாரங்களுடன் அமைந்த அரசின் எல்லா அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றும்",

அடுத்து உள்ளதுதான் மிக முக்கியம். "மத்திய அரசுக்கு நிலைப் பெற்றுள்ள ராஜ்யங்களால் மத்திய அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் நீங்கலாக—அதாவது மாநிலங்கள் மத்திய அரசினிடம் மாநிலங்கள் விரும்பி ஒப்படைக்கப்பட்ட என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எடுத்துக் கொண்டுதான் மிச்சத்தைக் கொடுத்தார்கள். இப்போதுள்ள அடக்கிய அதிகாரங்கள் அல்லது பொருள்கள் கொள்ளத்தக்க அதிகாரங்கள் நீங்கலாக, மேற்சொன்ன ஆட்சிப்பகுதிகள் பரிபூர்ணமான அதிகாரம் உள்ள அரசுகளாக விளங்கும்."

இந்தத் தீர்மானத்தின்மீது நேருஜி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளினுடைய ஒரு பகுதியைத் தருகிறேன்.

"நாம் உருவாக்கும் இந்த அரசியல் அமைப்பிலே மாநிலங்கள் சுய ஆட்சி பெற்ற பகுதிகளாகத்தான் விளங்கும். மாநிலங்களிடையே எஞ்சிய அதிகாரங்கள் தங்கி நிற்கும்."

அதாவது இப்போது ரெசிடுயரி பவர்ஸ் அரசியல் சட்டத்தின் படி மத்தியத்திற்குத்தான்.

"அத்தகைய உறுப்புகளிடம் அரசாங்கத்தின் முழு அதிகாரமும் நிர்வாகப் பொறுப்பும் பொலிந்து விளங்கும். யூனியனிடம் உறுப்புக்கள் தாமே விரும்பிக் கொடுத்துள்ள அதிகாரங்களையும் . . . "

யூனியனிடம் மாநிலங்களே விரும்பி தானே கொடுத்த அதிகாரங்களும்—இப்போது அந்த நிலை கிடையாது. அதைத் தடுத்துவிட்டார்கள்.

"அத்தகைய அதிகாரங்களில் தொக்கி நிற்கின்ற, அன்றி, அவற்றின் விளைவுகளாகவுள்ள பொறுப்புக்களைத் தவிர ஏனைய அதிகாரங்கள் எல்லாம் உறுப்புக்களையே சாரும்."

இந்த அடிப்படை லட்சியங்களை இந்தியாவில் யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் கூடாது . . . "

அவருடைய மகளே மறுக்கிறார்—இந்த அடிப்படை லட்சியங்களை இந்தியாவில் யாரும் மறுக்கவில்லை, மறுக்கவும் கூடாது என்ற விஷயத்தில்—

"நாம் இந்த லட்சியங்களை ஏற்றுக்கொள்ளுகின்றோம். இந்த லட்சியங்களில் ஊன்றி நிற்கிறோம். லட்சியத் தீர்மானம் வெறும் தீர்மானம் மட்டுமல்ல; அது ஒரு லட்சிய முழக்கம். நமது உறுதியான முடிவு. நாம் எடுத்துக்கொண்ட சபதம். நிறைவேற்ற வேண்டிய பிரதிக்கினை. நம்முடைய வாழ்க்கையில் சமர்ப்பணம்."

பின்னர் இதிலிருந்து பின் வாங்கி, இந்த தீர்மானத்தைத் தூக்கிக் குப்பை தொட்டியிலே போட்டுவிட்டு மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கின்ற கான்ஸ்டிடியூஷனை தயாரித்துக் கொண்டு வந்தார்கள்.

என்னுடைய வேண்டுகோள் இதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டிய நாள் ஆனதால், நான் கூட அதிக நேரம் எடுக்க விரும்பவில்லை. இந்த அரசியல் சட்டம் தயாரித்ததிலேயே முதல் கோணல் முற்றும் கோணல் என்று இருந்தது. காலம் எல்லாம் காங்கிரஸினுடைய கோரிக்கை அதுவாகத்தான் இருந்தது. சுதந்திர இந்தியாவில், வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அரசியல் நிர்ணய மன்றத்திலேதான் இந்தியாவின் அரசியல் சட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அதுதான் காங்கிரஸினுடைய கோரிக்கை. ஆனால் இந்த அரசியல் நிர்ணய மன்றம் எப்படி அமைந்தது? பிரிட்டிஷாரே சுதந்திரத்தைக் கொடுத்து வாங்குகின்ற துரதிருஷ்டம் நமக்கு ஏற்பட்டதால், நாமே எடுத்துக்கொண்டு அவர்களை விரட்டுவதாக எதிர்பார்த்தோம். அப்போதே கொடுத்து வாங்குகின்ற ஒப்பந்தம் ஏற்பட்டதால், நிலைமை என்ன ஆனது என்றால், சொத்துரிமை பெற்ற வாக்காளர்களால், எழுதப்படிக்கத் தெரிந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ-க்களை மதவாரியாகப் பிரித்து முஸ்லீம் எம்.எல்.ஏ-க்களால் ஒரு முஸ்லீம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது, ஒரு கிருத்துவர் ஒரு கிருத்துவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது, ஒரு இந்து ஒரு இந்துவைத் தேர்ந்தெடுக்கவேண்டியது, ஒரு தாழ்த்தப்பட்டவர் ஒரு தாழ்த்தப்பட்டவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது, இப்படி மதவாரியாகப் பிரித்து மத வாரியாக எம்.எல்.ஏ-க்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்ததனால், அரசியல் நிர்ணய மன்ற உறுப்பினர்கள் மதமற்ற சமுதாயத்திற்கு அரசியல் சட்டத்தை எழுதினார்கள். இது உலகமே காணாத அற்புதம் என்று சொல்லலாம்.

செக்யூலர் கான்ஸ்டிடியூஷன் நமக்கு, செக்யூலர் ஸ்டேட் ஆப் இந்தியா. அவர்கள் மதவாரி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இரண்டாவதாக அந்த அரசியல் நிர்ணய மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அரசியல் சட்டம் ஆக்கப்பட்டது. இன்றும் கூட நான் நேரு என் தலைவர் என்று ஏற்றுக்கொள்ளுகிறேன். அதைப் பற்றிக் குறைபாடு எனக்குக் கிடையாது. ஆனால் ஒன்று சொல்வேன். அன்றைக்கு அந்நிய ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதிலே அவசர நிலைமையின் காரணமாக தேசமே பிரிவு படுகிறதோ, பிளவு ஆகி விடுகின்றதோ, என்ன அபாயமோ என்ற அச்சத்திலே ஏற்பட்டதாக





இருக்கலாம். அந்த நிலைமையில் தவறு செய்யத் தூண்டியிருக்கலாம். அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து 27 ஆண்டுகள் முடிந்துவிட்டன. எந்த நாட்டிலும் அதை 27 ஆண்டுகளாகப் புனராலோசனை செய்யாமல் இருந்தது கிடையாது. நாமும் 27 முறைகள் என்று நினைக்கின்றேன்.

<u>திரு. எஸ். டி. ஆதித்தன்</u>: 33 முறைகள் திருத்தம் ஆகியிருக்கின்றது.

<u>திரு. ம. பொ. சிவஞானம்</u>: 33 முறைகள் திருத்திவிட்டோம். இப்படித் திருத்தம் செய்வதை நான் குறை சொல்லவில்லை. இது எதைக் காட்டுகின்றது? ஏதோ அவசர கோலத்தில் அள்ளித் தெளித்தது, அதனால் ஏற்பட்டிருக்கின்றன குறைகள். ஆண்டுக்கு இரண்டு முறைகள் திருத்தம் வருகின்றன என்றால், இரண்டாவது அரசியல் நிர்ணய மன்றம் ஒன்றை அமைக்க வேண்டும். இரண்டாவது அரசியல் நிர்ணய மன்றம் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், நியாயமாக இருக்கும். இல்லையெனில் நாடாளுமன்றம் இரண்டாவது அரசியல் நிர்ணய மன்றமாக வேலை செய்யமுடியும். முன்னர் அரசியல் நிர்ணய மன்றம் நாடாளுமன்றமாகவும் இயங்கியது. அதுபோல் இந்த நாடாளுமன்றமே அரசியல் நிர்ணய் மன்றமாக, வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவதால், மொழி வாரி மாநிலம் அமைந்த பிற்பாடு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் ஆதலால், இந்த மன்றத்தின் உறுப்பினர்களே அரசியல் நிர்ணய மன்றத்தின் உறுப்பினர்களாக அமர்ந்து அரசியல்சட்டத்தைப் புனராலோசனை செய்து இதிலுள்ள குறைகளையெல்லாம் அகற்றித் தீரவேண்டும்.

(5-40 பிற்பகல்)

திருத்தாவிட்டால் என்னவாகிறது ? பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. நம்முடைய பிரதமர் அடிக்கடி கூறுகிறார், நாம் ஒரு அபாயக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறோம், நாம் ஒரு அபாயக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று. நேற்று கூட தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அபாய கட்டம் என் வந்தது? அத்தனை அதிகாரங்களும் மத்தியில் குவிக்கப்பட்டிருப்பதன் விளைவுதான் இந்த அபாயத்திற்குக் காரணம். நம்முடைய முதல்வர் அவர்கள் அருமையான ஒரு ஆலோசனையைச் சொன்னார்கள். வருமான வரி ஏய்ப்பு நடக்கிறது பணங்களை பதுக்குகிறார்கள். பதுங்கிய பணம் பதுங்கிய படி இருந்து தொலைத்தால் கூட பாதகமில்லை. திட்டங்கள் தான் குலையும். பதுங்கிய பணம் வேறு வேறு வழிகளில் வெளி வருகிறது. கட்சிகள் நடத்த வெளி வருகிறது. கோலாகலக் கூத்தாட்டங்கள் அடிக்க வெளி வருகிறது. தேர்தல் காலங்களில் வெளி வருகிறது. அத்தியாவசியப் பண்டங்களை வெளியே வராமல் பதுக்கப் பயன் படுகிறது. விலைவாசியைக் குறைப்பதற்கு அத்தியாவசியப் பண்டங்கள் வெளிவரப் பயன்படுவதில்லை. அதனால் விலைவாசி ஏறுகிறது. விலைவாசியைக் குறைப்பதற்கு இந்த ஆட்சி பொறுப்பா, மத்திய ஆட்சி பொறுப்பா ? இது விவாதத்திற்குரிய பிரச்சினை. நான் சொல்லுகிறேன். இது விவாதத்திற்குரிய பிரச்சினையாக வந்ததிலிருந்தே தெரிகிறதல்லவா நம் "கான்ஸ்டிடியூஷனில்" உள்ள குறை. நாம் அதற்கு மத்திய அரசு பொறுப்பு என்கிறோம்.

அவர்கள் மாநில அரசு பொறுப்பு என்கிறார்கள். மத்திய அரசில் இருக்கிற பிரதமர் அப்படிச் சொல்லவில்லை. இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறவர்களை அனுபவம் உள்ளவர்கள் என்ற முறையில் கேட்கிறேன். இங்கேயுள்ள அரசியல் கட்சிகளில் எந்தக் கட்சியும் மத்தியில் ஒரு அரசு இருப்பதாகவே நினைப்பதில்லை, மத்திய அரசை எதிர்த்துப் போராட வேண்டிய கடமை தங்களுக்கு இருக்கிறது என்கின்ற நினைப்பையே துறந்து விட்டார்கள். இந்த ஆட்சி ஒன்றுதான் அவர்களுக்கு இருப்பதாக நினைக்கிறார்கள். ஸ்தாபன காங்கிரசைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு மாநில சுயாட்சி வேண்டும் என்ற மனமே இல்லை. அதே நேரத்தில், அது தவறு என்கிறார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, அகில இந்திய ஸ்தாபன காங்கிரஸ் கட்சியிடமிருந்து சுயாட்சி வாங்கவில்லையா? பாண்டிச்சேரி தேர்தலை, கோயம்புத்தூர் தேர்தலை, எங்கள் மாநில ஸ்தாபன காங்கிரஸ் கட்சியிடம் விட்டுவிடுங்கள், அதை நாங்கள் நடத்துவோம். உங்களுக்கு உத்திரப்பிரதேசத்தில் விரோதியாக இருப்போம், இங்கே பாண்டிச்சேரியில் நண்பர்களாக இருப்போம். ஒரிஸ்ஸாவில், கோயம்புத்தூரில் நாங்கள் நண்பர்கள், இன்னொரு இடத்தில் விரோதிகள் என்கிறார்கள். கேவலம் ஒரு கட்சிக்கு சுயாட்சி வேண்டுமென்று கேட்கின்ற அவர்கள் ஒரு இனத்திற்கு சுயாட்சி தேவையில்லை என்கிறார்கள். வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு சுயாட்சி தேவையில்லை. துயருறுகின்ற மக்களின் துயர் துடைக்க சுயாட்சி தேவையில்லை என்றால், அது தவறான முறையில் மக்களுக்கு வழி காட்டுவதா, இல்லையா? இவ்வாறு ஒரு சாமான்யமான ஆள் சொல்லியிருந்தால், பரவாயில்லை. ஒரு பெரும் தலைவரைக் கொண்ட கட்சி—இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்ததை நான் தவறு என்று சொல்லவில்லை—என்னுடைய தாய்ச் சபையாக இருந்தது, பிளவுபட்டது ஒன்று பட்டது என்றால், அதனால் நான் வேதனை அடையவேயில்லை. நம்முடைய முதல்வர் அவர்கள் கூட ஒன்றுபட வேண்டும் என்று தான் சொன்னார்கள். அவர்கள் ஒன்றுபட்டது ஒரு உண்மையைக் காட்டுகிறது. அவர்கள் அகில இந்திய ரீதியில் பகைவன், பாண்டிச்சேரியில் மட்டும் நண்பன் என்றால், நாங்கள் மட்டும் ஏன் இந்த நிலைமையில் வாழ வேண்டும்? மற்ற மாநிலங்களை எப்படியோ செய்துகொள், எங்களை விட்டு விடு, எங்களுக்கு சுயாட்சி கொடு என்றால், அதிலே என்ன தவறு? பின்தங்கிய மாநிலங்கள் எப்படி முன்னேறும்? அதிகாரங்கள் அங்கே குவிக்கப் பட்டிருப்பதைக் கேட்டால், அதிலே என்ன தவறு இருக்கிறது? பின் தங்கிய மாநிலம் எப்படி முன்னேறும்? உத்திரப்பிரதேசத்தில் இது தான் பிரதமருடைய முதல் மந்திரம். நான் கேட்கிறேன். பின்தங்கிய மாநிலங்கள் உங்களிடம் அதிகாரங்கள் குவிந்திருந்தும் முன்னேறவில்லை என்பதை 28 ஆண்டு காலச் சரித்திரம் காட்டுகிறது. அங்கே அதிகாரங்கள் குவிந்திருந்தும் பின் தங்கிய மாநிலங்களுக்கு இந்த கதி வந்திருக்க வேண்டாம். ஒரிஸ்ஸாவில் இந்தக் கதி ஏற்பட்டிருக்க வேண்டாம். குபேரர்கள் வாழும் குஜராத்தில் இந்த நிலைமை வந்திருக்க வேண்டாம். மத்தியில் அதிகாரம் குவிக்கப்பட்டால் தான் மாநிலங்களுக்கு சம வளர்ச்சி நிலைமை வரும் என்பது பொய் வாதம். ஆனால் நடை முறையில் என்ன நடக்கிறது? முன்னேறியுள்ள மாநிலம் பின்தள்ளப்படுகிறது. மத்தியில் அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதால், பின்தங்கிய மாநிலத்தின் பெயரால் முன்னேறிய மாநிலம் பின்தள்ளப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த





ஒரு பெருந் தலைவர் பத்திரிகையில் எழுதியிருக்கிறார் மாநில சுயாட்சி எனக்கு வேண்டாம் என்று. சோவியத் ரஷ்யாவைக் காட்டி காலம் எல்லாம் சொல்லிக் கொடுத்தவர்கள், இன்றைக்கு மாநில சுயாட்சி வேண்டாம் என்கிறார்கள். மாநில சுயாட்சி என்பது எல்லா மாநிலங்களுக்கும்தான். தி.மு.க. ஆளுவது இந்த மாநிலம் ஒன்றில்தான். தி.மு.க. கேட்கிறது என்றால், அது எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துக்கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிறது. தி.மு.க. கேட்கிறது என்பதற்காக எல்லா மாநிலங்களுக்கும் தண்டனை கொடுக்க வேண்டுமா? இது குறித்து நான் திரும்பத் திரும்ப விளக்க விரும்பவில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் உள்ள தோழமைக் கட்சித் தலைவர்களும், நான் சொன்ன கருத்துக்களில் எந்த ஒரு கருத்தும் நான் தி.மு.க.விற்கு தோழமைக் கட்சியாக இருப்பதால்தான் கூறுகிறேன் என்று எண்ண வேண்டாம். எதிர்க் கட்சி வரிசையில் இருந்தால் என்ன கருத்தைச் சொல்வேனோ அதைத்தான் இப்போதும் சொல்லுகிறேன். இது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். எல்லைப் பிரச்சினையிலும், மொழிப் பிரச்சினையிலும், தலைநகர்ப் பிரச்சினையிலும், மாநிலப் பிரச்சினையிலும், தமிழ் நாட்டின் பிரச்சினையிலும் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோது கூட, முன்னோடும் பிள்ளையாக இருந்து பழக்கப்பட்டவன். மனந்திறந்து சொல்லுகிறேன், எதில் எப்படிப்போனாலும், இந்த மாநில தரித்திரத்தை நீக்க இந்த மாநில சுயாட்சி வர வேண்டும். விலைவாசியைக் குறைக்க மாநில அரசுக்கு அதிகாரம் வேண்டும். அதிகாரத்தைக் கொடுத்து விட்டு, இந்த மாநில ஆட்சியைக் குற்றவாளிக்கூண்டிலே ஏற்றுங்கள். மக்கள் தீர்ப்பு அளிக்கட்டும். நான் சொன்ன அத்தனை நல்ல அம்சங்களுக்கும் காரணமாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, முதல்வருக்கு, அவருடைய அமைச்சர் குழுவிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசும்போது, முதலில் புதிதாக மாவட்டம் அமைந்து, புதிய மாவட்ட மக்களாக ஆகியிருக்கும் புதுக்கோட்டை வாசிகளை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை முதலில் ஆரம்பித்துவைத்த முதலமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

அடுத்தபடியாக கடந்த ஒரு வாரமாக, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சம்பந்தமாக, அந்நாட்டுப் பிரதமர் அவர்களும் நமது நாட்டு பிரதமர் அவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி, நாடற்றோர் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள் என்பதை, இன்று மத்தியானம் வானொலியின் மூலம் நான் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன். அது நமக்குப் பூரணமாக ஒரு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை என்றாலும், மொத்தம் உள்ள $1\frac{1}{2}$ இலட்சம் நாடற்றோர்களில் 75 ஆயிரம் பேரை இலங்கைப் பிரஜைகளாகவும், இன்னும் உள்ள 75 ஆயிரம் பேரை இந்

[திரு. கே. ராஜாராம்] [1974 சனவரி 29

தியப் பிரஜைகளாகவும் ஆக்கிக்கொள்வது என்று இருவரும் ஒப்புக்கொண்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். அந்தப் பிரச்சினை ஒரு வகையாகத் தீர்ந்தது நல்ல காரியம். இதில் இருக்கின்ற பிரச்சினை, எனக்கு முன் பேசிய இந்த அவையின் துணைத் தலைவர் கூறியது மாதிரி, இலங்கையிலிருந்து ஏராளமான பேர் மறுவாழ்வு பெற தாய்நாட்டுக்குத் திரும்பவிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு, மாநில அரசு என்று வித்தியாசமிராமல், இந்தத் தேசமே அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க முற்படவேண்டும். இந்தத் தேசம் என்று சொல்லும் போது, தேசத்தின் முழுப் பொறுப்பையும் கையில் வைத்திருக்கும் மத்திய அரசு, முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியது கடமை. இதிலே, பின்வாங்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டு மக்கள் இலங்கையிலிருந்து திரும்பி வந்தால், அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்து இந்த நாட்டு அரசின் பிரதிநிதியாக உள்ள மாநில அரசாங்கத்திற்கு வேண்டிய ஒத்தாசைகள், வேண்டிய பொருளாதார உதவி அனைத்தையும் செய்ய வேண்டியது மத்திய அரசின் கடமை என்பதை நான் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் சொல்லிவிடுகிறேன்.

[பிற்பகல் 5–50]

அடுத்ததாக, கச்சத்தீவு பற்றிய பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவு பெறவில்லை என்பதையும் வானொலியில் சொல்லி, கூடிய சீக்கிரம் சுமுகமான தீர்ப்பு அதற்குக் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டது. கச்சத்தீவைப் பொறுத்த வரையில், அது இராமநாதபுரம் ராஜாவிற்குச் சொந்தமாக இருந்ததற்கான ரெகார்டுகள் எல்லாம் இருந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நமது மாநில அரசு மத்திய அரசுக்குக் கொண்டுபோய்க் கொடுத்திருக்கின்றது. ஆகவே எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமே இல்லை. ஆகவே இதையெல்லாம் வைத்து, கூடிய சீக்கிரம் இதற்கான நல்ல முடிவினை எதிர்பார்க்கிறோம் நாம்.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், அதில் தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது மத்திய அரசுக்குத் தெரியாமலில்லை. ஆகவே அடிக்கடி பேச்சு வார்த்தைகள் நடக்கும்போதும் சரி, அது சம்பந்தமாக கடிதப் போக்குவரத்தினை இலங்கை அரசோடு நமது மத்திய அரசு செய்து கொண்டிருக்கும்போது, மாநில அரசினைக் கலந்து கொண்டு மத்திய அரசு செய்கிறது என்றுதான் நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை விளக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது நடந்து முடிந்த பேச்சு வார்த்தைகளின்போது டெல்லியில் ஏன் இந்த மாநில அமைச்சர் ஒருவர் போயிருந்திருக்கக்கூடாது என்று புரியவில்லை. இதையும் முதலமைச்சர் அவர்கள் தம் உரையில் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலே தமிழர்களே பெரும்பாலும் பாதிக்கப்படும் ஒரு விஷயமாக, ஒரு பிரச்சினையாக இருப்பதால், இப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடக்கும்போது, அதில் மத்திய சர்க்கார் தமிழ் நாட்டின் பிரதிநிதி ஒருவரைக்கூட வைத்துக்கொண்டிருந்தார்களா, அவர் அது சம்பந்தப்பட்ட ரெகார்டுகளை எடுத்துச் சென்றாரா, மத்திய அரசிடம்



74 சனவரி 29] [திரு. கே. ராஜாராம்]

்பந்தப்பட்ட ரெகார்டுகளைக் கொடுத்துவிட்டதால்தான். இங்கேயிருந்து ந பிரதிநிதி டெல்லிக்குப் போகவில்லையா என்பதையும் அறிய விரும்பு கிறன். அடுத்து, நமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப் டிருக்கின்றது. குறிப்பாக, மேற்கு ஆசியப் போருக்குப் பிறகு இந்த ந நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று ஆளுநர் அவர்கள் தம் உரையில் றியிருப்பது முற்றிலும் சரி. இந்தப் பொருளாதாரச் சிக்கல் ஒரு பரும் நெருக்கடியாக மாறிக்கொண்டு வருகின்றது. இந்த நெருக்கடி ங்கே போய்விடுமோ தெரியவில்லை. இந்த நெருக்கடி மத்திய க்கார் மட்டும் தனியாக இருந்து தீர்த்துவிடக்கூடிய விஷயம் இல்லை. திலே எல்லா மாநில அரசுகளையும் கலந்தாலோசித்து நல்ல முடிவிற்கு ரவேண்டும் என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருப்பதை முற்றிலும் ரவேற்கிறேன். ஆளுநர் அவர்கள் தமது உரையின் கடைசிப் குதியில் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள், எல்லோரும் ர்ந்துகூடிப் பேசி, இப்போதுள்ள பிரச்சினைகளிலிருந்து தேசத்தை டுவிக்க வேண்டும் என்று. அதுதான் உண்மை நிலை.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து சீர்திருத்தம் சம்பந்தமாக நிர்வாக சீர் ருத்த ஆணைக் குழுவின் ஒரு அறிக்கை நம் மேலவையில் வைக்கப் டது. அந்த அறிக்கையில் கண்டுள்ள விஷயங்கள் மிகப் பெரும் றுதல்களைச் செய்யக்கூடிய யோசனைகளாக இருக்கின்றன. நான் ரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், அந்த அறிக்கையின் பாரிசுகளின் பேரிலே எந்தவிதமான முடிவையும் அரசாங்கம் அவசரப் டு எடுத்துவிடக்கூடாது. ஏற்கனவே 1958-ம் வருஷத்தில் பஞ்சாயத்து டத்தைக் கொண்டுவந்தபோது அப்போது பிரதம காரியதரிசியாக ருந்த திரு. ஆர். ஏ. கோபால்சாமி அவர்கள் எல்லா மாவட்டங்களி ருந்தும் பஞ்சாயத்து விஷயங்களிலே அக்கறை கொண்டவர்களையும் ஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் வரவழைத்து ஒரு மாத காலம் னந்தினம் பத்து பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்களைக் கூப்பிட்டு வத்துக்கொண்டு அவர்கள் யோசனைகளையெல்லாம் கேட்டு, பிரஸிடென்ஸி லேஜில் வகுப்பு மாதிரி நடத்தினார்கள். அந்தச் சட்டத்திலுள்ள ங்கல்களையெல்லாம் தெளிவுபடுத்தியபின்னர்தான் அதற்கான திகள் வகுக்கப்பட்டன. இப்போதும் அதுபோன்று யோசனைகளைக் ட்டு முடிவெடுக்க வேண்டும். சென்னையில், தலைநகரில் உட்கார்ந்து காண்டு நாம் எந்த விதமான முடிவிற்கும் அவசரப்பட்டு வந்துவிடக் டாது. எல்லோரையும் கலந்துகொண்டு முன்போல இப்போதும் டிவிற்கு வரவேண்டுமே தவிர, அரசாங்கம் தாமாக ஒரு முடிவிற்கு ந்துவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவசிய னுல், எல்லா பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் அபிப்பிராயங்களைத் தரிந்து கொள்வதற்கு இந்தச் சிபாரிசுகளை அவர்களுக்கு அனுப்பி வைத்து வர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களும் இதை ல்லா அபிவிருத்தி கௌன்ஸில் கூட்டங்களிலே விவாதித்து முடிவிற்கு ரும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்

அடுத்து, மதுரையில் மன்னர் திருமலைநாயக்கர் பெயரால் ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று பலர் முயற்சி எடுத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அரசாங்கம் அதற்கு நல்ல ஆதரவு கொடுத்து அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பல அன்பர்கள், மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி வேண்டும் என்று அடிக்கடி பேசினார்கள். இதையும் அரசாங்கம் அவசியம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இப்போதுள்ள நிலைமை, தனியார் கம்பெனிகளில் ஏதாவது வேலை காலி என்றால், அதற்கு பி.ஏ. மட்டுமில்லாமல் பி.எல். படித்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்றுதான் கேட்கின்றார்கள். சட்டம் படித்தால்தான் வேலை கிடைக்கும், அப்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் போகும் என்ற நிலையில், குறிப்பாக தொழில் துறையில் கூட சட்டம் படித்த பட்டதாரிகளே தேவை என்று இருப்பதால், இதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலையில் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பிக்கிறது நல்லதில்லையா என்பதையும் அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்கம் என்று சொல்லும்போது, தேர்தலில் மாறலாம் அல்லது அதுவே தொடர்ந்து நீடிக்கலாம். ஆனால் நிரந்தர சிப்பந்திகள், உத்தியோகஸ்தர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் இடும் உத்தரவுகள் மூலம் இதற்கு முந்தைய அரசாங்கத்தின் காலத்திலே போடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி தேர்வு எழுதியவர்கள் யாரையும் பாதிக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு முந்தைய அரசாங்கத்தின் காலத்திலே இந்தி மொழியை இரண்டாவது மொழியாகக்கொண்டு பி.டி. பாஸ் பண்ணியவர்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும் என்று அன்றைக்கு பலர் இந்தியை ஸெகண்டு லேங்க்வேஜாகப் படித்துப் பி.டி. பட்டம் பெற்றார்கள். இப்போது அவர்களுக்குப் பதவி உயர்வு தடுக்கப் பட்டிருக்கின்றது. இவர்களுக்குப் பின்னால், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியை மட்டும் படித்துத் தேரியவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது, தலைமை ஆசிரியர்களாக. "நாங்கள் ஸெகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே இருக்கிறோம்" என்று குறைபட்டுக்கொள்ளுகின்றார்கள். அது உண்மையாயின் நியாயமாகாது என்று எண்ணுகிறேன். அன்றைக்கு இந்தியைப் படித்தால், அவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்படலாம் என்று இருந்த நிலையில் அதைப் படித்தார்கள் என்றால், இன்றைக்கு அது நமக்குத் தேவையில்லை என்று அதைப் படித்தவர்களைத் தண்டிக்கக் கூடாது. யார் அவர்களெல்லாம் ? நம்மவர்கள்தான். அவர்களுடைய தாய் மொழி தமிழ் மொழி. பிறகு எதற்காக அவர்களை இப்படிப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று தெரியவில்லை. எனவே, அவர்களுக்கும் பதவி உயர்வு கிடைக்கும் விதத்தில் அவர்களையும் தலைமை ஆசிரியர்களாக வருவதற்குள்ள வாய்ப்பைத் தடுத்துவிடக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனத் திட்டங்கள், நீர் மின் விசைத் திட்டங்கள் இவற்றை ஏராளமாக நாம் அமுல் படுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். பெரிய பெரிய திட்டங்களுக்கு இனி நமது தமிழ் நாட்டிலே





வாய்ப்பில்லை என்றாலும்கூட, ஏற்கனவே உள்ள சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நன்கு செயல்படுத்தி, வேண்டிய வாய்க்கால்களையெல்லாம் தூர் எடுத்து, அவற்றை நன்றாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகம் என்று ஒன்றை ஏற்படுத்தி, கேரளம், தமிழ் நாடு, கர்நாடகம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களின் அரசுகளின் ஒத்துழைப்புடன் அங்கெல்லாம் இருக்கும் இயற்கை வசதிகளை எல்லா மாநிலங்களுக்கும் முறையாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற நிலைமையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து, மத்திய சர்க்கார் அதற்கு வேண்டிய ஒரு கூட்டத்தையும் நடத்திற்று என்று ஆளுநர் அவர்கள் உரையிலிருந்து தெரிகிறது. மெத்த மகிழ்ச்சி. பக்கத்து மாநிலங்களோடு நல்ல உறவு கொண்டு நடக்க ஆரம்பித்திருப்பது மிகவும் நல்லது. இப்படி உறவு கொண்டதால்தான், வெகுநாளாகத் தீர்க்கப்படாமலேயே இருந்து வந்த சிறுவாணி நீர் பிரச்சினைகூட இப்போது மிகச் சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு நமது அண்டை மாநிலங்களோடு மிக நல்ல முறையில் உறவுமுறை இருந்து வர வேண்டும். அதற்கு எங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்கிறோம். அதில் எந்தவிதமான பின்வாங்கலும் தேவையில்லை. காவிரி நீர்ப் பிரச்சினை கூட அப்படித்தான். மத்திய சர்க்கார் இதைத் தீர்த்துத் தந்துவிடும் என்று பல காலமாகக் காத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் நேரடியாக நாமே பேசித் தீர்த்துக்கொள்ளலாம். சிறுவாணிப் பிரச்சினையை மத்திய சர்க்காருக்கு விட்டிருந்தால், அவர்களுக்கு உள்ள தொல்லையில் அவர்கள் ஒன்றும் செய்திருக்க முடியாது. நேரடியாகப் பேசியதால்தான் நாம் தீர்த்துக்கொண்டு விட்டோம். அதேபோல காவிரி நீர் பற்றி கர்நாடக மாநிலத்தோடு பேசி நாமே தீர்த்துக்கொள்ளலாம். அவர்களுக்கு நம் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. நமக்கு அவர்களுடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. எனவே, காவிரி நீர்ப் பிரச்சினை பற்றியும் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும் அரசாங்கத்தையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(புற்பகல் 6–00)

மின்சாரப் பற்றாக்குறைபற்றி ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், நாம் மிகவும் திடுக்கிட வேண்டிய நிலையிலிருக்கிறோம். வருடா வருடம் எவ்வளவுதான் நாம் மின் சக்தி உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு போனாலும்கூட, நமது பற்றாக்குறையும் ஆண்டுக்கு $12\frac{1}{2}$ சதவிகிதம் வளர்ந்துகொண்டு போகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தீர்க்க வேண்டுமென்றால், அனல் மின் நிலையங்களை நாம் அதிகப்படுத்த வேண்டும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கிவிட்டது என்று கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறேன். கவர்னர் அவர்கள் உரையில் அது சொல்லப்படவில்லை என்றாலும், இரண்டு தினங்களுக்கு முன்பு பேரவையில் முதலமைச்சர் அவர்கள் இதை அறிவித்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது சந்தோஷத்தைக் கொடுத்தது.

இரண்டாவது சுரங்கத்தை வெட்டும் வேலையைத் துரிதமாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதோடு, சுரங்கத்தை வெட்டுவதோடு நின்றுவிடாமல், நமது பழைய திட்டமாகிய 1,000 மெகா வாட் உற்பத்தி செய்யக் கூடிய அனல் மின் நிலையத்தை நெய்வேலியில் உடனே ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்தோடு ஒரு அணு மின் நிலையத்தை தூத்துக்குடியில் ஆரம்பிக்க வேண்டும் என்று நமது அரசு வெகுநாளாகக் கோரிக்கை வைத்திருக்கிறது. அந்த அணு மின் நிலையத்தை ஆரம்பிக்கின்ற விஷயத்தையும் நமது அரசாங்கம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வரவேண்டும். இது உடனே பலனளிக்கின்ற விஷயமல்ல. ஆகையால்தான் அனல் மின் நிலையங்களை தாமதமின்றி ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிங்கரேணியில் கிடைக்கின்ற நிலக்கரியைக் கொண்டு, சமீபத்தில் இருக்கின்ற மேட்டூரில் அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருந்தது. இப்போது இந்தத் திட்டம் விடப்பட்டிருக்கிறது. அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கடன் தவணையை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சபையில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக வற்புறுத்திப் பேசும்போதெல்லாம், நாங்கள் எங்கள் குழுவின் ஒத்துழைப்பைக் கொடுத்து மிகவும் வற்புறுத்திப் பேசி வந்துள்ளோம். அது வெற்றிகரமாக முடிந்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்போது கடன் தவணையை மாற்றியமைத்து, நமது மாநிலம் வருடாவருடம் செலுத்த வேண்டிய தவணையை நீடித்ததன் மூலம் நமது பொருளாதாரப் பளு குறைய ஆரம்பித்திருப்பது, மற்ற நல்ல திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வழிகோலும். இந்த நல்ல முடிவை பைனான்ஸ் கமிஷன் செய்திருக்கிறது; மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து சேதுசமுத்திரத் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அந்தத் திட்டமில்லை என்றால், நமக்கு மட்டுமல்ல தூத்துக்குடி துறைமுகத் திட்டத்துக்கே கெடுதல் ஏற்படும். சேது வாய்க்கால் வெட்டினால் தான் தூத்துக்குடித் துறைமுகம் நஷ்டமில்லாமல் ஓடமுடியும். ஆகவே இதையும் வற்புறுத்தி, அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற இடங்களில் மட்டும் செயல்படுவது போதாது. அதைப் பஞ்சாயத்து அளவுக்கு இல்லை என்றாலும், நகரப் பஞ்சாயத்து அளவுக்காவது விஸ்தரிக்க வேண்டும். கிராம மக்கள் வீடில்லாமல் கஷ்டப்படுவதைத் தீர்க்க ஏதாவது உதவி செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாட்டை ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லவில்லை. அதை வரவு-செலவுத் திட்டம் வரும்போதாவது சேர்த்து அறிவிக்க வேண்டும். இது முக்கியமான பிரச்சினை என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் உற்பத்தியைப் பெருக்கினாலன்றி, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியம். தற்போது நமக்குத் தேவை அதிகமாக இருக்கிறது. அதற்குத் தகுந்தபடி விலையும் ஏறிக்கொண்டே போகிறது. மாநில அரசை நாங்கள் சொல்லும் குறையெல்லாம் வேறொன்றுமில்லை. இந்த விலைவாசி ஏறிக்கொண்டு போவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாதனங்களையும், உதவிகளையும் மாநில அரசாங்கம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஏராளமாக பொருட்களை உற்பத்தி செய்து, அதன் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். விலைவாசி ஏறிக்கொண்டிருக்கும் போது, நாம் தாராளமாக பொருட்கள் கிடைக்க வழி செய்தால் ஓரளவுக்கு அது திருப்தியைக் கொடுக்கும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஒரு விவசாயி அவனுடைய காட்டில் விளைந்த பருத்தியை 8 அணாவுக்கு விற்றுவிட்டு கடையில் போய் நூலோ, துணியோ வாங்கும்போது, 8 ரூபாய் கொடுத்து வாங்குகிறான். விவசாயி வாங்குகிற பொருட்கள் எல்லாம் ஒன்றுக்குப் பத்தாக, இருபதாக விலைகள் ஏறிவிட்டன. நெல் விலையை இப்போது ஏற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் விவசாயிக்கு நஷ்டம் வருகிறது. ஏனென்றால், கண்ட்ரோல் விலைக்கு 59 ரூபாய்க்கு யூரியா மூட்டை கிடைப்பதில்லை. 130 ரூபாய் கொடுத்து உரம் வாங்க வேண்டியிருக்கிறது. பூச்சிக்கொல்லி மருந்து 10 அணாவுக்குக் கிடைத்து வந்தது. இன்றைக்கு 10 ரூபாய் கொடுத்தாலும் கிடைக்கவில்லை. பழைய மாதிரி விதைகளை விதைத்தால் பூச்சி மருந்து தேவையில்லை. ஒட்டு விதை கொடுக்கப்படுவதால், பூச்சிகள் தாக்குகின்றன. இதற்கு மருந்து இல்லாமல் போனால் பாழாகிவிடும். பூச்சிக்கொல்லி மருந்து தாராளமாகக் கிடைக்கச் செய்ய இந்த அரசு தவறிவிட்டது என்று நான் சொல்லாமலிருக்க முடியாது. பூச்சிக்கொல்லி மருந்தும் உரமும் தாராளமாகக் கிடைக்க அரசாங்கம் வழி செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் பலமுறை சொல்லுகிறார்கள், மூன்று லட்சம் டன் நமக்குத் தேவை, ஒரு லட்சம் டன்தான் கிடைத்தது என்று. அதுகூட சரியானபடி விநியோகிக்கப்படவில்லை. விநியோக இயந்திரம் சரியானபடி அமைக்கப்படவில்லை. நகரத்தில் ஒருவர் வாங்கி, அங்கேயே அதிக விலைக்கு விற்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுகிறது. உண்மையில் தேவையானவர்களுக்கு உரம் கிடைப்பதில்லை. யார் யாருக்கோ விநியோகிக்கப்படுகிறது. ஒருவருக்கு நஞ்செய் சாகுபடி செய்வதற்கு நிலம் இருக்கிறது என்பதற்காக உரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் தேவையில்லாத ஒருவர் நெல்லுக்குப் போடுகின்ற உரத்தை வாங்கிக் கொண்டு போய் விற்றுவிடுகிறார். இவற்றையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும். கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள் சரியானபடி உரத்தை விநியோகிக்க தக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும். இந்த மாதிரியான குறைபாடுகள் ஏற்படுவதால், விவசாயிகளுக்குக் கஷ்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரிசி பற்றாக் குறை என்பதில்லை. இதை நான் சொல்ல வேண்டியதில்லை. அமைச்சர்களே சொல்லுகிறார்கள். நமக்குத் தேவையான அரிசி போக மீதியை மற்ற மாநிலங்களுக்கு, அவர்கள் கஷ்டத்தைப் போக்க அனுப்புகிறோம். கர்நாடகத்திற்கு அனுப்பியிருக்கிறோம். குஜராத்துக்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறோம். மேற்கு வங்காளத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அப்படியிருந்தும் நம்முடைய மாநிலத்திலே சில பகுதிகளில் படி அரிசி ரூ. 4·50 விற்கக் காரணம் என்ன? ஏன் அவர்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும். எல்லை ஓரங்களில் உள்ள பகுதிகளில் முழு ரேஷன் கொடுத்து, போதிய அரிசியைக் கொடுத்தால், ஏன் 4½ ரூபாய்க்கு விற்க வேண்டும்? கன்னியா குமரி ஜில்லாவில் 4½ ரூபாய் கொடுத்தாலும், அரிசி கிடைக்கவில்லை. அவர்களுக்கு ரேஷன் கொடுக்கிறோம். 12, 16 அவுன்சு கொடுக்க நம்மிடம் அரிசி இருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஏன் அதைக் குறைக்க வேண்டும்? அங்கிருந்து அரிசி வெளியே போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள். மற்ற மாநிலங்களுக்குப் போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். அத்துடன் மட்டு மல்லாமல், போதுமான அரிசி அந்த ஜில்லாவுக்கு சப்ளை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான், அங்கே அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை நான் பேசும்போது முதலமைச்சர் அவர்கள் நான் சொன்னதைப் பாராட்டினார்கள். உணவு விநியோகத்திலும், உர விநியோகத்திலும், அதைக் கையாள்பவர்களே திருடுகிறார்கள். அதைக் கையாள்பவர்கள் திருடி பிடிபடுகிறார்கள். நான் சொல்கிறேன், நம்மிடம் சட்டம் இல்லையா, டி. ஐ. ஆர். எதற்கு இருக்கிறது? அவர்கள் பேரில் பிரயோகிக்காமல் அந்த டிபன்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸ் எதற்கு இருக்கிறது என்று கேட்கிறேன். நான்காயிரம் மூட்டை நெல், ஐயாயிரம் மூட்டை நெல் என்று எடுத்துக்கொண்டு போய்விடுகின்றான், அவன் விற்றுவிட்ட பிறகு, அவனைக் கைது செய்து, அவனுக்கு ஆறு மாதம் மூன்று மாதம் என்று, அதுவும் மூன்று வருஷங்கள் கழித்து கேஸ் போட்டு, நடத்தி, அவனை தண்டிக்கிறார்கள். அதுவரைக்கும் பார்த்துக்கொண் டிருக்க வேண்டுமா? முதலமைச்சர் அவர்களை பல விஷயங்களில் நான் பாராட்டியிருக்கிறேன். ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் மிகவும் தாராளமாக நடப்பது மாநிலத்திற்கு நல்லதல்ல. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும் என்பார்கள். ஆனால் நமது அரசு கேட்பதே இல்லை. அப்படியே தாராளமாக அவர்களை விட்டுவிடுகிறார்கள். கண்டபோதே நடவடிக்கை எடுக்க வேண்டும் திருடுபவர்கள்மீது.

அதே மாதிரி உரம். நேற்று மதுரையில் 100 டன் உரத்தைக் காணோம் என்கிறான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு தாராள மனப் பான்மை காட்டிக்கொண்டிருப்பது சரியல்ல. அரசு அன்று கேட்கும் என்பது போல, அன்று அல்ல, ஒரு மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் தடுக்க முடியும். ஆகவே, அதைக் கண்டபோதே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கின்றேன்.



அண்மையில் ஓராண்டு காலமாக தேசத் தலைவர்களின் சிலைகள், பங்கப்படுத்தப்படுகின்றன. இது ஜனநாயகத்திற்கு ஒவ்வாத ஒன்று. மக்கள் இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். இது எங்கே போய்விடும்? யாரோ விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வாலிபர்கள், 4, 5 பேர்கள், இந்த தேசத்தின் பிதா, சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தியின் சிலைக்கு பங்கம் விளைவித் திருக்கிறார்கள். நேருவின் சிலைக்கு பங்கம் விளைவிக்கிறார்கள். அண்மை யில் பாரதியாரின் சிலைக்குக்கூட பங்கம் விளைவித்திருக்கிறார்கள், பட்டப்பகலிலே. இதை இப்படியே விட்டுக் கொண்டிருந்தால், இது எங்கே போய் முடியும்? அரசியல் தலைவர்கள், சிலைகள் பல இடங் களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சிலைக்கும் 24 மணி நேரமும் பாதுகாப்பு கொடுத்துக்கொண்டிருக்க முடியுமா? அவர்களைப் பிடித்து ஏன் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை]

அடுத்தபடியாக, நீர் வளங்களை தேசியமயமாக்குதல். இன்டர் ஸ்டேட் ரிவர்ஸ் சம்பந்தமாக ஒரு திருத்த மசோதா கொண்டு வந்திருக் கிறார்கள். நமது மாநில அரசின் அபிப்பிராயம் கேட்கப்பட்டிருக்கிறது. மாநில அரசு அபிப்பிராயம் சொல்லும்போது, ஏதோ அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறதாக நான் கேள்விப்பட்டேன். இதை நன்றாக ஆழ்ந்து சிந்தித்துத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், உதாரணமாக, கேரளா இருக்கிறது. கேரள எல்லையிலேயே மழை பொழிந்து, அங்கேயே ஆறுகளாக மாறி, சமுத்திரத்திற்குப் போய் விழுந்துகொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரெல்லாம் தமிழ் நாட்டுக்குத் திருப்பிவிடப்பட வேண்டும் என்று கேட்கின்றோம். அவர்கள் தங்கள் மாநிலத்திற்குள்ளே மழை பொழிந்து, தங்கள் மாநிலத்திலேயே நதியாக இருக்கக்கூடியதை அடுத்த மாநிலத்திற்குக் கொடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கமாட்டோம் என்று சொன்னால், நாம் என்ன செய்வது? ஆகையினால் நமது மாநிலத்திற்கு உள்ளே இருக்கிற விஷயத்தில் மத்திய சர்க்கார்தான் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று கேட்கின்றேன். இங்கேயுள்ள வைகை ஆற்றுத் தண்ணீரைப்பற்றியோ, தாம்பிரபரணி தண்ணீரைப் பற்றியோ, மத்திய சர்க்காருடைய அதிகாரம் என்ன செய்யமுடியும்? நாம் தான் அதைக் கட்டுப்படுத்தப் போகிறோம். சட்ட பூர்வமாக இதில் இருக்கும் சிக்கல் என்ன என்று தெரியவில்லை. இதிலே நாம் ஒத்துழைத்தால், காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். கேரளத்திலே யிருந்து பல நதிகளின் தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது. நாளாவட்டத்தில் அவற்றையெல்லாம் அடைவதற்கு மத்திய அரசிடம் இந்த அதிகாரங்கள் இருப்பது நல்லதல்லவா என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடும்பக் கட்டுப்பாடு விஷயமாக நாம் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி கொஞ்சம் தளர்ச்சி அடைவதாகத் தெரிகிறது. ஆகையினாலே அதிலே முனைப்பு ஏற்படுத்த வேண்டும். அத்தோடு படித்தவர்கள் மத்தி

யிலேயே இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வருவதாக பொதுவான ஒரு புகார் இருந்துகொண்டிருக்கிறது. படியாத வர்கள் மத்தியிலும் சேரிவாழ்வோர் மத்தியிலும் இந்தத் திட்டத்தை முக்கியமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அதிக ஜனத்தொகை உள்ள இடங்களில் இதை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகக் கவர்ச்சிகரமாக இந்தத் திட்டம் நடைபெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு விஷயமாக நான் பலமுறை இந்த அவையில் பேசி யிருக்கின்றேன். அன்றைக்கெல்லாம் நம்முடைய பேச்சு அரசாங்கத்திற்கு ஏறவில்லை. முப்பது நாற்பது கோடி ரூபாய்க்காக வேண்டி நாம் மதுவிலக்குச் சட்டத்தை நிறுத்தி வைக்க அல்லது ரத்து செய்ய வேண்டாம், இதனால் பின்னால் மிகவும் கஷ்டப்படும் என்று சொன்னேன். இன்று நமது முதலமைச்சராக மட்டும் இல்லாமல் நிதியமைச்சராகவும் அவர்களே இருப்பதனால், அதனுடைய கஷ்டத்தை நன்றாக அவர் உணர் கிறார் என்று தெரிந்துகொள்கிறேன். 35, 40 கோடி ரூபாய் திடீ ரென்று போனால், நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போது எவ்வளவு அவர் கஷ்டப்படுவார் என்பதை என்னால் உணர முடிகின்றது. இதற்குக் காரணம் நாமே வருவித்துக்கொண்ட தொல்லைதான். இந்த மதுவிலக்குச் சட்டத்தை நிறுத்தி வைக்காமலிருந்தால், இந்த நஷ்டம் நமக்கு வராது. இதைச் சரிப்படுத்த வேண்டிய கஷ்டமும் வராது. அந்த நிலைமை இப்போது ஏற்பட்டது. கடைசியில், "better late than never" என்ற மாதிரி இல்லாமலேயே இருப்பதைக் காட்டிலும் மதுவிலக்கை இப்பொழுதாவது பூரணமாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முடிவு செய்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அன்னிய மது வகைகளுக்குக்கூட மிகவும் கட்டுப்பாடு செய்ய வேண்டும். ஏராளமாக கடைகளை வைத்துவிட்டிருப் பதில் பிரயோஜனம் இல்லை. அவற்றையும் நாம் குறைத்து, ஒரு ஜில்லாவுக்கு அதன் தலைநகரில் மட்டும் ஒரு கடை என்று வைத்து, முக்கியமாக நோயாளிகள் யாருக்காவது கொடுக்கக் கடைகளை வைத்து, மற்ற கடைகளையெல்லாம் மூடுவதாக அறிவித்து வருகிற செப்டம்பரிலே இருந்து அடியோடு நிறுத்திவிடுங்கள். ஏனென்றால், இதில் நஷ்டம் 50 கோடி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். நமது மாநிலத்தின் வருமானம் 450 கோடியாகும். அதற்குக் குறையாது. பட்ஜெட் ஃபிகர்ஸ் விஷயமாகச் சொல்லக் கூடாது. அது எனக்குத் தெரியாது. நான் சொல்வது உண்மையாகக் கூட இருந்தாலும் இருக்கலாம். 450 கோடிக்குக் குறையாமல் இருக்கலாம். 450 கோடி ரூபாயையும் மக்களின் நன்மைக் குத்தானே செலவிடப்போகிறோம். அதிலே ஒரு 50 கோடி குறைந்து விட்டால் பரவாயில்லை. மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மையில் ஒரு 50 கோடி ரூபாய் அளவுக்குத் தானே குறையும். 450 கோடியையும் அவர்களுக்குத்தானே செலவழிக்கப்போகிறோம். ஆகவே மொத்த வரு வாயில் ஒரு 50 கோடி ரூபாய் குறைந்தாலும் பரவாயில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கே 50 கோடி ரூபாய் குறையும். பாண்டிச்சேரியிலே ஒரு கோடி தான் குறையும் என்கிறார்கள். அங்கே தங்களுடைய கட்சி ஆட்சிக்கு வந்தால் அதைப் பொருட்படுத் தாமல் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவருமா ?



திரு கே. ராஜாராம் : இதை நான் கடைசியிலே சொல்லலாம் என்று இருந்தேன். இப்பொழுதே முதலமைச்சர் அவர்கள் கேட்டுவிட்டார்கள். மாநில சுயாட்சி என்று பேசுகிறார்கள். அவர்களுக்கும்—பாண்டிச்சேரி மக்களுக்கும்—மாநில சுயாட்சி இருக்கிறது ; அதை முடிவு செய்ய வேண்டி யவர்கள் அவர்கள். நாம் போய் நம்முடைய முடிவை அவர்கள்பேரில் திணிக்க முடியாது.

திரு ம. பொ. சிவஞானம் : அதுதான் கேள்வி. அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்துவதற்கு உங்கள் கட்சி பொறுப்பு எடுக்குமா என்பதுதான் பிரச்சினை.

திரு கே. ராஜாராம் : யோசனை சொல்வது அதற்கு மட்டுமல்ல. தேசம் பூராவும் அதுதான். உலகத்திற்கே சொல்லும் யோசனைதானே ஒழிய, பாண்டிச்சேரிக்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் சொல்கிறோம். இல்லை என்று அர்த்தம் அல்ல. அதை ஏற்றுக்கொண்டு, அதை அமல் படுத்தவேண்டியது அந்த அந்த மாநிலத்தாரைச் சேர்ந்தது. எங்கள் கட்சியின் கொள்கை அதுதான். துணைத் தலைவர் அவர்கள் பேசியதற்கு கடைசியிலே பதில் சொல்லலாம் என்று இருந்தேன். அந்த அந்த மாநில அரசுகள் அவர்கள் இஷ்டம்போல் முடிவு செய்கிறார்கள். நாங்கள் போய் அவர்கள் பேரில் ஒரு முடிவைத் திணிப்பதற்கு முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆட்சி வேறு, கட்சி வேறு. ஆட்சி நிறைவேற்றுகின்ற கொள்கைகள் வேறு, கட்சி செய்கின்ற பிரசாரம் வேறு. அந்த வகையில் பாண்டிச்சேரியிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி மதுவிலக்குக் கொள்கையை எப்படி அணுகுகின்றது ?

திரு கே. ராஜாராம் : அந்த பாண்டிச்சேரி மக்களுடைய அபிப்பிராயத் திற்கு இணங்க அது நடக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாண்டிச்சேரி மக்களுடைய அபிப் பிராயம் என்ன ?

திரு கே. ராஜாராம் : பாண்டிச்சேரி மக்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதை அவர்கள் தேர்தல் ஆரம்பிக்கும்போது பிரகடனம் செய்வார்கள். அதுபற்றி நான் சொல்வதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? அவர் களுடைய உரிமையில் நான் தலையிட முடியாது, அவர்களுடைய விஷயத் தில் யோசனை சொல்வதற்கான இடம் நமது சட்டசபை அல்ல. அவர் களுடைய விஷயத்தில் நாம் தலையிட முடியாது. அவர்களுக்கு யோசனை நான் சொல்வேனே தவிர, இந்த இடத்தைப் பொறுத்தவரையில் இந்த மாநில காங்கிரசுக்கு என்ன கொள்கை என்று கேட்டால் உத்தியோக பூர்வமாக, அதிகார பூர்வமாகச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக் கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாண்டிச்சேரியிலே இரண்டு காங்கிரசும் வெற்றிபெற்று ஒருவேளை ஆட்சி அமைத்தால், அங்கே இருக்கிற எம். ஜி. ஆர். கட்சியினர் கள்ளுக்கடைகள்முன் மறியல் செய்ய இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களைக் கைது செய்வீர்களா ? என்ன செய்வீர்கள் ?

திரு கே. ராஜாராம் : கள்ளுக்கடை, சாராயக் கடை அப்பொழுது இருந்தால், அவர்கள் மறியல் செய்தால், நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே ? அதுதானே செய்வார்கள். இதைக் கேட்கவா வேண்டும், எங்கள் அரசு ஏற்பட்டால் அப்போது பார்த்துக்கொள்வோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால், காங்கிரஸ்கட்சி வந்த பிறகு, கள்ளுக்கடை சாராயக்கடை இருந்தால் என்பதிலேயிருந்து இருக்காது என்பதாக நான் யூகிக்கிறேன்.

திரு கே. ராஜாராம் : இருக்காதா அல்லது இருக்குமா என்பதை அவர்கள் முடிவு செய்ய வேண்டும். அவர்களுடைய சுயாட்சி அது. நாங்கள் எப்படி முடிவு செய்ய முடியும் ? அவர்களுக்கு மாநில சுயாட்சி இருக்கிறது. அவர்களுக்கு மாநிலத்தில் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் என்ன முடிவு செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். நான் யார் அதைப் பற்றிச் சொல்வதற்கு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த அடிப்படையில் மாநில சுயாட்சியை தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ?

திரு கே. ராஜாராம் : அதற்கு நான் வருகிறேன். பூரா விவரத்தையும் பேசுகிறேன். இன்னும் ஒரு 5 நிமிஷத்திற்குள்ளே இதை முடித்துவிட்டு வருகிறேன். ஒரு வார்த்தையில் பதில் சொல்லக்கூடிய விஷயம் அல்ல அது.

அண்மையில் ஏற்பட்ட மாணவர் கிளர்ச்சி ஒருவாறு நிறுத்திக்கொள்ளப்பட்டுவிட்டது. அது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய விஷயம். ஒரு பெரிய பூதம்போல் கிளம்பிய மாணவர் கிளர்ச்சி நிறுத்திக்கொள்ளப் பட்டது எல்லோருக்கும் நல்லது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலேயும் அதற்கு ஒரு தீர்மானம் போட்டு, அவர்களை வேண்டிக்கொண்டோம். இனிமேல் மாணவர்கள் இம்மாதிரிக் கிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டாம், பெற்றோர்களிடமும், அரசியல் கட்சிகளிடமும் இந்த விஷயங்களை விட்டு விடுங்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். அவர்களும் கிளர்ச்சியை நிறுத்திவிட்டார்கள். அரசினரும் நல்லபடியாக இப்பொழுது மாணவர்கள் விஷயத்தில் நடந்துகொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏதேனும் அவர்கள் பேரில் தடைகள் இருக்குமானால், அவர்களும் நமது பிள்ளைகள்தானே, அவை உறுத்திக்கொண்டு இருக்கும்படியாக விட்டுவிடாமல், இந்த சபையிலேயே நல்ல முடிவை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் பேரில் இருக்கக்கூடிய நடவடிக்கை [illegible]க்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கின்றேன்.





[பிற்பகல் 6–20]

நமது நாடு குடியரசாகி 24 ஆண்டுகள் ஆகின்றன. 1950-ஆம் ஆண்டு, ஜனவரி 26-ஆம் தேதியன்று குடியரசென்று பிரகடனப்படுத்தினோம். அதற்காக ஒரு சட்டத்தை, அரசியல் நிர்ணயச் சட்டத்தை ஏற்படுத்தினோம். அதை அடிப்படையாகக் கொண்டு, இந்தக் குடியரசு நடந்து வருகிறது. அந்தச் சட்டத்திலே, நாட்டின் ஆட்சியை இரண்டு விதமாகப் பிரித்து, மத்திய ஆட்சி என்றும், மாநிலங்களின் ஆட்சி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே மாநிலங்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள், மத்திய ஆட்சிக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 24 ஆண்டுகளுக்குப் பிறகு, அவைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கிறோம். நாம் 24 ஆண்டுகள் குடியரசை அனுபவித்து, ஆட்சியை நடத்தினோம். காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் நடத்தினோம். அதற்குப் பின் மாற்றுக் கட்சியாக இருந்த, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநிலத்தில் ஆட்சி புரிந்து வருகிறது. எல்லோருடைய அனுபவமும் தெரியும். அடிக்கடி சட்ட அமைச்சரவர்கள் தங்களுக்குள்ள குறைகளை, மாநில அரசுக்குள்ள கஷ்டங்களை எடுத்துச்சொல்லும்போது, நாம் அனுதாபப்பட வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்குவதற்கு என்ன வழி ? சட்டத்தைத் திருத்த வேண்டுமா ? அல்லது அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டுமா என்று சிந்திக்க வேண்டும். இது ஒரு மாநிலத்தைப் பற்றிய விஷயம் மட்டுமல்ல. நம்மைப்போல் 20 மாநிலங்கள் இருக்கின்றன, இந்த தேசத்தில். எனவே அதற்கான சூழ்நிலைகளை உண்டு பண்ண வேண்டும். எல்லா முதலமைச்சர்களும் வருஷத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை சந்திக்கிறார்கள். அப்போது தனியாக நாம் பேசி, இன்னின்ன அதிகாரங்கள் மத்திய அரசினுடைய கையில் இருப்பதால், மாநில நிர்வாகத்திற்கு ஊறு விளைவிக்கிறது ; நடவடிக்கைகள் தாமதப்படுகின்றன; சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். அவற்றை மாற்றுவதற்கு அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும். அதை நமது முதலமைச்சரவர்களே "லீட்" பண்ணலாம். இந்த தேசத்திலே, நமது மாநிலத்தில்தான், ஒரு மாற்றுக் கட்சி அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. எனவே நமது முதலமைச்சரவர்கள் "லீட்" பண்ணி, மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எழுதி, எந்தெந்த அதிகாரங்கள் வேண்டுமென்று "ஸ்பெசிபிக்"-ஆகச் சொல்லி, அவைகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு, மாநில சுயாட்சி வேண்டுமென்று சொன்னவுடன், "பார்த்தாயா இவர்கள் சுதந்திரமாகப் பிரிந்துவிடக்கூடிய ஆட்சி கேட்கிறார்கள்" என்ற ஆட்சேபணை எழுகிறது. அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. "இல்லை, இல்லை, அதிக அதிகாரங்கள்தான் வேண்டுமென்று சொல்வதுதான் மாநில சுயாட்சி" என்று அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இதைக் காட்டிலும், அதிக அதிகாரங்கள் வாங்குவதற்காக வேண்டி, மாநில முதலமைச்சர்கள் கலந்து பேசி, இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மத்திய அரசு அதைப் புறக்கணிக்க முடியாது. நம்முடைய அனுபவத்தை வைத்து, இன்னின்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லுங்கள். அதற்கு என்னுடைய மனப்பூர்வமான ஆதரவு இருக்கிறது. மாநில சுயாட்சி

என்று பேசுவது, நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லும் சிலருக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது. முதலமைச்சரவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரிவினைக் கோஷம் போடும் சில கட்சியினருக்கு அது ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமலிருப்பதற்காக மாநில சுயாட்சி என்ற பதம் வேண்டாம். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேளுங்கள். அதற்கு எங்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பைக் கொடுக்கிறோம். மாநில சுயாட்சி என்பது மின்டோ மார்லி சீர்திருத்தத்திலேயே வந்திருக்கிறது. "லா மினிஸ்டர்" அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது ஆங்கிலேயர்கள் நம்மை அடக்கி ஆண்ட காலத்திலேயே வந்துவிட்டது. இரட்டை ஆட்சி என்று சொல்லி, சில அதிகாரங்களை நம்மிடத்திலும், சில அதிகாரங்களை அவர்களும் வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம் வந்தது. அதிலும் இந்த மாநில சுயாட்சி சொல்லப்பட்டது. "ப்ரொவின்ஷியல் அடானமி" என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போதும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கண்டு நாம் ஏமாந்துவிடவில்லை. அதை நிராகரித்தோம். அதற்காகச் சிறை சென்றோம். அதற்குப் பின்னால் சைமன் கமிஷன் வந்தது. 1935-ம் ஆண்டில் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலும் மாநில சுயாட்சி என்ற வாக்கியத்தைப் போட்டிருந்தார்கள். மாநில சுயாட்சி என்ற பதம் கெட்ட பதமல்ல. விஷமிகளுக்கு அந்தப் பதம் இடம் கொடுக்கிறது. மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக ஆட்சி கேட்கிறது; அதுதான் மாநில சுயாட்சி என்ற விதத்தில் இருக்கிறது. அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்லும் விஷயத்தில், நான் மற்றவர்கள் சார்பாகச் சொல்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதில், எந்தக் கட்சியும்ஆட்சேபணை சொல்ல முடியாது. நாட்டு நலனில், தேச நலனில், தேச ஒருமைப்பாட்டில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், நாடு ஒன்றாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்வதை ஆட்சேபிக்கமாட்டார்கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லும் போது, மதுவிலக்கு அமல்படுத்தப்படாமல், மதுக் கடைகள் திறப்பது மக்களுக்குக் கெடுதலை உண்டாக்குகிறதென்று உறுதியாகச் சொன்னார்கள். இதே கெடுதல் வேறொரு மாநிலத்தில் இருக்கிறதென்று சொல்லும்போது, அது அந்த மாநிலத்து மக்களின் உரிமையைப் பொறுத்ததென்று சொன்னார்கள். நான் இதன் அடிப்படையில் ஒன்றைக் கேட்கிறேன். இந்த மாநில மக்களில் பெருவாரியானவர்கள் பிரிந்து போக உரிமை வேண்டுமென்ற அடிப்படையிலே, ஒரு சுயாட்சி அடிப்படையிலே ஒரு கூட்டாட்சி அமைக்க வேண்டுமென்று கருதுவார்களானால், அதை ஏற்கிறார்களா? அல்லது அத்தகைய உரிமை தவறு; அது விஷமத்தனம் என்று சொல்வது நியாயமானதென்று கருதுகிறாரவென்று அறிய விரும்புகிறேன்.





திரு. கே. ராஜாராம் : நான் இதற்குப் பதில் சொல்லத் தயாராக இல்லை. பதில் இல்லை. பதில் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் :—தலைவரவர்களே, on a point of clarification. இன்று 6½ மணிக்கு வேறு ஒரு நிகழ்ச்சி இருப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினார்கள். எனவே இன்றைய தினம் முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறாரா? அல்லது நாளைய தினம் பதில் கூறப் போகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றுதான் கூறப்போகிறார்.

திரு கே. ராஜாராம் : நமது ஆளுநர் உரையில் கடைசிப் பக்கத்தில் இறுதியில் எழுதியிருக்கும் எழுத்துக்கள் என்னுடைய மனதைக் கவர்ந்தன. "மத்தியக் கிழக்கில் அண்மையில் மூண்ட போர், அதனையடுத்து நிகழ்ந்த விளைவுகள் இவற்றால் உருவான எண்ணெய் நெருக்கடி நாட்டு நிலவரத்தை முன்னெப்போதையும் விட மிகக் கடுமையாக்கியுள்ளது. நாட்டின் நிலைத்த மேம்பாடு, சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி இவற்றுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் மொத்த அமைப்பும் இந்த நிலைமைகளால் நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையொட்டிப் பரிசீலனை செய்யப்பட வேண்டியுள்ளது. முதலமைச்சர்கள் அளவில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டிய அளவிற்குச் சூழ்நிலை மிகக் கடுமையாகவுள்ளது எனத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதன் மூலம் குறுகிய காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் உரிய கொள்கைகளை வகுத்து, நாட்டு முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் இச் சோதனைகளைச் சமாளித்து அக்கொள்கைகளைச் செயற்படுத்தவியலும் என்று அரசு கருதுகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திற்கு மாறுபாடு இருக்க முடியாது. அது நல்லதொரு யோசனை, அதை நாங்கள் வரவேற்கிறோம். அடுத்தபடியாக, கவர்னர் உரையில் விட்டுப்போன சில விஷயங்களைப் பற்றி—இதையெல்லாம் சொல்லியிருக்க வேண்டும் என்று—என்னுடைய கட்சியின் சார்பில் திரு எல். பலராமன் அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங்களை ஆதரித்துப் பேசி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 6.30

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது இந்த மாமன்றத்தில் கடந்த ஏழு நாட்களாகவும், இன்றும் நடைபெற்றுள்ள விவாதத்தில் எதிர்க் கட்சியின் தலைவர் அவர்களும், இங்கேயுள்ள எதிர்க் கட்சிகள், தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் மிகச் சீரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மாறுபட்ட கருத்துக்கள் பல கூறப்பட்டிருந்தாலும், விவாதத்திற்கு ஏற்ற வகையில், நாகரீக அடிப்படையில் எடுத்துச் சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று இல்லாவிட்டாலும், அந்தக் கருத்துக்கள் மிக்க பண்பின் அடிப்படையிலே எடுத்துச்சொல்லப்பட்டவையே என்கின்ற முறையில், கருத்துக்களை வழங்கியுள்ள மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையின் தொடக்கத்தில் பெரியார் அவர்களுடைய மறைவு குறித்து எடுத்துச் சொன்னதை மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவரும் இந்த மாமன்றத்திலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய நண்பர் திரு தாமோதரன் அவர்கள் பெரியார் அவர்களுடைய நினைவாக நினைவு மண்டபம் கட்டுவதைவிட, சிலைகள் அமைப்பதைவிட, அவருடைய மறைவைப் பிரதிபலிக்கின்ற கருத்துக்களை தமிழிலே மட்டுமல்ல, பிறமொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து, இந்தியா முழுமைக்கும், ஏன் கடல் கடந்த நாடுகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்; அது தான் நாம் பெரியார் அவர்களுக்குக் காட்டுகின்ற நன்றிக் கடன் என்று குறிப்பிட்டார்கள். அதனை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றேன். பெரியார் அவர்களின் இரங்கல் தீர்மானத்தின் போது கூறிய அந்தக் கருத்தின் அடிப்படையிலே, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ் நாட்டில் ஜாதி சமய வேறுபாடுகள், கடவுள்களின் பெயரால் ஏற்படுகின்ற குழப்பங்கள் இவைகளையெல்லாம் தீர்ப்பதற்கு மதத் தலைவர்களும், ஏனைய சீர்திருத்த எண்ணம் உடைய பெரியோர்களும் ஒன்றாகக் கலந்து ஒரு குழுவாகக் கூடி, இவைகள்தான் தமிழ் நாட்டில் பின்பற்றக்கூடிய கொள்கைகளாக கடவுளின் பெயராலேயும், மதத்தின் பெயராலேயும், சமுதாய அடிப்படையிலேயும் இருந்திட வேண்டுமென்கிற ஒரு திட்டவட்டமான கொள்கை எடுத்திட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், அரசியல் மாறுபாடு உணர்ச்சியில்லாமல், அதைப் போலவே மத வாதிகளும், வைதீக எண்ணம் கொண்டவர்களும் கூட தவத்திரு குன்றக்குடி அடிகளார் சொன்ன கருத்தை ஆராய்ந்து பார்த்து, தங்களுடைய எண்ணங்களை அரசுக்கு எழுதுவார்களேயானால், அரசு முன்னோடியாக இருந்து, அந்தக் காரியத்தைச் செய்வதற்குத் தயங்காது என்பதை நான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், தமிழ் அரசுக் கழகத் தலைவர், மேலவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் இங்கே பேசுகின்ற நேரத்தில், இன்றைக்கு இந்தியாவிலேயே மிக ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட இலங்கைப் பிரதமர், இந்திய பிரதமர் ஆகியோரிடையே பேச்சு வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இலங்கையிலே உலகத் தமிழ் மகாநாட்டை ஒட்டி நடைபெற்ற அமளியில் வேதனைப்படத்தக்க சம்பவங்கள் நிகழ்ந்து விட்டதைப் பற்றியும், அதைப்பற்றி இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பதையும், இலங்கை நாட்டின் அளவிலே உள் நாட்டுப் பிரச்சினையாகக் கூட கருதாமல், அதையே சர்வதேசப் பிரச்சினை என்கின்ற நிலைமையிலே அணுகி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் தமிழ்அரசு கழகத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். குறிப்பிடும் போது, அந்த வேகத்திலேயே இலங்கைப் பிரதமர் டெல்லிக்குச் செல்லுகின்ற வழியில் சென்னைக்கு வந்தபோது, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சென்று வரவேற்றது பண்பின் அடிப்படையிலே இருந்தாலும், நான் அதைப் பாராட்ட முடியாமல் இருக்கின்றேன் என்று சொன்னார்கள். அவர்கள் பண்பாட்டைப் பாராட்டிவிட்டு, என்னைப் பாராட்





டாததற்காக நான் வருத்தப்படவில்லை. பாராட்டப்படவேண்டியது பண்பு என்ற அளவிலேயே அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் பண்பின் அடிப்படையிலேயும், அரசியல் மரபுகள், அரசியல் நாகரீகம் என்ற அடிப்படையிலேயும், இலங்கையினுடைய பிரதமர் இந்தியாவுக்கு வருகிற நேரத்தில், நான் வரவேற்க வேண்டிய கடமையைப் பெற்றவன் என்ற முறையிலே வரவேற்கிறேன் என்பதையும், அப்படி வரவேற்கிற அதே நேரத்திலே தமிழர்களுக்கு இலங்கையிலே ஏதாவது கொடுமைகள் இழைக்கப்பட்டால், அவர்களைக் கண்டிக்கின்ற அந்த நெஞ்சு அழுத்தங்களும் உண்டு என்பதையும் நிச்சயமாக நாம் மறந்துவிடக் கூடாது. மறந்துவிடவில்லை என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட பெரிதும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வானொலியில் கேட்டது செய்திப் பத்திரிகையிலேகூட வந்திருக்கின்றது. ஏற்கனவே 1964-ஆம் ஆண்டு சிரிமாவோவும் லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கிட்டத்தட்ட 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தம் போக, இந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்கள் நாடற்ற மக்களாக விடப்பட்டார்கள். இலங்கையில் அந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களுடைய பிரச்சினையை பிறகு தீர்த்துக்கொள்ளலாம் என்பதை 1964-ஆம் ஆண்டு ஒத்தி வைத்தார்கள். 10 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1974-ல் இப்போது அதைத் தீர்த்து விட்டதாக இன்றைக்குச் செய்தி வந்திருக்கின்றது. செய்தியை வெளியிட்டிருக்கின்ற பத்திரிகை இதன் மூலமாக இலங்கை-இந்தியர்கள் பிரச்சினை முழுவதும் தீர்ந்து விட்டது என்கின்ற குறிப்பைக் கோடிட்டிருக்கின்றது. எப்படி அவர்கள் தீர்வு கண்டிருக்கின்றார்கள் என்றால் இலங்கையிலே நாடற்ற நிலைமையிலே இருக்கின்ற ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் இந்தியர்களில் 75 ஆயிரம் பேர்களை இலங்கை ஏற்று குடி உரிமை அந்தஸ்து தர வேண்டும் என்றும், மீதமுள்ள 75 ஆயிரம் பேர்களுக்கு இந்தியக் குடி உரிமைத் தகுதி தர வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களில் 75 ஆயிரம் பேர்களுக்கு இலங்கை குடியுரிமை தகுதி தந்துவிட்டால், மீதமுள்ள 75 ஆயிரம் பேர்களையும் நாம் இங்கே ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு குடியுரிமை அந்தஸ்தை நாம் தந்துதான் ஆக வேண்டும். இந்த 75 ஆயிரம் பேரில் பெரும்பான்மையானவர்கள் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர்கள் தமிழர்கள், தென் நாட்டவர்கள், நாடற்றவர்கள் இருப்பார்கள். குறிப்பாக தமிழர்கள் தான் என்பதையும் யாரும் மறுக்க இயலாது. நான் இந்த முடிவை வரவேற்கின்ற நிலைமையிலேயே இல்லை. பாராட்டுகின்ற நிலைமையிலே இல்லை. தமிழ் நாட்டு மக்களின் சார்பாக, தமிழக அரசின் சார்பாக என்னுடைய வேதனையைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், கண்டனத்தைக் கூடத் தெரிவிக்கின்ற உரிமை நமக்கு உண்டு. ஏற்கனவே 5 லட்சம் தமிழர்களுக்கு நாம் இங்கே வாழ்வளிக்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறோம். கடந்த 5, 6 ஆண்டுகளிலே இலங்கையிலிருந்து அனுப்பப்பட வேண்டியவர்கள் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அனுப்பப்படாமல் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு வருகின்ற அளவிலே, 57 ஆயிரம் குடும்பங்களை நாம் ஒரே நேரத்தில் சுமக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு தமிழ் நாட்டு அரசினுடைய தோள் மேல் விழுந்திருக்கின்றது. அதற்கு இந்திய

அரசு உதவி இருந்தாலும்கூட, அந்தப் பெரும் பொறுப்புக்கான ஆக்கப் பணிகளை, வாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டிய அந்தக் கடமைக்கு நம்மிடையேயுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே ஆட்பட்டிருக்கிறோம். இந்த நிலைமையிலேயே மீண்டும் அந்த 75 ஆயிரம் பேர்களில், நாடற்றவர்கள் என்று கருதப்படுபவர்கள், 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு பாதிப் பேர்களை அவர்களும், பாதிப்பேர்களை நாமும் ஏற்று குடியுரிமை பெற்றவர்களாக ஆக்க வேண்டும் என்ற ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பது சரியல்ல. அது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில், 75 ஆயிரம் பேர்கள், என் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களில், முக்கால் பகுதிக்கு மேற்பட்டவர்கள் தமிழராக இருந்தும், தமிழ் நாடு அரசு கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதும் ஒரு வருந்தத்தக்க செய்தியாகும், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலேயே ஒரே ஒரு மாற்றுக் கட்சி ஆளுகின்றது. நம்முடைய தமிழ்நாடுதான் அது என்று சொன்னார்கள். அந்த மாற்றுக் கட்சி ஆளுகின்ற மாநிலத்திற்கு இப்படிப்பட்ட ஒரு மரியாதை தான் மத்திய சர்க்காரிலேயிருந்து கிடைத்திருக்கின்றது என்பதை நாம் இங்கே எடுத்துக்காட்டாமலும் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, இன்னொரு பிரச்சினை. கச்சத் தீவுப் பிரச்சினை. இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினை குறித்து தமிழக அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என்பதைப் பற்றிய விவரங்களைத் தான் அறிய விரும்புவதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு நேரங்களில் நான் பிரதமரைச் சந்தித்த நேரத்தில் அதுபற்றி உரையாடியிருக்கின்றார்கள்.

முன்பு, இந்தியப் பிரதமர் இலங்கை நாடு சென்று திரும்பிய பிறகு, டெல்லியில், நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும், பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, கச்சத்தீவுப் பிரச்சினையை, மிக அதிக அளவுக்கு அவர்களிடம் வலியுறுத்தி, இது தமிழ் நாட்டினுடைய மக்கள் உணர்ச்சி வயப்பட்ட காரியம், இதிலே எந்த அவசர முடிவும் எடுக்கலாகாது, கச்சத் தீவு தமிழர்களுக்குச் சொந்தமானது என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இப்போதும், பண்டாரநாயகா அவர்களை நான் தமிழகத்தில் வரவேற்ற அதே நேரத்தில், ஜனவரித் திங்கள் 16-ஆம் தேதி அவர்கள் டெல்லிக்குச் சென்றுகொண்டிருக்கிற நேரத்தில், நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில்

"The Sri Lanka Survey Map of 1954 also does not include Katcha Deevu as part of Sri Lanka. Historical records indicate that the pearl and chank fisheries on the Tamil Nadu coast belong to the rulers in South India including the Raja of Ramnad since time immemorial. There is ample evidence to show that the Raja of Ramnad exercised property rights over the chank fisheries on the west of Katcha Deevu and also over the rights of Katcha Deevu. He never paid rent or royalty to Sri Lanka Government



at any time.........I do hope that during the ensuing visit of Prime Minister of Sri Lanka, any claim by Sri Lanka Government to Katcha Deevu will be repudiated successfully".

(பிற்பகல் 6-40)

என்று நான் எழுதியிருக்கிறேன். கச்சத்தீவுப் பிரச்சினையில், தமிழ் நாடு மிகுந்த ஆர்வத்தோடும், அது தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கப்பட விடக் கூடாது என்பதில் அக்கறையோடும் இருக்கிறது. இன்னொன்றையும் நான் என்னிடத்தில் பேசிய மத்திய சர்க்கார் அதிகாரிகளிடத்திலும், ஒரு முறை வெளிநாட்டு அமைச்சர் அவர்களிடத்திலும் டெல்லிக்குப் போனபோது சொல்லியிருக்கிறேன். அந்த நேரத்திலும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். கச்சத்தீவு என்பது தமிழ் நாட்டுக்குச் சொந்தம் என்கின்ற முறையில் நீங்கள் எங்களைச் சமாதானப் படுத்திப் புண்ணியம் இல்லை, பயனில்லை. உங்களுக்கு அந்த உணர்வு வரவேண்டும். இநத நேரத்தில் தமிழ் நாடு, இந்தியா என்று பிரிக்காதீர்கள். கச்சத்தீவு இந்தியாவிற்குச் சொந்தம் என்கின்ற உணர்ச்சியோடு, நீங்கள் கச்சத்தீவை இழக்காமல் இருந்திட வேண்டும் என்று நான் அவர்களிடத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். ஆகவே, கடைசி வரையில் தமிழ் நாடு அரசாங்கம், கச்சத் தீவு பறிக்கப்படாமல் இருப்பதிலே அதனுடைய போராட்டத்தை நடத்தும் என்பதை நான் இங்கே மிக அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில், மிக முக்கியமாக நம்முடைய நண்பர், சுதந்திராக் கட்சியின் தோழர் திரு சுவாமிநாதன் அவர்கள், நேற்றைய தினம் பேசுகின்ற நேரத்தில், ஒன்றைச் சொன்னார்கள், திட்டவட்டமாக ஒன்றைச் சொன்னார்கள், அதாவது திட்டங்கள் தேவையில்லை என்ற முறையில். திட்டங்களுக்கு விடுமுறை விடப்பட்டாக வேண்டும் என்று சொன்னார்கள். திட்டங்களுக்கு நாம் ஒரு முறை விடுமுறை அளித்து, அதனுடைய பயனை நாம் அனுபவித்திருக்கிறோம். 1966-67, 1967-68, 1968-69 ஆகிய இந்த ஆண்டுகள், திட்ட விடுமுறை ஆண்டுகளாகக் கருதப்பட்டன. இந்த ஆண்டுகளில் நமக்கு ஏற்பட்ட நிலைமைகளை நாம் சிந்திக்கத் தவறிவிடக் கூடாது. திட்ட விடுமுறை காலத்தில், நெடுங் காலத் திட்டங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அது நாட்டுக்கு நல்லதல்ல. திட்ட விடுமுறையின் காரணமாக, சேலம் இரும்பாலை, நெய்வேலியை விரிவுபடுத்தும் திட்டம், புதிய மின்வசதித் திட்டங்கள், இவைகள் எல்லாம் இடம் பெறாமல் போய் விட்டன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பொதுத் துறையின் மூலதனச் செலவு — இன்வெஸ்ட்மெண்ட் — குறைகிற நேரத்தில், நாட்டிலுள்ள "பர்ச்சேசிங் பவர்" வாங்குகிற சக்தி குறைந்து விடுகிறது. இது திட்ட விடுமுறையினால் ஏற்படுகின்ற ஒரு கொடுமையான விளைவு ஆகும். தனியார் துறையில் கூட, திட்ட விடுமுறையின் காரணமாக மந்த நிலை ஏற்படுகிறது என்பதை நாம் மறக்க இயலாது.

திட்ட விடுமுறையின்போது, இந்தியாவிலுள்ள 600 நூற்பாலைகளில், 100 நூற்பாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கட்டிட வேலை குறைந்துவிட்ட காரணத்தால் இரும்பு, சிமிண்ட் தொழிற்சாலைகளில் பெரிய பிரச்சினை இந்த விடு,

முறைகாலத்தில் ஏற்பட்டது. பல தனியார் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, லட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்தார்கள். இவைகள் எல்லாம் 1966-ஆம் ஆண்டிலிருந்து 1969-ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட திட்டங்களுக்கான விடுமுறையின் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்கள். திட்ட விடுமுறை சுதந்திராக் கட்சியின் கொள்கையாக இருந்தாலும், அல்லது திட்டங்களே தேவை இல்லை என்பது அவர்களுடைய கொள்கையாக இருந்தாலும், அதன் காரணமாக, தமிழ் நாட்டின் தேவைகள் பலவற்றை நாம் இழந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இவைகளையெல்லாம் குறிப்பிட்டேன். ஒருவேளை, திட்டம் மத்திய அளவில் தேவையில்லை, அது மாநில அளவில் இருக்க வேண்டும் என்கின்ற மாநில சுயாட்சிக் கொள்கையின் அடிப்படையில் நண்பர் திரு சுவாமிநாதன் அந்தக் கருத்தைச் சொல்லியிருந்தால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியும். அதை நண்பர் திரு ஆறுமுகசாமி ஏற்கிறாரோ இல்லையோ, ஆனால் மாநில அளவில் தான் திட்டங்கள் போடப்பட வேண்டும் என்று கருதினால், நான் அதை வரவேற்பேன். ஆனால் திட்டங்களே தேவையில்லை என்பது நல்லதல்ல. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அது ஏற்றதல்ல. குறிப்பாக, கவர்னர் அவர்களுடைய உரையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் எவ்வளவு கேட்டோம், எவ்வளவு கிடைக்கும் என்று சொன்னார்கள். எவ்வளவு கொடுக்கக்கூடிய நம்பிக்கை, சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்பதை எல்லாம் நேற்றையதினம் நான் பேரவையில் குறிப்பிட்டிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்கள்பற்றிப் பேசுகிற நேரத்திலும், வரவு செலவுத் திட்டம்பற்றிப் பேசுகிற நேரத்திலும், அவைகள்பற்றிக் குறிப்பிடுவதற்கு வாய்ப்புகள் நிறைய இருக்கும் என்கிற காரணத்தால், அவைகளில் நான் இப்போது நேரத்தைச் செலவழிப்பதற்கு விரும்பவில்லை.

மதுவிலக்குபற்றி இங்கே பேசப்பட்டது. அதிலே நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள், 6-வது நிதிக்குழுவிடத்தில் மதுவிலக்கினால் நமக்கு ஏற்படுகின்ற நஷ்டம் எவ்வளவு என்பதைச் சரிவர நாம் எடுத்துச் சொல்லவில்லை, அப்படி எடுத்துச்சொல்லாத காரணத்தால், நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு, உதவி, கிடைக்கவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள், 6-வது நிதிக் குழுவிடத்தில், நம்முடைய மாநில அரசுதான், பல அடித்தளங்களைச் சுட்டிக்காட்டி, இந்த வகையில்தான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் இருந்திட வேண்டும், என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். மத்திய அரசு மாநிலங்களுக்கு வரி, வருவாய், உதவித்தொகை, மானியம் ஆகியவற்றைப் பிரித்து வழங்கும் ஏற்பாட்டில் பல குறைபாடுகள் உள்ளன என்பதை நிதிக் குழுவிடத்தில் நாம் சுட்டிக் காட்டியது மட்டுமல்ல, நிதிக் குழுவும் திட்டக் குழுவும் மாநிலங்களின் தேவைகளைத் தனித்தனியே கருதிப்பார்ப்பதற்குப் பதிலாக, மாநிலங்களின் தேவைகள் அனைத்தையும் ஒரு சேர நிதிக் குழுவில் சேகரித்துப் பார்க்க வேண்டும் என்று நம்முடைய குறிப்பில் நாம் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறோம். மேலும் வளர்ச்சியுற்றவை என்று குறிப்பிடப்படுகின்ற மாநிலங்களிலும் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு பகுதி பின்தங்கிய நிலையில் உள்ளதைத் தீர்மானிக்க, அதன் தனி நபர் வருமானம், "பெர்காபிட்டா இன்கம்" என்னவென்று பார்ப்பது தான் சரியானது என்பதை நாம் அதிலே எடுத்துக் காட்டியிருக்கிறோம்.



மேலும் தன் வரி வருவாயைப் பெருக்குவதற்கு எடுத்துள்ள முயற்சியை — டாக்ஸ் எஃப்பர்ட்ஸ் — எண்ணிப்பாராமல் பற்றாக் குறை வரவு செலவுத் திட்டத்தை எந்த மாநிலம் அளித்ததோ அதற்குத்தான் ஏதாவது உதவி செய்வது; ஏனெனில் அது தான் பற்றாக்குறை மாநிலமாக இருக்கின்றது என்கின்றமுறை கடைப்பிடிக்கப் படுமானால், இனிமேல் பற்றாக்குறை பட்ஜெட் தான் போடவேண்டுமென்று மற்ற மாநிலங்களைத் தூண்டிவிடுகின்ற முறையில் அது அமையும்; ஆகவே அந்த அடிப்படையில் 6-வது நிதிக்குழு நிலைமைகளை ஆராயக் கூடாது என்பதை நாம் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

மதுவிலக்குபற்றி இங்கே கூறினார்கள். "நீங்கள் கள்ளுக்கடைகளை மூடுவதுபற்றி மாத்திரம் எடுத்துச் சொல்லி, அதிலே 18 கோடி ரூபாய் துண்டு விழும், அதைக் கொடுங்கள் என்று தான் கேட்டீர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, மதுவிலக்குக் கொள்கையில் உங்களுக்கு ஒரு நிரந்தரமான கருத்து இல்லை, படிப்படியாக என்று சொல்லுகிறீர்கள், முழுமையாக என்று சொல்லுகிறீர்கள், ஆகவே நீங்கள் நிரந்தரமான கருத்துடையவர்களாக இல்லை" என்று நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குபற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் அரசுக் கட்சித் தலைவர் அவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டார்கள். முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன நேரத்தில், "அப்போது, நாங்கள் சொன்னபோது நீங்கள் கேட்டீர்களா?" என்று எல்லாம் கேட்டார்கள்; "கிடைத்த 40 கோடி ரூபாயையும் இழந்துவிட்டீர்களே" என்று எல்லாம் கூட சுட்டிக்காட்டினார்கள். ஆனால், நான் அதிலே ஒரு ஆறுதல் அடைகிறேன். இரண்டு ஆண்டு காலத்தில் 40, 50 கோடி ரூபாய் ஏதோ திட்டங்களுக்குச் செலவழிப்பதற்கு வந்தது என்ற அளவில் ஆறுதல் அடைகிறேன். அதை

[பிற்பகல் 6-50]

நாம் மறுத்துவிடுவதற்கு இயலாது. ஆனால் இதைப் படிப்படியாகச் செய்கின்றார்கள் என்பதையும், இதில் ஒரு நிரந்தரமான கொள்கை இந்த ஆட்சிக்கு இல்லை என்பதையும் நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் அவருடைய தலைவர், மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டில், சென்னை மாநிலத்தில் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் இப்படித்தான் படிப்படியாக மதுவிலக்கினை நிறைவேற்ற முன் வந்தார்கள். சில விஷயங்களில் நாம் பெரியார் அவர்களையும் பின்பற்றுவோம், சில விஷயங்களில் இராஜாஜி அவர்களையும் பின்பற்றுவோம். முதன் முதலாக 1937-ல் சேலம் மாவட்டத்தில் மட்டும்தான் மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள். பின்னர் 1938-ல் கடப்பை, சித்தூர் மாவட்டங்களில் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னர் 1939-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் கொண்டு வந்தார்கள் இது இராஜாஜி காலத்தில். பிறகு இரண்டாவது உலகப்போர் வந்து விட்ட காரணத்தினால் பூரண மதுவிலக்கை தமிழ்நாட்டில் கொண்டுவராது ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. மதுவிலக்கை ஒத்திவைப்பது என்பது இப்போது

மட்டுமில்லை, இதற்கு முன்பே, அப்போதே மூதறிஞர் இராஜாஜி அவர்களுடைய ஆட்சியில் தொடர்ந்து நிலைமைகள் இருந்திருக்கின்றன என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

திரு கே. ராஜாராம் : அப்போது ஆங்கிலேயர்கள் ஆட்சிதான் இருந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்குப் பிறகு 1946-ல், மீண்டும் மதுவிலக்கு — முதல் கட்டமாக வட ஆற்காடு, சேலம் கோவை ஆகிய மாவட்டங்களிலே. பிறகு 1947-ல் இரண்டாவது கட்டம், தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களிலே. 1948-ல் மூன்றாவது கட்டம், சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, நெல்லை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமுல் படுத்தப்பட்டது. ஆகவே கழக அரசுக்கு இதிலே ஒரு நிரந்தரமான கொள்கை இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. இது மதுவிலக்கு விஷயம்; கொஞ்சம் நிதானமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிதானமான கொள்கையைத்தான் நமது அரசு அனுஷ்டித்து வருகிறது. நமது வருவாயையும் இழந்துவிடக்கூடாது. அதே நேரத்தில் கொள்கையும் நிறைவேற வேண்டும். இந்தக் கொள்கை நிறைவேறும் விஷயத்திலுள்ள இடைஞ்சலை நம் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் உணருகின்றார்கள். ஆனால் அதை எடுத்து உரைப்பதற்கு சங்கடப்படுகின்றார்கள். சில நேரங்களிலே உணர்ந்து கொள்ளக்கூடிய விஷயங்களையும் சொல்ல முடியாதபடி அரசியல் தடுத்து நிறுத்திவிடுகின்றது. அவர்களைச் சொல்லவில்லை. பொதுவாகவே சொல்லுகின்றேன். தமிழ் அரசுக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், நம் அரசியல் சட்டத்தின் முகப்பிலேயே இந்தியா முழுவதிலும் மதுவிலக்கை அமுல் படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை நாம் இன்றைக்கு ஒரு இலட்சியமாக ஏற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், அவர்கள் இங்கே மிகுந்த உருக்கமாக எடுத்துச் சொன்னதைப் போல், காந்தியடிகளுடைய கரம் பிடித்து நடந்தவர்கள், காந்தியடிகளின் மடியில் தவழ்ந்தவர்கள், காந்தியடிகளின் வீட்டுத் தாழ்வாரத்தில் நடமாடியவர்கள், காந்தியடிகளைத் தங்கள் குருநாதராக ஏற்றுக் கொண்டவர்கள், பிறகு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவர்கள், இன்றைக்கும் காந்தியடிகளின் பெயரால் ஆட்சியை நடத்திக்கொண்டிருப்பவர்கள் — இன்றைக்கு இந்தியா முழுவதிலும், குஜராத் ஒரு மாநிலம்; அடுத்து தமிழ் நாட்டிலே இன்றைக்கு மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம், இவை நீங்கலாக பிற மாநிலங்களிலே மது விலக்குக் கொள்கையை அமுல் படுத்துவதற்கு என்ன நடவடிக்கையை எடுத்தார்கள் என்று இந்த மாமன்றத்திலே கேட்க ஆசைப்படுகிறேன். நடவடிக்கை எடுக்காதது மட்டுமில்லை, அதற்கு மாறாக இன்றைக்கு மது விலக்கு அங்கங்கே ஒத்திவைக்கப்பட்டு அல்லது தளர்த்தப்பட்டு அல்லது ரத்து செய்யப்பட்டு வரும் நிலையில்தான் இருக்கின்றது. இந்தியா ஒன்று என்று சொல்லுகின்றோம். அப்படியானால், இந்தியாவில் தீண்டாமை ஒழிப்புக் கொள்கை எப்படி அகில இந்திய அளவிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதோ, நமது சிலம்புச் செல்வர் அவர்கள் சொன்னது போல குடும்ப நலத் திட்டம் எப்படி அகில இந்திய அளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதோ அதைப்





போலவே இந்தப் புனிதமான கொள்கை அகில இந்திய அளவிலே கடைப்பிடிக்கப்பட்டு வந்தால்தான் அது வெற்றிகரமாக நிறைவேற முடியும். நம் தமிழ் நாட்டில் பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்துவிட்டால்கூட, அது வெற்றிகரமாக நிறைவேறுமா என்று கேட்டால் நான் இப்போதே சொல்லிவைக்கிறேன், அது வெற்றிகரமாக நிறைவேற முடியாததற்கான சிக்கல்கள், சூழ்நிலைகள் இருக்கின்றன. நம் மாநிலத்தை ஒட்டியிருக்கிற பாண்டிச்சேரியானாலும், அருகாமையிலுள்ள பெங்களூரானாலும் இன்னொரு பக்கத்திலுள்ள ஆந்திர எல்லையானாலும் அங்கேயெல்லாம் இன்றைக்கு மது இருக்கின்ற நேரத்திலே இங்கே மட்டும் மதுவிலக்குக் கொள்கையில் உரிய வெற்றி பெறும் வாய்ப்பை நாம் எதிர்பார்க்க முடியுமா என்பதற்கு நிச்சயமாக "இல்லை" என்கின்ற பதில் தான் வரும். ஆனாலும் முடிந்த அளவில் அது வெற்றி பெறட்டும் என்ற முறையில் தொடர்ந்து அகில இந்தியாவிலே இந்தக் கொள்கை மலருவதற்கும் விரிவடைவதற்கும் ஒரு வழிகாட்டியாக அமையுமா என்ற அளவிலே மீண்டும் நாம் மதுவிலக்கை இங்கே கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறோம்.

அவர்கள் கேட்டார்கள், கள்ளுக் கடையை மூடுவதற்காக என்று சொல்லித்தானே ரூ. 18 கோடி என்று சொன்னீர்கள் ? நீங்கள் ஏன் முழுமையான மதுவிலக்கு கொண்டுவரப் போகிறோம் என்று குறிப்பிட்டு நிதிக் குழுவை அணுகவில்லை என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், 21—6—1973-ம் தேதியிட்ட இக்கடிதத்தை நிதிக்குழுவின் தலைவர் திரு பிரம்மானந்த ரெட்டி அவர்களுக்கு நமது அரசின் சார்பிலே நான் எழுதியிருக்கின்றேன். இதில் நான் குறிப்பிட்டிருக்கின்றேன். . . . . .

"The State Government have decided to reintroduce prohibition in order to fulfil a constitutional directive. This decision will result in an annual loss of roughly about Rs. 30 crores. As a first step during the current year we have decided to close all toddy shops from 1st September 1973 and we are not conducting auctions for the toddy shops normally due in June - July. The decision is also to close the arrack shops during the next year and the year after, so that after 2 years, prohibition is completely introduced in Tamil Nadu. I request that revenue receipts during the Fifth Plan period may kindly be modified, taking into account the reduction in income. Any further discussions, if necessary, might be held in order to appreciate the revised forecast we are suggesting.

With regards,

.........."

என்று சொல்லியும்கூட அழைத்துப் பேசவில்லை. பிறகு அவர்கள், "நீங்கள் மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் அமுல்படுத்துகிறதை நாங்கள் ஒன்றும் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது" என்ற

வகையில்தான் ஆருவது நிதிக் குழுவின் அறிக்கையைத் தந்தார்களே யல்லாது அவர்கள் இதைப் பொருட்படுத்த வில்லை என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, நதிகளைத் தேசியமயமாக்குவது பற்றி அன்றைய் தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு சித்ரா நாராயணசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நாட்டிலுள்ள எல்லா நதிகளையும் தேசியமயமாக்கிவிட வேண்டும் என்கின்ற அந்தப் பிரச்சினையின்மீது தமிழ் நாடு அரசு தன் மாறுபட்ட கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றது. இன்றைக்கு உள்ள அரசியல் சட்டத்தில் 262(1) வது பிரிவு மாற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது, இந்த நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக. அப்போது அதில் என்ன இருக்கின்றது, அதை எப்படி மாற்ற வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது என்பதை நாம் கவனிப்பது நலம். இன்றைக்கு அரசியல் சட்டப்பிரிவு 262(1)ல் இருப்பது

" Parliament may by law provide for the adjudication of any dispute or complaint with respect to use, distribution or control of the waters of, or in, any inter-State river or river valley "

இது இப்போது இருப்பது.

அவர்கள் மாற்ற விரும்புவது.

" Parliament may by law provide for the settlement of any dispute or complaint with respect to use, distribution, control, regulation, or development of water including the waters of, or in, any river or river valley. " என்று

ஏற்கெனவே inter-State rivers or river valley என்று இருக்கிறது. இப்போது inter-State rivers என்பதை எடுத்து விட்டு any river என்று மாற்றியமைக்க நினைக்கின்றார்கள். இப்படிப் போடுவது காரணமாக காவிரி நீர் பிரச்சினையைத் தீர்க்கும் நேரத்தில் அது inter-State river என ஆகிறது. ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்தோடு இணைக்கும் நதிகளுக்கும், ஒரு மாநிலத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கும் நதிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை மத்திய சர்க்காருக்கு உணர்த்தியிருக்கிறோம். "மாநிலத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கும் நதிகளையும் நீங்கள் தேசிய மயமாக்கும் திட்டத்தினை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது" என்று மத்திய சர்க்காருக்குக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறோம். நாம் என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், ஒன்று நாடாளு மன்றத்தின் அதிகார வரம்பு, "மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்றுநீரைப் பயன் படுத்திக்கொள்வதில் தகராறுகள் ஆகியவை குறித்து மட்டும்" என்று வரையறுக்கப்படலாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்று நீர் குறித்துத் தகராறு எழுந்தால், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு இடையே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.





மூன்று, அத்தகைய பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாவிட்டால், பிறகு இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசீய நீர்வாயில் குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளைத் தீர்த்து வைக்கலாம். இந்த இறுதி முடிவிற்கு எதிராக தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துகொள்ளலாம். அந்த மேல் முறையீட்டினை ஐந்து பேருக்குக் குறையாத தலைமை உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டதொரு குழு முடிவு செய்ய வேண்டும் என்ற கருத்துக்களை நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஏனென்றால் காவிரி போன்று ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதிகளைத் தேசிய மயமாக்கி, அதை தேசீய அளவில் அணுகுவதுதான் முறையாகும். ஆனால் மாநிலங்களுக்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளின் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்த நினைப்பது, ஏற்கெனவே இருக்கும் ஆதிக்கங்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில், புதிதாக இப்போது இந்த ஒரு ஆதிக்கத்தைச் செலுத்துங்கள் என்று கேட்பது போலாகும் என்று கருதி, தமிழக அரசு அதை அடியோடு மறுத்துவிடவில்லை, ஆனால் இத்தகைய மாற்று யோசனைகளையும் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ளுகிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே திரு தீக்ஷிதர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்களும் நேற்றும் அதற்கு முன்தினமும் பேசியிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை குறித்து ஆராய பல்வேறு கட்டங்களிலே பல்வேறு குழுக்கள் போடப்பட்டன, அந்தக் குழுக்கள் ஒவ்வொரு பகுதியாக முடித்துவிட்டு இப்போது கடைசியாக 10—10—1973ல் அந்தக் குழுவின் இரண்டாவது கட்டப் பேச்சு விரைவில் டெல்லியில் நடைபெற்று முடிய நீர்ப்பாசன மின்வள இலாகாவின் இணைக் காரியதரிசி திரு சி. சி. படேல் அவர்கள் அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு, அவர் இந்த மூன்று மாநிலங்களுக்கும் சென்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்வையிட்டு, எப்படி காவிரி நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்தலாம் என்று மூன்று மாநிலங்களும் ஒரு ஆய்வு செய்ய வேண்டும் என்று கடைசியாகத் தீர்மானிக்கப்பட்டு, அவர் நம் மாநிலத்திற்கு வந்து 5—11—1973 முதல் 11—11—1973 வரையில் காவிரி டெல்டா பிரதேசத்தைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்னும் அந்தக் குழு தன் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிகின்றது. விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும், குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அடுத்துப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும், அதற்கு மூன்று மாநில அமைச்சர்களும் அழைக்கப்படுவர் என்று டெல்லியிலிருந்து செய்தி வந்திருக்கும் காரணத்தினால், காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி இப்போது நாம் அதிக அளவிற்குக் கவலைப்படாமல் நம்பிக்கையோடு இருக்கலாம். நம் உரிமைகளை விட்டுக்கொடுத்துவிடாத அளவிற்கு தமிழக அரசு ஏற்கெனவே ஒவ்வொரு பிரச்சினையிலும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து முடிவெடுப்பதுபோல காவிரி நீர்ப் பிரச்சினையிலும், மற்ற பொதுப் பிரச்சினைகளை அணுகுவதைப் போலவே, அனைத்துக் கட்சித் தலைவர்களின் முடிவினை தமிழக அரசு நிறைவேற்றும் என்பதை நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The time is extended.

(பிற்பகல் 7–00.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உர வினியோகத்தைப் பற்றி எடுத்துக் சொன்னார்கள். நம்முடைய உழைப்பாளர் கட்சியினுடைய-தலைவர் திரு. எஸ். எஸ். ஆர். அவர்கள் நேற்றைய தினம் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைக்குக் குறிப்பிட்டார்கள். நான் இதுபற்றிப் பேரவையில் நேற்றைய தினம் மிக நீண்ட விளக்கங்களை, விரிவான விவரங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றேன். இதில் தனியாருக்கு 66 சதவிகிதம் உள்நாட்டு உரத்தை மத்திய அரசே ஒதுக்கிவிடுகின்ற அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. மாநில அரசிற்கு அந்த அதிகாரம் கிடையாது. இன்றைக்கு வெளிநாட்டு உரத்தை பூல் ( Pool ), நான்-பூல் (Non-Pool) என்று பிரித்திருக்கிறார்கள். அதில் பூலில் வெளிநாட்டு உரம், நான்-பூலில் உள்நாட்டு உரம் என்று தொகுத்து வைத்திருக்கிறார்கள். வெளிநாட்டு உரத்தை 66 சதவிகிதம் தனியார் மூலமாக வினியோகிக்கின்ற உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு கூட்டுறவுத் துறை மூலமாக வினியோகிப்பதற்கு 34 சதவிகிதம் தான் அனுமதிக்கப்படுகிறது. அந்த 66 சதவிகிதத்தை தனிப்பட்ட உரத் தொழிற்சாலை ஏஜென்சிகளாக இயங்கி வருகிறவர்கள் 6,428 சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக விற்றுக்கொண்டு வருகிறார்கள். நாம் மத்திய அரசினிடத்தில் பலமுறை கேட்டுவிட்டோம். எங்கே தவறுகள் நடந்தாலும், தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசிற்கு நீங்கள் அதிகாரங்களைத் தர வேண்டும். அந்தக் கண்டிரோல் நமக்குத் தேவை. தனிப்பட்ட விற்பனையாளர்கள், அவர்கள் தவறு செய்கின்ற நேரத்திலே உடனடியாக அங்கே இருக்கின்ற உரங்களைக் கைப்பற்றி கூட்டுறவுத் துறை மூலமாக வினியோகிப்பதற்கும், அதே நேரத்தில் அவர்களுக்கு வினியோகிக்கின்ற கம்பெனியில் தவறு நடைபெற்றால் அங்கும் சென்று இருப்புக் கணக்கு, அங்கே நடைபெறுகின்ற தவறுகள் இவைகளைக் கண்டு பிடிப்பதற்கும் அதிகாரம் வேண்டுமென்று கேட்டுவிட்டோம். ஆனால் மாநில அரசின் அந்த வேண்டுகோள் மத்திய அரசினால் புறக்கணிக்கப்பட்டு, பதில் கடிதம் வந்துவிட்டது. அந்தக் கடிதங்களையெல்லாம் நேற்றைய தினம் பேரவையிலே படித்துக் காட்டினேன். நேரம் அதிகமில்லாத காரணத்தால், இன்னொரு முறை அவைகளைப் பற்றி எல்லாம் இங்கே சொல்லலாம் என்று கருதுகிறேன். ஆகவே மத்திய அரசு மாநில அரசிற்குத் தேவையான உரிமையை, அதிகாரத்தைத் தராத காரணத்தால், பல இடங்களிலே தனிப்பட்ட விற்பனையாளர்கள் செய்கின்ற தவறுகளை நாம் தீவிரமாக அடக்க முடியவில்லை. அது குறித்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றிரண்டு தவறுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டன. நமது நண்பர் திரு. கே. எஸ். கணபதி பேசுகின்ற நேரத்திலே, தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் ஏதோ $4\frac{3}{4}$ லட்ச ரூபாய் வட்டியை வஜா செய்துவிட்டது என்பதற்கு அகௌண்டண்ட் ஜெனரல் ஒரு குறிப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று படித்துக் காட்டி ஏதோ தவறு நடந்திருக்கின்றதோ என்று ஐயப்படுகின்ற வண்ணம் அதை எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். கோவையில் அசூரா வெல்டிங் எலெக்டிரானிக்ஸ் லிமிடெட் என்ற கம்பெனிக்கு, இப்போதல்ல 1966–லே 10 லட்சம் ரூபாயும், அதற்குப் பிறகு 1969-லே 3.2 லட்சம் ரூபாயும், மொத்தம் 13.2 லட்ச ரூபாய் கடன் அளிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கம்பெனி 1967-லே உற்பத்தியைத் தொடங்கியபோது, மார்க்கெட்டில் அதனுடைய எலெக்டிரோட்ஸ் தேவைகள், வெல்டிங் எலெக்ட்ரோட்ஸ் தேவைகள் குறைந்துவிட்ட காரணத்தால், அவர்களால் வியாபாரத்தை நடத்த முடியவில்லை. அவர்கள் கம்பெனியையே மூடிவிடும் சூழ்நிலை ஏற்பட்டபோது, அதை இன்னொருவர் வாங்கி நடத்துவதற்கு—சூரத்தைச் சேர்ந்த ஒருவர், வெல்டிங் ராட்ஸ் தயாரிக்கும் கம்பெனி வாங்கி நடத்த—முன் வந்தார். அவர் போட்ட நிபந்தனை, இந்த 13 லட்ச ரூபாய் முதலீட்டைத் தந்துவிடுகிறேன், 4 லட்ச ரூபாய் வட்டியை நான் சுமக்க வேண்டுமென்றால், வாங்கத் தயாராயில்லை என்று கூறிவிட்டார். அந்தக் கார்ப்பொரேஷனுக்கு இருந்த சங்கடம், அந்த முதல் காப்பாற்றப்பட்டால் போதும் என்பது. அதற்காக, அவர்கள் வட்டியைத் தள்ளிக் கொடுத்துவிட்டு, 13 லட்ச ரூபாய்க்கு சூரத்தைச் சேர்ந்த வெல்டிங் ராட் தயாரிப்பு கம்பெனிக்கு அதை மாற்றிக் கொடுத்தார்கள். இப்போது டி.ஐ.டி.சிக்குச் சேரவேண்டிய கடனும் அதற்கான வட்டியும் ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. நாம் அதை தள்ளிக் கொடுக்க மறுத்திருந்தால், 13 லட்ச ரூபாயும் சேர்ந்து போயிருக்கும். ஆகவே இந்த ஏற்பாட்டை அந்த கார்ப்பொரேஷன் செய்தது என்கின்ற விளக்கத்தை நண்பர் திரு. கணபதி அவர்களுக்கு நான் அளித்துக்கொள்கிறேன்.





திரு பலராமன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், அதனுடைய 17-வது ஆண்டறிக்கையில் 72 ஆயிரம் காலி கோணிப் பைகளுக்கு இரண்டாம்தர விற்பனை மூலம், ஒரு பைக்கு 75 பைசா வீதம் 54,000 ரூபாய் மதிப்பீடு செய்துள்ளது என்றும், இதில் ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார். ஊழல் என்கின்ற வார்த்தை கிடைத்தாலும் கிடைத்தது எதற்கெடுத்தாலும் அதைப் பயன்படுத்தி அதற்குள்ள செல்வாக்கையே இன்றைக்குக் குறைத்துவிட்டோம். நம்முடைய நண்பர் திரு பலராமன் இதையே தேடித் தேடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். நல்லவைகளையும் தேட வேண்டும். ஏதாவது கிடைக்காதா என்று தேடுகிறோம். எதிர்க்கட்சிகள் வேலை அதுதான். அப்படிச் சுட்டிக்காட்ட வேண்டியதுதான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும் கொஞ்சம் ஆராய்ந்து, சிந்தித்து, அவைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டுவது நல்லது. பத்திரிகைகளில் எத்தனையோ வருகிறது. நான் சட்டப் பேரவையில் கூடச் சொன்னேன். ஏதோ "3 ஏக்கரா, 3 லட்சம், இடத்தை வாங்கி விட்டார்கள்" என்று சொல்லப்பட்டது. பிறகு பார்த்தால் ஒரு கிரவுண்டு விலை 5,000 ரூபாய்க்குக் குறைவாக வாங்கியிருக்கிறார்கள். பக்கத்தில் 5,000 ரூபாய்க்கு ஒரு கிரவுண்ட் வாங்கியிருக்கிறார்கள். 4,000 ரூபாய்க்குத் தான் நம்முடைய போக்குவரத்துக் கார்ப்பரேஷன் அங்கே கிரவுண்டு வாங்கியிருக்கிறது. 3 ஏக்கரா, 3 லட்சம், அதில் மோசடி நடந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அதைப் போலவே 72,000 காலி கோணிப்பை, 54,000 ரூபாய், அதனால் நஷ்டம் என்று சொன்னார்கள். இந்த அறிக்கையை வைத்துக் கொண்டு தான் அவர்களும் சொன்னார்கள். ஆனால், அறிக்கையைச் சரியாகப் படித்திருக்கவேண்டும். தலைப்பில் என்ன இருக்கிறதென்றால், "1972–73ஆம் ஆண்டின் கால்நடைத் தீவன

உற்பத்திப் பிரிவின் வரவு செலவுத் திட்டம், எதிர்பார்க்கப்படும் கால்நடைத் தீவன மொத்த உற்பத்தி 3,600 டன்கள், உத்தேசச் செலவு " என்று பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். அவர்கள் 3,600 டன் அங்கே தீவன உற்பத்தி செய்யலாம் என்று எதிர்பார்த்தார்கள். 3,600 டன் தீவன உற்பத்தி செய்வதாக இருந்தால், அதற்கான 'ரா மெடீரியல்' வர வேண்டுமல்லவா, அது கோணிப்பைகளில் தான் வரும். அப்படி 3,600 டன் ரா மெடீரியல் வரும்போது, கோணிப்பையில் வந்தால், அப்படி வருகின்ற பைகள் கிட்டத்தட்ட 72,000 பைகள் இருக்கும். அந்த 72,000 பைகளை நாம் மறுவிலைக்கு விற்றால், அதில் 54,000 ரூபாய் கிடைக்கும். இதெல்லாம் கற்பனைகள் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் 3,600 டன் அங்கே உற்பத்திக்கான காரியங்கள் நடைபெறவில்லை. 600 டன்னுக்குக் குறைவாகத்தான் உற்பத்தியாயிற்று. கோணிப்பைகள் விற்கப்படவுமில்லை. ஏனென்றால் 72,000 பைகள் வந்தால் அல்லவா 54,000 ரூபாய்க்கு விற்பார்கள். விற்கப்படவுமில்லை. ஆனால், திரு. பலராமன் அவர்களுக்கு 72,000 தெரிந்தது, 54,000 தெரிந்தது, உடனே ஊழல் என்று சொல்லத் தெரிந்தது.- மேல் தலைப்பைப் பார்த்திருந்தால், உத்தேசச் செலவு என்றுதான் போட்டிருக்கும். செலவு அல்ல. உத்தேசச் செலவு தான். ஆகவே, அதிலே எந்தவிதமான ஊழலும் இல்லை என்று நான் இங்கே சொல்லிக்கொள்ளுகிறேன்.

மற்றும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த அரிய கருத்துக்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்முடைய நண்பர் திரு ஆறுமுகசாமி நேற்றைய தினம் பேசுகின்ற நேரத்தில், கவர்னருடைய உரையில் எல்லாப் பகுதிகளையும் விட்டுவிட்டு, எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டிய பகுதியை மாத்திரம், அந்தப் பேச்சின் மைய அம்சமாக வைத்துக்கொண்டு பேசினார்கள். அவர்கள், மக்களெல்லாம் விரக்தி அடைந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர் பேசியதைப் பார்த்த பிறகு, அவ்ரே ஏதோ விரக்தி அடைந்திருப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால், இன்றைக்கு இருக்கின்ற அரசியலில் அப்படிப்பட்ட விரக்தி நிலைமை திரு. ஆறுமுகசாமி போன்ற நல்லவர்களுக்கு ஏற்படுவது விசித்திரமில்லை. நான் முன்பே ஒருமுறை சொன்னேன். அவருடைய பேச்சு இப்போதெல்லாம் ஜெயப்பிரகாஷ் நாராயண் பேச்சு போல் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதையேதான் நேற்றைய தினம் சொன்னார்கள். விரக்தி வருவதற்கு நியாயம் இருக்கிறது. அவர் சோஷலிசம் பேசுகிறார். இங்கே ஒரு கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் இங்கே அந்தக் கட்சியில் இணைத்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, இங்கே அந்தக் கட்சியிலிருந்துகொண்டு பத்திரிகை நிர்வாக ஆசிரியராக இருப்பவர், சோஷலிச அடிப்படையில் இன்றைக்கு மின்சார கம்பெனியை நாம் தேசியமயமாக்குகின்ற நேரத்தில், அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகிறார். சோஷலிசம்! அதைப் பார்த்தால், திரு ஆறுமுகசாமிக்கு விரக்தி வருமா, வராதா ? நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர், ஒரு பத்திரிகை நடத்துகிறார்; இந்த நிலைமையிலே நாம் நம்மை இணைத்துக் கொண்டிருக்கிறோமே என்ற விரக்தி நல்ல உள்ளங்களுக்கு ஏற்படத்தான் செய்யும். நான் அவரைக் கேட்டுக்கொள்வேன். மக்களுடைய விரக்தியை நீக்குவதற்கு நாமெல்லாம் விரக்தியிலிருந்து



விடுபடவேண்டும். அந்த அளவிலே திரு. ஆறுமுகசாமி போன்றவர்கள் விரக்தியிலிருந்து விடுபட்டு, ஏதாவது ஆகிவிட்டுப் போகட்டும் என்ற நிலைமை இல்லாமல், இன்னும் தேவையான நல்ல கருத்துக்களை நாட்டுக்கும், இந்த அரசாங்கத்துக்கும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கேட்டுக்கொள்வேன்.

(பிற்பகல் 7-10.)

சிலம்புச் செல்வர் அவர்கள், மாநில சுயாட்சி பற்றி இன்னொரு நாள் எடுத்துச் சொல்லிக்கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டு,. கிட்டத்தட்ட பேச்சில் முக்கால் பகுதியில் அவர்களுடைய உணர்வுகளை அடக்கிக்கொள்ள முடியாமல், மாநில சுயாட்சி பற்றிய விளக்கங்களையெல்லாம் அவருக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை மறுக்காமல் இருக்க முடியாது என்பதற்காக அதை மறுத்திருக்கிறார்கள். மற்ற அதிகாரங்கள் அதிகமாக வேண்டுமென்று கேளுங்கள். மாநில சுயாட்சி என்று கேட்காதீர்கள் என்று சொன்னார்கள். இது கல்யாணம் வேண்டும் என்கின்ற பிள்ளையைப் பார்த்து, குடும்பம் நடத்த வேண்டும் என்று சொல், கல்யாணம் வேண்டும் என்று கேட்காதே என்று சொல்வதைப்போல்தான் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு, இந்த விவாதத்திலே கலந்து கொண்ட அனைவர்க்கும் நன்றி கூறி, தரப்பட்டிருக்கின்ற திருத்தங்களையெல்லாம் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். திரு. முத்துசாமி போனதடவை திரும்பப் பெறவில்லை. இந்த ஆண்டு ஆசிரியர்களுக்காக பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி என்ன நடக்கப் போகிறது என்று காண ஆசிரியர்களும் வந்திருக்கிறார்கள். ஆகவே, நான் திரு. முத்துசாமியைக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் போன ஆண்டைப்போல் அதை வலியுறுத்தாமல் திருத்தங்களையெல்லாம் வாபஸ் பெற்று, கவர்னர் உரைக்குக் காட்ட வேண்டிய மரபைக் காட்ட வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டு அதைப்போல திரு. பலராமன் அவர்களையும், மற்றும் திருத்தம் கொடுத்த திரு. வசந்த பாய் அவர்களையும் கேட்டுக்கொண்டு இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையிலே கடந்த 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல்வாழ்வுக்காக ஒரு குடும்ப நலத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக என்னுடைய பேச்சிலே நன்றியைக்கூடத் தெரிவித்தேன். ஜனவரி 1, 1974-லேயிருந்து இறந்தவர் குடும்பத்திற்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று அறிவித்தார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது டிசம்பர் 3-ம் தேதி. அதற்குப் பிறகு சில பேர் இறந்துவிட்டார்கள். முதலமைச்சர் அறிவித்தவுடனேயே, மக்களுக்கு ஒரு நம்பிக்கை வந்துவிட்டது. அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எல்லாம், இடையிலே இறந்தால் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. சில குடும்பங்களிலே இந்த இடைக்காலத்தில் இறந்திருக்கின்றனர். என்னுடைய ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் தலைவரே திடீரென்று ஹார்ட் பெயிலியராகி, ஆஸ்பத்திரியிலே அட்மிட் ஆகியிருந்தார். டிசம்பர் 6-ம் தேதி இறந்துவிட்டார்கள். டிசம்பர் 30-ம் தேதி, என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தினுடைய

பொறுப்பாளராக இருந்தவர் இறந்துவிட்டார். இத்தகைய குடும்பங்களுக்கு முதலமைச்சர் ஏதாவது அறிவிக்க மாட்டாரா, அவர்களுக்கு ஏதாவது வழங்கமாட்டாரா என்று எதிர்பார்க்கிருர்கள். தயவு செய்து . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, என்னுடைய அறிவிப்பு சிலபேர் இறந்துபோவதற்குக் காரணமாக இருந்ததற்காக உள்ளபடியே வருந்துகின்றேன். இருந்தாலும், கல்வி அமைச்சருடனும், மற்ற அதிகாரிகளோடும் கலந்து அதுபற்றிப் பிறகு முடிவு எடுக்கப்படும் என்பதை எடுத்துக் கூறுகிறேன்.

திரு கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, முதலமைச்சர் அவர்கள் கடைசியில் குறிப்பிட வேண்டும் என்று சொன்னேன். அதை மறந்துவிட்டார்கள் என்று எண்ணுகிறேன். மதுரையில் மன்னர் திருமலை நாயக்கர் பெயரில் ஒரு கல்லூரி அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கு அரசு முழு ஆதரவு கிடைக்குமா என்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருமலை நாயக்கர் பால் நாயக்கர்களுக்கு மாத்திரமல்ல, அனைவருக்கும் நல்ல அன்பு உண்டு. ஆகவே, அப்படிப்பட்ட முயற்சிகளை அரசு உரிய நேரத்தில் முடிந்த அளவுக்கு உதவிசெய்து ஆதரிக்கும்.

THIRU G. VASANTHA PAI : Sir, since the Hon. Chief Minister has referred to every one of the speeches that have been made, may I request that fair deal to pensioners as well as increase of Police Force may be effected in the State ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி பிறகு பரிசீலித்து முடிவு அறிவிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. பலராமன் தமது திருத்தத்தை வலியுறுத்துகிருரா?

திரு எல். பலராமன் : நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. முத்துசாமி தமது திருத்தத்தை வலியுறுத்துகிருரா?

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி பட்ஜட் வரும்போது பரிசீலிக்கப்படும் என்று இங்கே எடுத்துச் சொன்னதற்கு இணங்க, அவர்கள் அதை நிச்சயமாகப் பரிசீலிப்பார்கள், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் இதை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.





திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு வசந்த பாய் தமது திருத்தத்தை வலியுறுத்துகிருரா?

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the Hon. Chief Minister's statement that the Government will look into the grievances of pensioners as well as increase of the police force, I withdraw my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை:

"1974-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 17-ஆம் நாள் ஆளுநர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-14.)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

*Nil.*

### B. *Reports, Notifications and Other Papers.*

* 15. The Constitution (Thirty-third Amendment) Bill, 1973 is introduced in Lok Sabha.

* 16. The Constitution (Thirty-third Amendment) Bill, 1973 is passed by the Lok Sabha.

*17. The Constitution (Thirty-second Amendment) Bill, 1973 is passed by the Houses of Parliament.

## இணைப்பு.

[4-ஆம் பக்கத்தில் 93-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகளில் சிலர் கூடா ஒழுக்கச் செயல்களில் ஈடுபடுவதாகச் சொல்லப்பட்ட சில குற்றச்சாட்டுகள் குறித்து ஒழுக்கக் கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகம் புலன் விசாரணை செய்துள்ளது.

(இ) 21 மருத்துவர்கள்.

(உ) ஆரம்பச் சுகாதார நிலையங்களின் பொறுப்பில் இருந்த மருத்துவ அதிகாரிகள் சிலர் தங்கள் அதிகாரத்தையும் பதவியையும் தவறாகப் பயன்படுத்தி, வாசெக்டமி அறுவை சிகிச்சைகளை உண்மையில் செய்யாமலேயே வாசெக்டமி அறுவை செய்ததாகப் பொய்யான ஆவணங்களைத் தயாரித்து குடும்பநலத் திட்ட நிதிகளிலிருந்து பெருந் தொகைகளைக் கையாடல் செய்ததாகச் சொல்லப்படுகின்றது. மருத்துவர்கள், அறுவை சிகிச்சை பிரசாரகர்கள், ஏனையோர் ஆகியோரிடையே உருவான சதியினையொட்டி, சில நபர்களுக்கு முன்னரே அறுவை சிகிச்சை செய்யப்பட்டுவிட்டது என்று தெரிந்திருந்தும் அதே நபர்களுக்கு இம் மருத்துவர்கள் பலமுறை வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்து அதனால் ஆதாயம் பெற்று ஏமாற்றுத் தொழில் செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

(எ) நத்தம், வாடிப்பட்டி, பர்கூர், விருவீடு, லாலாபேட்டை, அலங்காநல்லூர் ஆகியவிடங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாற்றி வந்த ஆறு மருத்துவ அதிகாரிகளைப் பொறுத்தவரையில், துறை அளவில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத் துறை இயக்குநரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. கொம்மநேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கணக்குகள் சரியாக வைத்து வரப்படவில்லை ; அந்த நிலையத்தின் மருத்துவ அதிகாரி தமது பணியிலிருந்து விலகி விட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதை அரசு கைவிட்டது. மீதவசின்னம்பள்ளி ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி 12—4—1972-அன்று இறந்துவிட்டார் ; ஒழுக்கக் கண்காணிப்பு ஆணையாளரின் இசைவுடன் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது. முருக்கங்குடி ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சேர்ந்த இரு மருத்துவ அதிகாரிகள் தொடர்பான வழக்கில் நடவடிக்கை "எடுக்க இயலாது" என்ற அறிக்கை ஒழுக்கக் கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்றது ; எனவே, மேல் நடவடிக்கையை அரசு கைவிட்டது. சின்னமனூர், புதூர், உத்தமனூர், திருப்பரங்குன்றம், கூடலூர், பாப்பம்பட்டி ஆகிய விடங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்கக் கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அளித்துள்ள விசாரணை அறிக்கைகள் பரிசிலனையில் உள்ளன.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1974 சனவரி 30

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Historical Monuments.*

* 103 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the languages used in the explanatory notes for the Historical Monuments under the control of the Tamil Nadu Government ; and

(*b*) whether there is any proposal to give them in all the Dravidian languages ?

### வரலாற்று நினைவுச் சின்னங்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டு அரசின் கீழுள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் பற்றிய விளக்கங்கள் எவ்வெவ் மொழிகளில், அவ்விடங்களில் எழுதப்படுகின்றன ?

(இ) திராவிட மொழிகள் அனைத்திலும் குறிக்கும் நோக்கம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு அரசின் கீழுள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் பற்றிய விளக்கங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்படுகின்றன.

(இ) இல்லை.

## Creation of a Separate Directorate for Elementary Education.

* 104 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to create a separate Directorate for Elementary Education; and

(b) if so, the details therefor ?

### தொடக்கக் கல்விக்காக தனி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துதல்

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில ளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கக் கல்விக்காக, இயக்குநர் அலுவலகம் ஒன்றைத் தனியே ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* அரசின் ஆய்வில் உள்ளது.

## Representation by the Tamil Nadu Washermen Progressive Federation.

* 105 Q.—THIRU C. R. KOLAPPA : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether any representation was submitted to the Hon. Chief Minister at the Conference of the Tamil Nadu Washermen Progressive Federation;

(b) if so, the action taken thereon; and

(c) if not, whether the Government will do the needful to expedite the action thereon ?

### தமிழ் நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சமர்ப்பித்த கோரிக்கை மனு

*திரு. சி. ஆர். கோலப்பா :* மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்க மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு ஏதேனும் கொடுக்கப் பட்டுள்ளதா ?





(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

(உ) இல்லையெனில், துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* (அ) ஆம்.

(இ) & (உ) கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :* தலைவரவர்களே, என்ன கோரிக்கை கள் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* தலைவரவர்களே, அந்த விவரங்கள் தற்போது இல்லை.

*திரு. சி. ஆர். கோலப்பா :* தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர் களுடைய பிரச்சினையை, பொருளாதார அடிப்படையில் கவனித்து, அவர் களுக்கு ஏதாவது நன்மை செய்ய அரசுக்கு உத்தேசம் உள்ளதாவென்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* தலைவரவர்களே, பொதுவாக வறுமையின் அடிப்படையில், பொருளாதார அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆக்கபூர்வமான பல திட்டங்களை நிறைவேற்று வதுதான் அரசின் கொள்கையாகும். அதே நேரத்தில், அவர்கள் தங்க ளுடைய வாழ்க்கையில் பல்லாண்டுக் காலமாக அனுபவித்து வந்த கொடுமை களை ஒழித்து, தனி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால்தான், அவர்கள் முற் போக்கு சமுதாயத்தோடு இணைந்திருக்க முடியும் அது எத்தனை ஆண்டு களில் முடிகிறதோ அதுவரை இந்த அரசு தொடர்ந்து இந்தச் சலுகைகளை அளித்து வரும். இப்போதுள்ள நிலையில் ஜாதிகள் அடிப்படையில் கூடா தென்றால், ஏற்கெனவே ஆக்கமுற்றுள்ள ஜாதிகள் அதிகப் பலனை அனுபவிக்கும் நிலை ஏற்படும். பொதுவாக தற்போது முற்போக்கு மக்களுக்குக் கொடுத்து வரும் எந்தச் சலுகையையும் அரசு தடைப்படுத்தாது. ஆனால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தச் சலுகைகளைக் கூடுத லாகத் தரும்.

*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, அவர்களுடைய கோரிக்கைகள் அடங்கிய ஜாப்தாவில், தங்களை ஷெட்யூல்ட் வகுப்பினரோடு சேர்க்க வேண்டு மென்ற குறிப்பு இருக்கிறதா ? அப்படி இருந்தால், அதன் பேரில் அரசாங்கம் என்னவிதமான முடிவு எடுத்திருக்கிறது அல்லது அது பரிசீலனையில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 30

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன அடிப்படையில் அவர்கள் கேட்டிருப்பதாக என்னிடம் தகவல் இல்லை. பொதுவாக அவர்களுடைய வாழ்க்கைக்கு நல்ல ஏற்றத்தை அளிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது.

## *Re-auction of Liquor Shops.*

*106 *Q.*—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru M. K. D. NATARAJAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any liquor shops have been re-auctioned because the auction purchasers refused to pay a part of the auction amount telling that the auction amount is very much ; and

(*b*) whether there is any proposal with the Government to collect the difference between the auction amount and the re-auction amount or whether the Government have proposed to write off the amount ?

## மதுக் கடைகள் ஏலம்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. மு. க. து. நடராசன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுக்கடைகளை ஏலம் எடுத்தவர்கள், தங்களது ஏலத் தொகை மிக அதிகம் எனக் கூறி பகுதித் தொகை கட்டாததால், அக்கடைகள் மறு ஏலம் விடப்பட்டதா?

(இ) முன் ஏலத் தொகைக்கும், பின் ஏலத் தொகைக்கும் உள்ள குறைவுத் தொகைகளை வசூல் செய்யும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா? அல்லது தள்ளுபடி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் ஆகியவை பற்றி. 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளுக்குக் கேட்டிருக்கிறார்கள். வந்திருக்கின்ற விவரங்கள் போதுமானதாக இல்லை. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களை, முழு விவரங்கள் கொடுக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த விவரங்கள் வந்த பிறகு அவையின் முன் வைக்கப்படும்.

Thiru G. VASANTHA PAI : Sir, may I know whether it is a fact that the High Court has held that this is not recoverable under the Revenue Recovery Act ?



974 சனவரி 30]

The Hon. Thiru S. J. SADIQ PASHA : Sir, the High Court as not held that this is not recoverable under the Revenue Recovery ct. It is only stated that notice should be given before it is ollected under the provisions of the Revenue Recovery Act.

Thiru G. VASANTHA PAI : Sir, may I know whether there s any move on the part of the Government to give notice to and ollect the amount under the Revenue Recovery Act ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : Sir, Government ave already taken action and notices are also being issued.

## *Assignment of Dry Lands.*

*107 *Q.*—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru 7. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Revenue e pleased to state :

(*a*) whether the Sivakasi Revenue Divisional Officer has ancelled the assignment of dry lands made to the poor people for onstructing houses at M. Rettiapatti Panchayat in Aruppukottai 'aluk, Ramanathapuram District ;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) the reason for evicting the people who have already ccupied the said lands ?

## ஜாரி செய்யப்பட்ட தரிசு நிலங்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : ாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு திலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தாலுகாவில் ள்ள எம். ரெட்டியப்பட்டி பஞ்சாயத்தில் ஏழைகளுக்கு வீடுகள் கட்ட ரிசில் இடம் ஜாரி செய்ததை, சிவகாசி கோட்டாட்சித் தலைவர் ரத்து செய் துள்ளாரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

(உ) அங்கு ஏற்கெனவே குடியேறி வசிப்பவர்களைக் காலி செய்யக் ாரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பொதுநல உபயோகத்திற்கு இந்த தரிசு நிலங்கள் வேண்டியதிருப்பதால், மொத்தம் 18 நபர்களில், 16 நபர்களுக்கு அருப்புக்கோட்டை வட்டாட்சித் தலைவரால் வழங்கப்பட்ட நில ஒப்படைகளை சிவகாசி உதவி மாவட்ட ஆட்சியர் ரத்து செய்திருக்கிறார்.

(உ) நில ஒப்படை செய்யப்பட்டவர்களில் எவரும் மேற்படி தரிசு நிலங்களில் குடியேறவில்லை. எனவே அவர்களை வெளியேற்றுவதற்கு அவசியமே ஏற்படவில்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, அங்கே குடியேறியவர்கள் சுமார் 10 ஆண்டுக் காலமாக குடியிருப்பதாகவும், வேறு வகுப்பார் இந்தத் தெருக்களில் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், அவர்களெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த வீட்டு மனைகளை ஒப்படை செய்வது விஷயமாக கீழ்க்கண்ட காரணங்களுக்காக மன்றப சாலைத் தலைவர் சிவகாசி மாவட்ட ஆட்சி உதவித் தலைவருக்கு முறையீடு செய்தார். 32/3 சர்வே எண்ணில் ஒப்படை செய்யப்பட்ட பகுதி உண்மையில் களத்து மேடாகப் பயன்படுத்தப்படுகிறது. 165/4 சர்வே எண்ணில் ஒப்படை செய்யப்பட்ட பகுதியில் முன்னர் ஓர் ஊருணி இருந்தது. ஊராட்சி அந்த ஊருணியைப் பொதுப் பூங்காவாகப் பயன்படுத்துவதற்காக ரூ. 2,000 செலவில் அதை தூர் எடுத்திருக்கிறது. அதற்குத் தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவை உண்மை என்று தெரிய வந்த போது, 18 ஒப்படைகளில் 16 ஒப்படைகள் வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர் ரத்து செய்யப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று மனைகள் வழங்குவதற்கு எம். ரெட்டியாப்பட்டி ஊராட்சித் தலைவர் ஏற்பாடு செய்து வருகிறார். இதற்காக அந்தக் கிராமத்தில் 158/6 சர்வே எண்ணில் 38 சென்ட் இடம் வாங்கப்பட்டுள்ளது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, சில நேரங்களில் சர்க்காருடைய தரிசு நிலங்களை சில மக்களுக்கு இனாமாகக் கொடுக்கிறோம். ஆனால் பிறகு, கொஞ்ச நாள் கழித்து, ஏதோ காரணத்தால் சர்க்காருக்குத் தேவையென்று எடுத்துக்கொள்கிறோம். அப்படி இனாமாக, 'அசைன்மென்ட்' கொடுக்கப்படும் சில தரிசு நிலங்களை சர்க்கார் எந்தக் கால அளவுக்குள் எடுத்துக் கொள்ளலாம் அல்லது எந்தக் கால அளவுக்கு மேல் எடுக்கக் கூடாது என்று ஏதாவது விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, சர்க்கார் நில ஒப்படைப்பு செய்வதிலே ஏதாவது தவறு இருக்குமானால், அது மறு பரிசீலனை செய்யப்பட்டு, அந்த ஒப்படைப்புகள் ரத்து செய்யப்படுமே தவிர, ஒரு தடவை கொடுத்த பிறகு அதை அரசாங்கம் தனது காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளும் முறை இப்போதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## *Disciplinary Proceedings against Gazetted Officers.*

* 101. *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state the details of the Gazetted Officers and their Departments who are facing disciplinary proceedings at present?

### அரசிதழ்ப் பதிவு பெற்ற அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை.

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தற்போது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அரசிதழ்ப் பதிவு பெற்ற அதிகாரிகள், அவர்களுடைய துறைகள் குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆட்பட்டுள்ள அரசிதழ்ப் பதிவுள்ள அதிகாரிகள், அவர்களின் துறைகள் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறை | 10 |
| தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத்துறை | 2 |
| வருவாய்த் துறை | 5 |
| உள் துறை | 1 |
| தொழில் துறை | 1 |
| வேளாண்மைத் துறை | 1 |
| பொதுப்பணித் துறை | 3 |
| மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை | 6 |
| மொத்தம் | 29 |

## Typists in the Secretariat.

* 102. *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Typists as on 1st March 1973 in the Secretariat; and

(*b*) among them, the number working temporarily ?

## தலைமைச் செயலகத்தில் உள்ள தட்டெழுத்தர்கள்.

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமைச் செயலகத்தில் தட்டெழுத்தர்கள் 1—3—1973-ல் உள்ளவாறு எவ்வளவு பேர் இருக்கின்றனர் ?

(இ) அதில் எவ்வளவு பேர் தற்காலிகமாகப் பணியாற்றுகின்றனர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 602 பேர்.

(இ) 77 பேர்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, இந்த வேலைகளுக்கு எந்த அடிப்படையில் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு மாறுதல் உத்தரவு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தட்டச்சு தெரிந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மாறுதல் உத்தரவு எதுவும் இல்லை.

## Sandalwood Oil Factories.

* 108. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any Sandalwood Oil extracting factories are run by the Forest Department; and

(*b*) if so, the details thereof ?



## சந்தனத் தைலத் தொழிற்சாலைகள்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சந்தனத் தைலத் தொழிற்சாலைகள் எவையேனும் வனத்துறையால் நடத்தப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில் அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, there are so many questions standing in the name of the hon. Member Thiru Vellapandian, but we do not see the gentleman at all in the House.

## Tiruchi Central Electricity Board Office.

* 109 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the policemen were not allowed inside the Electricity Board Office during the riot in the Office of the Tiruchy Central Electricity Board during office hours on 9th November 1972; and

(*b*) if so, the reasons therefor ?

## திருச்சி மத்திய மின்சார வாரிய அலுவலகம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 9—11—1972 ஆம் நாள், திருச்சி மத்திய மின்சார வாரிய அலுவலகத்தில், வேலை நேரத்தில் நடந்த கலகத்தின்போது, போலீஸார் உள்ளே அனுமதிக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) அனுமதிக்கப்படவில்லை.

(இ) காவலர் மத்திய அலுவலகத்திற்கு வந்த சமயத்தில் தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடந்ததால், வாயிலிலேயே இருக்கும்படி கேட்டார்கள். தேவைப்படுமானால் வைத்துக் கொள்ளலாம். ஆகவே வாயிலிலே இருக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, 9—11—1972 ஆம் தேதி, அலுவலகத்தில் சச்சரவு நடந்த தினம், தொழிலாளர்கள் சங்கத்தில் இருக்கிற தலைவர்களுடைய படங்கள்—அறிஞர் அண்ணா அவர்களின் படம், டாக்டர் கலைஞர் அவர்களுடைய படம், மற்றுமுள்ள முக்கியமான பொருள்களெல்லாம் சேதப்படுத்தப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, 2 தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையின் காரணமாக சில படங்கள் சேதப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. போலீசிடத்திலே புகார் செய்யப்பட்டு, அந்த வழக்கு இப்போது கோர்ட்டில் இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, அன்றைய தினம் காலையில் 10 மணியிலிருந்து மாலை 6½ மணி வரை போலீஸ் வேனோடு வெளியில் நின்றும், சண்டை நடக்கும்போது அவர்களை உள்ளே அனுமதிக்காத காரணம்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அப்படியல்ல அது. அவர்கள் போலீசுக்குத் தெரிவித்தார்கள். போலீசும் வந்தார்கள். அந்தச் சமயத்தில் தொழிலாளர் பிரதிநிதிகள் சமரசத்திற்கு வரலாமென்று பேச்சு வார்த்தைகள் நடத்திய காரணத்தால், தற்சமயம் போலீஸ் வர வேண்டியதில்லை என்று சொன்னார்கள். அதன் பிறகு அவர்கள் சமரசமாகக் கிளம்பிச் சென்று விட்டார்கள். எனினும் நடந்த நிகழ்ச்சிகளுக்காக போலீசில் தெரிவிக்கப்பட்டு, இப்போது ஒரு வழக்கும் இருக்கிறது.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, புதுக்கோட்டையில் பணியாற்றுபவர்கள், இந்தக் கலவரத்திற்காக லாரி மூலம் வந்து தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதுபற்றி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, வழக்கு முடிவில்தான் விவரங்கள் தெரியும்.

### *Nuclear Power Station, Tuticorin.*

* 110 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) Whether the Government have addressed the Government of India for the setting up of another nuclear power station at Tuticorin ;and

(*b*) if so, the stage at which the matter now stands ?



### அணுமின் நிலையம், தூத்துக்குடி.

திரு எஸ். எஸ். தென்னரசு (திரு க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில் மற்றுமொரு அணுமின் நிலையத்தை நிறுவுமாறு மாநில அரசு இந்திய அரசுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இவ்விஷயம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) மொத்தமாக நாட்டின் நிதிவாயில்களையும், அணுமின் சக்தி திட்டத்திற்காக கிட்டக்கூடிய நிதிவாயில்களையும் கருதி, ஐந்தாவது திட்டக் காலத்தில் புதிய திட்டங்கள் எதனையும் நிறைவேற்ற இயலாது எனத் தோன்றுவதாக இந்திய அரசு தற்போது பதிலளித்துள்ளது.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப் பெற்ற ஆசிரியர்கள்

1 வினா—தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கடந்த காலக் கல்வியாண்டு மூன்றில் (1969–70, 1970–71 & 1971–72) தனியார் பள்ளிகளில் வேலை பார்த்த ஆசிரியர்களில் எந்தெந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பெற்றனர் ?

ப.—இதுபற்றிய விவரங்களடங்கிய பட்டியல் @ ஒன்று அவையில் வைக்கப் பட்டுள்ளது,

### *Corporation Schools.*

2. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether a number of the Corporation schools have been upgraded in Madras City during the calendar year 1973 ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—(*a*) Six Corporation Middle Schools have been ordered to be upgraded as High Schools during the academic year 1973–74.

---

@ 341–357 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(*b*) The names of the schools are :—

1 Corporation Girls' Middle School, 26, Cooks Road, Madras-12.

2 Corporation Girls' Middle School, 63, Siruvallore Agraharam, Madras-8.

3 Corporation Girls' Middle School, Srinivasaperumal Sannadhi Street, Royapettah, Madras-14.

4 Corporation Boys' Middle School, Manikanda Mudali Street, Washermanpet.

5 Corporation Boys' Middle School, Banthar Thottam, Chembiam.

6 Corporation Boys' Middle School, Maraimalai Adigalar Nagar, Nammalwarpet.

*The scale of salary for a Secondary Grade Trained Teacher.*

3. *Q.*—THIRU M.RAJAH IYER : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the scale of salary for a Secondary Grade Trained Teacher who is working as a Headmaster of an Aided Middle School ;

(*b*) the scale of salary for which such an incumbent is eligible, should the Middle School be raised to a High School ;

(*c*) whether any protection of salary is given to such an incumbent ; and

(*d*) if so, the details thereof ?

*A.*—(*a*) The scale of pay of Secondary Grade teachers working as Headmasters in Aided Middle Schools is Rs. 250—10—400 plus special pay of Rs. 15 p.m.

(*b*) if the incumbent, working in a Middle School as Headmaster, is willing to work in the High school after it is upgraded he will be paid the pay last drawn by him in the Middle School without the Headmaster's allowance.



(*c*) Does not arise in view of the answer to question (*b*) above.

(*d*) Separate scale of pay is given to the Headmasters of Middle Schools, who are only Secondary Grade Certificate holders. In view of their additional responsibilities as Headmasters of Middle Schools, they are given Headmasters' Allowance also. If a Middle School is upgraded into a High School the Headmaster of the Middle School could be absorbed only as a Secondary Grade teacher with protection given to the last pay drawn by him in the Middle School but without Headmaster's allowance.

*Treatment of out Patients.*

4. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of out-patients treated at the Government Hospitals in Madras City during the calendar year 1972, month wise ;

(*b*) per day on an average ; and

(*c*) per month on an average ?

*A.*—(*a*), (*b*) and (*c*) : A statement @ is placed on the table of the House.

*Polio.*

5. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of cases of Polio in the State for the calendar years 1969, 1970, 1971 and 1972, District-wise ?

*A.*—A statement † is placed on the table of the Houses.

*Report of the Panel on Handloom Industry.*

6. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House a copy of the report of the Panel on Handloom Industry?

---

@ 358 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 359 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*A.*—A copy of the report was placed on the table of the House on the 21st January 1974.

*Accidents.*

7. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) the total number of accidents in which (i) lorries, (ii) buses and (iii) cars were involved in the State during the calendar year 1972; and

(*b*) the details thereof district-wise?

*A.*—(*a*)—

| | | |
|---|---|---|
| (i) Lorries | .. .. .. | 4,177 |
| (ii) Buses | .. .. .. | 3,977 |
| (iii) Cars | .. .. .. | 3,383 |

(*b*) Particulars regarding the number of Accidents in which Lorries, Buses and Cars were involved in this State during 1972:

| *Serial number and district.* | *Vehicle involved in the accidents during* 1972. | | |
|---|---|---|---|
| | *Lorries.* | *Buses.* | *Cars.* |
| (1) | (2) | (3) | (4) |
| 1 Chingleput East .. .. | 241 | 180 | 142 |
| 2 Chingleput West .. .. | 363 | 139 | 36 |
| 3 North Arcot .. .. .. | 233 | 170 | 126 |
| 4 South Arcot .. .. .. | 281 | 184 | 120 |
| 5 Thanjavur East .. .. | 48 | 67 | 84 |
| 6 Thanjavur West .. .. | 106 | 95 | 26 |
| 7 Tiruchirappalli .. .. | 310 | 195 | 165 |
| 8 Madurai South .. .. | 119 | 170 | 100 |
| 9 Madurai North .. .. | 121 | 168 | 142 |
| 10 Ramanathapuram .. .. | 74 | 104 | 39 |
| 11 Tirunelveli .. .. .. | 180 | 105 | 97 |
| 12 Kanyakumari .. .. | 43 | 63 | 32 |
| 13 Coimbatore Urban .. .. | 199 | 135 | 73 |
| 14 Coimbatore Rural .. .. | 239 | 139 | 154 |
| 15 Salem .. .. .. | 267 | 150 | 133 |
| 16 Dharmapuri .. .. .. | 145 | 66 | 19 |
| 17 The Nilgiris .. .. .. | 59 | 35 | 35 |
| 18 Railway Police, Tiruchirappalli. | 30 | 30 | 11 |
| 19 Madras City .. .. | 1,109 | 1,782 | 1,849 |



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு சட்ட மன்ற மேலவைக்குத் தாம் பரிந்துரை செய்திருப்பதாகத் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்து மேலவைத் தலைவருக்கு தகவல் வந்துள்ளது.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து, தம்மால் கையெழுத்திடப்பட்டு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை மேலவையின் இசைவிற்கு அனுப்பியிருப்பதாகவும் மேலவைத் தலைவருக்குத் தகவல்கள் வந்துள்ளன.

1. தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74)

2. தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74).

3. தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/74).

4. 1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/74).

5. தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு-கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/74)

### 3 கவன ஈர்ப்பு.

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் நடவடிக்கை எண் Rc. 221096/XI/71 நாள் 9—11—1973-ஆல் அரசு 'பி' விங் பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களும், II கிரேடு தமிழாசிரியர்களும், சிறப்பு ஆசிரியர்களும் வேலையிழக்கும் அபாயம் குறித்து.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் முதலிலே கொடுத்தேன். ஆனால் இங்கு வந்திருப்பதிலே என்னுடைய பெயர் முன்னதாக வராமல், இன்னொரு உறுப்பினருடைய பெயர் முன்னாலேயும், என்னுடைய பெயர் பின்னாலேயும் வந்திருப்பதற்கான காரணம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவை விதிப்படி, ஒரு உறுப்பினர் ஒரேநாளில் இரண்டு கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொண்டுவர முடியாது. உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள இன்னொரு கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு பின்னர் வருகிறது. ஆதலால் முன்னால் இருப்பதில் அதே முன்னறிவிப்பைக் கொடுத்த மற்றொரு உறுப்பினர் பெயருடன் இணைக்கப்பட்டிருக்கிறது.





THIRU K. S. GANAPATHI: Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. Minister for Education to a matter of urgent public importance, namely, "the effect and the implication of the proceedings of the Director of School Education, Tamil Nadu, Rc. No. 221096/XI/71, dated 9th November 1973 and the resultant threat of hundreds of Secondary Grade Teachers, Grade II Tamil Pandits and other specialist teachers appointed on or after 1st April 1970 in the Government 'B' Wing Schools in Tamil Nadu being thrown out of employment.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையின் 16—5—1970 நாளிட்ட அரசு ஆணை 761-ன்படி பி-பிரிவு அரசு (மன்ற) உயர்நிலைப்பள்ளிகளில் 1—4—1970 முதல் எல்லா ஆசிரியர் பதவிகளையும் அரசு ஏ-பிரிவு பள்ளிகளில் கடைப்பிடிக்கும் விதிகளின் அடிப்படையில் தான் நிரப்பப்படவேண்டும் என்று ஆணையிடப்பட்டது. அவ்வாணைக்கேற்ப அத்தகைய எல்லா ஆசிரியர் பணியிடங்களையும் அதாவது தமிழ்நாடு தேர்வு ஆணைக் குழுவின் மூலம் நிரப்பப்பட வேண்டிய பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் நீங்கலாக மற்றெல்லா பணியிடங்களையும் கணக்கெடுத்து செய்தித் தாள்களில் விளம்பரம் செய்து முறையாக நியமனம் செய்யும்படி பள்ளிக் கல்வி இயக்குநரின் 9—11—1973 நாளிட்ட நடவடிக்கை எண் 22109/X1/71-ல் முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏற்கனவே அப்பதவிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் யாவரும் செய்தித் தாள்களில் விளம்பரம் வந்தவுடன் முறையாக அவரவர் பதவிகளில் நியமனம் பெற விண்ணப்பம் செய்து கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

1—4—1970 முதற்கொண்டு ஏற்கெனவே தற்காலிகமாக அப்பதவிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் சிலர் தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணி விதிகளில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதியினை பெறாதவர்களாகவோ குறிப்பிட்ட வயது வரம்பினை தாண்டியவர்களாகவோ இருந்தனர். அத்தகையவர்கள் யாவரும் 1973-ம் ஆண்டு கோடை விடுமுறையின் ஆரம்பத்தில் பதவிகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களில் பலர் அது குறித்து அரசுக்கு முறையீடு செய்தனர். அம்முறையீடுகளைப் பரிசீலனை செய்து, 1973-74 கல்வி ஆண்டிலும் அவர்கள் யாவரும் மீண்டும் தற்காலிக பதவியில்

அமர்த்தப்பட்டனர். 1974-ம் ஆண்டு கோடை விடுமுறைக்கு முன் அவர்கள் மறுபடியும் பதவியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். எனினும் இது குறித்து ஆணை எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ள பணியிடங்கள் குறித்த விவரங்கள் வந்து சேர்ந்தவுடன் தற்காலிகப் பணியில் உள்ள கல்வித் தகுதி குறைந்த மற்றும் வயது வரம்பினைத் தாண்டிய ஆசிரியர்களை பதவியிலிருந்து விடுவிப்பதா அல்லது விதிகளைத் தளர்த்தி அவர்களையும் முறையாக நியமனம் செய்வதா என்பது பற்றி ஆய்வு செய்யப்படும்.

மேற்படி விதிகளில் குறிப்பிட்ட கல்வி மற்றும் வயது வரம்பு இரண்டினையும் நிறைவு செய்யும் தற்காலிக ஆசிரியர்களும் முறையாக நியமனம் பெறுவதற்கு புதிதாக விண்ணப்பம் செய்ய வேண்டியிருப்பினும் அவர்களில் ஒழுங்கு நடவடிக்கைக்குட்பட்டவர்கள் போன்ற ஒரு சிலரைத் தவிர மற்றெல்லோரும் அவரவர் பதவியில் முறையாக நியமிக்கப்படவேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, முக்கியமாக வயது வரம்பை மீறியவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். அதற்குக் காரணம் அவர்கள் முன்னாலேயே ஆரம்பப் பள்ளிகளிலே ஆசிரியர்களாகப் பணியாற்றிய பின்பு, தகுதி பெற்று உயர்நிலைப் பள்ளிகளிலே பணிக்கு வந்திருக்கின்றார்கள். தமிழாசிரியர்களுக்கு இது போன்று இருக்கும்போது, வயது வரம்பை 30 லிருந்து 40-க்கு அரசு தளர்த்தியிருக்கின்றது. அந்த அடிப்படையிலேயே பட்டதாரி ஆசிரியர்கள் 3,157 பேர்களுக்கு இந்த அரசு மனமுவந்து அவர்கள் பணியை வரன்முறைப்படுத்தியது போல் செய்ய முடியாதா? கட்டாயமாக அவர்களுக்கு அப்படிச் செய்ய வேண்டும். அரசு இதைச் செய்யுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது பற்றித்தான் முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பணியிடங்கள் குறித்த முழு விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் கிடைக்கப் பெற்ற பிறகு முடிவு செய்யலாம்.



**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏற்கெனவே இருக்கக்கூடிய இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிப்பதற்கான முயற்சிகளிலே தலைமைக் கல்வி அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதுபற்றி அறிக்கை வருவதற்கு முன்னதாகவே அவர்கள் 'அப்பாயின்ட்மெண்ட்' பண்ணுகின்ற சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் ஏற்கெனவே இருக்கக்கூடியவர்களை வெளியேற்றிவிட்டு புதிதாக இருப்பவர்களை நியமிப்பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டுவிடாதா? அப்படி வெளியேற்றிய பிறகு மீண்டும் அவர்களைப் போடுவதற்கான வாய்ப்பு எப்படி வரும்? அப்படி வெளியேற்ற விடக்கூடாது. உடனடியாக " report call for " செய்து அவர்களை அப்படியே பணியில் வரன்முறைப்படுத்துவதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டபடி, இது குறித்து ஆணை எதுவும் இது வரையில் வெளியிடப்படவில்லை. அதற்கான விவரங்கள் வந்த பிறகுதான் அவர்களை விடுவிக்கச் சொல்வதா அல்லது ஏற்றுக் கொள்ளச் சொல்வதா என்று பார்க்க வேண்டும். விதிகளைத் தளர்த்த வேண்டும். தளர்த்திய பிறகுதான் ஏற்றுக்கொள்வதா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். அரசாங்கம் முடிவு செய்த பிறகுதான் அந்த முடிவை ஏற்று அதன்படிதான் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னால் அவர்கள் எடுத்துக் கொள்கின்ற எந்த முறையும் நடைமுறைப் படுத்தப்படாமல், நாம் எடுக்கின்ற முடிவின் அடிப்படையிலேதான் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தலாம். மற்றப்படி, அவர்கள் வயது வரம்புக்குட்பட்டு, கல்வித் தகுதி பெற்று இருப்பவர்களைப்பற்றியும், அவர்களை முறையாகப் பதவியில் அமர்த்தப்படுவதுபற்றியும் ஆணை வெளியிடுவதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கின்றது. அதைப்பற்றி விரைவிலேயே ஆணை பிறப்பிக்க வேண்டும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, 1—4—1970-க்குப் பின் நிர்ணயித்தபடி, ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்கு மாற்றம் செய்கிறபோது, அவர்களை " ousted and posted" என்று உத்தரவிடுகிறார்கள். எனவே அவர்களுடைய பணிக்காலம் அதனால் தடைப்படுகிறது. அப்படிச் செய்யாமல் அவர்களையும் மற்றவர்களைப்போல் மாற்றம் செய்ய முடியுமா? அதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி தனியாகத்தான் ஆராய வேண்டும். விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்று எனக்கு இப்போது தெரியவில்லை. தற்காலிகம் என்கின்ற போது, நிரந்தரமாக இருக்கின்றவர்களுக்கு என்று இருக்கக்கூடிய, கடைப் பிடிக்கக்கூடிய விதிகளைக் கடைப்பிடிக்க முடியுமா அல்லது தற்காலிகமாக இருப்பவர்களை மாற்றுவதற்கு வழி இருக்கின்றதா என்பதைத் தனியாகத் தான் ஆராய வேண்டும். ஆராய்ந்துதான் இதில் எது நியாயத்தின்படி அமைகிறதோ அதை நாம் வழங்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது தமிழ் நாடு அரசு பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தமாக, 3—3—1973 ஆம் தேதிக்கு முன்னால் பணியாற்றிய அத்தனை பேரும் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்ல வேண்டியதில்லை என்ற ஒரு பெரிய சலுகையையே, விதிகளை relax செய்து வழங்கி அந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வழங்கியிருக்கின்றது. நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே பள்ளியிலே பணியாற்றுகின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் இத்தகைய நடைமுறைச் சலுகைகள் வழங்கப்படவில்லை. அந்தச் சலுகையை வழங்கும் ஜி.ஓ. 351-ல் ஒரு 'amendment' கொண்டுவந்து இதிலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் அடங்குவார்கள் என்ற அந்த விதிகளை வெளியிடுவதன் மூலம் அவர்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

## 2. தர்மபுரி வட்டார பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் தொடர் உண்ணா விரதத்தால் கல்வி போதிப்பு பாதிக்கப்படுவது குறித்து.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்:

"19—1—1974 காலையிலிருந்து தர்மபுரி வட்டார பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள், ஆர்.டி.ஓ. போட்ட உத்தரவை அமுலாக்கவில்லை என்றும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் எழுத்து மூலமாக வழங்கப்பட்ட உறுதி



மொழி நிறைவேற்றப்படவில்லை என்றும், மற்ற குறைகள் நீக்கப்படவில்லை என்றும், அவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அதனால் கல்வி போதிப்பு பாதிக்கப் படுவதாலும், ஆசிரியர்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டிருப்பதாலும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது குறித்து".

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, உண்ணாவிரதம் இருக்கும் ஆசிரியர்களுடைய முக்கியமான கோரிக்கை ஆசிரியர்களுக்கு முறைப்படி தேர்வு நிலையிலான இளநிலை பதவி உயர்வு கொடுக்கும்படி தர்மபுரி கோட்ட ஆட்சித் தலைவர் போட்ட உத்தரவை அமுல்படுத்தவில்லை என்பதாகும். அவ்வுத்தரவை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கையிலேயே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுள் ஒருவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை (பேராணை எண் 3427/72) மனுவைப் பதிவு செய்துள்ளார். ஆகவே, அப் பேராணை மனுவின் மீது நீதிமன்றத்தின் ஆணைகள் கிடைக்கும்வரை ஊராட்சி ஒன்றியம் பதவி உயர்வுக்கான நடவடிக்கை எதும் எடுக்கமுடியாது.

தேர்வு நிலையிலான இளநிலை ஆசிரியர் இருவர் ஓய்வு பெற்றுள்ள காலியிடத்தில் இளநிலை ஆசிரியர்களை பதவி உயர்வு செய்யவில்லை எனவும் கோரப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தேர்வு நிலையிலான இளநிலை ஆசிரியப் பதவிகள் அங்குள்ள இளநிலைப் பதவிகளின் மொத்த எண்ணிக்கையில் பத்து சதவீதமாகும். தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தின் இளநிலை ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 147 ஆக இருந்தது. பின்னால் அது 124 ஆக குறைவுபட்டது. இதற்குக் காரணம் அதில் 23 பதவிகள் இடைநிலையாக உயர்த்தப்பட்டதே ஆகும். ஆகவே 14 தேர்வுநிலைப் பதவிகள் 12 ஆக குறைக்கப்படவேண்டுமா என்று தர்மபுரி ஊராட்சி ஒன்றிய ஆணையர் சேலத்திலுள்ள முதன்மைக் கல்வி அதிகாரியை விளக்கம் கேட்டிருக்கிறார்.

மற்றபடி சேம நல நிதிக்கான இருப்புச் சீட்டுகள் அளித்தல், ஆசிரியர்களின் முன்னுரிமைப்பட்டியல் அளித்தல், நிலுவை ஊதியங்களுக்கான ஆணை பிறப்பித்தல், சேமநலநிதியில் புதிய ஆசிரியர்களை அனுமதித்தல், ஒரு நபர் குழு பரிந்துரையில் ஊதிய உயர்வு பெற்றோர்க்கு ஊதிய நிர்ணய ஆணை பிறப்பித்தல், ஆசிரியர்களுக்கு ஆண்டு உயர்வுக்கான ஆணை பிறப்பித்தல், சேமநலநிதியிலிருந்து கடன்களுக்குரிய வசதிகளைப்பற்றி உரிய நடவடிக்கைகள் ஊராட்சி ஒன்றியத்தால் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட காலம் நிறைவேற்றப்படாமல் இருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி மகிழ்ச்சி தெரிவித்து அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் ஆர்.டி.ஓ. முதலில் செலக்ஷன் கிரேடு என்று உத்தரவு போட்டார். அந்த உத்தரவுக்கு மாறாக மேல்முறையீட்டு அதிகாரி உத்தரவு போட்டார். இந்த இரண்டாவது போட்ட உத்தரவை எதிர்த்துத்தான் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்கள். ஆர்.டி.ஓ.வின் முதல் உத்தரவு அமுல்நடத்தப்படவில்லை. அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. தீர்மானங்கள்.

### (1) தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்கள்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே:

"தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961) 94-வது பிரிவிலுள்ள (1) உட்பிரிவின்கீழ் தமிழ் நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட சில வரைவுத் திருத்தங்களுக்கு மேற்குறிப்பிட்ட உட்பிரிவின் வரம்பு நிபந்தனைக்கிணங்க ஏற்பளிக்க வேண்டும்:

In the said rules,—

(1) in rule 5, after sub-rule (2), the following sub-rule shall be added, namely :—

"(3) Where several persons falling under the same category apply for assignment, the Authorised Officer shall make due enquiry about the economic status of the applicants, their family commitments, etc., and select the person who in his opinion, is economically poorer or has more family commitments than others. Clear reasons



shall be recorded in the order for preferring a particular person to others. Where the persons competing for assignment are more or less similarly placed and no distinction could be drawn between them, the selection of the persons eligible for assignment shall be made by drawal of lots";

(2) in rule 7, the following shall be added at the end, namely—

"Every such application shall be made within thirty days from the date of the publication of the notice under rule 4 in the village or town where the land is situated";

(3) in rule 11, for sub-rule (3), the following sub-rule shall be substituted, namely :—

"(3) (*a*) Any person aggrieved by the orders of the District Revenue Officer under rule 10 may, within sixty days from the date of receipt of such order, make an application for revision to the Land Commissioner :

Provided that the Land Commissioner may, admit an application for revision up to thirty days after the expiry of the period aforesaid, if he is satisfied that the applicant had sufficient reason for not making it within the said period.

(*b*) The Land Commissioner may, at any time, of his own motion, within a period of five years of the date of the order of assignment, set aside, cancel or in any way modify the order of assignment if he is satisfied that the order was grossly inequitable, or there has been a material irregularity in the procedure, or that it was passed under a mistake of fact or owing to fraud or misrepresentation or that the extent assigned together with other lands, if any, held by the assignee (other than a Co-operative Society) was in excess of five standard acres."

(4) in Form B for paragraphs 1, 2 and 3, the following paragraphs shall be substituted, namely :—

"1. It is hereby notified that the land specified in the Schedule below, which has been acquired by the Government under section 18 (1) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), is available for disposal under section 94 of the said Act and the rules made thereunder. Any person desiring to apply for the

assignment of the land may present his application in person or send it by registered post to the Authorized Officer.............. within thirty days from the date of the publication of this notice in.........................village/town where the land is situated.

2. The following persons and societies shall be eligible for the assignment of land and shall be entitled to preference in the order given below :—

(i) A person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus as a result of the provisions of the Act ;

(ii) Any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act ;

(iii) A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act ;

(iv) A landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land ;

(v) A person who is, or who has been, a member of the Armed Forces including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950 ;

(vi) A landless agricultural labourer other than the landless agricultural labourer referred to in clause (iv) who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land ;

(vii) A cultivating tenant who is holding land which is less than three standard acres in extent ;

(viii) A repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assets not exceeding Rs. 10,000 in value ;



(ix) A co-operative farming society, the members of which are landless agricultural labourers, provided that the extent of land assigned to the society together with the land, if any, already held by the society does not exceed the ceiling area.

3. The total extent of land that may be assigned to any person referred to in items (i) to (viii) in paragraph 2, together with the extent of other land, if any, already held by such person, or if such person is a member of a family, by such family shall not exceed five standard acres " ;

(5) in Form ' C ', for items 4 to 11, the following items shall respectively be substituted, namely :—

"(4) Whether the applicant is a person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus, as a result of the provisions of the Act.

(5) Whether the applicant is any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act.

(6) Whether the extent of the applicant's holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act.

(7) Whether the applicant is a landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

(8) Whether the applicant is, or has been, a member of the Armed Forces, or has served in the Indian National Army, or a member of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950.

(9) Whether the applicant is a landless agricultural labourer other than the landless agricultural labourer referred to in item No. (7) above, who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 சனவரி 30

(10) Whether the applicant is a cultivating tenant who is holding land which is less than three standard acres in extent.

(11) Whether the applicant is a repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assets not exceeding Rs. 10,000 in value.

(12) Whether the applicant is a co-operative farming society, the members of which are landless agricultural labourers. If so, give full particulars of the members and of the lands held by them.

(13) Other particulars ".

உபரி நிலமென அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 58/1961) அரசு எடுத்துக் கொண்டுள்ள நிலங்கள், தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்கள் குறித்து முடிவு செய்தல்) விதிகளின் 5-வது விதியைச் சேர்ந்த (1) துணை விதியில் விதித்துள்ள முன்னுரிமை வரிசைப்படி, தகுதியுடையவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றன. உபரி நில ஒப்படைக்குரிய ஒரே வகைப் பாட்டின் கீழ் பல விண்ணப்பதாரர்கள் இருந்தால், ஒப்படை உரிமை பெற்ற அதிகாரி, இந்த வகையின் கீழ் தகுதியுடையவர்களிடையேயும் உற்றவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயுள்ளது. அவர்களிடையே, பொருளாதாரத் தகுதி, குடும்பச் செலவுப் பொறுப்புக்கள் முதலியவை சம்பந்தமாக ஓர்ந்தறிந்து உற்ற தகுதியுடைய ஒருவரை உரிமைபெற்ற அதிகாரியே தெரிந்தெடுக்கலாம். ஆனால், நில ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையோர் யாவருமே பொருளாதார நிலை குடும்ப செலவுப் பொறுப்புக்கள் முதலியவை பொறுத்து ஏறத்தாழ ஒரே நிலையில் இருந்து அவர்களிடையே திட்டவட்டமான வேறுபாடு காணுவது இயலாததாயிருந்தால், அத்தகைய சூழலில் தக்க வழிவகையோ பரிகாரமோ இல்லாததால், உற்ற தகுதியுடையவரைத் தேர்ந்தெடுப்பது உரிமை பெற்ற அதிகாரிக்கு இயலாததாகிறது. இத்தகைய ஒரு தேர்வில் தீர்வுகாணும் ஒரே வழி திருவுளச் சீட்டு போட்டுத் தெரிந்தெடுப்பதுதான். இதற்கிணங்க இந்த நிலையில் முடிவு செய்வதற்கேற்ப, 5-வது விதிக்கு (3) துணை விதி ஒன்றைப் புதிதாகச் சேர்ப்பதென்று கருதப்பட்டுள்ளது.



1974 சனவரி 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த 7-வது விதி, அறிவிக்கப்பட்ட உபரி நிலங்களை ஒப்படை செய்யுமாறு கோரும் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான நடைமுறையையும், அவற்றை அனுப்பும் விதத்தையும் பற்றிக் கூறுகிறது. ஆனால், இவ்விதி, நில ஒப்படைக்குரிய விண்ணப்பத்தை உரிமை பெற்ற அதிகாரிக்கு எந்தக் கால அளவுக்குள் அனுப்ப வேண்டுமென்கிற காலவரையறை பற்றிக் குறிப்பிடவில்லை. விண்ணப்பங்களைக் கோரும் 'பி' படிவத்தில் அறிவிப்பு வெளியிடுகையில், உரிமை பெற்ற அதிகாரிகளாலேயே, இப்போது காலவரையறை குறிப்பிடப்படுகிறது. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை பெற்ற அதிகாரிகள் ஒரே சீரான காலவரையறையைக் குறிப்பிடுகிற வகையில், உபரி நிலங்கள் அமைந்துள்ள கிராமத்தில்/நகரத்தில் விண்ணப்பங்களைக் கோரி அறிவிப்பு வெளியிடும் நாளிலிருந்து முப்பது நாள் காலவரையறையை, 7-ஆவது விதியிலேயே குறிப்பிடுவது உகந்தது எனக் கருதப்படுகிறது. இதற்கிணங்க 7-ஆவது விதியைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

நில ஆணையாளர், நில ஒப்படை ஆணை பெரிதும் முறையற்றதென்றோ அல்லது நடைமுறையில் முக்கியமான முறைகேடு ஏற்பட்டுள்ளதென்றோ அல்லது உண்மை நிலையில் ஏற்பட்ட தவறு காரணமாக அல்லது மோசடி அல்லது திரித்துக்கூறுதல் போன்றவை காரணமாக அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதென்றோ சந்தேகமறத் தெரிந்துகொள்வதன் பேரில், ஒப்படை ஆணை நாளிலிருந்து ஐந்தாண்டுக்குள் ஒப்படை ஆணையைத் தள்ளிவிடவும் அல்லது ரத்து செய்யவும் அல்லது மாற்றியமைக்கவும் மேற்படி விதிகளின் 11(3) விதி நில ஆணையாளருக்கு அதிகாரம் வழங்குகிறது. தற்போதைய நிலையில் உள்ளவாறு இந்த விதி, நில ஆணையாளர் ஐந்தாண்டுகளுக்குள் தாமாகவே மறு விசாரணை செய்வதற்குத்தான் இடமளிக்கிறது. 10-ஆவது விதியின்படி, மாவட்ட வருவாய் அலுவலரின் ஆணைக்கு எதிராக, நில ஆணையாளருக்குக் கட்சிக்காரர்களும் செய்து கொள்கிற விண்ணப்பத்தின் பேரில் மறு விசாரணைக்கு வகைசெய்கிற தனி விதித்துறை ஒன்று இயற்றப்பட வேண்டுமென்றும், மாவட்ட வருவாய் அலுவலரின் ஆணை கிடைத்த நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் கட்சிக்காரர்கள் நில ஆணையாளருக்கு அத்தகைய விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டுமென்கிற காலவரம்பை வரையறுக்கலாம் என்றும் இப்போது கருதப்படுகிறது. கட்சிக்காரர்கள் விண்ணப்பங்கள் செய்து கொள்வதில் தாமதமேற்பட்டால் தகுதியுடைய நேர்வுகளில் மேலும் முப்பது நாட்கள் வரை ஏற்படும் காலதாமதத்தை தமது உசிதப்படி மன்னிக்கும் அதிகாரம் நில ஆணையாளருக்கு இருக்கலாம்.

என்றும் கருதப்படுகிறது. இதற்கேற்ப, 11-வது விதியைச் சேர்ந்த (3) உட்பிரிவில் இது குறித்து விதித்துறையொன்றை இயற்றுவதென்றும் கருதப்பட்டுள்ளது.

இம் மாமன்றம் ஏற்கெனவே ஏற்பளித்துள்ள முன்னுரிமை வரிசைப் பட்டியல் குறித்த 5-வது விதியில் செய்யப்பட்ட திருத்தங்களையொட்டி, ஒப்படை விண்ணப்பங்களை கோரும் 'பி' படிவ அறிவிப்பிலும், விதிகளில் வரையறுத்துள்ள உபரி நிலங்களின் ஒப்படைக்கான 'சி' படிவ விண்ணப்பத்திலும் தொடர்பான திருத்தங்களைச் செய்யவும் கருதப்பட்டுள்ளது.

இம் மேலவை இதை ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961) 94-வது பிரிவினுள்ள (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு, 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட சில வரைவுத் திருத்தங்களுக்கு மேற் குறிப்பிட்ட உட்பிரிவின் வரம்பு நிபந்தனைக் கிணங்க ஏற்பளிக்க வேண்டும்":

In the said rules,—

(1) in rule 5, after sub-rule (2), the following sub-rule shall be added, namely :—

"(3) Where several persons falling under the same category apply for assignment, the Authorised Officer shall make due enquiry about the economic status of the applicants, their family commitments, etc. and select the person who in his opinion, is economically poorer or has more family commitments than others. Clear reasons shall be recorded in the order for preferring a particular person to others. Where the persons competing for assignment are more or less similarly placed and no distinction could be drawn between them, the selection of the persons eligible for assignment shall be made by drawal of lots.";

(2) in rule 7, the following shall be added at the end, namely—

"Every such application shall be made within thirty days from the date of the publication of the notice under rule 4 in the village or town where the land is situated";



(3) in rule 11, for sub-rule (3), the following sub-rules shall be substituted, namely :—

"(3) (*a*) Any person aggrieved by the orders of the District Revenue Officer under rule 10 may, within sixty days from the date of receipt of such order, make an application for revision to the Land Commissioner :

Provided that the Land Commissioner may admit an application for revision up to thirty days after the expiry of the period aforesaid, if he is satisfied that the applicant had sufficient reason for not making it within the said period.

(*b*) The Land Commissioner may, at any time, of his own motion, within a period of five years of the date of the order of assignment, set aside, cancel or in any way modify the order of assignment if he is satisfied that the order was grossly inequitable or there has been a material irregularity in the procedure, or that it was passed under a mistake of fact or owing to fraud or misrepresentation or that the extent assigned together with other lands, if any, held by the assignee (other than a Co-operative Society) was in exess of five standard acres.";

(4) in Form B for paragraphs 1, 2 and 3, the following paragraphs shall be substituted, namely :—

"1. It is hereby notified that the land specified in the Schedule below, which has been acquired by the Government under section 18(1) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), is available for disposal under section 94 of the said Act and the rules made thereunder. Any person desiring to apply for the assignment of the land may present his application in person or send it by registered post to the Authorised Officer........... within thirty days from the date of the publication of this notice in.....................village/town where the land is situated.

2. The following persons and societies shall be eligible for the assignment of land and shall be entitled to preference in the order given below :—

(i) A person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus as a result of the provisions of the Act;

(ii) Any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act ;

(iii) A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act ;

(iv) A landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land ;

(v) A person who is, or who has been, a member of the Armed Forces including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950 ;

(vi) A landless agricultural labourer other than the landless agricultural labourer referred to in clause (iv) who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land ;

(vii) A cultivating tenant who is holding land which is less than three standard acres in extent ;

(viii) A repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assets not exceeding Rs. 10,000 in value ;

(ix) A co-operative farming society, the members of which are landless agricultural labourers, provided that the extent of land assigned to the society together with the land, if any, already held by the society does not exceed the ceiling area.

3. The total extent of land that may be assigned to any person referred to in items (i) to (viii) in paragraph 2, together with the extent of other lands, if any, already held by such person, or if such person is a member of a family by such family shall not exceed five standard acres." ;



(5) in Form 'C', for items 4 to 11, the following items shall, respectively be substituted, namely :—

(4) Whether the applicant is a person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus, as a result of the provisions of the Act.

(5) Whether the applicant is any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act.

(6) Whether the extent of the applicant's holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act.

(7) Whether the applicant is a landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

(8) Whether the applicant is, or has been, a member of the Armed Forces, or has served in the Indian National Army or a member of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950.

(9) Whether the applicant is a landless agricultural labourer other than the landless agricultural labourer referred in item No. (7) above, who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

(10) Whether the applicant is a cultivating tenant who is holding land which is less than three standard acres in extent.

(11) Whether the applicant is a repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assets not exceeding Rs. 10,000 in value.

(12) Whether the applicant is a co-operative farming society, the members of which are landless agricultural labourers. If so, give full particulars of the members and of the land held by them.

(13) Other particulars.".

*திரு. கே. ராஜாராம்:* மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டப்படி, உபரியாக இருக்கும் நிலங்களை அரசாங்கம் எடுத்த பிறகு, அதை யார் யாருக்கு எப்படி வினியோகிக்க வேண்டும் என்பது பற்றிய விதிகளைத் திருத்துவதற்காக இந்தத் திருத்த விதிகள் இப்போது பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் அமைச்சர் அவர்கள் விளக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். பாரம் 'பி' என்பதில், இரண்டாவது உப விதியில், பழைய விதி 2, சப் கிளாஸ் (2) "a person whose extent of holding is reduced below three standard acres held by him" என்று ஆரம்பிக்கிறது. இப்போது புதிதாகத் திருத்தப்பட்டிருக்கும் விதியில் "a person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus as a result of the provisions of the Act". . . . என்று இருக்கிறது. ஆகவே, ஏதோ ஒரு அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருந்தாலும், அவருக்குப் புதிதாக இந்த உபரியாக எடுக்கப்பட்ட நிலத்திலிருந்து கொடுக்கலாம் என்ற விதியை இப்போது மாற்றி "any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act"
என்று இருக்கிறது. அப்படி இருந்தால், அவருக்கு நிலம் இருந்தால், ஏதாவது அரை ஏக்கர் ஒரு ஏக்கர் இருந்தாலும் கூட, கொடுக்கக்கூடாது என்று இருக்கிறதா? அதை அரசாங்கம் எப்படி அணுகுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே 3 ஏக்கருக்குக் குறைந்து இருந்தால், அவருக்குக் கொடுக்கலாம் என்று இருந்ததை மாற்றி, இப்போது நிலமே இல்லாமல் இருந்தால்தான் கொடுக்கலாம் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறதா; அரை ஏக்கர், ஒரு ஏக்கர் இருந்தாலும் கூட, கொடுக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் எண்ணமோ என்பதை அறிய விரும்புகிறேன்.



*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* தலைவரவர்களே, இதில் முன்னுரிமை—'ப்ரியாரிட்டி', என்று வைத்துக் கொடுக்கும்போது யார் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று போடப்பட்டிருக்கின்றது. ஒன்றுமே இல்லாதவர்களுக்கு முதல் 'ப்ரியாரிட்டி ஆகக் கொடுக்கவேண்டும். இதில் தவறு இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

"a person who has been cultivating the land and who is completely dispossessed of".
இது எப்படி வந்தது என்றால், முதலில் நாம் 'நிலமற்றவர்களுக்கு' என்று போட்டோம். பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதைப் போல, மூன்று ஏக்கர் அல்லது மூன்றரை ஏக்கர் என்று வந்தது. பிறகு பார்க்கும் போது, உச்ச வரம்பில் வரக்கூடிய குடிவாரம்தாரர்கள் ஏற்கெனவே நிலத்தை உழுது கொண்டிருக்கின்றார்கள். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் நில உடைமையாளர்களிடமிருந்து இந்த நிலத்தை எடுக்கும்போது, இப்படி உழுது கொண்டிருப்பவர்களுக்கு நிலம் இல்லாது போய்விடுகின்றது. ஆகவே அவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று இப்போது போட்டிருக்கிறோம்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:* அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961) 94-வது பிரிவிலுள்ள (1) உட்பிரிவின்கீழ், தமிழ் நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க் கண்ட சில வரைவுத் திருத்தங்களுக்கு மேற்குறிப்பிட்ட உட்பிரிவின் வரம்பு நிபந்தனைக் கிணங்க ஏற்பளிக்க வேண்டும்;

In the said rules,—

(1) in rule 5, after sub-rule (2), the following sub-rule shall be added, namely :—

"(3) Where several persons falling under the same category apply for assignment, the Authorised Officer shall make due enquiry about the economic status of the applicants, their family commitments, etc. and select the person who in his opinion, is economically poorer or has more family commitments than others. Clear reason shall be recorded in the order for preferring a particular person to others. Where the persons competing for assignment are more or less similarly placed and no distinction could be drawn between them, the selection of the persons eligible for assignment shall be made by drawal of lots".

(2) in rule 7, the following shall be added at the end, namely :—

"Every such application shall be made within thirty days from the date of the publication of the notice under rule 4 in the village or town where the land is situated";

(3) in rule 11, for sub-rule (3), the following sub-rules shall be substituted, namely :—

"(3) (*a*) Any person aggrieved by the orders of the District Revenue Officer under rule 10 may, within sixty days from the date of receipt of such order, make an application for revision to the Land Commissioner ;

Provided that the Land Commissioner may, admit an application for revision up to thirty days after the expiry of the period aforesaid, if he is satisfied that the applicant had sufficient reason for not making it within the said period.

(*b*) The Land Commissioner may, at any time, of his own motion, within a period of five years of the date of the order of assignment, set a side, cancel or in any way modify the order of assignment if he is satisfied that the order was grossly inequitable, or there has been a material irregularity in the procedure, or that it was passed under a mistake of fact or owing to fraud or misrepresentation or that the extent assigned together with other lands, if any, held by the ass gnee (other than a Co-operative Society) was in excess of five standard acres.".;

(4) In Form 'B' for paragraphs 1, 2 and 3, the following paragraphs shall be substituted, namely :—

"1. It is hereby notified that the land specified in the Schedule below, which has been acquired by the Government under section 18 (1) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), is avialable for disposal under section 94 of the said Act and the rules made thereunder. Any person desiring to apply for the assignment of the land may present his application in person or send it by registered post to the Authorised Officer......................within thirty days from the date of the publication of this notice in.................... village/town where the land is situated.



2. The following persons and societies shall be eligible for the assignment of land and shall be entitled to preference in the order given below :—

(i) A person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus as a result of the provisions of the Act ;

(ii) Any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act ;

(iii) A person whose extent of holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act ;

(iv) A landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land ;

(v) A person who is or who has been, a member of the Armed Forces including persons who have served in the Indian National Army and members of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950 ;

(vi) A landless agricultural labourer other than the landless agricultural labour referred to in clause (iv) who contributes his own physical labour or that any member of his family in the cultivation of the land ;

(vii) A cultivating tenant who is holding land which is less than three standard acres in extent ;

(viii) A repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assets not exceeding Rs. 10,000 in value ;

(ix) A co-operative farming society, the members of which are landless agricultural labourers, provided that the extent of land assigned to the society together with the land, if any, already held by the society does not exceed the ceiling area.

3. The total extent of land that may be assigned to any person referred to in items (i) to (viii) in paragraph 2, together with the extent of other land, if any, already held by such person or if such person is a member of a family by such family shall not exceed five standard acres ".

(5) in Form 'C', for items (4) to (11), the following items shall respectively be substituted, namely :—

" (4) Whether the applicant is a person who has been cultivating the land and who is completely dispossessed of the land which is declared as surplus, as a result of the provisions of the Act.

(5) Whether the applicant is any other person who is completely dispossessed of his holding by virtue of the provisions of the Act.

(6) Whether the extent of the applicant's holding is reduced below three standard acres held by him partly as cultivating tenant and partly as owner or wholly as cultivating tenant by virtue of the provisions of the Act.

(7) Whether the applicant is a landless agricultural labourer belonging to Scheduled Caste or Scheduled Tribe who contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

(8) Whether the applicant is, or has been, a member of the Armed Forces, or has served in the Indian National Army, or a member of the Armed Forces who retired or were disbanded before the 26th January 1950.

(9) Whether the applicant is a landless agricultural labourer other than the landless agricultural labourer referred in item No. (7) above, who contributed his own physical labour or that of any member of his family in the cultivation of the land.

(10) Whether the applicant is a cultivating tenant who is holding land which is less than three standard acres in extent.



(11) Whether the applicant is a repatriate from Burma or Sri Lanka who is likely to contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land and who has brought to India assests not exceeding Rs. 10,000 in value.

(12) Whether the applicant is a co-operative farming society, the members of which are landless agricultural labourers. If so, give full particulars of the members and of the lands held by them.

(13) Other particulars. ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 4/1919), மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 15/1971), மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 5/1920) ஆகியவைகளுக்கு வரைவுத் திருத்தங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1919) V -வது விவர அட்டவணையின் III மற்றும் IV -ம் பாகங்களில் அமைந்துள்ள விதிகளுக்கு தமிழ் நாடு ஆளுநர் பிரிவு 347-ன் உட்பிரிவு (3)-ன்படி கொண்டு வரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்க வேண்டும்:

வரைவு வெளியீடு.

1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 347 உட்பிரிவு (3)-ல் அமைந்துள்ளபடி தமிழக ஆளுநர் V -வது விவர அட்டவணையில் III மற்றும் VI பாகங்களில் உள்ள விதிகளுக்கு கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

திருத்தம்.

மேற்கூறிய விதிகள் 24, 25 ஆகியவைகளை 25, 26 என்று தொடர் எண் விதிகளாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றியமைக்கும்போது தொடர் எண் 25-ன் விதியின் முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும்.

"24. விதி 21-ன் உபவிதி (1)-ன்படி தண்டக்கட்டணம் சான்றிதழில் இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி விகிதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது வட்டி விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.'

மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III-வது விவர அட்டவணையின் III, IV-ம் பாகத்தில் உள்ள விதிகளை தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 431-ன் உட்பிரிவு (3)-ன்படி கொண்டு வரும் வரைவு திருத்த விதிகளை ஏற்கவேண்டும்.

வரைவு வெளியீடு.

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் பிரிவு 431-ன் உட்பிரிவு (3)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் III-வது விவர அட்டவணையில் உள்ள பாகங்கள் III மற்றும் IV ஆகியவைகளில் உள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

திருத்தம்.

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் விவர அட்டவணை III-ல் உள்ள பாகம் III-ல் உள்ள தொடர் என் விதிகள் 23, மற்றும் 24 ஆகியவைகளை 24 மற்றும் 25 தொடர் என் விதிகளாக மாற்றியமைக்கும்போது, விதி 24-ன் முன் கீழ்க்கண்டவைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

"23. விதி 20-ன் கீழ் உபவிதி (1)-ன் படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி விதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது





தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகைமீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்".

மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையின் II-ம் பாகத்தில் கண்டுள்ள விதிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 305-ன் உட்பிரிவு (1)-ல் கண்டுள்ளபடி, கொண்டுவரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்க வேண்டும்.

வரைவு வெளியீடு.

1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 305-ன் உட்பிரிவு (1)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் விவர அட்டவணை IV-ன் பாகம் II-ல் அமைந்துள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

திருத்தம்.

மேற்கூறிய விதி 63-ஐ 64 தொடர் என் விதியாக மாற்றவும் அவ்வாறு மாற்றும்போது தொடர் என் 63-ன் விதி முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும் :—

"63. விதி 60-ன் உபவிதி (1)-ன்படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத்தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி விதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை, தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்".

மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) V-வது விவர அட்டவணையின் III-ஆம் பாகம், தணிக்கை தண்டக் கட்டணம் (Surcharge) தள்ளுபடி ஆகியவை பற்றிய விதிகளைக் கொண்டுள்ளது. இந்த விதிகளின் படி, அரசு நியமித்த தணிக்கையாளர்கள் சட்டத்திற்கு முரணான ஒவ்வொரு இனத்தையும் தள்ளுபடி செய்து அதற்குக் காரணமாயிருந்த நபருக்கு, அவரது அசட்டை அல்லது கெட்ட நடத்தையினால் கணக்கில் குறைந்த தொகையை அல்லது இழப்புத் தொகையை தண்டக் கட்டணமாக விதிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு நேர்விலும் அவரிடமிருந்து சேர வேண்டிய தொகையை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இதுபோன்ற விதித்துறைகள் 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திலும் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட மாநகராட்சிச் சட்டத்திலும் (தமிழ்நாடு சட்டம் 5/1920) காணும் விவர அட்டவணைகளில் உள்ளன. மேலே சொல்லிய தண்டக் கட்டணச் சான்றிதழில், சேரவேண்டிய தண்டக் கட்டணத் தொகையின்மீது குறிப்பிட்ட கால அளவிற்குள் வட்டி வசூலிப்பதற்காக மேற்சொன்ன சட்டங்களில் உள்ள பொருத்தமான விவர அட்டவணைகளில் காணும் விதிகளில் குறிப்பிட்ட விதித்துறை எதுவும் இல்லை.

தண்டக் கட்டணச் சான்றிதழில் தண்டக் கட்டணத் தொகை செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 6 சதவித வட்டி வீதம் சேர வேண்டிய தண்டக் கட்டணத் தொகைக்கு வட்டி வசூலிப்பதற்கு தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தயாரிக்கப்பட்ட விதிகளில் ஏற்கெனவே, விதித்துறை உள்ளது.

இத்தகைய சட்டங்களின் கீழ் இயற்றியுள்ள தண்டக் கட்டண விதிகள் சம்பந்தமாக, ஒரே சீரான கொள்கை வகுக்கும் வகையில், சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும் சட்டங்களில் இதைப்போன்ற விதித்துறை ஒன்று செய்யப்படலாமென உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆராய்வாளர் இப்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

தண்டக் கட்டணத் தொகைமீது ஆண்டொன்றுக்கு 6 சதவித வட்டி விதத்தில் வட்டி வசூலிப்பதற்கு ஏற்றவாறு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1919), தமிழ்நாடு 1920 ஆம்





ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920), 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) ஆகிய சட்டங்களின் விதித்துறைகளைத் தகுந்தபடி திருத்துவது என்று இப்போது கருதப்படுகிறது.

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 347-வது பிரிவின் (5) உட்பிரிவின் கீழ்/தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (தமிழ்நாடு சட்டம் 5/1920) சட்டத்தின் 305-வ பிரிவின்கீழ்/1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 431-வது பிரிவின் (5) உட்பிரிவின் கீழ் அந்தந்தச் சட்டங்களின் விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களின் வரைவு, இம் மாநிலச் சட்ட மன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் வைக்கப்பட்டு அவர்களது ஏற்பளிப்பைப் பெறவேண்டும். இதற்கிணங்க, இம்மாமன்றம் இதனை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை.

சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) V-வது விவர அட்டவணையின் III மற்றும் IV-ம் பாகங்களில் அமைந்துள்ள விதிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் பிரிவு 347-ன் உட்பிரிவு (3)-ன்படி கொண்டுவரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்கவேண்டும்.

வரைவு வெளியீடு.

1919ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 347 உட்பிரிவு (3)-ல் அமைந்துள்ளபடி தமிழக ஆளுநர் V-வது விவர அட்டவணையில் III மற்றும் IV பாகங்களில் உள்ள விதிகளுக்கு கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்

திருத்தம்.

மேற்கூறிய விதிகள் 24, 25 ஆகியவைகளை 25, 26 என்ற தொடர் எண் விதிகளாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றியமைக்கும்போது தொடர் எண் 25-ன் விதியின் முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும்:—

"24. விதி 21-ன் உபவிதி (1)-ன்படி தண்டக்கட்டணம் சான்றிதழில் இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக்கட்டணத்தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த

நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி விகிதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது வட்டி விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை ஆகியவற்றின் மீது விதிக்கப்படும். வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்'.

மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III வது விவர அட்டவணையின் III, IV-ம் பாகத்தில் உள்ள விதிகளை தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 431-ன் உட்பிரிவு (3)-ன்படி கொண்டுவரும் வரைவு திருத்த விதிகளை ஏற்க வேண்டும்.

### வரைவு வெளியீடு.

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் பிரிவு 431-ன் உட்பிரிவு (3)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் III-வது விவர அட்டவணையில் உள்ள பாகங்கள் III மற்றும் IV ஆகியவைகளில் உள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

### திருத்தம்.

மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ன் விவர அட்டவணை III-ல் உள்ள பாகம் III-ல் உள்ள தொடர் எண் விதிகள் 23, மற்றும் 24 ஆகியவைகளை 24 மற்றும் 25 தொடர் எண் விதிகளாக மாற்றியமைக்கும்போது, விதி 24-ன் முன் கீழ்க்கண்டவைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும் :—

"23. விதி 20-ன் கீழ் உபவிதி (1)-ன்படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்பட வேண்டும். உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல்



உள்ளபடி இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகைமீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்".

மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV வது விவர அட்டவணையின் II-ம் பாகத்தில் கண்டுள்ள விதிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் மேற்படி சட்டத்தின் பிரிவு 305-ன் உட்பிரிவு (1)-ல் கண்டுள்ளபடி, கொண்டுவரும் கீழ்க்காணும் வரைவு திருத்த விதிகளை ஏற்க வேண்டும்.

### வரைவு வெளியீடு.

1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 305-ன் உட்பிரிவு (1)-ன்படி தமிழக ஆளுநர் மேற்படி சட்டத்தின் விவர அட்டவணை VI-ன் பாகம் II-ல் அமைந்துள்ள விதிகளுக்குக் கீழ்க்காணும் திருத்தங்களை ஏற்படுத்துகிறார்.

### திருத்தம்.

மேற்கூறிய விதி 63-ஐ 64 தொடர் எண் விதியாக மாற்றவும் அவ்வாறு மாற்றும்போது தொடர் எண் 63-ன் விதி முன் கீழ்க்கண்ட விதிகள் சேர்க்கப்படும்.

"63. விதி 60-ன் உபவிதி (1)-ன்படி தணிக்கையாளரின் தண்டக் கட்டணச் சான்றிதழில் இழப்புத்தொகை பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது செலுத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ள கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி வீதம் சேர வேண்டிய இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை அல்லது தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்பட வேண்டும் உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பின் (Civil Procedure Code) பிரிவு 34-ல் உள்ளபடி அவ்வாறு இழப்புத் தொகை, பொறுப்புத் தொகை தண்டக் கட்டணத் தொகை மீது விதிக்கப்படும் வட்டி மேற்கூறிய சான்றிதழில் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74).

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன் வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

இச் சட்ட முன்வடிவை முன்மொழிகையில் நான் ஒன்று கூற விழைகிறேன். இந்திய அரசுடன் இது குறித்து விவாதித்தோம். அந்த விவாதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 2/1974) திருத்தங்கள் சில வற்றைச் செய்யக் கருதப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் குற்ற நடத்தை பற்றிய புகார் ஒன்று, அக்குற்ற நடத்தை எந்த நாளன்று செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதோ அந்த நாளிலிருந்து ஓராண்டு முடிவடைந்த பின்னர் அல்லது குற்றம் சாட்டப்பட்டுள்ள பொதுப்பணியாற்றுவோர் எந்த நாளன்று பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்கிறாரோ அந்த நாளிலிருந்து ஆறு திங்கள் முடிவடைந்த பின்னர், இவற்றில் எது பிந்தியதோ அக்கால அளவுக்குப் பின்னர் புலனாய்வு செய்யப்படக்கூடாது. "ஓராண்டு" என்பது தாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் அப்புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை புகார் செய்தவருக்குத் தெரியவந்த நாளிலிருந்து ஓராண்டுக்குப் பின்னர் புலனாய்வு எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

இந்தியாவின் பாதுகாப்பு அல்லது காப்பு அல்லது இந்தியா உலக நாடுகளுடன் கொண்டுள்ள உறவு முதலியவற்றைப் பாதிக்கக்கூடிய தகவல், பதில் அல்லது ஆவணத்தின் ஒரு பகுதி குறித்து அரசுச் செயலாளர் ஒருவரால்

@ 360–361 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அளிக்கப்படும் சான்றிதழ் ஒன்று கட்டுப்படுத்துவதாகுமென்றும் முடிவா தாகுமென்றும் மேற்படி சட்டத்தின் 14-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரி வகை செய்கிறது. சான்றிதழ் தமிழ்நாடு அரசுச் செயலாளராலோ, இந்தி அரசுச் செயலாளராலோ கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது.

மூலச் சட்டத்தின் கீழ் அல்லாது பிற வகையில் எடுக்கப்படும் நடவடிக்கை கள் தடை செய்யப்பட மாட்டாது என்பதை மிகவும் தெளிவாக்க மேற்படி சட்டத்தின் 29-வது பிரிவைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட டுள்ளது.

இம்மேலவையின் முன்னுள்ள சட்ட முன்வடிவில் இது குறித்து விதி துறைகள் அடங்கியுள்ளன. இத்தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**திரு. கே. ராஜாராம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே மூலச் சட்டத்தில் புகார் செய்பவர்கள் இன்ன காலத்திற்குள் புகார் செய் வேண்டும் என்று இருந்த விதிகளை மேலும் கொஞ்சம் தாராளமாகவே இப்போது தளர்த்தி, இதில் அவர்களுக்குச் சலுகை கொடுத்திருப்பதாகத்தா நான் எண்ணுகிறேன். ஆகவே திருத்தத்தைப் பொறுத்த வரையில், எந்தவி மான எதிர்ப்பும் சொல்லுவதற்கு என்னைப் பொறுத்த வரையில் நான் தயாரா இல்லை. ஆனால் மூலச் சட்டத்தில் எனக்குள்ள எதிர்ப்பை இப்போதும் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1974 சனவரி 30

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரையில், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்ட முன் வடிவு @ (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 2/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

@ 361–362 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 சனவரி 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 40/1971) எங்கெல்லாம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதோ அப்பகுதிகளில், 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் நிலவரப்படி உழவர்களுக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கும் அனுபோகத்திலிருந்து குடியிருப்புக்களை அவர்களுக்கு உரிமையாக்குகிறது. இச்சட்டம் தற்போதுள்ளபடி, மலைத் தோட்டங்களுக்கும், மலைத் தோட்டங்களின் தொடர்பான நோக்கங்களுக்காக உடைமையில் வைத்துக்கொண்டுள்ள நிலங்களுக்கும் பொருந்துகிறது. மலைத் தோட்டங்களுக்குச் சொந்தமானவையும் தொழிலாளர் நலத் திட்டங்களின்கீழ் அரசிடமிருந்து உதவித் தொகை பெற்றுக் கட்டப்பட்டுள்ளவையுமான குடியிருப்பு இல்லங்களில் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் பலர் வசித்து வருகின்றனர். அந்தக் குடியிருப்பு இல்லங்களில் வசித்து வரும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவற்றின் உடைமையுரிமையை வழங்குவதால் அந்த இல்லங்கள் எந்த நோக்கங்களுக்காகக் கட்டப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேறாமற்போகும் என்பதால், அவ்வாறு செய்வது பொருத்தமாயிராது என்று கருதப்படுகிறது. ஆனால், இச்சட்டத்தை நீட்டிக்கும்பொழுது, நீக்கப்பட வேண்டிய பகுதி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தனித்தனி மனைகளின் அடிப்படையில் நீக்கம் செய்யப்பட இயலாது. மலைத் தோட்டங்கள் அமைந்துள்ள கிராமங்கள் முழுமையும் நீக்கப்படுமானால், இந்தக் கிராமங்களில் மலைத் தோட்டப் பயிர்களல்லாத பிற பயிர்களைப் பயிரிட்டுவரும் உழவுத் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்படுவர். அவர்களது அனுபோகத்திலிருந்து வரும் மனைகளின் உடைமை யுரிமைகளைப் பெறும் நலன் அவர்களுக்கும் கிடைக்காமற் போகும். எனவே, இச்சட்டத்தைத் தக்கவாறு திருத்தி, மலைத் தோட்டத் தொழிலாளர்களையும், மலைத் தோட்டங்களையும், மலைத் தோட்டங்களின் தொடர்பான நோக்கங்களுக்காக வைத்து வரப்படும் நிலங்களையும் சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து திட்டவட்டமாக நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 3-ஆவது பிரிவின்கீழ் குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் நிலைபெற்றுள்ள, குடியிருப்பு அனுபோகக்காரரில் சிலர், குடியிருப்புக்கான பட்டாவைப் பெற்றவுடன், அந்தக் குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் முழுவதையும் அல்லது அவற்றின் பகுதி எதனையும் விற்பனை செய்யவோ, அடைமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, அல்லது, வேறு வகையில் உடைமை மாற்றம் செய்யவோ கூடும் எனக் கருதப்படுகிறது. எனவே, குடியிருப்பு அல்லது மேற்கட்டுமானம் நிலைபெற்றுள்ள, குடியிருப்பு அனுபோகக்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 சனவரி 30

காரர், அனுமதி பெற்ற அதிகாரியின் முன்னனுமதியைப் பெற்றாலன்றி அக்குடியிருப்பைப் பத்து ஆண்டு காலம் வரைக்கும் உடைமை மாற்றம் செய்வதைத் தடை செய்து, இச்சட்டத்தில் விதித் துறை இயற்றப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அனுமதி பெற்ற அதிகாரி அனுமதி மறுத்துப் பிறப்பித்த ஆணையால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மேல் முறையீடு செய்துகொள்ளும் உரிமையை வழங்கவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவமளிக்க இந்தச் சட்ட வரைவு விழைகிறது.

இதை ஏற்குமாறு இம்மேலவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.



1974 சனவரி 30]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண் குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்ட மு வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/74) நிறைவேற்றப்ப வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம் கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடி எண் 5/74).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மேலவைத் துணைத் தலைவர களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண் நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட மு வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74) ஆய்விற்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம் கட்டல்) சட்டத்தைச் சேர்ந்த 12 அல்லது 14-வது பிரிவின் கீழ் உள்ள இறு விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உபரி நிலம், 18-வது பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அரசால் அறிவிப்பு வெளியிடப்படுவதன் மே முற்றிலும் அரசிடமே நிலை பெற்றுள்ளது. தற்போது, 28 (1) பிரிவின் கீ வெளியிடப்பட்ட அறிவிப்பை மாற்ற அல்லது ரத்து செய்ய அரசுக்கு அதிகார அளிப்பதற்கு சட்டத்தில் விதித் துறை எதுவும் இல்லை. மேல் முறையீ அல்லது மறு ஆய்வு மனுக்களின் மேல் எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவாக அத்தகைய முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக 18 (1) பிரிவின் கீ வெளியிடப்பட்ட அறிவிப்பை ரத்து செய்ய அல்லது மாற்ற வேண்டிய நேர் கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 12, 14-வது பிரி களின்கீழ் உள்ள இறுதி விவர அறிக்கையில் உண்மையென தெரிகிற பிழை களையும், எழுத்துப் பிழைகளையும் 15-வது பிரிவின்கீழ் அதிகாரம் பெற் அதிகாரி திருத்தியுள்ள நேர்வுகளும் உள்ளன; அதன் விளைவாக, 18 (1

@ 363-364-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் திருத்த வேண்டியுள்ளது. நில ஆணையாளரால் 18-A பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்றினை யொட்டி, 18 (1). பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் மாற்றம் செய்ய வேண்டிய நேர்வுகளும் எழலாம். எனவே, மேல் முறையீட்டில் அல்லது மறு ஆய்வு மனுவில் அல்லது பிற சட்ட நடவடிக்கையில் எடுத்த முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க அல்லது 18A பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு இணங்க, 18-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அரசால் வெளியிடப்பட்ட அறிவிப்பை மாற்ற அல்லது ரத்து செய்ய அரசுக்குத் தேவையான அதிகாரம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. அதிகாரம் பெற்ற அதிகாரி 15-வது பிரிவின் கீழ்ச் செய்த திருத்தங்களையொட்டி, 18 (1) பிரிவின்படியுள்ள அறிவிப்பின் விளைவான திருத்தங்களைச் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் கருதப்பட்டுள்ளது. அவசியமான துணை விதித் துறைகளையும் தொடர்புள்ள விதித் துறைகளையும் இயற்றவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்டவரைவை, இம்மேலவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்".

* திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சட்ட முன் வடிவிலே, என்னுடைய கருத்துப்படி குறைபாடுகள் என்று தோன்றுகின்ற சிலவற்றை நான் இங்கே சொல்ல முன்வருகின்றேன். இந்தச் சட்ட முன் வடிவிலே 18 (D) (2) பிரிவிலே

"No claim shall be enforceable in respect of such land against the Government or any person deriving rights from them, for the period from the date of the vesting of such land in the Government and ending with the date of reversion under this sub-section".

என்றிருக்கிறது. அதாவது இந்த உச்ச வரம்பிற்கு அதிகமாகக் கருதப்பட்டு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலம், ஏதோ காரணத்தால் பின்பு அந்த நிலச்சுவாந்தாரிடம் ஒப்படைக்கப்பட்டால், அந்த இடைக் காலத்தில் அந்த நிலத்திற்கு ஏதாவது வருமானம் இருக்குமேயானால், அந்த வருமானம்



அந்த நிலச்சுவாந்தாருக்குக் கிடையாது. அதற்கு அரசாங்கமோ, அல்லது இடைக்காலத்தில் அனுபவித்தவரோ பொறுப்பில்லை என்றிருக்கிறது. சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்குக் கூட, இது நியாயமாகப் பட முடியாது. ஏனென்றால், இது உச்சவரம்பில் வரவில்லை என்று திருப்பிக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய கொள்கைப்படி 15 ஏக்கராவுக்குள்ளாக வைத்திருப்பவர் அவரைப் பெரும் நிலக்கிழாராகக் கொள்ள முடியாது. அப்படி இருக்கும் போது, அந்த நிலச்சுவாந்தாருக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் ஒரு நிலச்சுவாந்தார் உச்சவரம்புக்கு அதிகமான நிலம் வைத்திருந்தபோதிலும், அதை அரசிற்குத் தெரிவிக்காமல் இருந்து, பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டால், உச்சவரம்புக்கு உட்பட்டது, சர்பிளஸ் இருக்கிறது என்று கண்டால், அதை அரசாங்கத்திற்குத் திருப்பித் தர வேண்டும். இதிலே வருகின்ற இடைக்கால வருமானத்தை அரசாங்கத்திற்கு நிலச்சுவாந்தார் கொடுக்க வேண்டுமென்று உள்ளதாக அறிகிறேன். அப்படி இருக்கும்போது, இது எப்படி நியாயமானது? அது மாத்திரமல்ல, செக்ஷன் 63-லே:

"(1) With effect on and from the date on which the authorized officer takes possession of the land under section 62, the Government shall be deemed to be the tenant of the owner of the land.

(2) In respect of the land referred to in sub-section (1), the Government shall be liable to pay annually to the owner of such land fair rent as calculated in the manner specified in paragraph 4 of Part I of Schedule III. Such rent shall be paid in cash or in kind in accordance with such rules as may be made by the Government."

என்று இருக்கிறது. சர்பிளஸ் என்று கருதப்பட்ட நிலத்துக்கே, நிலச்சுவாந்தாருக்கு இப்படிப்பட்ட இடைக்கால வருமானம் கொடுக்க வேண்டும் என்று இருக்கும்போது, சர்பிளஸ்ஸாக இல்லாமல் தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டு, பிறகு நிலச்சுவாந்தாருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் நிலத்திற்கு இடைக்கால வருமானம் கிடையாது என்பது அடிப்படை உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. எனவே அரசு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரல்லாத ஒருவர், இந்தக் குற்றத்தைச் சொல்லுகிறாரே என்ற காரணத்தால் அதைப் புறக்கணிக்காமல், அதற்குத் தக்க மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். - அது மட்டுமல்ல, 'ஆதரைஸ்டு ஆபீசர்' என்று சொல்பவர்கள், இந்த நிலச்சுவாந்தார்களை ஏதோ குற்றவாளிகளைப் போல் நடத்துகிறார்கள். பலருக்குத் தெரியும். அவர்கள் அந்த 'ஆதரைஸ்டு ஆபீசர்' அலுவலகத்துக்கு .......

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிலச்சுவாந்தார்கள் ஆதரைஸ்டு ஆபீசர்களை ஆபீஸ் கிளார்க்கு போல் நடத்துவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அப்படிச் சிலர் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையோர் குற்றவாளிகளைப் போல் நடத்தப்படுகிறவர்களாகத் தான் இருக்கிறார்கள். 15 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பது அவர்கள் குற்றமில்லை. எக்காரணத்தாலோ அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் அப்படி நடத்தப்பட வேண்டும் என்பது கொள்கை அல்ல.

(பிற்பகல் 4-50)

அதுமாத்திரமல்ல. அவர்களிடத்திலே இந்த அதிகாரம் இருக்கின்ற காரணத்தினாலே அவர் இஷ்டப்படி அவர்களை மிரட்ட முடிகிறது. நான் அதைத் தவிர்ப்பதற்கு ஒரு யோசனை கூற முடியும். இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்டிலே அவர்களுக்கு என்று தனியாக ஒரு ஆடிட் டிபார்ட்மென்ட் இருக்கிறது. ஒருவருக்கு இன்கம்டாக்ஸ் அசஸ் செய்துவிட்ட பிறகு கூட, அந்த ஆடிட் டிபார்ட்மென்ட் வந்து அதிலே குறைகள் இருக்கின்றனவா என்று பரிசீலிக்கிறது. ஏதாவது அதிகமாக வரி வசூலிக்கப்பட்டிருந்தால், அதைத் திருப்பிக் கொடுக்கவும், குறைவாகக் கொடுக்கப்பட்டிருந்தால் அதை வசூலிக்கவும் இந்த இலாகாவிற்கு உரிமை உண்டு. அந்த மாதிரி, இந்த ஆதரைஸ்டு ஆஃபீசர் அலுவலகத்திற்கும் ஒரு ஆடிட் டிபார்ட்மென்டை ஏற்படுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அப்பொழுதுதான் அந்தத் தவறைக் கண்டுபிடிக்க முடியும். ஏனென்றால் அதிகாரிகளுக்கு ஒரு 'இம்யூனிடி' உண்டு. அவர்கள் செய்யும் செயல் அரசாங்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டது. அவர்கள் என்ன தவறுதலாக நடந்து கொண்டாலும், அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். எனவே இந்த 'இம்யூனிடி'ஐ வைத்துக்கொண்டு, அவர்கள் இஷ்டம்போல் நடந்துகொள்கிறார்கள். எனவே அதைப் பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். உதாரணமாக நான் ஒன்று கூற முடியும். ஒரு தாய் தன்னுடைய இரண்டு பெண்களுக்கு தன்னுடைய சொத்தைப் பிரித்துக் கொடுத்தார்கள். அதன்படி அந்தப் பெண்மணிகள் தங்களுடைய கணவன்மார்களுடைய சொத்துடனும் சேர்த்து, மொத்த சொத்துக்கும் உச்சவரம்பு சட்டப்படி ரிட்டர்ன் கொடுத்தார்கள். அதிகாரிகளும் அதை ஒத்துக்கொண்டு உபரியையும் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் சில காலத்திற்குப் பிறகு அந்தத் தாயாரிடமிருந்து மறுமுறையும் ரிட்டர்ன் வந்து, அந்தச் சொத்து தாயாருக்கு சம்பந்தப்பட்டது என்று அதை உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்தார்கள். ஆனால் அந்தச் சொத்து





ஏற்கெனவே தன்னுடைய பெண்களுக்குக் கொடுக்கப்பட்டு அதை உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்துவிட்டார்கள். அதை அதிகாரிகளும் ஒத்துக்கொண்டுவிட்டார்கள். அதன்படி அதிகமாக இருந்த நிலத்தை அரசாங்கத்திற்கும் ஒப்படைத்துவிட்டார்கள் என்று சொல்லியும் அந்த அதிகாரி அதை ஒத்துக்கொள்ளவில்லை. பிறகு நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றார்கள். நீதி மன்றம் அதைப் புரிந்துகொண்டு அந்த சொத்து மகள்களுக்குச் சொந்தமே தவிர, தாயாருடையது அல்ல, ஆகவே அதிகாரி கூறியிருப்பது தவறு என்று கூறியிருக்கிறது. இதிலே அதிகாரியிடம் கூறியதற்கும், நீதிமன்றத்தில் கூறியதற்கும் வேறுபாடே கிடையாது. இரண்டு முறையீடுகளையும் ஒன்றாகவே கொடுத்தார்கள். பாகப்பத்திரம் கொடுத்தார்கள். ஆதரைஸ்டு ஆஃபீசர் போட்ட உத்தரவையும் கொடுத்தார்கள். இருந்தாலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருந்தும் கோர்ட்டுக்குச் செல்ல நேரிட்டது. அப்படிச் செல்வதற்கு அவர்களுக்கு வசதி இருந்தது. சிலருக்கு வசதி இருக்கலாம். கோர்ட்டுக்குப் போக முடியும். காலத் தாழ்வு ஆகும். நிறையச் செலவு ஆகும். அதையெல்லாம் யார் கொடுப்பது? கோர்ட்டிலே செலவழிகிற பணத்தை யாரிடமிருந்து பெற முடியும்? ஆகவே கோர்ட்டில் தம்முடைய நிலைமை என்ன என்று நிர்ணயித்துக்கொள்ளக் கூடியவர்கள்தான், அந்த வசதி உடையவர்கள்தான் அதைச் செய்ய முடியும். இது சில அதிகாரிகளுக்கு ஒரு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கிறது. அதாவது அவர்கள் கோர்ட்டுக்குத் செல்வார்களா அல்லது நம்மையே சரிசெய்து கொள்வார்களா என்ற அடிப்படை வருகிறது. எனவே இந்த அதிகாரிகளைத் திருப்தி செய்து கொண்டால், வம்பு கிடையாது. இல்லை, அதிகாரிகளுடன் நாம் வம்புக்குச் சென்று, நாம் நீதி மன்றத்திலே நிலை செய்துகொள்ளலாம் என்றும் சிலர் உண்டு. அப்படித்தான் நான் குறிப்பிட்ட வழக்கு நடைபெற்றது. எனவே அதைப் பரிசீலனை செய்து, இந்த அதிகாரிகளுடைய போக்கை 'செக்' செய்வது என்று சொல்வார்களே அதுமாதிரி 'செக்' செய்யும் வகையிலே ஒரு ஆடிட் டிபார்ட்மென்ட் ஏற்படுத்தப்பட்டு, அந்த ஆடிட் ஆபீசர்கள், செய்யும் வேலைகளை அப்பொழுதைக்கப்பொழுது மறு பரிசீலனை செய்யும் வகையிலே அரசு உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நேரத்திலே நான் என்னுடைய அபிப்பிராயம் ஒன்றையும் கூற விரும்புகிறேன். நான் முதன் முதலிலே கூறியது போல, தமிழகத்திலே நாம் விவசாயத்திலே மிகப் பெரிய வெற்றியைக் கண்டுள்ளோம் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இந்த உச்சவரம்பானது இன்னும் குறைக்கப்படலாம் என்று கூறுகிறார்கள். அதுபோன்ற நடவடிக்கைகளை இந்த அரசாங்கம்

இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்வேன். ஏனென்றால் நாம் முன்னேறி வருகிற இதே நேரத்திலே இப்பொழுது நிலச் சுவான்தார்கள் அல்லது நிலத்திலே முதலீடு செய்ய விரும்புபவர்கள் இது போன்ற சட்டங்களை எதிர்பார்த்து விவசாயத்திற்கு வர அஞ்சுகிறார்கள். இது போன்ற விவசாயிகள், அதாவது மூற்போக்கு விவசாயிகள், இந்த விவசாயத் துறைக்கு வரவில்லை என்றால், நம்முடைய உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப் படும். அந்த அடிப்படையிலே ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்கு—மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் நேற்று பிளானுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று சொன்னதைப் போல்—இந்த லேண்ட் ரிபார்முக்கு ஒரு ஐந்தாண்டு ஓய்வு கொடுத்தால், உண்மையிலேயே நாம் விவசாயத் துறையிலே மிகச் சிறந்த சூழ்நிலையை அடைய முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன். இப்பொழுது நிலச் சீர்திருத்தத்திற்கு நாம் எவ்வளவோ செய்திருக்கிறோம். எனவே இந்த அளவோடு நாம் நிறுத்திக்கொண்டு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நாம் எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் கூறுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'லேண்ட் ரிபார்மே' வேண்டாமா ?

**திரு. கே. எஸ். கணபதி :** 'லேண்ட் ரிபார்ம்' சட்டத்திற்குத்தான் சொல் கிறேன். லேண்ட் ரிபார்மை மிகச் சிறந்த முறையிலே சிறப்பாகச் செய்திருக் கிறோம். இந்த உச்சவரம்பைக் குறைப்பதில் .......

**திரு. சி. வி. ராஜகோபால் :** லேண்ட் ரிபார்ம் என்றால், சீலிங்கைக் குறைக் கணுமா அல்லது ஏற்றணுமா ? லேண்ட் ரிபார்ம் கூடாது என்றால், டெவலப் ஆகுமா ? ரிபார்ம் என்றால், நிலச் சீர்திருத்தத்தைத்தானே சொல்கிறோம்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, லேண்ட் ரிபார்ம் வேறு. அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நேற்று திரு. சுவாமிநாதன் சொன்னது, திட்டமே வேண்டாம் என்பது.

**திரு. கே. எஸ். கணபதி :** நான் சட்டத்தைத்தான் சொல்கிறேன். நல்ல வகையிலே அமைய வேண்டும் என்பதுதான் என் விருப்பம். குஜராத், மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்களும் தங்களுக்குத் தேவையான கோதுமையை சர்ப்ளஸ் மாநிலம் என்று கருதப்படும் பஞ்சாப், அரியானா மாநிலங்களிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்துகொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அளவிலே அவர்கள் அங்கு சென்று



அந்தக் கொள்முதல் செய்யப் போகிறார்கள். ஆனால் நாம் மாநில அளவில் உணவு மண்டலங்களை அமைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த முறை தமிழ் நாடு அரசு இதைக் கேட்கவில்லை என்றால், அடுத்து கேரளத்திற்கு அந்த உரிமை கொடுத்து, தமிழ் நாட்டிலே அரிசி கொள்முதல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால், விவசாயிகளுக்கு சற்று தொகை அதிகமாக வரும் என்றால்கூட, உள்நாட்டிலே பஞ்சம் ஏற்படும் அளவுக்கு அவர்கள் கொள்முதல் செய்துகொள்ள நேரிடும். ஆகவே உணவு மண்டலங் களிலே மத்திய அரசு தலையிடாத வகையில் நம் உணவு மண்டலத்தைப் பாது காக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 63-வது பிரிவைச் சுட்டிக்காட்டினார்கள். 63-வது பிரிவைப் பொறுத்த வரையில்,

" With effect on and from the date on which the authorized officer takes possession of the land under section 62, the Government shall be deemed to be the tenant of the owner of the land. "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. 62-வது பிரிவிலே எடுத்துக் கொள்ளும் நிலத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே

" On the basis of the return furnished under sub-section (1) of section 61 or on the basis of the return furnished under sub-section (2) of that section, and the additional particulars, if any, furnished under that sub-section, or on the basis of the information.. ........the authorized officer shall ......take possession on behalf of the Government, of the land held by the person as cultivating tenant in excess of the cultivating tenants ceiling area "

என்று இருக்கிறது. ஒரு குத்தகை சாகுபடிதாரிடத்திலே அதிகமான நிலம் இருந்தால், இந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும்போது, அதற்குக் குத்தகை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது, இந்தச் சட்டத்தின் மூலமாக சில நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விதிமுறைகளை அனுசரித்து அந்த நடவடிக்கை கொள்கிற அதிகாரத்தை இது கொடுக்கிறது. ' In good pith' சட்டத்தின் மூலமாக எடுக்கப்படும் நிலத்திற்கு 'மீன் பிராயிட்ஸ்' வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் திருத்தம் தந்திருக்கிறார்கள். சட்டத்தின் விதி முறை களுக்கு உட்பட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளை அரசு நஷ்ட ஈடு தருவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 சனவரி 30

